T-6271

வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம்

# இலக்கிய உதயம்

[நான்காம் தொகுதி]

வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்

பேராசிரியர்

**எஸ்.வையாபுரிப்பிள்ளை**

வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சியம்

நான்காம் தொகுதி

# இலக்கிய உதயம்

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

நூற்றாண்டு நினைவு வெளியீடு – 4

வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்

முதற் பதிப்பு : அக்டோபர், 1991
© உரிமை பதிவு

விலை ரூ. : **70-00**

**கிடைக்குமிடங்கள் :**

1. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்,
'வையகம்' 2, 4-வது குறுக்குச் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

2. பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை - 600 108.

3. ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி(பைக்ராப்ட்ஸ்) சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

அச்சிட்டோர் : ரெக்ஸ் பிரிண்டர்ஸ், சென்னை - 4

# முகவுரை

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சிய வரிசையில் நான்காவதாக 'இலக்கிய உதயம்' என்னும் இந்நூல் இடம் பெறுகின்றது. இலக்கிய உதயம் முதற் பகுதி 1950 செப்டம்பர் திங்களிலும், இரண்டாம் பகுதி 1952 அக்டோபர் திங்களிலும் வெளிவந்தவை. இப்போது இரண்டு தொகுதிகளும் ஒன்றாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. முதற்பகுதி பேராசிரியர் சென்னை அடையாறு, காந்தி நகர் கம்பன் 'நிலைய'த்தில் வசித்த காலத்தில் தமிழ்ப் புத்தகாலயத்தாரால் வெளியிடப்பெற்றது. இரண்டாம் பகுதி பேராசிரியர் திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலத்தில் அச்சேறியது.

## ஆதி இலக்கியங்கள்

முதல் பகுதியில் அடங்கிய கட்டுரைகள், அமுதசுரபி, கலைமகள், சக்தி, சிந்தனை முதலான இதழ்களில் வெளிவந்தவை. பிறமொழிகளில் தோன்றிய ஆதி-இலக்கியங்களைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் குறித்துப் பேராசிரியரின் கூற்றுப் பின்வருமாறு:

''நமது மொழியில் தோன்றியுள்ள இலக்கியத்தை ஆராய்ந்து உண்மையாக மதிப்பிடுவதற்கும், அதனை வளம்பெறச் செய்வதற்கும் பிறமொழி இலக்கிய உணர்ச்சி நம்மவர்களுக்கு இன்றியமையாதது. நமது முன்னோர்கள் வடமொழி இலக்கியத்தை ஓரளவு கற்று வந்தனர். இடைக்காலத்தில் தெலுங்கு முதலிய மொழிகளைப் பயிலுவாராயினர். அரசியல்துறை முதலியவற்றில் இன்றியமையாததாய் நேர்ந்துவிட்ட ஆங்கில இலக்கியத்தை நாமும் பயின்று வருகிறோம். இதனைத் தவிர ஏனைய மொழிகளிலுள்ள இலக்கியங்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமாகும். இவற்றில் மிக முக்கியம் என நாம் கருதுவன ஆதி-இலக்கியங்களேயாம். நமது இலக்கிய உணர்ச்சியைப் பெறுவதற்கு இவைகள் சிறந்த கருவியாகும்.

இதற்கு ஏற்ப, முதல் பகுதியில் எகிப்து, பாபிலோனியா, பாலஸ்தீனம், பாரஸிகம், சீனம் ஆகிய ஐந்து நாடுகளின் இலக்கியங்கள் ஆராயப்படுகின்றன. இலக்கிய முயற்சி என்பது எகிப்தியர்களிடத்திலேதான் பிற நாட்டவர்களைக் காட்டிலும் மிக நீண்ட காலமாக நடைபெற்று வந்திருக்கிறது. இவர்களது இலக்கியம் கி. மு. 6000-த்திலிருந்து தொடங்குகிறது. இடையில்

சில காலத்திற்குரிய இலக்கியங்கள் கிடைக்கவில்லை. ஆனால், கி. மு. 3700 முதல் கி. மு. 200 வரையுள்ள இலக்கியங்கள் இடையீடின்றி இன்று கிடைக்கின்றன.

பாபிலோனியாவில் மிகமிகப் பெரிய நூல்நிலையங்கள் இருந்தன. நாடு முழுவதும் நூல்கள் பரவிவருவதற்கு மிகச் சிறந்த முறைகளும் கையாளப்பட்டு வந்தன. கால்வாய்கள் அஞ்சல் கொண்டு செல்லும் மார்க்கமாகவும் அமைந்தன. இதுவே உலக வரலாற்றில் முதன்முதலாகத் தோன்றிய அஞ்சல் முறையாகும். அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இருந்தன. அறிஞர்கள் மிக நுட்பமாகப் பஞ்சாங்கத்தைக் கணித்தனர்.

கிறிஸ்தவர்களின் புண்ணிய பூமியான பாலஸ்தீனத்திலிருந்து சமயமும் இலக்கியமும் உலகெங்கும் பரவி மக்கள் வரலாற்றில் உலக முழுமைக்கும் மேம்பட்டு விளங்கின; கீழ்த் திசையானது திறையாகச் செலுத்திய மிகச்சிறந்த செல்வங்களுள் ஒன்று எபிரேய இலக்கியம்.

மதுவிற்கும் மதுரமான பாடல்களுக்கும் புகழ்பெற்று, காதலின் வளர்ப்புப் பண்ணையாக விளங்கிய நாடு பாரஸிகம். கி. பி. 997-ல் பெர்தௌசி என்பவர், ஷாநாமா என்ற பெருங் காவியத்தை எழுதினார். இவ்விலக்கியம் பாரஸிகத்தின் பெருமையைக் காட்டும் வரலாற்று நூலாகும். பாரஸிக மொழியின் ஆதி இலக்கியமான அவெஸ்தாவையும் 'ருபாயத் உமார்கய்யாம்' பாடல்களையும் குறிப்பிடுகிறார்.

மிகமிகப் பழமை வாய்ந்த சீனத்து இலக்கியம் தத்துவங்கள், நீதி, சமயம் முதலானவற்றை எடுத்துரைக்கின்றது. சீன நூல்களும் மிகப்பழமை வாய்ந்தவை-ஐம்பேரிலக்கியங்களாகும். சீனர்கள் இவ்விலக்கியங்கள் தங்களுக்கு உயிராற்றல் கொடுப்பதாகக் கருதிவருகின்றனர். இதனைத் தொகுத்தவர் கன்ப்யூஸியஸ் என்பவர். லே ஓ-ட்ஸே என்ற அறிஞரும் புகழ்பெற்றவர். இவைபோன்ற பல அரிய செய்திகள் தரப்படுகின்றன. மூல நூல்களின் சுவை குன்றாதபடி கவிதைகளை இந்நூலில் பேராசிரியர் தமிழாக்கம் செய்து ஆங்காங்கே சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**இலக்கிய உதயத்தின் தோற்றம்**

ஆங்கில மொழியிலுள்ள Dawn of Literature என்ற நூலைப் பேராசிரியர் படித்தபொழுது, அதுபோன்றதொரு நூல் தமிழில் எழுதவேண்டுமென்று அவாக் கொண்டதாகத் தம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அதன் விளைவாகவே இலக்கிய உதயம்

தோன்றியது. இந்த நூலோடு ஆங்கிலத்திலுள்ள விவிலிய நூல் (Bible), சில சரித்திர நூல்கள், சில மொழி நூல்கள், Modern Library வரிசையில் கன்ப்யூஸியஸ், லே ஓ-ட்ஸே முதலிய பேரறிஞர்களைக் குறித்து வெளிவந்துள்ள நூல்கள், இவற்றை யெல்லாம் ஆதாரமாகக் கொண்டு இவ் இலக்கிய உதயம் படைக்கப்பட்டிருக்கிறது.

**பாரததேசத்து இலக்கியங்கள்**

இலக்கிய உதயத்தின் இரண்டாம் பகுதியில் பாரத தேசத்து இலக்கியங்களின் வரலாறு இடம் பெறுகின்றது.

''பாரத தேசத்து இலக்கியங்கள் உண்மையில் ஆரியம், தமிழ் முதலிய பல மொழிகள் பற்றியவாயுள்ளன. வடமொழி இலக்கியங்கள், வைதிகம், பௌத்தம், ஜைனம் என்ற சமயங்களுக் குரியனவும், ஜோதிஷம், கணிதம் முதலிய விஞ்ஞான சாஸ்திரங் களுக்குரியனவுமாகப் பல திறப்படும். இவற்றுள் இப்போது வெளிவரும் நூல் வைதிகம், பௌத்தம் என்னும் இரு பகுதி களுக்கும் உரியதாகும். இதுவே மிக விரிவாக அமைந்துவிட்டது. வைதிக இலக்கிய வரலாறு பற்றியும், பௌத்த நூல்களின் வரலாறு பற்றியும் தமிழில் நூல்கள் இல்லை. எனவே இவ்வாறு விரித்து எழுத நேரிட்டது'' என்று பேராசிரியர் தெளிவு படுத்தி உள்ளார். ஏனைய பொருள்கள் பற்றிய வரலாற்றினை மூன்றாம் பகுதியில் வெளியிடத் திட்டமிட்டிருந்தார். இந்த வாய்ப்பினை தமிழுலகம் இழந்துவிட்டது பெருங்குறையே.

''வடமொழி இலக்கியங்கள் பற்றிய அறிவு நமக்கும் மிக இன்றியமையாததே. தமிழ் நூல்களின் பொருளை நன்கு அறிந்து கொள்ளுதற்கும், இலக்கியச் சுவையைத் தெளிதின் உணர் வதற்கும் மொழிவரலாற்றின் நியதிகளைத் தெரிந்து கொள் வதற்கும் வடமொழி இலக்கியங்கள் பெரிதும் பயன்படுவன ஆகும்'' என்று தமது முன்னுரையில் பேராசிரியர் குறிப்பிடு கின்றார்.

''வடமொழி அந்தணர்க்கு மட்டும் உரியதல்ல. அந்தணர் அல்லாதாரும், பௌத்த ஜைன சமயத்தவர்களும் அதனைப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர். நமது சமயங்களை எடுத்துக் கொண்டால், நமது தெய்வங்கள் வடநாட்டிற்கும் உரிய தெய்வங்களே. நற்றிணையில் 'வேத முதல்வன் என்ப தீதற விளங்கிய திகிரியோனே' என்று திருமாலைக் குறித்து வணக்கம் கூறப்படுகிறது. இந்திர விழா முதலிய உத்சவங்களும், இன்னும் கலைப் பண்பிற்குரிய பல அம்சங்களும் சங்ககாலந்தொட்டே தென்நாட்டிலும் வடநாட்டிலும் ஒன்றாயிருந்தமை சங்க இலக் கியங்களால் அறியலாம்'' என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

கூறியுள்ளது நமது பாரத தேசத்து ஒருமைப்பாட்டு உணர்வை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**வடமொழி இலக்கியங்கள்**

இரண்டாம் பகுதியில் வடமொழி இலக்கியங்களைச் சார்ந்த நால்வகை வேதங்கள், இவை கூறும் பொருள்கள், இவற்றின் விளக்கங்கள் முதலியனபற்றிப் பேராசிரியர் ஆராய்கின்றார். மற்றும் பிராம்மணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷதங்கள், சூத்திரங்கள், வியாகரணம், மகாபாரதம், இராமாயணம், புராணங்கள், உபபுராணங்கள், தாந்திரிக இலக்கியங்கள், விநய பிடகம், ஸுத்த பிடகம், அபிதம்ப பிடகம், திருமுறைகளைச் சாராத பாலி இலக்கியங்கள், பௌத்த வடமொழி இலக்கியங்கள் முதலியனவெல்லாம் இப்பகுதியில் விரிவாக ஆராயப்படுகின்றன.

**ஒப்பாய்வு**

இலக்கிய ஆராய்ச்சியில் ஒப்பியல் முறைமையைக் கையாள வேண்டும் என்பதில் பேராசிரியர் முற்போக்கானக் கருத்துக் கொண்டிருந்தார். 'தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்' என்ற அவருடைய நூலில் அவர் கூறுவது குறிப்பிடத்தக்கது. அப் பகுதி வருமாறு :

''மொழி நூலில் போன்றே, இலக்கியங்கள் பற்றிய ஒப்பு நோக்கு — ஆராய்ச்சி இன்றியமையாதது. கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற மூன்று மொழிகளிலும், முறையே நல்ல பயிற்சியுடைய கன்னடரும், தெலுங்கரும், மலையாளிகளும் வடமொழி இலக்கியம் பற்றிய அளவில் தகுதியுள்ளவர்களாயிருப் பார்கள். ஆனால், தற்காலத்திலுள்ள தமிழறிஞர்களைக் குறித்து இவ்வாறு சொல்ல முடியாது என்று அஞ்சுகிறேன் ......... வட மொழியோ இவர்களுக்கு வேம்பாயுள்ளது...... இந்த அறியாமை நமது நாட்டில் நீடித்திருக்கும்படியாக விடக்கூடாது. திராவிட மொழி இலக்கியங்களையும், இந்திய இலக்கியங்களையும் ஒப்பு நோக்கிக் கற்றவனுடைய கல்வியறிவு மிகவும் பரந்துள்ள தாகவும், செழிப்புள்ளதாயும் இருத்தல் ஒருதலை. இந்த ஒப்பு நோக்குக் கல்வி நமது அறிஞர்களுடைய குறுகிய மனப்பான்மை என்னும் திண்ணிய சுவரை இடித்துத் தகர்த்துவிடும். அச்சுவரை அரணாகக் கொண்டு நம் அறிஞர்கள் மறைந்து வாழ முடியாது. இவ்வகைக் கல்வியின்மேல் எழுந்த ஆராய்ச்சியில் ஒரு புதிய பொருண்மையும், புதிய பெருமையும் ஏற்படும் ...... வடமொழி நூல்களோடு மட்டும் இவ்வகை ஒப்புநோக்கு அமைந்து விடக் கூடாது. ஆங்கிலம் முதலிய முற்போக்கு மொழிகளிலும், இலக்கியங்களிலும் உள்ள இவற்றோடும் அமைய வேண்டும்''.

இவ்வாறு தாம் வகுத்த கொள்கைகளுக்கு ஏற்ப ஒப்பாய்வு செய்யும்போது ஐரோப்பிய இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டு, பேராசிரியர் பிளேட்டோ, எக்கார்ட், ஷோபன்ஹாயர், வின்டர் நீட்ஸ், ஆல்பிரட் லுட்விக், மாத்யூ ஆர்னால்டு முதலானோர் நூல்களையும் படித்து ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளது பேராசிரியரின் ஆழ்ந்து அகன்ற அறிவை வெளிப்படுத்துகிறது.

வடமொழி, பௌத்த இலக்கியங்களைப் பேராசிரியர் ஆய்வு செய்யும்போது, தமிழ் மொழியிலுள்ள தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம், திருக்கோவையார், கம்பராமாயணம், பண்டார மும்மணிக் கோவை, சிவரகசியம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், நன்னூல், யாப்பருங்கலம், திருமந்திரம் முதலான தமிழ் நூல்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகளை எடுத்தாளுகின்றார்.

**பொருட் குறிப்பு அகராதி**

இலக்கிய உதயம் முதற்பகுதிக்கு மட்டும் பொருட்குறிப்பு அகராதி காணப்பட்டது. இப்பொழுது இரண்டாம் பகுதிக்கும் சேர்த்து பொருட்குறிப்பு அகராதி இடம் பெறுகின்றது. இப்பதிப்பில் நூல் முழுமைக்கும் நூற்களஞ்சிய தொகுதி வரிசைக்கு ஏற்ப உள் தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன.

**நூற்களஞ்சியப் பதிப்பு**

இந்த நான்காவது நூற்களஞ்சியத் தொகுதி இலக்கிய அறிவு உணர்வு வளர்ச்சிக்கு ஆக்கம் அளிக்கும் சிறந்த ஆராய்ச்சி நூலாக அமைந்துள்ளது. உலக இலக்கியங்களையும், பாரத தேசத்து இலக்கியங்களையும் ஒரே பொதுநோக்கில் உணர்ந்து கொள்ள இந்நூல் உதவிபுரிகின்றது. உலக ஆதி இலக்கியங்களைக் குறித்தும், இந்திய இலக்கியங்களைக் குறித்தும் ஒரு பரந்த பார்வையுடன் வெளிவந்த விரிவான ஆராய்ச்சி நூல் இதுவாகும். தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படக்கூடிய பெரும் பணியாகும். வடமொழி இலக்கியத்தைப்பற்றி தமிழில் இனிய, எளிய நடையில் வெளிவந்துள்ள முதல் ஆராய்ச்சி நூல் என்ற வகையில் ஆராய்ச்சியாளருக்கும், ஏனையோருக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும்.

**நன்றியுரை**

இலக்கிய உதயம் இரண்டு பகுதிகளையும் தொகுத்து முறைப் படுத்தி, நூல் அச்சிடப்பெறுங்காலத்தில் அச்சுப் படிகளைத்

திருத்தி நல்ல முறையில் வெளிவர பேராசிரியரின் மூத்த மகளார் திருமதி வை. சரோஜினியும், மருகர் திரு. எஸ். எஸ். இராம சாமியும் பெரிதும் உதவியுள்ளனர். ரெக்ஸ் பிரிண்டர்ஸ், மயிலாப்பூர் இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு வெளிவரச் செய்தனர். இவர்களுக்கெல்லாம் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு ஆளுநர் திரு. பீஷ்மநாராயண் சிங் தலைமையில் 22-4-91-ம் நாளன்று சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடந்த நூற்றாண்டு விழாவில் நிகழ்த்திய சொற் பொழிவுகளும் ஆண்டுத் தொடக்கத்தில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையும் பின் இணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

'வையகம்'
சென்னை-28.
*11-10-1991*

**வையாபுரிப் பிள்ளை**
**நினைவு மன்றத்தார்**



பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

தோற்றம் :
12—10—1891

மறைவு :
17—2—1956

# உள்ளுறை

## முதற் பகுதி

## ஆதி இலக்கியங்கள்


1. எகிப்து ... 3
2. பாபிலோனியா ... 17
3. பாலஸ்தீனம் ... 29
4. பாரஸிகம் ... 49
5. சீனம் ... 82


## இரண்டாம் பகுதி

## பாரத தேசத்து இலக்கியங்கள்


பாரத தேசம் ... 115

வேதங்கள் ... 117

ரிக் வேதம் ... 118

அதர்வண வேதம் ... 124

சாம வேதம் ... 129

எஜுர் வேதம் ... 137

பிராம்மணங்கள் ... 140

ஆரண்யகங்கள் ... 144

உபநிஷதங்கள் ... 146

சூத்திரங்கள் ... 151

வியாகரணம் ... 160

மகாபாரதம் ... 167

இராமாயணம் ... 205

புராணங்கள் ... 209

உபபுராணங்கள் ... 229

| | | |
|---|---|---|
| தாந்திரிக இலக்கியங்கள் | ... | 231 |
| பௌத்த இலக்கியங்கள் | ... | 235 |
| திரிபிடகம் | ... | 237 |
| விநய பிடகம் | ... | 239 |
| ஸுத்த பிடகம் | ... | 244 |
| அபிதம்ம பிடகம் | ... | 293 |
| திருமுறைகளைச் சாராத பாலி இலக்கியங்கள் | ... | 297 |
| பௌத்த வடமொழி இலக்கியங்கள் | ... | 318 |
| மஹாயானப் பெரியோர்களும் கவிஞர்களும் | ... | 345 |
| மாகாத்மியங்கள், தோத்திரங்கள் தாரணிகள், தந்திரங்கள் | ... | 354 |
| பேராசிரியர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் | ... | 359 |
| பொருட்குறிப்பு அகராதி | ... | 397 |

# ஆதி இலக்கியங்கள்

முதற்பகுதி

# 1. எகிப்து

## பண்டைக்கால உலகத்துப் பேரரசு

உலகத்திலுள்ள ஏழு அற்புதங்களுள் ஒன்றாக "பிரமிட்" (Pyramid) சொல்லப்படுகிறது. இது கோபுர வடிவில் பிரமாண்டமாய் அமைந்த ஒரு கட்டடம். ஆயிரக்கணக்கான சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஒரு பெரிய பாலை வனாந்தரத்தை நோக்கி இது நிற்கிறது. இப்பாழடைந்த மணற் பிரதேசத்தைப் பார்த்துக் கொண்டு சிங்கத்தின் சரீரமும் மனிதனுடைய முகமும் கொண்ட 'ஸ்ப்விங்ஸ்' (Sphinx) என்று வழங்கும் ஒரு பெரிய உருவமும் நிற்கிறது. ஒரு காலத்தில் இவ்வனாந்தரத்திலே மிகப் பெரியதொரு சாம்ராஜ்யம் நிலைபெற்று விளங்கியது. இங்கே பல்லாயிரக் கணக்கான மக்களின் பேச்சரவம் எப்போதும் ஒலித்துக் கொண்டிருந்தது. பல நகரங்கள் கர்வத்தோடு தலை நிமிர்ந்து நின்று, செல்வத்திலும் ஆடம்பரத்திலும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

பல பல தெய்வங்களுக்குப் பல பல பெரிய கோவில்கள் எடுக்கப்பட்டிருந்தன. தற்போது இத்தெய்வங்கள் மறதியின் வாய்ப்பட்டொழிந்துவிட்டன ; ஆனால் இவைகளுக்கு அக் காலத்தில் தூபதீப நைவேத்தியங்கள் நடந்து கொண்டிருந்தன. உயர்ந்தோங்கிய பல அரண்மனைகள் நாட்டில் எங்கும் நிலவின. கோதுமை விளைந்த வயற்பண்ணைகளிலும், மனோகரமான தோட்டங்களிலும், கனிவர்க்கம் நிரம்பிய சோலைகளிலும், லக்ஷக்கணக்கான அடிமைகள் வேலை செய்து வந்தார்கள். அந்நிய நாடுகளைவென்று அங்கு நின்றும் கொண்டுவந்த அடிமைகளே இவர்கள். நாகரிகமுள்ள நாடுகள் பலவற்றிலுமிருந்து வாணிகக் கப்பல்கள் வந்து நீல நதியின் அகன்ற நீர்ப் பரப்பிலே மிதந்து கொண்டிருந்தன.

இப்படியாக, அக்காலத்துச் சிறந்தோங்கியது எகிப்து தேசம். 'பூர்வ உலகத்துப் பேரரசி' என்னும்படியாய் நெடுங்காலமாக இதன் வாழ்க்கை நிகழ்ந்தது. ஒருவராலும் இது வென்று கைக் கொள்ள முடியாததாய் இருந்தது. ஆடம்பரத்தின் உச்ச நிலையை அடைந்து, செல்வத்தில் ஈடும் எடுப்பும் இல்லாததாய், கலைகள், சாஸ்திரங்கள், சமயம், மந்திரதந்திரங்கள், வாணிகம் முதலிய பல துறைகளிலும் சிறந்து மேம்பட்டதாய் இந்நாடு விளங்கியது.

**இதன் தொன்மை**

பல நூற்றாண்டுகளாகப் பிற நாட்டினர்களுக்குப் பொறாமையும் அச்சமும் விளைத்து வந்த இந்த எகிப்து நாகரிகம் எவ்வளவு காலத்திற்கு முந்தியது ? இது தற்காலத்துள்ள ஆராய்ச்சியாளரால் ஒருவாறுதான் ஊகிக்கக் கூடியது. ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயும் இந்நாகரிகம் தொன்மையதாய்த் தான் கருதப்பட்டது. இதன் சின்னங்களாக விளங்கிய சிற்பங்களும் பிற கலை அமைப்புக்களும் அப்பழங்காலத்திலேயே மிக்க மேன்மையான நிலையை அடைந்திருந்தன. நம் காலத்திலுள்ள தொன்மை ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் வியந்து பாராட்டும்படியான மேம்பாட்டினை இச்சின்னங்கள் எய்தியிருந்தன. 'கீஸெஹ்' (Gizeh) என்ற இடத்திலுள்ள ஸ்ப்விங்ஸ் மிருக வடிவமும், கேஆப்ஸ் (Cheops) என்ற இடத்திலுள்ள பிரமிட் கோபுரமும் என்ன குறிப்புடையன என்று இன்னும் அறிந்தவர்கள் இல்லை. இவை இரண்டும், கிறிஸ்து பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, நீலநதிப் பள்ளத்தாக்கை உற்று நோக்கிக் கொண்டு நின்றன. கணக்கிட முடியாத காலமாக மேன்மேலும் முன்னேறி வந்த நாகரிகத்தின் பல்வேறு விளைவுகளுள் இவை இரண்டாகும்.

**நினைவுச் சின்னங்கள்**

எகிப்தியர் சாசுவதமான கட்டடங்களை அமைப்பதில் சிறந்துவிளங்கிய ஒரு ஜாதியினர். இறந்து போனவர்களின் உடலை அழிவு எய்தாமல் நீடூழி இருக்கும்படி காப்பாற்றி வந்தனர். அவற்றிற்காக அமைக்கப்பட்ட கல்லறைகளும் பிற ஞாபகச் சின்னங்களும் துளங்காமல் நின்று மலைகளையும் வெல்லக் கூடியன என்னும்படி ஓங்கின. இந்த எகிப்தியருக்கு வாழ்வும் மரணமும் சாமானிய விஷயங்களாகத் தோன்றவில்லை. அவற்றைக் குறித்து எப்பொழுதும் மிக்க கவலையோடு ஆராய்ந்து வந்தனர். 'உலகத்தார் தங்களை மறந்து விடுவார்களே ! இம்மறதி கொடிய விதிகள் எல்லாவற்றிலும் மிகக் கொடியதொன்றல்லவா ! இதனை எப்படித் தடுப்பது ?' என்ற கவலை அவர்களை வாட்டி வந்தது.

இப்படிப்பட்ட எகிப்தியர்கள் தங்கள் செயல்களையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் எக்காலமும் இருக்கும்படி குறித்து வைக்க எண்ணியது இயல்புதானே ? இவர்களுடைய கல்லறைகளும் பிரமிடுகளும் அரண்மனைகளும் கோயில்களும் சரித்திரக் கதைகள் நிரம்பிய மிகப் பெரிய கருவூலங்களாய் அமைந்துள்ளன. இவர்கள், தங்கள் பெருமையையும், புகழையும் எல்லாக் காலத்தாரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று கருதி, இவைபற்றிய

குறிப்புக்களைக் கற்களிலே செதுக்கி வைத்தார்கள். இவற்றுள், இப்போது கிடைப்பன ஒரு சில சிதைவுகளேயாம். இவைகளை நோக்கிய அளவிலும், 'ஒரு ஜாதியார் தங்களைக் குறித்து இவ்வளவு சொல்ல முடியுமா?' என்று அறிஞர்கள் அதிசயிக்கிறார்கள்; 'சொல்வதற்குத்தான் இவ்வளவு இருக்குமா?' என்றும் அவர்கள் வியப்புறுகிறார்கள்.

ஆனால், நூற்றாண்டுகள் பல கழியலாயின. ஏனைய நாகரிகங்களைப்போல இந்த அற்புதமான நாகரிகமும் அழிந்துதான் போயிற்று. வயல்களையும் நகரங்களையும் அரண்மனைகளையும் மணற்குவியல்கள் மூடி மேடிட்டுவிட்டன. பொருளறியும் பயிற்சி வளமும் நிரம்பிய மொழி கேட்கப்பட்ட இடத்திலே இப்பொழுது அந்நிய மொழிகள் பேசப்படுகின்றன. தீர்க்கதரிசிகள், கவிஞர்கள், மதாச்சாரியர்கள், சரித்திர ஆசிரியர்கள், வீரர்கள், அரசர்கள் முதலிய அனைவருடைய வாய்களிலும் நுண்மணல்கள் புகுந்து அவற்றை அடைத்து விட்டன. அவர்கள் செயல்களையும் கருத்துக்களையும் குறித்தற்குச் செதுக்கிய லிகிதங்களும் பொருள் விளங்காதனவாய்ப் போய்விட்டன. பிற்காலத்துத் தோன்றிய மக்கள், மிக நெடியனவாக அமைந்த சின்னங்களைப் பார்த்துப் பார்த்து, விள்ள முடியாத ரகசியமாக அவை இருப்பதை எண்ணி ஏக்கமுற்றார்கள்.

### ரோஸெட்டா சிலை

பல நூற்றாண்டுகள் இப்படி மௌனமாகக் கழிந்த பிறகு, திடீரென்று, தேசீய நூல்-நிலையங்களுள் மிகப் பெரியதான இதனைத் திறந்து நோக்குதற்குரிய கருவி கிடைத்தது. கி. பி. 1799-ல் நெப்போலியன் சேனையைச் சேர்ந்த சில சாதாரணச் சிப்பாய்கள் நீலநதியின் கரையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள்* சேற்றிலிருந்து துண்டுக்கல் ஒன்றை இழுத்து எடுத்தார்கள். இதில் சமவரிகளாய் எழுதின எழுத்துத் தொகுதிகள் மூன்று அமைந்திருந்தன. இவற்றுள் ஒரு தொகுதி கிரேக்க மொழியில் இருந்தது. மற்றைய இரண்டும் கற்கூம்புகளிலும் (Obelisk), பிரமிட் கோபுரங்களிலும், கோயில்களின் அழிவுச் சின்னங்களிலும் காணப்பட்ட லிபியில் அமைந்திருந்தன. இந்தத் துண்டுக் கல்லிற்கு ரோஸெட்டா** சிலை (Rosetta Stone) என்று பெயரிட்டனர். இச்சிலையின் எழுத்துக்களால் இதுவரையில்

---

* நெப்போலியனது படையில் உத்தியோகஸ்தனாக இருந்த ப்ரூஸ்ஸார்ட் (Broussard) இச் சிலையைக் கண்டு பிடித்ததாகக் கூறுவர்.

** நீலநதி கடலோடு சங்கமமாகும் துறைகளுள் ஒன்றின் பெயர் ரோஸெட்டா. இந்த இடத்தில், எழுத்துக்கள் அமைந்த இக் கல்-துண்டு கிடைத்ததால் இப்பெயர் பெற்றது.

கண்டு பிடிக்கப்படாது மறைந்துபோன நாகரிக-கண்டம் ஒன்று தற்கால மக்களின் அறிவிற்குப் புலப்பட்டது.

இச்சிலையில் எழுதிய எழுத்துக்களை நிர்த்தாரணம் செய்து வாசித்தவர் பிரெஞ்சு அறிஞரான ஷாம்பொல்யான் (Champollion) என்பவர். இவர் இதிலுள்ள பதினான்கு எழுத்துக்களைக் கண்டு பிடிப்பதற்கு இருபது ஆண்டுகள் உழைத்தனர். ஓயாது உழைத்து வந்தமையால் தம் உயிரையும் இவர் இழக்க நேரிட்டது. இவருக்குப்பின், இவர் மேற்கொண்ட முயற்சியை வேறு சில அறிஞர்கள் முற்றுவித்தார்கள். ரோஸெட்டா சிலை இப்பொழுது லண்டனில் பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் அடங்கிய சொற்களால் அற்புத விஷயம் யாதும் வெளியாகிவிடவில்லை. இதில் காணப்படுவன அரசனது சில கட்டளை அல்லது விதிகளேயாகும். இவை கிரேக்க எழுத்திலும், பூர்விக எகிப்திய எழுத்திலும் (Hieroglyphics), மிகப் பிற்பட்ட எகிப்திய எழுத்திலும் (Demotic) பொறிக்கப்பட்டன. ஆனால் இவைகளை இன்ன என்று கண்டு பிடித்தது அறிவாற்றலாலும் கல்வித் திறத்தினாலும் ஆகும். இவற்றால் நாலாயிரம் ஆண்டுகளாக ஒரு பெரிய தேசத்தில் நிகழ்ந்த மக்கள் வாழ்வின் சரித்திரமானது நமக்குப் புலனாகிறது. பன்னெடு நூற்றாண்டுகளாக எகிப்து தேசத்தை மூடிச் சூழ்ந்திருந்த அந்தகாரமானது இப்பொழுது சிறிது நீங்கியுள்ளது.

ஆனால், ஒன்று மனங்கொள்ளுதற் குரியது. பல கல்லறைகளிலும் பல பிரமிட் கோபுரங்களிலும் உள்ள எழுத்துக்கள் இப்போது வாசிக்கப்பெற்ற போதிலும், அவற்றின் பொருள் முழுவதும் மிகத் தெளிவாய் விளங்கி விட்டது என்று கூற முடியாது. பூர்விக எகிப்து மக்கள் கொண்டிருந்த கருத்துக்கள், நோக்கங்கள், லட்சியங்கள் இவையெல்லாம் தற்கால மனிதர்க்கு உரியவற்றினின்றும் பெரிதும் வேறுபட்டவை. ஆதலால், அவர்கள் எழுதி வைத்துள்ள கதைகளிற் கூடப் பெரும் பகுதி புதை பொருளாகவே இருக்கிறது. அன்றியும், அவர்கள் மிகத் தாராளமாகக் கையாண்டு வந்த குழுக்குறிகளும் கருத்தை மறைத்து விடுகின்றன. என்றாலும், அவர்களது வாழ்க்கைத் தத்துவங்களின் முக்கியாம்சங்கள் நமக்குப் புலப்படுகின்றன. இவைகள் அவர்களால் பன்முறையும் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறப்படுதலினாலே நம் கவனத்தை ஈர்க்கின்றன.

மூன்று தத்துவங்கள் அவர்களது உள்ளத்தை ஆட்சி கொண்டன. இகவாழ்வு மிகச் சுருங்கியது; உண்மையான வாழ்வு மரணத்திற்குப் பின்தான். இப் பர வாழ்விற்குத் தயாராகவும் தகுதியாகவும் இவ்வுலகில் தன்னைச் செய்து கொள்வதே

மனிதனது கடமை என்பவைகளே அவைகள். எகிப்தியர்கள் எவ்வகைச் செயலில் ஈடுபட்டிருந்தாலும், பிற ஜாதியினரோடு போர் தொடுத்து வெற்றி கொள்வதாய் இருந்தாலும், தங்கள் தந்தையர்களது சரீரங்களை அடக்கஞ் செய்வதற்குக் கல்லறை இயற்றுவதாயிருந்தாலும், மேற்குறித்த அடிப்படையான கருத்துக்கள் அவர்களை ஆட்டி வந்தன. ஆகையால் எகிப்திய இலக்கியத்தில் ஓர் ஆழ்ந்த சோகம் புலப்பட்டது; அவர்கள் சொல் நடையில் ஒரு பாரம் அழுத்திக் கொண்டிருந்தது. உடன் செய்ய வேண்டும் கருமங்களை மிகத் தீவிரமாய் இவ் இலக்கியம் உணர்த்தியது. அடிப்படைக் கருத்துக்களைக்* காணினும், இவையனைத்தும் ஒழுங்காகப் பிற மக்களது இலக்கியங்களில் காணுதல் அருமை என்பர்.

## முற்பட்ட எழுத்துக்கள்

எகிப்தியரது மிகத் தொன்மையான சிலாலிகிதங்கள் ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. ஆனால் தொடர்ச்சியாக இந்த லிகிதம் காணப்படுவது கி.மு. 3700-க்குப் பின்தான். இவ்வளவு நீடித்த காலமாக வளர்ந்து வந்த நாகரிகத்திலே எழுத்துக்கள் நாளடைவில் உருவ வேறுபாடு அடைதல் இயற்கையே. மிக மிக முற்பட்ட எழுத்துக்கள் உருவ-எழுத்துக்களாய் (Hieroglyphics) இருந்தன. பிற்பாடு, ஆயிரம் அல்லது ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழிந்தபின், உணர்வெழுத்துக்கள் (Hieratic) தோன்றின. இவ்வகை எழுத்து உருவெழுத்துக்களின் இலகுவான பரிணாமமே; வாணிகம் முதலிய பல துறைகளில் வழங்கும்படியாகவும், அக்காலத்து உபயோகித்த பாப்பிரஸ் (Papyrus) என்ற கோரைத் தாளில் எழுதத் தக்கபடியாகவும் அமைந்தது.

இதற்குப் பிற்பாடு, எகிப்திய மொழி மிக எளியதாக மாறிவிட்டது. தெருக்களிலும் சந்தைகளிலும் சாதாரணமாய் வழங்குவதற்குத் தக்கதாயிற்று. இந்த மொழியை எழுதுவதற்கு மேற்குறித்த இரண்டு வகை எழுத்துக்களும் மிகவும் இலகுவாக்கப்பட்டன. இந்த எளிய எகிப்து மொழியையும் எழுத்துக்களையும்

---

* இக்கருத்துக்கள் நமது நாட்டினர்க்குப் புதியன அல்ல.

இளமையும் எழிலும் வானத் திடுவிலின் ஈண்ட மாயும்;
வளமையும் கிளையும் வாரிப் புதிய தன் வரவு போலும்;
வெளியிடை விளக்கின் வீயும் ஆயுவும்; என்று வீட்டுக்கு
உளபகல் ஊக்கஞ் செய்வர் உணர்வினாற் பெரிய நீரார்

என்ற மேருமந்தர புராணச் செய்யுளைக் (109) காண்க.

இங்ஙனம் நிலையாமையை வற்புறுத்தி, பரகதிக்குரிய அறநெறியை மேற்கொள்ள வேண்டுமென்று உபதேசித்தவர்கள் ஜைனர்களாவர்.

டிமாட்டிக் (Demotic) என்ற பெயரால் வழங்குகின்றனர். கடைசியாக, சுமார் கி. பி. 200 அளவில், எகிப்திய மொழியிலே கிரேக்க, அராபிச் சொற்களும், பிற அந்நிய மொழிச் சொற்களும் மிகுதியாகக் கலந்து விட்டன. எனவே நீல நதிப் பிரதேசத்தில் பிற்காலத்தில் வழங்கியது தூய எகிப்து மொழி அல்ல. இங்ஙனம் வழங்கிய கலவை மொழியைக் காப்டிக் (Coptic) என்று அழைக்கின்றனர்.

**சிலைகள் கூறும் கதை**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடித்து வந்திருக்கும் சிலைகளிலும் கல்லறைகளிலும் என்ன என்ன நிகழ்ச்சிக் குறிப்புக்களும், புராணக் கதைகளும், கதைகளும், கவிதைகளும், சரித்திரங்களும், எழுதப்பட்டிருந்தன ? யாவரும் இவைகளை அறிய விரும்புவர். இவற்றிலே ஆண்டை நிகழ்ச்சிகள் மிக்க ஆடம்பர முறையில் குறிக்கப்பட்டிருந்தன ; வெற்றி வீரர்களுடைய பெருஞ் செயல்கள் பழங்கதைகளாகக் காணப்பட்டன; இங்கே அரசு புரிந்த எண்ணிறந்த பார்வோன்களுடைய (Pharaohs) ஆட்சியைக் குறித்து வானளாவப் புகழ்ந்து எழுதியிருந்தது. வென்று கொள்ளப்பட்ட பகை நாடுகள், புதிதாக இயற்றிய நகரங்கள், கோயில்கள், பிரமிட் கோபுரங்கள், சிலைகள், கற்கும்புகள், முதலியவற்றின் வரலாறுகளும் வரையப்பட்டிருந்தன. இவற்றில் எழுதிய தோத்திரங்கள் இன்றும் உள்ளன. இவைகளைப் படிக்கப் படிக்க, எகிப்தியர்கள் வருந்திச் செய்து வந்த பிரார்த்தனைகள், துதிகள் முதலியன நமக்கு இனிது புலனாகின்றன. இவற்றிலுள்ள மந்திரங்களும் உபதேச மொழிகளும் குழுக்குறிகள் நிரம்பிப் பொருள் விளங்குவதற்கு அரியனவாயுள்ளன.

**சடங்குகள்**

அரசு முறை பற்றியும் தெய்வம் பற்றியும் உள்ள பல சடங்குகள் காணப்படுகின்றன. இறந்தோர்க்குச் செய்யும் சடங்குக் குறிப்புக்களும் மிகுதியாகத் தெரிகின்றன. சிறு கதைகளும் அங்கே உள்ளன ; ஆனால் அவற்றின் முடிவில் மந்திர தந்திரங்கள் புகுந்து கதை நயத்தைக் கெடுத்து விடுகின்றன. என்றாலும் அரண்மனையிலும் வெளியிலும் நிகழ்ந்து வந்த வாழ்க்கையைக் குறித்துப் பல அம்சங்கள் இவற்றால் வெளியாகின்றன. காதல் பற்றியும், சோகம் பற்றியும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய கவிதைத் துணுக்குக்களும் புலனாகின்றன. இவற்றால் மக்களின் இருதய உணர்ச்சிகள் எவ்வளவு காலமாயினும் மாறுதல் அருமை என்பது கண்டுகொள்ளலாம். இந்த

எழுத்துக்களிலெல்லாம், இவை எது பற்றியாயிருப்பினும் எக்காலத்தவாயிருப்பினும், மதத்தொனி கேட்கப்பட்டுத்தான் வந்திருக்கிறது. எகிப்திய தெய்வங்கள் எப்பொழுதும் சாந்நித்யமாய்த்தான் விளங்கி வந்திருக்கின்றன. அவைகள் அரசாங்கத்தின் ஒரு பகுதியாகவே அமைந்துவிட்டன. தினசரி வாழ்வில் உள்ள செயல்கள் எவ்வளவு சாதாரணமாயிருப்பினும், அவைகளும் சொர்க்கத்தையும் நரகத்தையும் ஆளுகின்ற தெய்வங்களின் பிரீதியின் பொருட்டாகவே செய்யப்பட்டன.

**அம்மோன் - ரா**

எகிப்தியருடைய மூலப் பெருந்தெய்வம் உலகத்தை இயற்றிய ஒரு கருத்தா என்ற அளவில் நின்று விடவில்லை. பஞ்ச பூதங்களையும் இயற்கை விதிகளையும் பிரதிபலிக்கும் மூர்த்தியாகவே இத்தெய்வம் கருதப்பட்டது. மிக மிகப் பண்டைக் காலத்துத் தானே இந்த எகிப்தியர்கள் இத்தெய்வத்தின் இயல்புகளைப் பலவாறு உயர்த்திக் கூறிப் புகழ்ந்து, ஒவ்வோர் இயல்பையும் தனித் தனிக் கடவுளாக மதிக்கத் தொடங்கினர்.

படைப்புக் கடவுளின் ஓர் இயல்பை அம்மோன்-ரா (Ammon-Ra) என்ற மூர்த்தி பேதமாகக் கொண்டனர். இம்மூர்த்திதான் சூரியன் ; வானுலகத்தை ஆளும் தெய்வம். அடிவானத்திற்குக் கீழாக ஒரு சூரியன் உண்டு என்றும் கருதினர். இம்மூர்த்தியை இறந்தவர்கள் செல்லும் கீழுலகத்திற்கு அதிபதியாகக் கொண்டனர். சக்தி, ஞானம், நீதி முதலிய இறைவனது குணங்களை எருது, முதலை, பூனை முதலிய பிராணிகள் குறிப்பனவாக எண்ணி, அவற்றைப் புண்ணிய ஜீவன்களாக இவர்கள் கருதிவந்தனர். ஆயிரக்கணக்கான வருஷங்களாக முழுமுதற் கடவுளின் தன்மையைக் குறித்து மிக ஆழ்ந்து விசாரணை செய்து வந்துள்ளார்கள். முடிவில் எளிதிலே அறியமுடியாத தெய்வ வரலாறுகளும் சடங்குகளும் ஸ்தோத்திரங்களும் இவ்விசாரணையின் பயனாய் விளைந்துவிட்டன.

**இலக்கிய முயற்சி**

எகிப்தியர்களிடத்திலேதான் பூர்வ காலத்திலுள்ள எல்லாத் தேசத்தார்களைக் காட்டிலும் மிக நீண்டகாலமாக இலக்கிய முயற்சி நடைபெற்று வந்திருக்கிறது. இவர்களது இலக்கியம் கி. மு. ஆறாயிரத்திலிருந்தாவது தொடங்குகிறது என்பது உறுதி. இடையே சில காலத்திற்குரிய இலக்கியங்கள் இன்று கிடைக்கவில்லை. ஆனால் கி. மு. 3700 முதல் கி. மு. 200 வரையுள்ள இலக்கியங்கள் இடையீடின்றி இன்று கிடைக்கின்றன. இத் தேசத்தாரது அறிவின் ஆற்றலை இவை நன்கு புலப்படுத்து

கின்றன. இந்த இலக்கியங்களால் வேறு எந்தத் தேசத்தாரிடத்தும் காணப்பெறாத அறிவொளியும், தேசீய வீரமும், மனத்திட்பமும், ஆழ்ந்த கருத்து மேன்மையும் காணப்படுகின்றன என்பர். இன்றும் இந்த இலக்கியங்களை அறிஞர்கள் வியக்கின்றார்கள், புகழ்கின்றார்கள்.

உலகத்திலுள்ள நூல்களுள் மிக மிகப் பழமையானது மேற்கூறியபடி எகிப்தில் நீலநதிக் கரையிலே தோன்றியதுதான். இந்நூலின் பிரதியை தீப்ஸ் (Thebes) நகரத்தில் ப்ரிஸ்ஸி (Prisse) என்பவர் கண்டு பிடித்தனர். இதனை ப்ரிஸ்ஸி சுவடி என்று வழங்குகிறார்கள். பாரிஸ் நகரத்தில் தேசீய நூல் நிலையத்தில் இந்நூலின் பிரதி இப்பொழுது வைக்கப்பட்டுள்ளது. இப்பிரதி கி. மு. 2500-ல் எழுதப் பெற்றது. ஆனால் இக்காலத்திற்கு மிக மிக முந்தியே, கி. மு. 3850-ல், எழுதிய ஒரு மூல நூலின் பிரதியாகவே இது கருதப்படுகிறது.

**'ப்டாஹ்-ஹோட்டெப்'**

இந்நூலின் பெயர் 'ப்டாஹ்-ஹோட்டெப் (Ptah-Hotep) உபதேசங்கள்'. ப்டாஹ்-ஹோட்டெப்' என்பவர் கி.மு. 3850-ல் எகிப்து அரசனாக முடி சூடியவர். ஆகவே இந்நூல் தற்காலத்திலிருந்து 6000-ம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இத்தனை பழமையாயிருந்தும் இந்நூலில் அநாகரிகத் தன்மை இல்லாமலிருப்பது வியக்கத்தக்கது. நீண்டகாலமாய்க் கல்வியறிவிற் சிறந்து விளங்கிப் பண்பாடு நிரம்பியவர்களுக்குக் கூறும் நன்மொழிகளே இதில் காணப்படுவன. இந்நூலிலே மக்கட்பண்பு நிரம்பியுள்ளது. விவிலிய நூலில் வரும் நீதிமொழியைப் போன்ற கௌரவமுடைய வாகப் பல உபதேசங்கள் இதன்கண் அமைந்துள்ளன. ப்டாஹ்-ஹோட்டெப் தமது 110-வது வயதில் இந்நூலை எழுதியதாகத் தாமே சொல்லுகிறார். இவ்வாறு ஆண்டில் முதிர்ந்தவர்கள் எந்தக் காலத்திலிருந்தாலும் அவர்கள் கூறுவனவற்றைச் சிரத்தையுடன் கேட்பது நமது கடமையல்லவா? கீழ்க்கண்ட பகுதியைக் கேளுங்கள்.

மனிதன் மூப்பு எய்துகிறான். அவனுடைய வலிமையானது குறைகிறது; வயது அதிகப்படுகிறது; இளமை வாடிச் சோர்ந்து விடுகிறது. நாளுக்குநாள் வயோதிகனுடைய இதயமானது தளர்ந்து துன்பமடைகிறது. அவன் கண்கள் காண்பதில்லை; அவன் காதுகள் கேட்பதில்லை; அவனது சக்தி குறைந்து குறைந்து வருகிறது. முன்போல அவன் வாயினின்றும் சொற்கள் திடமாக வருவதில்லை; அவன் மனம் ஆற்றல் குன்றி முந்திய நாள் அவன் செய்த செயல்களையும்கூட நினைவிற்கு கொண்டு

வர முடியாமல் தவிக்கிறது. உண்மையிலேயே அவன் சரீரம் முழுவதும் வேதனையுறுகிறது. நன்மையாயுள்ளது அவனுக்குத் தீமையாய்ப்படுகிறது; அவனுடைய நாக்கு ருசியறிவதில்லை. அந்தோ, மனிதனின் முதுமை துன்பமயமாய் உள்ளது. அவனுடைய நாசி வானத்தில் உலவும் இனிய காற்றை நுகர்வதில்லை. அவனுடைய சுவாசப்பை தளர்ந்து விடுகிறது. நின்றாலும் மகிழ்ச்சியில்லை; உட்கார்ந்தாலும் அவனுக்கு மகிழ்ச்சி உண்டாவதில்லை.

**இளைஞருக்கான பொன்மொழிகள்**

முதுமையின் இயல்பை இவ்வாறு கூறுகிறார். இளைஞர்களுக்கு எவ்வகையான உபதேசங்களைத் தருகிறார்?

கல்வியறிவு மிகுதியும் உள்ளோமென்று செருக்குக் கொள்ளாதே. உண்மை ஞானம் உடையவர்களைப் போற்றுவாயாக. எளியோரையும் நீ போற்றுவதில் தவறக்கூடாது.

அறிவுக் களஞ்சியத்தின் வாசல் ஒருவனுக்கும் அடைத்துப் போகவில்லை. ஆனால், அங்கே யார் போனாலும் அவன் பரிபூரணத்தை அடைவதற்கு முயன்றால், அது ஒரு பொழுதும் அவனுக்குச் சித்திக்கமாட்டாது.

மரகதமும் வைரமும் கல்லோடு கல்லாய் மண்ணில் புதையுண்டு கிடக்கின்றன. இவற்றின் பொருட்டு அடிமையாட்கள் நிலத்தைத் தோண்டுகிறார்கள். இங்ஙனமே அறிவுரைகளும் வெளிப்படப் புலனாகாது புதையுண்டுதான் கிடக்கும்.

உன்னை எதிர்த்துத் தாக்குபவன் உன்னைக் காட்டிலும் வலிமையுள்ளவனானால், நீ அவனுக்குப் பணிந்துவிடு. அவனோடு கோபம் கொள்ளாதே; அவன்மீது கையை நீட்டாதே. இப்படிச் செய்தால் உன்னைத் துன்பம் அணுகமாட்டாது. வலிமை மிகுந்த அவன் போருக்கு முன்னேறுதல் இயற்கை; அவனோடு எதிர்த்துச் சண்டையிடுதல் உனக்கு நன்மையைத் தர மாட்டாது. ஆதலால் உன்மீது அவன் கோபம் கொள்ளும் பொழுது, நீ அவனோடு பிணங்கிக் கொள்ளாதே. இங்ஙனம் ஒழுகினால், முடிவில் நீ அவனையும் வெற்றி கொள்வாய்.

யாரேனும் உன்னை இகழ்ந்து பழித்தால், அவனுக்கு மறுமொழி கூறாதே... நாவடக்கம் உள்ளவன் இவ்வாறு பழிப்பவனைக் காட்டிலும் அதிக ஆற்றலுடையவன்.

உன்மீது அதிகாரம் செலுத்தும் உரிமையுடையவர்கள் உன்னைத் தீங்கு செய்யும்படி ஏவினால், அத்தீங்குகளுக்காகத் தெய்வங்கள் உன்னைத் தண்டிக்கமாட்டா.

வேலைக்காரர்களை வைது நோகச் செய்பவன் தானே கீழான நிலைமைக்கு வந்துவிடுவான்...

நீ அறிவுள்ளவனானால், உன் இல்வாழ்க்கையில் நீ கவனமாயிரு. உன் மனைவியைக் கௌரவமாய் நடத்து. அவளிடத்து ஆழ்ந்த அன்புடையவனாய் இரு. உணவும் ஆடையும் அவளுக்குத் திருப்தியாகக் கொடு. இது கணவனுடைய கடமையாகும்.

அவளுக்குத் தைலங்கள், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை நிரம்பக் கொடு. ஒவ்வொரு நாளும் அவளோடு குலாவி அவளை இன்புறுத்தத் தவறாதே. அவளுடைய மனவிருப்பத்தையெல்லாம் நிறைவேற்று. ஏனெனில், உண்மையாக மனைவி மீது அன்பு கொண்டு அவளைக் கௌரவிப்பவன் தன்னைத் தானே கௌரவித்துக் கொள்ளுகிறான்.

அவளை அடித்துத் துன்புறுத்தாதே; அவள்மீது கொடுமை உள்ளம் கொள்ளாதே; அவளோடு இனிமையாய்ப் பேசி அவளை உன் வசப்படுத்து. இவ்வாறு நீ செய்வதனால் அவள் பிறர்மீது நாட்டம் கொள்ளாதபடி செய்து விடுகிறாய். அவளோடு உரையாடு, உன் அன்பு முழுவதையும் அவளுக்குக் கொடு, அவள் உறுதியாக உன் வசப்பட்டிருப்பாள்.

உண்மையாக நல்ல புதல்வன் வாய்ப்பது தெய்வங்களின் அருட்பிரசாதம்தான். அப்படிப்பட்ட புதல்வன், அவனிடத்து எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் அதிகமாகவே செய்வான்; தன் தந்தையின் ஆத்மாவை இன்புறுத்த நாடுவான்; தன் சீரிய ஒழுக்கத்தினால் தனது ஆற்றலை அபிவிருத்தி செய்வான்.

இவ்வாறாக உன்சரீரத்திற்குச் சௌக்கியம் ஏற்படும்; உன்னுடைய ஆயுள் வளரும். ஆண்டுகள் செல்லச்செல்ல உனது வலிமையும் மிகுந்து வரும்.

மேற்கூறியவற்றைக் காட்டிலும் சிறந்த உபதேசங்களை நமது இளைஞர்களுக்குக் கூற முடியுமா ?

**இறப்பிற்குப் பின்**

உலக வாழ்க்கைக்கு வேண்டும் உபதேசங்களை நாம் தெரிந்தோம். இவ்வாழ்க்கையின் பின்பு இறந்துபோன மக்களுடைய ஆவி மேற்கொள்ள வேண்டும் நியதிகளையும் எகிப்தியர் வகுத்துள்ளார்கள். மற்றைய நூல்களைக் காட்டிலும் இந்த நியதிகளடங்கிய நூலே மிக மிகப் பிரசித்தமாக வழங்குகிறது. இந் நூலின் சில பகுதிகள் இப்பொழுது பெர்லின் நகரத்தில் 'ராயல்' காட்சி சாலையில் உள்ளன. எகிப்தியர்கள் இந்நூலை 'பகலில் வெளிச் செல்லுகை' என்று பொருள்படுந் தொடரால் வழங்கி

வந்தனர். தற்காலத்தவர் இதனை 'இறந்தவர்களின் நூல்' (The Book of the Dead) என்பர். பிற்கூறிய பெயர் மிகப்பொருத்தமே. மக்கள் இறந்தபின் செல்லும் மறு உலகத்திற்குரிய வழிகாட்டியாக இந்நூல் கருதப்பட்டுள்ளது. இந்நூலின் பகுதிகளைப் பிரேதங்களுடன் அடக்கம் செய்வது வழக்கம்.

மரணத்திற்குப் பின், ஆன்மா சாந்தியும் இன்பமும் அடைய வேண்டுமானால் இந்நூலில் கூறியுள்ள நியதிகளை அறிவது அவசியமென்று முற்காலத்து எகிப்தியர்கள் நம்பினார்கள். போகும் வழி, அங்கே ஓதவேண்டும் மந்திரங்கள், கையாள வேண்டும் நியதிகள்: இவைகளெல்லாம் இந்நூலில் கூறப்பட்டுள்ளன என்பர். முடிவில் கடவுளுடைய முன்னிலையிலே சென்றதும் அங்கே அவரால் நீதி வழங்கப்படும். இந்நூலின் சில அதிகாரங்கள் கி. மு. 4266-ல் எழுதப்பட்டன என்பர். பெரும் பகுதி கி. மு. 3000-க்கு முற்பட்டதென்றும், சில பகுதி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றியதென்றும் கூறுவர்.

சொர்க்கத்தை அமந்தி (Amenti) என்னும் பெயரால் வழங்கினர். இது மேற்குத் திசையில் உள்ளதாம். இங்குச் செல்ல, பல நதிகளைக் கடக்க வேண்டுமாம் ; பல மலைகளில் ஏறுதல் வேண்டுமாம் ; பல வனாந்தரங்களை ஊடறுத்துச் செல்லுதல் வேண்டுமாம்; பல ராட்சசர்களையும், பூதங்களையும் வெற்றி கொள்ளுதல் வேண்டுமாம். இவைகளையெல்லாம் முன் கூட்டி உணர்த்தி, அங்கங்கே செய்யவேண்டும் காரியங்களை மேற்கூறிய நூல் தெரிவிக்கிறது. பிரார்த்தனைகள், எளிதில் பூட்டுவிடாதபடியிருக்கும் கதவுகளைத் திறப்பதற்குரிய மர்ம மொழிகள், பூத பைசாசங்களை வசீகரிக்கும் ரகசிய மந்திரங்கள், பற்பல சடங்குகள்: இவைகளெல்லாம் ஆன்மாவுக்கு உபகரிக்கப்படுகின்றன. பின்பு நீதி ஸ்தலத்தை ஆன்மா அடைகிறது. அங்கே ஒஸிரிஸ் (Osiris) என்னும் தெய்வம் அமர்ந்திருக்கும். இத்தெய்வந்தான் இறந்தோர் புகும் உலகத்தை ஆளுகிறது. மந்திரங்களைச் சரியான கிரியையுடனும், சரியான உச்சரிப்புடனும் ஓதினால்தான் இத்தெய்வம் செவி சாய்க்கும்.

### நல்வாழ்க்கை குறித்த முறையீடு

ஆனால், நீதிஸ்தலத்திலே தாம் தமது இகலோக வாழ்க்கையில் நிகழ்த்தியவாகத் தெரிவிக்கும் நற்செய்கைகள் முற்றும் உண்மையாயிருத்தல் வேண்டும் ; தீச்செயல்கள் புரிந்திருக்கக்கூடாது. இத்தகைய நல்வாழ்வினால், மனுஷ தத்துவங்கள் முழுவதையும் ஆன்மா திரும்ப அடைந்து நித்திய வாசியாய் இன்ப உலகில் வாழும். இதற்கு மாறாக, தீச்செயல்கள் மிகுந்து

தீய வாழ்க்கையை நடத்தி வந்திருந்தால், அந்த ஆன்மா துக்க சாகரத்தில் உழல நேரிடும். எப்பொழுதும் பசித்தீயினால் வருந்திக் கொண்டிருக்கும் மிருகம் ஒன்று எதிரில் நின்றுகொண்டு அந்த ஆன்மாவைப் பிய்த்துப் பிய்த்து முற்றும் தின்றுவிடும். என்ன வகையான நல்வாழ்க்கை வாழ்ந்ததாக நீதி ஸ்தலத்தின்முன் ஆன்மா தெரிவிக்க வேண்டும் ?

உண்மைக்கு அதிபதிகளே, தங்களிடம் உண்மையைச் சமர்ப்பிக்கிறேன் :

மக்களுள் யாருக்கும் நான் மறைவாகத் தீங்கு செய்ததில்லை.

துன்புறுவோரை நான் நலிவுறுத்தவில்லை.

நான் பொய் கூறியதில்லை.

ஏவலாளிடமிருந்து அவன் செய்ய வேண்டியதற்கு அதிகமாக நான் வேலை வாங்கியதில்லை.

நான் சோம்பேறியாக இருந்ததில்லை.

நான் மதுபானம் செய்யவில்லை.

நான் தீய வொழுக்கம் புரிந்ததில்லை.

ஏவலாளைக் குறித்து அவன் எஜமானனிடம் நான் பழித்துக் கூறியதில்லை.

ஒருவனும் பசியால் வருந்தும்படி நான் செய்ததில்லை.

ஒருவனுக்கும் நான் துன்பம் இழைத்ததில்லை.

நான் ஒருவனையும் கொலை செய்யவில்லை.

நான் வஞ்சித்ததில்லை.

பலிபீடத்தில் தெய்வத்திற்குச் சமர்ப்பித்த உண்டியை நான் அருந்தியதில்லை.

பொருள் நிறுத்துக் கொடுப்பதில் ஒருவனையும் நான் ஏமாற்றியதில்லை.

குழந்தைக்குப் பால் கொடுக்காமல் நான் மறுத்ததில்லை.

நான் ஒருவனையும் பழித்துக் கூறியதில்லை.

தெய்வங்களுக்குரிய பட்சிகளை நான் வலைவைத்துப் பிடித்ததில்லை.

பயிரிடுவதற்கு வேண்டும் நீரை நான் தடுத்ததில்லை.

தெய்வங்களுக்குரிய மாமிச உண்டியை நான் திருடியதில்லை.

தெய்வங்களுக்குப் பலி நேர்வதில் நான் தவறியதில்லை.

பசித்தவர்களுக்கு உணவு கொடுக்கவும், தாகித்தவர்களுக்கு உண்ணும் நீர் கொடுக்கவும், நான் தவறியதில்லை.

நான் குற்றமற்றவன் ; நான் தூய்மையானவன்.

நாம் எப்படி வாழவேண்டுமென்பதைப் பற்றிக் கூறும் நூல்கள் உலகில் எத்தனையோ உள்ளன. ஆனால் எவ்வாறு வாழ்ந்து, எவ்வாறு சுவர்க்கம் புகவேண்டும் என்பதைத் திட்ட

மாகவும், தெளிவாகவும், பூர்த்தியாகவும் கூறும் நூல் இந்த எகிப்தில் தான் உள்ளது என்பர்.

இங்ஙனமே, மரணங் குறித்துப் பாடும் கையறுநிலைப் பாடல்களும் எகிப்தியரிடத்தில் இருந்தன. கி. மு. 2500-ல் நேர்ந்த ஒரு மரணத்தைக் குறித்து கி. மு. 1500-ல் எழுதிய கையறு நிலைப் பாடலின் பாப்பிரஸ் பிரதி யொன்று பிரிட்டிஷ் கண் காட்சிச் சாலையில் உள்ளது.

**வழங்கி வந்த கதைகள், பாடல்கள்**

மரணத்தையும், மரணத்தின்பின் வாழ்வையும் குறித்து மட்டும்தான் எகிப்தியர்கள் சிந்தித்து வந்தார்கள் என்று நினைப்பது தவறு. இவர்களிடையே பல கதைகளும் வழங்கி வந்தன. இக்கதைபற்றிய சித்திரங்கள் அரண்மனை, கோயில் முதலியவற்றின் தூண்களிலும் சுவர்களிலும் வரையப்பட்டிருந்தன. இக்கதைகள் பெரும்பாலும் மந்திரவாதிகளைக் குறித்துள்ளன.

இவ்வகைக் கதைகளேயன்றி, 'இரண்டு சகோதரர்கள்' என்பது போன்ற கதைகளும் இந்நாட்டில் வழங்கி வந்தன. மேலும், காதற் பாடல்களும், தோத்திரப் பாடல்களும் எகிப்தியருக்கு உவப்பாகவே இருந்தன. அவற்றுள் ஒரு காதற் பாட்டின் தழுவல் கீழ்வருவன :

பாயல் மீது விழுந்து கிடந்தனன்;
பாழ்த்த நெஞ்சமும் புத்தியும் பேதுற்று
நோயினால் நொறுக் குண்டன; சுற்றமும்
நொடிதின் எய்துவர் சூழ்ந்தெனை நோக்குவர் ;
ஓய்த லின்றியென் நண்பர்கள் கூடுவர்;
உறும் வயித்தியர் நாடியை ஓர்வரே;
நோயின் காரணம் காண அறிகிலார்
நொந்து நொந்தெனை நோக்குவர் நிற்பரே.

அன்ன கூட்டத்தில் ஆங்கு வருவளே;
அன்புப் பார்வையென் நெஞ்சினை அள்ளிடச்
சின்ன மென்மலர் சேர்தரு கூந்தலாள்
சிறுமை தீர்ந்திட்ட திங்கள் முகத்தினாள்
துன்னி நின்ற வயித்தியர் தங்களைச்
சூழுங் கண்ணால் நகைசெய்து நிற்பளே;
மன்னு காரணம் ஓர்ந்துறு நோயினை
மாற்றுவா ருளரோ மங்கை யன்றியே ?

இத் தழுவலிலும்கூட, மூலச்செய்யுளின் அழகு ஒருவாறு விளங்கலாம்.

ஆனால், எகிப்தியப் பாடல்களுள் மிக்க கௌரவமும் பெருமையும் பொருந்தியவை தெய்வங்களைக் குறித்தும் தெய்வங்களின் பிரதிநிதிகளாகிய பார்வோன்களைக் (Pharoahs) குறித்தும் தோன்றியவையே யாகும்.

எகிப்தியர்கள் வசனத்திலும், செய்யுளிலும் இயற்றி வைத்துள்ள இலக்கியக் கருவூலத்தினின்று ஒரு சிலவற்றை எடுத்துக் காட்டாகக் கொண்டு நோக்கினோம். அவர்களுடைய தொன்மை நம்மால் எண்ணி அறிய முடியாததாய் உள்ளது. அத்தொன்மைக் காலத்தே அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் குறித்தும், மரணத்தைக் குறித்தும் தற்காலத்தவராகிய நாம் தொடுக்கும் பிரசினைகளையே அவர்களும் ஆழ்ந்து சிந்தித்து உணர்ச்சியோடு வெளியிட்டிருக்கிறார்கள்; தற்காலத்திற் போலவே அக்காலத்தும் எழுத்தாளன் சக்திமானாக விளங்குகிறான். தன்னுடைய மனோபாவனைத் திறமையினாலும், மதிநுட்பத்தினாலும் மக்களது உள்ளத்தை ஆட்டுவிக்கிறான். இவற்றையெல்லாம் நினைக்கும்போது நாம் வியப்புக் கொள்ளாதிருக்க முடியுமா ?

# 2. பாபிலோனியா

## நதிகளுக்கு இடையேயுள்ள பூமி

டைகிரிஸ், யூப்ரட்டீஸ் என்ற இரு நதிகளுக்கும் இடையிலேயுள்ள பிரதேசம் மெஸொபொட்டேமியா என்று வழங்கப்படுகிறது. இச்சொல்லுக்கு நதிகளுக்கு இடையேயுள்ள பூமி என்று பொருள். இப்பிரதேசத்தில், செழிப்புள்ள தென் கீழ்ப் பகுதிக்குப் பாபிலோனியா என்று பெயர். 4000 ஆண்டுகளுக்கு முன்னர் அறிவிலும் உழைப்பிலும் மிகச் சிறந்த உன்னத பதவியை இது அடைந்திருந்தது. ஆராய்ச்சி இன்னும் மிகுமாயின் இதன் தொன்மை இன்னும் முற்காலத்ததாகவே துணியப்படலாம்.

முன் ஒரு காலத்தில், 'பாபிலோனிய அழிந்து விட்டது! பாபிலோனியா ஒழிந்து விட்டது!' என்ற கூக்குரலானது உலகெங்கும் பரந்தது; அக்காலத்துள்ள எல்லாத் தேசத்தார்களுடைய மனமும் குழப்பமடைந்தது. இந்த அழிவை நம்புதற்கே முடியாமல் இருந்தது. எவ்வாறு அது நேர்ந்தது என அறியவும் முடியவில்லை.

அக்காலத்து மக்களுக்கு வியப்பையும் அச்சத்தையும் பாபிலோன் உண்டுபண்ணி வந்தது. யாவராலும் அளவிட முடியாத செல்வத்திற்கு நிலைக்களமாக அது விளங்கிற்று. கலகமிட்டுத் திரியும் பாபச் செயல்களுக்கும் வெட்கம் என்பதே சிறிதுமற்ற காம வெறிச் செயல்களுக்கும் அது இடமாயிருந்தது. அதன் ஆடம்பர விரயமும், அதன் வெற்றியும், அதன் கொடுமையும், அதன் பெருமையும் சொல்லுந்தரத்தனவல்ல. பல நூற்றாண்டுகளாக உலகம் முழுதும் அதன் போக போக்கியங்களைக் கண்டு மோகித்துக் கிடந்தது. கலைப் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் மிக மேன்மையுற்று உச்சநிலையடைந்திருந்தது. இவ்வாறெல்லாம் பெருமை பெற்றிருந்தும் எல்லாவற்றையும் பீடிக்கும் அழிவு அதனையும் பீடித்து விட்டது. குடியாலும், காம வெறியாலும், மனிதனால் எண்ண இயலாத அத்தனை தாழ்ந்த நிலையில் அது வீழ்ந்தொழிந்தது. இவையே காரணமாக, பாபிலோன் நாசமும் அடைந்துவிட்டது. இன்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் பாபிலோனைப் புதைத்து மூடியிருக்கின்ற மணல் பிரதேசத்தைத் தோண்டி, அங்கேயுள்ள அதிசயமான சின்னங்களைக் கண்டு,

எவ்வளவு பெரியராஜ்யமானது அழிந்து இவ்வாறு சூனியமாய்ப் போயிற்று என்று வியந்து இரங்குகிறார்கள்.

**நாகரிகம் முதிர்ச்சி**

நாகரிகம் முதிர்ந்து வர முதிர்ந்து வர, அதனையே முற்றும் அழித்துவிடும் தத்துவம் ஒன்று அதன் உள்ளாக ஆழ்ந்து மறைந்து கிடக்கிறது என்று அறிஞர் கூறுவர். எட்டுவதற்கு அரிய உச்ச நிலையை நாகரிகம் அடிக்கடி தொட்டுவிடுகிறது ; ஆனால், அவ் உச்சநிலைக்குக் காரணமாயிருந்த செல்வம், ஆடம்பர வாழ்க்கை இவற்றாலேயே உடல் வலிமையும் ஒழுக்க நிலையும் குலைந்து, அந்நாகரிகமே அழிந்து பாழ்படுகிறது. எகிப்து, கிரீஸ், ரோம் முதலிய எத்தனையோ ராஜ்யங்கள், முடிவிலே, தங்கள் பேராசை வெறியினாலும், ஏகாதிபத்திய மமதையாலும், செல்வச் செருக்கினாலும், அதன் விளைவான சோம்பலினாலும் அழிந்து போய்விட்டன அல்லவா? இவற்றைப் போலவே பாபிலோனும் அழிந்துவிட்டது.

ஆனால், அழிவதற்கு முன் பாபிலோனிய தேசீய வாழ்க்கை எவ்வளவு உயிர்த் தத்துவம் பொருந்தியதாய் விளங்கியது ! எவ்வளவு பெருமை யுற்றிருந்தது ! இவற்றை நாம் நினைக்கும் பொழுது நமக்குப் பேராச்சரியம் விளைகிறது. அதன் தொன்மையை இன்று ஒருவாறுதான் ஊகித்தறிய முடிகிறது. குறைந்த பக்ஷம் 4000 ஆண்டுகளுக்கு முன்னர், அறிவிலும் ஆண்மையிலும் இப் பாபிலோனியா சிறந்து விளங்கியது என்று முன்னேகூறினோம். எகிப்தின் தொன்மையோடு பாபிலோன், அஸ்ஸீரியா என்றிவற்றின் நாகரிகத் தொன்மை நெருங்கிப் போட்டியிடுகிறது என்று நாம் உறுதியாய்க் கூறலாம். இதன் தொன்மையைக் குறித்து இன்னும் விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**துரேனியர்**

அக்காலத்தே பாபிலோனியாவின் வடபகுதியில் அக்காதியர்கள் வசித்து வந்தனர். அதன் தென்பகுதியில் சுமேரியர்கள் வாழ்ந்தனர். இந்த இரண்டு இனத்தவரும் துரேனியன் என்ற மக்கள் வகுப்பைச் சார்ந்தவர்கள். துரன் என்ற பெயருக்கு இருள்-நிலம் என்று பொருள். இச்சொல் துருக்கர் என்ற பெயரில் இன்றும் காணப்படுகிறது என்று கூறுவர். நெடுங்காலத்திற்குப் பின், பாபிலோனியாவை ஸெமித்திய ஜாதியார் படையெடுத்துக் கைப்பற்றினர். இங்ஙனம் படையெடுத்து வந்தவர்களுள் ஏலாமியர்களும், கல்தேயர்களும் கூறத் தக்கவர்கள். கலப்பு மணவினையால் இவர்களும் சுமேரியர்களும் கலப்பு ஜாதியார்

ஆயினர். பின்னர், வடகிழக்கிலிருந்து காஸ்ஸீய ஜாதியார் கி.மு. 15-ம் நூற்றாண்டில் அலையடித்து மோதுவது போல் படையெடுத்து வந்து பாபிலோனியாவைக் கைக்கொண்டு அப்பிரதேசத்தை ஐந்து நூற்றாண்டுகளாகச் சிறப்பாக ஆண்டு வந்தனர். இங்கே, முற்காலத்திலே செல்வ வளங்களால் சிறந்திருந்த நகரங்களில் உள்ள மணற் குன்றுகளைத் தோண்டியதில் அவற்றினின்றும் எழுத்துக்கள் அடங்கிய பல சதுரக் கற்கள் காணப்பட்டன. இச்சதுரக் கற்கள் கி. மு. 1200-ல் மெஸொபொட்டேமியாவை அஸ்ஸீரியா தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தது எனத் தெரிவிக்கின்றன. அன்றியும், தனக்குத் தென் பக்கத்திலிருந்த பாபிலோனியாவின் வழக்க ஒழுக்கங்களையும் இலக்கியங்களையும் அஸ்ஸீரியா தன்னதாகவே அங்கீகரித்துக் கொண்டுவிட்டது என்றும் நாம் அறிகிறோம்.

இவ்வாறாகப் பாபிலோனியரிடத்தில் வேற்று ஜாதியார்களின் புதியரத்தம் அடிக்கடி பாய்ந்து கலந்துவந்தது. இவ்வேற்று ஜாதியினர் வலிமையும் சுறுசுறுப்பும் உடையவர்களாயிருந்தனர். இவர்களுடைய ரத்தக் கலப்பானது மிதமிஞ்சிய செல்வம், சுகவாசம், ஆடம்பர வாழ்க்கை முதலியவற்றால் விளையக் கூடும் கேடுகளைப் பல நூற்றாண்டுகள் நிகழவொட்டாதபடி தடைசெய்து வந்தது. புதுக் கருத்துக்கள், புதிய அறிவுகள், வியாபாரம், விஞ்ஞானம், கலைகள் முதலியவற்றிற்குரிய புதிய முறைகள்: இவைகளெல்லாம் இவ்வேற்று நாட்டினர்களிடமிருந்து வந்திருத்தல் வேண்டும். தடந்தோய்ந்த பாதையில் சிறிதும் விலகுதல் இல்லாதபடி சென்று கொண்டிருக்கும் மக்களுக்குத் துர்த்தசைகளும், குழப்பங்களும் வரவேண்டுவது அவசியம் என்று கூடச் சொல்லலாம். அப்பொழுதுதான் பழைய பாதைகளிலிருந்து நீங்கிப் புதிய பாதைகளில் சென்று புதிய ஊக்கத்தோடு வாழ முடியும். பாபிலோனியா, அஸ்ஸீரியா இரண்டிலுமுள்ள நாகரிகம் அத்தேசங்களில் நிரம்பியிருந்த துக்கத்தாலும், குழப்பங்களாலும் புதிய உயிர்த்தத்துவம் பெற்று, பல நூற்றாண்டுகளாக மேம்பாடுற்று விளங்கியது.

**சிற்பத்தின் சிகரம்**

முற்குறித்த சதுரக் கற்களில் அமைந்த எழுத்துக்களால் இந்நாகரிகம் மிகமிக முதிர்ச்சியடைந்திருந்தது என்று நாம் அறிகிறோம். பாபிலோனியப் பிரகிதசத்தில் சிற்பத்தின் சிகரம் என்று சொல்லத்தகுந்த அரண்மனைகளும், கோயில்களும், நகர மதில்களும், நீர் செல் பாதைகளும் அமைக்கப் பட்டிருந்தன. மிகமிகப் பெரிய நூல்-நிலையங்கள் அங்கே விளங்கியிருந்தன. ராஜ்யம் முழுவதும் நூல்கள் பரவி வருவதற்கு மிகச் சிறந்த

முறைகளும் கையாளப்பட்டு வந்தன. பயிர் விளைதற்கும் வாணிகம் மேம்படுதற்கும் வேண்டும் கால்வாய்கள் மிகப் பெரியனவாய் அமைந்திருந்தன. இக்கால்வாய்கள் தபால் கொண்டு செல்லுதற்குரிய மார்க்கமாகவும் அமைந்தன என்று அறிகிறோம். இதுவே உலக சரித்திரத்தில் முதன் முதலாகத் தோன்றிய தபால் முறையாகும்.

விஞ்ஞான சாஸ்திரங்களுக்குரிய ஆராய்ச்சிச் சாலைகளும் அங்கே இருந்தன. நட்சத்திரங்கள், ராசிகள் முதலியவற்றின் கதி நன்றாக அங்குள்ள அறிஞர்களுக்கு விளங்கியிருந்தது. அவர்கள் மிக நுட்பமாகப் பஞ்சாங்கத்தைக் கணித்து வந்தார்கள். இயற்கை விதிகளை நன்றாக அறிந்து பயன்படுத்தி வந்தார்கள். இவற்றால் அயல்நாட்டினர் பாபிலோனியரைப் பெரிய மந்திரவாதிகள் என்று கூட நினைத்தார்கள்.

**அம்பு - எழுத்துக்கள்**

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆதிகாலத்தில் வாழ்ந்த இந்த ஜாதியார் சிறந்த எழுத்து வரிசை ஒன்றைக் கண்டு அமைத்தனர். இந்த எழுத்துக்கள் ஆட்சிக்கு எளியனவாயும் பயனுடையனவாயும் பல நூற்றாண்டுகள் விளங்கின. இவைகள் அம்பு போன்ற வடிவுடையன. இவற்றை 'குனெய்ப்வாரம்' (Cuneiform) என்று வழங்குவர்; அம்பு-எழுத்துக்கள் என்று நாம் கூறலாம். மெய்யொலி தவிரப் பிற ஒலிகள், அசைகள், முழுக் கருத்துக்கள் இவைகளை இவ் எழுத்துக்கள் குறித்தன. எகிப்தியர்களுடைய 'ஹியரோக்ளிப்திக்ஸ்' (Hieroglyphics) என்பதைக் காட்டிலும் சிறந்த கருவியாக இந்த எழுத்துக்கள் அமைந்திருந்தன. இவ்வற்றின் இயல்பை மக்கள் அறிந்து கொள்ள நேரிட்டதன் வரலாறு மிகவும் வியக்கத்தக்கது. 4000 ஆண்டுகளுக்கு முன், சுட்ட செங்கலில் இவ் எழுத்துக்கள் சில பொறிக்கப் பட்டிருந்தன. க்ரோட்ப்வெண்ட். (Grotefend) என்ற ஜெர்மானிய ஆசிரியர் இவற்றோடு பல்லாண்டுகளாகப் போராடி கி. பி. 1702-ல் உண்மையியல்பை ஒருவாறு கண்டு பிடித்தனர். இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலன மூன்று சொற்களோடு தொடங்குகின்றன. இச்சொற்களுள் இரண்டு மாறுவதேயில்லை; ஒன்று சிறிதளவுதான் மாறிக் காணப்பட்டது. இவற்றிலிருந்து மாறும் வார்த்தை ஓர் அரசன் பெயராக இருக்கலாம் என்றும் அப் பெயர் டேரியஸ் என்றும் ஊகித்தார். மாறாதபடி இருந்த சொற்கள் ராஜாதிராஜன் என்று பொருள்பட வேண்டும் என்று கருதினார். அவருடைய அறிவிலே விளைந்த இவ்வூகம் உண்மையாய் முடிந்தது. எழுத்துக்களின் மர்மம் புலப்பட்டுவிட்டது.

**வரலாற்றின் தொன்மை**

இந்தக் கல்வெட்டுக்களால் மிகப் புராதனமான சரித்திரம் நமக்கு விளங்குகிறது. கிறிஸ்து அப்தத்திற்கு 38 நூற்றாண்டுகளுக்கு முன்னர் அக்காத் (Akkad) என்ற நகரத்தில் அமைந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்து முதலாம் ஸார்கான் (King Sargon I) என்ற அரசன் ஆட்சி புரிந்ததைப்பற்றி நாம் அறிகிறோம்.

12 நூற்றாண்டுகளுக்குப் பின்னர், பாபிலோன் நகரத்திலிருந்து அஸ்ஸீரியாவில் ஜனங்கள் குடியேறினார்கள். இதன் பின் மூன்று நூற்றாண்டுகள் கழிந்தன. சுமார் கி. மு. 2300-ல் ஏலாமியரால் பாபிலோனியா கைப்பற்றப்பட்டது. அக்காலத்தில் அதன் தலைநகரமான பாபிலோன் எல்லா வகையிலும் சிறந்த ஓர் அற்புத நகரமாக விளங்கியது. இந்நகரத்தோடு போட்டியிடுவதற்கு நினிவே (Nineveh) என்ற நகரத்தை ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், சுமார் கி. மு. 2245-ல் அஸ்ஷூர் (Asshur) என்ற ஓர் அரசன் நிர்மித்தான். இந்த நகரம்தான் விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டில், செல்வத்திற்கும் பாவத்திற்கும் உறைவிடமானது என்று பழித்துக் கூறப்பட்டுள்ளது.

**புதுக்கிய பாபிலோன்**

பின்னும் ஏழு நூற்றாண்டுகள் சென்றன. காஸ்ஸீயர்கள் (Cosseans) மெஸொபொட்டேமியாவின் பழைய நாகரிகத்தை முற்றும் அழித்துத் தொலைத்துவிட்டார்கள். பிற்பாடு கி. மு. 1200-ல் பாபிலோன் என்ற அற்புத நகரம் அஸ்ஸீரியர்கள் கையில் அகப்பட்டது. ஆனால் அதனை எளிதில் அடக்கியாள முடியவில்லை. கி.மு. 1300-ல் இருந்து கி.மு. 690 வரை ஆறு நூற்றாண்டுகளாக இத் தலைநகரம் போர்க் குழப்பத்தால் கலக்குண்டு வந்தது. இதனைச் சார்ந்த பிரதேசங்களுக்கும் இந்தத் துர்க்கதிதான் நேர்ந்தது. பிற்பாடு, ஸெந்நாக்கெரிப் (Sennacherib) என்ற பேராற்றல் வாய்ந்த அரசன் இந்நகரத்து மதிற்சுவர்களைத் தரையோடு தரையாய் இடித்து நொறுக்கி, அங்கேயுள்ள கோயில்களைச் செங்கல் செங்கலாகப் பெயர்த்துத் தகர்த்து, நகரத்தைத் தீயினாலும், கொள்ளையினாலும் பாழ்செய்துவிட்டான். ஆனால் பாபிலோன் மீண்டும் புதுக்கப்பட்டது. நாபோபோலஸ்ஸார் (Nabopolassar), நேபுகாத்நேஸ்ஸார் (Nebnchadnezzar) என்ற இரண்டு அரசர்களும் இந்நகரத்தைத் திரும்ப இயற்றி, மதில் முதலியவற்றால் காவல் செய்து, கோயில்கள், மாளிகைகள், ஞாபகச் சின்னங்கள், சிலையுருவங்கள் முதலியவற்றால் அலங்கரித்து, முன்னிருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு சிறந்து விளங்கும்படியாகச் செய்தார்கள். பண்டைக் காலத்தவர்களால் இந்நகரம் மிகவும் வியந்து பாராட்டப்பட்டது.

**இலக்கியப் பொற்காலம்**

பாபிலோன், அஸ்ஸீரியா இவ்விரண்டிற்குமுரிய உண்மையான இலக்கியச் செல்வங்கள், நேபுகாத்நேஸ்ஸாரின் காலத்திற்குப் பின்னால், கி. மு. 7-ம் நூற்றாண்டில் தோன்றியவையே. இந்த இலக்கியப் பொற்காலத்தின் உச்சநிலை கி. மு. 668-ல் இருந்து கி. மு. 608-வரை ஆண்டு வந்த ஸர்தநாப்பலுஸ் (Sardanapalus) என்ற அரசனின் காலத்ததாகும். இவனுக்கு அஸ்ஸுர்பனிபல் (Assurpanipal) என்ற பெயரும் உண்டு. இவன் கல்வியில் உண்மையான பிரியமுள்ளவன்; புராதன கலைகளைப் போற்றும் இயல்புடையவன். இவன் நினிவேயில் ஒரு பெரிய நூல்-நிலையம் அமைத்து அதில் பழைய நூல்களைத் தேடித் தொகுத்து வைத்தான். அக்காலத்துப் பிரசித்தமாய் விளங்கிய பற்பல தேசங்களிலிருந்தும் சிறந்த நூல்களைப் பெற்று அவற்றின் பிரதிகளைச் சேமித்து வைத்ததோடு, அவற்றை மொழிபெயர்க்கவும் செய்வித்தான். ஒவ்வொரு நூலிலும் அவனுடைய முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது. இந்நூல்-நிலைய முயற்சியை அவன் எவ்வளவு கௌரவமாகக் குறிப்பிட்டிருக்கிறான், பாருங்கள் :

> பூவுலகின் புரவலனும், மன்னுயிர்களின் மன்னவனும், அஸ்ஸீரியாவின் அரசனும் ஆகிய அஸ்ஸுர் பனிபலின் அரண்மனை; எமது நாட்டிலுள்ள எழுத்தாளர்களால் எழுதி வைக்கப்பட்ட பிரதிகளைத் தேடிக் காணுவதற்கு விழிப்புடைய கண்களையும், கூர்மையான காதுகளையும் நேபா தெய்வமும் தஸ்மதி தேவதையும் எமக்கு அளித்துள்ளன. இந்த எழுத்தாளர்களை எமக்கு முன்பிருந்த அரசர்கள் நியமித்துள்ளார்கள். அறிவின் தெய்வமாகிய நேபோவை முற்பட வணங்கி, யாம் எழுத்துச் செங்கற் பலகைகளைத் திரட்டியிருக்கிறோம்; அவற்றைப் பிரதி செய்வித்திருக்கிறோம்; அவற்றின் மீது எமது பெயரைப் பொறித்திருக்கிறோம்; அவைகளை எமது அரண்மனையில் சேகரித்து வைத்திருக்கிறோம்.

இப்புராதன காலத்தில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சிறந்த அறிஞர்களைப் பொருள் கொடுத்து இவ்வரசன் அமர்த்தி வைத்திருந்தான். அவர்களுடைய ஆர்வத்தாலும் முயற்சியாலும் அவன் காலத்திலும் அதற்கு முன்பும் வாழ்ந்த பல்வேறு ஜாதியார்களின் சிறந்த நூற்செல்வங்களைத் திரட்டித் தொகுத்து ஓர் அறிவுக் கருவூலத்தை அமைத்திருந்தான்.

**நூல்கள் கூறும் பொருள்கள்**

இந்நூல்களிலே எவ்வகை விஷயங்கள் கூறப்பட்டிருந்தன ? முதலாவது, ஆசியாக் கண்டத்திலுள்ள அரசர்களுடைய

கீர்த்திக்கும், ஆற்றலுக்கும் சான்றாக விளங்கிய பல குறிப்புக்கள் இருந்தன. அரசர்களுடைய ஆணைகள், அவர்களுடைய விதிகள், அவர்களுடைய தீர்ப்புக்கள், அரசியலுக்குரிய பாத்திரங்கள், சரித்திர நிகழ்ச்சிகளுக்குரிய கால அடைவுகள் முதலியன பொறிக்கப்பட்டிருந்தன. பின்னர், தெய்வங்களுக்குரிய புகழ்ச்சி மாலைகள், விண்ணப்பங்கள், வணக்கங்கள், மந்திரங்கள் முதலியனவும் காணப்பட்டன. இவற்றிற்கெல்லாம் பழமையான கவிதைகளும் உளவாயிருந்தன.

இவைகள், உலகத்தோற்றம் அதன் வரலாறு முதலியவை பற்றியன. இவை தவிர, பேரரசர்கள் புரிந்த போரின் வருணனைகளும் வெற்றி விவரங்களும், அவர்கள் பகைவர்களை அழித்து வஞ்சினம் நிறைவேற்றிய செய்திகளும் குறிக்கப்பட்டிருந்தன. கடைசியாக, கிரேக்கத் தெய்வங்களுடைய வரலாறுகளைக் காட்டிலும் மிக மிகப் பழமையான பௌராணிக வரலாறுகளும் வரையப்பட்டிருந்தன.

**வாணிக நாட்டம்**

மெஸொபொட்டேமியாவில் வாழ்ந்த மக்கள் வாணிகத் துறையில் மிக மிக விழிப்பாக இருந்தவர்கள். இது அக்காலத்துள்ள வாணிக ஒப்பந்தங்கள், வாணிகக் கடிதங்கள், விற்பனைச் சீட்டுகள், வாணிக நியதிகள் முதலியவற்றால் நமக்குத் தெரிய வருகிறது. அஸ்ஸீரியாவிற்கும் எகிப்திற்கும் கி. மு. 15, 16-ம் நூற்றாண்டுகளில் வாணிகம் பற்றி மிகுதியான கடிதப் போக்குவரவு இருந்தது. இக்கடிதங்களெல்லாம் எகிப்துக்கு உரிய எழுத்துக்களிலன்றி, அம்பு-எழுத்துக்களில் (Cuneiform) அமைந்திருப்பதால், பாபிலோனிய மக்கள் இத்துறையில் மிக மேம்பட்டு விளங்கினார்கள் என்பது அறியக் கிடக்கிறது.

**ஆன்ம-நாகரிகம்**

இவைகளெல்லாம் ஜடப் பொருள் பற்றிய நாகரிகம். இதைக் காட்டிலும் மிக மேம்பட்ட நாகரிகம் ஒன்று உள்ளது. அது தான் அறிவு பற்றிய நாகரிகம். அதனை ஆன்ம-நாகரிகம் என்று நாம் பெயரிடலாம். பாபிலோனியாவில் பூர்வத்திலுள்ள இந்த ஆன்ம-நாகரிகத்தைச் சிறிது நோக்குவோம். அஸ்ஸீரியாவில் லோகோற்பத்தி பற்றிய கதைகள் பல உண்டு. இவை பூமி, சுவர்க்கம் முதலியவற்றின் தோற்றத்தைக் குறித்தும், அங்கு வாழும் உயிர்களைக் குறித்தும் கூறுவன.

**தியமதி சரித்திரம்**

இவற்றுள் எல்லாம் மிக முக்கியமாகத் தெரிவது பிரபஞ்சத்தின் பெண்மைத் தத்துவமாகிய தியமதி (Tiamat)யைக் குறித்து

எழுந்த சரித்திரமே. இவள் அனைத்துயிர்களுக்கும் தாயா யுள்ளவள். தனது புத்திரர்களாகிய தேவர்களுக்குப் பகையாக அமைந்து விட்டாள். ஆதியில் சக்தியாகிய தியமதியும் புருஷனாகிய அப்ஸுவும் (Apsu) கூடியதால் தேவர்கள் தோன்றினார்கள். இத்தோற்றம் பூமியும் வானமும் உண்டாவதற்கு முன் நிகழ்ந்தது. பற்பல தெய்வங்களும் இங்ஙனம் பிறந்தபின், அனு (Anu), இயா (Ea) என்ற தெய்வங்கள் தோன்றின. இவ்விரு தெய்வங்களும் பாபிலோனியர்களால் மிகவும் புகழ்ந்து கொண்டாடப் பட்டன.

பஞ்ச பூதங்களின் மயக்கமாயுள்ள உலக நிலையை ஒருவாறு முறைப்படுத்தி, தனித்தனி உயிர்களையும் பொருள்களையும் தியமதித் தாய் தோற்றுவித்தாள் என்று கூறப்படுகிறது. இது விவிலிய நூலிலே (Bible) உலகத் தோற்ற முரைக்கும் ஆதியாகமத்திலே, உருத்தோன்றாது கிடந்த குழப்பதினின்றும் பூமியையும் வானையும் கர்த்தர் இயற்றினார் என்ற கதையை ஒத்திருக்கிறது. இப்படியே, அந்நூலில் வரும் ஏதேன் தோட்டத்தைப் போல, வானுலகிலுள்ள தெய்வங்கள் அழகுநிலம் ஒன்றைப் பூமியிலே அமைத்ததாகக் கூறப்படுகிறது. தெய்வலோகத்தில் கலகம் நேர்ந்து, தேவ தூதர்கள் தலைமைத் தெய்வத்திற்கு எதிராகக் கிளம்பியது போல, பாபிலோன் கதையிலும் தெய்வலோகத்திற் கலகம் நேர்ந்தது.

ஆனால், இக்கதையில் அனைத்துலகையும் படைத்த தியமதித் தாயே தன்னுடைய புதல்வர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தாள் என்று தெரிய வருகிறது. இப்புதல்வர்கள் பேராசையுடையவர்கள்; வலிமை மிகுந்தவர்கள். இவை போர் விளைவதற்கு அடிநிலமாயமைந்தன. புதுமைக்கும் பழமைக்குமுள்ள போர் எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலுமுள்ளதே. அப்போர் நித்திய நிகழ்ச்சிகளில் ஒன்று என்று சொல்லலாம். அதனுடைய முடிவும் உறுதியாகத் துணியக் கூடியதே. பழமை அழிவது நிச்சயம்.

தியமதி தன் புதல்வர்களோடு மாறுபட்டு எதிர்த்து அவர்களைச் சுவர்க்கத்தினின்றும் கீழே தள்ளுவதற்கு முயன்றாள். இம்முயற்சிச் செய்தி தெய்வலோகம் முழுவதும் பரவி விட்டது. உலகம் முதுவதையும் ஆளும் தேவர்களையே அழித்து விடுவதற்காக முயன்ற தியமதியை எதிர்ப்பது எளிதா? தேவர்களுக்குத் தலைமை பூண்ட ஆவர் (Auer), ஈயா (Ea) என்பவர்களுக்கு கூட நடுக்கம் எடுத்தது. இத்தேவர்கள் இரவும் பகலும் ஓய்வு ஒழிவு இன்றிச் சூழ்ச்சி செய்தார்கள். தியமதிக்குக் கோர ரூபமுள்ள பூதங்களும் பிசாசுகளும் துணை புரிந்தன. இவள் தனது படைத்

தலைவனாக, கிங்கு (Kingu)வைத் தேர்ந்தெடுத்தாள். உலகம் முழுவதும் அழிந்து விடும் நிலையில் ஆகி விட்டது. தேவர்களுக்குத் தெய்வப் படைகளைத் தலைமை தாங்கி நடத்துவதற்கு யாரும் அஞ்சினார்கள்.

முடிவில் தேவர்களை யெல்லாம் அன்ஷார் (Anshar) விருந்துக்கு அழைத்து ஆலோசனை செய்தான். பாபிலோனியாவின் தெய்வமாகிய மர்துக் (Marduk) வானவர் படைகளை நடத்திச் செல்வதற்கு உடன்பட்டான். ஆனால், அரிய நிபந்தனை ஒன்றும் இவன் செய்து கொண்டான்; 'நான் இப்போரில் வெற்றி கொண்டு உங்களையெல்லாம் காப்பாற்றினால் நீங்கள் அனைவரும் என்னைத் தேவாதி தேவனாக ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். நான் செய்வது எதையும் நீங்கள் மாற்றிவிட முயலக் கூடாது. என் சொற்களை எதிர்க்காமல் ஆணையாக மேற்கொள்ள வேண்டும்.' இந் நிபந்தனையைத் தேவர்கள் ஒப்புக்கொண்டனர். அவனுக்கு மாயக்கவசம் ஒன்று கொடுத்தார்கள். போரில் அவனைப் பாதுகாத்தற்கும், தியமதியைக் கலங்கி ஓடச் செய்வதற்கும் அது பயன்பட்டது. பின் மர்துக் அச்சம் யாதுமின்றித் தனது பிரம்மாண்டமான வில்லையும், அம்பையும் சக்தி வாய்ந்த வேலையும் எடுத்துக் கொண்டான். அவனைச் சுற்றி மின்னல் பளிச்சுப் பளிச்சென்று மின்னிற்று. நான்கு விஷக் குதிரைகள் அவன் தேரிலே பூட்டப்பட்டன. வச்சிராயுதத்தைக் கையில் தாங்கித் தியமதி வந்தாள். அவளை அவன் ஒரு மாயப் பாசத்தைக் கொண்டு எதிர்த்தான். அவன் கண்கள் கனன்று அவனது தாய் மீது கூர்ந்து பாய்ந்தன.

தியமதியின் சேனாதிபதியான கிங்கு மனங் குழம்பினான். ஆனால், தியமதியோ சிறிதும் அச்சமின்றி எதிர்த்து நின்றாள். கோபாவேசத்தோடு அவள் கர்ச்சித்தாள்; கர்ச்சித்து அவள் தன் வாயை அகலத் திறந்தாள். அத்திறந்த வாயிலே தீய காற்றுக்களை மர்துக் புகவிட்டான். அத் தீய காற்றுக்கள் அவளுடைய உடலை வீங்கும்படியாகச் செய்து வெடித்து விடும் நிலையில் கொண்டுவந்து விட்டன. இப்பொழுது தியமதிக்குப் பேச்சு அடங்கிவிட்டது, இந்நிலையில் மர்துக் தனது பெரிய வேலாயுதத்தை அவள்மீது எறிந்தான். அது அவளுடைய இருதயத்தை ஊடுருவிச் சென்றது. அவள் பக்கம் துணையாகப் போர் புரிந்த பூத பைசாசங்கள் பயத்தால் நடுநடுங்கி ஓடின. ஆனால் மர்துக் தான் கொண்டு வந்த பாசத்தினால் அவர்களை யெல்லாம் பிணித்துவிட்டான். அவர்கள் கதறிய கூக்குரலானது உலகம் முழுவதும் நிரம்பிற்று. தங்களுக்கு நேர்ந்துவிட்ட விதியை அவர்கள் உணர்ந்து

கொண்டார்கள். மர்துக் அவர்களையெல்லாம் சிறைப்படுத்தினான். பின் தியமதியின் பிணத்தின் அருகில் வந்து வட காற்றை ஏவி அவள் ரத்தத்தை எடுத்து உலகத்துள்ள அதி ரகசியக் குகையொன்றில் ஒளித்துவைக்கும் படியாகச் செய்வித்தான்.

பின் தன்னுடைய வாளாயுதத்தால் அவள் சரீரத்தை இரண்டு கூறாகப் பிளந்தான். மேற்பகுதியை விதானித்த சுவர்க்கமாகச் செய்து அதிலே அனு (Anu), பெல் (Bel) முதலிய தேவர்களுக்கு அரண்மனைகள் நிர்மித்தான். விதானத்திலே நட்சத்திரங்களை அங்கங்கு நிறுவினான். மாதங்களையும் வருஷங்களையும் ஏற்படுத்தினான். பகற் காலத்திலே சூரியனுக்கு அதிகாரங் கொடுத்தான். இரவிலே சந்திரனது ஆணை நிலவும் படியாகச் செய்தான்.

இக் கதையில் இவ்வளவே நமக்கு அகப்பட்டுள்ளது. நெடுங்காலம் நிகழ்ந்த போரினாலும், நகர நாசங்களினாலும், கால கதியில் நேர்ந்த சிதைவினாலும், எஞ்சிய பாகங்கள் அழிந்து விட்டன. இக்கதை கிரேக்கர் புராணக் கதைகளை நமக்கு ஞாபகமூட்டுகிறது. சுவர்க்கத்து அரசர்களின் பின்சந்ததியார்கள் டிடான் (Titans) என்ற அசுர ஜாதியரோடு போர் புரிந்து சுவர்க்கத்தில் ஒரு புதிய அரச வமிசத்தை நிலைநாட்டியது மேற்கூறிய கதையோடு ஒத்துள்ளது.

இக்கதை திடீரென்று ஒருவனால் இயற்றப்பட்டதென்று கூற முடியாது. வெகு காலமாக நிகழ்ந்த பரிணாமத்தின் விளைவாகவே இது உண்டாயிருத்தல் வேண்டும். சிறிது சிறிதாக வளர்ந்து வளர்ந்து, இது முடிவு பெற்றிருக்க வேண்டும். மெஸொபொட்டேமியா ராஜ்யத்தில் விளைந்த இக்கதையானது பிற நாடுகளுக்கும் பரந்து சென்றிருக்கிறது. தியமதி விவிலிய நூலில் ஆதியாகமத்தில் வரும் தீகம் (Tehom) என்று கொள்ளலாம். அவளோடு மர்துக் போர் புரிந்தது மைக்கேலும் (Michael) பூதமும் (Dragon) போர் புரிந்ததாகக் கூறும் விவிலியக் கதைக்கு மூலமாய் அமைந்ததாகலாம்.

இக் கதையைக் காட்டிலும் இன்னும் நெருங்கியதொரு தொடர்பு விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டிற்கும் இஸ்துபார் (Izdubar) இதிகாசத்திற்கும் உள்ளது. இந்த இதிகாசத்திலே விவிலிய நூல் கூறும் மகாப் பிரளயத்தைப் போன்றதொரு வரலாறும் காணப்படுகிறது.

**பாபிலோனியச் சிறுகதை**

மேற்கூறியவை இதிகாசத்தின் தன்மை பெற்று, பிரபஞ்சத்தை விளக்கப் புகுந்து, பெருமித நடையிலே அமைந்துள்ளன. இவற்றைக் காட்டிலும் சுருக்கமாகவும் எளிதாகவும் இராக் காலங்களில் பொழுது போக்கிற்காகக் கூறக் கூடியதாகவு முள்ள சிறு கதைகள் முற்காலத்திலே பாபிலோனியாவில் இல்லையா என்று கேட்கலாம். அவையும் இருந்தன. ஓர் உதாரணம் :

ஒரு கதை அதபனையும் (Adapa) தென்றலையும் பற்றியது. அதபன் ஒரு நாள் மீன் பிடிக்கச் சென்றான். அப்பொழுது தென்றல் விளையாட்டாக அவன்மீது மோதி அவனை நீர்க் குள்ளே தள்ளிவிட்டது. திடீரென்று பொங்கியெழுந்த கோபத் தால் அவன் தென்றலின் சிறகை ஒடித்துவிட்டான். ஓரிடத்தும் இனிய காற்று வீசாமையினாலே உலகமே வறட்சியுற்றது. அனு என்ற தேவன் அதபனைப் பூவுலகினின்று வரவழைத்து விசாரணை செய்தான். ஆனால், அதபன் அனுவின் முன் செல்லும் போது யாது செய்ய வேண்டுமென்று இயா தேவதை அவனிடம் கூறியிருந்தாள். இழவுக் குறியாக அணியும் ஆடையை அணிந்து கொள்ள வேண்டும்; அவனுக்குச் சுவர்க்கத்தில் கொடுக்கும் பானம் முதலியவற்றை மறுத்து விட வேண்டும் : என்று இங்ஙனம் எச்சரிக்கை செய்தாள். அதபனும் அவ்வாறே சென்று பணிந்து நின்றமையால் அவனை அனு மன்னித்து விட்டான். ஆனால் பானத்தை மறுத்து விட்டதால் அமரவாழ்வு பெறுவதை அவன் இழந்து விட்டான். இது, தெய்வக் கட்டளையைக் கடந்த தனால் மரணம் மனிதர்களுக்கு நேர்வதாயிற்று என்ற விவிலியக் கதையை ஞாபக மூட்டுகிறது.

**வழிபாடு**

இதுபோன்ற கதைகளே யன்றி, பாபிலோனியாவில் ஆதி காலத்தே அரசர்கள் தங்கள் செயல்களை வானளாவப் புகழ்ந்து வரைந்து வைத்த 'மெய்க் கீர்த்திகள்' பலவும் இருந்தன. அன்றியும், மந்திரங்களும் பிரார்த்தனைகளும் அங்கே மிகுதியாய் வழங்கின. ஒன் றன் மொழிபெயர்ப்பு :

எத்தனைதான் பாவங்கள் புரிந்தனனோ! அறியேன் ;
ஈசனே நின்வெகுளி எனக்கரிது தாங்கல் ;
சித்தந்தான் இரங்கியெனைக் காத்திடுதல் வேண்டும் ;
சீற்றமொழிந் தெளியேனைத் திருவருள் பாலித்தே.

எத்தனையோ ? நெறிமீறி நான் செய்த பாவம் ;
ஏட்டிலடங் காதுநான் இழைத்திட்ட தீங்கு ;
எய்த்தழுது கரைகின்றேன், எனக் குதவி யில்லை.
ஏனென்பார் உள்ளாரோ இப்புவியில், அம்மா !

வருந்துயரால் மிக நலிந்து வருந்துமுளத் தோடு
மண்மீது முகங்கவிழ்த்து மாய்ந்து கிடக்கின்றேன் ;
திருந்தமிசை நோக்ககிலேன், தேவாதி தேவ,
சிறிதுகடைக் கணித்தெனக்குத் திருவருள்தந் திடுவாய்.

பாபிலோனியாவில் ஒரு பழமொழி வழங்கியது. 'நேற்றிருந்த வாழ்வுதான் ஒவ்வொரு நாளும்' என்பது அதன் கருத்து. இது எத்துணை உண்மை யென்பது மேலே மொழி பெயர்த்துள்ள பிரார்த்தனையினால் அறியலாம்.

# 3. பாலஸ்தீனம்

### கிறிஸ்தவர்கள் புண்ணிய பூமி

கிறிஸ்தவர்கள் புண்ணிய பூமி என்று சொல்லுகிற பாலஸ் தீனத்தைப்பற்றி நம்மிற் பலரும் அறிந்துள்ளோம்- இப்பூமி நமது சென்னை மாகாணத்திலுள்ள ஒரு சிறு ஜில்லாவின் அளவு தான் இருக்கும். இதில் வாழ்ந்து வந்த ஜனங்களும் அற்பத் தொகையினரே. ஆனால் இதிலிருந்து உண்டான சமயமும் இலக்கியமும் உலகெங்கும் பரவி மக்களது வரலாற்றில் மிக மேம்பட்டனவாயுள்ளன. இது மிகவும் வியக்கத்தக்க தொன் றல்லவா ?

இந்தப் பூமி யூதர்களுக்கு முதல் முதலில் சொந்தமாக இருந்தது. இங்கே நிகழ்ந்த அரசியலை நெறிப்படுத்தி இரு வேறு வகைப்பட்ட சமயக் கருத்துக்கள் நிலவின. முதலாவது, எபிரேய மொழியிலுள்ள பழைய ஏற்பாட்டின் (Old Testament) கருத்துக்கள். பெரும்பாலும் நீதி பற்றியும் தத்துவம் பற்றியும் இவைகள் அமைந்தன. இரண்டாவது, புதிய ஏற்பாட்டில் (New Testament) காணப்படும் கருத்துக்கள் : சகோதரத்துவம், சர்வ ஜீவதயை என்ற இரண்டு கொள்கைகளையும் ஜீவநாடி யாகக் கொண்டன. இவைகள் இயேசுநாதரால் அருளப்பட்டன. அவரது உயிர்த் தத்துவம் நிரம்பிய உபதேசங்களை இவற்றிற் காணலாம்.

### சமயம் பற்றிய ஞானப் பயிர்

இம் புண்ணியபூமி சாவு கடலுக்கு (The Dead Sea) அருகே உள்ள ஒரு சிறு நிலப்பகுதி. இங்கிருந்துதான் உலகத்திலுள்ள முக்கியமான சமயங்களில் இரண்டு தோன்றின. விதை வேறு விளைவு வேறாக இருக்க முடியாது. புண்ணிய பூமியிலே வாழ்ந்த ஜனங்கள பல நூற்றாண்டுகளாகச் சமயத்தையும், சமயம் பற்றிய சிந்தனையையும், சமய-உபதேசங்களையும் விதைத்து வந்தார்கள். இதனால் சமயம் பற்றிய ஞானப் பயிர் இவர்களிடையே செழிப்பாக விளைந்து பலன் தருவ தாயிற்று. இறைவனைக் குறித்தும் இறைவனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பினைக் குறித்தும் இவர்களைப்போல ஓய்வின்றி ஆராய்ச்சி செய்தவர்கள் உலக ஜாதியார்களுள் மிகச் சிலரே யாவர். ஆகவே, இயேசுநாதர் இங்கே பிறந்தது இயற்கையின் விளைவு என்றே நாம் கூறலாம்.

**எபிரேய இலக்கியம்**

ஆழ்ந்து நோக்கினால், எபிரேய இலக்கியம், கீழ்த்திசை யானது உலகம் முழுமைக்கும் திறையாக அளந்து செலுத்திய மிகச் சிறந்த செல்வங்களில் ஒன்றெனச் சொல்லலாம். உண்மைச் சமயங்கள் பலவும் கீழ்த்திசையில் தோன்றியனவே. சமயம் தோன்றுவதற்கும் வளர்ச்சியுறுவதற்கும் நெடுங்காலம் வேண்டும்; மிகவும் சாவகாசமாகவே வளர்ச்சி நிகழும்; ஒருங்கிய தியான மும், ஆழ்ந்த சிந்தனையும் இதற்கு வேண்டும். இவைகள் மேல் நாட்டில் ஏற்படுவது எளிதல்ல. இக்கீழ்த்திசை விளைவுகளுள் எபிரேய சமயமும் இலக்கியமும் சிற்சில அம்சங்களில் இணை யற்றன என்று கூறுதல் வேண்டும்.

கருத்தின் தூய்மையும், வாழ்க்கையில் எழும் கேள்விகள் பற்றிய ஆழ்ந்த உணர்ச்சியும், மிக ஆழ்ந்த ஆன்ம-அனுபவமும் எபிரேயர்களிடத்திலே சிறந்து விளங்கின. கவிதையை உயிரூட்டும் சித்திரிகத் திறமும், தெளிவாக ஆற்றலோடு பொருள்களைக் கூறும் திறமும் அழகுக்கலை நிரம்பும்படி சுருங்கக்கூறும் அரிய இயல்பும் எபிரேய இலக்கியத்திற்குத் தனிப்பெருமை அளித்தன. இக்காரணங்களால் அல்லவா எத்தனையோ தேசிய ஜாதிகள் விவிலிய நூலைப் பிரமாணமாகக் கொண்டு மேம்பட்டு வந்திருக்கின்றன !

**யூதர் சரிதம்**

இவ்வளவு விளைவிற்கும் காரணமாகிய யூத ஜாதியின் சரிதம், அரசியல் பற்றிய அளவில், சிறப்பற்றதாகவே இருந்தது. பூர்வ காலத்தில் விளங்கிய பேரரசுகள் தங்கள் சரித்திரக் குறிப்புக்களில் இவர்களைப் பற்றி யாதும் கூறவில்லை. இவர்கள் செமித்திய மரபைச் சார்ந்தவர்கள். அக்கரை மக்கள் என்று பொருள்படும் 'இப்ரிம்' (Ibrim) என்ற சொல்லிலிருந்து இவர் களுக்கு எபிரேயர் என்ற பெயர் வழங்கியிருக்கலாமென்பர். ஆதியில் இவர்கள் யூப்வ்ரடிஸ் (Euphrates) நதியின் ஒரு கரையில் வாழ்ந்தவர்கள். இவர்கள் தலைவர்களுள் ஒருவனான ஆபிரகாம் இவர்களை மெஸொபொட்டேமியாவிலிருந்து அழைத்து வந்து பாலஸ்தீனத்திலுள்ள குன்றுகளில் நிலையாக வாழ்ந்து வரும்படி செய்தான்.

இங்கிருந்து இவர்கள் அடிவாரங்களில் வசித்துவந்த கானான் (Canaanites) மக்களோடு நீண்ட காலமாகப் போர் புரிந்து அவர் களுடைய செழிப்பான தாழ்வரை நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் பயிர் விளைவின்மையால் அங்கே வாழ முடியாதப்படி எகிப்து தேசத்திற்கு இவர்கள் செல்லும்படி

நேர்ந்தது. இந்த தேசத்தில் பல நூற்றாண்டுகளாக இவர்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். கடைசியில் அறிவாளியும் திட்ப மனத்தனுமாகிய மோஸே என்பவன் இவர்களை மீண்டும் அழைத்து வந்தனன். இவர்கள் தங்களுடைய அருமைத் தேச மாகிய பாலஸ்தீனத்திற்கு மீண்டும் வந்து யோஷுவா என்ற தலைவனுக்கு அடங்கி வாழ்ந்து வந்தார்கள்.

எபிரேயர்களுக்கு மீண்டும் ஒரு நற்காலம் வந்தது. அக்கம் பக்கத்திலுள்ள சில சிறு ஜாதியார்களை வென்று புண்ணிய பூமி முழுவதையும் இவர்கள் ஆளத் தொடங்கினர். இவர்களுடைய இரண்டாவது அரசனான தாவீது (David) பேராற்றல் வாய்ந் தவன். இவனது ஆட்சியில் பாலஸ்தீனம் வலிமையிலும் அதிகாரத்திலும் மிகச் சிறந்து விளங்கியது. இவன் சுமார் கி. மு. 1000-ல் வாழ்ந்தவன். இவனுக்கு பின்வந்த அரசர்கள் கொடுங்கோல் மன்னர்கள்; சோம்பேறிகள். ஆகவே நாடு இரண்டாகப் பிளவுபட்டது. வட பகுதியில் உள்ளது இஸ்ரவேல் (Israel) நாடு என்றும், தென் பகுதியில் உள்ளது யூத நாடு (Judah) என்றும் பெயர் பெற்றன.

வீடு இரண்டு பட்டால் பகைவர்களுக்குக் கொண்டாட்டம் அல்லவா? அஸ்ஸீரியர்களும் பாபிலோனியர்களும் இஸ்ரவேல் நாட்டை கி.மு. 722-ல் வென்று கைக்கொண்டார்கள்; யூத நாட்டை கி.மு. 586-ல் கைப்பற்றினார்கள். இதன் பயனாக எபிரேயர்கள் இரண்டாம் முறையும் சிறைப்படுத்தப்பட்டனர். இம்முறை பாபிலோனியா சிறைக்களமாயமைந்தது. கி. மு. 538-ல் சைரஸ் (Cyrus) என்ற அரசனது ஆணையால் இவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

**ஏசுவிற்குக் கோயில்**

மீண்டும் இவர்கள் பாலஸ்தீனத்திற்கு விரைவில் திரும்பினர். இங்கே தங்கள் நகரங்களைப் புதுக்கி அமைத்து, தாங்கள் வணங்கிவந்த ஏசுதேவனுக்குக் கோயிலும் எடுத்தார்கள். ஆனால் இவர்கள் இப்பொழுது பெற்ற வெற்றியிலும் வாழ்க்கைச் செழிப்பிலும் இவர்கள் கேட்டிற்குரிய வித்தும் பதிந்து கிடந்தது. ஒரு சிறு ஜாதியினர் அபரிமிதமான செல்வச் செழிப்பு உள்ளவர் களாக இருந்தார்களென்றால், அயலில் உள்ள ஜாதியார்களுக்குப் பொறாமை உண்டாவது இயல்புதானே? எபிரேய நாட்டைக் கைப்பற்றி அழித்துவிட வேண்டுமென்று எண்ணங் கொண்டு, பல ஜாதியினரும் ஆக்கிரமஞ் செய்து வந்தனர்.

**படையெடுப்பு**

பாரஸீகர், கிரேக்கர், ரோம் ஜாதியார்கள் முறையே ஒருவர் பின் ஒருவராகப் படையெடுத்துவந்து யூத அரசாட்சியின் இரத்தத்தையே உண்டு விட்டனர். யூதர்களுடைய அதிகார வலிமையும் அவர்களுடைய சமய மேம்பாடும் பெரிதும் விளக்க மெய்தியிருந்த எருசலேம் நகர் கி.பி. 70-ல் ரோம் அரசனான டிடஸ் (Titus) என்பவனால் அழிவெய்தியது. நீண்ட காலமாக முற்றுகையிட்டு எருசலேம் நகரை இவன் கைப்பற்றியதற்காக ஒரு ஞாபக விதானம் அமைக்கப் பட்டது. இவ்விதானம் இன்றும் உள்ளது.

பின்னர் துருக்கர்கள் இந்நாட்டைக் கைப்பற்றினர். இத் துருக்கர்களை எதிர்த்து இயேசுகிறிஸ்துவின் பிறப்பகமாகிய எபிரேய நாட்டை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கிறிஸ்தவ ஜாதியார்கள் பலர் பல நூற்றாண்டுகளாகப் போர் தொடுத்து வந்தனர். என்றாலும் துருக்கர்கள் வசத்திலேயே பாலஸ்தீனம் வெகுகாலமாக இருந்தது. கடைசியாக, நம் காலத்தில் நிகழ்ந்த முதலாவது உலகமகாயுத்தத்தில் ஆங்கிலேயர் எருசலேம் நகரில் புகுந்து அதன் பழைய எஜமானர்களிடமிருந்து விடுவித்துத் தனியரசு ஒன்று ஏற்படுத்தினர். ஆனால் அரபியர் களுக்கும் யூதர்களுக்கும் இது பற்றிக் கலகம் உண்டாகிக் கொண்டேயிருந்தது ; அக்கலகம் இன்றும் தீர்ந்தபாடில்லை.

**புண்ணிய பூமி அமைந்த இடம்**

இந்தப் புண்ணிய பூமி, ராஜ்யதந்திரிகள் ஒரு முக்கிய ஸ்தான மென்று கருதும் சிறந்த நிலையில் அமைந்ததாகும். பூர்வத்தில் வாணிகம் இதன்வழியாகவே செல்ல வேண்டியதாயிற்று. இதற்குத் தெற்கில் செழிப்பிலும் ஆட்சி முறையிலும் சிறந்த எகிப்து தேசமிருந்தது. அருகே கல்விப் பண்பாட்டிற் சிறந்த பிலிஸ்திய (Philistia) தேசம் இருந்தது. இத் தேசத்தவர்கள் செமித்தியரல்லாதவர்கள். வடக்கே, ஸிரியா தேசம் ; இதன் தலைநகரமாகிய டமாஸ்கஸ் (Damascus) புகழொளி பரவச் சிறப்புடன் விளங்கியது. கிழக்கே அஸ்ஸீரியாவும் அதன் தலை நகரான பாபிலோனும் இருந்தன. கலைகள், சாஸ்திரங்கள் வியாபாரச் செழிப்பு முதலியவற்றோடு பாபச் செயல்களுக்கும் இந்தத் தலைநகர் பெயர் பெற்றதாயிருந்தது. அஸ்ஸீரியாவி லிருந்து எகிப்திற்குப் போகும் வாணிகச் சாத்துக்களின் மார்க்கம் பாலஸ்தீனத்தின் வழியாகவே வளைந்து வளைந்து சென்றது. இந்த வாணிகச்சாத்தின் மூலமாக, பொருட் செல்வமும், கருத்துச் செல்வமும், பண்பாட்டுச் செல்வமும் உண்டாயின.

**பழக்க வழக்கங்களில் தனிமை**

ஆனால், இந்நூதனக்கருத்து, பண்பாடு முதலியவற்றை யூத ஜாதியார்கள் முழுமனத்தோடு எதிர்த்தார்கள். ஏனென்றால், இவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களிலும், தங்கள் ஸ்தாபனங்களிலும் எவ்வகையான மாறுபாடும் ஏற்படக் கூடாதென்ற கருத்துக் கொண்டவர்கள். தன்னந்தனியே வெகுகாலமாக வாழ்ந்துவந்தவர்கள்; சுயஜாதிப்பிரியர்கள், கர்வமும் பிடிவாதமும் கொண்டவர்கள்; தங்கள் இச்சைப்படி, பிறர்கூட்டுறவின்றி, வாழவேண்டுமென விரும்பியவர்கள். இந்த வகுப்பினர் இயல்பாகவே சரித்திரத் தொடக்கம் முதல், பண்டும் இன்றும் தனிப்பட்ட வாழ்க்கை விரும்பிய ஜாதியினர். இத்தனிமையுணர்ச்சி சூழ்நிலைகளால் ஏற்பட்டதன்று.

25 நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே வேண்டுமென்றே இந்தத் தனிமையை இவர்கள் மேற்கொண்டார்கள். இந்தத் தனிமையினால், இவர்கள் அளவற்ற கலகத்திற்கும், துன்பத்திற்கும், கொடுமைக்கும் ஆளாயினார்கள். ஆனால் இவர்களுடைய மனத்திலே ஆழ்ந்து வேரூன்றி விட்ட ஜாதிச்செருக்கும், வியக்கத்தக்க பொறுமையும், பொருளீட்டும் திறமும், எல்லா வகையான இடையூறுகளையும் இவர்கள் பொருட்படுத்தாமல் சுயேச்சையாய் வாழும்படி செய்தன.

**சமய நூல்கள்**

இவர்களுடைய பிற குண விசேஷங்கள் எப்படிப்பட்டவையாயிருந்தாலும் இவர்களது அரிய சிறப்பியல்பு ஒன்றின் பொருட்டாக உலகம் முழுவதும் இவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. இவர்களிடையே வளர்ந்து முதிர்ந்துள்ள சமயத்தைப் போல, உயர்ந்த நீதிக் கருத்துக்களும் ஆற்றல் நிரம்பிய உயிர்த் தத்துவமும் பிற சமயங்களில் காணுதல் அருமை. உலக மக்களிடையே இவர்களது சமயம் பெற்றிருக்கும் பெருமதிப்பு வேறு எச்சமயத்திற்கும் உண்டோ என்பது பெரிதும் ஐயத்திற்கிடமானதே.

இவர்களது சமயநூல்கள் தாய் மொழியான எபிரேய மொழியில் அமைந்தன. இம்மொழியில் வேற்றுமை உருபுகள் ஒரு சிலவே உள்ளன. வாக்கிய அமைதி சுவையற்றது. அன்றியும் கருத்துக்குத் தக்கபடி நீண்டு சென்று முடியும் இயல்பும் இல்லாதது. என்றாலும், இம்மொழி மிகவும் ஆற்றல் வாய்ந்தது. மொழியின் ஒலிகளும் அழுத்தமுடையன. தெய்வம் பற்றிய ஆழ்ந்த கருத்துக்கள், கொள்கைகள் முதலியவற்றை வெளியிடுவதற்கு வேண்டும் சித்திரிக பாவனையும் (Imagery),

சொல் வன்மையும் உடையது. எபிரேயர் மொஸொபொட்டேமியாவிலிருந்த ஆதிகாலத்தில், அங்கே வழங்கிய கல்தேய மொழியையே (Chaldaic) வழங்கி வந்தார்கள். ஆனால், பாலஸ்தீனத்தில் குடியேறிய பிறகு கல்தேய மொழியும் பினீஷிய (Phoenician) மொழியும் கலந்து தோன்றிய புராதன எபிரேய மொழியை வழங்கினர். இம்மொழி மோஸேயின் நூல்களில் (Mosaic books) காணப்படுகிறது. ஆனால் கி. மு. பத்தாம் நூற்றாண்டிற்கும் எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், இம்மொழி, கருத்துக்களை வெளியிடும் ஆற்றலில், உச்சநிலையை அடைந்தது என்று கூறவேண்டும். இக் காலத்தில் தான் எபிரேய ஜாதியாரும் மேம்பாடுற்று விளங்கினர்.

இதற்கப்புறம், படையெடுப்புக்களும் தோல்விகளும் அழிவுகளும் நிகழ்ந்தன. இவற்றின் காரணமாக, இம்மொழியோடு அந்நிய மொழிகளும் கலக்கத் தொடங்கின. பின்னர், இம்மொழி, எதிர்த்து நிற்கமுடியாத பல்வேறு சூழ்நிலைகளுக்கு உள்ளாகி, பின்பு சுமார் கி மு. 300 அளவில் பேச்சுவழக்கற்று இறந்து போயிற்று. இம்மொழியின் ஸ்தானத்தில் கொச்சையான அரமேய (Aramaic) மொழி வந்து புகுந்தது. சமயக் கிரியை விதிகளிலும் ஏகதேசமாகச் சமய நூல்களிலும் மட்டுமே எபிரேய மொழி காணப்பட்டது. அரமேய மொழியும் வாணிகம் முதலிய தினசரி விவகாரத்தில் பயன்பட்டு வந்ததேயன்றி இலக்கிய மொழியாகப் பயன்படவில்லை. ஆகவே யூத எழுத்தாளர்கள் அக்காலத்திலே பெரும் பிரசாரம் எய்தியிருந்த கிரேக்க மொழியை நூல்கள் எழுதுவதற்குப் பயன்படுத்தினர். புதிய ஏற்பாடு இங்ஙனம் தோன்றிய நூலேயாகும். வெகு காலத்திற்குப் பின்னர், கி. பி. 12 அல்லது 13-ம் நூற்றாண்டில், எபிரேயம், டியூடானிக் மொழிகள், சிலாவ் மொழிகள் முதலியன கலந்த ஒரு விநோத மொழி வெவ்வேறு தேசங்களில் வாழ்ந்த யூதர்களுக்குள் பொது மொழியாக வழங்கலாயிற்று. இக் கலப்பு மொழிக்கு இட்டிஷ் (Yiddish) என்று பெயர்.

எந்த மொழியை எபிரேயர் வழங்கிய போதிலும், அந்த மொழியிலே தங்களுடைய கருத்துக்களையும் தங்கள் ஆன்ம குணத்தையும் தெளிவான முறையிலே புலப்படுத்தி வந்தனர். விவிலிய நூலிலே வரும் தாவீதை நோக்கலாம்; ஜெர்மானியக் கவிஞரும் தத்துவ ஆராய்ச்சியாளருமாகிய ஹைன் ஆசிரியரைப் பார்க்கலாம்; இங்கிலாந்தில் பிரதமமந்திரியாகவும் பீக்கன்ஸ்பீல்டு (Beaconsfield) முதற்பிரபுவுமாகவும் இருந்த டிஸ்ரேலியை (Disraeli) எடுத்துக் கொள்ளலாம்; இவர்கள் அனைவரும் யூதர்கள். தங்கள் மரபினர்க்குத் தனிப்பட்ட உரிய இயல்புகள் இவர்கள் எழுதியவற்றிலே பொதுவாகக் காணலாகும்.

**எபிரேய இலக்கியம்**

எபிரேய இலக்கியத்தைக் கற்கும் நெறிகள் பல உள்ளன; வரலாற்று முறையில் அவ் இலக்கியம் வளர்ந்து வந்திருக்கும் நெறியைக் கற்பது ஒன்று. அதனுடைய பல வேறு இனங்களை யும் வகைப் படுத்தி அறியும் நெறி மற்றொன்று. அதனுடைய உபதேசங்களையும் தத்துவங்களையும் நோக்கியுணரும்நெறி பிறி தொன்று. முதலிரண்டு நெறிகளையே நாம் இங்குக் கையாண்டு இவ் விலக்கியத்தை அறிந்து கொள்ள முயலுவோம்.

இந்த இலக்கிய வரலாற்றின் ஆதிகாலம் கி.மு. 1500 முதல் கி.மு. 1050 வரை என்று துணியப்படுகிறது. இது தாவீதுக்கு முந்திய காலம். அதிபுராதனமான இந்தக் காலத்திலே எபிரேயர்கள் என்ன நினைத்தார்கள்? என்ன பேசினார்கள்? என்ன எழுதினார்கள்? கர்ணபரம்பரை வரலாறுகளே முதலில் ஏற்பட்டன. பின்னால், செருக்கு மிகுந்த எகிப்தியர்களுக்கு இவர்கள் அடிமையாக வாழ்ந்து துன்புற்ற கதையும், ஒரு கொடுங்கோல் அரசன் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுத் தங்கள் ஜன்ம பூமியை இவர்கள் அடைந்த சரித்திரமும் பிறந்தன. அக்காலத்தில் மக்களது நல்லொழுக்கமும் தேசீயப்பாதுகாப்பும் நிரம்புதற்குரிய சட்டங்கள் நிர்ணயிக்க வேண்டியவையா யிருந்தன. இவர்கள் வணங்கிவந்த ஏகதேவனைக் குறித்தும், அத் தேவன் பொதுப்பட மக்கள் மீது செலுத்திய நோக்கத்தின் இயல்பினைக் குறித்தும் நூல்கள் எழுத வேண்டிய அவசிய மிருந்தது.

அக்காலத்தில் இவர்கள் சிந்தித்து எழுதியவற்றில் பெரும் பகுதி இப்போது அழிந்துபோய் விட்டன. பழைய ஏற்பாட்டிற்கு முந்திய நூலொன்று இருந்ததெனக் கருதப்படுகிறது. இதற்கு எஹோவாவின் (Jehovah) யுத்தங்கள் என்ற புனை பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் கருத்துக்களிற் சில ஆதியாக மத்தில் (Genesis) முதற் சில அத்தியாயங்களில் புதையுண்டு கிடக் கின்றன. மற்றவை எல்லாம் மறைந்துவிட்டன. அதிபுராதன மான இந்த இலக்கியத்திலும் அஸ்ஸீரியர்கள், பாபிலோனியர்கள் முதலிய செமித்திய இனத்தாரிடமிருந்து கிடைத்த சில வரலாறுகள் இருந்தன என்பர். உலக சிருஷ்டியைப் பற்றியும், மகாப் பிரளயத்தைப் பற்றியும் உள்ள வரலாறுகளே இங்கே கருதப்படுவன. இவ்வகை இலக்கியத்தின் காலம் தாவீது எருசலேம் நகரைப் புகழ் பெற்று விளங்கும்படி செய்ததற்கு மிகமிக முற்பட்டதாகும். அக்காலத்தே போர்கள் பற்றிய பல பாடல்களும் உண்டாயின. யாத்திராகமம் (Exodus) 15-வது அத்தியாயத்தில் காணப்படும் மோஸேயின் பாடல்களும், நீதிபதி களின் (Judges) ஆகமத்தில் 5-ம் அத்தியாயத்தில் காணப்படும்

தெபோராவின் பாடல்களும் இப்போர்ப் பாடல்களின் வகையைச் சார்ந்தவை.

ஆதிகாலத்தில் பூர்வ மக்கள் இரவிலே தீவளர்த்துச் சுற்றிச் சூழ உட்கார்ந்து கொண்டு, கதைகள் சொல்லியும் புதிர்கள் இடுவித்தும் வந்தனர். இந்த வழக்கத்தையே பழங்காலத்து எபிரேய மக்களும் அனுசரித்தனர். உதாரணமாக ஸாம்ஸன் புதிர்கள் (Samson's Riddles) என்று வழங்கும் புதிர்கள் வழக்கத்திலிருந்தன. இவைகள் நீதிபதிகள்-14, 15-ம் அத்தியாயங்களில் ஒருங்கு சேர்க்கப்பட்டுள்ளன. யோதாம் கதை (Jotham's fable) என்ற ஒரு கதையும் இருந்தது. இதுதான் நீதிபதிகள் 9-ம் அத்தியாயத்தில் காணப்படுவது. இவை போன்றனவே கி. மு. 1050-க்கு முன், நிலைத்த வாழ்வின்றித் திரிந்து கொண்டிருந்த எபிரேய ஜாதியார்கள் செய்த இலக்கிய முயற்சிகள்.

**இரண்டாங் காலப்பகுதி**

இதற்குப்பின், கி. மு. 750 வரையுள்ள இரண்டாங் காலப் பகுதியில், உண்மையான இலக்கிய சிருஷ்டி மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. இந்தக் காலத்தில்தான், சரித்திரமும் தீர்க்க தரிசனமும் பற்றிய நூல்கள் எழுதப்பட்டன என்பர். ஆதியாகமம் முதல், அரசர்கள் (Kings) வரையுள்ள பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில் இவை காணப்படுகின்றன. அதிபுராதன சரித்திரம் ஞாபகத்திற்குக் கொணரப்பட்டது; அச்சரித்திரத்தில் வரும் வீர புருஷர்களையும் அவர்கள் நிகழ்த்திய போர்வினைகளையும் பற்றிய கதைகளால் யூத மக்களுடைய தேசபக்தி தூண்டப்பட்டது.

**பழமொழிகள்**

வெகுகாலமாக நிகழ்ந்த துக்கானுபவத்தால் உண்மையறிவும் விளைவதாயிற்று. இதன் பலனாக, ஜன சுருதியான பல பல பழமொழிகள் தலைமுறை தலைமுறையாய் வழங்கிவந்து, பின்னர் எழுத்தில் அமைக்கப்பட்டன. இவைகளை முதல் ஸாமுவேல் 10—24-ம் அத்தியாயங்களில் காணலாம். பாலாம் (Balaam) கூறிய குறிச் சொற்கள், யாக்கோபு சொல்லிய ஆசிகள், ஸால் (Saul) என்ற அரசனைக் குறித்துக் தாவீது உருகிப் பாடிய புலம்பல்கள், 'கடவுளே நமக்குப் புகலிடம்' என்று தொடங்கி வரும் 46-ம் கீதம் (Psalm), ஏசாயா 14-ல் காணப்படும் பாபிலோனியாவின் அழிவு என்பது போன்ற தேசீயப் பாடல்கள், ஏசாயா 60-ல் காணப்படும் இஸ்ரவேலரின் பிற்காலப் புகழ் என்பது போன்ற வருங்காலத்து ஆரூடம்: இவை முதலியன இந்த இரண்டாம் காலப் பகுதியில் தோன்றிய இலக்கிய பரம்பரைச் செல்வங்களில் ஒரு சிலவாம்.

**மூன்றாங் காலப்பகுதி**

பிற்பாடு யூத ஜாதியார் பணிந்து ஒடுங்கிக் கிடக்கும் ஏழை நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமைக்குரிய சரித்திரக் குறிப்பு கி. மு. 750—400 வரையுள்ள மூன்றாங் காலப் பகுதியைச் சார்ந்தவை. இக்காலத்து இலக்கியத்தில் இவர்கள் பாபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்ட விவரங்கள் அறியக்கிடக்கின்றன. அடிமையாகக்கொண்டு செல்லப்பட்ட மக்களுடைய புலம்பற் குரல்களும், ஹோஸியா (Hosea) ஏசாயா (Isaiah), மீகா (Micah), ஏரேமியா (Jeremiah), எஸேக்கியேல் (Ezekiel) முதலான பெரியோர்கள் அச்சமின்றித் தெளிவாகக் கூறியுள்ள தீர்க்க தரிசனக் குரல்களும் கேட்கப்படுகின்றன. இடையிடையே பழங்காலத்து நினைவுகளும் இவர்களுக்கு உண்டாகாமற் போகவில்லை. இது நெகேமியாவின் ஞாபகக் குறிப்பினால் விளங்குகிறது. இங்கே துன்புற்ற யூத ஜாதியாரின் அழுகைக் குரலும், புலம்பற் பாடல்களும் அடிக்கடி செவியில் விழுகின்றன. இது புலம்பல் (Lamentations) என்னும் பகுதியில் காணப் படுகிறது. இதனோடு உறுதியான நம்பிக்கையும் கலந்து விளங்குவதாயிற்று. இது பாபிலோனியாவில் இவர்கள் வாழ்ந்த காலத்தில் தோன்றிய சங்கீதப் பகுதியால் (Psalms) தெரிய வருகிறது.

இக்காலத்தில் யூத மக்களுடைய ஆன்மா சோதனைக் குள்ளாகியிருந்தது. தங்களை ஆண்டு வந்தவர்களின் துர்க் குணங்கள் தங்களையும் பீடித்துவிடக் கூடாதென்ற கவலை மிகவும் ஏற்பட்டது. இதனால் தாங்கள் அனுஷ்டிக்க வேண்டிய சட்டதிட்டங்களை வகுக்கலாயினர். இவைகள் உபாகமப் பகுதியிலும் (Deuteronomy), எஸேக்கியேல் ஆகமத்திலும் காணப் படுகின்றன.

**நான்காவது காலப்பகுதி**

யூதர்கள் கடைசியாக விடுதலையடைந்தனர். தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பினர். ஆனால் இவர்களுடைய இயல்பு முன்னமிருந்த தூய நிலைமையிலேயே இருந்ததெனக் கூற முடியாது. இவர்களது பாபிலோனிய வாழ்க்கையில் இந்த இயல்புகள் கெட்டுவிட்டன. இஸ்ரவேல், யூதா என்ற பிரதே சங்களில் ராஜ்யம் ஒன்று நிறுவப்பட்டது என்பது உண்மை. என்றாலும், முன்பிருந்த ஆன்ம விளக்கம் திரும்பிவந்ததா என்பது ஒரு பெருங் கேள்வி. இதற்குரிய விடை கி. மு. 400 முதல் 100 வரையுள்ள நான்காவது காலப் பகுதியைச் சார்ந்த இலக்கியத்தில் காணப்படுகிறது.

இக்காலத்தில் தோன்றிய நூல்களில் பழங்காலம் பற்றிய சிந்தனைகளும், பழங்காலத்தை ஒத்திருக்க வேண்டுமென்ற விருப்பினால் மேற்கொண்ட போலி நடிப்புக்களும் காணப்படுகின்றன. தீர்க்கதரிசிகளில் கடைசியாக வந்தவர்கள் துன்ப இருளில் ஆழ்ந்துள்ளார்கள் ; இகழ்ச்சிக் குறிப்போடு பல இடங்களில் பேசுகிறார்கள் ; யூதமக்களின் சிறந்த பெருங் குணங்கள் எங்கே போயின என்று அடிக்கடி கேட்கிறார்கள். இந்த நிலைமையிலும் தூரத்தே விளங்கும் மெஸ்ஸையா (Messiah) என்ற ஒளிப்பிழம்பு இவர்களுக்குப் புலப்படுகின்றது. நீதியையும், அன்பையும் உணர்த்தவந்த போதகரல்லவா இவர் ?

அக்காலத்தில், முன்பு எழுதிக்கிடந்தனவற்றைத் தொகுத்து முறைப்படுத்தும் முயற்சி நடைபெற்றது. தீர்க்கதரிசிகளின் வசனங்களும், குருமார்களின் உபாக்கியானங்களும் முடிவாக வரையறுக்கப்பட்டன. இவைகளிற் சில சங்கீதம் என்ற பகுதியில் உள்ளவை. எஸ்தர், ரூத் நீதிமொழிகள் (The Proverbs), பிரசங்கி (Ecclesiastes), யோபு என்ற ஆகமப் பகுதிகள் இக்காலத்தே தொகுக்கப்பட்டன. ஆனால் இவைகள் அத்தனை சிறந்த பிரமாண நூல்களாகக் கொள்ளப்படவில்லை. சாலமோனுடைய உத்கிருஷ்ட கீதங்களும் இக்காலத்தைச் சார்ந்தனவே. இவைகள் உண்மையிற் காதற்பாட்டுக்களெனவே கூறத்தக்கன ; எனினும் பக்திப் பாடல்களாவே இவை கொண்டாடப்படுகின்றன.

பாபிலோனியச் சிறைவாசத்திற்குமுன்பு, அரசர்களும் யூத மக்களிற் பெரும்பாலோரும் விக்கிரக வணக்கம் செய்வதில் விருப்பமுடையவராய் இருந்தனர். சிறைவாசம் நீங்கித் திரும்பத் தமது புண்ணிய பூமிக்கு இவர்கள் வந்ததும், இவர்களுடைய தலைவர்கள் சரியான கிரியைகள், சரியான விதிமுறைகள், சரியான வழக்க வொழுக்கங்கள், சரியான பிரமாண நூல்கள் இவற்றைத் திட்டப் படுத்த வேண்டுமென்று முயன்றார்கள். இதன் பொருட்டுப் பலபல மகாநாடுகள் கூட்டப்பட்டன. அறிஞர்கள் ஒன்று கூடித் தங்கள் ஜாதீய சமயத்தை வரையறுத்தனர். இப்படியாக விவிலிய நூலில் பழைய ஏற்பாடு வரையறையுடன் தொகுக்கப்பட்டது.

உண்மைத் தெய்வம் ஒன்றே என்ற கொள்கையுடையவர்கள் இந்த யூதர்கள் ; ஆன்ம ஞானம் நிரம்பப் படைத்தவர்கள். தங்களுடைய எருசலேம் நகர், இடையூறுகளையெல்லாம் போக்கி, வெற்றியோடு விளங்குமென்று உறுதியாக நம்பினர். எகிப்து, அஸ்ஸீரியா, பாபிலோனியா முதலியவற்றில் விளங்கிய ஸாம்ராஜ்யங்கள் அழிந்து மண்ணோடு மண்ணாய்ப் போயின. அலெக்ஸாண்டர் என்னும் பேரரசன் வெற்றியாடம்பரத்

தோடு பல நாடுகளுக்கும் சென்றதை இந்த யூதர்கள் நேரிற் கண்டுள்ளனர். பாரஸிக அரசாட்சி பணிந்து ஒடுங்கியது. கிரேக்க நாகரிகம் ஆசியாவின் பெரும் பகுதியைக் கடந்து இந்தியாவை எட்டியது. ஸிரியாவிலும், எகிப்திலும் அலெக்ஸாண்டர் புதிய ராஜ்யங்களை நிலைநாட்டினன். இஸ்ரவேலர்கள் இந்நிகழ்ச்சிகளாற் பாதிக்கப்படாது தூரத்தே வாழ்ந்திருக்கவில்லை. அவ்வப்போது வெற்றிகொண்டவர்களுடைய குடிகளாக இவர்கள் அமைய நேர்ந்தது. இப்பொழுது அந்நிய மொழி ஒன்றும் இவர்களிடையே தலைகாட்டத் தொடங்கிற்று. கிரேக்க மொழி தான் இங்கே குறிப்பிடப்படுவது. சுமார் கி. மு. 270-ல் பழைய ஏற்பாடு அலெக்ஸான்டிரியா என்னும் கிரேக்க நகரத்தில் கிரேக்க மொழியில் எழுபது அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதனால் ஸெப்டுவாஜின்ட் (Septuagint) என்று இதற்குப் பெயர். யூதர்களுடைய மகோன்னத காலம் கழிந்துவிட்டது. இவர்களுடைய ராஜ்யமும் முடிவடைவதாயிற்று.

**ரோமன் ஆதிக்கியம்**

பின்னர் ரோம மக்களின் ஆதிக்கியத்திற்குள்ளாக இவர்கள் அடங்கி வாழ்ந்தனர். எருசலேம் நகரில் உள்ள திருக்கோயில் அழிந்துபட்டது. இதனோடு இம்மக்களது ஆன்ம வாழ்விற்குரிய அறிகுறியும் மறைந்துவிட்டது. யூதர் என்ற ஜாதியினரின் ஒன்றுபட்ட வாழ்வு இப்போது முடிவடைந்துவிட்டது. இவர்கள் பற்பல நாடுகளிலும் அலைந்து திரியலாயினர். நாகரிகம் மிக்க பல நாடுகளிலும் இவர்கள் சிதறுண்டு போனார்கள்.

ரோமன் ஆதிக்கியத்தின் காலத்திலே மிகச்சாதாரண குடும்பத்திலேயிருந்து ஒரு பெரியவர் தோன்றினார். எளிய நிலைமையில் உள்ளவர்; ஆனால், கௌரவம் வாய்ந்தவர்; உறுதி படைத்த சிந்தனையோடு கூடியவர். அவர்தாம் இயேசுநாதர். நாஸரேத் என்ற ஒரு சிறிய பிரதேசத்திலிருந்து வந்தவர். அவர் தமது ஜனங்களுக்குப் புதியதொரு உபதேசத்தை அருளினார். அன்பு, சகோதரத்துவம், அனைவருக்கும் ஒத்த நீதி இவை பற்றியதே இந்த உபதேசம். இந்த உபதேசத்தை ஜனங்களுக்குச் செய்துவிட்டு, அக்காலத்து மிகக்கொடிய தண்டனைகளுள் ஒன்றாகிய சிலுவை மரணத்தை அடைந்தனர். அடிமைப்பட்ட நாட்டில் ஒரு குக்கிராமத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்த இந்த இளந் தத்துவ ஞானியின் உபதேசம் உலக மக்களது நாகரிக வாழ்விற்கு எத்துணை அளவாகப் பயன்பட்டது என்பது சரித்திர வாயிலாக நாம் அறிந்ததொன்றே.

**ஐந்தாம் காலப்பகுதி**

யூத இலக்கிய வரலாற்றின் ஐந்தாம் பகுதி கி.மு. 100 முதல் கி. பி. 300 வரையுள்ள காலப்பகுதியைச் சார்ந்தது. இந்த இலக்கியம் பெரும்பாலும் இரட்சகர் இயேசுநாதரைப் பற்றியதே. யூதர்களுடைய கர்ண பரம்பரை வரலாறுகள், அதிபுராதனக் கதைகள், பிற கதைகள், கட்டுரைகள் இவை முதலியவற்றின் பரந்துபட்ட தொகுப்பும் இக்காலத்தே தான் ஏற்பட்டதாகும். இத்தொகுப்பிற்குத் தால்முட் (Talmud) என்று பெயர். இக் காலத்தில் யூதகுருக்கள் பலருடைய நூல்களும் வெளிவந்தன. ப்ளேவியஸ் ஜோஸெப்வஸ் (Flavius Josephus) முதலிய ஆசிரியர்களும் இக்காலத்தேதான் விளங்கினர். ஆனால், உலக முழுவதையும் வசீகரித்து மக்களது வாழ்க்கை புதுநெறியில் செல்லுமாறு செய்தவை இயேசு என்ற திருநாமமுடைய யூதரின் உபதேசங்களே. இந்த உபதேசங்களை அவர் தமது கைப்பட எழுதி வைத்தார் என்று எண்ணுவதற்கில்லை. அவரைப் பின் பற்றியவர்களாலே பிற்காலத்தில் எழுதப்பட்டவையே. அவர் தேவகுமாரர் என்பதை மக்கள் நம்பாதிருக்கலாம். ஆனால் நாகரிக நெறியை மாற்றிப் புத்தம் புதியதாக்கி ஒழுங்குபடுத்திய பெருமை அவரது உபதேசங்களுக்கு உரியதாகும். இதற்குச் சரித்திரம் சான்று பகரும்.

யூத ஜாதியின் சரித்திரம் இவ்வாறாக வெகு காலத்ததாய், இடையிடையே குழப்பங்கள் நிறைந்ததாய் உள்ளது. இவர் களது இலக்கியங்களில் முக்கியமானவை யாவை? விவிலிய நூல் (பைபிள்) என்று பிரசித்தமாய் வழங்குகின்ற பெரிய தொகுப்பு நூல்தான் இவர்களது பேரிலக்கியம். இவ்வரும்பெரு நூலிலே 66 சிறு நூல்கள் அடங்கியுள்ளன. பழைய ஏற்பாடு (The Old Testament) என்பதில் 39 நூல்களும், புதிய ஏற்பாட்டில் (The New Testament) 27 நூல்களும் உள்ளன. இந்தப் பைபிளேயன்றி, முன்கூறிய தால்முட் என்ற தொகுப்பு நூலும் குருமார்கள் பழைய ஏற்பாட்டின் வியாக்கியானங்களாய்ச் செய்துள்ள பிற நூல்களும் (Rabbinical Writings) யூதர்களுக்கு உரியனவாம். இவைகளையேயன்றி, பரம்பரையாய் வாய்மொழி மூலமாய் வந்த ரகசிய வார்த்தையாகிய கப்பாலா (Kabbala) என்ற கட்டுரை வாக்கியங்களையும் இவர்கள் போற்றிவந்தனர். இக் கட்டுரைகளைப் பல நூல்களிலிருந்தும் திரட்டிச் சிறு சிறு வாக்கியங்களாக அமைத்து எழுதி வைத்திருந்தனர்.

**பழைய ஏற்பாடு**

யூதர்களுடைய பழைய ஏற்பாட்டு நூல்கள் முப்பெரும் பகுதிகளாக உள்ளன. அவை சட்டங்கள் (The Laws) தீர்க்க

தரிசியர்கள் (The Prophets), லேகனங்கள் (The Writings) என்று வழங்கும் பிற நூல்கள். இறுதியிற் கூறியன சிறந்த பிரமாண நூல்கள் அல்ல. எனினும் அவற்றில் அடங்கிய ஞானப் பொருள் களை மக்கள் மிகவும் பாராட்டி வந்தனர். இதனால், திருக் கோயில்களிலன்றி வீடுகளில் இவற்றை வாசிக்கவேண்டும் என்று யூத குருக்கள் கூறிவந்தனர்.

சட்டம் என்பதில் ஐந்து நூல்கள் அல்லது ஆகமங்கள் அடங்கியுள்ளன. ஆதி ஆகமம் (Genesis), யாத்திராகமம் (Exodus), லேவியராகமம் (Leviticus), எண்ணாகமம் (Numbers), உபாகமம் (Deuteronomy) என்பனவே அவைகள். இவ்வைந் திற்கும் பொதுப்பெயர் ஐந்தொகை என்று பொருள்படும் பெண்டட்யூக் (Pentatewch) என்பது. இவற்றை மோஸே என்பவர் எழுதியதாக யூதர்கள் நம்பிவந்தனர். சமீப காலம் வரை இந்தக் கொள்கையையே பலரும் கொண்டிருந்தனர். ஆனால் யூதர்கள் பாபிலோனியப் பிரதேசத்திற்கு நாடு கடத்தப் பட்ட பின்பும் எஸ்ரா என்ற தீர்க்கதரிசி திரும்பிவருவதற்கு முன்பும், அதாவது கி.மு. 600 முதல் 450 வரையுள்ள காலப் பகுதியில், இவை தோன்றின என்று ஆராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளனர்.

மோஸேயின் காலத்தில் இவைகள் தோன்றியன அல்ல என்பது உறுதி. யாத்திராகமத்தில் 20 முதல் 23 வரையுள்ள அத்தியாயங் களில் காணப்படும் விதிகளிற் சில மோஸே எழுதியனவாகலாம் என்று சிலர் ஐயுறுகின்றனர். ஆதி ஆகமம் இரு வேறு ஆசிரியர் களால் இயற்றப்பட்டதெனவும் கருதப்படுகிறது. ஒருவர் புண்ணிய பூமியின் வடபகுதியிலுள்ளவர் என்றும், மற்றவர் அதன் தென்பகுதியைச் சார்ந்தவரென்றும் கூறுகின்றனர்.

மேற்கூறியவற்றின் உண்மை எவ்வாறாயினும், இவ் ஐந்தொகைப் பகுதியில் மக்கள் இயற்றியுள்ள உத்தம இலக்கிய சிருஷ்டியில் மகோன்னதமான சில பகுதி அமைந்துள்ளது என்பர். இதன் எளிமை வியக்கத்தக்கதாயுள்ளது. சுருங்க உரைக்கும் தன்மை பாராட்டிப் போற்றற்குரியதா யிருக்கிறது. இதில் காணும் நாடக பாவனைத் திறமை இதற்குத் தனி அழகு கொடுக்கிறது. இது யூதர்களுக்கு மட்டுமின்றி உலகத்திலுள்ள கிறிஸ்தவ சமயத்தினர் அனைவருக்கும் 25 நூற்றாண்டுகளுக்கு மேலாக லட்சிய நெறியை உணர்த்தி வந்திருக்கிறது. நாகரிகம் எத்தனை மேல்நோக்கிச் சென்றபோதிலும் இதன் அருமை பெருமைகளும் மேம்பட்டுக்கொண்டே செல்லுகின்றன.

இதனைக் காட்டிலும், தீர்க்கதரிசியர்கள் என்ற பகுதி கௌரவம், லட்சிய நோக்கம், ஆன்ம-உணர்ச்சி முதலிய பல அம்சங்களில் சிறந்து விளங்குகிறது. இப்பகுதியில் யோசுவா, நியாயாதிபதிகள், ஸாமுவல் 1, 2, இராஜாக்கள். 1, 2, எரேமியா, எஸேக்கியேல், ஏசாயா, பன்னிரண்டு உப தீர்க்க தரிசிகள் என்பன அடங்கியுள்ளன. தீர்க்கதரிசிகள் இருவகைப் படுவர். ஏசாயா, எரேமியா, எஸேக்கியேல், தானியேல் என்ப வர்கள் பிரதம தீர்க்கதரிசிகள். ஹோஸியா முதல் மல்கியா இறுதியாகவுள்ள பன்னிவரும் உபதீர்க்கதரிசிகள். இந்தத் தீர்க்க தரிசிகள் கடின சித்தம் படைத்தவர்கள். குற்றங்களைச் சிறிதும் மறையாதபடி எடுத்துக்காட்டும் கண்டிப்பான இயல்புள்ள வர்கள். மக்கள் இதயத்தில் தெய்வ பயத்தை உறுதியாக நாட்டு வதிலே கூர்ந்த நோக்கமுள்ளவர்கள். இவர்கள் தெய்வ ஆணையை மீறினால் நேரிடும் தண்டனைகளைத் தீர்க்கதரிசனத் தால் உணர்ந்து மக்களுக்குத் தெரிவித்து வந்தார்கள்.

ஆனால் இவ்வாறு பயத்தால் ஒடுங்கிக் கிடக்கும் மக்கள், வாழ்வின் இன்பங்களில் சுவைகொள்ளுதலும், அது பற்றிப் பிறரது அனுகூல சித்த விருத்தியை எதிர் நோக்குதலும் முற்றும் இயல்பே. இவ்வியல்பிற்கு ஒத்தவாறே 'இரண்டாவது ஏசாயா' என்று சொல்லப்படும் ஒரு தீர்க்கதரிசி தோன்றி, 'என் மக்களே, ஆறுதல் கொள்ளுங்கள் என்று உங்கள் கடவுள் கூறினார்' என உபதேசித்தனர். வேறு சில தீர்க்கதரிசிகள் தேசீயப் பற்று உண்டாகும்படியாகச் சில உபதேசங்களையும் செய்துள்ளார்கள். இவர்கள் தங்களை நலிவுறுத்தும் அதிகாரிகளை வெறுத்து வந்தார்கள். ஆன்ம சக்தியிலும், நீதியிலும் ஈடுபட்டார்கள். தெய்வ நம்பிக்கையை உறுதியாய் மேற்கொண்டார்கள். இவர்கள் கூறியனவெல்லாம் மக்களது ஆற்றலை அபிவிருத்தி செய்யும் மருந்துபோல் உதவின.

**லேகனங்கள்**

தீர்க்கதரிசிகளை அடுத்து நாம் கவனிக்க வேண்டியது கர்ண பரம்பரை வரலாறுகள், புராதன சரித்திரங்கள், பாடல்கள், கட்டுரைகள் முதலியவற்றின் தொகுதியாகும். லேகனங்கள் என இத்தொகுதி வழங்குகிறது. இவைகள் புண்ணிய நூல்களாகக் கொள்ளத் தக்கனவல்ல என்பர். ஆனால், நல்ல இலக்கிய முயற்சிகள் என்று இவற்றைக் கூறவேண்டும். இவைகளுள் சங்கீதம் என்ற பகுதி கவிதை வகையில் மிகச் சிறந்ததாகும்.

தாவீது இவற்றை இயற்றினாரென்று வெகு காலமாகக் கருதி வந்தார்கள். இவைகள் கி.மு. சுமார் 300 அளவில்

தாவீதின் காலத்திற்கு மிகப் பிற்பட்டுத் தோன்றியனவாம். எக்காலத்தனவாயினும், இவற்றில் அடங்கிய தோத்திரப் பாடல்கள் உலகத்திலுள்ள சமய தோத்திரங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்தவை என்று கூறுகிறார்கள். இவற்றிலே ஆழ்ந்த அன்பு - உணர்ச்சி காணப்படுகிறது; தெய்வத்தோடு நெருங்கியுள்ள உறவு வெளிப்படுகிறது; மக்கட் பண்பு நிரம்பி யுள்ளது. மக்கள் ஈடேற்றத்திற்குரிய தத்துவ போதனையும் இவற்றில் கூறப்பட்டுள்ளது. எனவே ஆன்மாவிற்குச் சாந்தி யளிக்கக்கூடிய தன்மை இதில் காணப்படுகிறதென்று அறிஞர்கள் ஒரு முகமாய் வற்புறுத்துகிறார்கள். இவைகள் மக்களது அறிவைத் திருப்திசெய்வனவல்ல. எனினும், அவர்கள் இதயத்தை நன்றாகத் திருப்தி செய்கின்றன. ஓர் உதாரணம் :

> கடவுளே நமது புகலிடம், நமது வலிமை; துன்பத்தில் உடனுதவும் உறுதுணையானவர். ஆதலால் நாம் அஞ்சமாட்டோம் : இப் பூவுலகம் நிலைகுலைந்தாலும் சரி, பர்வதங்கள் கடல் நடுவே வீழ்ந்தொழிந்தாலும் சரி, கடல் நீர் கொந்தளித்து இரைந்து குழப்பமுற்றாலும் சரி, அந் நீர் பெருக்கெடுத்தலால் பர்வதங்கள் குலுங்கி அதிர்ந்தாலும் சரி, பரம்பொருளின் கோயில்கள் விளங்கும் பரிசுத்த ஸ்தலமாகிய தெய்வத் திருநகரத்தை மகிழ்விக்கும் நதி ஒன்றுள்ளது; அந் நதியின் இடையிலே கடவுள் வீற்றிருக்கின்றனர். அதனை அசைக்க முடியாது. கடவுள் அதற்கு உதவுவார். வெகு விரைவிலேயே உதவுவார்.

இதிலே செய்யுளுக்கு வேண்டுமெனக் கருதும் எதுகை மோனைகள் இல்லை. செய்யுளுக்கு இவ் எதுகை மோனைகள் இன்றியமையாதனவும் அல்ல. இயற்கையான ஓசை இனிமை காணப்படுகின்றது. இவ்வினிமையை ஒத்திசை என்று கூறலாம். கருத்தோடு கருத்து ஒத்திசைக்கின்றது; தொடரோடு தொடர் ஒத்திசைக்கின்றது; வாக்கியம் வாக்கியத்தோடு ஒத்திசைக்கின்றது.

இந்தத் தொகுதியிலே 'புலம்பல்' என்ற ஒரு பகுதியும் உள்ளது. ஸாலமோன் கீதங்களும் இதில் அடங்கியுள்ளன. இவைகள் நமது தேசத்து அடியார்கள் தமிழில் இயற்றியுள்ள உருக்கமான பக்திப் பாடல்களைப் போலவே காணப்படுகின்றன. கடவுள் மக்கள் மீது பரிவுகொண்டு ஆட்சிபுரியும் தன்மையும், மக்கள் கடவுள் மீது பக்தி கொண்டுள்ள தன்மையும் இவற்றில் புலப்படுகின்றன. ஆனால், காதற் செய்யுள் வடிவில் இவை அமைந்தவை.

இத்தொகுதியில் அடங்கியுள்ள பன்னிரண்டு ஆகமங்களுள் இரண்டு லௌகிக அறிவுரைகளைக் கூறுகின்றன. அவைகள்தாம் நீதி மொழிகளும், பிரசங்கி ஆகமமும். சில பரம்பரைக் கதை வரலாறுகளும் இத் தொகுப்பில் உள்ளன. தானியேலின் கதை, பெல்ஷாஜார் விருந்து, எஸ்தரின் கதை, ரூத், நவோமி என்பவர்களின் இனிய காதற்கதை முதலியவற்றை நாம் இங்கே கருதலாம். இவைகள் இலக்கிய வழியில் நோக்கினால், மிகமேலாந்தரத்தனவாய் உள்ளன. எல்லாவற்றைக் காட்டிலும் வேறொரு நூலை அறிஞர்கள் எல்லோரும் மிக மிக வியந்து பாராட்டுகிறார்கள். இதுதான் யோபுவின் நூல். இந்நூலைக் கார்லைல் முதலிய ஆங்கிலப் பேராசிரியர்கள் மிகப்பெரிதும் புகழ்ந்துள்ளார்கள்.

**புதிய ஏற்பாடு**

புதிய ஏற்பாடு என்று வழங்கும் தொகுப்பு நூல், பெரும்பாலும் கிரேக்க மொழியில் இயற்றப்பெற்றது. ஆனால், எபிரேய மணம் எங்கும் பரிமளிக்கின்றது. இயேசுநாதர் ஒரு யூதர். நூலில் கதாபாகங்களைக் கூறுவோரும், கட்டுரை எழுதியோரும், கடிதங்கள் வரைந்தோரும் பெரும்பாலும் யூதர்களே. இத்தொகுப்பின் பலவேறு பகுதியையும் இயற்றியுள்ள ஆசிரியர்கள் பழைய ஏற்பாட்டின் ஞானத் துறையில் நன்கு படிந்தவர்கள்.

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையே 4, 5 நூற்றாண்டுகள் சென்றிருக்கலாம். சிதைந்த கிரேக்க மொழியில் இப்புதிய ஏற்பாட்டு நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. என்றாலும், இவை மிகவும் ஆற்றலுள்ளனவாய் விளங்குகின்றன. இத் தொகுப்பிலுள்ள நூல்களைப் பழைய ஏற்பாட்டிற்போல எளிதில் பாகுபாடு செய்ய முடியாது. இதில் இயேசுவின் வாழ்க்கை, செயல், உபதேசங்கள் என்பன பற்றிய நான்கு வரலாறுகள் உள்ளன. கிறிஸ்தவத் திருக்கோயிலின் ஸ்தாபனத்தின் தலைவராய் விளங்கியவர்களுடைய உபதேசக் கடிதங்களும் தொகுப்பட்டுள்ளன. அருள்-வெளிப்பாடு (Revelation) என்ற ஒரு கனவுக் காட்சி நூலும் இதில் அடங்கியிருக்கிறது. இவற்றுள் ஒரு சிலவற்றில் இலக்கியப் பெருமை காணப்படவில்லை. மார்க், யோவான் எழுதின சுவிசேஷங்களிலும், யோவான், பவுல் எழுதின கடிதங்களிலும் சிற்சில சிறந்த அம்சங்கள் புலப்படுகின்றன. தெளிவு, ஆற்றல், தத்துவ மேம்பாடு, உன்னத நோக்கம் இவைகளே இந்த அம்சங்கள். புதிய ஏற்பாட்டின் நூல்களை இயற்றிய ஆசிரியர்களைக் குறித்து விவாதங்கள் வெகுகாலமாய் நடந்து வந்திருக்கின்றன. பலர் பலவிதமாகக் கூறுகின்றனர்.

ஆசிரியர்களைக் குறித்த முடிவு எவ்வாறாயினும், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்களது நான்கு சுவிசேஷங்களிலும் கூறப்படும் சரித்திரம் நாடக நயங்கள் நிறைந்துள்ளது. இவை நமது சோக உணர்ச்சியை மிகுவிக்கின்றன. இவற்றில் சொல்லப்படும் செய்திகள் நம்மை மயிர்க்கூச்செடுக்கச் செய்கின்றன.

கதை மூலமாக உணர்த்தப்படும் நீதிகள் மக்களுக்கு உறுதி பயப்பதில் மிக மேம்பட்டு விளங்குகின்றன. இதில் உள்ள பேச்சுகள் சொல்வன்மை நிரம்பி, நமது ஆன்மாவில் உள்ளூரப் பாய்கின்றன. இயேசுநாதரின் பிறப்பு வரலாறும், அவர் தமது முப்பதாவது ஆண்டில் ஒரு நூதன வாழ்க்கைத் தத்துத்தை உபதேசித்த வரலாறும், அவர் அற்புதச் செயல் புரிந்த வரலாறும், தமது கொள்கையை வழிப்பற்றுதற்குரிய துணைவர்களை அவர் சேர்த்துக்கொண்ட வரலாறும், அத்துணைவர்கள் இப் புதிய நீதியொழுக்கத்தை உலகினரிடையே பரப்புவித்த வரலாறும், இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்பு அவர் ரோம் ஜனங்களால் கொடிய துர்மரணம் எய்திய வரலாறும் இப்புதிய ஏற்பாட்டில் மிகத் தெளிவாக உணர்த்தப்படுகின்றன.

**இயேசுநாதரின் உபதேசங்கள்**

அவருடைய உபதேசங்களின் இன்றியமையாத விளைவுதான் அவருடைய மரணம் என்று கூறுதல் வேண்டும். தற்காலத்தில் அவர் வாழ்ந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலான கண்டங்களில் தமது கொள்கைகளைத் தெளிவாக, நேராக, உபதேசிப்பாரானால், அவருக்குக் குறைந்தபக்ஷம் சிறைத் தண்டனையாவது அரசாங்கத்தினர் விதிப்பார்கள் என்பது உறுதி. பரம்பரை உரிமையில் நம்பிக்கை யுள்ளவர்களுக்கெல்லாம் அவர் பரம விரோதி தான்; அபாயகரமானவர்தான். அவர் கொள்கைகளை முற்றும் அனுஷ்டிப்பதானால், உலகமே புரட்சி எய்திவிடும். நம்மவருள் யாருக்குத்தான் புரட்சி ஒத்ததாயிருக்கும் ? அவர் கூறிய ஸர்வ ஸகோதரத்துவம், பொன் போன்ற உத்தம நீதி* (லூக்கா 6, 31), சாந்த மனத்தோடு எதனையும் சகித்துச் சாத்வீக எதிர்ப்புச் செய்யுங்கள் என்ற உபதேசம் : இவை உலகத்தில் சமாதானத்தை வெகு விரைவில் நிலைநிறுத்தக் கூடியவை. ஆனால், அவ்வகையான சமாதானத்தை நாம் விரும்புவோமா ?

---

* பிறர் உனக்கு யாது செய்யவேண்டுமென்று விரும்புவாயோ அதனையே நீயும் பிறர்க்குச் செய்க என்ற நீதி.

சடங்கு, கிரியை முதலானவைகளெல்லாம் முக்கியமல்ல என்று அவர் வற்புறுத்துகிறார். இது ஏழை மனம் படைத்த மக்கள்மீது சமய ஸ்தாபனங்கள் புரிந்துவரும் கொடுங்கோல் ஆட்சிக்கு ஒரு பெரும்பகை யல்லவா ? செல்வமும், அரசாட்சியும் பிறர்மீது அதிகாரம் செய்யவேண்டுமென்ற உணர்ச்சியும் அநாகரிகத்திற்கு அறிகுறியென அவர் பறைசாற்றுகிறார். இது தற்காலத்தில் உலகெங்கிலுமுள்ள பொருளாதாரக் கொள்கைகள் அரசியற் கொள்கைகள் இவற்றிற்கு முற்றும் விரோதமல்லவா ? அனைவரும் தங்கள் உடைமைகள் அனைத்தையும் பிற ஏழை மக்களோடு பகிர்ந்து நுகர வேண்டுமென்று அவர் வேண்டிக் கொள்கின்றார். இது பொருளீட்டுதலில் கண்ணுங் கருத்து மாயிருக்க வேண்டுமென்னும் தற்காலத்தார் மனப்பான்மைக்குச் சிறிதும் இணங்காததல்லவா ? ஆகவே அவர் கொலையுண்டார். தற்காலத்தில் அவர் வாழ்ந்தாலும் இவ்வாறு கொலையுண்டிருப் பார் என்றே நாம் கருதலாம்.

கடவுள் நன்மை மயமாக விளங்குபவர் ; நீதியையே மேற் கொண்டவர் ; நல்வாழ்க்கைக்குரிய எளிய இயல்புகளை மக்கள் மேற்கொள்ளுதல் வேண்டும் : இவ்வுபதேசங்களையே அவர் வற்புறுத்தியிருக்கிறார். அவருடைய தர்க்க முறை ஒருவராலும் விடையிறுக்க முடியாதது. அவருடைய பேச்சு சரளமாயும், ஊக்கமூட்டுவதாயும், பலவகையினும் ஆற்றல் நிரம்பியதாயும் உள்ளது. மலைமீது உபதேசம் என்ற பகுதி, மக்களுக்கு இதுதான் நன்னெறி என்று திட்டமாயும் தெளிவாயும் துணிந்து வெளியிடப் பட்டதாகும். அக்காலத்துள்ள கற்றறி மோழைகளையும், போலி நடிப்புக்காரர்களையும் அவர் இகழ்ந்து உரைத்துள்ள மொழி எக்காலத்தும் பயன்படுவதாகும். அவர் தாயைக் காட்டிலும் கருணை மிகுந்தவர்.

உழைத்துத் தாங்கமுடியாத பாரத்தால் நலியும் மக்களே என்னிடம் வாருங்கள் ; நான் உங்களுக்கு அமைதியைத் தருகின்றேன். எனது சிறு நுகத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் ; என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் ; ஏனென்றால் நான் சாந்தமானவன், ஏழை மனம் உள்ளவன்; உங்களுடைய ஆன்மாவிற்குச் சாந்தியை நீங்கள் காண்பீர்கள் ஏனென்றால் என்னுடைய நுகம் லகுவானது. எனது பாரம் மிகக் குறைவானது.

உங்களுடைய இதயம் துன்புறாதிருக்கட்டும்: கடவுளை நம்புகிறீர்கள் ; என்னிடத்திலும் நம்பிக்கை வையுங்கள். எனது பிதாவினுடைய பெரு நகரத்திலே பல மாளிகைகள்

உள்ளன. அப்படியில்லாமற் போனால், அதையும் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். உங்களுக்கு ஓர் இடம் நான் அமைத்து வைப்பதற்காகப் போகிறேன். அங்கே ஓர் இடம் உங்களுக்குத் தயார் செய்துவிட்டேனானால், நான் மீண்டும் வருவேன். உங்களை என்னிடத்திலே ஏற்றுக்கொள்ளுவேன். நான் இருக்குமிடத்தில் நீங்களும் இருக்கலாம்.

இயேசுவின் கருணையுள்ளம் எவ்வளவு நன்றாக இவ்வசனங்களிற் பிரதிபலிக்கிறது!

கதை சொல்வதிலும் இவர் இணையற்றவர். சுருக்கமும், தெளிவும், ஆழ்ந்து செல்லும் இயல்பும், பல சந்தர்ப்பக்களிலும் பயன்படும் தன்மையும் இவர் கூறும் கதைகளிலே உள்ளன. இவரது திருஷ்டாந்தக் கதைகள் (Parables) கிறிஸ்தவர்களின் வீடுதோறும் வழங்குகின்றன. உலகில் ஒவ்வொருவனும் தனது ஸகோதரன் என்று நம்பிய நல்ல சமாரிதான், வீண்விரையம் செய்யும் புத்திரன், கல் நிரம்பிய இடத்தில் வித்துக்களைச் சிதறிப் பாழ்படுத்திய விதையாளி முதலியோர்கள் சிறு சிறு அழகிய சொற் சித்திரங்களால் நமக்கு உணர்த்தப்படுகின்றனர்.

நான்கு சுவிசேஷங்களையும் வாசிக்கும்போது, இவர் ஈடும் எடுப்புமில்லாத நற்போதகராக விளங்குகிறார் என்பது மேல் நாட்டு அறிஞர்களது துணிபு.

**பிரமாணப் போலிகள்**

இப் புதிய ஏற்பாடேயன்றி, கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியினரால் ஒப்புக்கொள்ளப்படும் வேறு பதினான்கு நூல்களும் உள்ளன. இவற்றைப் பிரமாணப் போலிகள் (Apocrypha) என்று சொல்லுவார்கள். இவைகளும் கற்பதற்கு மிகவும் சுவையுள்ளன. உண்மையான பெருந் தகுதியும் ஒரு சிலவற்றில் காணப்படுகிறது. தனது நாட்டுப் பகைவனை அடக்கி வெற்றிகொண்ட ஜூடித் என்ற வீரப் பெண்மணியின் சரித்திரம் கி.பி. 7-ம் நூற்றாண்டு முடிய ஐரோப்பாவில் மிகுத்த பிரசாரம் பெற்றிருந்தது. டோபெட் (Tobet) சரித்திரமும் இதன் கண்ணே அடங்கியது. மனோரம்மியமான இக்கதையும் ஐரோப்பாவில் முற்காலத்தில் மிகவும் போற்றப்பட்டு வந்தது.

கடைசியாக இருவகை ஏற்பாடுகளையும் பற்றிப் பின் எழுந்த ஒரு பெருந் தொகுதி நூலும் உண்டு. அதில் யூதர்களிடையே வழங்கிய வரலாறுகளும், சிந்தனைகளும், பூர்வ ஆகமங்களைப் பற்றியெழுந்த நாடோடிக் கதைகளும் அடங்கி

யுள்ளன. அறிவுரைகளும் இடையிடையே காணப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு:—

தீபம் ஒன்றேயானாலும், ஒருவனுக்குப் போலவே நூற்றுக் கணக்கான மக்களுக்கு அது பயன்படுகிறது.

எனக்குத் தெரியாது என்று சொல்ல உனது நாவிற்குப் பயிற்சியளி.

தெய்வ வணக்கத்தின் அறிகுறியே விருந்தோம்பல்.

உனது நண்பனுக்கு ஒரு நண்பன் உண்டு, உனது நண்பனது நண்பனுக்கு வேறு ஒரு நண்பன் உண்டு. ஆதலால், எச்சரிக்கையாய் இரு.

ஸ்தானம் மனிதனுக்குக் கௌரவத்தைக் கொடுப்பதல்ல; மனிதன்தான் ஸ்தானத்திற்குக் கௌரவம் அளிக்கிறான்.

ரோஜா மலர் முட்களிடையே தோன்றுகிறது.

பணப்பையில் இரண்டு பணம் இருந்தால் அதிக ஓசை உண்டாகும். அது நிரம்பியிருந்தால் ஓசை உண்டாகாது.

கற்றோர்கள் விவாதம் புரிவதனால் சாஸ்திர ஞானம் பெருகுகிறது.

உண்மை மிகப் பாரமாயுள்ளது. ஆதலால், அதைஎடுத்துச் செல்ல ஒருவரும் கருதுவதில்லை.

மனிதனால் அன்பு செய்யப்படுபவன் எவனோ, அவனே கடவுளாலும் அன்பு செய்யப்படுகிறான்.

படைச் சேவகர்கள் யுத்தம் புரிகிறார்கள்; அரசர்கள், வீரர்கள் என்று பெயரெடுக்கின்றார்கள்.

பாவச் செயலை இரண்டுமுறை செய்துவிட்டால், பின் அது பாவமாகத் தோன்றாது.

பள்ளிச் சிறுவர்களின் இனிய சுவாசத்தினாலே உலகம் இரட்சிப்பு அடைகிறது.

ஒரு பெண்ணையும் அழ வைக்காதே. ஏனென்றால், தெய்வம் அவள்விடும் கண்ணீர்த்துளி ஒவ்வொன்றையும் எண்ணி நோக்குகிறது.

இதயமே சிறந்த உபதேசி; காலமே சிறந்த ஆசிரியன்; உலகமே சிறந்த அறிவு நூல்; கடவுளே சிறந்த நண்பன்.

இத்தொகுதியைத்தான் தால்முட் என்று கூறுவது. நூலின் அளவை நோக்கினால், இதை ஒரு தனி நூல்-நிலையமென்றே கூறுதல் வேண்டும். மேற்கூறியவைகளெல்லாம் யூத ஜாதியார் நமக்குத் தந்துள்ள இலக்கியக் கருவூலங்களாகும்.

# 4. பாரஸிகம்

## காதலின் வளர்ப்புப் பண்ணை

**பா**ரஸிக தேசம் மதுவிற்கும் மதுரமான பாடல்களுக்கும் புகழ்பெற்றது; காதலின் வளர்ப்புப் பண்ணை. உமார் கய்யாம் என்ற நறுங்கனி முதிர்ந்து பழுத்தது இங்கேதான். இத்தேசத்தின் பண்டைப் புகழெல்லாம் இப்பொழுது மாய்ந்துவிட்டது. ஆனால், இங்கிருந்த 'ரோஜா' உத்தியானங்களின் நறுமணத்தை இன்றும் உலகம் நுகர்ந்து இன்புறுகிறது. இன்றும் இங்கே விளைந்த காதல்—மதுவை மனோபாவனையால் உலகம் பருகுகிறது. நமது அறியாமையைத் தெளிவித்து, பயங்கரமான உண்மைகளால் நம்மை அச்சுறுத்துகின்ற தற்கால உலகத்தே, இளைஞர்க்குரியதாய் இனிய நறுமணம் கமழ்வதாய் உள்ள நூற்பிரதி ஒருபொழுதும் முடிவடையாதபடி நீண்டு விரிந்து கொண்டே செல்லும் இடம் ஏதேனும் உண்டென்று கனவு காணக்கூடுமானால், அந்த இடம் பாரஸிக தேசம் தான்.

இத்தேசம், அழகு நிரம்பிய ஒரு பெண்ணணங்கின் சரீரம் கேவலம் நோயினால் சாயை மாத்திரமாய்த் தேய்ந்து விடுதல் போலச் சீர்கேடுற்றுவிட்டது. இதனைத் தற்காலத்து மக்கள் அனைவரும் நினைந்து நினைந்து அற்புதக் காதல்—சிந்தனையில் மூழ்கிக் கனவு காணுதற்குரிய ஓர் இடமாக அமைத்துவிட வல்லதாகும் இதன் இலக்கியம். இலக்கியம் ஒருவகை ரஸவாதம் என்பது உண்மையல்லவா? இனிமேல் என்றாவது பாரஸிக தேசம் மக்களுக்குக் கவிதையும் கதையுமாகிய புதிய மதுவை வார்த்துத் தரவல்லதா? இக்கேள்வி வேண்டாதது. வெகு காலத்திற்கு முன்னரே மதுக்கிண்ணம் ஒன்றை இத்தேசம் அளித்துள்ளது. இக்கிண்ணத்தில் உணர்ச்சி சுரந்து ததும்பிக் கொண்டிருக்கிறது. பாரஸிகம் உலகத்தில் அமைந்ததன் பயன் நிரம்பியாய்விட்டது.

ஆனால், முற்காலத்தே உமாரின் புகழ்ச்சிக்குரியவர்களாய் விளங்கிய இப் பாரஸிக மக்கள் எப்பொழுதும் இன்பத்தை நாடி உணர்ச்சிச் சுழலிலே மூழ்கியிருந்தவர்கள் அல்லர். இப்பொழுது ஆப்கானிஸ்தானம் என்று வழங்குகிற தேசம் பண்டைக் காலத்தில் பாக்டிரியா என்று அழைக்கப்பட்டது. உயர்ந்த மலைகள் செறிந்தது இந்தப் பிரதேசம். உழைத்து வாழ்தற் பொருட்டு இங்கிருந்து கீழே இறங்கிப் பரவிவந்தனர் இம்மக்கள். ஆரிய மக்களைப்போன்றே இவர்களும் திடசித்த முடையவர்

களாய், அதிகாரத்தில் விருப்பமுடையவர்களாய், உயர்ந்த லட்சியங்களை உடையவர்களாய் இருந்தனர். உண்மையில், இவ்விரண்டு இனத்து மக்களும் நெருங்கிய இரத்த சம்பந்தம் உடையவர்களே; இருவகையினரும் ஆரிய மக்களினம் என்ற பெரு வகுப்பைச் சார்ந்தவர்கள். உயர்ந்த மேட்டு நிலமாய் அமைந்திருந்த ஒரே இடத்தில் இரண்டு இனத்தவர்களும் ஆதிகாலத்தில் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்களே. இப்பொழுது பால்க் (Balk)நகரம் விளங்குகிற இடத்திலே முன்பு பழையதாகிய ஒரு நகரம் இருந்தது. அந்நகரத்திலேதான் இவர்களுடைய அரசியலுணர்ச்சி முளைத்து நிலைப்பட்டு வளர்வதாயிற்று.

**பாரஸிக மொழி**

இந்தியாவில் புகழுடன் விளங்குகின்ற ஸம்ஸ்கிருதத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு மொழியை இவர்கள் பேசி வந்தார்கள். சில ஆராய்ச்சி-அறிஞர்கள் பழைய பாரஸிக மொழியை ஸம்ஸ்கிருதத்தின் உதவிகொண்டு பொருள் விளக்கம் செய்துள்ளனர். மேன்மேலும் வந்து மோதிக் கொண்டிருந்த மக்களினத்தவரின் தாக்குதலினாலோ, புதிய பிரதேசங்களைக் கண்டு பிடித்து பயன்படுத்த வேண்டும் என்ற அவாவினாலோ, மத வேறுபாட்டினால் நேர்ந்த பிளவினாலோ, ஆரிய இனத்தைச் சேர்ந்த இவ் இரண்டு பெரிய கிளைகளும் வேறுபட்டுப் பிரிந்து வெவ்வேறு வழியில் சென்று விட்டன. எதுதான் உண்மையான காரணமென்று இப்பொழுது நம்மால் அறியக் கூடவில்லை. ஆனால் கிறிஸ்து அப்தத்திற்கு 20-நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஒரு கிளை இந்தியாவின் காடடர்ந்த பிரதேசங்களில் புகுந்து தெற்கு நோக்கிப் பரவிற்று. மற்றொரு கிளை மேற்கு நோக்கிச் சென்று அங்கேயுள்ள பாரஸிக பீடபூமியை அடைந்தது. இப் புதிய வாழ்விடத்திற்குரிய பெயராகிய 'இரான்' என்பது ஆரிய இனத்தை அக்கிளை சார்ந்தது என்பதைத் தெரிவிக்கிறது. எவ்வாறு என்றால், இரான் என்பது ஆரியன் என்ற சொல்லின் வேற்று வடிவமேயாகும். இவ்விரண்டும் நிலம் என்று பொருள் படும். நிலத்தினின்றும் உணவு விளைத்து நுகர்ந்து இன்புற்று வாழ்ந்த மக்களினத்தை இரண்டு சொற்களும் குறிக்கின்றன.

**இவர்களது சமயம்**

பூர்விக இந்துக்களின் சமயம் உயர்ந்த தத்துவங்கள் அடங்கியது; ஆனால், இது நாளடைவில் கெட்டுவிட்டது. இவ்வாறு கேடுறுவதை இதனைப் போற்றி வந்த அந்தணர் களாலும், பௌத்தர்களாலும் தடுக்க முடியவில்லை. பாரஸிகரின் முன்னோர்களது சமயம் இவ்வாறு கெட்டுவிடவில்லை. பல நூற்றாண்டுகளாக, தனது பண்டையியல்பு கெடாது இச்சமயம் விளங்கியது. இந்தியாவிற் போலப் பலவீனத்தை உண்டுபண்ணும்

பருவநிலைமை இவர்களைப் பாதிக்கவில்லை. வெப்பப் பிரதேசங்களில் மேன்மேலும் நன்கு செழித்துப் பரவும் மரஞ்செடி கொடி முதலியனவும் இவர்களுக்குத் தொந்தரவு கொடுத்து வருத்தவில்லை. ஆகவே, இந்த இரானிய சம்சாரிகளுக்குப் பூர்விக இந்தியர்களைப் பீடித்து வந்த பல மனப்போக்குக்கள் இல்லாமற்போயின. உலகம் துக்கமயமானது; எல்லாவற்றையும் விதியொன்று ஆட்டுவிக்கிறது; கர்மபரராயிருத்தலைக் காட்டிலும் தியானபரராய் இருத்தலே மேலானது; என்பன போன்ற கருத்துக்கள் இவர்கள் மனத்தில் இடம் பெறவில்லை.

இவர்களது சமயமானது மற்றச் சமயங்களைக் காட்டிலும் மிக எளிய கொள்கைகளை உடையதாயிருந்தது. நன்மை செய்தல், உலக மக்களுக்குச் சேவை புரிதல் என்பவற்றையே முக்கிய அம்சமாக இவர்களது பக்தி-நெறி கொண்டிருந்தது. ஆனால், இறைவனிடத்தும், அவன் அருளியன என்று கருதப்படும் திருவாக்குக்களிடத்தும் மக்கள் கொள்ளும் மனப்பான்மை இயற்கையில் உள்ள வெப்பதட்ப நிலைமைகளினால் பெரிதும் பாதிக்கப்படும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### இவர்களது கடவுள் கொள்கை

ஆரிய மக்களுள் ஒரு பகுப்பினரான இப்பாரஸிகரது ஆதித் தெய்வம் வருணனாகும். இத்தெய்வத்தினிடத்தில் படைப்புக் கடவுளையும் படைக்கப்பட்ட உலகத்தையும் இவர்கள் ஒருங்கே கண்டு வணங்கி வந்தார்கள். ஒருவேளை பூர்வ இந்துக்களும் இதேவிதமான கொள்கையுடையவர்களாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் இக்கொள்கை, ஒருபக்கம் அனைத்தும் தெய்வ மயமே என்ற வழிபாட்டு நிலையாயும், மற்றொரு பக்கம் பல தெய்வ வழிபாடாயும் முடிந்து விட்டது. பாரஸிகர்கள் இதற்கு இடங் கொடுக்கவில்லை. வருணனாகிய பரம்பொருளின் குணங்களை ஏழு எனக்கொண்டு அவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனிக் கடவுளாகப் பாவித்தனர். வருணன் இவ்வாறு பகுக்கப்பட்டதனால், அவனுக்கு முன்னிருந்த ஏற்றம் குறைந்துவிட்டது; ஏழு தெய்வங்களுள் ஒருவனாக அமைந்துவிட்டான்.* இத்தெய்வங்களின் பிதாவின் பெயர் அதிதி என்பது. அதிதி தான் பரம்பொருள்.

இந்நிலையில், வருணனை அசுரமேஸ்தா அல்லது ஆர்மந்த் என்று அழைத்தார்கள். அவனோடுள்ள பிற தெய்வங்கள்

* வருணன் மேய பெருமணல் உலகமும் என்று தொல்காப்பியர் **(அகத் : 5)** கூறுவது அறியத்தக்கது.

அம்ஷஸ்பண்டுகள் (Amshaspunds) அல்லது அமரர்கள் அல்லது பரிசுத்தர்கள் என்று கருதப்பட்டனர். அகுரமேஸ்தாவுக்குப் பாரமார்த்திக விளக்கம் செய்யும் இயல்பு உண்டு என்று கொள்ளப் பட்டது. பாரமார்த்திக ஞானி என்று இவனைக் கூறலாம். ஞானத்தை உணர்த்துவதற்கு ஒளியை அறிகுறியாக இப்பாரஸிகர் கொண்டனர். இது எல்லாத் தேசங்களிலும் காணப்படுகிறது.

ஞானத்தை விளக்கை யேற்றி
நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை யொழிப்பர் போலும்
ஒற்றியூ ருடைய கோவே. (அப்பர், 4,45,3)

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (பூதத்தாழ்வார், 1)

அருள்வட்ட மாக அறிவு கதிராப்
பொருள்வட்ட மெல்லாம் விளக்கி — இருள்வட்டம்
மாற்று மறிவான ஞான வளரொளியான்
வேற்றுலிங்கம் தோன்றும் வெளிறு. (அறநெறிச். 67)

என்று நமது நாட்டுப் பெரியார்கள் ஒரு சிலரும் கூறியுள்ளார்கள். ஒளியின் பகை இருள். ஆகவே, இருள் அல்லது தீமைக்குரிய ஒரு கடவுளும் தோன்றலாயினன். அவன் பெயர் அங்க்ரா மைனியா (Angra-Mainya). இருளும் ஒளியும் எப்பொழுதும் முரண்படுவதுபோல், ஞானம் அல்லது நன்மை எப்பொழுதும் தீமையோடு போர் புரிந்து வந்தது. ஆனால், பாரஸிக பீட பூமியில் உள்ள இம்மக்களிடையே உலகத்தில் நன்மையே தீமையிலும் மிகுதிப்பட்டது என்ற மனப்பாங்கு பரவியிருந்தது. முடிவிலே அங்க்ரா-மைனியாவை அகுரமேஸ்தா வெல்வது உறுதி என்று கருதியிருந்தார்கள். ஆகவே, நன்மைதான் உலகில் ஆட்சி புரியும் என்று இவர்கள் துணிந்தனர்.

இறுதியில், பாரஸிக மக்களது அறிவு முதிர்ந்த நிலையிலே, உண்மையான ஞானமும் நன்மை புரியும் இயல்புந்தான் சமயத்தின் திரண்ட முடிபு என்ற கொள்கை தலைமைப்பா டெய்தியது. இதனால், பரஞான மூர்த்தியின் துணைவராய்க் கொள்ளப்பட்ட சிறு தெய்வங்கள் வாழ்விழந்துவிட்டன. தெய்வம் ஒன்றே உளது என்ற சிறந்த கொள்கை மேற் படலாயிற்று. மனமொழி மெய்களில் தூய்மையும், நன்மை புரியும் இயல்பும் உண்மையான பக்தியின் முக்கிய அம்சங்கள் என்றும், அமரத்துவத்திற்கு உபாயம் இதுவே என்றும் கருதினர்.

உலகம் பிருதுவி, அப்பு, தேயு, வாயு என்ற நான்கு பூதங்களாலும் இயன்றது* எனவும் இவற்றை அகுரமேஸ்தா சிருஷ்டித்தனர் எனவும், மக்கள் இவற்றை வணங்கவேண்டுவது அவர்களது கடமை எனவும் நம்பினர்.

இந் நாற்பெரும் பூதங்களிலே முக்கியமாகத் தேயு அல்லது அக்கினியின் முன்னர் மனிதன் வழிபாடு ஆற்ற வேண்டும். ஏனெனில், அக்கினிதான் ஒளி. அவ்வொளிதான் ஞான மூர்த்தியாகிய இறைவனைக் குறிக்கும் சின்னம். இவ்வாறாகப் பாரஸிகர்கள் அக்கினியை வணங்கும் கொள்கையுடையவர் ஆயினர். இவர்கள் நிலத்தில் உழவு முதலிய தொழில் செய்து வாழ்வதைப் பெருமை எனக் கொண்டிருந்தனர். இதனால் நிலத்தை உழுதுண்டு வாழ்தலுக்கு ஒப்பாக வேறொரு தொழிலும் இல்லை என்ற கருத்துப் பிறந்தது. நமது நாட்டில் வள்ளுவரும் இவ்வாறே கூறுகின்றமை,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (குறள், 1033)

என்ற திருக்குறளால் அறியலாம். உழுதல் முதலியன செய்வதில் ஊக்கம் குன்றியிருத்தல் பாவம் எனவும் கருதப்பட்டது.

உயிர் நீங்கியபின் பிணங்களைப் புதைத்தலும் சுடுதலும் கூடாவென்றே பாரஸிகரது சமயம் வற்புறுத்தியது. கழுகு, காகம் முதலியன இவற்றைத் தின்று அழித்துவிடும் என்று நினைத்து, உயர்ந்த மேட்டு நிலங்களில் பிணங்களை வைத்து விடுவர். இரான் தேசம் தனது சுதந்திரத்தை இழந்த பிற்பாடு, அங்கிருந்து சுமார் இருபது லட்சம் பாரஸிகர்கள் இந்தியாவிற்குத் தப்பியோடி வந்து இங்கே தங்களுடைய பழைய கொள்கைகளை விடாமல் அநுஷ்டித்து வந்தனர். ஆகவே, தற்காலத்திலும் பம்பாய் முதலிய பிரதேசங்களில் பிணங்களை வைத்துவிடும் மேட்டு நிலங்களும், அவற்றின் மேலாகக் கருமேகம் போல அடர்ந்து பரந்து நிற்கும் கழுகுக் கூட்டங்களும் பலவாய்க் காண்கின்றன. இம் மேட்டு நிலங்களுக்கு மௌன கோபுரங்கள் (Towers of Silence) என்ற பெயர் வழங்குகிறது.

---

* இதுபோன்ற கொள்கை பல நேசங்களிலும் காணப்படுகிறது. தொல்காப்பியரும்,

நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்

என்றனர். (மரபு. 91)

**சமயக் கொள்கை**

ஒவ்வொரு தேசத்துச் சமய சரித்திரத்திலும் அத்தேசத்து மக்களுடைய சமயக்கொள்கைகளை விளக்குவதற்கு ஞானாசாரியர்கள் தோன்றுவதுண்டு. புத்தர் இவ்வாறு தோன்றியவரே. சீன தேசத்தவருக்குக் கன்ஃப்யூஷியஸ் என்பவரும், எபிரேயருக்கு மோஸேயும் ஞானகுருவாகத் தோன்றியவர்களே. இவ்வாறே பாரஸிகர்களுக்கு ஜரதுஷ்டிரர் தோன்றினார். இவருடைய உபதேச மொழிகளை, இவர் இறந்ததற்கு வெகுகாலத்திற்குப் பின், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய தத்துவ ஞானிகள் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

இரான் தேசத்துக் கவிஞர்களும் புராண ஆசிரியர்களும் இவரைக் குறித்து எழுதியுள்ள நூல்கள் மிகப் பல. ஆனால், இவைகளெல்லாம் பெரும்பாலும் கதைகளே ஆகும். இவரைப் பற்றி உண்மையான சரித்திரம் ஒன்றும் இன்றுவரை நமக்குத் தெரியமாட்டாது. பாரஸிகரது கர்ண பரம்பரை வரலாற்றின்படி இவர் தமது வாழ்நாளில் பெரும் பகுதியையும் பண்டைப் பாக்டிரியாவில் பால்க் நகரத்திலே கழித்தனர். இவர் பிறந்த இடம் மெதியா (Media) தேசத்திலுள்ள ஷிஸ் (Shiz) என்ற நகரமாயிருக்கலாம். இவர் ஞானாசாரியராக விளங்கிய காலம் சுமார் கி. மு. 1000-த்தை அடுத்து இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்களிற் சிலர் கூறுகின்றார்கள். வேறு சிலர், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய கிரேக்க ஆசிரியர்கள் கூறியுள்ளனவற்றை அடிப்படையாகக்கொண்டு, கி. மு. 6-ம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்தவர் என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். இன்னும் சிலர் ஜரதுஷ்டிரர் என்பது ஒரு பொதுப்பெயரே என்றும், குறித்த ஓர் ஆசாரிய வமிசத்தினருக்கு இது வழங்கப்பட்டது என்றும், இவ்வமிசத்தினர்கள் மிக மேம்பட்ட ஒரு சமயக் கொள்கையை மக்களுக்கு உபதேசித்தவர்கள் என்றும் கூறுகின்றனர். இவர் இயற்றியனவாகக் கருதப்படும் மந்திரங்கள், பிரார்த்தனைகள் முதலியவற்றில் சில, சஞ்சார நிலைமையிலிருந்து (Nomadic Stage) மக்கள் நிலைத்த வாழ்வு தொடங்கி ஆடு, மாடு மேய்க்கும் கோகுல நிலைமையில் (Pastoral) புகுந்துள்ள காலத்தில் தோன்றியன என்று கொள்ளலாம் என்பர்.

**அவெஸ்தா**

இது எவ்வாறாயினும், ஆதிகாலத்துப் பாரஸிகர்கள் தங்களுக்குரிய அவெஸ்தா என்னும் வேதத்தை ஜரதுஷ்டிரர் அருளிச் செய்தார் என்று முற்றும் நம்பியிருந்தனர். ஆனால் இவர் இவ்வேதத்தை இயற்றினவரே அல்லர். கிறிஸ்துவைப் போலவே இவரும் எழுத்து வடிவில் ஒன்றையும் இயற்றி

வைக்கவில்லை. இவருடன் வாழ்ந்த உண்மையான சிஷ்யர்கள் இவர் பல காலங்களில் கூறியவற்றை அவ்வக்காலத்திலோ அல்லது இவரது மரணத்திற்குப் பின்போ கவனமாகக் குறித்து வைத்திருந்தனர் என்று கருதப்படுகின்றது. தற்காலத்தில் காதைகள் என்று சொல்லப்படுகின்ற துதிகள் (தோத்திரங்கள்) இந்த ஆன்ம ஞானி கூறிய வார்த்தைகளே என்று ஆராய்ச்சியாளர் துணிந்திருக்கிறார்கள். ஆகவே இந்தத் துதிகளும் விண்ணப்பங்களும் மிக முக்கியமானவை. மொழிநூல் முறையில், பாரஸிக மொழியின் ஆதி இலக்கியம் என்று இவற்றைக் கூறலாம்.

காலம் செல்லச் செல்ல, சமயபோதகராய் வந்தவர்கள் இவரது சமயக் கூற்றுக்களுக்கு மிக மிக விரிந்த வியாக்கியானங்கள் எழுதிக் குவித்துவிட்டார்கள். இந்த வியாக்கியானங்களுக்கு ஜென்ட் (Zend) என்று பெயர். இவ்வாறாக, ஜென்ட் அவெஸ்தா என்பது நூலும் உரையுமாகப் பெருகி விட்டது.

தற்காலத்துள்ள அவெஸ்தா ஆதியில் தோன்றியபடியே உள்ளதா? இதன் விடை பெரிதும் ஐயுறவிற்கு இடமானதே. இரானிய சரித்திரத்திலே ஜரதுஷ்டிரர் காலம் முதல் முகம்மதியர்கள் படையெடுப்புக் காலம் வரையிற் பலவகையான துன்பங்கள் நேர்ந்தன. இவ்வேதங்கள் அங்கும் இங்குமாகச் சிதறுண்டன. முழுவதும் ஒன்றாகக் கிடைப்பதும் சந்தேகமாயிருந்தது. ஆனால், கி. பி. 3-ம் நூற்றாண்டில் ஸஸந்த (Sassands) வமிசத்து அரசர்கள் அங்கங்கே சிதறுண்டு கிடக்கும் அவெஸ்தாப் பகுதிகளை ஒருங்கு தொகுக்கவேண்டுமென்றும், இத்தொகுப்புடன் சமய போதகர்களுடைய ஞாபகத்தில் இருந்த பகுதியையும் சேர்க்கவேண்டும் என்றும் கட்டளையிட்டு, அவ்வாறே செய்வித்தார்கள். இந்த வமிசம் கி. பி. 224 முதல் 641 வரை அரசு புரிந்துவந்தது. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகச் செய்த பெருமுயற்சியின்பேரில் இப்போதிருக்கும் நிலைமையில் அவெஸ்தா உருப்பெறலாயிற்று.

தற்காலத்தில் என்ன உருவில் இவ்வேதம் உள்ளது? பதினைந்து நூற்றாண்டுகளாகப் பாரஸிக ஜாதியாருடைய ஒழுக்கத்தையும் கருத்துக்களையும் சமயக் கொள்கைகளையும் நெறிப்படுத்திவந்த இந்த வேதத்திலே என்ன என்ன அமிசங்கள் உள்ளன? முதலாவது, அவெஸ்தாவில் யஸ்நா (Yasna) என்ற மிகப் புராதனமான பகுதி ஒன்று உள்ளது. யஸ்நா என்ற சொல்லிற்கு வேள்வியும் வணக்கமும் என்று பொருள். இதிலே காதைகளாகிய துதிகளும் கிரியை முறைகளும் காண்கின்றன. இரண்டாவதாக, விஸ்பெரெட் (Vispered) என்ற ஒரு பகுதி உள்ளது.

இதில் கடவுளர் அனைவர்க்கும் உரிய வணக்கங்களும் விண்ணப் பங்களும் இருக்கின்றன. மூன்றாவதாக, இந்த இரானிய வேதத்தில் யஷ்டா (Yashta) என்ற ஒரு பகுதி உள்ளது. இதில் இருபத்தொரு துதிகள் உள்ளன. இச்சொல்லிற்கு வணக்கம் என்று பொருள். கடைசியாக, வேண்டிடாட் (Vendidad) என்ற பகுதி உள்ளது. இது மிகவும் பிற்காலத்தில் தோன்றியது எனக் கருதப்படுகிறது. பேய் பிசாசுகளை ஓட்டுவதற்குரிய மந்திரங்கள் பெரும்பாலும் இதில் அடங்கியிருக்கின்றன. மேலான உயர்ந்த கொள்கைகளையுடைய ஒரு சமயமானது நாளடைவில் பேய் பிசாசுகளை ஓட்டும் கிரியைகள் அடங்கிய ஒரு சமயமாக மாறி விடுவதற்கு இது ஒரு தக்க உதாரணமாம்.

ஜரதுஷ்டிரரது அடிப்படையான சமயக் கொள்கைகள் மிகவும் பாராட்டத்தக்கவை. கீழ்வருவது இதற்குச் சான்று :

''பொருள்கள் எல்லாவற்றிலும் மிக்க அழகும், பெருமை யும் வாய்ந்தது தூய்மையே யாகும். இவ்வாறு, ஜரதுஷ்டிர ஞானியே, நீரே கூறியிருக்கின்றீர்'' : இவ் வார்த்தை களையே அகுரமேஸ்தா ஜரதுஷ்டிரருக்கு உபதேசித்து அவரைப் புனிதராக்கியுள்ளார். ஆன்மாவிற்கு அடுத்தபடி யாக உள்ளது தூய்மைதான்; இதுவே நன்மைகள் எல்லா வற்றுள்ளும் சிறந்தது. மனம் வாக்குக் காயம் என்ற திரிகர ணங்களாலும் மாசு மறுவற்றவனுக்கு இந்தத் தூய்மையையே மேஸ்தா அருளிச் செய்திருக்கிறார்.

இந்தக் கொள்கைதான் கி. பி. 8-ம் நூற்றாண்டில் அரபி யர்கள் வரும்வரையிற் பாரஸிகர்களுடைய ஒழுக்கத்தை நெறிப் படுத்தி வந்தது. தூய்மையின் ஒரு பகுதியாகிய வாய்மையைப் பற்றி வள்ளுவர்,

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (குறள், 300)

என்று கூறினார். இதனைக் காட்டிலும் உயர்ந்த கொள்கை வேறு உண்டா ?

**ஷாநாமா**

கி. பி. 9-ம் நூற்றாண்டளவில், பாரஸிகத்துப் பிரபு வமிசத்தினர்க்குத் தங்கள் முன்னோர்களது பெருமையை உணர்த்தும் பூர்விக சரித்திரமொன்று வேண்டுமென்னும் உணர்ச்சி உண்டாயிற்று. இவ்வகைச் சரித்திரம் இயற்றுதற்கு அரசர்களும், சிற்றரசர்களும், வள்ளல்களும் ஆதரவளிக்க முற்பட்டனர். இதன் பலனாக அரசாங்கத்தின் ஆதரவில் ஷாநாமா என்ற பெரியதொரு சரித்திரக் கவிதை தோன்றியது.

ஷாநாமா என்ற இப் பேரிதிகாஸத்தை கி. பி. 997-ல் கொராஸ்தானில் ஆட்சி புரிந்த ஸுல்தான் முகம்மத் என்ற அரசரது வள்ளன்மை காரணமாகவே பெர்தௌஸி என்று புகழ் மிக்க பெருங்கவிஞரால் இயற்ற முடிந்தது. இந்த ஸுல்தான் இல்லாமற் போனால் இவ் அரும்பெருங் காவியத்தை உலகம் இழந்திருக்கும். இதனை நோக்க, இவர் போன்றோர்கள் எத்தனை கொடுங்கோல் மன்னராயிருந்தாலும், இவர்களைப் பாராட்ட வேண்டும் என்றே நமக்குத் தோன்றுகிறது. ஷாநாமா என்பதற்கு அரசர்களைப் பற்றிய புத்தகம் என்று பொருள்.

இது மிக நீண்ட காலமாக முயன்று செய்த அதிசயிக்கத்தக்க ஒரு காவியமாகும். இந்நூலை இயற்றுவதற்கு எத்தனை ஆழ்ந்த ஆராய்ச்சி வேண்டும் என்பதைக் கவனித்தல் தகும். எத்தனையோ புராதனக் கதைகளைத் தொகுத்து ஒரு நெறிப் படுத்தவேண்டுவதாயிருந்தது. எத்தனையோ கர்ண பரம்பரை வரலாறுகளை ஆராய்ந்து முடிவு கட்டவேண்டியதாயிருந்தது. புழுதியில் புதைந்துகிடந்த எத்தனையோ சுவடிகளை வாசித்துப் பொருள் அறியவேண்டியதாயிருந்தது. இவ்வாறாகத் தொகுத்த விஷயங்கள் மலைபோல் குவிந்துவிட்டன. இவற்றை ஒன்றோ டொன்று தொடர்புள்ள சரித்திரமாக அமைப்பது எளிதான காரியமாகுமா? ஒரு பெரிய மேதையினுடைய அறிவொளி மட்டும் இதற்குப் போதியதன்று. ஞானிகளுடைய பொறுமையும் விடாப்பிடியும் வேண்டியனவாயிருந்தன. அஸாதி என்ற பெருங் கவிஞர் இதனை இயற்றுவதற்கு மறுத்துவிட்டார். தகிகி என்ற கவிஞர் இதனை இயற்றுவதற்கு முயன்றார்; ஆனால், தொடங்கும் முன்பாகவே கொலையுண்டார். பெர்தௌஸி என்ற கவிஞர் ராக்ஷஸ வேலை செய்து இக் காவியத்தை முற்றுவித்தனர்.

### பெர்தௌஸி

இக் கவிஞரது வாழ்க்கையே ஓர் அற்புத வரலாறாக உள்ளது. இவருடைய உண்மையான பெயர் அப்துல் காஸிம் மன்ஸுர் என்பது. இவர் துஸ் என்ற பழைய நகரத்தில் கி. பி. 911-ல் பிறந்தவர். இள வயதிலேயே தொன்மை-ஆராய்ச்சியாளராகவும் கவிஞராகவும் இவர் விளங்கினார். பழைய பாரஸிக வரலாறு களைச் செய்யுளில் அமைத்து வந்தார். தகிகி இறந்துவிட்டமை தெரிந்ததும் தமது தேசத்து வரலாறாகிய இதிகாஸத்தைத் தாமே எழுதி முடிக்க வேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டார். துஸ் நகரத்தை ஆண்ட சிற்றரசர் இவரை ஒருவாறு ஆதரித்து வந்தபோதிலும், ஸுல்தான் முகம்மத் அரசரின்

ஆஸ்தானத்திற்குச் சென்றாலல்லது தாம் மேற்கொண்ட பேரிலக்கிய முயற்சி முடிவுபெறாது என்று உணர்ந்தனர்.

நமது தமிழ் நாட்டில் பண்டைக் காலத்து அரசர்கள், வள்ளல்கள் முதலியோர்கள் இலக்கியச் செழிப்புக்குக் காரணமா யிருந்தார்கள். வடமொழியிலும் இங்ஙனமே விக்கிரமாதித்தன், ஹர்ஷ சக்கரவர்த்தி முதலினோரது ஆதரவில் இலக்கியங்கள் வளம் பெற்றுள்ளமை சரித்திர வாயிலாக அறியப்பட்டதே. பொதுப்பட நோக்குமிடத்து முற்காலத்திலே பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் அரசர்களுடைய ஆதரவினாலேதான் இலக்கியங்கள், இசை முதலிய கலைகள் செழித்து வளர்ந்தன என்று சொல்லலாம். இப்படியாக, மன்ஸூர் நினைத்தது தவறாகுமா ?

ஆகவே, ஸுல்தான் அரண்மனைக்கு இவர் சென்றார். ஆனால், அரசரைப் பேட்டி காண்பது எவ்வாறு ? இது ஒரு பிரச்சினையாய் இருந்தது. ஆஸ்தான முற்றத்திலே வந்திகர் களும், இச்சகம் பேசிப் பிழைப்போர்களும், அரசரை அண்டி வாழ்வோரும் மிகப் பலராக நெருங்கியிருந்தார்கள். அனுபவ மற்ற நாட்டுப்புறத்துக் கவிஞன் ஒருவன் அரசனது ஸமுகத்தை எவ்வாறு அடைய முடியும் ? தம்மைச் சுற்றியிருந்தவர்களிடம் தமது ஆசையை மன்ஸூர் தெரிவித்தனர். ஆனால் அவர்க ளெல்லாம் இவரைப் புரளி பண்ணி நகைத்தார்கள்.

மூன்று ஸம்ஸ்தான கவிஞர்கள், நாட்டுப்புறத்திலிருந்து வந்திருக்கும் இந்தக் கோமாளியோடு விளையாடிப் பொழுது போக்குவோம் என்று இவரிடம் வந்து, இவரது செய்யுள் இயற்றும் திறமையைச் சோதனை செய்தார்கள். பாரஸிக மொழியிலே எதுகை முறையில் மூன்றே சொற்களுள்ள ஓர் எதுகையை எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வோரடி யிலும் ஒவ்வொரு சொல்லை வைத்து, நான்காவது அடியைப் பூர்த்தி செய்யும்படி மன்ஸூரைக் கேட்டார்கள். அவர் சிறிதும் தயக்கமின்றிச் சரித்திர சம்பந்தமுள்ள ஓர் அரிய எதுகைச் சொல்லோடு முடித்து விட்டனர். கேட்ட கவிஞர்கள் ஆச்சரியப் பட்டார்கள். ஆனால் அவர்களுக்குப் பொருள் விளங்கவில்லை. மன்ஸூர் பொருளை விளக்கிச் சரித்திரத்தையும் கூறினார். அந்த நிமிஷத்திலிருந்து அவருடைய பெருமையைப் பாரஸிக உலகம் அறியத் தொடங்கிற்று. ஸம்ஸ்தான கவிஞர்கள் இவரை உடனே தமது அரசரது திருமுன்பில் அழைத்துச் சென்றனர். அங்கே வேறொரு வரலாறு பற்றிய பழம் பாட்டு ஒன்றைப் பாடி அதுபற்றி மிக விரிந்ததொரு பிரசங்கத்தைச் செய்தார். அரசர் மிகவும் திருப்தியடைந்து, தமது நாட்டுச் சரித்திரத்தை

இயற்றுதற்கென நியமிக்கப்பட்ட ஏழு கவிஞர்களோடு இவரும் சேர்ந்து நூலை முற்றுவிக்கவேண்டும் என்று உத்தரவிட்டார்.

இவருடைய அரிய கவித்துவ சிருஷ்டித் திறத்தைப் பெரிதும் வியந்த ஸுல்தான், ஒரு நாள் மன்ஸுர் என்ற இவரது இயற் பெயரை மாற்றிப் 'பெர்தௌஸி' என்ற புதுப்பெயரைச் சூட்டினார். பெர்தௌஸி என்பதற்குச் சுவர்க்கத்திற்கு உரியவர் என்பது பொருள். இவருடைய பாடற் சுவை சுவர்க்க இன்பத் தோடு ஒத்தது என்பது கருத்து. நாளடைவில் ஷாநாமாவை இயற்றும் பணி முழுவதையும் இவரே செய்ய வேண்டுமென்று ஸுல்தான் கட்டளையிட்டார்.

பெர்தௌஸி மிகவும் மகிழ்ந்து தமது நன்றியைப் பல புகழுரைகளால் வெளியிட்டனர். ஸுல்தானும் இவருக்கு ஈரடி யுள்ள செய்யுள் ஆயிரத்திற்கு ஆயிரம் பொன் நாணயம் வீதம் வெகுமதியளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டனர். பெர்தௌ ஸிக்கு இவ்வளவு பொருளை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. இதைப் பெற்றுக்கொள்வதற்கும் அச்சங் கொண்டார். இப்பொருள் முழுவதையும் செலவு செய்து தாம் பிறந்த துஸ் நகரத்தை ஆண்டுதோறும் சேதப்படுத்திவந்த பெரு வெள்ளத்திலிருந்து தடுப்பதற்கு ஒரு பேரணை அமைக்க வேண்டுமென்று தம் மனத்தில் கருதி வைத்திருந்தனர். இதற் காக, தாம் எடுத்துக்கொண்ட ஷாநாமா முடியும் வரையில் அரசரது பொக்கிஷசாலையிலேயே அவர் அளித்த பொன் நாண யங்கள் இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டனர். இது கவிஞருக்கு அநர்த்தமாய் முடிந்தது. மதப்பற்று மிகுந்த முகம்மதியர்கள் அவரை மதப்பிரஷ்டர் என்று குறை கூறினர். சபல புத்தியுடைய அரசரையும் இவர்மீது துவேஷம் கொள்ளும்படி அடிக்கடி தூண்டி வந்தனர். மற்றைய அரசர்கள் இவருக்குக் கொடுத்து வந்த வெகுமதிகளைக் கண்டு இவ்வரசர் பொறாமையுங் கொண்டார்.

**ஷாநாமா அரங்கேற்றம்**

முப்பது ஆண்டுகளாக அல்லும் பகலும் உழைத்து ஷாநாமாவை அறுபதினாயிரம் ஈரடிச் செய்யுட்களில் இயற்றி முற்றுவித்தனர். பெர்தௌஸி இப்போது வயது முதிர்ந்தவராய் விட்டார். தமது அரசரிடம் வந்து அவரது நம்பிக்கைக்குப் பாத் திரராய் அபிமானிக்கப்பட்டு வந்த அயாஸ் என்பவர் மூலமாக ஷாநாமாவை அரசரிடம் சமர்ப்பித்தனர். அரசர் முன்னிலையில் இப் பேரிதிகாசம் பெருஞ் சிறப்புடன் அரங்கேற்றப்பட்டது. அரசருக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. தமது நிதி மந்திரியை

அழைத்து யானைமீது அறுபதினாயிரம் பொன் நாணயங்கள் ஏற்றி இவருக்கு ஸம்மானஞ் செய்தனுப்பும்படியாகக் கட்டளை யிட்டார். ஆனால் நிதி மந்திரியின் உள்ளத்தில் கவிதைக்கு இட மில்லை. அறுபதினாயிரம் வெள்ளி நாணயங்கள் கொடுத்தால் போதும் என்று துராலோசனை கூறினான்.

நாணயங்கள் வந்து சேர்ந்தன. பொன் நாணயங்கள் வரு கின்றன. என்று எதிர்பார்த்திருந்த பெர்தௌஸி பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். அவமானம் தாங்க முடியவில்லை. நாணயங்களை ஏற்றிவந்த யானைப் பாகன் சென்றுவிட்டான். பாகனை மீண்டும் அழைத்து நாணயங்களைக் கொண்டுவந்ததற்கு மூன்றில் ஒரு பகுதியை எடுத்துக்கொள் என்று கூறினர்; தாம் தங்கியிருந்த மதுச்சாலையிலிருந்து ஒரு கிண்ணம் மது கொண்டு வரும்படியாகச் சொல்லி அதைக் குடித்துவிட்டு, மதுச்சாலைக் காரனுக்கு மூன்றிலொரு பங்கு நாணயங்களை வாரிக்கொள்ளக் கொடுத்தனர். அருகிலேயே பார்த்துக்கொண்டிருந்த ஸ்நான சாலைக்காரன் ஒருவனுக்கு எஞ்சியிருந்த நாணயங்களையும் தானம் செய்துவிட்டார். பின் தமது உயிருக்கு அபாயம் என்பதையும் கருதாதபடி முகமத் அரசருக்கு அவரைக் கடிந் துரைத்து, ஒரு கடிதம் எழுதினார். அவரை வாக்குமாறி என்றும் தாம் ஷாநாமா இயற்றியது பொருளின்பொருட்டு அல்ல என்றும் அக்கடிதத்தில் கண்டிருந்தது.

இக்கடிதத்தைக் கண்டதும் முகமத் தம்முடைய நிதி மந்திரியைப் பெரிதும் கோபித்துக் கொண்டார். கவிஞருக்குச் சேர வேண்டும் பொன் நாணயங்கள் கிடைத்துவிடும் நிலையில் இருந்தது. ஆனால் நிதி மந்திரி பொல்லாத சூழ்ச்சிக்காரன். பரிசு பெற்ற வெள்ளி நாணயங்களை வீணாகப் பலருக்கும் வாரி வழங்கி அரசரைக் கவிஞர் அவமானப்படுத்தினார் என்று புகார் சொன்னான். மேலும், சின்னாட்களில் மறந்துபோகும் இந்த அற்ப விஷயங்களில் மனத்தைச் செலுத்திக் கவலைப்பட வேண்டாம் என்றும் போதித்தான். இப் போதனையால், முகமத் அரசரது கோபம் முழுவதும் கவிஞர்மீது திரும்பி விட்டது. கவிஞரும் பயங்கொண்டு, ஸம்ஸ்தானத்தில் மீண்டும் புகல் புகுந்து அரசரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு செய்தபோதிலும், தம் அரசருடைய சபல குணத்தை நம்பக்கூடாது என்று பெர்தௌஸி நன்றாய்த் தெரிந்து கொண்டார். தாம் எழுதியவற்றுள் பல நூறு கவிதைகளைக் கிழித்தெறிந்தார். அரசர் நெஞ்சு அழன்று துடிக்கும்படியாக அவரைப் பழித்துக் கடிதம் எழுதி, அக்கடிதத்தை இருபது நாட்

களுக்குப்பின் அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தனர். மசூதியின் சுவர்களின்மீது தாம் அரசரை விட்டுப் போவதாக எழுதி வைத்து, பக்கிரி வேஷம் பூண்டு ஓடி மறைந்து விட்டனர். இவர் தலையைக் கொண்டுவருபவர்களுக்குத் தக்க வெகுமதி அளிக்கப்படும் என்று அரசர் பறைசாற்றுவித்தார். பாக்தாத் நகரத்திலுள்ள காலிப்வ் நமது கவிஞரைச் சிலகாலம் தம் ஆதரவில் வைத்திருந்தனர். ஆனால் முகம்மத் அரசர் இவரைத் தம்மிடம் ஒப்புவித்துவிடவேண்டும் என்று வற்புறுத் தவே, அந்நகரத்தை விட்டுவிட்டு கோகிஸ்தான் என்ற ஊரில் சரண் புகுந்தார். இந்த நகரத்தை ஆண்டுவந்தவர் பெர்தௌஸி யின் பாலிய சிநேகிதர். இங்கே சில காலம் அமைதியுடன் கழித்தார்.

**பெர்தௌஸியின் கடைசி நாட்கள்**

ஷாநாமாவின் புகழ் நாடெங்கும் பரவியது. முகம்மத் அரசரும் இப்பொழுது வயதுமுதிர்ந்த கிழவராய்விட்டார். இருவர் சார்பிலுமுள்ள நண்பர்கள் இருவரையும் சமாதானப் படுத்த வேண்டும் என்று முயன்றார்கள். இதன் பயனாக, பெர்தௌஸி தமது நகரத்திற்கு வரவேண்டும் என்று விரும்பினால் வரலாம் என்றும், தாம் முன் வாக்களித்ததைக் காட்டிலும் இரட்டிப்பு மடங்கான பொன் நாணயம் அவருக்குக் கொடுக்கத் தயாராயுள்ளாரென்றும் அரசர் அறிக்கை செய்தார். தமது எண்பதாவது வயதில் துஸ் நகரத்திற்கு மீண்டும் பெர்தௌஸி வந்து சேர்ந்தார். கி. பி. 1020-ல், முகம்மத் அரசர் தமது செயலுக்கு வருந்தியெழுதிய மன்னிப்புக் கடிதத்தோடும், வெகு மதியாக அவர் அளித்த அரசுக்குரிய அங்கியோடும், நூறாயிரம் பொன் நாணயங்களோடும் அவர் அனுப்பிய யானைகள் வந்து சேர்ந்தன. அந்தோ! அவைகள் வந்துகொண்டிருந்த சமயத்தே, பெர்தௌஸி மரணமாயினர்.

இதைக் கேட்டுப் பெருந் துக்கங்கொண்ட ஸுல்தான் பெர்தௌஸியின் புத்திரிக்கு இப் பொருள் முழுவதையும் கொடுக்க முயன்றார். ஆனால் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை; மறுத்துவிட்டாள். பெர்தௌஸியின் சகோதரி இப் பொருளைப் பெற்றுக் கொண்டு கவிஞர் விருப்பப்படி துஸ் நகரத்தைச் சுற்றி ஒரு பேரரணைக் கட்டி முடித்தாள். பெரிய வியாபார ஸ்தலம் ஒன்றையும் அங்கே நிறுவினாள்.

ஷாநாமா என்ற இராச பாரம்பரிய வரலாற்றைத் தற்காலத் தவர்கள் சரித்திரம் என்ற முறையில் ஒத்துக்கொள்ள மாட் டார்கள். அதிலே உண்மையாயிருக்க முடியாத பல அற்புதக் கதைகள் விநோதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால்,

பாரஸிகர்களுக்கு அவர்களுடைய தேசத்தின் பெருமையைக் காட்டுகிறது என்ற அளவில் அது சீரியதாய் அமைந்த ஒரு சரித்திரமேயாகும். அப் பேரிதிகாசத்திலேயுள்ள அறிவுரைகளும், நீதிமொழிகளும், மக்களது நீண்டகால அனுபவங்களைப் பிரதி பலித்துக் காட்டுகின்றன. உண்மையான சரித்திரமாயிருந் தாலும், அல்லது விநோதமான புனைகதையாயிருந்தாலும், அந்நூல் ஒரு பேரிலக்கியம் என்பதில் ஐயமே இல்லை.

இப் பேரிலக்கியத்தின் ஒரு பகுதிதான் ஸோரப் - ருஸ்தம். இதில் வரும் சரித்திரத்தைப் பலரும் அறிந்திருக்கலாம். இதனை மாத்யூ ஆர்நால்ட் என்ற பேராசிரியர் கவிதை வடிவில் ஆங்கிலத் தில் மொழிபெயர்த்து மேனாட்டினரிடையே பிரசித்தப்படுத்தி யுள்ளார். ஷாநாமாவின் பெருமை இவ்வாறு மேனாட்டிலும் அறியப்படுவதாயிற்று.

**உமார்கய்யாம்**

இங்ஙனமே வேறொரு பாரஸிகப் பாடலும் மொழிபெயர்ப்பு மூலமாக உலகப் பிரசித்தி அடைந்துவிட்டது. அது உமார்கய்யாம் என்ற கவிஞர் இயற்றிய ருபாயத் என்ற கவிதை நூலேயாகும்.

இக் கவிஞரின் பெரும் புகழ் நமது தமிழ்நாட்டிலும் பரவி வருகிறது. இவரது பாரஸிகப் பாடலைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழிபெயர்த்தது நமது பாக்கியம் என்றே கூறவேண்டும். தமிழ்நாட்டில் அவர் பெயர் என்றும் மங்காது ஒளிவிட்டுத் திகழும்படி செய்து விட்டார் நமது கவிமணி. ஆங்கில உலகில் ப்விட்ஜிரால்ட் என்ன மதிப்பைப் பெற்றுள் ளாரோ அம் மதிப்பு நம் கவிமணி அவர்களுக்கும் உரியது. இவர் மூலமாய் நமது நாட்டில் உமார்கய்யாம் ஓர் அற்புதமான மறு பிறவியை எடுத்துள்ளார்.

இரான் தேசத்துக் கவிஞர்களுள் உமார் ஒரு சிறந்த கவிஞர் என்றுகூடச் சொல்லமுடியாது. தம் காலத்தே இவர் பீஜ கணிதத்தில் ஒரு சிறந்த மேதாவியாகவும், ஜோதிஷத்தில் ஒரு நிபுணராகவும் புகழ் பெற்றிருந்தார். இவர் அராபி மொழியில் இயற்றிய பீஜகணிதம், மிகப் பலவாய்ப் பிரதிகள் செய்யப் பட்டு, பலராலும் கற்கப்பட்டு வந்தது. இவர் இயற்றியுள்ள முகம்மதியப் பஞ்சாங்கம் கணிதத்தில் இவருக்கிருந்த பெருந் திறமையைக் காட்டவல்லதென்பர். இவரது ஆழ்ந்த கல்வியறிவு முதலியவற்றையெல்லாம் தற்கால மக்கள் மறந்துவிட்டார்கள். மறவாது போற்றுவது எவற்றை என்றால், வாழ்க்கையைக் குறித்தும், அது பயனின்றி வறிதாயுள்ள தன்மையைக் குறித்தும் இவர் சிந்தித்து எழுதியுள்ளவற்றைத்தான். இவற்றிலே, லட்சக்

கணக்கான மக்களுடைய உள்ளத்தில் தோன்றும் சந்தாப உணர்ச்சி பிரதிபலிக்கிறது.

இக் கவிஞரது உண்மைப் பெயர் கியாதுடீன் அபுல்பாத் உமார். கி. பி. 11-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிஷபூர் என்ற நகரத்தில் இவர் பிறந்தனர். இவர் தமது பெயரோடு கய்யாம் என்பதையும் தாமே சேர்த்துக் கொண்டார். கய்யாம் என்பதற்குக் கூடாரம் செய்பவன் என்று பொருள். இத் தொழில் இவரது தந்தைக்கு இருந்ததுபோலும். இவர் பள்ளிக் கூடத்தில் வாசித்துக் கொண்டிருக்கும்போது, இவரது பள்ளித் தோழர்களாய் இருவர் இருந்தனர். இவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். தம்முள் யாரேனும் ஒருவர் உன்னத பதவியை அடைந்து செல்வர்களாய் விடுவார்களானால், அவர் மற்றை இருவருக்கும் உதவி செய்து, அவர்களைப் பதவியில் உயர்த்த வேண்டும் என்பதுதான் அந்த ஒப்பந்தம். வியக்கத்தக்க முறையில் ஒப்பந்தம் நிறைவேறியது. ஒருவர் ஒரு மாகாணத்தை ஆளும் பதவியைப் பெற்றனர். உடனே இவர் அரண்மனை ஸர்வாதிகாரப் பதவியைத் தம் தோழர்களுள் ஒருவருக்குக் கொடுத்தனர். உமாருக்கு அவரது கணிதப் பயிற்சி இடையீடின்றி நடைபெறவேண்டும் என்று கருதி, ஆண்டுதோறும் ஒரு பெருந் தொகையைக் கொடுத்துக் கவலையின்றி வாழச் செய்தனர்.

### ருபாயத்

இவ்வாறாகப் பணக் கவலை யாதொன்றும் இல்லாதபடி உமார்கய்யாம் தம்முடைய நீண்ட ஆயுளை, கணிதம் முதலிய சாஸ்திரப் பயிற்சியில் செலவிட்டு வந்தனர். இடையிடையே மக்களுடைய இம்மை, மறுமை முதலிய பொருள்கள் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து அற்புதமான செய்யுட்கள் பல இயற்றினர். இச் செய்யுட்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். ருபாயத் என்றால் நான்கடிச் செய்யுள் என்று பொருள். தமிழிலுள்ள நாலடியார் என்ற நூற்பெயரை இதனோடு ஒப்பிடலாம்.

### பாடல்களின் அடிநாதம்

இவர் சிந்தித்துக் கண்ட முடிவு இன்ப உணர்ச்சியை விளைக்கத் தக்கதன்று. இவர் பாடல்களிலே வாழ்வு முடிந்ததன்பின் மறுமையைக் குறித்து யாதும் உறுதியாகக் கூறமுடியாது என்ற கொள்கை தொனித்துக்கொண்டே இருக் கிறது. இவ்வுலகத்தில் உண்பதும், குடிப்பதும், சுகித்து வாழ்வதும் தான் கைகண்ட பலனோ என்று இவர் ஐயுறவு கொண்டனர். ஒரு சோக உணர்ச்சிதான் இவரது பாடல்களின் அடிநாதமாய் அமைந்துள்ளது.

இச் சோக உணர்ச்சியை இவரது அரிய கவிதை, வாசிப்போர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் புகுத்தி, நிலைபெறச் செய்ய வல்லது. எனினும் ஒரு சார் அறிஞர்கள் இச்சோக உணர்ச்சியில் ஈடுபடாது, ஒன்றிலும் நம்பிக்கையற்றவன் இகழ்ந்து நகையாடும் அடங்காச் சிரிப்பொலியையும், மது, மங்கையரின்பம், மதுரமான பாட்டின்பம் இவற்றை வற்புறுத்தும் உபதேச ஒலியையும் இவர் பாடல்களில் கண்டனர். ஆனால், ஆன்மாக்கள் துடிதுடித்து வருந்தும் துன்பநிலை இந்தப் பாரஸிகக் கவிதைகளிலே அங்கங்கே காணப்படுதல் உண்மை.

வந்த வந்த மனிதரெல்லாம்
    வளைவும் நெளிவும் கண்டென்னைச்
சந்த மில்லாப் பானையெனத்
    தள்ளி வைத்துச் சென்றனரால் ;

அந்த நாள்அக் குயவன்கை
    யாட்டத் தாலே நேர்ந்த பிழைக்கு
இந்த நாளில் ஏழை எனை
    ஏனோ குறைகள் கூறுவரே !

வழியிற் குண்டு குழிவெட்டி
    வலையுங் கட்டி மதுவுண்டு
விழவோர் விதியும் அந்நாளே
    விதித்து வைத்தென் கேடெல்லாம்
அழியாப் பாவம் அதனாலே
    ஆன விளைவென் றறைவாயோ ?
தெளியா துலகில் என்றென்றும்
    திகைத்து மறுகி நின்றேனே !

நன்மையும், தீமையும் ஒருங்கு வாழும் இடமாக நம்மைப் படைத்துவிட்டு, நாம் செய்யும் தீமைகளுக்கு நம்மை இறைவன் தண்டிப்பது நீதியாகுமா என்று கவிஞர் கேட்கிறார்.

யாது சொன்னாய் ? இன்னமுதம்
    ஏந்தி உண்ட கலமதனை
மோதி உடைக்கும் அறிவில்லா
    மூடன் எங்கும் உண்டுகொலோ ?
ஓதற் கரிய பேரருளால்
    உவந்து கண்ட உருவமதைத்
தீதென் றெண்ணிச் சினம் பெருகிச்
    சிதைக்கத் தெய்வம் துணிந்திடுமோ ?

### இன்ப துன்பங்கள்

வாழ்வின் ரகஸியங்களையெல்லாம் உமார் ஆழ்ந்து நெடுங் காலம் சிந்தித்துள்ளார். இன்ப துன்பங்களைக் குறித்து அவர் கூறுவதைக் கேளுங்கள் :

ஊனா ருடலம் இதுவீழின்
உண்டாம் வாழ்வின் நிலையறிய
ஆனா ஆசை மிகவேஎன்
ஆன்மா வினையான் வேண்டிநின்றேன்.
நானா வுலகும் நெடுநாளா
நாடியலைந்தே அது வந்து
'யானே சொர்க்கம் நரகமெலாம்'
என்றே கூறி நின்றதுவே.

துன்பம் வருதல் ஒருதலை என்பதும், அதனைத் தடுத்தல் இயலாது என்பதும் பின்வரும் செய்யுள் காட்டுகிறது.

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ ?
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ ?

### மரணத்தின் பின் ?

ஆனால் மரணத்தின் ரகஸியத்தையும் அதற்குப்பின், நிகழ் வதையும் குறித்து யாதும் தெரிய முடியாது என்கின்றனர் கவிஞர்.

மண்ணை வலமாய்ச் சுற்றிவந்தேன்;
வானும் அளந்து கணக்கிட்டேன்;
நண்ணும் வழியில் பலசிக்கல்
நாடி நன்கு விளக்கிவந்தேன்;
எண்ணும் மனிதர் தமையடையும்
இறப்பும் ஊழும் இவையென்று
திண்ணமாகச் சொல்ல எதும்
தெரியா திங்கே திகைத்தேனே

திட்டிக் கதவு தெரிந்ததடா !
திறவு கோலும் இல்லையடா !
கட்டித் திரையும் கண்டதடா !
கண்ணும் மயங்கி நின்றதடா !
ஒட்டிச் சிறிது நீ நானென்று
உரைத்த உரையும் கேட்டதடா !
நட்ட காலம் பின்னையடா !
நான்நீ யற்றுப் போச்சுதடா !

இவ்வாறு தெரியாததைத் தெரிந்தது போலப் பாசாங்கு பண்ணுவது உமாருக்கு வெறுப்பையே விளைத்தது. அறியாமையினூடே படாடோபமான வார்த்தைகளைப் பேசி நாம் நடிக்கிறோம். விஞ்ஞானம், தத்துவம் முதலியன எல்லாம் மறுமை பற்றிய அளவில் பயனற்றனவே.

அன்றென் இளமைப் பருவத்தில்
அறிவிற் சிறந்த புலவரையும்
நன்று சீலமுடைய பெரு
ஞானிகளையும் அடி பணிந்து
நின்று கேட்ட வாதங்கள்
நினைப்பின் அரிய ஆயிடினும்,
சென்ற வாயில் வழியேதான்
திரும்பி அந்தோ வந்தேனே !

ஞானிகளாவது பிற பேரறிஞர்களாவது இதற்கு ஒரு முடிவு சொல்லமுடியுமா? முடியாது. அவர்களை இயற்கை இகழ்ந்து சிரிக்கிறது.

கொற்ற மன்னர் முடிசூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றுங் கூகை ஆந்தையொடு
முதுபேய் வாழும் காடாமே !
வெற்றி வில்லை ஏந்தி முனம்
வேட்டை செய்த வேடன் கை
பற்றி நரிகள் இழுப்பதையும்
பாரில் கண்ணால் பார்ப்போமே !

ஆனால், மனிதன் செய்யக்கூடியது ஒன்று உண்டு. மரணத் தறுவாயிலே, மனத் திட்பத்தோடு, யாராலும் துணியமுடியாத அந்த மறுமையில் யாதுதான் உள்ளதென அறிய, அவன்

தைரியத்தோடு செல்லக்கூடும். இவ்வாறு செல்வது அவனிடத்துள்ள தெய்வத் தன்மையை வெளிக்காட்டுகிறது.

வாழ்வைக் கடந்து மறுகரையில்
வந்து சேர்ந்த ஒருவனைத்தன்
சூழ்வல் கண்ணால் எமன் நோக்கிச்
சுருக்காய் வந்தோர் கிண்ணமது
'ஏழை, உண்' என் றேந்திடவே
இன்னா மதுவென் றுணர்ந்துமவன்
'கோழை யன்று, குடிப்பன்' எனக்
கூறி நிமிர்ந்து நின்றனனே.*

ஆனால், இந்த மண்ணுலகத்திலே எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி ஏன் நமக்கு உண்டாக வேண்டும்? மண்ணுலகத்திற்கு அப்பால் ஏன் அத்தனை ரகஸியம் சூழ்ந்து கொண்டிருக்க வேண்டும்? எல்லாம்வல்ல இறைவன், அவரது கருத்தை நமக்கு உணர்த்தி, நம்மையும் நமது ரகஸியத்திற் பங்கு கொள்ளச் செய்திருக்கக்கூடாதா? நாம் இந்த உலகத்தில் பிறக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டோமா? இதை விட்டு நீங்க வேண்டும் என்று சொன்னோமா? இல்லை. நம்மை எங்கிருந்தோ இவ்வுலகில் தள்ளி, இங்கும் அங்குமாக அலைத்து இழுத்துச் சிறிதும் ஈவு இரக்கமின்றி நம்மை வெளியே ஏன் எறிந்துவிட வேண்டும்? இதை நினைத்த உடனே நமது உள்ளத்தில் துக்கம் பீறிட்டெழுகிறது.

என்னைக் கேளா தெங்கிருந்தோ
இங்கே தூக்கி எறிந்திட்டான்;
என்னைக் கேளா தின்னுமவன்
எங்கே தூக்கி எறிவானோ?
என்ன செய்வேன்? இக் கொடுமை
ஏழை உள்ளம் மறந்தொழிய
வன்னக் கிளியே ஒரு கிண்ணம்
மதுவை ஊற்றித் தருவாயே.

எல்லாம் இங்கோர் சூதாட்டம்;
இரவும் பகலும் மாறாட்டம்;
வல்லான் விதியே ஆடுமகன்;
வலியில் மனிதர் கருவிகளாம்;
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்;
ஜோடி சேர்ப்பான், வெட்டிடுவான்;
செல்லா தாக்கி ஒவ்வொன்றாய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்.

---

* இச் செய்யுள் என்னால் பாடப்பெற்றது. மற்றை 'உமார்கய்யாம்' செய்யுட்களெல்லாம் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாடிய நூலிலுள்ளன.

இறைவன் தலையிடாதபடி நம்மையே இச் சூதாட்டத்தைத் தீர்த்துக் கொள்ளும்படி விட்டிருப்பானானால், திருப்திகரமான ஒரு முடிபைத் தேடியிருப்போமல்லவா ?

அன்பே யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்,
துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப் பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ ?

இந்நிலையில் மனிதன் என்னதான் செய்யக் கூடும்? மது பானம் செய்து அறிவை மயக்கி அதில் மூழ்கிக் கிடப்பதுதான் அவன் செய்யக்கூடியது. உறுதியாக ஒன்றுதான் உள்ளது. அது யாது என்றால் நிகழும் நிமிஷம் தான். வாழ்வு சிறிது காலம் தான் ; முடிவு நெருங்கி வருகிறது. அந்தக் காலத்தை வீண் போக்காது இன்ப நுகர்ச்சியில் கழித்தல் வேண்டும். புகழ் வேண்டாம் ; செல்வம் வேண்டாம் ; அதிகாரம் வேண்டாம். இந்திரிய சுகங்களை இப்பொழுதே, சக்தி இருக்கும்வரை, கைப் பற்ற வேண்டும். இந்த உபதேசத்தில் வாழ்விற் காணும் தோல்வியும் துன்பமும் இவற்றை மூழ்கடிப்பதற்கு வேண்டும் எக்களிப்பும் தெளிவுறுத்தப்படுகின்றன.

ஒழிந்த பாழில் ஒரு கணமாம் ;
உயிர் வாழ் உலகில் ஒரு கணமாம் ;
மழுங்கு விண்ணின் மீன்க ளெல்லாம்
மங்கி மங்கி மறைந்தனவே ;
அழிந்த பாழின் உதயங்கண்டு
அறியச் செல்வோ ரனைவருமே
எழுந்து நின்றார், கண்டிலையோ !
எழுவாய் ! எழுவாய் ! எழுவாயே !

வாராய் நண்பா, வருத்த மெனும்
வாடைக் காலப் போர்வையினை
நேரா வருமிவ் வசந்த மெனும்
நெருப்பில் வீசி எறிவாயே ;
தேரா வாழ்வின் பறவை இனும்
செல்லுந் தூரம் சிறிதேயாம் ;
பாராய் ! பாராய் ! பறவை அதோ
பறக்கச் சிறகும் விரித்ததடா !

மண்டும் சமய வாதிகளின்
வாயை மூடச் செய்வ தெது ?
அண்டும் மனித வாழ்வினிலே
அமர வாழ்வு தருவதெது ?
கண்டு மறவாக் காட்சிகளோர்
கணத்திற் காட்ட வல்லதெது ?
உண்டு மகிழும் மதுவல்லால்
உலகில் வேறோர் பொருளுண்டோ ?

மதுவில் மகிழ்ந்த மக்களுக்கு இறுதிக்காலம் வரும்பொழுது அவர்கள் சூனியத்தைச் சந்திப்பதற்குச் செல்லலாம். இங்கே வாழ்ந்து தயங்கிக் கொண்டிருப்பவர்கள் மதுக் கிண்ணத்தில் ஒன்றுமில்லாது உறிஞ்சிக் குடிக்கும் வரையில் உயிர் தாங்கட்டும். வாழ்வின் ரஸத்தை முழுதும் நுகர்ந்து அதைச் சக்கையாகச் செய்துவிடட்டும்.

**வாழ்வு பற்றிய கொள்கை**

வாழ்வு பற்றிய இக்கொள்கை நம் மனத்தைக் கவர்கிறது. ஆனால், இது வெகு அபாயகரமாகவும் உள்ளது. உய்யும் நெறிகாணாது தவிக்கின்ற ஒரு மனப்பான்மையிலிருந்து இக் கொள்கையைப் பின்பற்றினால், உலக மக்கள் மிருகப் பிராயமாய் முடிந்து விடுவார்கள். நாகரிகமும் மக்களுடைய இன்பமும், தனக்குரிய பொறுப்பை உணராதிருக்கும் ஒருவனது மனநிலையை அடிப்படையாகக்கொண்டு, பிறப்பன அல்ல.

என்றாலும், உமார்கய்யாம் சில சில உண்மைகளின் அடி நிலத்தைத் தொட்டு விடுகிறார். இவ்வுலகத்திலே நம்மை மயக்கி ஈடுபடும்படியாகச் செய்கின்ற அற்பப் பொருள்களுக்கு நாம் முயன்று வருவதைக் கண்டு உமார் நகையாடுகிறார். உலகத்துள்ள சமயங்கள் ஒவ்வொன்றிலும் இவ்வுண்மை வெளியிடப் பட்டுள்ளது. ஆனால் 'மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் பொழுது இறைவனை நினைக்க மறந்துவிடாதே' என்று இச் சமயங்கள் வற்புறுத்துகின்றன.

வாழ்க்கைத் தத்துவத்தைக் குறித்து, உமார் கய்யாம் கொண்டுள்ள கொள்கை எவ்வாறாயினும், அவரது கலையுணர்ச்சி அதியற்புதமாக உள்ளதென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். விஷயங்களைச் சுருக்கிக் கூறும் பொழுது உண்மையில் ஒளி பரவும்படி செய்யும் ஆற்றல், உண்மையைக் காணும் உள்ளுணர்ச்சி, பலவேறு சிந்தனைகளை மனத்திலே குறிப்பாய்த் தோற்றுவிக்கும் பாவனா சக்தி, உலகப் பொதுமையாயுள்ள

உணர்ச்சிகளும், கருத்துக்களும், தம் கருத்துக்களை எதிரேற்றுக் கொள்ளும்படியாகச் செய்யும் ஆற்றல் : இவைகளெல்லாம் உமாரின் கவித்வப் பெருமையை நன்றாக உணர்த்துகின்றன. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் அழகிய கவிதையிலும் அப்பெருமை நன்றாகப் புலப்படுகிறது.

**நிஜாமி**

உமார்கய்யாத்தை அடுத்து, அற்புதவுணர்ச்சிக் கவிதை வகைகளை இயற்றிய பாரஸிக ஆசிரியர்களுள் தலைசிறந்த வராகிய நிஜாமியைக் குறித்து நாம் அறிதல் வேண்டும். இவர் தான் லைலி மஜ்னூன் என்ற உருக்கமும், துக்கமும் நிரம்பிய கதையை இயற்றியவர். இவரை உலக மகாகவிகளுள் ஒருவரெனப் பாரஸிகர்கள் போற்றுகிறார்கள். இவர் அலெக்ஸான்டர் நூல் என்ற கவிதை ஒன்றும் இயற்றியிருக்கிறார். இந்நூலின் உட்பொருள் அறியத்தக்கது. அலெக்ஸான்டர் நீல நதியின் உற்பத்தியைக் கண்டுபிடிப்பதற்கு முயன்று செல்லுகிறான். செங்குத்தான மலை ஒன்றின் அருகில் வந்துசேர்ந்தான். தன்னுடன் வந்த வீரர்களுள் சிலரை ஒவ்வொருவராக மலைக்கு மேல் அனுப்பி அங்கே உள்ளது யாது என்று தெரிந்து வரக் கட்டளையிடுகிறான். போனவர்களுள் ஒருவராவது திரும்பி வரவில்லை. கடைசியாக ஒரு முதிய வீரனை மலைக்கு மேல் போகச் செய்து, அங்கிருந்து அவனது மகனுக்கு அங்குள்ள காட்சிகளைப் பற்றிக் குறிப்பு எழுதி விட்டெறியும்படியாகச் சொல்லுகிறான். முதியவனும் அவ்வாறே செய்ய, மகன் திரும்பி வந்து ஒருவரும் வாராமற்போனதின் காரணத்தைத் தெரிவிக் கிறான். மலையின் உச்சியில் மிக அழகிய பிரதேசம் ஒன்றிருக்கிற தென்றும், அதனோடு ஒப்புநோக்குமிடத்து, அலெக்ஸான்டரது தலைநகர் நரகத்திற்குச் சமான மென்றும், அதனால்தான் ஒருவராவது திரும்பவில்லை என்றும் தெரிவிக்கிறான். இதனைக் காட்டினும் அலெக்ஸான்டருடைய கடுமையான ஆட்சிக்கு வேறு சான்று வேண்டுமா ?

**லைலி மஜ்னூன்**

மேலைச் செய்யுள் நூல் சரித்திரம் பற்றியது. காதற் பாடல்களிலேதான் நிஜாமி சிறந்து விளங்குகிறார். லைலி மஜ்னூன் என்ற கவிதையை மேலே குறிப்பிட்டேன். அது பாரஸிக மக்கள் அனைவரது உள்ளத்தையும் வசீகரித்து விட்டது. காதலன் காதலி இருவரும் பிரிக்கப் படுகின்றனர். லைலியின் விருப்பத்திற்கு மாறாக, அவளை வேறொருவனுக்கு அவளுடைய தந்தை மணம் செய்து கொடுத்துவிடுகிறான். எதிர்பாராத விதமாக, கணவன் மரணமடைகிறான். லைலி விடுதலை பெற்று,

மஜ்னூன் இருக்கு மிடத்திற்கு விரைந்து வருகிறாள். இருவரும் காதல் கரைபுரண்டோட ஒருவரை ஒருவர் நோக்கி ஈடுபட்டிருக்கின்றனர். தங்கள் பிற்காலத்துப் பெருவாழ்வை நினைத்து நினைத்து மகிழ்கின்றனர். இந் நிலையில் விதவையை மணம் புரியலாகா தென்ற அரபியச் சட்டம் திடீரென மஜ்னூனுக்கு நினைவு வருகிறது. காதலர் இருவரும் விலகி நிற்கிறார்கள். மஜ்னூன் லைலியைப் பார்த்தால், தனது மனம் வேறுபட்டு விடுமென்று கருதி, அவளிடமிருந்து விரைந்து நீங்கி ஓடிவிடுகிறான். லைலியும் தன்னுடைய தாய்வீட்டிற்குப் போகிறாள். காதல் வாழ்வையிழந்த துக்கத்தைச் சகிக்க முடியாதபடி அவள் இறந்து போகிறாள். இதைக் கேள்விப்பட்டு அவளுடைய பிரேதத்தையேனும் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் மஜ்னூன் திரும்ப வருகிறான். லைலியின் அழகிய சரீரத்தின் பக்கத்தில் விழுந்து புலம்பி மரணமடைகிறான்.

**கோஸ் ருஷிரீன் காவியம்**

இந்த லைலி மஜ்னூனின் கதையைக் காட்டிலும் உணர்ச்சி வேகம் மிகுதியாக வுள்ளது நிஜாமி இயற்றிய கோஸ்ரு ஷிரீன் என்ற மகா காவியமாகும். இதில் ப்வர்ஹாட் (Ferhad) என்ற ஒரு சிற்பி ஷிரீன் (Shireen) என்ற ஓர் ராஜகுமாரியைக் காதலிக்கிறான். ஆனால் இவளை நாடாளும் அரசன் தனது பட்டமகிஷி ஆக்க உறுதி கொண்டு, சிற்பியை எப்படியாவது தொலைத்து விடவேண்டுமென்று மனத்தில் எண்ணுகிறான். செய்து முடிக்கக் கூடாத ஒரு சிற்ப வேலையை அச் சிற்பிக்குக் கட்டளையிட்டு, அக் கட்டளையை நிறைவேற்றுவானானால் ஷிரீனை அவன் மணந்து கொள்ளலாமென்று கூறுகிறான். பெய்ஸிட்டூன் (Beysitoun) என்ற ஒரு பிரம்மாண்டமான மலையைக் குடைந்து, கால்வாய் ஒன்று நிருமித்து, கால்வாயின் இரண்டு கரையிலும் அழகிய சிற்பங்களைச் செய்ய வேண்டு மென்பதுதான் கட்டளை. சிற்பியும் ஒத்துக் கொள்ளுகிறான். தங்கள் காதல் அதற்கு வழிகாட்டுமென உறுதிகொண்டு வேலையைத் தொடங்குகிறான். பல ஆண்டுகள் கழிந்தன. மலையைக் குடையும் வேலையும் சிற்பங்கள் அமைக்கும் வேலையும் முற்றுப்பெற்றதும் சலவைக் கல்லினால் தளமிட்ட கால்வாயின் வழியாக நதி நீர் நிரம்பிப் பாய்கிறது. அதன் பக்கத்தில் அமைந்துள்ள சிலைகள் முதலிய வற்றைக் கண்டு உலகத்திலுள்ள சிற்பிகளெல்லாம் வியப்படைகிறார்கள். ப்வர்ஹாட் மிக மிகத் தளர்ந்துவிட்டான்; எனினும், கையில் சிற்றுளியோடு வெற்றிச் செருக்குத் தோன்ற நிற்கிறான். அப்பொழுது அரசனது சூழ்ச்சியால் ஒரு கிழவி ஓடிவந்து ஷிரீன் இறந்து விட்டாளென்று பொய்யான செய்தியைக் கூறுகிறாள்.

இடைவிடாது அல்லும் பகலும் பல ஆண்டுகளாக உழைத்து வந்ததன் பயன் இதுதானா என்று சிற்பி ஏக்க முறுகிறான். உலகமே முடிந்துவிட்டதாக அவனுக்குத் தோன்றுகிறது. 'ஷிரீன்' என்று அலறிக்கொண்டே ஒரு பாறைமீது ஏறி நின்றுகொண்டு கீழே விழுந்து மடிகிறான். இம் மரணத்தை நிஜாமி வர்ணிக்கும் திறம் கீழ்வருஞ் செய்யுட்களால் ஒருவாறு அறியலாம்.

பேசிலன் வார்த்தை யொன்றும்; பெயர்ந்திலன்; பாறைமீது
தீசெறத் தறைந்தான் போல நின்றனன்; திடீரென் றேன்று
வீசிய கைக ளாலே விண்ணினை வெறித்துக்காட்டி
மாசில்சிற் றுளியை ஆங்கே எறிந்தனன் வன்மை கொண்டே.

நிவந்ததோர் சிகரம் ஏறி நினைப்பரும் வேகத்தோடே
பவந்தனக் கிருப்பென்றெண்ணிப் பாய்ந்தனன்; விண்ணிற் [பாய்ந்து
அவந்தரு ஷிரீனென் றேங்கி அலறினன்; அலறி வீழ்ந்து
சிவந்தவெங் குருதி யோடச் சிதறினன் காதல் தீர்ந்தான்.

அலறின பாறைக் கூட்டம்; அலறின சிற்பமெல்லாம்;
அலறின குகைகள் ஏங்கி; அலறின ஆழ்ந்த பள்ளம்;
அலறின நதியின் துள்ளி; அலறின பறவைக் காடும்;
அலறினன் ஷிரீனென் றேங்கி; அலறின புவனமெல்லாம்.

இவ்வாறாக, சோகத்தில் முடியும் காதலும் விலக்க முடியாத விதியும் நிஜாமி இயற்றிய பாடல்களின் முக்கிய கதியாகும். காதலால் துன்புறாத மக்கள் உண்டா? ஆகவே கோடானுகோடி மக்கள் நிஜாமியை உமார்கய்யாம் என்ற கவிஞனைப் போலவே ஆழ்ந்த அன்போடு போற்றி வருகிறார்கள்.

இவ்வகைப் பெருங் கவிஞர்களே யன்றி, தத்துவ ஞானம் நிரம்பிய கவிஞர்களும் இந்த இரான் தேசத்துப் பீட பூமியில் தோன்றினமை சிறிதும் வியப்பல்ல. இத் தேசத்துமக்கள் இந்தியாவில் புகுந்த ஆரியமக்களின் இனத்தைச் சார்ந்தவர்கள்; மனுஷ்ய சரித்திரத்தில் மகோன்னத லட்சியங்களை மேற்கொண்ட இரண்டு பெரிய மதங்களை இவர்கள் தோற்றுவித்தவர்கள். வாழ்விற் பரபரப்பு யாதுமின்றி, மிக நீண்ட காலமாக ஆழ்ந்து அமைதியுற்றுச் சிந்தனை செய்வதிலும், பூத பௌதிகங்களைக் கடந்துள்ள நிலையை ஆராய்வதிலும், முழுமுதற் கடவுளின் இயல்புகளைக் குறித்து விசாரணை செய்வதிலும் இவர்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தவர்கள். பின் வியப்பிற்கு இடம் ஏது!

**ஸாதி**

இத்தேசத்தில் தத்துவஞானமும், கவிதை யுணர்ச்சியும் சிறந்து விளங்கியவர்களுள் மிக மேம்பட்டவர் ஸாதி என்பவர். இவர் ஷீராஜ் நகரத்தில் கி. பி. 1184-ல் பிறந்தார். பாக்தாத்* (Bagdad) கல்லூரியில் கல்வி பயின்று தமது நாற்பதாவது வயது வரையில் கல்லூரிப் பேராசிரியராகப் போதித்து வந்தார். பின்னர், செங்கிஸ்கான் தனது கொடிய சேனா சமூகத்தோடு அட்டகாசஞ் செய்து படையெடுத்து வந்தான். நகர மக்க ளெல்லாம் ஓடலாயினர். ஸாதியும் ஓடித் தப்பினர்; எகிப்திலும், ஐரோப்பாவிலும், இந்தியாவிலும்கூட இவர் திரிந்து வந்தனர். கல்வியிலும் பண்பாட்டிலும் சிறந்து, கஷ்டப்பாடு என்பதை அறியாது வாழ்ந்துவந்த ஸாதிக்குத் தமது வாழ்வு கசந்துவிட்டது. கடைசியாக, பாலஸ்தீனத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கே இருந்த சிலுவைப் படையாளர்கள் இவரைப் பிடித்துத் தாங்கள் இயற்றிவந்த கோட்டை மதிலுக்குச் செங்கல்லும் கல்லும் உருப்படுத்தும் கொத்து வேலைப் பணிக்கு ஆளாக்கினர்.

சில காலங் கழித்து ஒரு முகம் மதியத் தனிகர் அங்கு வர நேர்ந்தது. இரான் தேசத்தில் கல்வி முதலியவற்றில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாது விளங்கிய ஸாதி இப்போது மண் குழைத்துச் செங்கல் உருப்படுத்துவதை அவர் கண்டதும் மிக்க துயரமடைந்து சிலுவைப் படையிலிருந்த ஆங்கிலர், பிரெஞ்சு மக்களிடத்தில் விஷயத்தைத் தெரிவித்து மன்றாடினர். முடிவிலே அத் தனிகர் வேண்டிய தொகை கொடுத்ததின் பேரில் ஸாதிக்கு விடுதலை கிடைத்தது. 'அலெப்போ' (Aleppo) நகருக்கு வந்து, அங்குள்ள தலைவன் ஒருவனது இல்லத்தில் இவர் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், இந்த அமைதியான வாழ்வு நீடித்து நிற்கவில்லை. தலைவனது மகள்மீது இவர் காதல் கொண்டனர். அவள் மிகுந்த அழகுள்ளவள் ; ஆனால் ஒரு பிய்ச்சுப் பிடுங்கி, வாயாடி. இருவரும் மணமுடிந்து தாம்பத்திய வாழ்க்கை தொடங்கினர். தமது பத்தினியின் மூர்க்கத்தாண்டவம் ஆரம்பமாயிற்று. இதற்கு முன்பும் ஸாதி மனைவிமாரின் கொடுமையை அனுபவித்தவரே. மனைவியரைக் குறித்தும் பெண்களைக் குறித்தும் இவர் எழுதி யுள்ளவை ஆழ்ந்த அனுபவத்திலிருந்து வெளிவந்த ருசிகரமான கூற்றுக்களாகும். இந்த அநுபவங்களுக்கிடையில் கிறிஸ்து

---

* இந்நகர்ப் பெயரை 'வகுதாபுரி', 'வகுதை' எனத் திரித்துக் காயற்பட்டணத் திற்குப் 'பல்சந்தமாலை' என்று தமிழ் நூல் வழங்கியுள்ளது (களவியற் காரிகை, 169).

சமயத்திலும் ஈடுபட்டுப் பக்குவமெய்திய மனமுடையராய் நூற்றிருபது ஆண்டு வாழ்ந்தனர் என்று கூறுகின்றனர். ஆனால், இறுதி இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு துறவிபோல் வசித்து, ஷீராஜ் நகரத்திற்குத் திரும்பி வந்து, அங்கே மரணமடைந்தார் என்பர்.

**புகழ்பெற்ற கவிதைத் தொகுதிகள்**

இவருடைய உணர்ச்சிக் கவிதைகள் (Lyrics) அவ்வளவாகச் சிறந்தவையென்று சொல்ல முடியாது. ஆனால் இவரது குலிஸ்தான்* (ரோஜாத் தோட்டம்), புஸ்தான்** (பழத் தோட்டம்) என்ற இரண்டு கவிதைத் தொகுதிகளும் பெரும்புகழ் எய்திவிட்டன. குலிஸ்தானில் இடையிடையே கவிதை விரவிய 188 சிறுகதைகள் உள்ளன. புஸ்தானில் பெரும்பாலும் செய்யுட்களில் அமைந்த ஒரு கதை பத்துப் பகுதிகளாகக் கூறப்படுகிறது. மக்களுக்கு நல்லொழுக்கத்தையும் ஞானத்தையும் போதிப்பது இந்நூல்களின் நோக்கமாயிருந்தாலும், வேடிக்கைக் கதைகளும் அங்கங்கே காணப்படுகின்றன. ஓர் உதாரணம் :

> கண்ணோயினால் வருந்திய ஒருவன் மிருக வைத்தியம் செய்யும் ஒருவனிடம் மருந்து வாங்கச் சென்றான். மிருக வைத்தியனும் மிருகங்களின் கண்ணுக்கு இடும் மருந்தைக் கொடுத்தான். நோய் முற்றிக் கண்முழுதும் கெட்டுவிட்டது. நோயாளி நீதி ஸ்தலத்திற்குச் சென்று முறையிட்டான். 'பரிகாரம் யாதும் கொடுக்கத் தக்கதில்லை. ஒருவன் மிருகமாயிருந்தாலல்லாமல், மிருக வைத்தியனிடம் கண்ணோய் மருந்துக்குச் செல்லமாட்டான்' என்று நீதிபதி தீர்ப்பு அளித்தார்.

இது போன்ற கதைகளினால் அல்ல ஸாதியின் உண்மையான பெருமை நிலைத்திருப்பது. பொருள்களின் அடிப்படையான உண்மைக் காட்சி, பரந்துபட்ட உலகியல்-அறிவு, அனுபவ ரீதியான தத்துவவுணர்ச்சி, உலகில் ஒரு சிலர்க்கே வாய்ப்பதான மெய்ஞ்ஞானம், ஆழ்ந்த கருத்து, சுருங்கச் சுவைபடவுரைக்கும் கட்டுரை வன்மை: இந்த அம்சங்களில் இவர் மிக்க பெருமை எய்தியவர்.

எல்லாவற்றிற்கும் காரணம் உளதென்று இவர் நம்பியவர். உலகில் ஒன்றும், ஒருவரும் — குற்றவாளியானாலும் சரி, வாழ்க்கையில் நொறுங்கியவனானாலும் சரி— தள்ளுபடி யில்லை என்ற கொள்கையினர்.

---

* Gulistan. ** Bustan.

பூவும் புல்லும் சேர்த்திட்டுப்
புனைந்த மாலை யதுவென்று
மேவும் வாயில் மீதாக
விளங்கக் கண்டேன், கண்டேனே!
'விலையில் அற்பப் புல் இங்கே
மேவின் அதற்குப் பொருளுண்டோ!
இலையி னூடே மலர் தோன்றும்
இனிய காட்சி பழுதாமே!
தெய்வம் வாழும் பூங்கோயில்
சிறிய பேய்தான் வாழிடமோ!
மெய்யி னூடே பொய் கலக்க
விதியும் உண்டோ!' என்றேனே.
புல்லும் கண்ணீர் வடித்துமிகப்
புலம்பிப் 'பொறுக்க' எனக்கூவி
'ஒல்லும் பழைய நண்பர்களை
ஒதுக்கார் நல்லோர் இது திண்ணம்.
அழகும் இல்லை மணமும் இலை
ஐய, உண்மை யாயினும் நான்
எழில்சேர் இறைவன் பூம்பொழிலில்
இனிது வளர்ந்தேன்' என்றதுவே.

கீழைத் தேசங்களில் வாழ்ந்த மக்களது உள்ளங்களை இவர் கவர்ந்துவிட்டதுபோல, மேலைத் தேசத்து மக்களின் உள்ளங்களையும் இவர் கவர்ந்து வருகிறார். இவரது சமாதி பழைய ஷீராஜ் நகரின் அருகில் உள்ளது. இங்கே ஆயிரக்கணக்கான மக்கள் யாத்திரை செய்து வருகிறார்கள்.

**கவிஞன் ஹாப்விஸ்**

ஸாதி பிறந்து இறந்த ஷீராஜ் நகரத்திலேதான், இரானில் உணர்ச்சிக் கவிதைகள் இயற்றுவதில் இணையற்றவராக விளங்கிய ஹாப்விஸ் 14-ம் நூற்றாண்டில் தோன்றினார். இந்தியாமீது படையெடுத்துவந்த தாமெர்லேன் என்பவன் எவ்வளவு கொடியவன் என்பதை நாம் அறிவோம். இவன் இரானைப் பிடித்து அடக்கியாண்டு வந்தனன். ஒருமுறை ஹாப்விஸ் கவிஞரைத் தன் முன்னே வரவழைத்து 'உன் கவிதைகளில் நகரங்கள் பலவும் உனக்கு உரியனவென்று ஏன் பொய்யாகப் பாடியிருக்கிறாய்? உன் கன்னத்திலுள்ள கறுப்புப் பாலுண்ணியைச் சீவிக் கொணர்பவனுக்கு ஸ்மர்க்கண்டிலும், பொக்காராவிலுமுள்ள நகரங்களைக் கொடுத்துவிடுவேனே!' என்று கோபதோடு

கூறினான். சிறிதும் மனத் தடுமாற்றமின்றி 'தாங்கள் கூறியது போன்ற கருணைச் செயல்களினால் தான் நான் இப்போது பரம ஏழையாக இருக்கிறேன்' என்று கவிஞர் விடையிறுத் தாராம். இந்த விடை தாமர்லேனை வசீகரித்துவிட்டது. விலை யுயர்ந்த வெகுமதிகளைக் கொடுத்துத் தனது ஆஸ்தான கவிஞராக இவரை இருக்கும்படி வேண்டிக்கொண்டான். ஆனால் ஹாப்விஸ் மறுத்துவிட்டார். ஊருராகச் சுயேச்சையாய்த் திரிந்து கவிதைகள் பாடுவதையே இவர் விரும்பினர்.

எவ்வகையான கவிதைகள் பாடினார்? முகம்மதிய சமய நியதிகளுக்குச் சற்றும் ஒவ்வாத முறையில், மதுவைக் குறித்தும் மங்கையரைக் குறித்தும் பாடினர். உணர்ச்சி ததும்பிய இப் பாடல்கள் பாரஸிக தேச முழுவதிலும் பரவிவிட்டன. பாமர ஜனங்களும், ஒட்டக மோட்டிகளும்கூட, இப் பாடல்களை இன்றும் பரவசமுற்றுப் பாடி மகிழ்கின்றனர். இளமையில் உலக இன்பத்தில் ஆழ்ந்து மூழ்கித் திளைத்தவர்கள் முதுமையில் விரக்தர்களாய் மாறிவிடுதலை நாம் அடிக்கடி காணுகிறோம். ஹாப்விஸ் கவிஞரும் தமது முதுமையில் முற்றும் மாறிப் புதிய வாழ்க்கையிற் புகுந்து, ஸூப்வி (Sufi) மார்க்கத்தை மேற் கொண்டனர். இந்த மார்க்கத்தினர் நமது நாட்டுச் சித்தர்களைப் போன்றவர்கள். தாம் பாடும் செய்யுட்களில் சமய சங்கேதங் களையும் ஞானப் பொருள்களையும் இரகசியப் புதை பொருள் களாக அமைத்துவிடுவார்கள். ஹாப்விஸ் கவிஞரும் இவ்வகைப் பாடல்களையே நிரம்ப இயற்றினர். ஆனால் அழகிலும் இன்பத் திலும் தோய்ந்த அவரது உள்ளம், எவ்வகையான ஞானப் பொருளிலும் இவ்விரண்டின் பல்வகைப் பேதங்களையே கண்டது. உதய காலத்து அழகிய செவ்வண்ணமும், மங்கையரது கன்னப் புறத்தில் நாணத்தால் உண்டாகும் செந்நிறமும், ரோஜா மலரின் நறுமணமும், மதுவின் இன்சுவையும், இங்ஙனமே பஞ்சேந்திரியங் களை இன்புறுத்தும் ஒவ்வொரு பொருளும் இக்கவிஞரது உள்ளத்தை வசீகரித்து உணர்ச்சி ததும்பும் பெருஞ்சுவைப் பாடல் களைத் தோற்றுவித்தன. இசை பாடும் பறவை யினங்களும், அழகிய மரஞ் செடிகளும், தண்ணிய சந்திரனும், பகல் வெய்யிலில் ஒளிர்ந்து அழகுறத் தோன்றும் இவரது மனோரம்மியமான நகரமும் இவரை மகிழ்வித்து இவரது கவித்வ சக்தியை இயக்கின.

முகம்மதிய சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய இக் கவிஞர் மதுவினாலும் மங்கையராலும் விளையும் இன்பத்தைக் குறித்து இவ்வாறாகக் கவிதைகள் இயற்றுவாரா? இந்த ஐயப்பாடு அறிஞர்களுக்கு உண்டாயிற்று. எனவே இவரது பாடல்களில் வியாக்கியாள கர்த்தர்களும் சமய வாதிகளும் உட்பொருள்கள்

காணத் தலைப்பட்டனர். எவ்வளவாக முயன்று கண்ட போதிலும், இவ்வுட்பொருள்களை இல்பொருள்களாகவே அறிஞர்கள் கருதுகின்றனர்.

மார்பில் ரோஜா மலர்மாலை;
மதுவின் கிண்ணம் நுரை சூடும்;
நேரும் திரைதான் முகந்தெரிக்கும்
நேரிழை அவளே எனக்குரியாள்;
யாரும் எனக்கு நிகரில்லை:
இப்புவி யாளும் பேரரசும்
சாரும் அடிமைத் தரமே, என்
தன்னோ டொப்புச் சாற்றிடினே.

மன்னுன் சாயல் மயில்நோக்கி
மகிழ்வோ டிரந்து தான்கொள்ளும்;
உன்நற் பவள இதழொன்றே
ஒப்பில் இனிமை எனக்களிக்கும்;
உன்னைச் சிறிது நீங்கிடினும்
உயிர்போந் துயரம் எய்தியொரு
சின்னஞ் சிறிய புகலிடந் தான்
தேடி யங்கே மறைவேனே.

ஊரை யாளும் அதிகாரம்
ஒன்றே போதும் என்பர்சிலர்;
பாரில் நிரம்பும் புகழொன்றே
பயக்கும் இன்பம் என்பர்சிலர்;
ஓரும் இவைதாம் விளையாட
உற்ற பொம்மை யளவேயாம்;
பேரைப் புகழ்ந்து பேசுவதால்
பெறுதற் குளதோ பயன்தானே?

உள்ளத் தின்ப வாரிதிநீ;
உன்னை எய்துவ தேவெற்றி;
கொள்ளற் கரிய ஆசியெலாம்
கொண்டேன் இன்றே உன்னாலே;
தெள்ளத் தெளிந்த இனியஇசை
சீரின் ஒலிக்கும் எனைச்சூழ்ந்து;
வள்ளத் தினிய மதுக்கொண்டுன்
மலர்க்கண் நோக்கி மகிழ்ந்திடுவேன்.

இவற்றால் புலனாகிறபடி சிற்றின்பப் பொருள்களில் மிக்க நாட்டமுடையவரா யிருந்தாலும், பேரின்பப் பொருளை இவர் மறந்துவிடவில்லை. ஆன்மா நித்தியவாசஞ் செய்ய வேண்டும் இடம் பரலோகம் என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். நிலையற்ற இவ்வுலகில் நிலையற்ற இந்தச் சரீரம் ஆன்மாவைப் பந்தம் செய்துவைக்கும் ஒரு சிறைக்கூடம் என்பதனையும் நன்றாக அறிந்திருந்தார். உலக இன்பத்தில் எவ்வளவு மூழ்கிய போதிலும் உள்ளூரத் தெய்வ நம்பிக்கையுடையவர் இக் கவிஞர்.

15-ம் நூற்றாண்டின் இறுதியில், கலையிலும் இலக்கியத்திலும் பாரஸிகம் தளர்வடையத் தொடங்கியது. சரித்திர ஆசிரியர்களும், நிகண்டுக்காரர்களும், இலக்கணக்காரர்களும், இலக்கிய அறிஞர்களும் சிலர் சிலர் தோன்றினர். இவர்களுக்குப் பேராதரவு அந்தத் தேசத்திலும் இந்தியாவிலும் இருந்தது. ஆனால் உண்மையான இலக்கியம் 16-ம் நூற்றாண்டுக்குப்பின் பாரஸிகத்தில் தோன்றவில்லையென்றே கூறலாம். அந்நாட்டில் சிருஷ்டி தத்துவமே தன் சக்தியை இழந்துவிட்டது போலும்.

**ஜாமி**

கடைசியாகத் தோன்றிய பெருங் கவிஞர் ஜாமி என்பவர். ஜாம் நகரத்தில் கி. பி. 1414-ல் இவர் பிறந்தார். இவரது இயற்பெயர் நூருத்தீன் அப்துர் ரஹ்மான் என்பது. இந் நீண்ட பெயரை விரும்பாமல், தமது ஊர்ப்பெயரால் ஜாமி என்ற பெயரையே இவர் மேற்கொண்டனர். வாதவூரர் என்று தமிழில் வழங்கவில்லையா? அதுபோல, ஹீராத் ஸமர்க்கண்ட் என்ற நகரங்களில் இவர் கல்வி பயின்று, கல்வியறிவிலும் மதிநுட்பத்திலும் பக்தியிலும் மிகச் சிறந்து விளங்கினார். பாரஸிகத்தில் ஒப்புயர்வற்ற பேரறிஞராக இவரை மக்கள் கருதினர். வேறு அடைமொழியின்றி ஆச்சாரியார் என்றே மக்கள் இவரை வழங்கலாயினர். ஸூஃபி சமயத்தினரின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர் வாழ்ந்தது ஸுல்தான் ஆபு ஸெயிட் (Sultan Abu Said) என்ற அரசனது ஸம்ஸ்தானத்தில். பற்பல தேசங்களிலிருந்தும் அரசர்கள் வந்து இவரோடு கலந்து ஆலோசனை செய்து செல்வர்.

இவர் இயற்றிய நூல்கள் 99 எனக் கணக்கிடப்பட்டுள்ளன. கவிதைகள், சமய நூல்கள், இலக்கணக் கட்டுரைகள், மொழிநூற் கட்டுரைகள் முதலிய பலவகைகளிலும் இவர் புகழ் படைத்துள்ளார். கல்வியிலும் நூல்கள் இயற்றுவதிலும் தமது காலத்தை அமைதியாய்க் கழித்து, 1498-ல் மரணமடைந்தனர்.

**ஏழு சிம்மாசனங்கள்**

இவரது நூல்களுள் 'ஏழு சிம்மாசனங்கள்' (Seven Thrones) என்று வழங்கும் ஏழு நீண்ட கவிதைகளே மிகச் சிறந்தன என்பர். இவற்றுள் ஏழாவது ஸாலொமன்-அப்ஸால் என்பது. இதனை எட்வர்ட் ப்விட் ஜெரால்ட் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மொழி பெயர்த்து ஐரோப்பிய மக்களுக்கு அறிவுறுத்தினர். ஆனால் ஜாமியின் மிகச் சிறந்த கவிதையாகக் கவனிக்கப்படுவது இவரது யோசேப் - ஜுலைக்கா. பைபிளில் வரும் 'யோசேப்பும் போத்திபாரின் மனைவியும்' என்ற சரித்திரமே இக்கவிதையில் அடங்கிய பொருள். இக்கவிதையில் 8000 அடிகள் உள்ளன.

ஜுலைக்கா என்பவள் தான் மணம் புரிந்த நாயகனைக் கைவிடுத்து அழகிற் சிறந்த வேறோர் இளைஞனைக் காதலிக்கிறாள். இக் காதல் தவறாக இருந்தாலும், விதியின் அமைப்பு என்றே சொல்ல வேண்டும்; தவிர்த்தற்கரிய ஆழ்ந்த உணர்ச்சி வேகத்தால் ஏற்பட்டது. ஒற்றுமையுணர்ச்சியுள்ள இரண்டு ஆன்மாக்கள் ஒன்று கூடும்படி செய்த தெய்வ நியமனம் என்றே இது கொள்ளத்தக்கது. எனவே, ஜுலைக்காமீது பழிசுமத்துவது தகுதியன்று. இவளைக் கைப்பிடித்த கணவன் இறந்துவிடுகிறான். பின்பு காதலர் இருவரும் மணந்து கொள்கின்றனர். ஜீவான்மா கைவல்ய மடந்தையை மணந்து கொள்ளும் ஐக்கியமே இக்கதையின் உள்ளுறை பொருளென ஜாமி கருதினராகலாம்.

அழகு தானொரு பஞ்சர மாகுமே,
   அதனுள் வாழுங் கிளியெனல் காதலே;
அழகு தானும் மணிவிளை பூமியே,
   அங்கொ ளிர்வது காதல் வயிரமே;
பழகி ரண்டும் பரம்பொருள் தன்னிரு
   பக்கம் சார்ந்துள பண்புறு தோற்றங்கள்;
உழுவ லன்பினில் ஒன்றினை யொன்றுதான்
   உற்ற ஜன்மங்கள் தோறும் மணக்குமே.

ஒன்றோ டொன்று கலந்திடும் விந்தையை
   உரைத்தலும் அரிதாகுமிங் கேவர்க்கும்;
ஒன்றி லுள்ள அணுக்களில் ஒவ்வொன்றும்
   உற்ற மற்றதன் ஒவ்வோ ரணுவிலும்
சென்று புக்குத் தழுவி முழுகியே
   தெய்வங் கொள்ளுங் கல்வியிற் சேருமே;
நின்ற பல்லுயிர்க் கும்உள இன்பங்கள்
   நேர்ந்திடும் நடு வாகி விளங்குமே.

இக் காதல் வாழ்வு வாழ்ந்த இருவருள் ஜுலைக்கா அழகின் திருவுருவம். இவளை எகிப்தின் பிரதம மந்திரி போத்திபார்க்கு மணம் புரிவித்தனர். ஆனால் இவளது மனம் இம்மணத்திற்கு இணங்கவில்லை. இரவில் கனவிலே பேரழகனான ஓர் இளைஞனைக் கண்டு விட்டாள். அவனை நனவிற் காணாமற் போனாலும், தன் இதயத்தை அவனுக்கு ஒப்புவித்து விட்டாள். சில காலத்திற்குப் பின்பு யோசேப்பு அடிமையாக விலை கூறப் பட்டான். ஜுலைக்கா அவனைக் கண்டதும் அவனே தனது கனவிற் காட்சியளித்தவனெனத் தேர்கின்றாள். பின்னர் விலை கொடுத்து அவனை வாங்கித் தன் அரண்மனையிற் சேர்த்துக் கொண்டனள். அவனது நினைவாகவே அவளுக்கு நாட்கள் சென்றன. ஒருநாள் தன் காதலை அவனிடம் வெளிடுகின்றாள்.

உளத்தை விழுங்கிய ஒப்பருங் காதலை
மெலத்தன் வாயால் விளம்பினள் ஜுலைக்கா ;
வார்த்தை யொவ்வொன்றும் வருந்தொறுங் கண்ணீர்
வார்த்தனள் மிகப்பல ; வளர்ந்தது துன்பம் ;
இளைஞன் அவளை இறையும் நோக்கிலன் ;
விளைவுறும் அச்சம் மிகப் பெரிதாதலின்
தாழ்த்துச் சென்னியைத் தாழ்த்துக் கண்களை
வீழ்த்தி நிலத்தை வெறிதே நோக்கிச்
சிந்தனைச் சுழலில் தியங்கி நின்றனன்.
பட்டும் சரிகையும் பயின்ற மெல்லணை
இட்ட சாயலின் மீதுதன் எழிலுரு
விளங்கும் ஓவியம் கண்டுமெய் விதிர்த்தனன் ;
மீட்டும்,
துளங்கி நோக்க ஜுலைக்கா நங்கை
தன்னரு காகத் தனிகிடந் தமர்ந்த
இன்னெழில் ஓவியம் எதிர்ந்தது, நடுங்கினன் ;
மெல்லணை நின்றும் மெலத்தன் கண்களை
வல்லிதின் மீட்டு, மனங் கலங்காது
அமைதியிற் கண்கள் அமர்ந்திட இடந்தான்
சுமைபெறு தூணில், சுவரில் கதவில்,
எவ்விடத் தேனும் உளதோ என்ன
அவ்விடத் தெங்கும் ஆய்ந்து நோக்கினன் ;
பவள இதழ்கள் பயக்கும் நகையொடு
அவளும் அவனும் காதலில் ஆழ்ந்து
நிற்கும் நிலையே நிகழ்ந்தது யாங்கணும் ;
கற்குஞ் சான்றாங் கடவுள் வைகும்
விண்ணினை நோக்க மென்மெல வுயர்த்திக்

கண்ணினை நேர்தலும் — கண்டது யாதோ ? —
ஆங்கும் காதலர் அன்புசெய் நிலையே ;
யாங்கும் காதலர் அன்புசெய் நிலையே !
உள்ளம் கனிந்தனன் யோசேப் ஒருகணம்
தள்ளரும் அன்புத் தனிக்கண் பார்வை
அருகுள ஜுலைக்கா மீதே அமர்த்தினன் ;
'பருதியி னொளிதான் பல்கிருள் அகற்றி
ஐயோ பகல்செய் தலர்ந்திடும் இனியே ;
எய்யா இதயத்து எண்ணிய கருமம்
இனிதின் முடியும் ஈண்டு' என ஜுலைக்கா
கனவை நனவாக் கருதத் துணிந்தனள் ;
எண்ணிய அளவில் இதயம் நின்று
கண்ணிணை யளவும் சுரந்து கண்ணீர்
வெதும்பிப் பாய்ந்தது ; வெய்துயிர்ப் பென்னும்
புயற் காற்றிடையே பொங்கிய குரலில்
மயற்பெரு வார்த்தை வழங்கினள் மாதோ.

யோசேப்பு தனது மானத்தையும் கௌரவத்தையும் காக்க முயல்கின்றான். நெடுங்காலமாகப் பலபல காரணங் கூறித் தாழ்க்கின்றான். ஆனால், ஜுலைக்காவின் காதலே முடிவில் வென்றுவிடுகிறது.

இந்த அழகிய கதையினால் ஜாமியின் கவிதைப் பெருநலத்தை நாம் நன்குணரலாம். தற்காலத்தில் பாரஸிகத்தின் பெருமை பழம் பெருமை யாகிவிட்டது. அதன் தொன்னகரங்கள் பலவும் இடிந்து பாழாய்ப் போயின. ஆனால் அந்தத் தேசத்தை ஸாதி, ஹாப்லிஸ், ஜாமி முதலிய பெருங் கவிஞர்கள் நாம் அடிக்கடி நினைவு கூரும்படி செய்துள்ளார்கள்.

# 5. சீனம்

## தொன்மை வாய்ந்த வரலாறு

சீன மக்கள் மிகமிகப் பழமை வாய்ந்தவர்கள். ஒரு சில சீனர்கள் தங்கள் சரித்திரம் எண்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொடங்குகிறது என்பர். மிதமாகக் கணக்கிட்ட வேறு சிலர் தங்கள் தொன்மை 10,000 ஆண்டுகட்குக் குறையாது என்பர். மிதமான இக்கணக்கைப் பெரும்பாலோர் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், சீன சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சீன ஸாம்ராஜ்யம் முதலாவதாகச் சுமார் கி.மு. 3000-ல் தான் நன்கு நிலையிடப் பெற்றதென்று கூறுவர். இந்த ஸாம்ராஜ்யத்திற்கு முன்பு பல தலைமுறைகளாகப் பல அரசர்கள் ஆண்டு வந்திருக்கலாம். சீன மக்கள் எகிப்தியரளவு தொன்மை வாய்ந்தவர்களாகக் கருதவும் இடமுண்டு.

கி.மு. 2450-ல் ஷூ வமிசம் அரசாளத் தொடங்கியது. இவ் வமிசத்தின் முதலரசன் இயஓ (Yao). ஏறத்தாழ இதே காலத்தில்தான் நமது இந்தியர்கள், பாபிலோனியர்கள், பாரஸிகர்கள் முதலானவர்களிடையே ஒரு ஜாதீய உணர்ச்சிப் பெருக்கமும், ஒழுங்குபட்ட ஆட்சி முறையும் நிகழத் தொடங்கின. ஆகவே, இக் காலத்தை ஆசிய மக்களது சரித்திரத்தில் மிகச் சிறப்பானது என்று சொல்லலாம். இக் காலத்திருந்த சீன மக்கள் மிக்க மனோபாவனை வாய்ந்தவர்கள். இவர்களால் இற்றைக்கு ஐயாயிரம் அல்லது பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலச் சரித்திரமாக இயற்கைக்கு அதீதமான பல நிகழ்ச்சிகளும் செயல்களும் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால், ஆராய்ச்சியாளர்கள் கல்-நெஞ்சினர். அவர்கள் இவைகளையெல்லாம் நம்பாது ஒதுக்கி விடுகிறார்கள் !

## ஸெ-மா-ட்ஸீன்

கி. மு. 600 தொடங்கியுள்ள சரித்திரத்தைத்தான் சரித்திர அறிஞர்கள் தடையின்றி ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஸெ-மா-ட்ஸீன் என்ற சீன ஆசிரியர் இக்காலத்தோடுதான் தாம் இயற்றிய சரித்திரத்தைத் தொடங்குகின்றார். பெரும் புகழ் பெற்ற சீர்திருத்தவாதியும் தத்துவ ஞானியுமாகிய கன்ப்யூஸியஸ் கி.மு. 550-ல் பிறந்தனர் என்பது உறுதி. இவரது காலந் தொடங்கியுள்ள சரித்திரத்தைச் சீன சரித ஆசிரியர்கள் மனோபாவனைக்கு இடங் கொடாதபடி, இயற்கையோடு பொருந்த, நுட்பமாக

எழுதியிருக்கிறார்கள். எனவே, இப் பிற்பட்ட சீன சரித்திரத்தை நம்பிக்கைக்கு உரியதாகக் கொள்வது நியாயமாகத் தோன்றுகிறது. இங்கே குறித்தபடி 25 நூற்றாண்டுகளாக அரசாட்சி முதலிய நாகரிகச் சிறப்பு அடைந்திருந்தாலும் சரி, அல்லது சிலர் கொள்கைப்படி 50 நூற்றாண்டுகளாக இச் சிறப்புப் பெற்றிருந்தாலும் சரி, எப்படியிருந்தாலும் சீன மக்கள் ஆட்சி புரிவதில் வெகு காலமாக அனுபவமுடையவர்கள் என்பது தெளிவு. கிளர்ச்சிகள், உள்நாட்டுக் கலகங்கள், படையெடுப்புக்கள், அரசாட்சியைக் குலுங்க வைக்கக் கூடிய பிற குழப்பக் கொந்தளிப்புக்கள், இன்பங்கள், துன்பங்கள், உளங் கூர்ந்த நோக்கங்கள், வெற்றிகள், தோல்விகள் — இவையனைத்தையும் சீன அரசுகள் அனுபவித்திருத்தல் வேண்டும்.

**சமய தத்துவங்கள்**

கன்ப்வூஸியஸ் நிறுவிய தத்துவம் அல்லது சமயத்தோடு வேறு மூன்றுவகையான கொள்கைகளையும் சீனர் போற்றி வந்தனர். ஆதியில் அவர்களிடையே ஒரே தெய்வம்தான் உண்டு என்ற கொள்கை காணப்பட்டது. அக் கொள்கையோடு முன்னோர்களைப் பக்தி சிரத்தையோடு வணங்குவதும் பிணைந்திருந்தது. இப் பிணைப்பு, வமிசம், குடும்பம், ஜாதி என்ற மூன்றையும் ஒரு கட்டுப்பாட்டில் நிலைபெறும்படி செய்தது. இவ் ஆதிக் கொள்கையின் பின்பு, கன்ப்வூஸியஸ் முனிவரது கொள்கை ஆட்கொண்டது. இது வாழ்க்கைக்குரிய அனுபவ தத்துவங்களை உணர்த்தியது. பண்டைக் காலத்தில் நன்மை விளைத்து வந்த பழக்க வழக்கங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்ற கொள்கைகளை முழுவதும் எதிர்க்கவேண்டுமென்ற கொள்கையையும் வற்புறுத்தி வந்தது.

கன்ப்வூஸியஸ் முனிவர்க்குச் சிறிது காலம் பிற்பட்டு, லேஓ-ட்ஸெ என்பவர் தோன்றினார். இவர் தம் சமயத்தை உணர்ச்சி நிரம்பியதாகச் செய்தனர். இவரது சமயத்திற்கு டாஓஸ்ம் என்று பெயர். இது நாளடைவில் மாந்திரிகம், பில்லி சூனியம் இவற்றிற்கு இடங்கொடுத்து ஓர் இழிந்த நிலையை அடைந்துவிட்டது. இவர்க்குப் பின்பு, கி.பி. 70-வது ஆண்டுக்குச் சற்றுமுன், பௌத்த சமயம் சீனாவில் புகுந்து, அதிவிரைவில் சீன மக்கள் உள்ளத்தில் இடம் பெற்று, அவர்களைக் கவர்ந்து விட்டது. இவ்வாறாக, சீன மக்கள் பிதிரர்களை வணங்கியதோடு, நோய் வந்த காலத்தில் மாந்திரிகத்திற்காக டாஓஸ்ம் என்ற சமயத்தைப் பின்பற்றி, அதே காலத்தில் தங்கள் வாழ்க்கையின் தினசரி நிகழ்ச்சியில் பௌத்த தரிசனத்தையும் மேற்கொண்டு வந்தனர். கிறிஸ்தவ சமயம் தங்கள் நாட்டில் புகுந்தபோது,

மேற்குறித்த கொள்கைகளையும் தத்துவங்களையும் பின்பற்றியே நின்று, அவற்றிற்கு மேலாகக் கிறிஸ்தவ சமயப் போதனைகளையும் சமுதாய வாழ்வில் கையாண்டுள்ளனர்.

இவ்வாறாகப் பல்வேறு சமய தத்துவங்கள் சீன தேசத்தில் இருந்தன. ஆகவே, அந்நாட்டில் சமயத்தையும் தத்துவத்தையும் பற்றிய இலக்கியங்கள் மிகுதியாக இயற்றப்பட்டிருக்கலாம் என்று நினைப்பது இயற்கை. ஆனால், உண்மை அங்ஙனமல்ல. சீன மக்கள் வெகுகாலமாகப் பஞ்சம், மழையின்மை, மழைப் பெருக்கு, யுத்தம் முதலியவற்றால் துன்புற்று வந்தனர். அன்றியும், கன்ப்வூஸியஸ் கண்ட நியதிகள் இகத்திற்குரிய கடின சட்டமாய் அமைந்து, வெகு காலமாக இம் மக்களைத் தமது பாரத்தால் அழுத்திச் சிறிதும் நகரவொட்டாமற் செய்து விட்டன. இக் காரணங்களால் உயர்ந்த தத்துவ ஞானம் தோன்றுவதற்கு இடமில்லாதபடி போயிற்று. பெரும்பாலும் கிரியைகள், சடங்குகள் முதலியவைகளை அனுஷ்டானத்தில் கொண்டுவருவது பற்றியும் பழக்க வழக்கங்கள் பற்றியும் தான் சீன அறிஞர்கள் விவாதம் புரிந்து வந்தனர்.

**சீனமொழியின் இயல்பு**

மேலும், சீன மொழியின் இயல்பே தத்துவம், நீதி, சமயம் முதலியவற்றின் நுட்பங்களை வெளியிடுவதற்கு இடையூறாய் நின்றது. அம்மொழியில் உள்ளன எல்லாம் ஓரசைச் சொற்களே. பெரும்பாலும் இலக்கண அமைதி இல்லை; வேற்றுமைகளும் விகுதிகளும் கிடையா. ஓரே ஓரசைச் சொல் பெயராகவும், வினையாகவும், பிறவகையாகவும், அது வாக்கியத்தில் அமைந்திருக்கிற நிலைக்குத் தக்கபடி பொருள் வேறுபட்டு நிற்கும், தற்காலத்தில் பேச்சு வழக்கிலுள்ள மொழிகளுள்ளே, சீனமொழி சொல்வளம் சிறிதும் இல்லாதது என்றுதான் சொல்ல வேண்டும். ஓரசை வினையடிகளால் நிரம்பியிருப்பதோடு அவ்வினையடிகளின் வரிசையை ஒரு தொடரில் சிறிது மாற்றினாலும் பொருள் முற்றும் வேறுபட்டுவிடும் நிலையின்மையும் இம்மொழிக்கு உள்ளது. அன்றியும், சொற்களின் பொருளை வேறுபடுத்துவதற்கு எடுத்தலோசை, படுத்தலோசை முதலிய எட்டு ஓசை விகற்பங்களைக் (Tunes) கையாண்டு வந்தனர். இவ் உபாயங்களும் வாக்கியங்களின் பொருளை உணர்தற் கரியதாய்ச் செய்து விட்டன. மேலும், இவைகள் உணர்ச்சி, கருத்துக்கள் முதலியவற்றின் அதிநுட்பமான வேறுபாடுகளை உணர்த்த வலிமையற்றனவாயும் நின்றன.

**கருத்துக் குறியீடுகள்**

சீன மொழியின் இயல்பு இவ்வாறாக, அம்மொழிக்குரிய எழுத்துக்கள் இன்னும் அதிகமான இடையூறுகளை விளை வித்தன. முதன் முதலில் சித்திரக் குறியீடுகளை அவர்கள் வழங்கி வந்தனர். இவ்வகைக் குறியீடுகள் உணர்த்தக் கருதிய பொருளின் உருவத்தை ஒருவாறு ஒத்து நின்று அதன் மூலமாக அப்பொருளை உணர்த்தின. பின் இவற்றினின்று கருத்துக் குறியீடுகளை அமைத்தனர். இக் குறியீடுகளில் ஒவ்வொன்றும் ஒலியை உணர்த்தாது ஒரு கருத்தை மாத்திரம் உணர்த்தியது. நூற்றாண்டுகள் செல்லச் செல்ல, கருத்துக்கள் புதியன புதியன வாய்த் தோன்றுதல் இயல்பே. இவற்றிற்குத் தக்கபடி ஆதியில் ஏற்பட்ட கருத்துக் குறியீடுகளில் பற்பல வேறுபாடுகளைச் செய்து புதுக் கருத்துக்களை உணர்த்தி வந்தனர். இப்பொழுது குறைந்த பட்சம் நாற்பதினாயிரம் கருத்துக் குறியீடுகள் இருக் கின்றன. கல்வியில் மிகச் சிறந்தவர்களே இக்குறியீடுகள் அனைத்தையும் தெரிந்து கொள்ளவும் வழங்கவும் முடியும். சாதாரணமாக அச்சில் வழங்கும் குறியீடுகள்தானும் பதினாயிரத் திற்கு மேலுள்ளன.

இங்ஙனம் அமைந்த மொழியினால் விலங்கிட்டுத் தளைக்கப் பட்ட போதிலும், சீன மக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாகவே உணர்த்தி வந்திருக்கின்றனர். வாழ்க்கையை நெறிப்படுத்தும் முக்கிய தத்துவங்களை இவர்கள் வரையறுத் திருக்கின்றனர்; செய்யுட்கள் ஆயிரக்கணக்காக இயற்றியுள் ளனர்; ருசிகரமான கதைகளையும் ஆற்றல் மிக்க நாடகங் களையும் அமைத்திருக்கின்றனர். கருவி எத்தனை அற்பமாக இருந்தாலும் அதனை வைத்துக் கொண்டே தன் கருத்துக் களையும் உணர்ச்சிகளையும் திறமையுள்ள ஓர் இசைவாணன் உணர்த்தி விடுவான். மனிதன் இயல்பும், மொழிக்கருவி பற்றிய அளவில் இங்ஙனமே உள்ளது. வல்லவனுக்குப் புல்லும் ஆயுத மல்லவா ?

சீன தேசத்திலுள்ள நூல்கள் மிகப் பேரளவில் உள்ளன என எளிதில் ஊகிக்கலாம். இருபது அல்லது முப்பது நூற்றாண்டு களாக நாகரிகமிக்கு வாழ்ந்துவந்த ஒரு மக்களினத்தார் இந்நீண்டகாலத்தில் பெருந்திரளான இலக்கியத்தை இயற்றாமற் போனால், அவர்கள் வாழ்வு ஒளியின்றி மழுங்கினதாகத்தான் இருத்தல் வேண்டும். சீனர்கள் அற்ப வாழ்வு வாழவில்லை. ஒளி நிரம்பிய பெருவாழ்வுதான் அவர்கள் வாழ்ந்தது. இவ்வாழ்விலே அளவற்ற பெருநூல்கள் விளைந்தன என்பதில் வியப்பு யாது ?

**ஐம்பேரிலக்கியங்கள்**

பெருந்திரளாயுள்ள சீன நூல்கள் அனைத்திலும் மிகப் பழைமை வாய்ந்தன ஐம்பேரிலக்கியங்கள் என்று கூறப்படுபவை. இவற்றைக் கன்ப்வூஸியஸ் இயற்றினார் என்று சீன மக்கள் வெகுகாலமாய் நம்பிவந்தனர். ஆனால், இவர் கி. மு. 6-ம் நூற்றாண்டில் பரிசோதனை செய்து இவற்றைத் தொகுப்பது மாத்திரம் செய்தார் என்று இப்போது உறுதியாய்த் தெரிகிறது. எவ்வளவு காலத்திற்குமுன் இவ் இலக்கியங்கள் இயற்றப்பட்டன என்று அறியக்கூடவில்லை. ஆனால் இவ் ஐந்தனுள்ளும் முதலில் தோன்றியது ஈ-கிங் அல்லது 'பரிணாம இலக்கியம்' (Book of Changes) ஆகும். இதனை நிர்வாக அதிகாரியாயிருந்த உவான்-உவாங் என்ற அறிஞர் சுமார் கி. மு. 1140-ல் இயற்றினார் எனக் கூறுவர். இவர் அறுபத்து நான்கு ஷட்கோணங்களைத் தொடர்பாக அமைத்து, ஒவ்வொன்றிலும் ஒரு செய்யுட் பகுதியை வரைந்தனர். சாதாரண மக்கள் இந்தக் கோணங்களும் செய்யுட்களும் வருங்காலச் செய்திகளை உணர்த்தக்கூடியன என்று உறுதியாய் நம்பினார்கள். ஆனால், கல்வியில் வல்ல சீனர்கள் இவ் உருவங்களிலே அனுபவத்திற்குரிய ஆழ்ந்த உண்மைகள் உள்ளன என்று சமீப காலத்துக்கு முன்வரை கருதியிருந்தார்கள். இவற்றைத் தொகுத்த கன்ப்வூஸியஸ் முனிவரும் இவற்றை மிக மேலாக மதித்திருந்தார். 'என் ஆயுளைப் பல ஆண்டுகள் கூட்டி நீட்டிக்க முடியுமானால், ஈ-கிங் நூலைக் கற்பதற்கு ஐம்பது ஆண்டுகள் கொடுப்பேன். இவ்வாறு செய்வதனால், வருந்தத்தக்க பெரும் பிழைகளை நான் நீக்கியிருத்தல் கூடும்' என்று இத்தத்துவ ஞானி கூறியுள்ளார்.

**ஆசார நூல்**

இந்த இலக்கியங்களுள் இரண்டாவதாகக் கூறத்தக்கது 'ஆசார நூல்' ஆகும். இதற்குச் சீன மொழியில் லீ-கி (Book of Ceremonies) என்று பெயர். இது கி. மு. 1150-ல் சௌ பிரபு தொகுத்தது என்று கர்ண பரம்பரை கூறும். ஆசாரம் அல்லது ஒழுக்க நியதியைப் பற்றித் தோன்றியவற்றுள் இதுவே மிக விரிவான நூல் என்று ஐயமின்றிக் கூறலாம். பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வாழ்க்கையில் எல்லாவகையான உறவு முறைகள் பற்றியும், தினசரி வாழ்வில் எல்லாவகையான நிகழ்ச்சிகளைப் பற்றியும், மிகமிக நுட்பமாக ஆராய்ந்து இந்நூலில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற அறிவுரைகளும் இதில் புலப்படுகின்றன. பின்னால் இதைத் தொகுத்த கன்ப்வூஸியஸ் மேற்கூறிய விஷயங்களில் ஒன்றையும் நீக்கிவிடாதபடி அனைத்தையும் கொடுத்துள்ளார். ஒருவன்,

பேரரசனாயிருந்தாலும், கூலியாளாயிருந்தாலும், தந்தையாயிருந்தாலும், மகனாயிருந்தாலும், உணவருந்திக் கொண்டிருந்தாலும், பானம் செய்து கொண்டிருந்தாலும், அல்லது இறந்து போனவர்களை அடக்கம் செய்துகொண்டிருந்தாலும் அந்த நிலைகளுக்கெல்லாம் உரிய ஒழுக்க நியதிகளை இந்நூலிலே நுட்பமாகக் காணலாம். சீனர்களது சரித்திரத்திலும், அவர்களது குண விசேஷங்களிலும், அவர்களது வாழ்வின் நோக்கங்களிலும் இந்நூல் அவர்களைப் பெரிதும் நெறிப்படுத்தி வந்தது. இந்நூலிற் காணும் நியதிகளைத் தெளிவுபடுத்தி அமுலுக்குக் கொண்டு வருவதற் கென்றே தனியாக ஓர் அரசாங்க இலாகா பல நூற்றாண்டுகளாகத் தொழில் புரிந்துள்ளது.

**சரித்திர பிரமாண இலக்கியம்**

சீன மக்களின் சமுதாய ஒழுக்கத்தை லீ-கி நெறிப்படுத்தியது போலவே, அவர்களது அரசியல் விஷயங்களை ஒழுங்குபடுத்தியது 'சரித்திரப் பிரமாண இலக்கிய'மாகும். இதுவே ஐம்பேரிலக்கியங்களுள் மூன்றாவது. இதனை ஷு-கிங் (Classic of Historical Documents) என்று சீன மொழியில் வழங்கி வந்தனர். இதில் பற்பல அரசியல் அறிக்கைகள் உள்ளன. அரசியல் பற்றிப் பேரரசர்கள் தங்கள் அமைச்சர்களோடு செய்து வந்த விவாத வுரைகளே இவ் அறிக்கைகளில் பெரும்பான்மையாக உள்ளன. நூலிலுள்ள சில விஷயங்கள் கி. மு. 25-வது நூற்றாண்டிற் குரியனபோலத் தோன்றுகின்றன. வேறு சில கி. மு. 8-வது நூற்றாண்டு பற்றியனபோல் உள்ளன. இந் நீண்டகாலச் சரித்திரத்திற்குரிய பிரமாணங்கள் கிடைத்தல் மிகமிக அருமை அல்லவா? ஆகவே, பல பல அரசாங்கங்களும் பல பல அற்புதச் செயல்களும் கற்பிதமாகப் புனையப்பட்டன. திறமை வாய்ந்த ஓர் அரசாங்கம் என்ன என்ன நியதிகளை அடிப்படையாகக் கொண்டு ஒழுகவேண்டும் என்பதை இந்நூல் தெரிவிக்கிறது.

> அனைவருடைய கருத்துக்களையும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்; தான் எண்ணியதையே முடிவெனக் கொள்ளுதல் கூடாது. மற்றையோர் கருத்துக்களில் எது நன்மையைத் தருவதோ அதைப் பின்பற்றுதல் வேண்டும்.
>
> ஏழைகளையும் துன்புறுவோர்களையும் ஞாபகத்தில் வைத்து, அவர்களுக்கு உரியன செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தல் நல்ல அரசாட்சிக்கு இன்றியமையாதது.
>
> சான்றோர்களை உத்தியோகத்தில் அமர்த்துக. சக்கரவர்த்தியே! அவர்களுக்கும் உமக்கும் இடையில் ஒருவரும் குறுக்கிடாதபடி விலக்குக.

பொதுமக்களின் புகழ்ச்சியை விரும்பித் தகாதன செய்யற்க.

உமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, மக்களுடைய நேர்மையான சீரிய விருப்பங்களைத் தடை செய்யற்க.

சோம்பலையும் பெரும் போகங்களையும் தவிர்க்க. விவேகத்தின் நல்லொளியிலே வாழ்க.

நீர், நெருப்பு, உலோகம், மரம், மண், தானியம் இவைகளை அரசாங்கம் நியதிகளால் கட்டுப்படுத்துதல் வேண்டும். ஒரு தேசீய ஜாதியின் வாழ்வுக்கு இக் கட்டுப்பாடு இன்றியமையாதது.

வாழ்க்கையின் சௌகரியங்களைப் பெருக்குதற்குரிய சாதனங்களும், உணவுப் பொருள்களும், எக்காலத்தும் மிகுதியாயிருக்கும்படி சேகரிக்க வேண்டும்.

மக்களின் நேர்மையான ஒழுக்கவிஷயத்தில் அரசாங்கத்தினர் ஒரு பொழுதும் பராமுகமாயிருத்தல் கூடாது.

இவை ஒன்பதும் அரசாங்கம் கவனிக்கவேண்டிய பெரும் பொருள்கள் என்று ஷூ-கிங் கூறுகிறது.

இந்த ஒன்பது பொருள்களையும் மக்கள் உள்ளத்திற் கொண்டு ஊக்கத்துடன் போற்றி வரவேண்டும் என்று வற்புறுத்தப் பல செய்யுட்கள் தோன்றின. இவை அடங்கியது தான் ஐம்பேரிலக்கியங்களுள் நான்காவதாகிய செய்யுள் இலக்கியம்.

## செய்யுள் இலக்கியம்

இதனை ஷி-கிங் (Classic of Poetry) என்று கூறுவர். கவிஞர்கள் இயற்றும் பாடல்களை மேற்பார்வையிடுவதற்கு இசைவாணர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அப்பாடல்களில் அருமையானவற்றை அரசவைக்கு வரும் மந்திரிகளின் முன்னிலையில் பாடி வந்தனர். இப்பாடல்கள் கன்ப்பூஷியஸ் காலத்தில் பெருந்திரளாகக் குவிந்துவிட்டன. இம்முனிவர் அவற்றுள் 311 செய்யுட்களை நல்லன என்று தேர்ந்து தொகுத்து வைத்தனர்.

எளியனவாயும் உள்ளத்தினின்று உணர்ச்சியோடு பிறந்தனவாயுமுள்ள இப்பாடல்களிற் சில உழவு பற்றியும் மனை வாழ்க்கையில் உள்ள சாதாரண நிகழ்ச்சிகளைப் பற்றியும்

அமைந்துள்ளன. கீழ்வரும் மொழிபெயர்ப்பு அவற்றின் இயல்பை ஒருவாறு தெரிவிக்க வல்லது :

விடிந்துபக லாயிற்றே, எழுந்திடுவா யுணர்ந்து,
மென்பாயல், என்கணவ! விட்டொழிவாய் விரைந்தே ;
கடிந்துமொழி காதலியே ! விடிந்ததில்லை யின்னும்,
காரிருள்தான் வைகறையிற் கலந்துமிகத் தோன்றும்.

எழுந்திடுவாய், ஈதோ இவ் வலதுதிசை மேலே
எழிலொளிசேர் விடிவெள்ளி இலங்கிடுதல் காணாய் !
அழுந்து துயில் நீத்திடுவாய் அம்பும் வில்லும் ஏந்தி
அருகுளமென் குருகுகளை அழித்திடுவாய் எய்தே.

அம்புகொண்டு தூண்டில்பற்றிக் கொன்றவைக ளெல்லாம்
ஆய்ந்துபதப் படுத்தியுனக் காக்கிடுவன் உணவே;
இன்பமொடு நாழிகையொன் றிருவருமே கழிப்போம்
ஏந்துகளி மதுக்குப்பி இலகொளிதந் திடவே.

* * *

என்புருகும் இசையமிர்து நன்குதவி நின்கை
இனிதமர்ந்த நல்வீணை ஈர்ந்துளத்தை வருத்தும்
துன்பொழியத் தூயவின்ப வாரியினில் நம்மைத்
தோய்த்தெடுத்துத் துறக்கமதில் உறப்புகுத்தும்,
துரையே!

* * *

இரவுபகல் இங்கிருந்து ஏக்கமொடு நோக்கி
என்துயர்கூர் நெஞ்சினுக்கு ஏதேதோ மொழிவேன் ;
உரமுளஎன் கணவரவர் வெகுதூரத் துள்ளார்,
ஒன்றுதுயர் நீக்குதற்கே என்றுவரு வாரோ ?

வேறு சில செய்யுட்கள் குடும்ப வாழ்வு பற்றியும் காதல் பற்றியும் அமைந்துள்ளன :

விண்ணில் ஒளிரும் வெண்ணிலவு
மிக்க களிப்பை நல்கினும் என்
கண்ணைக் கவர்ந்தே உளமுருக்கும்
காரிகை தனக்கு நிகராமோ ?

நண்ணுங் காதல் விலங்கதனால்
நன்றென் இதயந் தளைத்திட்டாள் ;
எண்ணின் அவளைப் பிரிந்திருக்க
என்னால் இயலா தியலாதே.

**'இளவேனிலும் பின்பனியும்'**

ஐம்பேரிலக்கியங்களுள் கடைசியாக உள்ளது 'இளவேனிலும் பின்பனியும்' என்பதாகும். இதனை சுன்-ட்ஸூ என்று சீன மொழியில் வழங்குவர். இந்த இலக்கியம் ஒன்றுதான் கன்ப்பூஸியஸ் தாமே இயற்றியது. இவர் தமது நூலுக்கு மேற் குறித்த பெயர் வைத்த காரணம் என்ன? நூலிலே வரும் புகழ்ச்சிகள் இளவேனிலைப் போன்று மன எழுச்சியையும் இன்பத்தையும் தர வல்லன என்றும், இதிலே வரும் இகழ்ச்சி யுரைகள் பின் பனியைப் போன்று இதயத்தை ஒடுக்கி நடுங்கச் செய்வன என்றும் கன்ப்பூஸியஸ் முனிவரைப் போற்றுபவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இம்முனிவர் தோன்றிய பிரதேசமான 'லூ' வின் சரித்திரம் இந்நூலில் சுவையற்ற முறையிலே கூறப் பட்டுள்ளது என்பதுதான் ஆராய்ச்சியாளனுக்குத் தெரிவது. சரித்திரமும் கி. மு. 721 முதல் கி. மு. 520 வரையுள்ள காலப் பகுதியைச் சார்ந்தது. இந்நூலில் உயரிய கருத்தும் லட்சியமும் சிறிதும் இல்லை. கன்ப்பூஸியஸ் முனிவரின் மாணாக்கரான ட்ஸோ என்பவர் இந் நூலில் சரித்திர நிகழ்ச்சிகள் பற்றிப் பல பிழைகள் உள்ளன என எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலே குறித்த ஐந்து இலக்கியங்களும் சில இடங்களில் சுவையற்றிருக்கின்றன. ஆனால், பெரும்பாலும் மிகவும் நுட்பமாகச் சென்று பெருமித நடையில் அமைந்துள்ளன. இவைகள் கடந்த 24 நூற்றாண்டுகளாகக் கோடிக்கணக்கான மக்களை வசீகரித்து வந்தமை வியப்பு என்று சிலர் கருதலாம். சீனர்கள் ஐம்பேரிலக்கியங்களையும் தங்களுக்கு உயிராற்றல் கொடுப்பனவாகக் கருதி வருகின்றனர். தலைமுறை தலைமுறை யாகச் சீன அறிஞர்கள் இவற்றைக் குறித்துச் சிந்தித்து விவாதம் புரிவதில் தங்கள் ஆயுளைக் கழித்து வந்திருக்கின்றனர். பரம்பரை உரிமையாகிய இப்பொது இலக்கியங்கள் பற்பல ஜாதியினரும் பற்பல மொழிகளும் அடங்கியுள்ள ஒரு பெரிய ராஜ்யத்தை வெகு காலமாக ஒற்றுமைப்படுத்தி வந்திருக்கின்றன.

எவ்வாறு இவ்வொற்றுமை அரண் செய்யப்பட்டது? பூர்விக மக்களது கொள்கையையும் ஆசாரத்தையும் வற்புறுத்தியதன் மூலமாகத்தான். இக்கொள்கை ஒருமதச் சார்பு பற்றியதா? இதனை ஒருமதம் என்று கூறுதல் தான் பொருந்துமா? பொருந்து மென்று தோன்றவில்லை.

**அரசுதான் சமயம், சமயந்தான் அரசு**

பரம்பொருள் என்று பொதுவாகக் கூறுவது ஒரு சக்தி. இது இயற்கைக்கு அதீதமானது. இந்தச் சக்தியோடு ஒருவன்

தொடர்புற்று வாழ்வதே சமயம் அல்லது மதம் என்பதன் கருத்தாகும். இதனைக்கொண்டு நோக்குமிடத்து, கன்ப்வூஸியஸ் அமைத்த தரிசனத்தை மதம் என்று சொல்ல முடியாது; அது மக்களது ஒழுக்கம் பற்றிய கருத்துத் தொகுதியேயாகும். பழைய சீனமதத்தில் புராண இதிகாசங்கள் இல்லை; நெறிப்பட அமைந்த சமய குரு பீடங்கள் இல்லை. மக்களது ஆன்மாவைக் கிளர்விக்கும் ஞானோபதேசங்களும் இல்லை. இயற்கையின் அதிதேவதைகள், ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய அதிதேவதை, பொதுமக்களது பிதிர்த் தெய்வங்கள், அரச வம்சத்திற்குரிய பிதிர்த் தெய்வங்கள் : இவைகளே சீன மதத்தில் உள்ளன. அரச வம்சத்திற்குரிய பிதிர்த் தொகுதிக்கும் தனிப்பட்ட நிலையிலுள்ள மனிதனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இத் தொகுதியின் தோற்றங்கள் மாறாத இயற்கையின் ஒழுங்குமுறை மூலமாகவும், அரசாட்சியின் நிரந்தரமான ஒழுங்குமுறை மூலமாகவும், வெளிப்பட்டன. இயற்கையும் அரசாங்கமும் எல்லா அம்சங்களிலும் ஒத்துள்ளன என்று கன்ப்வூஸியஸ் முனிவரின் மாணாக்கர்கள் கூறிவந்தனர். ஒரு நாட்டில் வெள்ளப் பெருக்கினால் சேதம் நிகழ்ந்ததாயின், அது அரசாங்கத்தால் நேர்ந்த ஒரு பிழைபாட்டிற்குச் சான்றாகும் என்று கருதினர். இயற்கையும் அரசாங்கமும் ஒத்து இணங்கி நின்றதில் ஏதோ ஒரு பிணக்கம் நேர்ந்துவிட்டதுதான் இதற்குக் காரணம் என்று கொண்டனர்.

பல நூற்றாண்டுகளாக இக்கொள்கை சீன தேசத்து மக்களிடையே நிலவிவந்தது. இங்ஙனம் மிகப் பழங்காலந்தொட்டு வழங்கிவந்த மரபு நெறியை மாறுபடுத்த ஒருவரும் துணியக் கூடாதென்று வற்புறுத்தப்பட்டது. 'அரசுதான் சமயம், சமயந் தான் அரசு' என்பதே சீன மக்களின் கொள்கை.

உணர்ச்சிக்கும் மனோபாவத்திற்கும் சிறிதும் இடந்தராத இந்த லௌகிக தரிசனங்கூட நாளடைவில் க்ஷீணமடைந்து விட்டது. கி. மு. 6-ம் நூற்றாண்டில் தோன்றிய லெஓ-ட்ஸெ என்பவர் டாஓ என்ற நூலை இயற்றி 'உள் ஒளி' என்ற தத்துவத்தை உபதேசித்தனர். இது வெகு காலமாய் வழங்கி வந்த கொள்கையோடு மாறுபட்டு லட்சிய மாத்திரையாய் அமைந்து விட்டபடியாலே சீன மக்களால் போற்றப்படவில்லை. டாஓஸ்ம் என்ற இம் மதம் முன்பே கூறியுள்ளபடி மந்திர தந்திர நெறியாய் ஒடுங்கிவிட்டது.

**கன்ப்வூஸியஸ்**

கன்ப்வூஸியஸ் சீன மக்களது கொள்கைக்கும் ஆசாரத்திற்கும் ஒத்துள்ள உபதேசங்களையே எடுத்து மொழிந்தனர்.

இவைகள் உலகத்தில் வாழ்வதற்கு வேண்டும் விதிகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்தின.

நன்மைகளுக்கு எல்லாம் வித்தாவது தனி மனிதனது நற்குணமே. இதனோடுதான் எல்லாம் தொடங்குகிறது. இதற்காகத் தான் நல்ல ஸ்தாபனம் ஒவ்வொன்றும் வேலை செய்து வருகிறது.

உபகாரம் என்பது என்ன? அது எல்லா மக்களிடத்தும் அன்பு காட்டுவதுதான்.

இதுவே கன்ப்வூஸியஸ் முனிவர் உபதேசங்களின் சாரம். இவரது கொள்கைகளை விவரித்துக் கூறும் நூல்களிற் காணும் விளக்க உரைகள் யாவும் மேற்கூறிய சாரத்திற்கு மிகவும் தாழ்ந்த தரத்தனவாகவே உள்ளன.

கன்ப்வூஸியஸ் (குங்-ப்வ்யூ-ட்ஸெ)* ஒரு பிரபு குடும்பத்திலே கி. மு. 551-ல் தமது தந்தையின் முதுமைப் பருவத்தில் பிறந்தார். இவர் பிறந்த இடம் சீன தேசத்தின் வடகிழக்கில் 'ஷன்துங்' என்று இப்பொழுது வழங்கும் மாகாணத்தின் மலைப்பிரதேசத்தி லுள்ள ச்சூப்வு நகரமாகும். இவர் தந்தை இறந்ததும், இவரது தாயார் இவரை மிக்க கண்டிப்புடன் வளர்த்துவந்தனர். இவர்க்கு மணமும் விரைவில் முடிந்தது. ஆனால், இவர் தமது 22-வது வயதில் தம்முடைய மனைவியை விட்டுப் பிரிந்து, பல இடங்களுக்கும் சென்று திரிந்து உபதேசித்து வந்தார். நாளடை வில் இவரிடம் பக்தியுள்ள மாணுக்கர்கள் பலர் வந்து கூடினர்.

இவர் ஆழ்ந்த கல்வியுடையவர். அதனாலே, சீன மக்கள் மனத்தில் கல்வியின்மீது என்றும் இறவாத பக்தியை உண்டுபண்ணினர். தமது 29-வது வயதில் இவர் இசை கற்றுக் கொள்ளத் தொடங்கினர். இசை பற்றி அக்காலத்து வழங்கின வற்றை யெல்லாம் அறிந்து மேம்பட்டனர். இந் நுண்கலை பற்றிப் பல நூல்கள் எழுதினரென்றும் கூறுவர். இவ்வாறாக இவரது புகழ் பெருகிக்கொண்டு வரும் சமயத்தில், இவருடைய தாய் மரணமடைந்தனள். இத் துக்கத்தின் காரணமாக, இரண்டு ஆண்டுகள் மூன்று மாசங்கள் முற்றும் ஒதுங்கி வாழ்ந்து வந்தனர். தாம் மேற்கொண்ட இவ் ஒழுக்கத்தால் மரணமடைந்தவர் களுடைய ஞாபகத்தை எவ்வாறு போற்றுதல் வேண்டும் என் பதைச் சீன மக்கள் மனத்தில் அழுந்தப் பதியவைத்தனர். சீன மக்கள் இன்றும் இவ் ஒழுக்கத்தினின்றும் தவறுவதில்லை.

* 'குங்-ப்வ்யூ-ட்ஸெ' என்பது 'குங் என்ற தத்துவஞானி' என்று பொருள் படும். 'குங்' என்பது குடிப்பெயர். இவரது இயற்பெயர் 'ச்சியு' என்பது.

இவர் ஒதுங்கி வாழ்ந்து திரும்பி வந்த சமயத்திலே, அரசாங்கத்தினர் இவரைப் பொது இலாகாவின் உதவி மேற்பார்வையாளராக நியமித்தனர். அப்பொழுது உழவு முதலியன பற்றி இவர் செய்த சீர்திருத்தங்களால் இவரது பெருமையைக் கோடிக்கணக்கான மக்கள் தெரிந்துகொள்ளும்படி நேர்ந்தது.

**நீதி மந்திரியாக**

பின்பு பல உத்தியோகங்களையும் இவர் வகித்துவந்தனர். இறுதியில் நீதி மந்திரியாக நியமிக்கப்பட்டனர். தமது நியாயம் தவறாத தீர்ப்புக்களினால் தம்முடைய பிரதேசத்தில் குற்றம் என்று சொல்வதே பெரும்பாலும் இல்லாமற் போகும்படி செய்தனர். இவரது திறமையினாலேயும் நடுவு நிலையினாலேயும் நீதிமந்திரி என்ற ஓர் உத்தியோகமே இனி வேண்டுவதில்லை என்று அக்காலத்துச் சீன மக்கள் நினைக்கும்படி செய்தனர் என்றுங் கூறுவர்.

ஆனால், புகழ் பெருகப் பெருக, பொறாமைக்காரர்களும் பெருகிவிடுதல் இயற்கையல்லவா? ஒருவன் தீய கருத்துடன் எண்பது அழகான பெண்களையும் நூற்றிருபது அழகான குதிரைகளையும் இவரது அரசனுக்குக் கொடையாக அளித்தனன். இவர் மிகவும் வருந்தித் தடுத்தும் அரசன் கேட்கவில்லை; அக் கொடையைப் பெற்றுக்கொண்டான். எண்பது பெண்களுக் கிடையில் நல்லொழுக்கத்தோடு வாழ முடியுமா? அரசன் நல்லொழுக்கம் தவறிவிட்டான். இத் தவறுதலுக்குக் காரணம் இம் முனிவரே என்று பொய்க்குற்றம் ஏற்றி இவரை நாடு கடத்தினர்.

பதின்மூன்று ஆண்டுகள் இவ்வாறாக அயல்நாடுகளில் கன்பூஷியஸ் வசிக்க நேர்ந்தது. ஆனால், இவர் மனத்தில் யாதொரு கசப்பும் ஏற்படவில்லை. இவர் எவ்வாறு வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிந்துவர, ஒருவன் அனுப்பப்பட்டனன். அவன் சென்று பார்த்து 'அறிவை அவாவோடு மேன்மேலும் வளர்த்துவரும் முயற்சியில், அவர் உணவு உண்ணவும் மறந்துவிடுகிறார்; அவர் எய்தியுள்ள பெருநிலைக்குரிய மகிழ்ச்சியினாலே, துன்பம் என ஒன்று இருப்பதாகவே அவர் கருதவில்லை. அவரை முதுமை அணுகி வருவதைக்கூட அவர் தெரிந்துகொள்ளவில்லை' என்று கூறினான் என்பர்.

**ஒழுக்கங்களைப் போற்றியவர்**

திரும்பவும் இவரை வரவழைத்து உத்தியோக முறையில் அமரும்படி வேண்டுகோள் செய்யப்பட்டது. ஆனால், அவ் வேண்டுகோளை இவர் மறுத்து ஐம்பேரிலக்கியங்களைத் தொகுப்

பதிலும் தமது மாணாக்கர்களுக்கு உபதேசம் செய்வதிலும் தம் வாழ்நாட்களைக் கழித்துவந்தனர். கி. மு. 485-ல் தம்முடைய நாட்டிற்குத் திரும்பினர். தமது ஆயுளின் இறுதி ஏழு வருஷங் களையும் தாம் விரும்பியபடி கற்பதிலும் உபதேசிப்பதிலும் செலவிட்டு வந்தனர். என்றாலும், தமது வாழ்வின் நோக்கம் நிறைவேறவில்லை என்ற நினைப்புடன்தான் இவர் இருந்தனர். கி. மு. 478-ல் இவர் மண்ணுலகினின்றும் மறைந்தனர். இவரது மரணம் இவர் தொகுத்தும் இயற்றியும் வந்த நியதிகளை ஒரு தத்துவ தரிசனமாக வெற்றி கொள்ளச் செய்துவிட்டது. பண்டைக்காலம் தொடங்கி வருகின்ற தூய மரபுகளைச் சிறிதும் மாற்றாதபடி சீன மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே இவரது முக்கிய நோக்கம். இம்மரபுகள் பிதிர்த் தெய்வங்களோடு சம்பந்த முடையன. ஆதலால் எல்லாக் காலத்தும் மாறாதபடி ஒரே நிலையில் இம்மரபுகள் உள்ளன என்று கருதினர்.

முன்னே கூறியபடி, இவர் ஒரு மதத்தைப் புதிதாக ஸ்தாபித்துவிடவில்லை. இவர் தீர்க்கதரிசி அல்லர் ; கனவு காண்பவருமல்லர். சமய உணர்ச்சியில் இவர் ஈடுபட்டவரேயல்லர். பிரார்த்தனை செய்வது அறிவுக்குப் பொருத்தமற்றது என்று கருதினர். தெய்வங்களையோ மற்ற மறுமை விஷயங்களையோ பற்றி ஆராய்வது பயனற்றது என்றனர். ஆனால், இகவாழ்விற்கு உறுதியான ஒரு தத்துவ தரிசனத்தை இவர் நிலைநாட்டினார். நீதி பற்றியும், சமுதாயம் பற்றியும், அரசியல் பற்றியும், இவர் உபதேசித்த வண்ணமாயிருந்தனர்.

உயிர் என்பது இன்னது என்று தெரியாத வரையில் உனக்கு மரணத்தைக் குறித்து ஒன்றும் தெரியமுடியாது

என்று இவர் கூறினர். உண்மையில் மதம் பற்றிய கற்பிதங்களிலே இவருக்குச் சிறிதும் மதிப்பு இல்லை.

அற்புதங்கள் பற்றியும், ஆற்றல் காட்டும் பெருஞ் செயல்கள் பற்றியும், குழப்பக் கிளர்ச்சிகள் பற்றியும், ஆன்ம ஞானிகளைப் பற்றியும் என்னிடம் பேசக்கூடாது.

இது இவர் இட்ட ஆணை, இவ்வுலகத்தில் ஒவ்வொருவனும் எவ்வாறு நடக்கவேண்டும்? இதுவே இவர் கருத்தில் முக்கியமான தாகத் தோன்றியது. ஆசார உபசாரங்களை மிகுதியாகக் கவனித்து வந்தனர். நடையுடை பாவனை ஒழுக்கங்களை முக்கிய விஷயங்களாகப் போற்றி வந்தனர். ஒரு பாயைச் சரியான முறையில் சரியான நிலையில் இடாமற்போனால், அதன்மீது இவர் உட்கார இணங்க மாட்டார். எப்பொழுதும் மிதமான மனநிலையுடையவர் ; தரும சிந்தனையுடையவர் ; உபகார

புத்தியுள்ளவர் ; மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாத பரம் பொருள் நன்மை வடிவாக வுள்ளது என்ற அடிப்படையான நம்பிக்கை இவரது ஆன்மாவில் ஊறிக் கிடந்தது. இதினின்றும் பிறந்த ஓர் அமைதி இவரது உள்ளத்திலே நிலவியது. ஸாக்ரடீஸ், இயேசுநாதர், முகம்மதுநபி இவர்களைப் போலவே இவரும் பல பல நூல்களை இயற்றிப் புகழ் பெற வேண்டுமென்று கருதிய தில்லை. இவரது மாணாக்கர்களுள் மூவாயிரவர் இந்த வேலையைச் செய்துவந்தது போதாதா? உலகம் யாது நினைக்கும் என்பதுதான் இவர் அடிக்கடி தம் மனத்தைக் கேட்டுக்கொண்டது. வாழ்க்கையில் பிரதிக்கிரியை (Reciprocity) என்ற வார்த்தை தான் அதி முக்கியமாகும் என்று இவர் கருதினர். இச்சொல்லின் விளக்கத்தை,

> எதனைப் பிறர்நின்பால் செய்தல் இசையாய்
> அதனை அவர்பால் *செயல்

என்று பொருள்படும் ஓர் அருமையான நியதி ஒன்றினால் உலகத் தினருக்கு வெளியிட்டனர். உண்மையான மதம் என்பது மக்கட் பண்பு, நேர்மை, ஆசாரம், உண்மை — அறிவு என்றவற்றை மேற்கொண்டு நன்னெறியில் ஒழுகுதலேயாம் என்று இவர் வற்புறுத்தினர்.

இவரது பொன்மொழிகள் பசையற்று வாணிக முறையில் அமைந்தன வாயிருக்கலாம். ஆனால், கனவு கண்டு மனோ பாவனை செய்து, நெகிழ்வுற அமைத்த மதத்தை மக்கள் எட்டி யுணரும் நிலைக்குக் கொண்டுவர இவை உதவின. தினசரி நிகழ வேண்டும் காரியங்கள் அனைத்திற்கும் பயன்படும் நியதிகளே சிறந்த மதங்களால் கூறத்தக்கன என்பதையும் இவர் தெரிவித் தனர். இவருடைய நியதிகள் தனி மனிதனது உணர்ச்சியொளி பெருகுவதற்கு இடந்தரமாட்டா. ஆனால், ஒரு தேசத்திலுள்ள ஜாதியார் அனைவரும் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையை இவை ஊக்கின.

**பொன் மொழிகள்**

இவரது பொன் மொழிகளிற் பல தற்காலத்தே நாமும் மனங் கொள்ளத் தக்கனவாய் உள்ளன. ஜனரஞ்சகமான ஆட்சி நிலைபெற்று ஓங்குவது எப்படி? இதற்கு,

> நேர்மை யுள்ளவர்களைப் பாராட்டி மேல்நிலைக்குக் கொண்டு வருக. மனக்கோட்ட முள்ளவர்களை அகற்றுக. அப்பொழுது மக்கள் அன்போடு பணிந்து ஒழுகுவார்கள்.

* செயல் — செய்யாதே

*அடுத்துள்ளவர்களை மகிழ்விப்பதும், தூரத்தே யுள்ளவர்களை வசிகரிப்பதும் நல்ல அரசு நீடித்திருப்பதற்குக் காரணமாகும்.*

என்று விடையிறுத்தனர்.

தனி மனிதன் பயிலவேண்டிய முறைகளை ஆடம்பரமற்ற செறிவுள்ள சொற்களால் தெரிவிக்கின்றனர் :

*அறிவாளி தனக்கு வரும் இடையூறுகளைப் புறங்காண்பதிலேதான் கருத்தூன்றி நிற்பான்; வெற்றி அவனுக்கு இரண்டாவது ஆலோசனையே.*

*ஒருவன் தனக்குப் பதவியில்லையே என்று வருந்த மாட்டான் ; தன்னைத் தகுதியுள்ளவனாகச் செய்து கொள்வதிலேதான் முயற்சி மேற்கொண்டு நிற்பான்.*

*மேன்மக்கள் தம்மிடத்திலேதான் நம்பிக்கையுடையவர்களாயிருப்பார்கள். அற்பர்கள் பிறரிடத்திலே நம்பிக்கை கொண்டு அவர்களை நாடி நிற்பார்கள்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, உண்மையையும் தூய்மையையும் முதன்மையான தத்துவங்களாகக் கடைப்பிடி !*

இவை எத்தனை சிறந்த உபதேச மொழிகள் !

*உன் நண்பனைத் தூய உள்ளத்தோடு நீ கண்டித்தல் வேண்டும். அவனை அன்போடு நன்னெறியில் செலுத்த முயலவேண்டும். அவன் இணங்காதவனாக இருப்பானானால், நீ அகல நின்று கொள் ; உன்னைப் பழிப்பிற்கு ஆளாக்கிக் கொள்ளாதே.*

இந்த நல்லுரைகளை ஒத்துக்கொள்ளாதவன் இருக்க முடியுமா?

*சிந்தனையின்றிக் கற்றல் வீண் பயிற்சியாகும். கல்வியின்றிச் சிந்தித்தல் மனத்தின் மரணமாகும். உளுத்தமரம் செதுக்க உதவாது.*

இவைகள் எவ்வளவு உண்மையானவை!

*மக்களுக்குள்ள பெருங் குறைபாடுகள் யாவை?*

*தங்களுடைய வயலைப் புறக்கணித்து விட்டு, அயலாருடைய வயல்களில் களைபிடுங்கப் போவதுதான். மற்றவர்களிடமிருந்து விரும்புவது அதிகமாக இருக்கும் ; தாங்களே சேமித்து வைத்துக் கொள்வது மிகச் சுருக்கமாயிருக்கும்.*

இக் குறைபாடுகள் அனுபவத்தில் ஒவ்வொருவனும் தெரிந்தன அல்லவா?

இவரது திட்பமுள்ள மதியும் அனைவருக்கும் ஒத்த அறிவும் பெரிதும் வியக்கத்தக்கன. சீன நாகரிகம் இரண்டாயிரம் ஆண்டுகளாக மாறுதலின்றி இவரால் நிலைபெற்று நின்றது. சீனதேசம் பின்னப்பட்டு நொறுங்கி விடாதபடி நீண்டகாலமாகக் காப்பாற்றி வந்தவரும் இவரே.

பக்தி சிரத்தையோடு இவரிடம் ஒழுகி வந்தவர்கள் இவரிடத்தே தெய்வத் தன்மைகளைக் கற்பித்தனர். இவர்க்குக் கோயிலெடுத்து வணங்கினர். இவருடைய உபதேசங்களைத் தெய்விக சக்தியும் தூய்மையுமுடையன என்று போற்றினர். இவ்வாறு தம்மீது தெய்வத் தன்மையை ஏற்றுவதை இவர் சிறிதும் ஒப்புக் கொண்டிருக்கமாட்டார்.

> இறந்தவரது ஆவிகளைப் பக்தியோடு போற்றுங்கள். ஆனால் அவைகளிடத்திலிருந்து வெகு தூரத்தில் நீங்கள் நின்று கொள்ளுங்கள். உங்கள் பிதிரர்களுடைய ஆவிகளை நீங்கள் போற்றுங்கள்; உங்களுடைய செயல்கள் அனைத்தையும் அவ் ஆவிகள் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கும் சாட்சிகளாகக் கருதி, நீங்கள் காரியங்களைச் செய்யுங்கள். அவைகளைப்பற்றி வேறு ஒன்றும் தெரிவதற்கு முயல வேண்டாம்.

என்று கூறினர்

**சீன தேசத்து வள்ளுவர்**

கன்ப்வூஸியஸ் சீன தேசத்து வள்ளுவரென்றால் இவர் பெருமையைத் தமிழ் மக்கள் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். இப்பேரறிஞர் தொகுத்தும் இயற்றியும் உள்ள நூல்களே சீன தேசத்து இலக்கிய உதயத்தை உணர்த்தி இன்றும் விளங்குகின்றன.

**நான்கு நூற் றொகுதிகள் : முதல் தொகுதி**

இம்முனிவர் தொகுத்த ஐம்பேரிலக்கியங்களும் இவரால் சீன தேசம் அடைந்த பெருஞ் சிறப்புக்களும் இதுகாறும் விளக்கப்பட்டன. இனி, இவ் இலக்கியங்களோடு சேர்த்தெண்ணப்படும் நான்கு நூற்றொகுதிகள் நோக்கத்தக்கன.

இவற்றுள், முதலாவது தொகுதி உயர்நெறிக் கல்வி அல்லது சீரிய கல்வி என்பதாம். சீனமொழியில் 'டா ஹிஓ' அல்லது 'டாஹ் ஸுயெஹ்' (Great Learning, the Higher Education) என்று இதனை வழங்குவர். இதன் ஆசிரியர் ட்ஸேங் ட்ஸு (Tseng Tzu) என்ற பெயரினர்; கன்ப்வூஸியஸ் முனிவரின் மாணாக்கருள் ஒருவர். இவர் பெற்றோர்மீது பக்தி (Filial Piety) என்ற ஒருநூலும் இயற்றியுள்ளார்.

இந்நூலைத் தொடக்கமாகக் கொண்டே சீனச் சிறுவர்கள் தங்கள் கல்வியைக் கற்றுவந்தனர். இதில் அடங்கிய பொருள் அவர்களது அறிவிற்கு மேற்பட்டதாயிருப்பினும் பிற்கால உபயோகத்திற்காக நூலின் வாசகங்களை மனனம் செய்து வந்தனர். சீனர்கள், அறிவினால் மேம்பட்ட ஓர் உயர் வகுப்பினர் உளர் என்றும், அவர்களே அரசாளுவதற்கும், வேறுவகையில் அரசியற்பணி புரிதற்கும் உரியராவர் என்றும் கருதிவந்தனர். இதனால், கல்வியைப் பற்றி விசாரணை செய்யுமிடத்து நாட்டினை எவ்வாறு ஆளுதல் வேண்டும் என்னும் கேள்வியும் உடன் ஆராயப்பட்டது. கல்வி என்பது அரசர்களுக்கு உரியது என்றும் இச் சீன மக்கள் கருதினர். தமிழ் வேதம் என்று கருதப் படும் திருக்குறளிலும் 'கல்வி' என்னும் அதிகாரம் அரசியலில் இறைமாட்சியை அடுத்து வைக்கப்பட்டுள்ளமை இங்கே நோக்கு தற்கு உரியது.

இந்தச் சீரிய கல்வியின் முக்கியமான அடிப்படைகளாக மூன்று கொள்கைகள் தெளியப்பட்டன. முதலாவது, ஒருவன் தன் ஆன்ம இயல்பைப் பழுதுபடாதபடி பேணுதல். இரண் டாவது, பொது மக்களுக்குத் திருந்திய புதியதோர் வாழ்க்கையை வகுத்தல். மூன்றாவது, 'தான் பரிபூரண நிலை இன்னது என்று அறிந்தால்தான் ஒருவனது வாழ்க்கைக்கு லட்சியம் என்பது ஏற்படும்; லட்சியம் ஏற்பட்டால்தான் மன அமைதி என்பது ஏற்படும்; மன அமைதி ஏற்பட்டால்தான் விஷயங்களை ஒழுங்கு படச் சிந்தித்துத் துணிய முடியும்; இவ்வாறு சிந்தித்துத் துணிந் தால்தான் நல்லறிவு என்பது விளையும். ஒவ்வொரு பொரு ளுக்கும் அஸ்திவாரம் உண்டு. மேல்நிலைக் கட்டடமும் உண்டு. அதற்குத் தொடக்கமும் உண்டு; நிகழ்ந்து செல்லும் முடிபும் உண்டு. ஆகவே, பொருள்கள் தொடர்ந்து செல்லும் நெறியை உணர்வதுதான் அறிவின் ஆரம்ப நிலையாகும்'. இங்கே கூறியதைப்போன்ற கல்வி விஷயங்களே இந்நூலிற் காணப் படுவன.

**இரண்டாவது தொகுதி**

இரண்டாவது தொகுதி 'நடுவு நிலைக் கொள்கை'யைப் பற்றியது. இதனைச் சுங்-யங் (Chung-yung, the central constant) என்று சீனத்தில் கூறுவர். இதன் ஆசிரியர் கன்ப்யூஸியஸ் முனிவரின் பௌத்திரரும் ட்ஸேங் ட்ஸூவின் மாணாக்கரும் ஆகிய ட்ஸூ ஸ்ஸூ (Tzu Ssu, Tsesze) என்று பெரும்பாலோர் கொள்வர். ஆனால் தற்காலத்து ஆராய்ச்சியாளர்கள் இதனை ஐயுறுகிறார்கள்.

மகிழ்ச்சி, கோபம், துக்கம் முதலிய உணர்ச்சிகள் தோன்றாதிருக்கும் நிலையே நடுவுநிலை அல்லது சாந்த நிலையாகும். இவ்வுணர்ச்சிகள் தோன்றி அளவுபட்டிருக்கும் நிலை 'ஒப்பு நிலை' (harmony) யாகும். சாந்த நிலையே வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ளது. ஒப்புநிலை தான் உலகத்தில் நீதி நெறியாய் விளங்குவது. இந் நீதிநெறியைப் பின்பற்றும் பயிற்சியின் விளைவே பண்பாடு என்று கூறப்படுவது. மனிதன் பின்பற்றவேண்டும் நீதியானது முதன்முதல் அவனை அணுகியுள்ளாரைப் பற்றி நின்று, பின்பு வர வர விரிந்து கொண்டே செல்லுதல் வேண்டும். படிக்கட்டின் அடியிலிருந்து தொடங்கி, வர வர மேற்பட்டு உயர்ந்து கொண்டே செல்லுதல் வேண்டும் என்றும் சொல்லலாம். ஒருவனை அணுகியிருக்கும் முதற்படி அவனுடைய குடும்பமேயாகும். இக் குடும்பம் நீதியோடு நிர்வகிக்கப்படின், அதிலிருந்து உண்டாகும் இன்பத்தை ஒரு செய்யுள் பின் வருமாறு உணர்த்துகிறது :

மனைவி மக்களும் மாண்புடைத் தந்தையும்
  மாறுபா டின்றி ஒற்றுமை மன்னவே
இனிதின் வாழ்ந்திடின், யாழொடு தீங்குழல்
  இயைந் தொலித்திடும் இன்னிசை போலுமே ;
துனியில் சோதரர் ஒன்றி யிணங்கியே
  தூய வாழ்வின் ஒழுகித் தொடர்ந்திடின்,
நனி யிசைக்கும் பல பல இன்னியம்
  நாத மொன்றினை நல்குதல் போலுமே.

இங்கு யாவரும் உள்ளத் தினியராய்
  இயையும் ஒற்றுமை யோடன்பு கொண்டுதாம்
தங்கி வாழ்ந்திடின், அன்னவர் தம்மனை
  தாங்கு தீப வொளியெனச் சாலுமே ;
அங்கு மென் மழலைச்சிறு மக்கள்தாம்
  அணியென மகிழ் தந்துடன் தோன்றுங்கால்
துங்க வொண்சுடர் நற்பெரு நாளென்றும்
  தொடர நின்றின்பப் பேரொளி துன்னுமே.

நீதிநெறியில் ஒழுகுபவன் தான்வாழும் நிலைகளுக்கெல்லாம் தக்கபடி தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்கிறான். தனது நிலைக்குப் புறம்பான எதையும் அவன் விரும்புவதில்லை. செல்வமும் கௌரவமுமுள்ள நிலையில் தான் இருப்பானாயின், அந்நிலையிலுள்ளா னொருவனைப் போலவே ஒழுகுவான். வறுமையும் எளிமையுமுள்ள நிலையில் தான்

இருப்பானாயின், அந்நிலையிலுள்ளா னொருவனுக்குத் தக்கவாறு நடந்துகொள்வான். அநாகரிக தேசத்திற்குத் தான் செல்ல நேரிடின், அங்குள்ளா னொருவனைப் போலவே ஒழுகுவான். இடையூறும் அபாயமும் உள்ள நிலையைத் தான் அடைவானுயின், அந்நிலையிலுள்ளா னொருவனிடம் எதிர்பார்க்கும் செயல்களையே அவன் புரிவான். சுருங்கக் கூறின், தன்னதிகாரியாய் நின்று தானே வகிக்க முடியாத யாதொரு நிலையும் நீதியொழுக்கம் பூண்டவனுக்கு இல்லை.

தான் பெரும்பதவியி லிருக்கும்போது, தன்கீழ் அடங்கி வாழ்பவர்மீது அகங்கரித்து அதிகாரம் செலுத்தமாட்டான். தான் கீழடங்கி வாழும்போது, தனது அதிகாரிகளிடம் சென்று இச்சகம் பேசி அவர்களது பிரீதியைத் தேடிக் கொள்ள முயலமாட்டான். தன்னுடைய நடத்தையை ஒழுங்குபடுத்திக் கொள்வானேயன்றி, பிறரிடமிருந்து யாதொன்றையும் நாடமாட்டான். ஆதலால், அவன் ஒருவர் மீதும் குற்றம் கூறுவதில்லை; தெய்வத்தை நொந்து கொள்வதில்லை ; மக்களைப் பழிப்பதில்லை.

மேற்காட்டியவை போன்ற அறிவுரைகள் இந்நூலின் பெருமையை நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

## மூன்றாவது தொகுதி

இனி மூன்றாவது தொகுதி மென்ஸியஸ் (Mang-tze, Mencius) என்பவரின் உபதேசங்கள். இவரது காலம் கி. மு. 372 முதல் கி. மு. 289 வரையாகும். இவரை முற்குறித்த நூலை இயற்றிய ட்ஸு ஸ்ஸுவின் மாணாக்கரென்று சிலர் கூறுவர். இவர் திடசரீரம் படைத்தவர்; மனத்திட்பம் பெற்றவர்; அரசியல் பற்றி ஆழ்ந்த அறிவு வாய்ந்தவர்; தமது நாட்டினரது குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுதலில் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். தமது கொள்கைகளை நிலையிடுவதற்கு அங்கும் இங்குமாக அலைந்து திரியாதபடி அரசர்களது ஸமுகங்களுக்குச் சென்று அங்கே வாதம்புரிந்து தீமையையும் கொடுங்கோன்மையையும் இவர் ஒழிக்க முயன்றார். அரசாட்சி தெய்வம் தந்த உரிமை என்பதுபோல, கவியாட்சியும் தெய்வம் தந்த உரிமை யென்ற கொள்கையை மேற்கொண்டனர். இவர் கடைசியாகத் திருத்த முயன்றது லு தேசத்தரசனை. இவ் அரசன் இவரது உபதேசங்களைச் செவிக்கொள்ளாது, இவரைப் புறக்கணித்துவிட்டான். தெய்வத்தின் திருவுளக் கருத்தென இத் தோல்வியைக் கருதி, தம் இறுதிக் காலத்தில் முற்றும் துறந்தவராய் அடங்கியொடுங்கி வாழ்ந்தனர். ஆனால் இத் தோல்வியினின்றும் சீன மக்களுக்குப் பெரியதொரு

நன்மை விளைந்துவிட்டது. நூல்களைப் பரிசீலனை செய்து எழுதிவைக்கச் சௌகரியம் இவர்க்கு வாய்த்தது. இவர் எழுதியவை உயிர்த்தத்துவம் நிரம்பிச் சுருக்கமும் தெளிவும் கொண்டு சிறந்துள்ளன; இம் முனிவரது சிறந்த கொள்கைகளின் உட்கிடக்கையைச் சீன மக்களிடையே இவர் பரவச் செய்தனர்.

மக்கள் இயற்கையிலேயே நற்குணம் வாய்ந்தவர்களென்று இவர் கருதினர். குழந்தை மனப்பான்மையை இழந்து விடாதவனே பெரியோன் என்றனர். ஒரு குழந்தை தவழ்ந்து சென்று கிணற்றில் விழுந் தருவாயிலிருந்தால், நாம் உடனே ஓடிச்சென்று அதனை எடுத்துக் கொள்கிறோமல்லவா? ஆதலால், உயிர்களின் மீது அருளும், நேர்மையானவற்றைச் செய்வதில் அவாவும் மக்களது இயற்கையிலேயே அமைந்துவிட்ட இயல்புகள் என்பது விளங்க வில்லையா? இவ்வாறு இயற்கையாகவேயுள்ள நற்குணங்களை மேன்மேலும், அபிவிருத்தி செய்து விளங்க வைப்பது நமது கடமை.

> முனிவர்களும் நாமும் ஓரினத்தவர்கள்தாம். நாம் முயன்றால், முனிவர்களாகிவிடலாம்.

> அருள் என்ற குணம் எல்லா மக்களிடத்தும் உள்ளது; வெட்கவுணர்ச்சி மக்கள் எல்லாரிடத்தும் உள்ளது. மரியாதை என்ற உணர்ச்சி மக்கள் எல்லாரிடத்தும் உள்ளது. நன்மை தீமை என்ற பகுப்புணர்ச்சி மக்களெல்லாரிடத்தும் உள்ளது.

இவை மென்ஸியஸ் வசனங்களில் மிகப் பிரபலமானவை. நம்மிடத்தே மக்களியல்பும் விலங்கியல்பும் உள்ளன. இவற்றின் வேறுபாடுகளைத் தெரிந்து முற்கூறிய அருள் முதலிய குணங் களைப் பெருகச் செய்தல்வேண்டும்.

> அருட்குண மில்லாதவன் மக்களினத்தவன் அல்லன்...
> ஒருவனிடத்தே பெருந்தன்மையும் உண்டு, சிறு தன்மையும் உண்டு.
> பெருந்தன்மையைப் பேணுபவன் பெரியோன் ஆகிறான்; சிறுதன்மையை வளர்ப்பவன் சிறியோன் ஆகிறான்.

இவ்வாறாக, மென்ஸியஸ் கொள்கைகளில் ஓர் லட்சியம் கடைப் பிடிக்கப்படுகிறது. இந்த லட்சியத்தை 'ஆன்ம விகாசம்' என்று குறித்திட்டு, இதனை விடியற்காலத்து மென்காற்று என உவமிப்பர். இம் மென்காற்றைப் பகற்பொழுது முழுவதும் மலினப்படாது பேணிக் காத்துக் கொள்வதுதான் நீதியொழுக் கத்திலுள்ள முக்கிய பிரச்சினை என்பர்.

தனிமனிதன் என்ற அளவில் நின்றுவிடாது, அரசியல் பற்றியும் மென்ஸியஸ் திண்ணமான கொள்கைகளையுடையவர். ஜனநாயக ஆட்சியையே இவர் வற்புறுத்தினர். இதுபற்றி இவர் கொண்டுள்ள கொள்கைகள் வருமாறு:

மக்கள் அனைவரும் சமம்.

அரசியல் அங்கங்கள் மூன்றனுள், ஜனங்களே முதற்படியாக முக்கியமானவர்கள்...அரசன் கடைசியாகத்தான் முக்கியமானவன்.

ஒருவனுக்கு மேற்பதவி கொடுப்பதும் தண்டிப்பதும் அரசியலதிகாரிகள் சொல்வதைப் பொறுத்திருக்கக்கூடாது; பொது மக்கள் கூறுவதையே பொறுத்திருக்க வேண்டும்.

அரசாட்சி பொது மக்களது நன்மையின் பொருட்டே யாதல் வேண்டும். அரசன் தனது இன்பநுகர்ச்சிக்குரிய பூம்பொழில், இசையரங்கு முதலியவற்றைப் பொது மக்களோடு பகிர்ந்து நுகர்தல் வேண்டும்.

அரசனுக்கும் பொதுமக்களுக்குமுரிய தொடர்புகள் பரஸ்பரமாயுள்ளவை. அரசன் தனது அமைச்சர்களைக் கைகால்களெனக் கருதுவானாயின், அவர்களும் அவனைத் தங்கள் உதிரம் என்றும் இதயம் என்றும் போற்றுவார்கள். அவன் அவர்களை நாய்கள் குதிரைகள் என்று நினைப்பானாயின், அவர்களும் அவனைச் சாதாரணக் குடிஜனங்களில் ஒருவனென நினைப்பார்கள். அவன் அவர்களை மலம் என்றும் அற்பப் புல் என்றும் கருதுவானாயின், அவர்களும் அவனைக் கள்வனென்றும் பகைவன் என்றும் கருதுவார்கள்.

மேலதன் விளைவாக, அரசனுக்கு விரோதமாய்ப் புரட்சி புரியும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு.

அரசன் தெய்வ ஆணையை மேற்கொண்டு ஆட்சிபுரிகிறான். அவன் கொடுங்கோன்மை செலுத்துவானாயின், அவ் ஆணையை அவன் இழந்து விடுகிறான்.

ஆழ்ந்து நோக்கினால், மக்கள் மனமார ஒத்துக்கொள்வதினாலேதான், அரசன் ஆட்சிபுரிகிறான்.

இம்மேற்கோள்களினால், தயாரூப-அரசாட்சிக் கொள்கையையே (**Benevolent Government**) மென்ஸியஸ் விரித்து விளக்கினரென்பது புலனாகும். இவரது நூல்களும் ஆரம்பப்பள்ளிச் சாலைகளில் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்பட்டு வந்தன. இதனால் இவர் சீன மக்களது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டமை விளங்கும்.

**நான்காவது தொகுதி**

நான்காவது தொகுதி நூல் கன்ப்வூஸியஸ் முனிவரின் பொறுக்குமணிகள் (Analects of Confucius). இம் முனிவரின் மரணத்திற்குப் பிறகு இந்த உரையாடல்கள் இவரது மாணாக்கர் 'ட்ஸேங்' 'யு' என்ற இருவரையும் பின்பற்றியவர்களால் தொகுக்கப்பட்டனவாகலாம். இவைகளிற் பெரும்பான்மை இப் பேரறிஞர் தமது சிஷ்யர்களோடும், தம்மிடம் தத்துவ விசாரணை செய்து வந்தவர்களோடும் நிகழ்த்திய ஸம்பாஷணைகளாக உள்ளன. சிறுபான்மை மாணுக்கர்களுடைய உரையாடல்களும் இச் சிறந்த நூலிற் காணப்படுகின்றன.

இந்நூல் கிடைத்த விவரம் அறிதற்குரியது. கி. மு. 213-ல் சின் ஷிஹ் ஹ்வாங் என்ற ஒரு சக்கரவர்த்தி தன்னுடைய ஆட்சிமுதல் ஒரு புதிய சீன சரிதத்தைத் தொடங்க எண்ணினான். பண்டை நூல்கள் எல்லாவற்றையும் அக்கினிபகவானுக்கு இரையாக்கிவிட வேண்டுமென்றும், கல்வியில் வல்ல சீனத்து அறிஞர்களையெல்லாம் உயிரோடு புதைத்துவிட வேண்டுமென்றும் உத்தரவு செய்தான். செய்யுட்கோவை (Book of Odes) சரித்திரநூல் (Book of History) இவ்விரண்டையும் பற்றிப் பேசுபவர்களுக்கும், தன்காலத்துக்கு இழிவு தோன்றும் படி பூர்வகாலத்தைப் புகழ்ந்துரைப்பவர்களுக்கும், இவர்களது சுற்றத்தார்களுக்கும் இதே கதிதான் விதிக்கப் பட்டது. உத்தரவு பிறந்த 30 நாட்களுக்குப் பின்பு எவரிடத்தேனும் பண்டை நூல் யாதேனும் காணப்படுமாயின், அவர்கள் சரீரத்தில் சூடு பொறித்து, பெருமதில் கட்டுவதற்கு நான்கு ஆண்டுகள் வேலையாளாகப் போகவேண்டுமென்றும் கட்டளையிடுவித்தான். இவ்வாறெல்லாம் செய்தால் சீன சரித்திரம் தனது காலம் முதல் புதிதாகத் தொடங்குவதாகுமென்றும் கருதினான். ஆனால் இவனது ஆட்சிக் காலம் மிகச் சுருங்கியதாய்விட்டது. சில அரிய பழைய நூல்களும் அழிந்து போகாமல் தப்பிவிட்டன. இங்ஙனம் தப்பியவற்றுள் ஒன்று இவ்வுரையாடல் நூல். கன்ப்வூஸியஸ் முனிவர் வாழ்ந்துவந்த வீட்டின் சுவர் இடுக்கிலே இதன் பழம் பிரதி யொன்று சுமார் கி. மு. 150ல் கண்டெடுக்கப்பட்டது. வெறொரு பிரதியும் அடுத்துள்ள ஒரு சிற்றரசு நாட்டில் அகப் பட்டது. இப் பிரதிகள் பழைய சீன லிபியில் எழுதப்பட்டிருந் தன. புது லிபியில் எழுதிப் பொருளை விளக்கிய பெருமை இம் முனிவரின் வம்சத்தில் வந்த ஓர் அறிஞருக்கு உரியது.

இந்நூலில் பத்துத் தொகுதிகள் உள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு உரையாடற் பகுதிகள் உள்ளன. இப் பகுதிகள் மூன்று முதல் நாற்பத்தேழு வரை பல இயல்களாகப்

பிரிக்கப்பட்டிருக்கின்றன. பகுதிகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைப் பற்றியது. பொதுப்படக் கூறுமிடத்து, அடிப்படைக் கொள்கைகள் பற்றியும், ஆட்சி முறை பற்றியும், நீதி, ஆசாரம் முதலியன பற்றியும், நல்லியல்பு பற்றியும், கல்வி மாணாக்கரியல்பு முதலியன பற்றியும், கன்ப்யூஸியஸ் முனிவரைப் பற்றியும், பண்டைக் காலத்துப் பெரியோரைப் பற்றியும் இப்பகுதிகள் அமைந்துள்ளன. சில உதாரணங்கள் வருமாறு:

உண்மையுள்ளவனுக்கு கவலையில்லை; அறிவிற் சிறந்தவனுக்கு மயக்கம் இல்லை; தைரியமுள்ளவனுக்கு அச்சமில்லை.

நீ நன்மைக்கு நன்மை செய்தால், மக்கள் நன்மை செய்தலில் முற்படுவார்கள். நீ தீமைக்குத் தீமை செய்தால், மக்கள் தீமை செய்யக்கூடாது என்று எச்சரிக்கப்படுகிறார்கள்.

தீமைக்கு நன்மை செய்வது ஒருவனது பெருந்தன்மைக்கு அடையாளம். நன்மைக்குத் தீமை செய்வது அவன் குற்றவாளி என்பதற்கு அடையாளம்.

* * *

நேர்மையான நெறியைக் கண்டபொழுது, அதன் வழியே செல்வதில் நான் தவறக்கூடாது. எனது பிழையைக் கண்ட பொழுது, அதனைத் திருத்துவதில் நான் பின்வாங்கக்கூடாது. இவைகளைப்பற்றித்தான் நான் எப்பொழுதும் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்.

ஒருவன் பிழை செய்துவிட்டு அதைத் திருத்தாமல் போனால், அவன் மீண்டும் பிழை செய்தவனாகிறான்.

சிறந்த இயல்புள்ளவன் தன்னைத் தானேகடிந்துகொள்ளுகிறான். அவ்வியல்பு இல்லாத பொதுமகன் மற்றவர்களைக் கடிந்துரைக்கிறான்.

கௌரவமுள்ளவன் தனது நல்லியல்பைக் கருதுகிறான். கீழ் மகன் தனது பதவியைக் கருதுகிறான்; கௌரவமுள்ளவன் நீதியை விரும்புகிறான்; கீழ்மகன் பிறரது தயவை விரும்புகிறான்.

பகட்டான பேச்சு, யார் நல்லவன்? யார் தீயவன்? என்பதை அறிந்துகொள்ள முடியாதபடி நம்மை மயக்கி விடுகிறது. சிறு நஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாதவன் பெருஞ் செயல்களை அடிக்கடி கெடுத்து விடுவான்.

* * *

அரசனாயிருப்பது கஷ்டந்தான். ஆனால், அமைச்சனாயிருப்பதும் எளியதன்று.

அரசனிடத்தில் ஒருவன் பேசும்பொழுது மூன்று விஷயங்களைக் கவனித்தல் வேண்டும். கேட்கும் முன் பேசினால், அது பொடுதாரித்தனமாகும். கேள்வி கேட்டபொழுது பேசாதிருந்தால், அது மனத்தைத் திறந்து சொல்லாமை யாகும். அரசனது மனப்போக்கையும் சமய சந்தர்ப்பத்தையும் தெரிந்து பேசாமற் போனால், அது குருட்டுத்தனமாகும்.

அரசாங்கச் சட்டங்களால் மக்களை நெறிப்படுத்துக. தண்டனை வரும் என்ற அச்சத்தால் அவர்களைப் பழக்குக. மக்கள் சிறைவாசத்தினின்றும் தப்ப முயல்வார்கள்; ஆனால், மானம், வெட்கம் என்பன அவர்களுக்கு இல்லாமற் போய் விடும். நீதியினாலே மக்களை நல்வழிப்படுத்துதல் வேண்டும். அச்சத்தால் அவர்கள் அடங்கி ஒழுகச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு மானம், பெருந்தன்மை ஏற்படும்.

தனது நல்லொழுக்கத்தால் செங்கோன்மை புரிபவன் துருவ நட்சத்திரம் போன்றவன். இது சலனமின்றித் தன்னிடத்திலேயேயிருக்க, மற்றை நட்சத்திரங்களெல்லாம் இதனைச் சுற்றி வருகின்றன.

ஓர் அரசன் தானே நீதி யொழுக்கத்தைப் பின்பற்றுவானாயின், மக்கள் அவன் ஏவ வேண்டாதபடியே அவனது கட்டளையைப் போற்றுவார்கள். அவனே நீதி யொழுக்கத்தைப் பின்பற்றாமற் போனால், எவ்வளவு வற்புறுத்தி ஏவினாலும் அது பயன்படமாட்டாது.

அரசின் முக்கியமான கொள்கைகள் யாவை? மக்களுக்குப் போதுமான உணவு இருத்தல் வேண்டும். போதுமான சேனை இருத்தல் வேண்டும். மக்கள் அரசனிடத்திலே நம்பிக்கையுடையரா யிருத்தல் வேண்டும்.

இம் மூன்றினுள், ஏதாவது ஒன்றைக் கைவிடும்படி நேர்ந்தால், எதனைக் கைவிடலாம்?

நான் முதலிற் சேனையைக் கைவிட்டு விடுவேன்.

மற்றை இரண்டனுள், முதலாவது எதனைக் கைவிடலாம்? மக்களுக்குப் போதுமான உணவு இல்லை என்றாலும் அதனைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் அரசனிடத்தில் நம்பிக்கையில்லாமற் போனால், ஒரு தேசீய ஜாதி வாழ முடியாது.

வழக்குகளை விசாரிப்பதில் நான் பிறரைப்போலவே சிறந்து விளங்குகிறேன். ஆனால், வழக்குக்களே ஏற்படக் கூடாது என்பதுதான் எனது லட்சியம்.

* * *

தெரிந்தது இன்னது என்பதை அறிவதும், தெரியாதது இன்னது என்பதை அறிவதும் தான் அறிவாளியின் சிறந்த இயல்பாகும்.

கற்கவேண்டும் என்று கவலை கொள்ளாதவனுக்கு நான் கற்பிக்க மாட்டேன். விஷயங்களைத் தானாகவே தெளிவாக்கிக்கொள்ள முயலாதவனுக்கு நான் விளக்க முற்பட மாட்டேன். நான் கால்பகுதியை விளக்கிய பிற்பாடு, ஏனை முக்கால் பகுதியையும் வீடு சென்று தானாகவே சிந்தித்து அதன் பொருண்மை முழுவதையும் உணர்ந்துகொள்ளாதவனுக்கு நான் மேலும் கற்பிக்கும் சிரமத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன்.

* * *

இலக்கியக் கல்வியில் மற்றையோரைப் போலவே நான் சிறந்து விளங்குகிறேன். ஆனால் கற்ற கல்வியின் வழியே நின்று சான்றோனாவதில் நான் வெற்றி பெற்றுள்ளேன் என்று கருத முடியவில்லை.

எனது நல்லியல்புகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

எனது கல்வியைப் புறக்கணித்தல் கூடாது.

கல்வி அறிவைப் பெருக்கி, அதன் வழியே இடையீடின்றி ஒழுகுதல் மகிழ்ச்சியைத் தருவதல்லவா?

ஒத்த உணர்ச்சியுடன் மக்கள் வெகு தூரத்திலிருந்து தன்னிடம் வருதல் இன்பம் தரத்தக்கதல்லவா?

நமது இளைஞர்கள் தம் குடும்பத்திற்கு நல்ல புதல்வர்களாயிருத்தல் வேண்டும். சமுதாயத்தில் அடக்கமும் வணக்கமும் உடையவராயிருத்தல் வேண்டும். தமது ஒழுக்கத்தில் விழிப்புடையவர்களாயிருத்தல் வேண்டும். பொதுமக்கள் மீது அன்புடையராயிருத்தல் வேண்டும். தயை, தாட்சணியமுள்ளவர்களோடு நெருங்கிப் பழகுதல் வேண்டும். இவற்றையெல்லாம் அறிந்ததன் பிற்பாடு, மேலும் அவர்களுக்குச் சக்தியிருக்குமானால், அவர்கள் நூல்களைக் கற்றுக்கொள்ளட்டும்.

இயற்கையிலேயே நல்லறிவு வாய்ந்தவர்கள் மக்களில் முதல்தரத்தினராவர். கல்வியின்மூலமாய் அறிவு வாய்ந்தவர்

அடுத்த படியினர். கேவலம் உழைப்பினால் கல்வியைத் திரட்டிக்கொள்பவர் மூன்றாவது படியினராவர். கல்வியில் மந்தமாயிருந்து கற்கமாட்டாதவர்கள் கடைசிப் படியினர்

கல்வி செய்யுட் கோவையோடு தொடங்குகிறது; தக்க நல்லொழுக்கத்தினால் ஊற்றமடைகிறது; இசைப்பயிற்சியால் முற்றுப் பெறுகிறது.

ஒரு வாக்கியந்தான் செய்யுட் கோவை அனைத்திற்கும் உயிர் போன்றது. அது 'உன் இதயத்தைச் செம்மைப் படுத்திக்கொள்' என்பதே.

சிந்தியாதபடி வாசித்தல் மனத்தில் குழப்பத்தை உண்டு பண்ணும். வாசியாதபடி சிந்தித்தல் மனத்தின் சமநிலையைக் கெடுத்துவிடும்.

நினைவாற்றலைப் போற்றும் கல்வி மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையிறுக்க உதவும். ஆனால், ஆசிரியனாய் அமைவதற்குப் போதியதாகாது.

முற்காலத்தில் தம் பொருட்டே மாணவர்கள் கற்று வந்தார்கள். இன்று மாணவர்கள் பிறர்பொருட்டுக் கற்கின்றார்கள்.

T. 6271

இங்குக் குறித்த உரையாடல்கள் நம் அறிவை முற்றும் வசீகரித்து விடுகின்றன. கன்ப்வூஸியஸ் முனிவரது நல்லியல்புகளும், தம் காலத்தவரைக் குறித்து அவர் கூறுவனவற்றின் சிறப்பியல்புகளும், தம் மனத்தில் தோன்றுவனவற்றைச் சிறு சிறு தொடர்புள்ள வாக்கியங்களைக் கொண்டு தொனிப் பொருள் தோன்றும்படி அமைக்கும் ஆற்றலும் பெரிதும் போற்றத்தக்கன. இப் பேரறிஞர் நம்மைக் கவர்ந்துவிடுகிறார். இவர் சொல்லுவது சில சமயங்களில் முரட்டுத்தனம்போல் தோன்றுகிறது. ஆனால், அம் முரட்டுத்தனத்தினூடே இவரது அன்பும் வெளிப்படுகிறது. உரையாடற் பகுதியின் பெருமை இங்குக் கூறியவற்றால் ஒருவாறு விளங்கும்.

சீனத்தில் மிகப் பூர்வ காலத்திலே கன்ப்வூஸியஸ் முனிவரின் கொள்கை மட்டும்தான் இருந்தது என்று கொள்ளுதல் தவறாகும். அவர் காலத்திலேயே லே ஓ-ட்ஸெ என்பவர் வேறொரு வகைச் சமயத்தை நிறுவினர் என முன்பே கூறியுள்ளோம். இச்சமயத்திற்கு டா-ஓஸம் என்று ஆங்கிலத்தில் பெயர்.

## லே ஓ-ட்ஸெ

லே ஓ-ட்ஸெ 'குஹ்ஸீயென்' நகரத்தில் பிறந்தார். கன்ப்வூஸியஸ் முனிவருக்குச் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்

கி. மு. 571-ல் தோன்றியவர் என்பது சிலரது துணிபு; சிறிது பிற்பட்டவர் என்பது வேறு சிலரது துணிபு. இவர் கல்வியில் சிறந்த ஒரு பழைய குடும்பத்தில் பிறந்தவர். ராஜதானியிலுள்ள அரசியல்-பிரமாணங்களைப் பாதுகாக்கும் உத்தியோகத்தில் இவர் இருந்தார்; நடுப் பிராயத்தில் உத்தியோகத்தை விட்டு நீங்கித் துறவிபோல் வாழ்ந்து வந்தனர். தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாக இவர் வாழ்ந்தவர் என்று தெரியவருகிறது.

இவர் இயற்றிய சிறந்த நூல் 'டா-ஓ' என்று பெயர் பெறும். இதனாலேயே இவரது கொள்கைகளுக்கு டா-ஓஸ்ம் என்ற பெயர் வழங்குகிறது. இது ஒரு சிறு நூல்தான்; 5,000 சொற்களே இதில் உள்ளன. ஆனால், இதன் பெருமையை இப்பொழுது சீன மக்கள் நன்கறிந்து பெரிதும் போற்றிவருகிறார்கள். கன்ப்வூஸியஸ் முனிவரின் கொள்கையைப் பின்பற்றுபவர்களைக் காட்டிலும், இவரது கொள்கையைப் பின்பற்றுபவர்களே தற்காலத்தில் மிக அதிகம் என்று சொல்லலாம். சீன நூல்கள் அனைத்திலும் டா-ஓ நூலே மிகப் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் 12 மொழி பெயர்ப்புக்களும், ஜெர்மன் மொழியில் 9 மொழி பெயர்ப்புக்களும் உள்ளன.

கன்ப்வூஸியஸ் முனிவரிடத்திலே சாமானிய மக்களுக்கு வேண்டும் திட்பமான அறிவு மிகுந்து காணப்படுகிறது. ஆனால், லே ஓ-ட்ஸெ முனிவரிடத்தில் மதி நுட்பமும் ஆழ்ந்த கருத்தும் ஒள்ளிய அறிவும் காணப்படுகின்றன. கி. மு. 136-ல் ஹான் வூட்டி என்ற சக்கரவர்த்தியால் கன்ப்வூஸியஸ் முனிவரின் கொள்கை அரசாங்கக் கொள்கையாக நிறுவப்பட்டதற்கு முன், லே ஓ-ட்ஸெ முனிவரின் கொள்கையே பெரும்பாலாராலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கி. மு. 136-க்குப் பின் அரசியல் அதிகாரிகள் எல்லாரும் கன்ப்வூஸியஸ் முனிவரின் கொள்கைகளையே பின்பற்றினர். ஆனால் ஆசிரியர்களும், சுவாங்-ட்ஸே முதலிய கவிஞர்களும் லே ஓ-ட்ஸெ கொள்கைகளையே பின்பற்றினர். இந்த ஆசிரியர்கள் அரசியல் அதிகாரிகளாக அமைந்த காலத்தில், கன்ப்வூஸியஸ் முனிவரை வெளிப்படையாகவும், லே ஓ-ட்ஸெ முனிவரை மறைவாகவும் போற்றி வந்தனர்.

இவ் இருவரது கொள்கைகளும் தம்மில் பெரிதும் வேறுபட்டன. கன்ப்வூஸியஸ் கூறுவனவற்றில் அறிவுரையைக் காணலாம். ஒரு சமுதாயம் நல்ல நிலையில் ஒழுங்குற நடைபெற வேண்டுவதைப்பற்றியே இம் முனிவரின் கொள்கைகள் அமைந்துள்ளன. இந்த ஒழுங்கு நியதிகள் மனோபாவனைகளுக்கும் ஆன்ம வேட்கைகளுக்கும் இடந் தருவன அல்ல. அன்றியும்,

இக்கொள்கைகள் சாமானிய உலகிலுள்ள நிகழ்ச்சிகளையும் நியதிகளையும் பற்றியன. இந்நிலையிலும் இவை மனோ பாவனைக்கு இடங்கொடுப்பன அல்ல. எனவே, இவற்றால் வாசிப்பவர்க்கு உத்ஸாகமோ மனக்கிளர்ச்சியோ உண்டாவ தில்லை. ஆனால், லேஓ-ட்ஸெயின் மணிமொழிகளில் உற்சாகமும் மனக்கிளர்ச்சியும் உண்டாகின்றன. கன்ப்யூஷியஸ் மதத்தினர் கல்வியையும் பண்பாட்டையும் பகுத்தறிவையும் மிக மேலாக மதித்திருந்தனர். லே ஓ-ட்ஸெ மதத்தினர் இவைகளை விடுத்து இயற்கைகளையும் உள்ளுணர்ச்சிகளையும் மிக மேலாகக் கருதினர். கன்ப்யூஷியஸ் முனிவர் கண்கூடாகக் கண்ட உண்மை களில் அறிவைச் செலுத்தினர். லே ஓ-ட்ஸெ ஆழ்ந்து மறைந்து கிடந்த உண்மைகளை நோக்கினர். மனிதன் என்ற நிலையில் நல்லவனாக இருந்து, தந்தை என்ற நிலையில் புதல்வர் புதல்வியர்க்குச் செய்ய வேண்டும் கடமைகளைச் செய்து, குடும்பத் தலைவன் என்ற நிலையில் குடும்பத்தினரை உணவு முதலியவற்றால் திருப்தி செய்து வாழ்ந்த ஒருவன், உலகத் தோற்றத்தின் அழகையும், அதன் ரகஸியத்தையும், உயிர் வாழ்வின் பொருண்மையையும், ஆன்மாவின் சலனங்களையும், இக வாழ்வுக்குப் பிற்பாடு அறியவொண்ணாதபடி மறைந்து நிற்கும் பரவாழ்வைக் குறித்த வேட்கை முதலியவற்றையும் அறிய வேண்டாமா? இவற்றைப் பற்றியனவே லே ஓ-ட்ஸெ யின் முக்கியமான கொள்கைகள்.

இவர் இயற்றிய நூல் 81 அதிகாரங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரமும் முரணணி வாக்கியம் ஒன்றில் தொடங்கி, இவ்வாக்கியத்தோடொத்த பொருண்மை யுள்ள வேறு சில வாக்கியங்களால் தெளிவுறுத்தப்பட்டுள்ளன. ஒன்றன் மொழிபெயர்ப்பு வருமாறு :

நீர்சூ ழுலகம் நித்திய மாகுங்காண்.
ஒருமந் நித்தியத் தின்உறு காரணம்
ஆகுந் தனக்கென வாழ்விலை. ஆதலின்
வேருற்று நின்று விளங்கும் நெடிதே.

ஆதலின்,

இன்னதோர் காரணம் தேர்ந்த இருடியும்
தன்னைமுன் வைக்கிலன், இறுதியில் வைக்குவன் ;
அன்னவன் முந்துற் றமைந்திடல் காண்குவன் ;
செந்நெறி யாளர்இவ் வுண்மை தெளிகுவார்.

நினைத்தறி யாமலே நேர்ந்த துடலென்று
இனைத்திற மோர்தலின் நீள்காவல் எய்துமால்.
தனைப்பொருட் டாகத் தான்வாழ்தல் இல்லையேல்,
தனையுண்மை யாகத் தானுணரு மன்றோ ?

இங்கே முதற் செய்யுளில் 'நித்தியம்' என்பதும் 'வாழ்விலை' என்பதும் முரண். இக்கருத்தைத் தொடர்ந்து பின் இரண்டு செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முரண்படு கருத்து அமைந்துள்ளது. இவை 'ஆதலின்' எனத் தொடங்குகின்றன.

**பிற சீன அறிஞர்கள்**

இவர் காலத்திற்குச் சுமார் ஒரு நூற்றாண்டு பிற்பட்டு, சுவாங்-ட்ஸெ என்பவர் தோன்றினர். எனவே, இவர் மென்ஷியஸ் காலத்தில் வாழ்ந்தவராவர். இவர் லே ஓ-ட்ஸெயின் கொள்கை உறுதியுற்றுப் பரவுவதற்குக் காரணமாயிருந்தனர். லே ஓ-ட்ஸெ தமது கருத்துக்களைச் சிறுசிறு மணிமொழிகளால் வெளியிட்டனர். சுவாங்-ட்ஸெ அக்கருத்துக்கள் பற்றித் தத்வார்த்தம் நிரம்பிய நீண்ட கட்டுரைகளை எழுதினர். லே ஓ-ட்ஸெ உள்ளுணர்வு மயமாயிருந்தனர்; சுவாங்-ட்ஸெ அறிவு மயமாய் விளங்கினர். லேஓ-ட்ஸெ உபதேசித்து வந்தனர்; சுவாங்-ட்ஸெ பிறமதங்களையும், பிறர் கொள்கைகளையும் இழித்துப் பரிகசித்தனர். சுவாங்-ட்ஸெ கி. மு. 265-ல் மரண மடைந்தனர்.

கன்ப்வூஷியஸ் லௌகிகக் கொள்கைகளைப் பரப்பினர். லே ஓ-ட்ஸெ ஆன்ம ரகஸியக் கொள்கைகளை வெளியிட்டனர். இக்கொள்கைகளேயன்றி, சமயக் கொள்கைகளும் மிகப் பூர்வ காலத்தில் தானே இருந்தன. இவற்றை உபதேசித்த அறிஞரது பெயர் மோட்-ஸெ. இவர் கி.மு. 4-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். இவர்தாம் பிற்காலத்தில் தோன்றிய கிறிஸ்தவ சமயக் கொள்கையோடு ஒத்த கொள்கைகளைப் பரவச் செய்தவர். அருள் அல்லது சர்வஜீவ தயையே சமூகத்திற்கும் உலகத்துச் சமாதானத்திற்கும் அடிப்படை என்று உபதேசித்தனர். தெய்வத்தின் முன்னிலையில் எல்லா மக்களும் சமம் என்ற கொள்கையையும் இவர் வற்புறுத்தினர். கன்ப்வூஷியஸ் முனிவரின் கொள்கைகள் பலவற்றையும் இவர் கண்டித்தனர். சடங்கு முதலிய கிரியைகளையும் அந்திம கருமங்களையும் மக்களை வறுமைப்படுத்தும் வீண் செலவின் காரணம் என்று போதித்தனர். இசைப்பயிற்சி கூடாது என்று மூன்று கட்டுரைகள் வரைந்தனர். விதியில் நம்பிக்கை கொண்ட கன்ப்வூஷியஸ் முனிவரை மறுத்து, விதி என்பது இல்லையென மூன்று கட்டுரைகள் எழுதினர். ஆடம்பர வாழ்க்கையை அறவே ஒழிக்க வேண்டும் என்பது இவர் கருத்து. எல்லாவற்றிற்கும் மேலாக, அந்நிய ராஜ்யங்களைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் போர் செய்தல் தகாது என்று உபதேசித்தனர்.

யாரெரா டும்பகை கோளில தானபின்
போரெரா டுங்கும் புகழொடுங் காது
(மந்தரை சூழ்ச்சி. 12)

என்று கம்பர் கூறுவதும் நோக்கத்தக்கது. கன்ப்யூஷியஸ் முனிவரின் காலத்திற்குப் பிற்பாடு இரண்டு நூற்றாண்டுகளாக இவருடைய செல்வாக்குச் சீன தேசத்தில் மிகுந்திருந்தது.

மோட்-ஸெயின் பின், கி. மு. 3-ம் நூற்றாண்டில் ஷாங்-ட்ஸெ என்பவர் தோன்றினார். இவர் நமது தேசத்துக் கௌடில்யரைப் போலப் போர் வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி உபதேசம் பண்ணிவந்தார். உழுந் தொழிலையும் இவர் பெருமையாகவே கொண்டிருந்தனர். ஆனால் அவ்வாறு கொள்ளுதலின் காரணம் உழவர் தேசபக்தி நிரம்பிய போர் வீரர்களாவதற்குத் தக்கவர்கள் என்பதனால் தான்.

பல குடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் (குறள் 1034)

என்றனர் நமது வள்ளுவரும்.

இச் சீன அறிஞர் எழுதிய பல கட்டுரைகளும் நேரடியான உபதேசங்களைத் தெளிவாய்க் கூறுகின்றன.

உபதேசங்கள் இவ்வாறாக, பல சிறந்த கவிஞர்களும் சீன தேசத்தில் தோன்றினர். இக்கவிஞர்களது செய்யுட்கள் சில தமிழ்நாட்டு மரபுகளை ஒத்துக் காணப்படுகின்றன. பிள்ளைத் தமிழில் 'சிற்றில் சிதைத்தல்' என்ற பகுதியைப் பலரும் அறிவர். இதில் தலைவியின் சிற்றிலைத் தலைவன் அழித்துவிடக்கூடாது என்று தலைவி கூறும் பொருள் காணப்படும். பின்வரும் மொழி பெயர்ப்பு இக் கருத்தை உட்கொண்டது:

அகல நின்றருள், ஐய என் சிற்றிலை
அணுகிடேல்; இந்தச் சந்தனக் கன்றுதான்
துகள்படும் மிதித்தால்; எனக் கன்னது
துயரஞ் சற்றுந் தருவதன் றென்னினும்,
புகலி லிவ்வுலகஞ் சொலும் தீமொழி
பொறுப்ப தெங்ஙனம்? போகிடு; நின்மிசை
நிகரில் காத லெனக்குள தன்னதை
நெஞ்சத்தால் ஆற்றுமா றறியே னரோ.

கவிஞர்களிலே ஒருவர் சு-யுவான் (கி. மு. 343-290). இவருடைய கவிதைகளில் ஆழ்ந்த உணர்ச்சியும் தீமையையே நோக்கும் மனோபாவனையும் புலப்படுகின்றன. இவைகளைக் கற்றுணர்வது மிகக் கடினம் என்று கூறுவர். இவரது அரசன் ஒன்பது ஆண்டுகள் இவரை நாடு கடத்தி விட்டனன். ஊர் திரும்பி வருமுன் இறந்து விடுவோமோ என்ற அச்சம் இவரை மிக மிக வருத்தியது. அப்போது 'பேரழைப்பு' என்று பொருள் படும் ஒரு கவிதையை இவர் இயற்றினர். அதில் தமது ஆன்மாவை

விளித்துத் தம் உடலை விட்டு நீங்கி விடாதே என்று அரற்று கின்றார்.

இவருக்குப்பின் டாங் கவிஞர்கள் என்ற கவிதை மரபினர் தோன்றினர். இவர்களுள் கவியரசர் என்று கூறத் தக்கவர் லீ-போ என்பவர். இவர் கி. பி. 701 முதல் 762 வரை வாழ்ந் தவர். இவரது நண்பராக விளங்கிய ரூ-பு என்பவரும் ஒரு சிறந்த கவிஞர். லீ-போவின் கவிதை ஒன்றின் மொழி பெயர்ப்பு பின்வருமாறு :

இதழ் விரிந்து மலர்ந்தது கண்ணிணை ;
எத்தனை யழகு ! எத்தனை ! எத்தனை !!
கதவின் அன்னவள் ஒன்றி நிற்கின்றதிற்
காணுஞ் சாந்தி கணக்கிட லாகுமோ !
நத மிகுந்த புருவத் துடிப்பினில்
நலியும் வெந்துயர் நாணி நடுங்குமால் ;
மிதஞ்சரிந்த கபோலத்தின் மீதிலே
வீழும் மென்பனி மின்னி யொளிருமால்.

எங்குச் சென்றனன் ? இன்னுயிர்க் காதலன்
எங்குச் சென்றனன் ? யாரும் அறிந்திரோ ?

கவிதைகளேயன்றி, பல கதைகளும் சீனத்து அறிஞர்களால் எழுதப்பட்டன. பல சிறந்த கதாசிரியர்களும் கதைகள் இயற்றி யுள்ளார்கள். இக்கதைகளிற் பல பூத பைசாசங்களைப் பற்றித் தோன்றியவை. இளையவள் பெற்றெடுத்த குழந்தையை மூத்தாள் தன் குழந்தை என்று நீதிபதி முன் வழக்காடியதும், இருவரும் குழந்தையைத் தத்தம் பக்கத்திற் பிடித்திழுத்ததும், குழந்தை அழுது வருந்துவதைக் கண்டு இளையவள் மனம் துன்புற்றதும், இதன் காரணமாக இளையவளுக்கே குழந்தை உரியது என்று தீர்ப்பு அளித்ததும் மிகப் பிரசித்தமான ஒரு கதையேயாகும். இது இங்-சவோ என்பவர் (கி.பி. 178-197) எழுதிய கதைகளில் ஒன்று. ஜாதகக் கதையிலும் இது காணப் படுகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கிக் கதை எழுதும் முயற்சி சீன தேசத்தில் நடைபெற்று வருகிறது. தற்காலத்துள்ள கதைகளும், சிறு கதைகளும் சீன மக்களது வாழ்க்கையை ஒட்டி எழுந்தவை. இவைகளிற் பல மிகமிகச் சிறந்தன என்று இலக்கிய அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். மிகத் தொன்மையான நாகரிகம் படைத்த இம்மக்களின் இலக்கியப் பெருமை இங்குக் கூறியவற்றால் ஒருவாறு விளங்கும்.

# பாரத தேசத்து இலக்கியங்கள்

(இரண்டாம் பகுதி)

# பாரத தேசம்

## தொன்மையைக் கற்பித்தல்

முப்பத்தைந்து அல்லது நாற்பது நூற்றாண்டுகளுக்கு முன்பாக, நமது தேசத்தின் மேட்டு நிலங்கள், காடுகள் இவற்றின் வழியாக ஆரியர்கள் என்று வழங்கிய ஒரு மக்களினத்தார் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் முதன் முதல் தோன்றியது எங்கே என்பது நமக்கு உறுதியாகத் தெரிய மாட்டாது. ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நம் தேசத்தின் வடமேற்குப் பகுதியை இவர்கள் அடைந்தார்கள் என்பதும், வெகு காலமாக 'ஆர்யா' என்று வழங்கிய பாரஸிகத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து அவர்கள் வந்தனர் என்பதும் சரித்திரக்காரர்கள் ஒப்புக் கொண்ட செய்திகள்.

இவர்கள் வருவதற்கு முன்பாக நமது தேசத்திற் பல இடங்களிலும் வசித்துவந்த கருநிற மக்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று இவர்கள் கருதிக் கொண்டார்கள். இவர்களுடைய இனப் பெயராகிய ஆரிய என்ற சொல்லுக்கு நிலத்தில் உழுபவன் அல்லது உழைப்பவன் என்று பொருள். இந்தச் சொல்லிற்கும் ஏக்கரா, இரான் முதலிய சொற்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவர்களுடைய இனம் வியக்கத்தக்கவாறு பெருகிக் கொண்டே வந்தது. தற்கால ஐரோப்பாவிலுள்ள ஜாதியார்களில் துருக்கர்கள், ஸெமிட்டிக் மக்கள், யூதர்கள் முதலிய பெரும்பாலார் இந்த ஆரிய இனத்தைச் சார்ந்தவர்களே. துரானிய மக்கள் மட்டும் இவர்களைச் சார்ந்தவர்கள் அல்லர். தங்கள் ஜாதிப் பெருமையினாலே, தாங்கள் மிகப் புராதனமான மக்கள் என்று தொன்மையைக் கற்பித்துக் கொண்டார்கள். இவர்களது புராணக் கதையை நாம் நம்புவதானால், அநேக லக்ஷம் ஆண்டுகளாக, பஞ்சாப், கங்கைப் பிரதேசம், இன்னும் இந்தியாவில் எட்ட முடியாத பல பிரதேசங்கள் முதலிய அனைத்தும் இவர்கள் கைவசமாயிருந்தன என்று தோன்றும். ஆனால், இக்கதைகள் சரித்திரக் கண்கொண்டு பார்ப்பவர்களுக்குப் பயன்படுவன அல்ல. டேரியஸ் வெற்றி கொண்ட காலமான கி. மு. 512-க்கு முன்புள்ள சரித்திரமெல்லாம் புராணங்களிற் காணுவன போன்ற புனை கதைகளேயாமென்று ஒரு சாரார் கூறுவர்.

இக்காலத்திற்கு முன்புள்ளதான இலக்கியம் யாதும் இல்லாமையால், உண்மைச் சரித்திரமில்லாத இக்குறை நேர்ந்ததும்

அன்று. பூர்வகாலத்து மக்களுள், மிகப் புராதனமான இலக்கியங்களை உடையவர்கள் இந்த ஆரியர்களே. இந்த இலக்கியங்களின் பொருள் தெரியவில்லை என்றும் கூறமுடியாது. எகிப்து தேசத்திலுள்ள ''ஹியரோக்ளிப்விக்ஸ்'' என்று சொல்லப்படுகிற எழுத்து வகைகளைப் பொருள் அறிந்து கொள்ளுதலில் ஏற்பட்ட சங்கடங்கள் ஆரியர்களுடைய பழங்கால எழுத்துக்கள் பற்றிய அளவில் இல்லை. இவர்கள் தெற்கே வரவர, புறவிஷயங்களைத் திட்டமாய் வரையறுத்து உணர்தலைப் புறக்கணித்துவிட்டு, மானஸிக விஷயங்களைக் குறித்துச் சிந்தனை செய்து கனவுகண்டு கொண்டிருந்தார்கள். இவர்களுக்குரிய வைதிகம் பௌத்தம் முதலிய சமயங்கள் இம் மண்ணுலக வாழ்வு அநித்தியம் என்று இகழ்ந்தன.

> வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
> பாழ்போவது பிறவிக்கடல்

என்ற சுந்தரமூர்த்திகளது வாக்கு இக்கருத்தை நன்கு புலப்படுத்துகிறது,

இம் மதங்கள் மக்களாய்ப் பிறந்து வாழ்வதே தீமை என்று கொண்டன; அதில் பெறும் இன்பங்கள் மறக்கத்தக்கன என்று கருதின. தமது வாழ்வு சரிதங்களிலே அமைத்துக் கூறவேண்டும் தகுதியற்றது என்றும் இவ்ஆரியர்கள் எண்ணினர். நிர்வாண மடைதலும், பரம்பொருளோடு இரண்டறக் கலந்து விடுதலும் தலைநோக்கமாக இவர்கள் கொண்டனர். இவ் இனத்தவருக்கு, 'இந்த அரசன் இன்ன காலத்து இன்ன செய்தான்; இந்தச் சேனை இந்தச் செயல்களைச் செய்தது' என்ற விஷயங்களெல்லாம் பயனற்றன என்று தோன்றுதல் இயல்பே. ஆனால், இந் நிகழ்ச்சிகளைக் கல்லிலும் பிறவற்றிலும் அரசர்களும் பிறரும் தம் பெருமை உலகுள்ளளவும் நிலவவேண்டுமென்று கருதி எழுதி வைத்தும் உள்ளனர். இக் கல்வெட்டு முதலியவற்றையும் முன் குறிப்பிட்ட உதாஸீன நோக்குடையோர் சிறிதும் போற்றிப் பாதுகாத்து வைக்கவில்லை. சரித்திரம், காலம் முதலியவற்றை ஆராய்பவர்களுடைய வேலை வீண் வேலை என்றே இவர்கள் கொண்டனர்.

## பூர்வ இலக்கியங்கள்

இம்மக்களது பூர்வ இலக்கியங்கள் முதன் முதல் கி. மு. 2000 முதல் 1600 வரையுள்ள காலப் பகுதியில் தோன்றின என்பர் ஆராய்ச்சியாளர். வெகு காலமாக இந்நூல்கள் வாய்ப்பிறப்

பாகவே வழங்கி வந்தன. நமது பூர்விகத் தமிழ் நூல்களுள் மிகப் பழையதாகிய குறுந்தொகையில் (156),

படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொ லுள்ளும்

என்று வருவதும் இதனைப் புலப்படுத்தும். வெகு காலத்திற்குப் (அதாவது பல நூற்றாண்டுகளுக்குப்) பின்னர், கி. பி. 15-ம் நூற்றாண்டளவில் எழுத்து வடிவு பெற்ற பிரதிகளைத்தான் நாம் இப்பொழுது நம்ப வேண்டியதாயுள்ளது. என்றாலும், மிகப் பூர்வ காலத்து வழங்கிய மொழியின் சொரூபம் நமக்குத் தெரியும். மிக மிகப் பண்டைக்காலத்து வழங்கிய மொழியும், பிற்பட்டு வழங்கிய மொழியும், பெரிதும் வேறுபட்டு உள்ளன. இரண்டையும் 'ஸம்ஸ்கிருதம்' (அதாவது நன்றாகச் செய்யப் பட்டது) என்று வழங்கினார்கள். அது கம்பீரமும், இன்னோசையும், பொருள்-திட்பமும், லகுத்வமும் உள்ள ஒரு சிறந்த மொழி என்பதில் ஐயமில்லை. இம் மொழியிலிருந்துதான் தற்காலத்தில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் வழங்கும் மொழிகளிற் பெரும்பாலன கிளைத்தெழுந்தன.

தத்துவ விசாரணையிலும் சமய ஆராய்ச்சியிலும் மிகுதியும் ஈடுபட்ட இவ் ஆரிய மக்களுடைய உயர்ந்த கருத்துக்களையெல்லாம் வெளியிடுவதற்கு இம்மொழி மிகவும் ஏற்றதாயிருந்தது. ஆகவே, ஆரிய மக்களுள் உயர் வகுப்பினரும் சமயக்குரவர் முதலியோர்களும், வித்துவப் பெருமக்களும் இம்மொழியையே மிகவும் போற்றினார்கள். இம்மொழியோடும் இதன் பேதமாகிய பிராகிருத மொழியோடும் தென்னிந்தியாவிலுள்ள மக்களுடைய சொற்களும் கலந்து பரவின. வாணிபம் முதலிய தினசரி வாழ்க்கைக்கு இக்கலவை மொழி மிகுதியும் பயன்பட்டது. ஸம்ஸ்கிருத மொழி பேச்சு வழக்கற்று 20 நூற்றாண்டுகளுக்கு மேலாய்விட்டபோதிலும், அதனுடைய தூயமொழிப்போக்கு இந்தியர்களுடைய வைதிக நூல்களிலும், பூர்வ காலத்து இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றது.

## வேதங்கள்

வடதிசையிலிருந்து தெற்கு நோக்கிப் பரவி வந்த ஆரியர்களிடம் எவ்வகையான இலக்கியங்கள் ஆதியில் இருந்தன? இதனை நாம் சிறிது நோக்குவோம். வேதங்கள்தான் ஆதியில் தோன்றிய இலக்கியம். நமது பண்டைக் காலத்து நூலாகிய புறநானூற்றில் (2)

நாஅல் வேதம் நெறிதிரியினும்

என்று வந்துள்ளது. நற்றிணை என்ற தொகை நூலின் கடவுள் வாழ்த்தில்.

வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே

எனவும் தொல்காப்பியத்தில்,

அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
(தொல். எழுத். 102)

எனவும் காணப்படுகின்றது.

இங்ஙனமாக இவ்வேதங்களைக் குறித்து நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இதன் தன்மையை அறிந்தோர் மிகச் சிலரே. வேதம் என்பதற்கு அறிவு என்று பொருள். இங்கே அறிவு என்றது மக்களது சாதாரண அறிவுப் பொருளையன்று. சமயம் பற்றிய அறிவையே இது குறிக்கிறது. வேதங்கள் நான்கு வகைப்படும். 'நா அல் வேதம்' என்பது மேலே காட்டப்பட்டது. தமிழ் நிகண்டுகளில் மிகப் பழையதாகிய திவாகரத்தில்,

நால்வகை வேதம் இருக்குத் தைத்திரியம்
சாமம் அதர்வணம் எனச் சாற்றினரே (XII, 40)

என்று கூறப்பட்டுள்ளது. தைத்திரியம் என்பதற்கு வேறொரு பெயர் யஜுர் வேதமாகும். ஆகவே, ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்பனவே மேற்குறித்த நால்வகைகள். ரிக் வேதம் பல தெய்வங்களுக்குரிய பிரார்த்தனைப் பாடல்களை உணர்த்துவது. ஸாம வேதம் இசைப் பொருளை உணர்த்துவது. யஜுர் வேதம் யாக விதிகளை உணர்த்துவது. இது கிருஷ்ண யஜுர் வேதம் என்றும் சுக்ல யஜுர் வேதம் என்றும் இருவகைப்படும். அதர்வண வேதம் மாந்திரிகங்கள், வசியக் கிரியைகள் முதலியவற்றைக் கூறுவது.

## ரிக் வேதம்

ரிக் வேதம் பத்து மண்டலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1028 சூக்தங்களும் 10580 மந்திரங்களும், 153826 சொற்களும் உள்ளன. இந்த சூக்தங்கள் எளிய செய்யுள் நடையிலே அமைந்து, தெய்வ வணக்கத்திற்கேற்ற கௌரவமுள்ள ஸம்ஹிதை அல்லது தொகுதியாக விளங்குகின்றன. மிகப் பூர்வகாலத்தில் வாழ்ந்த ஆரியமக்களுக்கு இயற்கைச்சக்திகளும் தெய்வங்களாகவே தோன்றின. தெய்வங்கள் எங்கும் பிரேரித்து நிற்கின்றன என்று அவர்கள் கருதினார்கள். ஐம்பொறிகளுக்குப் புலப்படும் பொருள்களெல்லாம் தெய்விகமயமாயுள்ளது என்று

கொண்டனர். இக்கொள்கையை வெளிப்படுத்தும் சொற்கள் பொருள்-திட்பமில்லாமலிருப்பது இயல்பே. இக்காரணத்தால் இவர்களுடைய அழகிய பாடல்களும் பிரார்த்தனைகளும் பலவாறான மறைபொருள்களை உட்கொண்டனவாகக் கருதப் பட்டன.

ஆனால், பல பல இயற்கைத் தெய்வங்களை உணர்த்தி யெழுந்த இப்பாடல்களில் குறிப்பிட்ட ஒரு தெய்வத்தைச் சிறப்பாகக் கொள்ளுதலும் அதற்குரிய வழிபாடு ஆற்றுதலும் காணுதற்கில்லை. இதனாலே, ஆதி ஆரியர்களது மனம் பூர்ண திருப்தி அடையவில்லை. உருவ வழிபாட்டுக் குரிய தெய்வங் களையே அவர்கள் விரும்பினார்கள். இவ்விருப்பம் உலகத்தி லுள்ள பிற சமயத்தார்களிடத்திலும் காணப்படுவதொன்றே.

வருணன், சொர்க்கத்தின் அதிபனாகிய இந்திரன், தீக்கடவு ளாகிய அக்கினி, மதியை மயக்கும் கடவுளாகிய சோமன் முதலிய தெய்வங்களை இவர்கள் வகுத்தார்கள். இத்தெய்வங்களுக் குரிய மந்திரங்களும் பிரார்த்தனைகளும் ரிக் வேதத்தில் காணப் படுகின்றன.

தொல்காப்பியத்திலும்,

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்

[மாயோன் - திருமால்; சேயோன் - முருகக்கடவுள்; வேந்தன் - இந்திரன்.]

என வருதல் அறியத்தக்கது.

ரிக் வேதத்தை இயற்றியவர்கள் இயற்கைத் தோற்றத்தில் மகிழ்ந்து ஈடுபட்டவர்கள். எனவே, இயற்கைத் தோற்றங்கள் அனைத்தினும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடிய சூரிய ஒளியைக் குறித்து இவர்கள் பல அழகிய பாடல்கள் இயற்றியுள்ளார்கள். ஆதியில் தோன்றிய வருணன் இருளுலகத்திற்குத் தலைவனாகக் காலவடைவில் மாறிவிட்டான். சூரியனது ஒளிக்குரிய கடவுளாக மித்திரன் அமைந்துவிட்டான். இம்மித்திரனைக் குறித்துப் பண்டைக்காலத்தில் தோன்றிய பாடல்கள் மிகப் பல.

சூரியோதயமும் ஒரு பெண்-தெய்வமாகப் பாவிக்கப்பட்டது. அப்பெண்-தெய்வத்திற்கு 'உஷஸ்' என்று பெயரிட்டார்கள். அதன் அழகு புராதன ஆரியர்களுடைய மனோபாவனையைக் கவர்ந்து, பல இனிய காதற்பாடல்களுக்குக் காரணமாயிற்று.

நீராடி யொளிர்மேனி யழகு நோக்கி
நிற்ப நாம், செருக்குடனே நிற்கின்றாளால்
காராரும் இருள்நீங்க உதய கன்னி
ககனத்தின் புதல்வி இன்று காட்சி தந்தே.
கற்பரசி ஆடவர்முன் தலையி றைஞ்சிக்
கவிழ்ந்துநிற்கு நிலைபோலக் ககனச் செல்வி
நிற்றல் கொண்டு தொழுவார்க்கு வரங்கள் நல்கும்
நேரிழை போல் ஒளிநல்கி நிழற்று மாலோ.
(ரிக் V, 80, 5, 6)

இங்ஙனமே வாயுவைக் குறித்தும் பல அழகிய பாடல்கள் உள்ளன (ரிக். X, 168).

கவித்வத்தில் சிறந்து விளங்கும் இச்செய்யுட்களைத்தவிர, யாகக் கருமங்களுக்குரிய செய்யுட்களும் ரிக் வேதத்தில் உள்ளன. இப்பாடல்களில் ஒருவகை 'ஆப்ரி சூக்தம்' என்பவை. இவைகள் யாகத்தோடு தொடர்புடைய சில தெய்வங்களின் பிரீதியைச் சம்பாதிக்கும் பொருட்டுத் தோன்றியவை. சோமனைக் குறித்துள்ள செய்யுட்களும் 9-வது மண்டலத்தில் உள்ளன. யாகம் பற்றிய இச்செய்யுட்களில் ஒரு சில கவிதை அழகும் பொருந்தியன வாய்க் காண்கின்றன. இறந்தோரைப் பூமியில் புதைக்கும் பழைய வழக்கத்தைக் குறித்து பின்வரும் செய்யுள் :

நிலமகளே, புகலிடம் நீ நன்குவிரிந் தளிப்பாய்,
நெருக்கி அழுத்தா தெளிதில் நீ இவனை ஏற்பாய்;
குலமகனை அன்னை தன்முன் றானையினால் அணைத்துக்
கொள்ளுதல்போல் நீ இவனை மறைத்திடுவாய்,
அன்னே.

புதைத்தலேயன்றி இறந்தோரைத் தகனம் செய்யும் வழக்கமும் முற்காலத்து இருந்தது. அது சிறிது பிற்பட்டுத் தோன்றிய தாகலாம். ரிக்வேதம் 10-வது மண்டலத்தில் (16,1-6) வருவன இத் தகனக்கிரியையைப் பற்றியன. இச் செய்யுட்களில் மரணத்தின்பின் வாழ்வும், ஆன்மாவின் கதியும், அக்கினி முதலிய தெய்வம் பற்றிய பௌராணிக வரலாறுகளும் கலந்து காணப் படுகின்றன. இவையே யன்றி, சில மூல தத்துவங்களைப் பற்றிய செய்யுட்களும் ரிக்வேதத்தில் இனிது திகழ்கின்றன. உலகம், அதன் தோற்றம், அதனோடு ஒன்றாய் நிற்கும் பரமான்மா; இவைகளைப் பற்றிய கருத்துக்கள் முதன் முதலாக இவ் வேதத்தில் தான் புலப்படுகின்றன.

தெய்வங்கள் உளவோ என்ற ஐயப்பாடும், அவற்றின் ஆற்றல் குறித்த ஐயப்பாடும் ரிக்வேத காலத்திலேயே தோன்றத்

தொடங்கின. உதாரணமாக, இவ்வேதத்தில் (II, 12) இந்திரனைக் குறித்து இவ் ஐயப்பாடு வெளியிடப் பட்டுள்ளது. இதனைப் பின்பற்றிப் பல கடவுளர்கள் இருத்தல் கூடுமோ என்ற ஐயுறவும், இக்கடவுளருக்கு யாகம் செய்வதால் ஏதேனும் பயன் உண்டோ என்ற ஐயுறவும் எழுந்தன. ரிக் வேதத்தில் (X, 121) இயற்றுதற் கருத்தாவாகிய பிரஜாபதியைக் குறித்து இவ் ஐயுறவு வெளிப்படுகின்றது. முடிவாக, உலக சிருஷ்டிக்கு முன் இருந்த நிலையைக் குறித்து (ரிக். X, 129) சில செய்யுட்கள் உள்ளன. இருளைமூடி இருள் இருந்தது எனவும், மகாப் பிரளயம் நேர்ந்தது எனவும், பின்னர் 'தபஸ்' மூலமாக ஏக வஸ்து விளங்கியது எனவும், இவ்வஸ்து சின்மயமானது எனவும், இதன் மனத்தினது முதல் விளைவு இச்சை எனவும், இவ் இச்சையிலே உள் பொருட்கும், இல் பொருட்கும் உரிய தொடர்பு காணலாகும் எனவும் சொல்லப்படுகிறது. ஆனால், மீண்டும் ஐயுறவு தோன்றத் தொடங்குகிறது.

எங்கிருந் துலகு தோன்றிற்று ?
  இயற்றிய தாமோ ? அன்றோ ?
மங்கலில் தேவ ரெல்லாம்
  படைப்பினின் வந்தோ ரன்றோ ?
துங்கவா னிருந்து நோக்கும்
  தொல்பெருந் தெய்வந் தானும்
இங்குறு தோற்றந் தன்னை
  அறியுமோ ? இயம்பு வீரே.

இங்கே கூறிய ஏக வஸ்துவினின்றும், உலகம் முழுவதும் ஒன்று என்னும் கொள்கையும், உலகத் தோற்றங்கள் அனைத்தும் இவ் ஏக வஸ்துவின் தோற்றமே என்னும் கொள்கையும், பல்வேறு வகையாகக் காணப்படுவன எல்லாம் ஆரோபிதம் என்று கொள்ளும் கொள்கையும் ரிக்வேதத்தில் வந்துள்ளன.

இந்திரனே மித்திரனே வருணனே ஈண்டு
  எரிகின்ற அக்கினியே என்று நல்லோர்
தந்தமக்குத் தோற்றியவா றுரைப்பர், தெய்வத்
  தனிப்புள்ளாம் கருத்துமனும் அவன்காண்; சார்ந்து
பந்தமுறு பெயர்பலவும் இயல்பி னொன்றாய்ப்
  பாரித்த வொரு பொருட்கே பகர்வ ராலோ
விந்தையுறு பெருங்கவிஞர்; இதனால் சான்றோர்
  விளிப்பர்எரி, எமன், மாத ரிசுவான் என்றே.

(ரிக். I, 164, 46)

இவை போன்ற கருத்துக்கள் உபநிஷத் கருத்துக்களோடு ஒருவாறு ஒப்புமையுடையன என்பதை எளிதிற் காணலாம். அன்றியும் இதிகாஸத்தோடும், நாடகத்தோடும் தொடர்புடைய சில செய்யுட்களும் ரிக் வேதத்தில் காணப்படுகின்றன. இவைகள் உரையாடல் வடிவில் உள்ளன. ஆகவே, இவற்றை ஸம்வாத சூக்தங்கள் என்று சிலர் கூறுவர். இவை உண்மையில் நாடோடிக் கதைச் செய்யுட்கள் என்றே கொள்ளத்தக்கன. இக்கதைகளில் ஒன்றைக் குறித்தது புரூரவஸ் - ஊர்வசி என்ற இருவர்க்கும் நிகழ்ந்த உரையாடற் செய்யுட்பகுதி (ரிக். X, 95). இங்ஙனமே யமி என்பவள் தன் சகோதரன் யமன் என்பவனைக் கூடி இன்புறுதற் பொருட்டு நிகழ்த்திய உரையாடல்கள் (X, 10.) வேறொரு கதையை நமக்கு உணர்த்துகின்றன. மக்களினம் ஆண், பெண், இரட்டையரது கலப்பினால் தோன்றியது என்ற ஓர் உண்மையை இவ் உரையாடல் உட்கொண்டது. ரிக் வேதத்தில் வரும் சூர்யா சூக்தமும் (X, 85) ஒரு பழங்கதையைக் கூறுவதே. சூர்யா என்பது ஒரு பெண் தெய்வத்தின் பெயர். இவளுக்கும் சோமனாகிய சந்திரனுக்கும் நிகழ்ந்த விவாகமே இக்கதையின் பொருளாகும். 47 சூக்தங்கள் இதில் அடங்கியுள்ளன. இவைகளில் பெரும்பாலன விவாகச் சடங்கு பற்றியன. மணமக்களைக் குறித்தெழுந்த பின்வரும் செய்யுள் நோக்கத் தக்கது.

பிரியாதீர், ஈண்டொருங்கே உறைவீர், மக்கள்
பேசுகின்ற ஆயுளெல்லாம் குறையாதே வாழ்வீர்,
தெரியாதீர் துன்பென்றும்; அரும்புதல்வர் பேரச்
செல்வரோடு மகிழ்ந்துவிளையாடி யின்பஞ்
செழிப்பீர்.

இதில் வரும் மணமக்களது வாழ்த்துக்கள் மந்திரங்களின் இயல்பைப் பெற்றுள்ளன. திருஷ்டியின் பரிகாரமாகவும், அதுபோன்ற கேடுகளை நீக்குதற் பொருட்டாகவும், பேய் முதலியன அணுகாமல் வெருட்டுதற் பொருட்டாகவும் இம் மந்திரங்களில் சில அமைந்துள்ளன. நோய்களை நீக்குதற்கும், கருவினைக் காத்தற்கும், கெட்ட கனவின் விளைவையும், அபசகுனத்தின் விளைவையும் நீக்குதற்கும், மந்திரவாதிகளை அச்சுறுத்துதற்கும், அழித்தற்கும், பகைவர்களை அழித்தற்கும் சில மந்திரங்கள் தோன்றியுள்ளன. வேறுசில, ஆனிரைகள் செழித்தல்,போரில் வெற்றி பெறுதல், உறக்கம் வருதல் முதலியனபற்றிக் கூறப்படுகின்றன. ரிக்வேதத்தில் (VII, 103) வரும் தவளைப்பாட்டு இவ்வகையைச் சார்ந்ததே. இங்கே தவளைகள் அந்தணர்களோடு உவமிக்கப் படுகின்றன. கோடை

காலத்தில் மவுனத்தை மேற்கொண்டு, மழைக்காலத்தில், மகன் தந்தையை அழைப்பதுபோல ஒன்றையொன்று கூவி யழைக்கின்றன. வேதத்தை ஓதுவிக்கும் ஆசாரியனது வார்த்தைகளைச் சிஷ்யன் திரும்பச் சொல்வதுபோல், ஒன்று கத்தத் தொடங்கியவுடன் மற்றைத் தவளைகள் உடன் தொடர்ந்து கத்துகின்றன. தவளைப்பாட்டின் இறுதியில், செல்வம் செழிக்க வேண்டுமென்ற பிரார்த்தனை அமைந்திருக்கிறது.

ஊன்றி நோக்கினால் ரிக் வேதத்தில் வரும் மந்திரச் செய்யுட்களுக்கும், அதர்வ வேதத்தில் வரும் மாந்திரிகச் செய்யுட்களுக்கும் வேறுபாடு உண்டென்று கூறமுடியவில்லை. இம் மந்திரச் செய்யுட்கள் தவிர, தொழிலாளர் பாடல்கள் சிலவும் ரிக் வேதத்தில் உள்ளன. உதாரணமாக, சோமரஸத்தை உண்டு பண்ணும்போது பாடும் பாட்டுக்களைக் கூறலாம் (ரிக். IX, 112). இவ்வகைத் தொழிலாளர் பாட்டுக்களில் மிகச் சிறந்தது சூதாட்டக்காரனது பாட்டுக்கள் (ரிக். X, 34). இவன் இல்வாழ்க்கை யின்பத்தை இழந்துவிடுவதும், சூதாட்டத்தின் வசீகர சக்தியும் அதனால் நேரிடும் துன்பமும் அழிவும் மிக அழகாக விவரிக்கப்படுகின்றன. வள்ளுவர்,

> ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
> நன்றெய்தி வாழ்வதோ ராறு (932)

எனவும்,

> இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
> உழத்தொறூஉம் காதற் றுயிர் (940)

எனவும் கூறியுள்ளவை இங்கே நோக்கத்தக்கன.

**தான செய்யுட்கள்**

மேற்கூறிய லௌகிகச் செய்யுட்களுக்கும், சமயச் செய்யுட்களுக்கும் இடை நிகர்த்தனவாக உள்ளன தான ஸ்துதிகள். ரிக் வேதத்தில் இவ்வகைத் துதிகள் நாற்பது இருக்கின்றன. இவை தானஞ் செய்தோர்களுடைய பெயரையும், அது நிகழ்ந்த சந்தர்ப்பத்தையும் விவரிக்கின்றன. இவற்றில் கவிதைநயம் சிறிதும் இல்லை. எனினும் சரித்திரம் அமைத்தற்கு இவை பெரிதும் பயன்படுகின்றன. தானத்தை வள்ளன்மையாக உயர்த்திக்கூறி, மக்களுக்கு நீதியுணர்த்தும் செய்யுட்பகுதி ஒன்றும் ரிக் வேதத்தில் உள்ளது (X, 117).

பிறிதோரிடத்தில் (ரிக். I, 146) வருஞ் செய்யுட்கள் கவனித் தற்குரியன. ஓர் உதாரணம் :

எழுவர் கூடி ஓராழி
  யிரதத் தில்வார் பூட்டிடுவர்,
எழுநற் பெயர்கள் கொண்டிடும் ஓர்
  இவுளி அதனை ஈர்த்திடுமே;
அழிவி லாழி யொருநாளும்
  அடங்கி நிற்பதன்று; அதனைத்
தழுவி யேற்றே அனைத்துயிரும்
  தாங்கும் அச்சு மரமூன்றே

இச்செய்யுள் தொல்காப்பியர் கூறும் பிசி என்னும் வகையைச் சார்ந்தது. இது போன்ற 'புதிர்கள்' முற்காலத்தில் பல தேசத்து இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

மேலே விவரிக்கப்பட்ட ரிக் வேத ஸம்ஹிதையை நமது தேசத்தில் தோன்றிய செய்யுட்களில் மிகமிகப் பழமையான வற்றின் சிதறல்கள் என்று ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளார்கள்.

## அதர்வண வேதம்

அதர்வண வேதம் என்ற தொடரின் பொருள் மாந்திரிக விதிகளின் அறிவு என்பது. அதர்வன் என்ற சொல் முதலில் அக்கினி வழிபாட்டிற்குரிய புரோகிதனைக் குறித்தது. பிற்பாடு, இது புரோகிதர்களுக்கெல்லாம் பொதுப் பெயராக வழங்கலா யிற்று. அக்கினி வழிபாடு செய்யும் மக்களுக்கு அத்ரவன் என்ற பெயர் அவெஸ்தாவில் வழங்குகிறது. இப்பெயர் அதர்வன் என்ற பெயரேயாகும். இவ்வழிபாடு செய்த புரோகிதர்களே மந்திரவாதம் செய்யும் புரோகிதர்களாகவும் முற்காலத்து இருந்தனர். ஆகவே, அதர்வ வேதம் மாந்திரிக விதிகளை உணர்த்தும் வேதமாக முடிந்தது. இவ்வேதத்திற்கு அதர்வாங்கிரஸம் என்று பூர்வத்தில் பெயர் வழங்கியது.

அதர்வணர்கள், ஆங்கிரஸர்கள் என்ற இருவகையினர் பண்டைக்காலத்தில் இருந்தனர். இவ்விருதிறத்தினரும் வழங்கிய மாந்திரிக விதிகளே இவ்வேதத்தில் காணப்படுவன. ஆனால், அதர்வணர் நன்மையை விளைவிக்கும் தூய மாந்திரிக வித்தை யையும், ஆங்கிரஸர் பகை முதலியவற்றை விளைவிக்கும் தீய மாந்திரிக விதிகளையும் பிரயோகப்படுத்தினர். நோய்களைக் குணப்படுத்தும் மந்திரங்களை அதர்வணர்களும், பகைவர்களைச் சாபமிட்டு அழிக்கும் விதிகளை ஆங்கிரஸர்களும் வழங்கினர்.

அதர்வ வேதம் என்று சொல்லுவது அதர்வாங்கிரஸ வேதம் என்பதன் சுருக்கமேயாகும்.

அதர்வ வேத ஸம்ஹிதையில் சுமார் 6,000 மந்திரங்களும் 731 சூக்தங்களும் உள்ளன. இவை இருபது காண்டங்களாகப் பாகுபடுத்தப்பட்டன. 20-வது காண்டம் மிகமிகப் பிற்பட்டதாகும். இங்ஙனமே 19-வது காண்டமும் மூல ஸம்ஹிதையில் ஆதியில் உட்பட்டதன்று. 20-வது காண்டம் ரிக்வேத ஸம்ஹிதையினின்றும் பெரும்பாலும் எடுக்கப்பட்ட சூக்தங்களேயாகும். இவற்றைத்தவிர, அதர்வவேதத்தில் ஏழிலொருபாகம் ரிக்வேதத்தினின்றும் கொள்ளப்பட்டதே. அன்றியும் அதர்வ வேதத்திற்கும் ரிக்வேதத்திற்கும் பொதுவாகவுள்ள மந்திரங்களில் செம்பாதிக்குமேல் ரிக்வேதத்தில் பத்தாவது மண்டலத்திலும் ஏனையவை முதல் மண்டலத்திலும் எட்டாவது மண்டலத்திலுமாகக் காணப்படுகின்றன. மேற்குறித்த இரண்டு காண்டங்கள் தவிர, ஏனைய 18-காண்டங்களும் அதர்வவேதத்தின் மூலமென்று கொள்ளத்தக்கன. இவை செவ்வையாக முறைப்படுத்தி அமைக்கப்பட்டவை.

முதலேழு காண்டங்களில் முதற்காண்டத்தில் நான்கு மந்திரங்களும், இரண்டாவது காண்டத்தில் ஐந்து மந்திரங்களும் மூன்றாவது காண்டத்தில் ஆறு மந்திரங்களும், நான்காவது காண்டத்தில் ஏழு மந்திரங்களும் காண்பன. ஐந்தாவது காண்டத்தில் சிற்றெல்லை எட்டாகவும், பேரெல்லை பதினெட்டாகவும் உள்ள மந்திரங்கள் புலப்படும். ஆறாவது காண்டத்தில் பெரும்பாலும் மூன்று மந்திரங்களடங்கிய 142-சூக்தங்கள் இருக்கின்றன. ஏழாவது காண்டத்தில் பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு மந்திரங்களடங்கிய 118-சூக்தங்கள் இருக்கின்றன. எட்டு முதல் பதினான்கு, பதினேழு, பதினெட்டு ஆகிய காண்டங்கள் சிற்றெல்லை 21 ஆகவும், பேரெல்லை 89 ஆகவும் உள்ள மந்திரங்களடங்கிய மிக நீண்ட சூக்தங்களால் இயன்றவை. பதினைந்தாவது காண்டமும் பதினான்காவது காண்டத்தின் பெரும் பகுதியும் வசனத்தில் அமைந்து சொல்லிலும் நடையிலும் பிராம்மணங்களை ஒத்திருக்கின்றன.

பொதுப்படக் கூறுமிடத்து, காண்டங்களில் ஒன்று முதல் ஏழுவரையுள்ள முதற்பகுதியில் பல பொருள் பற்றிய சிறு சூக்தங்களும், எட்டுமுதல் பன்னிரண்டு வரையுள்ள இரண்டாம் பகுதியில் பல பொருள்பற்றிய நெடிய சூக்தங்களும், பதின்மூன்று முதல் பதினெட்டு வரையுள்ள மூன்றாம் பகுதியில் தனித்தனிப் பொருள்களைக் கூறும் சூக்தங்களும் உள்ளன. உதாரணமாக

14-வது காண்டத்தில் விவாகச் சடங்கில் ஓதும் பிரார்த்தனைகளும், 18-வது காண்டத்தில் ஈமக்கிரியையில் சொல்லவேண்டும் மந்திரங்களும் காணப்படுகின்றன.

இவ் வேதம் ரிக்வேதத்திற்குப் பின் தோன்றியது என ஆராய்ச்சியாளர்கள் பற்பல காரணம்பற்றித் துணிந்திருக்கின்றனர். இவ்வேதத்திற்குத் தனிப்பட்ட பெருமை ஒன்று உண்டு. புரோகிதர்களால் பிரசாரம் செய்யப் பட்ட சமய நெறியைத் தழுவாது, பொதுமக்கள் உண்மையென நம்பிவந்த பல விஷயங்களை இவ்வேதம் நமக்குத் தெரிவிக்கிறது. பேய்கள், பூதங்கள், மாந்திரிகங்கள் இவற்றை இங்கே குறிப்பிடலாம்.

இவ்வாறாக நாம் முன் கூறியபடி அதர்வண வேதத்தில் பகைவர்களை அழித்தற்கு வேண்டும் மந்திர தந்திரங்களும், சில வசிய முறைகளும் காணப்படுகின்றன.

குடும்பங்களை ஒற்றுமைப்படுத்துதற்குரிய கிரியைகளும் மந்திரங்களும் இவ்வேதத்தில் உள்ளன. கீழ்வரும் பாடல்கள் (அதர்வ. III, 30) இவ்வகையைச் சார்ந்தவை.

ஒன்றாய் உள்ளம்; கருத்தொன்றாய்
  உறவே படைத்தேன்; பகை யொழித்தேன்;
கன்றும் பசுவும் போல் நீங்கள்
  கலந்து களித்து வாழ்ந்திடுக!

தந்தை சொல்லே மந்திரமாய்த்
  தாயின் கருத்தே தன் கருத்தாய்
மைந்தன் வாழ்க! மனைவியரும்
  மதுர மொழிகள் வழங்கிடுக!

அண்ணன் தம்பி பகை தவிர்க!
  அக்காள் தங்கை அங்ஙனமே!
எண்ணும் நோக்கும் ஒன்றாக
  இனிய மொழிகள் வழங்கிடுக!

**மடலூர்தல்**

தமிழ் நூல்களில் மடலூர்தலைப் பற்றி வருகின்றமை அனைவரும் அறிவர். இதில் தலைவன் தலைவியினது உருவத்தைக் கிழியில் எழுதிப் பிடித்துக்கொண்டு, ஓரம் செதுக்காத பனை மடலால் குதிரை வடிவு செய்து, அதில் ஏறி எருக்கமாலை முதலியவற்றை அணிந்து, ஊரார் பழி கூறும்படி தெருவில் செல்லுகின்றமை கூறப்படும்.

மாவென மடலும் ஊர்ப; பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப காமம் காழ்க் கொளினே.

(குறுந். 17)

தலைவியின் உருவத்தை எழுதும் கிழி இச் செய்யுளிற் கூறப் படவில்லை. எனினும், திருக்கோவையாரில் (76),

கழிகின்ற என்னையும் நின்றநின் கார்மயில் தன்னையும் யான்
கிழியொன்ற நாடி எழுதிக் கைக்கொண்டு

என வருகின்றது. தலைவியின் உருவத்தை எழுதுதலே யன்றி, தன்னுருவத்தை எழுதுதல் இல்லை என்பதும் தன் ஊரையும் பேரையும் குறித்தலே இங்கு உணர்த்தப்பட்டது என்பதும் இதன் உரையால் விளங்கும். மடல் பற்றிய விவரங்களைத் தஞ்சை வாணன் கோவை 101-ம் செய்யுளுரையில் காணலாம். இம் மடலேறுதல் போன்றதோர் உபாயம் அதர்வண வேதத்தில் தரப்பட்டுள்ளது. ஆசிரியர் வின்டர்நிட்ஸ் (1, பக். 140—141) இது பற்றிக் கூறுவது வருமாறு:

ஒருவனது பிரதியுருவத்தின் மூலமாக அவனைத் துன்புறுத்தவோ அல்லது அவன்மீது அதிகாரம் செலுத்தவோ கூடும் என்ற நம்பிக்கை உலகமெங்கும் உள்ளது. புராதன இந்தியாவிலும் அது காணப்படுகிறது. ஒருவன் ஒரு பெண்ணினுடைய காதலைப் பெற வேண்டும் என்று இச்சித்தால், அவள் உருவத்தைக் களிமண்ணினால் செய்து, சணல் நாரினால் அமைத்த நாணோடு கூடிய வில்லைத் தாங்கி, அதன் அம்பின் நுனியில் முள்ளைச் செருகி, ஆந்தையின் சிறகை அம்புச் சிறகு ஆக்கி, கருங்காலியினால் அம்பின் தண்டினை அமைத்துக்கொள்வான். உருவத்தின் இருதய ஸ்தானத்தை இவ் அம்பினால் குத்திக் குத்தித் துளையொன்று உண்டுபண்ணுவான். இது காதற் கடவுளாகிய காமனுடைய அம்பினால் தனது காதற்குரிய பெண்ணின் இதயத்தைத் துளைப்பதற்கு அறிகுறியாகும். இங்ஙனம் துளைத்துக்கொண்டு, அதர்வவேதம், III, 25-வது சூக்தத்தை ஓதுவான். அது வருமாறு:

கலக்குறுத்துவன் உன்னைக் கலங்கச் செய்க, உன் படுக்கையில் நீ அமைதியற்றுக் கிடக்க. காமனது அச்சுறுத்தும் அம்பினால் உன் இதயத்தை நான் துளைக்கிறேன்.

ஆவலே சிறகாகவும், காதலே நுனியாகவும், நெறிதப்பாத விருப்பமே தண்டாகவும் உடையது அந்த அம்பு. அந்த

அம்பினால் காமன் தன் குறி தவறாது உனது இதயத்தைத் துளைப்பான்.

ஈரலை உலர்த்தி, எதிர்ப்பட்டவற்றை எரித்து, சிறகினால் பறந்து செல்லுகிறது. குறிதவறாத அந்தக் காமனது அம்பினால் உனது இதயத்தை நான் துளைக்கிறேன்.

கனல்விட்டெரியும் காதலால் தகிக்கப்பட்டு, வாய் உலர்ந்து, நீ என்னிடம் வருக. உனது கர்வத்தைத் தூரத்தே அகற்றி, மனம் இசைந்து, இனிய வார்த்தை பேசி என்னிடத்தே ஈடுபட்டு, என்னுடையவளாகத் தனியே வருக.

உனது தாயிடத்திலிருந்தும் உனது தந்தையிடத்திலிருந்தும் தோட்டியால் உன்னை வெருட்டி ஓட்டுகிறேன். அப்பொழுது என் அதிகாரத்திற்குள்ளாவாய், என் விருப்பத்திற்கு ஒத்து வருவாய்.

மித்திர வருணர்களே! நீங்கள் அவளுடைய சிந்தனையை எல்லாம் அவளிடத்திலிருந்து ஓட்டிவிடுங்கள்.

பிற்பாடு அவளை உள்ளம் இழக்கச் செய்து, என் அதிகாரத்தின் கீழே அவளை வைத்துவிடுங்கள்.

இந்த வசிய நெறி தமிழகத்தில் ஆண்பாலர்க்கேயன்றிப் பெண்பாலர்க்குக் கூடாது என விலக்கப்பட்டுள்ளது.

> கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
> பெண்ணிற் பெருந்தக்கது இல்

என்பது குறள் (1137). ஆனால், வடநாட்டில் இங்ஙனம் விலக்கப்படவில்லை. பெண்பாலர்க்கும் இவ்வசிய நெறி உரியதென்றே கொள்ளப்பட்டுள்ளது. இது,

> மன்னும் வழிமுறையே நிற்றும் நாம், மானோக்கின்
> அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்,
> மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
> தென்னுரையில் கேட்டறிவ துண்டு அதனை யாம்தெளியோம்
> மன்னும் வடநெறியே வேண்டினோம் (38—40)

என்று பெரிய திருமடல் கூறுவதனாலும் விளங்கும். இவ்வடநெறி எங்கே கூறப்பட்டுள்ள தெனின், அதர்வ வேதத்திலே தான். இந்நெறியைக் கையாளும்பொழுது காதலால் மீதூரப்பட்ட தலைவி, தலைவன் உருவப் படத்தைக் கிழியில் எழுதி, அதன் இதயத்தின்மீது கொழுந்து விட்டெரியும் அம்பு நுனியை எறிந்து, அதர்வ வேதம் 6-ம் காண்டம் 130, 138-வது சூக்தங்களை ஓதுவாள் என்று கூறப்படுகிறது.

### அகப்பொருள் துறைகள்

இம் மடற் குறிப்பேயன்றி அகப்பொருள் துறைகள் வேறு சிலவும் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன. அக நானூற்றில், 'இரும்பிழி மகாஅர்' என்று தொடங்கும் 122-ம் செய்யுளில் இரவுக்குறி வாய்க்காமைக்குரிய காரணங்களாக, ஊர் துஞ்சாமை, அன்னை துஞ்சாமை, காவலர் துஞ்சாமை, நாய் துஞ்சாமை முதலியன கூறப்பட்டுள்ளன. இவ் அனைவரும் துஞ்சுக, அதாவது உறங்குக என்று தலைவி மந்திர - உச்சாடனம் செய்வதாக அதர்வ வேதம் (IV, 5) தெரிவிக்கிறது.

> அன்னை துஞ்சுக; தந்தை துஞ்சுக; நாய் துஞ்சுக;
> வீட்டிலுள்ள முதியோர்கள் துஞ்சுக;
> அவளது சுற்றம் துஞ்சுக;
> அவளைச் சுற்றியுள்ள மக்கள் அனைவரும் துஞ்சுக.

இவை ஒரு காதலன் தன் அன்பிற்குரிய காதலியைக்களவிலே சந்திப்பதற்கு உச்சாடனம் செய்யும் வாக்கியங்களாகும். இதனால் இவ் அதர்வ வேதம் தமிழ் நாட்டு இலக்கிய மரபுகள் சிலவற்றை உணர்வதற்குப் பயன்படுவதாகலாம்.

இதுகாறும் விவரித்த ரிக் வேதமும் அதர்வண வேதமும் யாகத்தின் பொருட்டாகத் தோன்றியனவல்ல. ரிக் வேதத்திலுள்ள சூக்தங்களும் அதர்வ வேதத்திலுள்ள சூக்தங்களும் யாகக்கிரியைகள் முதலியவற்றில் பயன்பட்டு வந்தனவே. என்றாலும், இவற்றிலுள்ள சூக்தங்களின் தொகுப்பும் முறை வைப்பும் யாக கருமங்களுக்கு எனச் செய்யப்பட்டனவல்ல. இவைகளைக் கண்ட ரிஷிகள் பற்றியும், இவற்றிற்குரிய சாகைகள் முதலியனபற்றியும், மந்திரங்களின் எண்கள் பற்றியும் இவை தொகுக்கப்பட்டன. எனவே, இலக்கியச் சார்புபற்றி எழுந்த தொகுப்பே இவைகள் எனக் கூறலாம்.

### சாம வேதம்

சாம வேதம், எஜுர் வேதம் என்ற இரண்டும் இவ்வாறு தோன்றியன அல்ல. இவைகள் யாகத்தில் உபயோகிக்கும் முறை பற்றியே தொகுக்கப்பட்டுள்ளன. இவை யாகம் செய்விக்கும் புரோகிதர்களின் ஞாபகத்திற்கு உதவி அவர்களால் வாய்மொழி யாகப் பரம்பரையாய் வழங்கி வந்தனவேயாகும். ரிக் வேதமும் அதர்வ வேதமும் கிருஹ்ய கருமங்களுக்குப் பயன்பட்டன. எஜுர், சாம வேதங்கள் சுருதி சம்பந்தமான கருமங்களுக்குப் பயன்பட்டன. இந்தச் சிரௌத கருமங்களை விவரித்துப் பிராம்மணங்கள் விளக்குகின்றன.

சிரௌத யாகங்களில் நான்கு வகையான புரோகிதர்கள் பங்கெடுத்து வந்தார்கள்: ஹோதர், உத்காதர், அத்வரியு, பிராமணர் என. இவர்களில் ஹோதர் தெய்வங்களைப் புகழ்ந்து அவர்களை யாகத்திற்கு அழைத்தனர். உத்காதர் சோமம் முதலிய யாகங்களைச் செய்யும்பொழுது அவற்றிற்குரிய சாமங்களை (பாடல்களை) ஓதிவந்தனர். அத்வரியு யாகக்கிரியைகள் அனைத்தையும் செய்து உரிய இடங்களில் வசனத்தில் அமைந்த பிரார்த்தனைகளும், விதிகளுமாகிய யஜுஸ்களை வாய்க்குள் சொல்லிவந்தனர்.

பிராமணர்கள் யாகத்தில் குறைபாடு யாதும் வாராதபடி கவனித்து வந்தனர். ஏனெனில், யாக விதிப்படி உண்டான கருமங்களை உரிய இடங்களிற் செய்யாமற்போனாலும், மந்திரங்கள் முதலியவற்றைச் சரியாக உச்சரியாமற்போனாலும், சாமங்களை உரிய கானத்திற் பாடாமற்போனாலும், யாகம் செய்தவனுக்குக் கேடு விளையும் என்று கருதப்பட்டது. ஆகவே, பிராமணர் யாகத்தின் தென்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு யாகம் முழுவதையும் மனத்தினால் பின் பற்றி, எவையேனும் குற்றங் குறைபாடுகள் நேர்ந்தால் உடனே திருத்திவந்தனர். இக்காரணத்தால் இவர்கள் வைத்தியன் போன்று, யாகத்திற்குரிய புரோகிதர்களுள் சிறந்தவர்கள் என்று சதபத பிராம்மணம் கூறுகிறது. இவ்வாறு குற்றங்குறைபாடுகள் நேராமல் பார்க்க வேண்டுமானால், மூன்று வேதங்களையும் இந்தப் பிராமணர்கள் நன்றாகத் தெரிந்தவர்களா யிருக்கவேண்டும்.

இங்ஙனமன்றி, ஏனை மூன்று புரோகிதர்களும் ஒவ்வொரு வேதத்தில் வல்லவர்களாயிருந்தால் போதுமானது. ஹோதர் சொல்லும் அழைப்பு-மந்திரங்களுக்கு அனுவாக்கியம் என்று பெயர். அவர்கள் யாகத்தில் பொருளை அளிக்கும்போது சொல்லும் மந்திரங்களுக்கு யாஜ்யம் என்று பெயர். இவைகளை ரிக் வேதத்திலிருந்து அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். அன்றியும் ரிக்வேதம் முழுவதையும் அவர்கள் நன்கு ஓதியவராதல் வேண்டும். அப்பொழுதுதான் தெய்வங்களுக்குரிய புகழ்ச்சிப் பாடல்களை - சஸ்திரங்களை - அவ்வேதத்திலிருந்து எடுத்துச் சோம யாகத்தில் பாடமுடியும்.

ஆனால், சோம யாகத்திற்கு ஹோதர் சொல்லும் பாடல்கள் மட்டும் போதியன அல்ல. உத்காதர் சொல்லும் புகழ்ச்சிப் பாடல்களும் இந்த யாகத்திற்கு உரியனவே. இவைகள் கீத நெறியில் ராகத்தில் பாடப்படுவன. இதுபற்றியே.

சாம வேதமோர் கீதமோதியத் தசமுகன் பரவும்
(தேவாரம் - ii, 92,8)

என்று ஞானசம்பந்தரும் கூறியுள்ளார். திவாகரமும்

மூன்றாவது சாமம் கீதநடை சாரும்
(x. 77)

என்று கூறுகிறது.

**சாமவேத ஸம்ஹிதை**

இந்த ராகங்களையும் பாடல்களையும் உத்காதர் என்னும் புரோகிதர்கள் கற்று வந்தார்கள். இவர்களது உபயோகத்தின் பொருட்டுத் தொகுக்கப்பட்டதே சாமவேத ஸம்ஹிதை. இவற்றின் பொருளைக்காட்டிலும், இவை பாடப்படும் ராகங்களே மிக முக்கியமென்று கருதப்பட்டன. அத்வரியு என்ற புரோகிதர்கள் சிறுசிறு விதிகளையும், வசனத்திலும் செய்யுளிலும் அமைந்த நீண்ட பிரார்த்தனைகளையும் வாய்க்குள் மெதுவாகச் சொல்லிவந்தார்கள். இவைகளுக்கு யஜுஸ் என்று பெயர். யஜுர் வேத ஸம்ஹிதையில் வசனத்தில் அமைந்த இந்த விதிகளும் பிரார்த்தனைகளும், யாகக் கிரியைகள் செய்ய வேண்டிய நெறியைப்பற்றிய விவாதங்களும் அத்வரியு - புரோகிதர்களின் பொருட்டு யாகத்தில் பயன்படும் முறைப்படி அமைக்கப் பட்டுள்ளன.

இந் நால்வகைப்பட்ட புரோகிதர்களின் உதவியைக் கொண்டு யாகத்தை நடத்திய அரசன் முதலியோர் யஜமானன்* என்று பெயர் பெற்றனர். அவர்களுடைய முக்கியமான கடமை யாகத்தில் தக்ஷிணை கொடுப்பதே.

சாமவேத ஸம்ஹிதையும் ஆயிரம் உண்டு எனப் புராணங்கள் கூறும். ஆயினும், இப்பொழுது அகப்படுவன மூன்றேயாகும். இவற்றுள்ளும் மிகப்பிரசித்தி பெற்றது கௌதமர்களுக்குரிய சாமவேத ஸம்ஹிதையே. இதில் ஆர்ச்சிகம் எனவும், உத்தரார்ச்சிகம் எனவும் இரண்டு பகுதிகள் உள்ளன. ஆர்ச்சிகம் என்பது மந்திரம் அல்லது ரிக்குக்களின் தொகுதி என்று பொருள்படும். உத்தரார்ச்சிகம் என்பது பிற்பட்ட மந்திரத்தொகுதி என்று பொருளாம். இவற்றிலுள்ள ரிக்குக்கள் 1810-ல், 75 ஒழிய, ஏனைய ரிக்வேத ஸம்ஹிதையிலும் காணப்படுகின்றன. இந்த 75 ரிக்குக்களும் வேறு ஸம்ஹிதைகளிலும், கர்ப்ப சூத்திரங்கள்

---

* இந்த யஜமானன் என்றசொல் தமிழில் இயமானன், எசமான் என்றும், எயமான், ஏமான் என்றும் பல படியாக வழங்கி வருகிறது. இதற்குத் தலைவன் அல்லது பிரபு என்பது பொருளாகும். யாகத்திற்கும் இச்சொல்லிற்கு முரிய தொடர்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மறைந்துவிட்டது போலும்.

முதலியவற்றிலும் உள்ளன. ஆர்ச்சிகம், உத்தரார்ச்சிகம் என்ற இருபகுதியிலும் கானத்தைத் தெரிவிப்பதே முக்கிய நோக்கமாகும். உத்காதர் என்ற புரோகிதனாக வேண்டும் என்று முயல்பவன், முதலில் சாமவேத பாடசாலைகளில் இக் கானங்களைக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆர்ச்சிகத்தின் உதவியால் இக்கல்வி பெறற்பாலது. இதன் பின்புதான் இக் கானத்திற்குரிய தோத்திரங்களை யாகத்தில் பாட இயலும். இந்தத் தோத்திரங்களே உத்தரார்ச்சிகத்தில் காணப்படுபவை.

தற்காலத்தில் சில ராகங்களைச் சில கீர்த்தனங்களின் மூலமாக நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுகிறோம்-இது போலவே, முற்காலத்தில் சில ரிக்குக்களின் மூலமாக ராகங்களை ஞாபகத்திற் கொண்டு பாடி வந்தார்கள். இந்த ரிக்குக்களுக்கு ராகங்களின் யோனி என்று பெயர். ஆர்ச்சிகத்தில் இத்தகைய யோனிகள் 585 உள்ளன. உத்தரார்ச்சிகத்தில் 400 கீதங்கள் உள்ளன. ஒவ்வொரு கீதத்திலும் மூன்று செய்யுளுறுப்புக்கள் உண்டு. இவற்றிலிருந்தே முக்கியமான யாகங்களில் தோத்திரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**தோத்திரப்பாடல்கள்**

மேற்குறித்த இருபகுதியிலும் தோத்திரப் பாடல்களே இருந்தன. அவற்றிற்குரிய ராகங்கள் குரலாலும் கருவியாலும் சொல்லுவிக்கப்பட்டன. கருவியால் சொல்லுவிக்கப்பட்ட பாடலுக்குக் கானம் என்று பெயர். இக் கானங்கள் ஸ்வரங்கள் மூலமாயும், அசைகளை நீட்டுதல், ஆவர்த்தனம் பண்ணுதல், இடைப்பெய்தல் முதலியவற்றாலும், முழுச் சொற்களையே இடைப்பெய்தலாலும் விஸ்தாரம் எய்தின. இடைப் பெய்த அசை முதலியவற்றிற்கு ஸ்தோபங்கள் என்று பெயர். கானத்தில் வரும் ஏழிசைகளும் த, சோ, ண முதலிய அசைகளால் குறிக்கப்பட்டன என்று தோன்றுகிறது. ஆனால் 1, 2 முதலிய எண்களால் இவற்றைக் குறிப்பிடுதலே பெரும்பான்மை வழக்காயிருந்தன*.

---

* தமிழில் ஏழிசையின் பெயர்களைக் குறித்து
குரலே துத்தம் கைக்கிளை உழையே
இளியே விளரி தாரம் என்றிவை
எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே (திவா. X, 135)

என்று திவாகரம் முதலிய பழைய நூல்கள் குறிப்பிடுகின்றன. இவற்றிற்குரிய எழுத்துக்களை,

சவ்வும் ரிவ்வும் கவ்வும் மவ்வும்
பவ்வும் தவ்வும் நிவ்வும் என்றிவை
ஏழும் அவற்றின் எழுத்தா கும்மே (திவா. X, 137)

என்று திவாகரம் குறிக்கிறது. அச்சுப் புத்தகத்தில் இச் சூத்திரத் தோடுகூட,

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரிய

எனவும் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், திவாகரத்தின் ஏட்டுப் பிரதிகளில் இச்சூத்திரப் பகுதி காணப் பெறவில்லை.

ஆர்ச்சிகங்களோடு கிராமகேய கானம் எனவும், அரண்ய கானம் எனவும் இரண்டு பாடல்-தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை முறையே கிராமத்தில் பாடப்படுவனவும் அரண்யத்தில் பாடப்படுவனவுமாகிய பாட்டுக்களின் தொகுதி என்று பொருள் படும். மக்கள் வசிக்கும் கிராமங்களில் பாடத்தகாதவையென்று விலக்கப்பட்டு, அரண்யத்தில் பாடவேண்டுமென்று விதிக்கப்பட்ட கானங்களே அரண்யகானங்களாம். கிராமகேய கானத்தோடு ஊக கானமும், அரண்ய கானத்தோடு ஊகிய கானமும் கொள்ளப் பட்டன. ஊக ஊகிய கானங்கள் யாகாதி கிரியைகளில் சாமங்களை ஓத வேண்டும் வரிசைக் கிரமத்தைத் தெளிவாக உணர்த்துவன.

ராக பேதங்கள் முற்காலத்தில் பலவாயிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ராகத்திற்கும் பெயரும் இருந்தது. இப் பெயர்கள் கற்ப சூத்திரம் முதலியவற்றில் வழங்குகின்றன. பிராம்மணங் களிலும் ஆரண்யகங்களிலும் உபநிஷதங்களிலும் இவைகள் பெருவழக்காயுள்ளன. ப்ருஹத், ரதந்தரம் என்ற ராகங்கள் வேதத்திலேயே காணப்படுகின்றன. ஆகவே, சாம வேத ஸம்ஹிதை யாக வரலாற்றையும் மாந்திரிக வரலாற்றையும் உணர்வதற்குப் பயன்படுகின்றன. அதனோடு சேர்ந்த கானங்கள் இசைவரலாற்று உணர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும். ஆனால், இலக்கிய நெறியில் இந்த ஸம்ஹிதை சிறிதும் நயமற்றது என்று வின்டர்நீட்ஸ் கூறுகிறார்.

உத்காதர்களுக்கு சாமவேத ஸம்ஹிதை பாடப் புத்தகமாகப் பயன்பட்டதுபோல, அத்வரியுக் - புரோகிதர்களுக்கு எஜுர்வேத ஸம்ஹிதை பிரார்த்தனை நூலாகப் பயன்பட்டது. பதஞ்சலி முனிவர் தமது மகாபாஷ்யத்தில் அத்வர்யுக்களின் வேதங்களில் நூற்றொரு சாகைகள் உள என்று கூறியுள்ளார். ஆனால், இதுவரை நமக்குத் தெரிய வந்தன 5 ஸ்ம்ஹிதைகளேயாகும்: காடக ஸம்ஹிதை, கபிஷ்டல கட ஸம்ஹிதை, மைத்ராயணீ ஸம்ஹிதை தைத்திரீய ஸம்ஹிதை, வாஜஸநேஸீ ஸம் ஹிதை என. தைத்திரீய ஸம்ஹிதைக்கு ஆபஸ்தம்ப ஸம்ஹிதை என்றும் பெயர். முற்கூறிய நான்கும் கிருஷ்ண எஜுர் வேதத்திற்கும், இறுதியிற் கூறியது சுக்ல எஜுர் வேதத்திற்கும் உரியன. சுக்ல எஜுர் வேதத்தை ஓதுவித்த ஆசிரியர்களுள் மிகச் சிறந்தவர் யாக்ஞ வல்கிய வாஜஸநேயர் என்பவர். எனவே, இவரது பெய ரால் இந்த ஸம்ஹிதை வழங்கலாயிற்று. இந்த ஸம்ஹிதையில் இரண்டு சாகைகள் உள்ளன: காண்வ சாகை, மாத்தியந்தன சாகை என.

கிருஷ்ண, சுக்ல எஜுர் வேதங்கள் தம்மிலுள்ள வேறுபாடு அறியத்தக்கது. சுக்ல எஜுர்வேதத்தில் மந்திரங்கள் மட்டுமே

அதாவது தோத்திரங்கள், யாக விதிகள் முதலியனவே உள்ளன. கிருஷ்ண எஜுர் வேதத்தில் மந்திரங்களைத் தவிர யாகக் கிரியைகளின் முறை முதலியனவும், அவற்றைக் குறித்த விவாதங் களும் அடங்கியுள்ளன. அதாவது, கிருஷ்ண எஜுர் வேதத்தில் பிராம்மணங்களும் காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்கள் கிருஷ்ண எஜுர் வேதம் முந்தியது எனவும், சுக்ல எஜுர் வேதம் பிற்பட்டது எனவும் துணிகின்றனர். ஆனால் இவ்விரண்டிற்கும் மிகச் சுருங்கிய காலம்தான் இடைப்பட்டிருக்கலாம்.

### நாற்பது பகுதிகள்

வாஜஸ நேயீ ஸம்ஹிதையை நோக்கினால் பொதுப்பட எஜுர் வேதத்தில் அடங்கிய ஸம்ஹிதைகளின் போக்கு நன்றாகப் புலப்படும். இந்த ஸம்ஹிதையிலே 40 பகுதிகள் உள்ளன. அவற்றுள் கடைசி 15 பகுதிகள் பிற்காலத்தில் தோன்றியவை. ஏனை 25 பகுதிகளில் முக்கியமானவை யாகங்களுக்குரிய பிரார்த் தனைகள் அடங்கியுள்ளன. முதல் இரண்டு பகுதிகள் தர்ஸ பூர்ண மாஸ யாகங்களையும், பிண்டப் பிதுர் யக்ஞத்தையும் பற்றியன. மூன்றாவது பகுதி நித்தியம் நிகழும் அக்கினி காரியங் களைப் பற்றியும், அக்கினி ஹோத்திரத்தைப் பற்றியும், சாதுர் மாஸியத்தைப் பற்றியும் கூறுகின்றது. 4 முதல் 8 வரையுள்ள பகுதிகளில் ஸோம யாகமும் உயிர்ப் பலியிடும் யாகமும் கூறப் படுகின்றன. ஸோம யாகங்களில் ஒரு நாள் நிகழ்வனவும் பல நாள் நிகழ்வனவுமாகப் பல யாகங்கள் உள. அவற்றுள் ஒரு நாள் நிகழும் யாகங்களைச் சார்ந்தது வாஜபேயம் என்று சொல்லப் படுவது.

இங்கே சோம பானத்தைத் தவிர, சுரா பானமும் விதிக்கப் பட்டுள்ளது. இந்த வாஜபேயம் வீரர்களுக்கும் அரசர்களுக்கும் உரியது. அரசர்களுக்கு மட்டும் உரியது இராஜ சூய யாகம்*. இதில் சேனா முகங்களுடன் படை யெடுத்துச் செல்லும் கிரியையும், சூதுபற்றிய கிரியையும், மாந்திரிகக் கிரியைகளும் நிகழும். வாஜபேயம், இராஜசூயம் என்ற இருவகை ஸோம யாகங் களுக்குமுரிய பிரார்த்தனைகள் 9, 10-ம் பகுதிகளில் உள்ளன. 11 முதல் 18 முடியவுள்ள பகுதிகளில் அக்னிசயனம் நிருமித் தற்குரிய யாக மந்திரங்கள் தரப்பட்டுள்ளன. இந்த அக்னி சயனக் கிரியைகள் ஓர் ஆண்டு முழுவதும் நிகழும். இதன் உட்கிடையான பொருளைப் பற்றிப் பிராம்மணங்கள் விரித்துக் கூறுகின்றன. அக்கினிக்குரிய பீடம் அக்கினி என்றே அழைக்கப் படுகிறது. அக்கினி கடவுளாகவே பாவிக்கப் படுகிறது. 10,800

---

* இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற ஒரு சோழ அரசன் சங்க காலத்தில் இருந்தனன்.

செங்கற்களால், சிறகுகளை விரித்த நிலையிலுள்ள ஒரு பெரிய பறவையின் வடிவில் அது அமைக்கப்படும்.

*இந்தப் பீடத்தின் அடிப் பகுதியில் ஐந்து யாக பசுக்களின் தலைகள் ஓதுக்கி வைக்கப்பட்டிருக்கும். இந்த யாக பசுக்களின் உடல்களைச் செங்கற்களையும் தழற்சட்டிகளையும் செய்வதற்கு என எடுக்கப்படும் களிமண் கிடக்கும் நீரில் எறிந்துவிடுவர். தழற்சட்டியையும் செங்கற்களையும் உருப்படுத்திச் சுடும் பொழுது பலவகையான கிரியைகளுடன் வேத மந்திரங்களை ஓதுவர்.

19 முதல் 21 வரையிலுள்ள பகுதிகளில் சௌத்ராமணி யாகத்திற்குரிய பிரார்த்தனைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த யாகத்தில் ஸோம பானத்திற்குப் பதிலாகச் சுரா பானம் நிகழும். அசுவினிகளுக்கும் சரஸ்வதி, இந்திரன் என்ற தெய்வங்களுக்கும் பலியிடப்படும். காரியங் கைகூடுதற்கு விரும்பும் பிராமணன் பொருட்டாகவும், இழந்த ராஜ்யத்தை மீண்டும் அடைய விரும்பும் அரசன் பொருட்டாகவும், போரில் வெற்றியை விரும்பும் வீரன் பொருட்டாகவும், பெருஞ் செல்வத்தை அடைய விரும்பும் வைசியன் பொருட்டாகவும் இந்த யாகம் செய்யப்படும். ஸோம பானத்தில் மயக்குண்டு கிடந்த இந்திரனை அசுவினி தேவர்களும், சரஸ்வதியும் மயக்கம் தெளிவித்த வரலாறு இங்கே காணப்படுகிறது.

22 முதல் 25 வரையுள்ள பகுதிகளில் அசுவமேதயாகத்திற்கு வேண்டும் பிரார்த்தனைகள் அடங்கியுள்ளன. இதனை உலகம் முழுவதையும் வெற்றிகொள்ளத்தகும் பெரு வீரனே செய்தற் குரியன்.

இதன் இறுதியில் காணப்படும் 15 பகுதிகளும் பிற்பட்ட காலத்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. 26 முதல் 35 வரையுள்ள பகுதிகளைக் 'கிலம்' என்றே பரம்பரை கூறும். கிலம் என்றால் பிற்சேர்வு என்று பொருள். இவைகள் முன்புள்ள பகுதிகளில்வரும் பிரார்த்தனைகளின் பிற்சேர்வுகளே. 26 முதல் 29 முடியவுள்ள பகுதிகள் முன்புள்ள பகுதிகளில் வரும் பிரார்த் தனைகளுக்குரிய பிற்சேர்வுகளாம். 30-வது பகுதியில் பிரார்த் தனைகள் இல்லை; புருஷ மேதத்தில் பலியிடுதற்குரிய மக்களை எண்ணி உணர்த்துகிறது. 184 வகையினர் பலியிடுதற்கு உரியர். புரோகிதருள் சிறந்தானுக்குப் பிராமணனையும், அரசருள் சிறந்தானுக்கு வீரனையும், மருத்துக்களுக்கு வைசியனையும்,

* புறநானூறு 166, 224 முதலிய செய்யுட்களில் யாகங்கள் கூறப் பட்டிருத்தல் காணலாம்.

துறவிகளுக்குச் சூத்திரனையும், இருளுக்குக் கள்வனையும், நரகத்திற்குக் கொலைகாரனையும், தீமைக்கு அலியையும், காமத்திற்கு விபசாரியையும், சப்தத்திற்குப் பாடகனையும், நாட்டியத்திற்குப் புலவனையும், கீதத்திற்கு நடனையும், மரணத்திற்கு வேட்டுவனையும், சூதிற்குச் சூதாட்டக்கார னையும், உறக்கத்திற்குக் குருடனையும், அநீதிக்குச் செவிட னையும், ஒளிக்கு விளக்கேற்றுபவனையும், யாகத்திற்கு வண்ணாத்தியையும், விருப்பத்திற்குச் சாயமிடுபவளையும், யமனுக்கு மலடியையும், விழா மகிழ்ச்சிக்கு வைணிகனையும், அழுகைக்குக் குழலூதுபவனையும், பூமிக்கு நொண்டியையும், சொர்க்கத்திற்கு வழுக்கைத் தலையனையும் இங்ஙனமாகப் பலியிடவேண்டு மென்று விதித்திருக்கிறது.

இவ்வனைவரையும் கூட்டி வந்து ஓரிடத்தில் கொல்வது என்பது இயலாத காரியம். இவர்களுக்கு அறிகுறியாக எவற்றை யேனும் பலியிட்டு வந்தார்கள் போலும். 31-வது பகுதியில் புருஷ சூக்தம் சில பாடபேதங்களுடன் காணப்படுகிறது. இது ரிக் வேதத்திலும் (X,90) கூறப்பட்டுள்ளது. புருஷ மேதத்தின் மூலமாக உலகத் தோற்றத்தை உணர்த்துவதே இந்த சூக்தம். இதனை ஓர் உபநிஷத் என்றும் கூறுவர். 32-வது பகுதியும் அதில்வரும் பொருள்களை நோக்குமிடத்து ஓர் உபநிஷத வடிவிலேயே அமைந்துள்ளது. இயற்றுதற் கருத்தாவாகிய பிரஜாபதி இங்கே புருஷனோடும் பிரமத்தோடும் ஐக்கியப் படுத்தப்படுகிறான்.

34-வது பகுதியில் 6 செய்யுட்கள் சிவசங்கல்ப உபநிஷத் என்று கூறப்படுகிறது. 32 முதல் 34 வரையுள்ள பகுதிகளில் காணும் பிரார்த்தனைகள் ஸர்வ மேதத்தில் ஓதுதற்கு உரியன. இந்த யாகம்தான் எல்லா யாகங்களிலும் மிகச் சிறந்தது என்பர். இதில் யாகம் செய்வோன், அதனைச் செய்விக்கும் புரோகி தனுக்குத் தக்ஷிணையாக, தன்னுடைய பொருள் அனைத்தையும்* கொடுத்துவிட்டுப் பின் துறவுபூண்டு வனத்திற்குச் சென்று தன் எஞ்சிய நாட்களைக் கழிக்கவேண்டும். 35-வது பகுதியில் மரணச் சடங்கிற்குரிய செய்யுட்கள் சில காணப்படுகின்றன. இவைகள் ரிக் வேதத்தினின்றும் எடுக்கப்பட்டவை. 36 முதல் 39 வரையுள்ள பகுதிகளில் பிரவர்க்கியம் என்ற சடங்கிற்குரிய பிரார்த்தனைகள் அடங்கியுள்ளன. இந்தப் பிரவர்க்கியத்தில் யாக குண்டத்தின் மீது ஒரு பெரிய அண்டாவை வைத்துப் பழுக்கக்காய்ச்சி அதில் பாலை வார்த்துக் கொதிக்க வைத்து

* பதிற்றுப்பத்தில் வரும் அரசர்கள் யாகம் செய்வித்த புரோகிதர்களுக்கு அளித்துள்ள கொடைகள் பலவும் இங்கே ஒப்புநோக்கத்தக்கன.

அசுவினி தேவர்களுக்கு அளிப்பர். பழுக்கக் காய்ச்சிய அண்டா சூரியனைக் குறிக்கும் என்பர். முடிவில் யாகத்திற்குரிய கருவி களையெல்லாம் மனித வடிவில் அமைத்து அடுக்குவர். இறுதியிலுள்ள 49-வது பகுதியில் ஈச உபநிஷத் வைக்கப் பட்டுள்ளது.

## எஜுர் வேதம்

எஜுர் வேதத்தில் காணப்படும் பிரார்த்தனைகளும் மத்திரங் களும் செய்யுள்-வடிவிலும் உரைநடையிலுமுள்ளன. உரை நடையில் இருப்பனவற்றிற்குப் பெயர்தான் யஜுஸ் என்பது. இந்நடை—செய்யுள் நடைபோன்ற ஒரு நடையாம். செய்யுளில் வந்துள்ள பகுதிகள் பெரும்பாலும் ரிக் வேத ஸம்ஹிதையிலும் காணப்படுகின்றன.

பிரார்த்தனைகளில் மிக எளிமையானது தெய்வத்தைப் பெயரால் அழைத்து, அதற்கு யாகத்தில் அளிக்கும் பொருளைச் சமர்ப்பித்தலாம். இவ்வகையான பிரார்த்தனைகள் எஜுர் வேதத்தில் மிகப் பல உண்டு. 'நீ அக்கினியின் பொருட்டு, நீ இந்திரன் பொருட்டு' என்றும், 'இது அக்கினியின் பொருட்டு', 'இது இந்திரன் பொருட்டு' என்றும், 'அக்கினியின் பொருட்டு ஸ்வாகா' என்றும் 'இந்திரன் பொருட்டு ஸ்வாகா' என்றும் வருவன உதாரணங்களாம். இச் சொற்களைச் சொல்லி, அளிக்கும் பொருளை அக்கினியில் இடுதல் வழக்கம். புகழ்ந்துரை யாக வருவனவற்றில் அக்கினி ஹோத்திரத்தில் பாலை அளிக்கும் போது கூறுவனவற்றை விட மிக எளிமையானது காணமுடியாது.

மாலையில் 'அக்கினியே ஒளி, ஒளியே அக்கினி, ஸ்வாகா' என்றும், காலையில் 'சூரியனே ஒளி, ஒளியே சூரியன், ஸ்வாகா' என்றும் வருவன உதாரணங்களாம். இங்ஙனமே யாகக் கிரியையின் நோக்கத்தை வெளிப்படுக்கும் சொற்களும் மிகச் சுருக்கமாகவே உள்ளன. புரோகிதன், தாய்ப் பசுவினின்று கன்றுகளை ஓட்டுதற்குக் கொள்ளும் மரக்கிளையைக் குறித்து, 'நீ ரஸத்தின் பொருட்டு, நீ வலிமையின் பொருட்டு' என்று கூறுவது உதாரணம். யாகத்தில் உபயோகிக்கும் கருவி ஏதேனும் ஒன்றினால் தீமை நேரலாம் என்று அஞ்சுகிறவன் தீமையைப் போக்குதற்கு, அக் கருவியைக் குறித்து ஒரு மந்திரம் ஓதிப் பரிகாரத்தைத் தேடிக்கொள்வான். யாகப் பசுவைக் கட்டும் கயிற்றைக் குறித்து, 'நீ பாம்பாகி விடாதே ; நீ கொடிய விஷப் பாம்பாகி விடாதே' என்று கூறுவான். யாகம் செய்வோன் தனது தாடியை மழித்தற்குக் கொள்ளும் கத்தியைக் குறித்து, 'நீ அவனைப் புண்படுத்தி விடாதே' என்று கூறுவான்.

மேற்கூறியபடி மந்திரங்களால் தெய்வங்களை அழைப்பதும் புகழ்தலும் மாத்திரந்தான் நிகழ்ந்தது என்று கருதுவது சரியன்று. வேறு பல்வகையில் யாகத்திற்குரிய கருவியையும் செயல்களையும் தெய்வங்களோடு சேர்த்துக் கூறுவதும் உண்டு. உதாரணமாக, யாகம் செய்பவனுடைய பத்தினியைப் புரோகிதன் ஒரு கயிற்றால் கட்டி, 'அதிதிக்கு நீ ஒரு மேகலையாகிறாய்' என்று கூறுவான். யாகக் கருவி ஏதேனும் ஒன்று எடுக்குமிடத்து, புரோகிதன் 'ஸவிதா தெய்வத்தின் தூண்டுதலால் அசுவினி தெய்வங்களின் கரங்கொண்டும், புயங்கொண்டும், பூஷன் தெய்வத்தின் கரங் கொண்டும் உன்னை எடுக்கிறேன்' என்று அடிக்கடி கூறுவான். யாகத்தில் நெருப்பு உண்டு பண்ணுவதற்கு இரண்டு அரணிக் கட்டைகளை ஒன்றோடொன்று உராய்ந்து தேய்ப்பார்கள். அடியிலிருக்கும் அரணி சிறிதாக இருக்கும். மேலுள்ளதனைப் புருஷனாகவும் அடியிலுள்ளதனைப் பெண்ணாகவும் கூறுதல் மரபு. கீழுள்ள அரணியை எடுத்து 'நீ அக்கினியின் பிறப்பகம்' என்று சொல்லி, இரண்டு தர்ப்பைகளை அதன் மீது வைத்து, 'நீங்கள் தான் இரண்டு விருஷணங்கள்' என்று கூறி, பின் 'நீ தான் ஊர்வசி' என்று பெயரிட்டு, இச்சிற்றரணியைக் கீழாக வைப்பான். பின்னர் மேலுள்ள அரணியால் பொறிபாண்டத்தைத் தொட்டு 'நீ தான் ஆயு' என்பான். பின்பு 'நீ தான் புரூரவஸ்' என்று சொல்லி, கீழரணியின் மீது மேலரணியை வைப்பான். கடைசியாக, 'உன்னைக் காயத்திரியை ஓதிக் கடைகிறேன்; ஜகதியை ஓதிக் கடைகிறேன்' என்று கூறிக் கடைவது வழக்கம். இவ்வகையாய் அமைந்த தொடர்கள் எஜுர் வேதத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒரு சில இடங்களில் யாகம் செய்யும் எஜமான் தனது விருப்பத்தை மிக நீண்ட வசனங்களால் பிரார்த்தித்துத் தெரிவிக்கின்றான்.

ஒரு சில இடங்களில் இப் பிரார்த்தனைகளின் பொருள் அறிதற்கு எளிதாயுள்ளது. வேறு சில இடங்களில் இவற்றின் பொருள் மிக மயக்கமாயுள்ளது. இன்னும் சில இடங்களில் பொருளற்ற சொற்றொடர்களாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் ஒன்றோடொன்று இயைபில்லாத பொருள்களைச் சேர்த்துக் கூறுவதுதான். 'நீயே ஆகாயம், நீயே பூமி, நீ மாதரீஸ்வனது கொதிபாத்திரம்' என்று கூறிச் சமையற் பாண்டத்தை அடுப்பின் மீது ஏற்றுவார்கள்.

இவ் வேதத்தில் வரும் சில பிரார்த்தனைகள் மாந்திரிகக் கிரியைகளுக்கு உரியன. பேய் ஓட்டுதலும், சபித்தலும் அதர்வ வேதத்தில் காணுவதுபோல இங்கும் காணப் படுகின்றன. பகைவனைத் துன்புறுத்துதற்குரிய யாகக் கிரியைகளும் இங்கே

உள்ளன. யாகக் கருவிகளை வைக்கும் சகடத்தின் நுகக்காலை நோக்கி, 'நீ ஒரு நுகக்கால்; துன்புறுத்துபவனைத் துன்புறுத்து; எங்களைத் துன்புறுத்துபவனைத் துன்புறுத்து, நாங்கள் துன்புறுத்துகிறவர்களை நீயும் துன்புறுத்து' என்று பொருள்படும் மாந்திரிகச் சொற்களோடு, பிரமோதயம் என்று சொல்லப்படுகிற பிசிகளும், இன்னும் பழங்காலத்தில் பொது மக்களிடையே வழங்கிய பிசிகளும் இந்த எஜுர் வேதத்தில் காணப்படுகின்றன. புதிர் விளையாட்டுக்கள் எந்தெந்தச் சமயங்களில் நிகழ்வது வழக்கம் என்பது எஜுர் வேதத்தால் விளங்கும். இதனை வாஜஸநேய ஸம்ஹிதை 23-ம் அனுவாகத்தில் காணலாம்.

மேற்குறித்தவற்றைத் தெய்வ வணக்கம் என்று மட்டும் கூறினால் பொருத்தமன்று. அவைகளில் பெரும் பாலானவை எஜமானனது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. இத்தெய்வங்களும் பலி உணவோடு அமையாது பல விநோதங்களில் மகிழ்ச்சியுறுதலையும் விரும்பி நின்றன. ரகஸியமானவற்றிலும், பல பொருளுடையன வற்றிலும், குறிப்பான பொருளுள்ளனவற்றிலும் இத்தெய்வங்கள் ஈடுபட்டு மகிழ்ந்தன.

**தெய்வங்களை வசப்படுத்தும் முறை**

இவ்வாறு தெய்வங்களை வசப்படுத்தும் முறைகளுள் ஒன்று அவற்றிற்குரிய பல பெயர்களையும் அடைமொழிகளையும் பிற சிறப்புக்களையும் ஒருசேர எண்ணி அடுக்கிக் கூறி அவற்றை வணங்குதலாகும். விஷ்ணுவுக்கு ஆயிரம் நாமங்கள் பிற்காலத்து இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளன. 'ஸகஸ்ரநாமார்ச்சனை' என்பது வடமொழியிற் பெருவழக்கு.

ஆயிரம் நாமச் சிங்கம் (பால. கடிமண, 100)

எனக் கம்பரும்

ஆயிரம் பெயரால் அமரர்சென் றிறைஞ்ச
(பெரிய திருமொழி, 5,7,6)

எனத் திருமங்கை மன்னனும் கூறியுள்ளது காண்க. இங்ஙனமே, சிவனையும் ஆயிரம் பெயர்களால் அழைத்துப் பிரார்த்தனை புரிவர்.

பேராயிரமும் பரவித் திரிந்தெம் பெம்மான் என ஏத்த
ஆராவமுதே ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே
(திருவாசகம், ஆசைப். 7)

என வருவதும் காணத்தக்கது. இவ்வகையாகப் பெயர்களை அடுக்கி வணங்குதல் வாஜஸநேயீ ஸம்ஹிதை சதருத்திரீயத்திலும் தைத்திரீய ஸம்ஹிதையிலும் காணப்படுகிறது.

இங்ஙனம் பிரார்த்தனை செய்தலே யன்றி, பொருள் மறைந்து விட்ட சில அசைகளையும் சொற்களையும் கூறி வணங்குதலும் உண்டு. தெய்வங்களின் பொருட்டு 'ஸ்வாகா' என்பதும், பிதுருக்களின் பொருட்டு 'ஸ்வதா' என்பதும் யாகத்தில் வரும் வணக்கச் சொற்களாம். 'வஷட்', 'வேட்', வாத்' என்பனவும்'ஓம்' என்ற பிரணவமும் இவ்வகையைச் சார்ந்தனவே. ஓம் என்பது பிற்காலத்தில் மிக்க பெருமை அடைந்துவிட்டது. உடன்படுதற் பொருளில் வந்த இச்சொல்*, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு தெய்விக மந்திரமாக வழங்கி வருகின்றது. உபநிஷத்துக்கள் இதனைப் பிரமம் என்றே கொள்ளுகின்றன. பன்னூறாண்டுகளுக்குப் பின்னர், தந்திர நூல்களில் மேற்குறித்த ஓம் முதலிய அசைகள் மிகுதியாக ஆளப்பட்டன. உம், ஆம், ஹ்ரீம், ஊம், ஏம், க்ரோம், பட், அஃ: என்று இவ்வாறு பல ஒலிகளும் இவ்வகை நூல்களில் நிரம்பவுள்ளன, மந்திரம் என்ற சொல்லிற்குப் போலும் பொருள் வேறுபட்டு விட்டது. முதலில் இச்சொல் ரிக் (செய்யுள்) என்றும், எஜுஸ்கள் (பிரார்த்தனைகள்) என்றும் பொருள்பட்டது. பின்னர், மாந்திரிக வாய்பாடுகள் என்ற பொருளை அடைந்து விட்டது.

இவ்வாறாக இலக்கிய நெறியில் எஜுர்வேதம் சிறந்ததன்று எனினும், சமய வரலாறு பற்றிய அளவில் மிகச்சிறந்தது என்றே கொள்ளுதல் வேண்டும். பிரார்த்தனையின் தொடக்கம், அபிவிருத்தி, பொருள் முதலியவற்றை ஆராய்பவர்கள் எஜுர வேதத்தைக் கற்கவேண்டுவது மிக இன்றியமையாததாம். எஜுர் வேதமின்றிப் பிராம்மணங்களை அறியமுடியாது. இவை இரண்டு மின்றி உப நிஷத்துக்களை அறியமுடியாது.

வேதங்கள் ஸம்ஹிதைகள் எனவும் வழங்கப்பெறும். இப் பெயர்க்குப் பொருள் தொகுதி என்பது. இவ் வேதங்களில் ஒருகூறு மந்திரங்கள், பிரார்த்தனைகள், வாழ்த்துக்கள், யாகங்களுக் குரிய விதிகள் முதலியனவாம். ஸம்ஹிதை வடிவிலுள்ள வேதங்கள் மக்களால் இயற்றப்பட்டனவல்ல என்று கருதி, அபௌருஷேயம் என்பர். ரிஷிகள் இவற்றைக் கண்டனர் என்றும் கூறுவர்.

## பிராம்மணங்கள்

மேல் விவரித்த நான்கு வேதங்களேயன்றி, அவற்றைச் சார்ந்த வேறு சில நூல்களும் உள்ளன. இவை அனைத்தையும் ஒரு நிகரனவாகக் கொண்டு 'வைதிக நூல்கள்' எனக் கூறுவர்.

* தமிழில் 'ஆம்' என்று வழங்கிவருவது இச்சொல்லே. இது முதன் முதலிற் பரிபாடலில் (6. வரி 71) பயின்று வந்துள்ளது.

இவற்றுள், வேதங்களை யடுத்து இரண்டாவதாக பிராம்மணங்கள் என்று சொல்லப்படுகின்ற வசனத் தொகுப்பு நூல்களும் அடங்கி யுள்ளன. இவ்வசன நூல்கள் யாகங்களைக் குறித்தும், பல்வேறு யாகச் சடங்குகளைக் குறித்தும், அவற்றின் பயனைக் குறித்தும் சொல்லுகின்றன. மூன்றாவதாக, ஆரண்யகங்கள், உப நிஷதங்கள் என்பனவற்றைக் கூறுதல் வேண்டும். ஆரண்யகம் என்றால் அரண்யத்திற்கு, அதாவது வனத்திற்குரிய நூல்கள் என்று பொருள்படும். உபநிஷதங்கள் என்றால் மறை* பொருள் என்று பொருள்படும். ஒரு சில உபநிஷதங்கள் ஆரண்யகத்தைச் சார்ந்தும் வேறு சில தனிப்பட்டும் உள்ளன. வனத்தில் வசிக்கும் துறவிகள் முதலியோர் இறைவனைக் குறித்தும் உலகத்தைக் குறித்தும், மக்களைக் குறித்தும் சிந்தித்தவற்றை இவற்றில் காணலாம். பாரத தேசத்திற்குரிய தத்துவ சாஸ்திரக் கருத்துக் களில் மிக மிகப் பழமையானவை, இச் சிந்தனைகளே.

பிராம்மணங்கள் வாசிப்பதற்குச் சுவையற்றவை ; ஆனால், பிற்காலத்து எழுந்த சமயங்களையும் தத்துவ சாஸ்திரங்களையும் உணர்வதற்கு இவை இன்றியமையாதவை. சமய ஆராய்ச்சி செய்பவர்களுக்கும், யாகங்கள், புரோகித வகுப்புக்கள் முதலிய வற்றின் வரலாறுகளை உணர்வதற்கும் இவை மிகவும் பயன் படுவன. பிற்காலத்திலே சாம வேதத்திற்கு உரியனவாய்த் தோன்றிய பிராம்மணங்களில் வேதாங்க விஷயங்களே காணப் படுகின்றன. அதர்வ வேதத்திற்கு முதன் முதல் பிராம்மணங்கள் இல்லை. வேதங்கள் என்றால் பிராம்மணங்கள் இருத்தல் வேண்டும் என்ற கருத்துத் தோன்றிவிடவே, இவ்வேதத்திற்கும் பிராம்மணங்கள் தோன்றத் தலைப்பட்டன. உதாரணமாக, கோபத பிராம்மணத்தைக் கூறலாம். இதிலும் வேதாங்க விஷயங்களே உள்ளன.

### ரிக் வேதத்திற்குரியது

மிக மிகப் பழைய பிராம்மணங்களுள் ரிக் வேதத்திற்குரிய ஐதரேய பிராம்மணம் குறிப்பிடத்தக்கது. இதில் எட்டுப் பஞ்சயங்களாகப் பிரிக்கப்பட்டு நாற்பது அத்தியாயங்கள் அடங்கி யுள்ளன. மஹிதாஸ ஐதரேயர் என்பவர் இதனை இயற்றியவர் என்பர். ஆனால், உண்மையில் இவர் இதனைத் தொகுத்தவரே

---

* தமிழில் மறை என்பது வேதம் என்றே பொருள்படும்.

'மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே' (புறம், 1) எனப் புறத்திலும், 'நரம்பின் மறைய' (I, 33), 'மறையோர் தேஎத்து' (III, 89) ''மறைமொழி தானே' (III, 481) எனத் தொல்காப்பியத்திலும், 'மறை மொழி காட்டிவிடும்' (28) எனத் திருக்குறளிலும் பயின்று வருவது காணலாம்.

யாவர். ஸோம யாகத்தையும், அக்கினி ஹோத்திரத்தையும், இராச சூயத்தையும், இப் பிராம்மணம் கூறுகிறது.

இதனோடு நெருங்கிய தொடர்புடையது கௌஷீதகி பிராம் மணம். இதுவும் ரிக் வேதத்திற்குரியதே. முப்பது அத்தியாயங்கள் உள்ளன. இதில் முதல் ஆறு அத்தியாயங்கள் அக்கினிஷ்டோமம், பருவ காலத்திற்குரிய யாகங்கள் முதலியவற்றை விளக்கு கின்றன. எஞ்சியவை ஸோம யாகத்தைப் பற்றியே உள்ளன.

**ஸாம வேதத்திற்குரியது**

ஸாம வேதத்திற்குரியதாக தாண்ட்ய மகாப் பிராம் மணத்தைச் சொல்லுதல் வேண்டும். இதனைப் பஞ்ச விம்ஸம் என்றும் கூறுவர். இருபத்தைந்து பகுதிகளுள்ள பிராம்மணம் என்பது பொருள். இது மிகப் பழைய பிராம்மணங்களுள் ஒன்றாகும். பல முக்கியமான வரலாறுகளும் இதில் காணப் படுகின்றன. விராத்தியஸ்தோமம் என்பது இதன் கண்ணே உள்ளது. இதில் யாகக் கிரியைகள் மூலமாக விராத்தியர்களைப் பிராமண வகுப்பில் சேர்த்துக் கொள்ளும் முறை உணர்த்தப் படுகிறது. 26-வது பிராம்மணம் ஒன்றும் இதன் கண் உள்ளது. இதனை ஷட்விம்ஸப் பிராம்மணம் என்பர். இதன் இறுதிப் பகுதி அத்புதப் பிராம்மணம் என்று பெயர் பெறும். அற்புதச் செயல்கள், நிமித்தங்கள் முதலியவற்றை இது உணர்த்துகிறது. தாண்ட்ய மகா பிராம்மணத்தைக் காட்டிலும் முற்பட்டது ஜைமினியப் பிராம்மணம். இது மிக முக்கியமான ஒரு பிராம் மணமாயிருப்பினும், சிதறுண்ட பகுதிகளே நமக்கு இப்போது கிடைக்கின்றன.

**எஜுர் வேதத்திற்குரியது**

கிருஷ்ண எஜுர் வேதத்திற்குரியது தைத்திரீயப் பிராம் மணம். இதனைத் தைத்திரீய ஸம்ஹிதையின் ஒரு தொடர்ச்சி என்றே கூறுதல் வேண்டும். இதில் புருஷமேதம் கூறப்படுகிறது. சுக்கில எஜுர் வேதத்திற்குரியது சதபதப் பிராம்மணம். இதில் நூறு அத்தியாயங்கள் உள்ளன. பிராம்மணம் எல்லாவற்றுள்ளும் மிகப் பிரசித்தி பெற்றதும் மிக முக்கியமானதும் இதுவேயாம். வாஜஸநேய ஸம்ஹிதையைப் போல, இதுவும் காண்வசாகை என்றும் மாத்தியந்தன சாகை என்றும் இரண்டாகக் கூறுபடும். மாத்தியந்தன சாகையில் கண்ட 100 அத்தியாயங்களும் 14 காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. முதல் 5 காண்டங்கள் நெருங்கிய தொடர்புடையன. இதன் கண் யாக்ஞ்ய வல்கியர் கூறுவனவே முடிந்த முடிபு எனச் சொல்லப்படுகிறது. 6 முதல் 9 முடிய உள்ள காண்டங்கள் அக்கினி சயனம் முதலியவற்றைக்

கூறுகின்றன. இவற்றில் யாக்ஞ்ய வல்கியரது பெயரே காணப் படவில்லை. இதில் சாண்டில்யர்* என்ற ஆசிரியர் குறிப்பிடப் படுகின்றார். இந்த ஆசிரியர் அக்கினி ரகஸியத்தை உலகிற்கு உணர்த்தியவர் என்று புகழப்படுகிறார். 11 முதல் 14 வரையுள்ள காண்டங்கள் இந்த அக்கினி ரகஸியத்தையும், உபநயனம், சுவாத்தியாயமாகிய பிரமயக்ஞம், அபரக் கிரியைகள் முதலிய வற்றையும் உணர்த்துகின்றன. 13-ம் காண்டத்தில் அசுவமேதம், புருஷ மேதம், ஸர்வ மேதம் முதலியன விவரிக்கப்படுகின்றன. இப் பிராம்மணத்தின் இறுதியில் பிருகதாரணிய உபநிஷத் வைக்கப்பட்டுள்ளது.

### சொல்லாராய்ச்சி

இப் பிராம்மணங்களில் சொல்லாராய்ச்சிகள் பலவும் அங்கங்கே காணப்படுகின்றன. உதாரணமாக இந்திரன் என்ற சொல், தீப்பற்றவைத்தல் என்று பொருள்படும். 'இந்த்' என்ற வினையடியாகப் பிறந்ததென்றும் இதனால் 'இந்த்' என்பதே இக்கடவுளின் பெயர் என்றும், இவ் உண்மையை மறைத்தற் பொருட்டே 'இந்த்ர' என்று ரகரம் சேர்த்து வழங்கினர் என்றும், சதபதப் பிராம்மணம் கூறுகிறது. இவ் வகைச் சொல்லாராய்ச்சியேயன்றி இலக்கணம், சிக்ஷை, ஜோதிஷம் முதலிய வேதாங்கங்களின் தொடக்க நிலையும் இப் பிராம்மணங் களுள் உள்ளன.

பிராம்மணங்கள் பொதுப்படத் தோன்றிய காலத்தைக் குறித்து ஆசிரியர் விண்டர்நீட்ஸ் கூறுவது நோக்கத்தக்கது. அவர் ரிக் வேதம் முதலியன தொகுக்கப் பட்டதற்குப் பின்னும் பௌத்த சமயம் தோன்றியதற்கு முன்னுமாகப் பிராம்மணங்கள் தோன்றின என்று துணிந்துள்ளார்.

பிராம்மணங்களிலும் அதன் பிற்சேர்வுகளிலும் ஆர ணியகங்கள் உள்ளன. இவற்றில் காணப்படுவன யாகத்திற்குரிய விதிகளும் அவற்றின் விளக்கங்களும் அல்ல. ஆனால், யாகத்தின் உட்பொருளும் அதன் உட்குறிப்பும் இவற்றில் அடங்கியுள்ளன. நால்வகை ஆசிரமங்கள் வகுக்கப்பட்ட பின்னர், இந்த ஆர ணியகங்கள் வானப் பிரஸ்தர்கள் கற்கவேண்டும் வேதப் பகுதியாக அமைந்து விட்டன. இவற்றின் பிற்சேர்வுகளாகவே உபநிஷதங் களில் மிகப் பழமையானவை காணப்படுகின்றன.

### வேதாந்தம்

இவ் இரண்டு பகுதிகளும் வேறுபிரித்து அறியமுடியாதபடி ஒன்றோடொன்று கலந்தும் காணப்படுகின்றன. இவைகளை

* இப் பெயருடையார் ஒரு புலவர் குறுந்தொகையில் 307-ம் செய்யுளை இயற்றியுள்ளார்.

வேதத்தின் முடிவு அல்லது வேதாந்தம் என்று பெயரிட்டனர். வேத காலத்தின் இறுதியில் இவை தோன்றின என்பது உறுதி. பிற்காலத்தில் வந்த தத்துவ ஞானிகள் இவ் வேதாந்தத்தை வேதத்தின் இறுதியில் தோன்றின என்று கொள்ளாது வேதத்தின் முடிந்தமுடிபு என்று கொண்டனர்.

வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை ;
பாதவ மதனிற் படுபயன் பலவே ; அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே ; இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே ; தளிர்ஓரீஇ
அரும்பொடு மலர்பிஞ்சு அருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே ;
அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப,
ஒரும்வே தாந்தமென்று உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்த
தேனமுது அருந்தினர் சிலரே

(11, 25-35)

என்ற பண்டார மும்மணிக்கோவைச் செய்யுட் பகுதி இக்கருத்தை நன்கு விளக்குகிறது.

**ஆரணியகங்கள்**

வேதாந்தம் என்ற பெயருக்கேற்ப, ஆரணியகங்களும், உபநிஷத்துக்களும் பல பல வேத சாகைகளுக்கும் உரியனவாகக் கருதப்பட்டன. ஆனால், உண்மையில் இவைகள் பிராம்மணங்களின் பகுதியேயாகும். ஐதரேய உபநிஷத்தை உட்கொண்டிருக்கும் ஐதரேய ஆரணியகம் ரிக் வேதத்தைச் சார்ந்த ஐதரேய பிராம்மணத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது. ரிக் வேதத்தைச் சார்ந்த கௌசீதகீ பிராம்மணம் கௌசீதகீ உபநிஷத்தை உட்கொண்டிருக்கும் கௌசீதகீ ஆரணியகத்தோடு முடிகின்றது. கிருஷ்ண எஜுர் வேதத்தில் தைத்திரீய பிராம்மணமும், அதன் தொடர்ச்சியாகிய தைத்திரீய ஆரணியகமும் தைத்திரீய உபநிஷத்தோடு முடிகின்றன. சுக்ல எஜுர் வேதத்தைச் சார்ந்த சதபத பிராம்மணத்தில் 14-ம் காண்டத்தின் உட்பகுதி ஒரு ஆரணியகமாகும். அதன் கடைசிப் பகுதி எல்லாவற்றிலும் மிகப் பெரியதும் மிக முக்கியமானதாயுமுள்ள பிருகதாரணியக உபநிஷத்தாகும்.

சாந்தோக்கிய உபநிஷத்* தின் முற்பகுதி ஓர் ஆரணியகமே. அது சாமவேதத்தைச் சார்ந்த ஒரு பிராம்மணத்திற்கு உரியது. ஜைமினீய - உபநிஷத் - பிராம்மணம் சாமவேதத்தைச் சார்ந்த ஜைமினீய அல்லது தலவகார சாகைக்குரிய ஓர் ஆரணியகமாம். இதில் கேன அல்லது தலவகார உபநிஷத்து அடங்கியுள்ளது. மேற்கூறிய ஆறு உபநிஷத்துக்களும் மிகமிகப் பழமையானவை. கேன உபநிஷத்தில் ஒரு பகுதி தவிர, ஏனையவெல்லாம் உரை நடையில் அமைந்துள்ளன. இவற்றில் வேதாந்தக் கொள்கை தனிப்பட்ட தன்மையோடு விளங்குகின்றது. இங்கே குறிப்பிட்ட ஆறு உபநிஷத்துக்களுக்கும் பின்பு செய்யுள் நடையில் சில உபநிஷதங்கள் தோன்றின. அவற்றுள் கடோ உபநிஷத்தும், சுவேதாஸ்வதர உபநிஷத்தும், மகா நாராயண உபநிஷத்தும் கிருஷ்ண எஜுர் வேதத்தைச் சார்ந்தன. சுக்ல எஜுர் வேதத்தைச் சார்ந்த ஈசா உபநிஷத்து மிகச் சுருங்கியது; ஆனால் மிக முக்கியமானது. முண்டக உபநிஷத்தும், பிரச்ன உபநிஷத்தும் செய்யுளும் உரைநடையுமாகக் கலந்து அமைந்தவை. இவை அதர்வ வேதத்தைச் சார்ந்தவை. இந்த ஆறு உபநிஷத்துக்களிலும் சாங்கிய யோக சமய தத்துவங்களோடு வேதாந்தம் கலந்து காணப்படுகின்றன. சங்கரர் மேற்கூறிய பன்னிரண்டு உபநிஷத்துக்களை மாத்திரமே தமது பிரம சூத்திர பாஷ்யத்தில் எடுத்தாண்டுள்ளார். இவரால் ஆளப்பெறாத வேறு இரண்டு உபநிஷத்துக்களும் தத்துவ சாஸ்திர வரலாற்றுணர்ச்சிக்குப் பெரிதும் உதவுவன. இவைகள் கிருஷ்ண எஜுர் வேதத்தைச்

---

* பெரிய திருமொழியில்,

சந்தோகா பௌழியா தைத்திரியா
சாம வேதியனே நெடுமாலே (7,7,2)

என வந்துள்ளது. நச்சினார்க்கினியரும் தொல்காப்பியப் பாயிர உரையில், 'நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமுடைமையால் நான்மறை என்றார். அவை, தைத்திரியமும், பௌடியமும், தலவகாரமும், சாம வேதமுமாம். இனி, இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமும், என்பாரும் உளர்; அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர் வேத வியாசர் சில்வாழ்நாட் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாகச் செய்தாராகலின்' என்று எழுதியுள்ளார்.

சந்தோகம் சாம வேதத்தின் ஒரு சாகையையும், பௌழியம் ரிக் வேதத்தையும், தலவகாரம் சாமவேதத்தின் ஜைமினீய சாகையையும், தைத்திரீயம் கிருஷ்ண எஜுர் வேதத்தையும் குறிக்கின்றன. பௌழியத்தைக் குறித்து ஆசிரியர் விண்டர்நீட்ஸ் கூறுவது இங்கு மனங்கொளத்தக்கது.

Apastamba mentions the Kausitakins ; but his quotations from a Bahvrca-Brahmana, that is 'a Brahmana of the Rigvedins' do not occur either in Aitareya or in the Kausitaki Brahmana ; they must therefore refer to another Rgveda Brahmana which has not come down to us.

(A History of Indian Literature p. 191.)

சார்ந்த மைத்ராயணீ உபநிஷத்தும் மாண்டூக்கிய உபநிஷத்துமாம். இவ்விரண்டும் புத்தர் காலத்திற்குப் பின் தோன்றியவை.

### உபநிஷத்துக்கள்

இந்த உபநிஷத்துக்களே யன்றி, வேறு பல உபநிஷத்துக்களும் கேட்கப்படுகின்றன. இவைகள் இருநூறுக்கு மேலாக உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேத சாகைக்குரியதாகக் கூறப்பட்டிருப்பினும், வேதத்தோடு உண்மையான தொடர்புடையவை மிகமிகச்சிலவேயாம். புராணங்கள் தந்திரங்கள் முதலியவற்றோடுதான் இவை மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

இவற்றின் நோக்கத்தையும் பொருளடக்கத்தையும் நோக்கினால் இவற்றை ஆறுவகையாகப் பகுக்கலாம். அவைகளாவன : 1. வேதாந்தக் கொள்கைகளை விளக்குவன. 2. யோகத்தை உணர்த்துவன. 3. சந்நியாசத்தின் பெருமையை எடுத்துப் புகழ்வன. 4. திருமாலின் பரத்துவத்தை நாட்டுவன. 5. சிவபெருமானது பரத்துவத்தை நாட்டுவன. 6. சாக்தம் முதலிய சமயங்களுக்குரியன. இவற்றுள் ஒரு சிலவற்றைப் பழையன என்று கொள்ளலாம். ஜாபால உபநிஷத்தைச் சங்கரர் எடுத்தாளுகிறார். இவ் உபநிஷத்தின் இறுதியில் பரமஹம்ஸர்கள் என்று சொல்லுகின்ற துறவி வகையினரது இயல்புகள் விவரிக்கப்படுகின்றன. பரமஹம்ஸ உபநிஷத்து என்ற தனிப் பெயராலும் இவ் இறுதிப் பகுதியை வழங்குவர். சுபால உபநிஷத்து, கர்ப்ப உபநிஷத்து இவற்றை இராமாநுஜர் எடுத்தாளுகிறார். சுபால உபநிஷத்து உலகத் தோற்றம், உடல்நூல், உளநூல், அபௌதிக நூல் முதலியவற்றைத் தெரிவிக்கிறது. கர்ப்ப உபநிஷத்தில் வரும் பொருள்கள் பல திருவாசகத்தில் உள்ளன (போற்றித்திரு அகவல், 13—25). அதர்வசிரஸ் உபநிஷத்து சிவபரத்துவத்தை எடுத்துச் சொல்லுகிறது ; தர்ம சூத்திரத்திலும் இது குறிக்கப்பட்டுள்ளது. வச்சிர சூசிகா உபநிஷத்து பிரமம் அத்விதீயமானது என்று அறிந்தவன் எவனோ அவனே பிராமணன் என்ற பொருளைப் பற்றியது. முக்திகா உபநிஷத்தில் நூற்றெட்டு உபநிஷதங்களையும் கற்பதனால் ஒருவன் முக்தியடையலாம் என்று சொல்லப்படுகிறது.

இந்த நூற்றெட்டு உபநிஷதங்களும் நான்கு வேதங்களில் ஒவ்வொன்றிற்கும் உரியனவாகப் பாகுபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ரிக் வேதத்திற்கு 10 உபநிஷதங்களும், சுக்ல எஜுர் வேதத்திற்கு 19 உபநிஷதங்களும், கிருஷ்ண எஜுர் வேதத்திற்கு 32 உபநிஷதங்களும், சாம வேதத்திற்கு 16 உபநிஷதங்களும், அதர்வ வேதத்திற்கு 31 உபநிஷதங்களுமாக இப் பாகுபாடு

அமைந்துள்ளது. இங்ஙனம் அமைந்த பாகுபாடு பழங்காலத்துத் தோன்றிய வழக்கு என்று கூற முடியாது. இவை அனைத்தையும் அதர்வ வேதத்திற்கு உரியனவாகப் பொதுப்படக் கூறுதல் மரபு.

**உபநிஷத் என்பதன் பொருள்**

உபநிஷத் என்ற சொல்லுக்கு ஒருவனை அடுத்திருத்தல் என்பது பொருள். ஆசாரியனுக்கு அருகிலிருந்து மாணவன் உபதேசம் பெறுதலை இது முதலில் குறித்தது. பின்னர், அந்தரங்கமாகச் சொல்லப்படுகிற ரகஸியத்தை இது உணர்த்துவதாயிற்று. உபநிஷத் என்ற சொல்லிற்குப் பரியாயமாக ரகஸியம் என்ற சொல்லினையே சில உபநிஷதங்கள் வழங்குகின்றன. அஷ்டாதச ரகஸியம் என்று வைஷ்ணவ சமயத்தினரும் சிவ ரகஸியம் என்று சைவ சமயத்தினரும் நூல்களுக்குப் பெயரிட்டிருத்தல் அறியத்தக்கது.

கர்ப்பாதானம் முதலியவற்றிற்குரிய சடங்குகள் ஓர் உபநிஷத்தில் கூறப்பட்டிருப்பதாக ஆஸ்வலாயன கிருஹ்ய சூத்திரம் (I, 13, 1) தெரிவிக்கிறது. ரிக் வேதத்தில் வரும் (I, 191) ஒரு ரக்ஷா மந்திரம் ஓர் உபநிஷத்து எனக் காத்தியாயனர் தமது ஸர்வானுக்கிரமணிகையில் சொல்லுகிறார். கௌடில்ய அர்த்த சாஸ்திரம் (15) தீக்கொளுவுதல், கொலைபுரிதல், குருடாக்குதல் முதலியவற்றிற்குரிய மாந்திரிகக் கிரியைகளை உபநிஷத அத்தியாயத்தில் தெரிவிக்கிறது. இங்ஙனமே, வடமொழியிலுள்ள காம சூத்திரம் பெண்கள் கலவி முதலியவற்றை உபநிஷத அதிகாரத்தில் விளக்குகிறது. ஆகவே, பக்குவமுடையவர்களுக்கு ரகஸியமாகச் செய்யும் உபதேசம் 'உபநிஷதம்' எனப் பெயர் பெற்றமை தெளிவு. பிரம வித்தையை ஒருவன் தனது முதற் புதல்வனுக்கும் சிஷ்யர்களுள் சிறந்தவனுக்கும் உபதேசிக்கலாம். பிறருக்கு ஆசாரிய தக்ஷிணையாக உலகம் முழுவதையும் கொடுத்தாலும் உபதேசித்தல் கூடாது.

**அடிப்படைக் கொள்கைகள்**

சிறந்த உபநிஷதங்களில் சில அடிப்படைக் கொள்கைகள் காணப்படுகின்றன. இவற்றுள் மிக முக்கியமானது, 'உலகம்' பிரமம் என்பது தான். பிரமம், ஆத்மா என்ற இரண்டு வகைக் கருத்துக்களில்தான் உபநிஷதக் கொள்கைகள் முழுவதும் சஞ்சரிக்கின்றன. பிரமம் என்றதன் சொற்பொருள் அறிதற்கு அருமையாயுள்ளது. வேதத்தில் பிரார்த்தனை அல்லது மந்திரச் சொற்களுக்கு இச்சொல் வழங்கப்பட்டுள்ளது. இப் பிரார்த்தனைகள் முதலியன பிற்காலத்தில் மூன்று வேதங்களாகத் தொகுக்கப்பட்ட பொழுது இத் தொகுப்புக்களைப் பிரமம் என்று வழங்கினர். இது

தெய்வத்தினின்றும் தோன்றியது என்ற கருத்துப் பிறக்கவே, வேதமும் தெய்வமும் பிரமம் என்று அழைக்கப்படலாயின. பின் வேதம் முதற்படைப்பாகக் கருதப்பட்டது. முடிவில், படைப்பிற்கு மூலம் எனவும், உலகத் தோற்றத்திற்குக் காரணம் எனவும் கொள்ளப்படுவதாயிற்று. இதனைப் 'பிரம சுயம்பு' என்பர்.

**ஆத்மா**

ஆத்மா* என்ற சொல்வரலாறு எளிதில் உணரத்தக்கதே. சிலர் உயிர்த்தல் என்று பொருள்படும் 'அந்' என்ற வினையடியாகப் பிறந்தது என்பர். டாய்ஸன் முதலிய வேறு சிலர் 'இது நான்' என இச்சொல் பொருள்படும் என்றனர். ஆகவே, ஆத்மா என்பது ஒரு தத்துவக் கொள்கை மாத்திரமன்று ; 'தான்' என்ற பொருளில் வடமொழியில் பல இடங்களிலும் வழங்கியுள்ளது.

ஜீவான்மாவும், பரமான்மாவும் ஒன்று என்னும் கொள்கையை இவ் உபநிஷத்துக்கள் விளக்குவது போல, ஜீவான்மா ஐந்து அவத்தைகளுக்கு முட்பட்டு, இறுதியில் 'நானே பிரமம்' என்ற நிலையை அடையும் நெறியையும் விளக்குகின்றன. பிருகதாரணியக உபநிஷத்தில் (IV, 3, 4) இதனைக் காணலாம். இங்கே உயிர்கள் மாறிப்பிறக்கும் செய்தி உணர்த்தப்படுகிறது. இதனோடு சேர்ந்து ஒவ்வொரு கருமத்திற்கும் தக்க பலனுண்டென்பதும், அதனைத் தவிர்க்க முடியாது என்பதும் உணர்த்தப்படுகின்றன. எனவே, பிராம்மணங்களைக் காட்டிலும் உபநிஷத்துக்களில் நீதியொழுக்கம் அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. தைத்திரீய உபநிஷதம் (I, 11) கூறுவது வருமாறு: 'உண்மை பேசுக ; உனது பணியை ஆற்றுக ; வேதம் ஓதுதலைப் புறக்கணித்தல் செய்யற்க. உனது ஆசிரியனுக்குத் தக்ஷிணை கொடுத்து நீ விடைகொள்ளும் பொழுது உனது வமிசம் இடையறவு படாதபடி செய்து கொள்ளுக. கடவுளர்களுக்கும் பிதிரர்களுக்கும் செய்ய வேண்டும் கிரியைகளை ஒருபொழுதும் தவிர்க்காதே. உனது மாதா உனக்கொரு தெய்வமாவள்; உனது தந்தை ஒரு தெய்வமாவன். உனது ஆசிரியன் ஒரு தெய்வமாவன். உனது அதிதி ஒரு தெய்வமாவன்.' இவ் ஒழுக்க நெறிபற்றி பிருகதாரணியகம் (V, 2) கூறுவது இன்னும் ருசிகரமாயுள்ளது :

பிரஜாபதியின் புதல்வர்களான கடவுளர், மக்கள், அசுரர் மூவரும் பிரமசரிய விரதம் பூண்டு தமது தந்தையோடு வசித்து

---

* தமிழில் ஆத்மாவை உயிர் என்றுவழங்குவர்.
'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா'
(சிவஞான போதம், சூத்திரம். 3)
என்ற இடத்து ஆன்மா என்பதற்கு உயிர் எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. பல உபநிஷத்துக்களிலும் ஆத்மாவைப் பிராணன் என்று வழங்குதல் காணப்படுகிறது.

வந்தனர். பிரமவித்தையை அறிந்தவனது வாழ்க்கையை மேற்கொண்ட கடவுளர்கள் பிரஜாபதியிடம் வந்து, 'ஐய, எங்களுக்கு ஓர் உபதேசம் அருளிச் செய்க' என்றனர். பிரஜாபதியும் 'தா' என்று சொல்லி 'உங்களுக்குப் பொருள் விளங்கிற்றா?' என்று கேட்டனன். அவர்கள் 'விளங்கி விட்டது. தாங்கள் 'தாம்மியதா' (அடக்கம் பேணுக) என்று கூறுகிறீர்கள்' என்றனர். அவனும் 'ஆம்' உங்களுக்கு விளங்கி விட்டது' என்றனன். பின்னர் மக்கள் அவனைப் பார்த்து 'எங்களுக்கு ஏதாவது அருளிச் செய்க' என்றனர். அப்பொழுதும் அவன் 'தா' என்றே கூறி உங்களுக்குப் பொருள் விளங்கிற்றா?, என்று கேட்டனன். 'விளங்கிவிட்டது. தாங்கள் 'தத்த' என்றே 'தத்த' (கொடு) என்று கூறுகின்றீர்கள்' என்றனர். அவனும், 'ஆம், உங்களுக்கும் விளங்கிவிட்டது' என்றனன். பின்னர், அசுரர்கள் 'எங்களுக்கு ஏதாவது அருளிச் செய்யுங்கள்' என்றனர். அப்பொழுதும் 'தா' என்ற அதே சொல்லையே பிரஜாபதி கூறி, 'உங்களுக்கும் விளங்கி விட்டதா?' என்று வினவினன். 'விளங்கிவிட்டது. தயத்துவம்' (இரக்கம் காட்டுக) என்று கூறுகின்றீர்கள்' என்றனர். 'ஆம், உங்களுக்கும் விளங்கிவிட்டது' என்று பிரஜாபதி விடையிறுத்தனன். விண்ணில் தோன்றும் குரலாகிய இடியும் 'தாம்மியத, தத்த, தயத்துவம்' என்ற மூன்றையுமே குறித்து 'தா தா தா' என முழங்குகிறது. ஆதலால், ஒவ்வொருவனும் அடக்கம், தயை, இரக்கம் என்ற குணங்களில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

இங்ஙனம் நல்லொழுக்கத்தைப் பற்றி உபநிஷத்துக்களில் விவரிக்கப்பட்டபோதிலும், அவ் ஒழுக்கத்தை வற்புறுத்திக் கூறுதல் மிகமிக அருமையாகவே காணப்படுகிறது.

மேற்குறித்த ஜீவேஸ்வர ஐக்கியம், அவித்தையை நீக்கி, பரஞானத்தை அறிவதனாலேயே நிகழ்வது என உபநிஷத்துக்கள் கூறுகின்றன. புண்ணியமாயினும் சரி, பாவமாயினும் சரி, இந்த ஐக்கியம் அனைத்துவகைக் கருமங்களையும் கைவிடுதலினாலே உளதாம் என்பர்.

புண்ணியமேல் நோக்குவிக்கும், பாவங்கீழ் நூக்கும்;
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞால மொடு கீழ்மேலும் நண்ணா னாகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறும்; இவன்றான்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்று குறைவின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதான்போல் நிற்பன்

என்ற சித்தியார் செய்யுளும் (283) இக் கருத்தை விளக்குகின்றது. இதனால் யாகம் முதலியனவும் பிறவிக்குக் காரணமாம் என்பதும், பரஞானம் ஒன்றே ஸம்ஸார பந்தத்தினின்றும் நீக்கி ஐக்கியத்தின்பாற்படுத்தும் என்பதும் தெரியவரும். இந்த ஞானம் அழிவற்ற ஆற்றலுடையதாய் உள்ளதோடு, வாழ்வின் நோக்கமாயும் அமைந்துள்ளது. 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்ற திருக்குறட்கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. ஞானத்தை அடையவேண்டும் என்ற ஆழ்ந்த அவா உபநிஷத்து அனைத்திலும் ஊடுருவிக் காண்கிறது.

இந்த ஞானமானது உலக இன்பத்தைப் புறக்கணித்தலோடு, உலகத்தையே இகழ்வதற்கும் காரணமாயிற்று. மைத்ராயணீ உபநிஷத்தில்தான் (I, 2, 4) முதன் முதல் இக்கருத்துவெளிப்படுவது. இந்த உபநிஷத்து மிகப் பிற்பட்டதாகும். எனவே, ஆதி உபநிஷத்துக்களின் அடிப்படைக் கொள்கை உலகத்தைத் துன்பமயமாகக் கருதுவதன்று. எனினும், பிற்காலத்தெழுந்த தத்துவ தரிசனங்களுக்கெல்லாம் அவ் உபநிஷதங்கள் மூலமாயுள்ளன என்பதை நாம் மறக்கலாகாது.

**சுருதிகள்**

உபநிஷத்துக்களைச் சுருதிகள் என்றும், வேதத்தின் சிரஸ் என்றும் கொண்டனர். இக் கொள்கை எழுந்த பிற்காலத்தில் தத்துவ ஆராய்ச்சி என்பது தடைபட்டுவிட்டது. ஆனால், உபநிஷத்துக்களில் தத்துவ ஆராய்ச்சி நிரம்பியுள்ளது. இந்த உபநிஷத்துக்கள் போற்றப்படுவது, இவை சுருதிகளாம் என்றும், இவற்றிற் கூறப்படுவன அனைத்தும் உண்மையேயாம் என்றும் கொள்ளும் காரணத்தாலன்று. உபநிஷத்துக்களை எழுதியவர்கள் மக்கள் மனத்தில் வேரூன்றி நிற்கும் உண்மை பற்றிய அவா நிரம்பவுடையவர்கள்; இவ்வுண்மையைக் குறித்து ஓயாது சிந்தனை செய்து, அதனை அறிய முயன்றவர்கள். உண்மையை நுணுகிக் காணுவதற்கு முயன்றுள்ள இம் முயற்சியினாலேயே உபநிஷத்துக்களின் பெருமை நம்மவர்களுக்கு விளங்குகிறது.

மக்களது கருத்து வரலாற்றை அறிய முயலும் சரித்திரக்காரனுக்கு இவ் உபநிஷத்துக்களின் பெருமை இன்னமும் மிக நன்றாகப் பலப்படுகிறது. இவற்றில் கூறப்படும் ரகஸியங்களிலிருந்து, பாரஸிகத்தில் ஸூபி மதத்தினர்க்குரிய ஞானமார்க்கம் தோன்றியது. இவற்றின் ஞானமார்க்கக் கருத்துக்களோடு நவீன பிளேட்டோ கொள்கைகளும், அலெக்ஸாண்டிரியக் கிறிஸ்தவரது கொள்கைகளும் ஒத்துள்ளன. இன்னும் எக்கார்ட் (Eckhart), டௌலர் (Tauler) முதலிய கிறிஸ்தவ ஞானிகளது கொள்கைகளும், கடைசியாக ஜெர்மானிய ஞானியாகிய ஷோபன்ஹாயரது

(Schopenhauer) கொள்கைகளும் இவற்றோடு தொடர்புடையனவே. ஷோபன்ஹாயர் கூறுவது நோக்கத்தக்கது : 'நான் உங்களுக்குச் சொல்லக் கருதும் முடிபு வாழ்க்கையைக் குறித்துள்ள கொள்கைகள் எல்லாவற்றிலும் மிகப் பழமையானவற்றைக் குறிக்கும் வேதத்தின் முடிபோடு ஒத்துள்ளது. இங்கே வேதம் என்றது உபநிஷத்துக்களை. நமது நூற்றாண்டில், 19-ம் நூற்றாண்டில், உலகிற்குக் கிடைத்துள்ள நன்மைகள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது வடமொழி இலக்கியமேயாம். வேதம் வாழ்விலே எனக்குச் சாந்தியை அளித்தது; என் மரணத்திலும் அது சாந்தியை அளிக்கும்.' மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பூர்விக இந்தியர்களது தத்துவம்தான் இன்றும் மானிஸம் (Monism) என்ற பெயரால் வழங்கி வருகிறது.

**முண்டக உபநிஷதம்**

முண்டக உபநிஷதம் வித்தை என்பது; அபரஞானம், பரஞானம் என இருவகைப்படும் என்றும், அழிவில்லாத பொருளாகிய பிரமத்தை அறிவது பரஞானம் என்றும், ரிக் வேதம், எஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வ வேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தம், ஜோதிஷம் என்பவைகளை அறிவது அபரஞானம் என்றும் கூறுகிறது. இந்த உபநிஷதம்தான் வேதாங்கங்களை முதன் முதலில் எண்ணிக் கணக்கிடுகிறது. தொடக்கத்தில் இவை பற்றிய தனி நூல்கள் இருந்தன என்றோ அல்லது இவற்றைக் கற்பிக்கும் தனிப் பள்ளிசாலைகள் நிலவின வென்றோ கருதுதற்கில்லை. வேதங்களை ஓதுவிக்கும் இடத்தில், அவ்வேதங்களை அறிவதற்கு உதவியாக அமைந்த அறிவு விஷயங்களும் போதிக்கப்பட்டன. ஆகவே, இவ் வேதாங்கங்களின் தொடக்கம் பிராம்மணங்களிலும் ஆரணியகங்களிலும் காணப்படுவதாம். அங்கே யாகச் சடங்குகளை விவரிக்கும் பொழுது சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தம், ஜோதிஷம் என்பனவற்றைப் பற்றிய விவாதங்களும் குறிக்கப்பட்டுள்ளன. வரவர, இந்த அறிவுப் பொருள்களை முறைப்படுத்தித் தனித் தனியே நூல்களாக எழுதி வைக்கத் தொடங்கினர். இவைகளே சூத்திரங்களாக வழங்கலாயின.

## சூத்திரங்கள்

சூத்திரம் என்பதன் பொருள் பஞ்சு-நூல் என்பதாகும். பின்னர், சுருங்கியமைந்த விதியை இது குறித்தது. பல நூல்களை ஒன்றோடொன்று இணைத்துச் சேர்ப்பதனால் ஆடை* உருவா

* பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல் முடியு மாறு

என்ற நன்னூற் பகுதி அறியத்தக்கது.

கிறது. அதுபோலவே இந்தச் சிறுவிதிகளை ஒன்று சேர்ப்பதனால் நூற்பொருள் உருவாகின்றது. பின்னர் இவ்வகைச் சூத்திரங்களாலாய பெருநூலுக்கும் சூத்திரம் என்ற பெயரே வழங்கலாயிற்று. தமிழ் மொழியில் சூத்திரங்களை நூற்பா என்றும், சூத்திரங்களால் இயன்றதனை நூல் என்றும் கூறுதல் இங்கு நோக்குதற்குரியது. இந்தச் சூத்திரங்கள் நூற்பொருளை எளிதில் ஞாபகத்தில் வைக்கும் பொருட்டே ஏற்பட்டனவாம். உலகத்திலுள்ள இலக்கியங்கள் அனைத்திலும் இவை போன்ற சூத்திரங்கள் காண இயலாது என்று கூறுவர்.

சுருங்க உரைப்பதில், ஓர் அசை இலாபமானாலுங்கூட, அதனைப் புத்திரப் பேறாக எண்ணி மகிழ்வர் என்று பதஞ்சலி ஆசிரியர் கூறுகின்றனர். இச்சூத்திரங்களைப் பின் வந்த ஆசிரியர்கள் விளக்கி வியாக்கியானங்கள் எழுதி வைத்துள்ளார்கள். வியாக்கியானங்களின்றிச் சூத்திரங்களின் பொருளை அறிந்து கொள்ள இயலாது. இந்தச் சூத்திரநெறி பிராம்மணங்களிலிருந்து தோன்றியது என வின்டர்நீட்ஸ் கூறுவர்.

இவ்வகைச் சூத்திரங்களால் அமைந்த வேதாங்கங்களைப் பற்றிச் சங்ககாலம் முதற்கொண்டே தமிழ் மக்கள் அறிந்திருந்தனர்.

ஆறுணர்ந்த ஒரு முது நூல் (166)

எனப் புறநானூறும்,

ஆறறி யந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து (1)

எனக் கலித்தொகையும்,

கற்பம் கை ; சந்தம் கால் ; எண் கண் ;
தெற்றென் நிருத்தம் செவி ; சிக்கை மூக்கு ;
உற்ற வியாகரணம் முகம் பெற்றுச்
சார்பில் தோன்றா ஆரண வேதக்கு (27,100—104)

என மணிமேகலையும் கூறுகின்றன. தமிழில் மிகப்பழைய நிகண்டான திவாகரத்திலும்,

ஆறங்கம் மந்திரம், வியாகரணம், நிகண்டு,
சந்தோ பிசிதி, நிருத்தம், சோதிடம் (12, 81)

என இவ்வேதாங்கங்கள் வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இங்கே மந்திரம் என்றது கல்பசூத்திரத்தை.

### கல்ப சூத்திரங்கள்

பிராம்மணங்களோடும் ஆரணியகங்களோடும் நெருங்கிய தொடர்புடையன கல்ப சூத்திரங்கள். ஆகவே, இக் கல்ப சூத்திரங்கள்தான் முதன்முதலில் விரிவாக இயற்றப்பட்டன. யாகச் சடங்குகளைச் சுருங்கிய அளவில் பூர்வாபரத் தொடர்பு

காட்டிப் புரோகிதர்கள் அறியவேண்டும் அவசியம் பற்றியே இவ் வகைச் சூத்திரங்கள் எழுந்தன. பிராம்மணங்களில் கூறப்படும் சிரௌத யாகங்களைப் பற்றியவை சிரௌத சூத்திரங்கள் என்றும், நித்திய வாழ்க்கையில் நிகழ்த்தப்படும் சடங்குகளை உணர்த்தும் நூல் கிருஹ்ய சூத்திரம் என்றும் பெயர் பெறும். இவை இரண்டும் கல்பசூத்திரத்தின் இருபெரும் பகுதிகளாம்.

**சிரௌத சூத்திரங்கள்**

சிரௌத சூத்திரங்கள் மூவகை அக்கினியையும் பிரதிஷ்டை செய்யும் நெறிகளைக் குறித்தும், அக்கினி ஹோத்திரத்தைக் குறித்தும், ஸோம யாகத்தைக் குறித்தும், தர்ஸ பூர்ண மாஸ யாகத்தைக் குறித்தும், சாதுர் மாஸிய யாகத்தைக் குறித்தும் விதிகளை உணர்த்துவன. யாகத்தை உடன்பட்ட சமயநெறியின் வரலாற்றை உணர்வதற்கு இந்தச் சூத்திரங்கள் மிகுதியும் பயன் படுவனவாம்.

**கிருஹ்ய சூத்திரங்கள்**

கிருஹ்ய சூத்திரங்களுள் கூறப்படும் பல்வேறு விஷயங்களும் ஆராய்ச்சியாளருக்கு மிகவும் பயன்படத்தக்கன. இவற்றிலே ஸம்ஸ்காரங்கள் அனைத்தும் விரிவாக உணர்த்தப்படுகின்றன. கர்ப்பாதானம், ஜனனம், பிரமசரியம், விவாகம் முதலியன குறித்துப் பூர்வ மக்கள் கைக்கொண்ட பழக்க வழக்கங்கள் எல்லாம் இவற்றில் காணலாம்.

அன்றியும், பஞ்சமகா யக்ஞங்களைக் குறித்தும் இவை உணர்த்துகின்றன. தெய்வங்கள், பூதங்கள், பிதிரர்கள், விருந் தினர்கள் முதலியவர்களுக்குச் செய்யும் யக்ஞமும் பிரமத்திற்குச் செய்யும் யக்ஞமுமே பஞ்சமகா யக்ஞங்களாம். பிரம யக்ஞம் என்று கூறுவது வேதமோதுதலை. பூத யக்ஞம் என்று சொல்லுவது எல்லா வகையான உயிரினங்களின் பொருட்டும் செய்யும் யக்ஞம். பலி யாருக்கு அளிக்கப்படுகின்றதோ அத் தெய்வங்களுக்கும், இல்லுறை தெய்வங்களுக்கும், பூலோக தெய்வங்களுக்கும், இந்திரன், வருணன், சோமன் முதலியோர் களுக்கும் இவர்களைச் சார்ந்த தேவர்களுக்கும், பிராமணனுக்கும் பிராமணனைச் சார்ந்தோர்களுக்கும், பகலிலுலவும் தெய்வங் களுக்கும் இரவிலுலவும் தெய்வங்களுக்கும், ராக்ஷஸர்களுக்கும் செய்யப்படும் யக்ஞங்களையே தெய்வ யக்ஞம் குறிப்பதாகும். பிதிரர்களுக்குப் பிண்டக்கிரியை செய்வது பிதிர்யக்ஞம். விருந் தினருக்கு உபசாரம் செய்து அன்னம் அளிப்பது மனுஷ்ய யக்ஞம். வள்ளுவர்,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை*

என்று இந்தப் பஞ்சமகா யக்ஞங்களைக் குறித்துள்ளார்.

அன்றியும் வீடு கட்டுதல், ஆடு மாடுகள் வளர்த்தல், பயிர்த் தொழில் செய்தல் முதலியவற்றைப் பற்றியும், நோய்களுக்கும் துர்ச்சகுனங்களுக்கும் பரிகாரமாகச் செய்யப்படும் மாந்திரிகச் சடங்குகளைப் பற்றியும், பிசாசுகளை ஓட்டுதல் பற்றியும், வசியங்களைப் பற்றியுமுள்ள பல விஷயங்களும் கிருஹ்ய சூத்திரங்களில் காணப்படுகின்றன. முடிவாக, சிராத்தங்களைக் குறித்தும் இவை உணர்த்துகின்றன. பிற்காலத்தே சிராத்தங்கள் மிக முக்கியமாகக் கருதப்பட்டமையால், இவற்றை மட்டும் உணர்த்தும் சிராத்த கல்பங்களே தோன்றலாயின.

ஆகவே, கிருஹ்ய சூத்திரங்கள் இலக்கிய நெறியில் சிறப்புடையதாக இல்லாமற் போனாலும், பூர்விக இந்தியர்களுடைய வாழ்க்கை நெறியை உணர்ந்து கொள்வதற்கு நன்கு உதவுகின்றன. மனுஷ்ய வர்க்க சாஸ்திரத்தில் (Ethnology) பயிற்சி பெறுபவனுக்கு இவை பெரிதும் பயன்படத்தக்கன. இவற்றை ஆராய்ந்தால், இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமுள்ள தொடர்பு மொழி பற்றிய அளவில் மாத்திரமன்று என்பதும், இவர்கள் கைக்கொண்டிருந்த பழக்க வழக்கங்களிலும் இத் தொடர்பு காணப்படுகின்றது என்பதும் நாம் உணரலாம்.

**தர்ம சூத்திரங்கள்**

கிருஹ்ய சூத்திரங்களோடு நேரடியான தொடர்புடைய தர்ம சூத்திரங்களும் இங்கே குறிக்கத்தக்கன. தர்மம் என்பது உரிமை, கடமை, விதி என்பனவற்றையும், சமயம், பழக்க வழக்கம் என்பனவற்றையும் உணர்த்தும் ஒரு பொதுச் சொல்லாம். ஆதலால் இந்தச் சூத்திரங்கள் லௌகிக விதிகளையும் வைதிக விதிகளையும் உணர்த்துவனவாம். வர்ணாச்சிரம தருமங்களைப் பற்றியும் இவைகள் விதிகளை வகுத்துள்ளன. இவற்றின் மூலமாக அந்தணர்களுடைய செல்வாக்கு சமுதாயத்தில் எங்கும் பரவும் நிலைமை ஏற்பட்டது. கடைசியாக, ஸுல்வ சூத்திரங்களைப்பற்றிக் கூறவேண்டும். ஸுல்வம் என்பது அளக்கும் நூல். யாகம் செய்யும் இடம் முதலியவற்றை அளந்து கட்டுவதற்குரிய விதிகளை உணர்த்துவன இந்தச்

* இங்கே தென்புலத்தார் பிதுரர். விருந்து என்றது மனுஷ்ய யக்ஞத்தைக் குறிப்பது. தெய்வம் என்பது தேவ யக்ஞம். ஒக்கல், தான் என்று கூறியுள்ளன இந்த வைதிக மகா யக்ஞங்களோடு பொருந்துவனவாகத் தோன்றவில்லை. ஜைன சமயத்தவர்க்கு இவை உரியன என்று கருதுதற்கு இடமுண்டு.

சூத்திரங்கள். இவைகள் மிகப் பழமையான க்ஷேத்திர கணிதங்களாம். ஆகவே, விஞ்ஞான சாஸ்திர வரலாற்றை உணர இவை பெரிதும் பயன்படுவன.

சிரௌத சூத்திரங்களும் கிருஹ்ய சூத்திரங்களும் வேதத்தை உணர்ந்து கொள்வதற்கு முக்கியமான கருவிகளாம். அவைகள் யாகச் சடங்குகளின் விதிகளை மாத்திரமன்றி மந்திரப் பிரயோகங்களைப் பற்றியும் கூறுகின்றன; அந்தச் சூத்திரங்களினிடையே மந்திரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இங்ஙனமாக, கல்ப சூத்திரங்கள் வேதத்தோடு நெருங்கிய தொடர்புடைமையை இந்த மந்திரங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு கிருஹ்ய சூத்திரங்களில் தனிப்பட மந்திரங்கள் அமைக்கப்பட்டும் உள்ளன. இவைகளை 'மந்திர பிராம்மணம்' என்றும் 'மந்திர பாடம்' என்றும் அறிஞர் கூறுவர்.

கல்பத்தை மந்திரம் என்று திவாகர நிகண்டு கூறியுள்ளதன் பொருத்தம் இங்கு கூறியவற்றால் நன்கு விளங்கும். கிருஹ்ய சூத்திரங்களை யடுத்துச் சிராத்த கல்பங்களும் பிதுர்மேத சூத்திரங்களும் வைக்கப்பட்டுள்ளன. வேதத்தைச் சார்ந்த உபநிஷதங்களுக்குப் பிற்பாடு வேறுபல உபநிஷதங்களும் தோன்றிய வாறுபோல, வைதிகக் கிரியைகள் பற்றிய நூல்களுக்குப் பிற்பாடு இவற்றைக் குறித்த வேறு பல நூல்களும் தோன்றின. சிரௌத கிருஹ்ய சூத்திரங்களின் பின்பு, பரிசிஷ்டம் என்ற அனுபந்தங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் சிற்சில விஷயங்கள் மிக விரிவாக உணர்த்தப்படுகின்றன. மிகப் பெரிய பரிசிஷ்டங்களுள் ஒன்று பிராயச்சித்த சூத்திரம் என்பது. மிகப் பிற்பட்டு, பிரயோகங்களும், பத்ததிகளும், காரிகைகளும் பிராயச்சித்தக் கிரியைகளைப் பற்றித் தோன்றின.

**சிக்ஷை**

கல்ப சூத்திரங்களோடு ஒத்த பழமையுடையது சிக்ஷை எனப்படுவது. இது ஒலியியலை உணர்த்துவது. கல்ப சூத்திரங்கள் பிராம்மணங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தோன்றின. சிக்ஷைகள் வேதஸம்ஹிதைகளோடு நெருங்கிய தொடர்புடையன. சிக்ஷை என்பது போதித்தல் என்று பொருள்படும். ஸம்ஹிதைப் பாடங்களைச் சரியான உச்சாரணத்தோடு ஓதும் முறையை இது கற்பிக்கும். முதன்முதலாக தைத்திரீய உபநிஷதத்தில் (I, 2) இந்த வேதாங்கம் சொல்லப்பட்டுள்ளது. அங்கே எழுத்துக்கள், உச்சாரண வேறுபாடுகள், அசைகள், அழுத்திக் கூறும் முறைகள், பண்கள், தொடர்ந்து கூறும்போது சொற்கள் புணரும் முறைகள்: இவை ஆறும் சிக்ஷைக்குரியனவாகச் சொல்லப்பட்டுள்ளன.

யாகத்தைச் செய்யும்பொழுது வேதத்தைச் சரியாகவும் எவ்வகை யான பிழையுமின்றி ஓதுதல் அவசியமாகும்.

சிக்ஷைக்கு முன்பாகவே வேத ஸம்ஹிதைகள் முழுவதும் பூர்த்தியாகத் தொகுக்கப்பட்டு வழங்கி வந்தன. மந்திரங்கள் முதலில் தோன்றிய முறையிலேயே ரிக்வேத ஸம்ஹிதையில் உள்ளன என்று கொள்ள முடியாது. இந்த ஸம்ஹிதையைத் தொகுத்தவர்கள் பலவகையான வேறுபாடுகளை உச்சாரண முதலியவற்றின் காரணமாகச் செய்து வந்துள்ளனர் என்பது எளிதில் அறியத்தகும். வேதங்களை ஓதும் முறையும் 'ஸம்ஹிதா பாடம்' என்றும் 'பத பாடம்' என்றும் இருவகை உண்டு. பத பாடங்கள் சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து ஓதும் முறையாம். எனவே, இவை, இலக்கணத்தில் வல்லவர்கள் செய்து வைத்துள்ள முறை என்பது விளங்கும். ரிக்வேதத்தின் பதபாடம் ஸாகல்யர் என்பவர் செய்ததாகக் கூறுவர். இவரைக் குறித்து ஐதரேய ஆரணியகத்தில் சொல்லப்பட்டுமிருக்கிறது. சங்கநூற் புலவர் பெயர் வரிசையில் சாகலாசனார் என்னும் பெயர் ஒன்று காணப்படுகிறது. இப்பெயர் ஸாகல்ய என்பத னோடு தொடர்புடையது எனக் கருதலாம்.

**பிராதி சாக்கியங்கள்**

இந்த வேதாங்கத்தைச் சார்ந்த மிகப் பழைய நூல்கள் பிராதி சாக்கியங்கள் என்பன. இவைகள் ஸம்ஹிதா பாடத் தையும் பத பாடத்தையும் நிருமிக்கும் முறையை உணர்த்தி, இந்த ஸம்ஹிதையை ஓதும் நெறிகள் அனைத்தையும் மிகத் தெளிவாகக் கூறுகின்றன. ஸம்ஹிதையின் ஒவ்வொரு சாகைக்கும் இவ்வகை நூல்கள் உரியவாதல்பற்றி, பிராதி சாக்கியங்கள் என்ற பெயர் தோன்றியது.

ரிக்வேத பிராதி சாக்கியம் சௌனகர் இயற்றியது என்பர். இப்போது இது செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. பூர்வத்தில் சூத்திரமாக அமைந்திருத்தல் வேண்டும். தைத்திரீய பிராதி சாக்கிய சூத்திரம் தைத்திரீய ஸம்ஹிதைக்கு உரியது. காத்தியா யனர் இயற்றியதாகச் சொல்லும் வாஜஸநேயீ பிராதி சாக்கிய சூத்திரம் வாஜஸநேயீ ஸம்ஹிதைக்கு உரியது. இங்ஙனமே, அதர்வ வேதத்திற்குரிய பிராதி சாக்கியம் ஒன்றும் உளது. ஸாம பிராதி சாக்கியம் ஒன்றும் உளது. இந்த வேதத்தைச் சார்ந்த உத்தரகானத்திற்குரிய பிராதி சாக்கியம் 'புஷ்ப சூத்திரம்' என வழங்குகிறது. யாகத்தில் ஸாமத்தை ஓதும் முறைபற்றி 'பஞ்சவித சூத்திரம்' என்ற ஒரு பிராதி சாக்கியமும் காணப்படுகிறது.

**பிராதி சாக்கியங்களின் சிறப்பு**

இந்தப் பிராதி சாக்கியங்கள் இரண்டு வகையால் சிறப்புடைய வாகக் கருதத்தக்கன. இவைகளிலிருந்துதான் இலக்கணக்கல்வி தொடங்குகிறது. இவை இலக்கண நூலேயாகாவிடினும், அதற் குரிய விஷயங்கள் பலவும் இவற்றின்கண் உள்ளன. இவைகளிற் காணப்படும் மேற்கோளினால், இவற்றிற்கு முன்பும் இலக்கண விஷயங்கள் ஆராயப்பட்டுவந்தன என்பது விளங்கும்.

இரண்டாவதாக, ஸம்ஹிதைப் பாடங்கள் இன்று காணப் படும் நிலையிலேயே பிராதி சாக்கிய காலம் தொடங்கி அமைந் துள்ளன என்பதற்கு இவைகள் தக்க சான்றாகும். உதாரணமாக, ரிக்வேத பிராதிசாக்கியத்தில் காணும் விதிகள், இந்த ரிக்வேத ஸம்ஹிதை பத்து மண்டலங்களாகப் பூர்வ காலத்திலேயே பகுக்கப் பட்டன என்பதும், இம் மண்டலங்களிற் காணும் மந்திரங்கள் இன்றுள்ள முறையிலேயே மிகப் பூர்வ காலத்திலேயும் அமைந் திருந்தன என்பதும் தெரியவரும். ஒவ்வொரு சொல்லும் ஒவ்வோர் அசையும், இன்று அச்சுப் புத்தகங்களிற் காணப்படு மாறே, பிராதி சாக்கியங்களின் காலந் தொடங்கி வழங்கி வந்துள்ளனவாம்.

இவைகளேயன்றி, மிகப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய சிக்ஷை நூல்களும் உள்ளன. இவைகள் பாரத்துவாஜர், வியாஸர், வசிஷ்டர், யாக்ஞ்ய வல்கியர் முதலிய பூர்வகாலத்துப் பெரியோர் கள் பெயரால் வழங்குகின்றன. தர்ம சூத்திரங்களைப் பின்பற்றிப் பிற்காலத்தில் தர்ம சாஸ்திரங்கள் வெளிவந்தமைபோல, இவைகள் பிராதி சாக்கியங்களைப் பின்பற்றி அமைந்துள்ளன. சில ஓரளவு பழமை வாய்ந்தன; சில மிகப் பிற்பட்ட காலத்தன. பாணினீய சிக்ஷையைக் குறித்து 'வடிவில் பிற்பட்டதாயினும் பொருளில் பழமையானது' என உவீபர் (Weber) கூறுகிறார். பிராதி சாக்கியங்கள் இயற்றிய சௌனகரும் காத்தியாயனரும் அனுக்கிரமணி என்ற பெயருள்ள சில நூல்களையும் இயற்றினர் என்று கூறுவர். அனுக்கிரமணி என்பது பட்டிகை என்று பொருளாகும். உதாரணமாக, சௌனகர் இயற்றிய அனுக்கிர மணிகள் ரிக்வேத மந்திரங்களை இயற்றிய ரிஷிகளின் பெயர் களையும், இவ்வேதத்தில் காணும் செய்யுள் வகைகளையும், தெய்வங்களையும், மந்திரங்களையும் பட்டிகை முறையில் அமைத்துக் கூறுகின்றன. இவ்வகை அனுக்கிரமணிகளும் இன்றுள்ள முறையிலேயே மிகப் பூர்வ காலத்தும் வேத ஸம்ஹிதைகள் வழங்கின என்பதை உணர்த்தும்.

**நிருத்தம்**

சிக்ஷையென்ற வேதாங்கத்தைப் போலவே, நிகண்டு என்ற சொல்-தொகுதியும், அதற்கு யாஸ்கர் இயற்றிய நிருத்தம் என்ற

விளக்க நூலும், ரிக்வேத ஸம்ஹிதை இக்காலத்திருப்பதைப் போலவே மிகப் பூர்வகாலத்தும் உருப்பெற்றிருந்தது என்பதை உணர்த்துகின்றன. நிருத்தம் என்பதற்குச் சொல்பற்றிய ஆராய்ச்சி நூல் என்பது பொருள். இந்த நூல் வேதத்திற்கு ஒரு வியாக்கியானம் என்று சொல்லலாம். யாஸ்கர் பாணினிக்கு முந்தியவர். தமக்கு முற்பட்டவர்களாகப் பதினேழு ஆசிரியர்களை இவர் குறிப்பிடுகின்றார். இவர்களில் ஒருவர் வேதத்திற்குப் பொருள் காணுதல் பயனற்ற வேலை என்றும், வேத மந்திரங்கள் விளக்கமின்றியும், அர்த்தமின்றியும், ஒன்றோடொன்று முரண்பட்டும் உள்ளன என்றும் கூறுகிறார். இவர் கொள்கையை மறுத்து யாஸ்கர் சொல்லாராய்ச்சி செய்து பொருள் விளக்கம் செய்கிறார். பல இடங்களில் ஒரு சொல்லுக்கே இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருகின்றார். இதனால் ஆசிரியர் யாஸ்கர் காலத்தேயே ரிக்வேதத்திலுள்ள பல சொற்களுக்கும் தொடர்களுக்கும் பொருள் விளங்காமற் போயிற்று என்றும், பரம்பரை இடையறவுபட்டுப் போயிற்றென்றும் நாம் அறியலாம். 14-வது நூற்றாண்டில் சாயனர் இயற்றிய ரிக்வேத பாஷ்யம் ஒன்றே விரிந்த உரையாக அமைந்துள்ளது.

வேதப்பொருளை ஆராய்ச்சி செய்த ஒரு சில ஐரோப்பியர்கள் வேதம் தோன்றி 2000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டெழுந்த ஓர் உரைகாரர் மொழி நூலாராய்ச்சியில் வல்ல தற்காலத்து அறிஞர்களைக் காட்டிலும் பொருள் விளக்கம் செய்வதில் மிக்க தகுதியுடையவர் என்று கூறமுடியாது எனக் கொள்கின்றனர். இவர்களுள் ரூடால்ப் க்ரௌஸ் (Rudolf Graus) என்பவரை முக்கியமாகக் கூறலாம். ஆனால், வேறுசில ஆராய்ச்சியாளர்கள் சாயனபாஷ்யத்தையும் தழுவி, மொழி நூலாராய்ச்சியையும் பயன்படுத்தி நடுநிலையில் நின்று பொருள்விளக்கம் செய்வதே தக்கதாம் எனக் கொண்டுள்ளனர். இவ்வாறு கொள்பவர்களுள் முக்கியமானவர் ஆல்பிரட் லுட்விக் (Alfred Ludwig) என்பவர். இவருக்குப் பின்வந்த பிஷல், கெல்நர் என்ற இருவரும் ரிக்வேதத்தில் புதைபொருளாயிருந்த பல பகுதிகளை நன்றாக விளக்கம் செய்துள்ளார்கள். ரிக்வேதம் இந்தியர்கள் மனத்தில் உதித்ததென்றும், ஆதலால் பிற்காலத்தில் எழுந்த இந்திய இலக்கியங்கள் வேதத்தை உணர்வதற்குச் சிறந்த கருவி நூல்களாகும் என்றும் கருதினர்.

**நிகண்டுகள்**

நிருத்தமேயன்றி நிகண்டுகளையும் யாஸ்கர் செய்தனர் என்று பரம்பரை கூறும். ஆனால், நிகண்டுகளில் காணப்படும்

சொற்களுக்கு யாஸ்கர் ஒரு வியாக்கியான கர்த்தா என்பதுதான் உண்மை. இந்நிகண்டுகள் பூர்வ காலத்து ரிஷிகளுடைய பரம்பரையினர் செய்தது என்று யாஸ்கர் தாமே கூறுகின்றார். நிகண்டுகளில் மூன்று காண்டங்கள் உள்ளன. நைகண்டுக காண்டத்தில் மூன்று சொற்றொகுதிகள் உள்ளன. இத்தொகுதிகள் பூமி, ஆகாயம், நீர் முதலிய விஷயங்கள்பற்றி அமைந்துள்ளன. அதாவது, இத்தொகுதிகள் ஒருபொருட் பல்பெயர்த் தொகுதிகளாம். பூமிக்கு 21 பெயர்களும், பொன்னுக்கு 15 பெயர்களும், காற்றுக்கு 16 பெயர்களும், நீருக்கு 101 பெயர்களும், 'போ' என்ற வினைக்கு 122 வினைச்சொற்களும் இங்ஙனமாக இத்தொகுதிகள் அமைந்திருக்கின்றன. இரண்டாவதாகிய நைகம அல்லது ஐகபதிக காண்டத்தில் ஒருசொற் பல்பொருள் தொகுதிகள் அடங்கியுள்ளன. மூன்றாவதாகிய தைவத காண்டத்தில் பூமி, ஆகாயம், சொர்க்கம் என்ற பிரதேசங்கள் ஒவ்வொன்றிற்குமுரிய தெய்வங்கள் வகைப்படுத்திக் கூறப்படுகின்றன.

**சந்தம்**

சந்தம், ஜோதிஷம் என்ற இரண்டு வேதாங்கங்களிலும் இப்பொழுது கிடைப்பன மிகப் பிற்பட்டுத் தோன்றியவைகளேயாகும். ஸாம வேதத்திற்குரிய நிதான சூத்திரம் என ஒன்று உண்டு. இதில் செய்யுள் ஆராயப்படுதலோடு, ஸாம வேதப் பகுதிகளான உக்தம், ஸ்தோமம், கானம் என்பவை பற்றியும் ஆராய்ச்சி நிகழ்கின்றது. இலக்கண முறையிலும் இது முக்கியமானதாகவே உள்ளது. சிலர் பதஞ்சலி முனிவர் இதனைச் செய்தார் என்பர். ரிக் வேதத்திற்கும் எஜுர் வேதத்திற்கும் செய்யுளிலக்கணமாகப் பிங்கலம் என்பதனைக் கூறுவர். ஆனால், இது மிகவும் பிற்காலத்து எழுந்ததொரு நூலேயாகும். ஏனெனில், பிற்காலத்தில் தோன்றிய செய்யுளினங்களுக்கு இதில் இலக்கணம் காணப்படுகின்றது.

**ஜோதிஷம்**

வேதாங்கங்களில் ஒன்றாகிய ஜோதிஷ நூல் செய்யுளால் இயன்ற ஒரு சிறு நூலாகும். எஜுர் வேதத்திற்குரிய ஜோதிஷத்தில் 43 செய்யுட்களும், ரிக் வேதத்திற்குரிய ஜோதிஷத்தில் 36 செய்யுட்களும் உள்ளன. இருவகைச் சங்கராந்திகளிலும், பௌர்ணமி அமாவாசியிலும், சூரியனும் சந்திரனும் இருக்கும் நிலையையும், அவைகளைக் கண்டுபிடித்தற்குரிய விதிகளையும் இந்த வேதாங்கம் முக்கியமாகக் கூறுகிறது. இதில் 'ராசி' என்ற சொல் பயின்று வந்துள்ளது. ஆனால், இச்சொல்லின் பொருள் தொகுதி அல்லது கூட்டம் எனத் துணியப்பட்டுள்ளது; மேஷ ராசி முதலியவற்றிற் காணும் பொருளன்று.

**வியாகரணம்**

பிறிதொரு வேதாங்கமாகிய வியாகரணம் இப்பொழுது முற்றும் அழிந்து விட்டது. வேதத்தின் பொருளாராய்ச்சியில் விளைந்ததே இந்த வியாகரணம். ஆரணியகத்தில் வியாகரணத் திற்குரிய சங்கேத பதங்கள் காணப்படுகின்றன. இப்போது கிடைப்பனவற்றுள் பாணினியின் இலக்கணமே மிக்க தொன்மை வாய்ந்தது. இதில் வைதிகமொழியைப்பற்றிக் கூறும் பகுதி மிகச்சொற்பமேயாம். அன்றியும், இதற்கும் வேத சாகைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. சமயத்தொடர்பற்று வெகு காலமாகப் பயிலப்பட்டுவந்த இலக்கண நெறியின் பயனே பாணினி முனிவரது வியாகரணம்.

**பாணினி வரலாறு**

இப் பேராசிரியரைக் குறித்துச் சிறியதொரு வரலாறு கூறப் பட்டு வருகிறது. பண்டைக் காலத்தில் வர்ஷர் என்ற ஓர் ஆசாரியர் இருந்தனர். அவரிடத்தே கல்வி பயின்று கொண்டிருந்த பல மாணவர்களுள் பாணினியும் ஒருவர். இவர் பிறந்த இடம் ஸாலாதுரம் என்னும் நகரமாகும். இவரது தாயார் பெயர் தாக்ஷி என்பது. இவர் மிகவும் மந்த புத்தி ; ஆனால், கல்விமீது அளவுகடந்த ஆசையுடையவர். தமது ஆசிரியருக்கு எவ்வளவோ பணிவிடைகள் செய்தும், அவற்றால் இவர் ஒரு பயனும் எய்த வில்லை. கடைசியில் இவருடைய ஆசாரிய பத்தினி இவரை வெளியே போய்விடும்படி கட்டளையிட நேர்ந்தது. இதனால் மனம் நலிவுற்று வருந்திய பாணினி இமாலயத்திற்குச் சென்று அங்கு ஈசுவரனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். சிவபெருமானும் பாணினியின் தவத்திற்கு உவந்து எல்லா வித்தைகளுக்கும் ஆதாரமாயுள்ள வியாகரணத்தை உபதேசித்தருளினார். இங்ஙனம் வரப்பிரசாதத்தால் கல்வி பெற்றுக்கொண்ட பின்னர், தம்முடன் ஒருசாலை மாணாக்கராகிய காத்தியாயனரோடு வாதம் நிகழ்த்தினர். அது தொடங்கி ஏழுநாளாகியும் முடிவு பெறவில்லை. எட்டாவது நாளன்று பாணினியே வெற்றி எய்தினர். அப்பொழுது சிவபெருமான் ஆகாயத்தில் தோன்றி ஐந்திர வியாகரணத்திற்குப் பூமியில் அழிவுண்டாயிற்று என்று கூறி மறைந்தருளினர்.

இவ்வரலாறு எவ்வளவு காலத்திற்கு முன்புதொட்டுள்ளது என்று திட்டமாய் நிச்சயிக்கப்படவில்லை. ஆனால் கி. பி. 12-ம் நூற்றாண்டில் சோமதேவ பட்டரால் எழுதப்பட்ட கதாசரித் சாகரத்திலும், அதற்கு முதனூலாகிய பிருகத் கதா மஞ்சரியிலும் இது காணப்படுகிறது. மேலும், கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற் பகுதியில் இந்தியாவிற்கு வந்த ஹியூன் த்ஸாங் என்ற சீன

யாத்திரிகரும் மேற்கூறியது போன்றதொரு கதையை எடுத்துச் சொல்லுகின்றனர். இக் காரணங்களினால், கி. பி. 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தேனும் இவ்வரலாறு வழங்கி வருகிறது என்று கொள்ளலாம்.

பாணினியாசிரியர் பக்கல் நம் முன்னோர்க்குரிய நன்கு மதிப்பினையும் பக்தியையும் மட்டுமே இவ் வரலாறு உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டும். இவர் மந்த புத்தியாயிருந்தார் என்று கூறுதல் பொருத்தமற்றது. இவரது பேரிலக்கணமே அதற்குப் போதிய சான்றாகும். உலகத்தில் அறிவாலும் கல்வியாலும் அழியாப் புகழெய்தியுள்ள பெரியோர்கள் அவர்களது இளமைப் பிராயத்தில் மூடர்களாயும் மந்தர்களாயும் இருந்தார்கள் எனச் சொல்லுதல் பெருவழக்கு. உதாரணமாகக் காளிதாஸ மகாகவியின் வரலாற்றைக் கூறலாம். இதுபோன்ற கூற்றுக்களெல்லாம் கதையழகிற்கு வேண்டும் கற்பனைகளேயாம். ஆனால் இக் கதையில் இரண்டொன்றேனும் உண்மையில்லாமல் போகவில்லை. பாணினி தமது காலத்துள்ள வடமொழி இலக்கிய இலக்கணங்களில் பரிபூரண பாண்டித்தியமுடையவராயிருந்தார் என்பது யாவராலும் மறுக்கற்பாலதன்று.

பாணினியார் காலத்தும் தற்காலத்தோடு ஒப்ப ஸம்ஸ்கிருத மொழி இரண்டு பெரும்பிரிவாகக் கிடந்தது. இந்து சமயங்கள் அனைத்திற்கும் ஆதாரமாயுள்ள வேதத்தைப்பற்றி ஏற்கெனவே கூறியுள்ளேன். அவ் வேதம் வடமொழியால் இயன்றுள்ளது. எனினும், அம்மொழியிலுள்ள காவிய, நாடக, அலங்காரங்களில் நன்கு பயின்ற கல்வியாளர்கள் தாமும் அவ் வேதத்தின் பொருளை உணர்தற்கண் பெரிதும் இடர்ப்பட்டு மயங்குவர். வேதம் என்று குறிப்பிட்டது மந்திர பிராம்மணங்களை. இவ் இடர்ப்பாடு இருத்தற்குக் காரணம் யாதெனின், வேதத்தில் வழங்கும் சப்தங்களும் காவியம், நாடகம் முதலியவற்றில் வழங்கும் சப்தங்களும் தம்மில் மிகப் பெரிதும் வேறுபடுகின்றன. மந்திரங்களிலுள்ள சில சப்தங்களில் அவை வேற்று மொழிக்கு உரியனவோ என்று நாம் திகைக்கும்படி அத்துணை வேறுபாடு காணப்படுகின்றது.

இது வடமொழியில் காலக்கிரமத்தில் ஏற்பட்ட உபசய அபசயங்கள் காரணமாக நேர்ந்ததாகும். வேதத்தில் மட்டும் பயின்று வரும் சப்தங்களை வைதிக சப்தங்கள் என்றும், மற்றை இதிகாஸம், காவியம் முதலிய வடமொழி நூல்கள் அனைத்திலும் பயின்று வரும் சப்தங்களை லௌகிக சப்தங்கள் என்றும் வடமொழிவாணர் கூறுவர். பாணினியாசிரியர் இவ்விருவகை வழக்குக்களையும் நன்கு உணர்ந்தவராவர். ஆனால், வைதிக

வழக்கினை 'சந்தஸ்' என்றும் லௌகிக வழக்கினை 'லோகம்', 'பாஷை' என்றும், இவர் தமது வியாகரணத்தில் வழங்கினர்.

தமிழிலும் இது போன்றதொரு வழக்கு வேறுபாடு வியவகரிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலே.

தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்

என்று கூறப்பட்டிருக்கிறது. பாணினி 'சந்தஸ்' என்று வழங்கியதனோடு ஒப்ப, தமிழிலும் 'செய்யுள்' எனப்பட்டது. பிரயோக விவேக உரையிலே, 'வழக்காவது உலக வழக்கும், செய்யுள் வழக்கும் என இருவகைப்படும். அவற்றை வடநூலார் லௌகிகப் பிரக்கிரியை, வைதிகப் பிரக்கிரியை என்பர்' என்று சுப்பிரமணிய தீக்ஷிதரும் உரைத்துச் சென்றார். தொல்காப்பியர் இவ்வழக்கு வேறுபாட்டினை சுமார் 35 சூத்திரங்களால் உணர்த்துகிறார். நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் தொல்காப்பியர் காட்டியவற்றுள் பெரும்பாலனவற்றை நீக்கி, விஷயத்தை மிகவும் சுருக்கி 5 சூத்திரங்களால் கூறி முடிக்கின்றார். இங்ஙனம் சுருக்குவதனால் இவ் வேறுபாடு தமிழிலக்கண உணர்ச்சிக்கு அத்துணை அவசியமில்லை என்பது நன்னூலார்க்குக் கருத்தெனின் அது பொருத்தமுடையதேயாகும்.

**பாணினீய வியாகரணம்**

பாணினீய வியாகரணத்தில் ஏறக்குறைய 4,000 சூத்திரங்கள் உள்ளன. நூல் முழுவதும் எட்டு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. இக்காரணத்தால் 'அஷ்டாத்தியாயி' என்ற பெயர் இதற்கு வழங்குகிறது. ஒவ்வோர் அத்தியாயத்திலும் நான்கு பாதங்கள் உள்ளன. அன்றியும் இந்நூலுக்குத் தனியே 5 அங்கங்களும் உள்ளன. அக்ஷர ஸமாம்நியாயம், சிக்ஷை, கணபாடம், தாது பாடம், லிங்காநு சாஸனம் என்பனவே அவை. இந்த அங்கங்கள் பொது முறையில் இன்ன இயல்பின என்று அறிந்து கொள்ளுதல் நலமாகும்.

**ஐந்து அங்கங்களின் இயல்பு**

1. **அக்ஷரஸமாம் நியாயம்** : இது வடமொழிக்குரிய எழுத்துக்களை உணர்த்துவது.

2. **சிக்ஷை** : இது எழுத்துக்களின் பிறப்பு, உச்சாரணம் முதலியவற்றை உணர்த்துகிறது. தொல்காப்பியத்திலுள்ள பிறப்பியல் இதனோடு ஒத்து நோக்குதற்குரியது.

3. **கணபாடம்** : அஷ்டாத்தியாயியில் இன்ன சொல் தொடக்கத்தன இன்னவாறாகும் எனப் பல இடங்களிலும் விதிக்கப்

பட்டுள்ளன. உதாரணமாக, 'திகாதிப்யோ யத்' (IV, 3, 54) என்ற சூத்திரத்தை எடுத்துக் கொள்க. இதன் கருத்து 'உள தாவது' 'தோன்றுவது' என்ற பொருளோடு தத்திதப் பெயர் பெறவேண்டியக்கால் 'திக்கு' ஆகிய சொற்களுக்கு 'ய' விகுதி வரும் என்பதாம். திச்யம், கண்யம், பக்ஷ்யம் முதலிய தத்திதப் பெயர்களைக் காண்க. இவ்வாறு சூத்திரம் செய்த அளவில் 'திகாதி' என்பதன்கண் அடங்கிய சொற்கள் இவையெல்லாம் என்று உணர்த்தும் கடப்பாடு ஆசிரியர்க்கு ஏற்பட்டது. அதனால், அச்சொற்களையெல்லாம் ஒரு கணமாக ஆசிரியர் தொகுத்து வைத்தனர். இங்ஙனமே நூலின்கண் குறிக்கப்பட்டுள்ள கணங் களுள் ஒவ்வொன்றிலும் அடங்கிய சொற்கள் இவையென்று தெரிவிக்கும் பாடம் 'கணபாடம்' என்று பெயர் பெறும்.

**4. தாது பாடம்:** இது வட மொழியிலுள்ள வினைப் பகுதிகள் அனைத்தையும் இத்துணையென்று அறுதியிட்டு அவற்றை இலக்கண நெறியால் 10 வகையாகப் பகுத்து உணர்த்துவது. இப்பொழுதுள்ள தாது பாடத்தில் வினையடியும், அதனை அடுத்து அதன் பொருளும் காணப்படுகின்றன. பொருள் உணர்த்தும் சொற்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டன என்பர்.

**5. லிங்காநு சாஸனம்:** இது வட மொழியிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து இன்ன சொல்லுக்கு இன்ன லிங்கம் (ஆண், பெண், அலி) என விதித்துக் கூறுவது. தமிழில் லிங்கம் (பால்) பொருளின் தன்மை பற்றி ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, நம்பி வந்தான், நங்கை வந்தாள், மரம் வளர்ந்தது என்ற இடங்களில் நம்பி, நங்கை, மரம் என்ற சொற்கள் எப் பொருள்களை உணர்த்துகின்றனவோ அப்பொருள்களின் தன்மை ஆண்பாலும், பெண்பாலும், ஒன்றன்பாலுமா யிருத்தல்பற்றி அச் சொற்கள் முறையே ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், ஒன்றன்பாற் சொல் என வழங்குவர். வடமொழியில் இங்ஙனம் வழங்குவதில்லை. சொற்பற்றியே லிங்க வியவஸ்தை ஏற்பட் டுள்ளது. உதாரணமாக, மனைவி, என்று பொருள்படும் 'தாரா' 'களத்திரம்' என்ற சொற்களை எடுத்துக் கொள்க. தாரா என்பது ஆண்பாலும் பன்மையுமாகும்; களத்திரம் என்பது அலிப்பாலும் ஒருமையுமாகும். இங்ஙனமாதலின், வடமொழியில் சொல்லை உணரும்போதே அதன் லிங்கத்தையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இக்காரணத்தாலேயே லிங்காநு சாஸனம் தனிப்படக் கூறப்பட்டுள்ளது.

அங்கங்களுள் கணபாடம், தாது பாடம் என வரும் பெயர் களுக்கு ஏற்க, அஷ்டாத்தியாயியைச் சூத்திர பாடம் எனச்

சிறப்பித்து வழங்குதலும் உண்டு. இதற்குக் காரணம் நூல் முழுவதும் சூத்திர யாப்பினால் ஆக்கப்பட்டிருப்பதேயாம். ஆனால், சூத்திரம் என்று கூறிய அளவில் பாணினீய சூத்திரம், தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றிற்போல இருக்கும் என்று நினைத்தல் தவறு. பாணினி முனிவர் மிக மிகச் சுருக்கித் தம் சூத்திரங்களைச் செய்துள்ளார். 'அரை மாத்திரையேனும் சுருங்குமாறு இலாபம் பெறுதல் கூடுமாயின், அதனைப் பாணினீயர்கள் புத்திரப்பேறு லபித்ததுபோலப் போற்றிப் பாராட்டுவர்' என்று வழங்கும் முதுமொழி சொற் சுருக்க விஷயத்தில் பாணினியாசிரியர் எத்தனை சிரமம் எடுத்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு உணர்த்துகின்றது. உதாரணமாக 'ஸேட்' என்பது ஒரு சூத்திரம். இங்ஙனம் பல.

இதுவரை விவரித்த இலக்கணப் பகுதிகளால் பாணினி ஆசிரியரின் வியாகரணம் எவ்வகையினும் சிறப்பு மிக்க நூல் என்று தெளிதற்குரியது. அது உலகமெல்லாம் ஒருங்கு புகழும் முதல்தரமான பெருநூல். மக்களாய்ப் பிறந்தாருள் பாணினியார் போன்று அத்துணை அறிவாற்றல் படைத்தவர் என்று சிலரையே சுட்டிக் கூறுதல் கூடும். மொழியின் இயல்புகள் அனைத்தையும் ஒருங்கேயுணரும் அகன்ற பேரறிவும், அவற்றை முறைப்படுத்திப் பகுத்து நுணுகி ஆராயும் மதிநுட்பமும், ஆராய்ந்தவற்றை ஒரு நிலையிற் கொணர்ந்து யாண்டும் தவறாத இலக்கண விதிகள் அமைக்கும் பேராற்றலும் ஒருவரால் அளவிடும் திறத்தனவல்ல. ஒருவரது அறிவு வன்மையை மதிப்பதற்கு அவர் இயற்றிய நூலினை அளவு கருவியாகக் கொள்ளல் தகும் எனின், பாணினியாசிரியரின் வியாகரணம் அவர் வியக்கத்தக்க அறிவாற்றல் வாய்ந்த ஒரு மகா புருஷர் ஆவர் என்பதனை ஐயமின்றி நிலைநாட்டும்.

எனினும், இரண்டு வகையால் பாணினீயமும் குறைபாடுள தாயிருத்தல் கூடும் என்று கருதுதல் தவறாகாது. முதலாவதாக, முற்றும் உணர்ந்தவரில்லை என்ற உண்மை ஓரிடத்தும் பொய்த்து விடுவதில்லை. எவ்வளவு பெரியோராயினும், எத்துணை அறிவாற்றல் படைத்தவரே யாயினும், மக்களினத்துள் பிறந்த அந்த ஒரு காரணத்தாலேயே அவரது அறிவில் சிறிதேனும் குறை பாடிருத்தல் வேண்டும் என்று ஊகித்தற்கு இடமுண்டு. ஏனெனில், மக்கள் இயற்கையிலேயே அளவுபட்ட அறிவுடையவர். ஆகவே, பாணினியாரது நுண்ணிய ஆராய்ச்சிக்கும் அகப்படாது புறத்தே மறைந்துகிடந்த மொழி நூல்-தத்துவங்கள் சில சில இருந்தன என்று கொள்ளுவதில் அப்பெரியாருக்கு யாதோர் இழுக்கும் இல்லை.

இரண்டாவதாக, இயற்கையிலுள்ள ஜீவராசிகளோடு ஒப்ப, மக்கள் வழங்கும் மொழிக்கும் தோற்றம், வளர்ச்சி, அழிவு என்பன உண்டு என்பது எப்பொழுதும் மனத்திற் கொள்ள வேண்டுவதோர் உண்மையாம். இவ்வுண்மையை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம். தொல்காப்பியர் நூலோடு மாறுபட்டு இக் காலத்து ஏதேனும் ஓர் இலக்கிய வழக்குக் காணப்படுமாயின், அதனைப் பிழை என்று தள்ளுவார் இன்றும் உளர். மொழிகளின் இயல்பைச் சிறிது ஞாபகத்தில் வைப்போமாயின் இவ்வாறு செய்யத் துணியோம்.

கடிசொல் இல்லை காலத்துப் படினே

எனத் தொல்காப்பியர் தாமும் மேலே சுட்டிய உண்மையை ஒருவாறு அறிவித்திருக்கிறார். பவணந்தியும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

என்றனர். ஆகவே, வடமொழியிலும் பாணினியார் காலத்திற்குப் பிற்பட்டுச் சில வழக்காறுகள் தோன்றியிருத்தல் வேண்டும் ; சில அழிந்து போயிருத்தலும் வேண்டும். இங்ஙனமாக ஏற்பட்ட உபசய அபசயங்களுக்கு இலக்கணம் காணுதல் பாணினீயத்தில் சிறிதும் இயலாது என்பது கூறவேண்டா.

**காத்தியாயனர்**

மேற்கூறிய இருவகையாலும் நேர்ந்த குறைபாடுகளைக் காத்தியாயனர் என்ற ஒரு பெரியார் தோன்றிச் சில விவரண சூத்திரங்கள் இயற்றிச் சேர்த்துத் தம் ஆராய்ச்சிக்கு எட்டிய வரையில் பாணினீயத்தைச் செப்பம் செய்தனர். வரருசி என்பதும் இவருக்கு ஒரு பெயர். முற்கூறிய வரலாற்றில் பாணினியோடு ஒருசாலை மாணாக்கர் எனக் கூறப்பட்டவர் இவரே என்பர். ஆனால், ஆராய்ச்சியாளர்கள் இவரைப் பிற் பட்டவர் எனக் கொண்டு சுமார் கி. மு. 250-ல் வாழ்ந்தவர் எனத் துணிந்துள்ளார்கள். இவரது விவரண சூத்திரங்கள் வார்த்திகம் என்னும் பெயரால் வழங்கும். கூறியன, கூறாது விடுத்தன, குன்றக் கூறியன : இவற்றை நிரப்பிப் பொருளை வியக்தமாக்குவது வார்த்திகம் எனப்படும்.

'உக்தா நுக்த துருக் தார்த்தவ்யக்திகாரீது வார்த்திகம்' என்பது வார்த்திக லக்ஷணம். வார்த்திகம் செய்தமையால் காத்தியாயனரை வார்த்திககாரர் என்றும் கூறுவர்.

**பதஞ்சலி**

இவ்வார்த்திகத்தாலும் வடமொழி யிலக்கணம் நிரம்பிவிட வில்லை. இதனை உணர்ந்த பேராசிரியர் ஒருவர் மகாபாஷ்யம் ஒன்று இயற்றிப் பாணினீயத்தை முற்றுவித்தனர். முற்றுவித்த பெரியார் பதஞ்சலி முனிவர். இவர், 'புஷ்ய மித்திரன் யாகம் செய்து கொண்டிருக்கிறான்' என்று பொருள்படும் வாக்கியம் ஒன்றைத் தம் மகா பாஷ்யத்தில் எழுதியிருப்பதால், இவர்தம் காலம் கி.மு. 150 எனத் துணியப்பட்டுள்ளது. வடமொழி இலக்கிய வரலாற்றில் பண்டை இலக்கியங்களின் காலம் எங்கும் ஊகமயமாயிருக்க, இதுவொன்றே திட்டமாய்ச் சரித்திரச் சான்றோடு அறியப்படுவது என்று கூறுவர். இம் மகா பாஷ்யம் ஒன்பது ஆஹ்நிகங்களாகப் பகுத்து விரித்துரைக்கப்படுகின்றது. தொல்காப்பியரும் ஒவ்வோர் அதிகாரத்யையும் ஒன்பது இயல் களாகப் பகுத்துணர்த்துதல் ஒப்பு நோக்கத்தக்கது. பாணினி ஆசிரியரது சூத்திரமும் காத்தியாயனரது வார்த்திகமும் போதாமையை உணர்ந்து, இவர் தாமே சில வாக்கியங்களை எழுதிச் சேர்த்துள்ளார். இவற்றிற்கு இஷ்டி என்று பெயர். இங்ஙனமாக, மேற்கூறிய இம்முப்பெரு முனிவர்களாலும் வட மொழி இலக்கணம் செவ்விதாக அமைக்கப்பட்டுள்ளது.

**ஐந்திரம்**

தமிழ் மக்கள் கூர்ந்தறிய வேண்டுவது ஒன்றுண்டு. மேலே பாணினியைப் பற்றிய கதையில் சிவபெருமான் தோன்றி, அம்முனிவரால் ஐந்திரம் ஒழிந்துபோயிற்று என்று கூறியதனைக் குறித்துள்ளேன். தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில்,

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

என வருகின்றது. ஐந்திரம் மறைந்துவிட்டதற்கு முன்பு, அதாவது பாணினி முனிவர்க்கு முற்பட்ட காலத்தில் தொல் காப்பியர் வாழ்ந்தவராதல் வேண்டுமென ஒரு சிலர் ஊகிப்பர். ஐந்திரம் என்பது இந்திரனால் செய்யப்பட்ட நூல் என்று பொருள்படும். அவ்வகைப்பட்ட ஓர் இலக்கண நூலைப் பாணினி ஆசிரியர் ஓர் இடத்தும் குறிப்பிட்டாரல்லர். அவரோடு ஒத்த பழமையுள்ள பிற ஆசிரியர்களும் அதனைக் குறிப்பிடவில்லை. ஐந்திரத்தைக் குறித்த கதை மிகப் பிற்பட்டுத் தோன்றியதாகும். ஆராய்ச்சியாளர்கள் பாணினியினின்றும் வேறுபட்ட நெறியைத் தழுவிய சில இலக்கணக் கருத்துக்களுக்கு இப்பெயர் வழங்கப் பட்டதாம் என முடிவு கட்டியுள்ளார்கள். பாணினீயத்திற்குப் பின்பும் இவ் வேறுபட்ட நெறி வழக்கில் இருந்ததேயாகும். உதாரணமாக, காதந்திரம் என்ற இலக்கண நூல் இந்நெறியைப்

பின்பற்றியது என்பர். இதனால், தொல்காப்பியரது காலம் பாணினீயத்திற்கு முற்பட்டது என்பது ஆதாரமில்லாக் கூற்றாகும். பாணினீயத்தில் வரும் பல சூத்திரக் கருத்துக்களும் மகா பாஷ்யத்தில் வரும் சில பாகுபாடுகளும் தொல்காப்பியத்திலும் காணப்படுகின்றன.

பாணினீயத்தை அடுத்து இதிஹாஸ இலக்கியங்களை நாம் கவனிக்கலாம். மகாபாரதம், இராமாயணம் என்ற இரண்டும் தான் இதிஹாஸங்கள். இவற்றுள் மகா பாரதத்தை வியாஸரும், இராமாயணத்தை வான்மீகியும் இயற்றினர் என்பர். ஆனால், இவை இரண்டும் வெகுகாலமாகப் பொதுமக்களிடையே வழங்கி வந்து, காலகதியில் பெருகி வளர்ந்து, பாரத மக்கள் அனைவருக்கும் பொதுவாக அமைந்துவிட்ட இலக்கியச் செல்வங்களாம்.

## மகாபாரதம்

மகாபாரதம் உலகத்திலுள்ள இதிஹாஸங்களில் எல்லாம் அளவில் மிகப் பெரியதாகும். நமது தேசத்தில் பூர்வ காலத்து வழங்கிய பல்வேறு அறிவுத் துறைகளும் இதில் காணப்படும். பாரத சமுதாயத்தாருடைய கனவுகளும், விருப்பங்களும், நோக்கங்களும், மனோரம்மியக் கதைகளும் இதில் விளங்குகின்றன. இதனை ஒற்றுமையுள்ள ஓர் இதிஹாஸம் என்று கூறுவதெல்லாம் உபசாரம்தான். பல இதிஹாஸங்கள் ஒன்று சேர்ந்தமைந்த ஒரு பெரும் பேரிலக்கியம் என்றே இதனைக் கூறுதல் வேண்டும்.

பாரத வமிசத்தினர்களுக்குள் நிகழ்ந்த ஒரு மகா யுத்தத்தைக் குறித்தது இந்த இதிஹாஸம். இவ்வமிசத்தினரைக் குறித்துப் போரில் வல்ல வீரர்கள் என்று ரிக்வேதம் கூறுகிறது. இவ்வமிசத்தினரின் முன்னோர்களில், மூல புருஷனான பரதனைக் குறித்துப் பிராம்மணங்கள் கூறுகின்றன. இந்தப் பரதன்தான் துஷ்யந்தன் சகுந்தலை என்பவர்களது புத்திரன். பரதனுடைய வமிசத்தில் குரு என்ற ஓர் அரசன் பிற்காலத்தில் சிறப்பாக விளங்கினான். இவன் வமிசத்தினர்கள் கௌரவர்கள்.* இவர்கள் நெடுங் காலமாக அரசு புரிந்து வந்தவர்கள். ஆதலால், பரத வமிசத்தினருக்கே கௌரவர்கள் என்ற பெயர் வழங்கிற்று.

இவர்களுடைய நாடு குருக்ஷேத்திரம் என்று பெயர் பெற்றது. இந்நாட்டை எஜுர் வேதமும் பிராம்மணங்களும் குறிப்பிடுகின்றன. கௌரவ அரச வமிசத்தினரிடையில் ஒரு குடும்ப

* புறநானூறு (3) இப்பெயரைக் 'கவுரியா' என வழங்கிப் பாண்டவர்களைக் குறித்துள்ளது. ஆனால், இப் பெயர் துரியோதனனாதியரைக் குறித்தலே பெரு வழக்கு.

விவகாரம் ஏற்பட்டுப் பெரிய யுத்தமாக முடிந்தது. இந்த யுத்தத்தில் 'கௌரவ வமிசமும், அதனோடு பரத வமிசமும், அடியோடு முற்றும் அழிந்துவிட்டன. இந்த யுத்தம் உண்மையில் நிகழ்ந்ததொன்றாகவே இருத்தல் கூடும். இதனைக் குறித்து நாடோடிப் பாடல்கள் வழங்கி வந்தன. இவற்றையெல்லாம் திரட்டி இன்னார் என்று அறிய இயலாத ஒரு பெருங்கவிஞர் ஒரு வீர சரிதமாக அமைத்தனர். இச் சரித கவிதையே மகா பாரதத்தின் உட்கருவாக அமைந்தது.

ஆனால், நூற்றாண்டுகள் செல்லச் செல்ல, மேற்குறித்த உட்கருவைச் சுற்றி மிகப் பலவகையினவாகிய செய்யுள்-தொகுதி செறிந்துவிட்டது. முதலில், பல புராதன வரலாறுகள் அமைந்தன. இவைகள் பாரத வீரர்களுடைய பூர்வ சரித்திரங்களையும், அவர்களுடைய பல வேறு செயல்களையும் பற்றியன. பின்னர், வேறுபல வீர சரிதங்கள் இவ் இதிஹாஸத்தோடு சேர்க்கப் பட்டன. இவைகள் மிகப்பண்டைக் காலத்தில் மிகப் புகழ்பெற்று விளங்கிய அரசர்கள், வீரர்கள் முதலியவர்களது வரலாறு பற்றியன. இவ் வரலாற்றிற்கும் பாரத யுத்தத்திற்கும் தொடர்பு யாதொன்றும் இல்லை. இவற்றுள் ஒரு சில, உபாக்கியானங் களாக இவ் இதிஹாஸத்தின் மூலக் கவிதையில் சேர்ந்திருத்தல் கூடும். மிகப் பல, மிகப் பிற்பட்ட காலத்தில் புகுந்தனவாயிருக் கலாம். இந்த வரலாறுகள் தனித்தனிப் பாடல்களாக அமைந் திருந்தன. அங்கங்கேயுள்ள புலவர்களால் பாடப்பட்டு வந்தன என்று நினைத்தற்கும் இடமுண்டு. எவ்வாறாயினும், 'மகா பாரதம்' பாரத யுத்தத்தை மட்டும் பற்றியது அல்ல. பண்டைக் காலத்தில் புலவர்களால் பிரசாரம் எய்தியிருந்த பலவகையான கவிதைகளும் இதில் சேர்க்கப்பட்டு விட்டன.

இவ்வாறு கூறுதலால் மட்டும் மகாபாரதத்தின் உண்மைத் தன்மையை முற்ற விளக்கியதாகாது. புராதன இந்தியாவில் இலக்கிய முயற்சிகள் பெரும்பாலும் அந்தண வகுப்பைச் சார்ந்த ஆசிரியர்களால் செய்யப்பட்டு வந்தன. பொது மக்களிடையே வழங்கிய மந்திர தந்திரச் செய்யுட்களை இவர்கள் தங்களுக்கு ஏற்றபடி மாற்றி அமைத்துக் கொண்டனர் என்பது அதர்வ வேதத்தால் விளங்குகிறது. தம் கருத்துக்களுக்குப் புறம்பாய், பல இடங்களில் விநோதமாய், அமைந்த தத்துவங்களையும் தங்களுக்கு ஏற்றபடி இவர்கள் திரித்துக் கொண்டமை உப நிஷதங்கள் பலவற்றில் காணலாம்.

வீர சரிதங்கள் பற்றிய செய்யுட்கள் பொது மக்களிடையே பரவி, அவர்களால் நன்கு மதித்துப் பாராட்டப் பெற்றுவருதலை அறிந்த இவ்வகுப்பினர், இதிஹாஸத்தையும் தங்கள் கருத்துப்படி

திருத்தி அமைக்க முயன்றனர். உண்மையிலே முற்றும் லௌகிகச் சார்பாயுள்ள இதிஹாஸக் கதையைச் சமயச் சார்பான கதைச் செய்யுளாக அமைத்து, தங்களுடைய தெய்வம் பற்றிய கொள்கைகளையும், சமயக் கிரியைகள் பற்றிய கொள்கை களையும் இப்பேரிதிஹாசத்தில் நிரப்பிவிட்டனர். இங்ஙனமாக், தெய்வங்கள் பற்றிய வரலாறுகளும், வேறு பல புராதன வரலாறு களும், அந்தண மரபினர் போற்றிவந்த தத்துவங்களும், நீதிகளும், சட்டங்களும் மகாபாரதத்தில் காணப்படுகின்றன.

தங்களுடைய கொள்கைகளைப் பரப்புவதற்கு இவ் இதிஹாசம் தக்க கருவி என்று இவர்கள் கண்டுகொண்டனர். பண்டைக்காலத்தில் விளங்கிய ரிஷிகளும் அந்தணரது முன்னோர் களும் தங்கள் தவத்தாலும் துறவுப் பெருமையினாலும் பல அற்புதச் செயல்களைச் செய்த வரலாறுகளும், இவர்களுக்கு மக்கள் மட்டுமேயன்றி தெய்வங்களும் பணிந்தொழுகி வந்த வரலாறுகளும், இவர்களுக்கு அபசாரம் செய்தால், இவர்கள் சாபமிட்டு அரசர்களும் பிற பெரியோர்களும், இந்திரன் முதலிய தேவர்களும்கூட, வருந்தி அழிந்த வரலாறுகளும் மிக விரிவாக இவர்களால் கூறப்பெற்றுப் பாரதத்தின் அமிசங்களாய் அமைந்து விட்டன.

கரிய மாலினும் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேல்உறை வானினும்
விரியும் பூதம் ஓர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர்; பேணுதி உள்ளத்தால்.

அந்த ணாளர் முனியவும் ஆங்கவர்
சிந்தை யால்அருள் செய்யவும் தேவருள்
நொந்து ளாரையும் நொய்துயர்ந் தாரையும்
மைந்த எண்ண வரம்புமுண் டாங்கொலோ?

அனைய ராதலின் ஐய,இவ் வெய்யதீ
வினையின் நீங்கிய வேதியர் தாளிணை
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
இனிய கூறிநின்று ஏயது செய்தியால்.

(கம்ப. மந்தரைசூழ். 6—8)

என்று வசிஷ்டர் தம் குலத்தவர் பெருமையைக் கூறுதல் நோக்கத் தக்கது.

**பொது மக்களிடையே பரவுதல்**

ஆனால், பாரதத்தை அந்தணர்களுக்கே முழுவதும் சொந்த மாகிவிட்ட ஓர் இதிஹாஸம் என்று கூறமுடியாது. பொது மக்க ளிடையே இவ் இதிஹாஸம் மிக மிகப் பரவிவிட்டது. ஆதலால்,

அந்தணர்க்குரிய தெய்வ வரலாறுகளையும், யாகக் கிரியைகளையும் பற்றிக் கூறுகிற இடத்திலுங்கூட அவைகள் சுருக்கமாகவே புலப்படுத்தப்பட்டன. இதற்குக் காரணம் எளிதில் அறியத் தக்கது. வேதங்களிலும் யாக கருமங்களிலும் சிறந்து விளங்கிய அந்தணர்களால் இவை எழுதப் பெற்றன அல்ல. அரசர்களை அடுத்து வாழ்ந்த அரண்மனைப் புரோகிதர்களே இவற்றை எழுதிச் சேர்த்தனர். இப் புரோகிதர்களுக்குத்தான் இதிஹாஸக் கதைகளை அடிக்கடி கேட்கும்படியான வாய்ப்பு நேர்ந்திருந்தது. இவர்கள்தாம் பிற்காலத்தில் கோயில் அர்ச்சகர்களாகவும், புண்ணிய க்ஷேத்திரங்களில் வரும் யாத்திரிகர்களுக்கு அந்த க்ஷேத்திரம் பற்றிய புராண வரலாறுகளைக் கூறுபவர்களாகவும், சிவபெருமான், திருமால் முதலிய தெய்வங்களைக் குறித்த புராண வரலாறுகளை விளக்குபவர்களாகவும் அமைந்து விட்டனர். இவ்வாறு இவர்கள் செய்துள்ள முயற்சி மகாபாரதத்திலுங்கூடக் காணப்படுகிறது. மேற்குறித்த தெய்வங்களுடைய வரலாறுகளும், உலக விவரணங்களும், வமிச பரம்பரை வரலாறுகளும் புராணரீதியில் மகாபாரதத்தில் காணப்படுவதே மேற்கூறியதற்குச் சான்றாகும்.

ஆனால், இவ் இதிஹாஸம் திருமால் வணக்கம் மிகுதியாய் வழங்கிய இடத்தில் பயிலப்பட்டு வந்தது என்று கூறுதல் வேண்டும். பாரதக் கதையில் இத்தெய்வம்தான் முன்னணியில் நிற்கிறது.

> மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்
> என்னும் ஆசையால் யானும் ஈ தியம்புதற் கிசைந்தேன்
> (தற்சிறப். 8)

என்று வில்லிபுத்தூரார் கூறுகிறார். சில இடங்களில் சிவனைப் பற்றிய வரலாறுகளும் காணப்படுவது உண்மையே. ஆனால், இவ்வரலாறு பிற்படச் சேர்க்கப் பட்டதாகும். சிவ வழிபாடு பரந்து வழங்கிய இடத்திலே பாரதம் பிரசாரம் எய்தியபொழுது இவை புகுந்தனவாதல் வேண்டும்.

வைஷ்ணவக் கருத்துக்களேயன்றி, வேறு பல வகையினரது கொள்கைகளும் பாரதத்தில் இடம் பெற்றன. இவ்வகையினரும் பொதுமக்களைத் தங்கள் சார்பினராகச் செய்தற்கு முயன்றார்கள். இவர்கள்தாம் துறவிகள், தவசிகள், வானப்பிரஸ்தர்கள், மடத்தின் அதிபர்கள் முதலானோர். ஞானத்தில் சிறந்த பெரியோர்களைப் பற்றிய வரலாறுகளாலும், நீதிபற்றிய வாக்கியங்களாலும், தங்கள் துறவுக் கொள்கைகளையும், துறவு சிறந்தது என்பதையும், உலகம் இழிக்கத் தக்கது என்பதையும்

தன்னல மறுத்தலும், உயிரினங்கள்மீது அருள் காட்டுதலும் சிறந்தனவாம் என்பதையும் இவர்கள் விளக்கினார்கள். அன்றியும் கதைகள், நீதிக் கதைகள், திருஷ்டாந்தக் கதைகள் முதலிய வற்றால் தங்கள் தத்துவக் கருத்துக்களையும் நீதிக் கொள்கை களையும் இவர்கள் தெளிவுபடுத்தினர். இங்குக் கூறியனவும் மகாபாரதத்தில் தக்க இடம் பெற்றன. இவைகளைத் துறவுக் கவிதைகள் எனக் குறிப்பிடலாம்.

**பலவகையான கதைக்கூறுகள்**

இங்ஙனம் விரிவுபட்டுக் கொண்டே வந்த மகாபாரதத்தில் பற்பலவகையான கதைக்கூறுகளும் அமைந்துவிட்டன. இதி ஹாஸம் என்ற அளவில் நின்றுவிடவில்லை. நீதிக் கதைகளும், அந்தணர் சார்பான புராதன வரலாறுகளும், வசன நடையிற் சிலவும், வசனமும் செய்யுளும் கலந்த சம்பு நடையிற் சிலவும் அமைந்துவிட்டன. எனவே வீரத்தை உணர்த்தும் செய்யுட் களும், யுத்தக் காட்சிகளை வருணிக்கும் பகுதிகளும் புரோகிதர் களுக்குரிய செய்யுட்பகுதிகளும், தத்துவம், சமயம், சட்டம் பற்றிய வியாக்கியானப் பகுதிகளும், துறவுக் கவிதைகளும் மகாபாரதத்தின் அம்சங்களாய் முடிந்தன. காவியமாகவும், தவிர்க்க முடியாத பிரமாணமாய் அமைந்த சாஸ்திரமாகவும் இது கொள்ளப்பட்டது. கடந்த 1,500 ஆண்டுகளாக, கேட்டு இன்புறுதற்குரிய கலை நூலாகவும், கற்று ஒழுகுதற்குரிய நீதி நூலாகவும் இது வழங்கி வந்திருக்கிறது.

**பதினெட்டுப் பருவங்கள்**

இதிலே பதினெட்டுப் பருவங்கள் உள்ளன. இப்பருவங்களே யன்றி ஹரிவம்சம் என்ற பகுதி ஒன்றும் பிற்கூறாகச் சேர்க்கப் பட்டுள்ளது. இதனைக் 'கிலம்' என்று வழங்குவர். லக்ஷம் சுலோகங்களில் அமைந்த இப் பேரிதிஹாஸத்தை ஒரு நெறிப் பட்டது எனவும், பூர்த்தியானது எனவும், வியாஸர் என்று வழங்கும் கிருஷ்ணத் துவைபாயனர் என்ற மகரிஷியால் சொல்லப்பட்டது எனவும் கருதி வருகிறார்கள். இவ்வியாசரே நான்கு வேதங்களைத் தொகுத்தவர் எனவும், புராணங்களின் ஆசிரியர் எனவும் கூறப்பட்டு வருகிறார். பாரத வீரர்களுடைய சம காலத்தவராகவும், அவர்களோடு உறவு கொண்டவராகவும் இம்மகரிஷி விளங்குகிறார். இவருடைய சரித்திரம் மகா பாரதத் தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவரைப் பாரத வீரர் களுடைய பிதாமகர் என்று பாரதம் கூறும். தம்முடைய மூன்று மக்களும் இறந்த பிற்பாடு, தாம் இயற்றிய பாரதத்தைத் தமது சிஷ்யரான வைஸம்பாயனருக்கு இவர் கூறினர் எனவும், இவ் வைஸம்பாயனர் ஜனமேஜயர் ஸர்ப்ப யாகம் இயற்றிக்

கொண்டிருக்கும் பொழுது இடையிடையே இவ் இதிஹாஸத்தை ஓதி வந்தனர் எனவும் வரலாறு கூறும். லோமஹர்ஷணருடைய புதல்வர் சூத உக்கிரசிரவர் இதனைக் கேட்டிருந்தனர். நைமிஷ வனத்தில் ஸௌனகர் பன்னிரண்டு ஆண்டு யாகம் நிகழ்த்திக் கொண்டிருக்கும்பொழுது அங்கேகூடிய ரிஷிகள் சூத மகரிஷியைக் கேட்டுக்கொள்ள, அவர் மகாபாரதத்தைக் கூறினார் என்றும் வழங்கும்.

**வியாஸர்**

நூன்முகத்தில் வியாஸர் பாரதக் கதையைச் சுருக்கமாகவும், பின்னர் விரிவாகவும் கூறினர் என்று காணப்படுகிறது. அன்றியும் மூன்று வேறுபட்ட இடங்களில் பலரால் இது சொல்லி உணர்த்தப் பட்டது என்பதும் புலனாகிறது. நூலின் அளவு வேறுபட்டுக் கொண்டிருந்ததென்பதும் அறியக் கிடக்கிறது. சூத உக்கிரசிரவர் பாரதத்தை 8,200 சுலோகங்கொண்டதாக அறிந்துள்ளார். வியாஸர் பாரதத்தை 24,000 சுலோகங்களில் தாம் இயற்றிய தாகத் தெரிவிக்கிறார். உபாக்கியானங்களைத் தவிர்த்து, பாரதத்தை 24,000 சுலோகங்களின் அளவில் கற்று வல்லோர்கள் வழங்கிவந்தனர் எனவும் புலப்படுகிறது. வியாஸரே தேவர் களுக்கு 30 லக்ஷம் சுலோகமும், பிதுரர்களுக்கு 15 லக்ஷம் சுலோகமும், கந்தருவர்களுக்கு 16 லக்ஷம் சுலோகமும், மக்களுக்கு ஒரு லக்ஷம் சுலோகமுமாக அறுபது லக்ஷம் சுலோகங்களில் இவ் இதிஹாஸத்தை இயற்றினர் எனவும் கூறுகிறார். இவ்வகைக் கூற்றுக்களால் மகா பாரதம் காலகதியில் வளர்ந்துவிட்டது என்பதுதான் தெளிவாகிறது.

**கவிதைக் காடு**

இலக்கிய நெறியில் நின்று நோக்கும் அன்னிய நாட்டி னர்க்கு இது கலைநயம் நிறைந்த ஓர் இதிஹாஸமாகத் தோன்ற மாட்டாது. ஒரே ஆசிரியர் இயற்றியதுமன்று. இதனைத் தொகுத்தவர் ஒரு சிறந்த ஆசிரியரும் அன்று. இவ் இதிஹாஸத் தைக் கவிதைக்காடு என்றுதான் சொல்லுதல் வேண்டும். சிறு சிறு செடிகளுக்கும் புதர்களுக்கும் இடையே தோன்றும் அழகிய புஷ்பங்கள்போல, அங்கங்கே கவிதை நயமும் காணப்படுகிறது. உருவமற்று மயங்கிக் கிடக்கும் கொடிப் பிணக்கினிடையே, என்றும் நிலவத்தகும் இலக்கியச் சுவையும் மிகவும் ஆழ்ந்த ஞானக் கருத்துக்களும் மலர்ந்து திகழ்கின்றன.

**ஆதி பருவம்**

இவ் இதிஹாஸத்தில் 18 பருவங்கள் உள்ளன என்று மேலே கூறப்பட்டது. முதல் பருவத்திற்கு **ஆதிபருவம்** என்று பெயர்.

இதில் கௌரவர்களும் பாண்டவர்களும் தோன்றிய வரலாறும், இவர்கள் திருதராஷ்டிரன் அரண்மனையில் வசித்துவந்த வரலாறும், யுதிஷ்டிரர் அரசு மேற்கொண்ட வரலாறும், அவருக்கும் அவரது சகோதரர்களுக்கும் பகையாகத் துரியோதனன் முதலியோர் சூழ்ச்சி செய்த வரலாறும், அரக்கு மாளிகையில் அவர்களை அகப்படுத்த முயன்ற செய்தியும், இடிம்பனை வீமன் வதம் செய்து இடிம்பியை மணந்து கடோற்கசனைப் பெற்றெடுத்த வரலாறும், பகாசுர வதமும், திரௌபதியின் சுயம்வரமும், பாண்டவர்கள் தங்கள் அரசை மீண்டும் பெற்ற வரலாறும், அர்ச்சுனனது தீர்த்த யாத்திரையும், யுதிஷ்டிரர் இராச சூயம் செய்து பாரத தேசம் முழுமையும் புகழ் பெருக ஆண்ட வரலாறும் கூறப்படுகின்றன.

**சபாபருவம்**

இரண்டாவது **சபாபருவம்.** இதில் யுதிஷ்டிரர் சகுனியோடு சூதாடி நாட்டை இழந்த வரலாறு உணர்த்தப்படுகிறது.

**வனபருவம்**

மூன்றாவது **வனபருவம்.** இதில் பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் புகுந்த வரலாறு விரிவாகக் கூறப்படுகிறது. காமியக வனத்திலிருந்து துவைத வனத்திற்குப் பாண்டவர்கள் சென்ற காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி அறியத்தக்கது. ஒரு மான் வனத்தில் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது, அதன் கொம்பில் ஒரு முனிவரது சமித்துக்கள் மாட்டிக் கொண்டன. அவற்றோடு அது விரைந்து பாய்ந்தோடிப் போயிற்று. அம் முனிவர் பாண்டவர்களிடம் முறையிட, அவர்களும் மானைப் பின்தொடர்ந்து ஓடினர். ஆனால், அதனைப் பிடிக்கமுடியவில்லை; அது மறைந்துவிட்டது. ஓடிய களைப்பினால் தாகம் அதிகரிக்க, நீர் எங்கேனும் உளதா என்று நோக்கினர்.

நகுலன் ஒரு மரத்தின்மீது ஏறித் தூரத்தேயுள்ள ஓர் ஏரியைக் கண்டனன். அங்கே சென்று அம்பறாத்தூணியில் நீர் கொண்டுவர முயல்கிறான். அந்த ஏரி மிக அழகான ஏரி; தெளிந்த நீரையுடையது. கொக்கு முதலிய நீர்ப்பறவைகள் அங்கே சூழ்ந்திருந்தன. நீரை மொண்டு கொள்வதற்கு இவன் முயன்றதும், ஓர் யக்ஷன் தோன்றி, 'இந்த ஏரி எனக்குரியது. நான் கேட்கும் கேள்விகளுக்கு விடை அளித்தாலல்லாமல் இதிலிருந்து நீர் எடுத்தல் கூடாது' என எச்சரிக்கிறான். நகுலன் இதைப் பொருட்படுத்தாது நீரை அள்ளிப் பருகுகிறான். உடனே மயங்கி மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிடுகிறான். பின், சகாதேவனும், அர்ச்சுனனும், வீமனும் முறையே சென்று நீர் குடித்து மயங்கி

விழுகிறார்கள். கடைசியாக, தம் தம்பியர்களுக்கு யாது நேர்ந்தது எனப் பார்க்கும் பொருட்டு யுதிஷ்டிரரே செல்லுகிறார். அவர்கள் அனைவரும் மூர்ச்சைபோய் மரணமுற்றிருப்பதைக் கண்டு புலம்பி வருந்துகிறார். இவரும் ஏரியின் அருகில் செல்ல, யக்ஷனது குரல் கேட்கின்றது. யுதிஷ்டிரர் அவன் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறுவதாக ஒத்துக் கொள்ளுகிறார். வெகு கடினமான கேள்வியும் சீரிய விடையும் தொடர்கின்றன.

நிலவுலகைக் காட்டிலும் பாரமாயுள்ளவர் யாவர்?
ஒருவனது அன்னை.

விண்ணுலகைக் காட்டிலும் உயர்ந்தவர் யாவர்?
ஒருவனது தந்தை.

காற்றைக் காட்டிலும் வேகமுள்ளது யாது?
ஒருவனது ஆன்மா.

புற்களைக் காட்டிலும் மிகப் பலவா யுள்ளது யாது?
ஒருவனது எண்ணம்.

யாத்திரிகனுக்கு வழித்துணை யார்?
வாணிகச் சாத்து.

வீட்டிலிருப்பவனுக்குத் துணையாவது யார்?
ஒருவனது அன்புள்ள மனைவி.

நோயாளிக்கு நண்பன் யார்?
அவனது வைத்தியர்.

இறந்து போனவனுக்குத் துணையாவது எது?
அவன் செய்துள்ள புண்ணியம்.

வெல்லமுடியாத அரும்பகை யார்?
ஒருவனது வெகுளி.

ஒரு பொழுதும் தீர்க்கமுடியாத நோயாயுள்ளது எது?
ஒருவனது அவா.

நல்லவன் என்பவன் யார்?
அனைத்துயிர்களிடத்தும் நட்புப் பாராட்டுபவன்.

தீயவன் என்பவன் யார்?
இரக்கம் என்பதையே அறியாதவன்.

மயக்கம் என்பது யாது?
தர்மத்தில் ஐயப்பாடு கொள்ளுதலே.

செருக்கு என்பது யாது?
தன்னை வியந்து பாராட்டுதலே.

சோம்பல் என்பது யாது?
தருமத்தைச் செய்யாதிருத்தலே.

வெட்கம் என்பது யாது?
அறியாமையில் மூழ்கி இருப்பதே.

முனிவர்கள் 'உறுதிநிலை' என்பது எதனை ?
ஒருவன் தனது கடமையை ஆற்றுதலில் மனம் நிலைத்திருப்பதைத் தான்.

வீரம் என்பது யாது ?
ஐம்பொறிகளையும் அடக்குதலே.

உண்மையில் ஸ்நானம் என்பது யாது ?
அகம் தூய்மையா யிருத்தலே.

தர்மம் என்பது யாது ?
உயிர்களைக் காப்பாற்றுதலே.

உண்மையான அந்தணன் யாவன் ?

பிறப்பினாலும், வேதம் ஓதுதலினாலும், கல்விப் பெருமையினாலும் ஒருவன் அந்தணனாகமாட்டான். நன்னெறியில் ஒழுகி வாழ்பவனே அந்தணன். பிற வற்றிற்காட்டினும், தன்னுடைய வாழ்க்கையை நெறிப்படுத்தலில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். நல்வாழ்விற்குக் கேடுவந்தால் அவனே கேடுறுகிறான். நல்வாழ்வு அழியுமானால் அவனும் அழிந்து விடுகிறான். சாஸ்திரங்களைக் கற்று, போதித்து, அதில் கூறும் பொருள்களைப்பற்றிச் சிந்தனை செய்பவர்கள், விருப்பு வெறுப்பு, உணர்ச்சிக்கு இடம் கொடுப்பார்களானால், அவர் மூடர்களே. தன் கருமத்தைச் செய்து முடிப்பவனே அறிஞன் எனப்படுவான். ஒருவன் நான்கு வேதங்களையும் கற்று ஓதிய போதிலும், அவன் மூர்க்கனாயிருப்பானானால், அவன் மிக இழிந்த பிறப்பினனாகக் கருதத்தக்கவனே. ஒருவன் வேள்வி இயற்றினால் மட்டும் போதாது; அவன் ஐம்புலன்களையும் அடக்கியாளுதல் வேண்டும். அப்பொழுதுதான் அவனை அந்தணன் என்று ஒருவாறு கருதலாம்.

இவ் விடைகளினால் யக்ஷன் மனமுவந்து அங்கே இறந்து கிடக்கும் சகோதரர்களுள் எவனை யுதிஷ்டிரர் குறிப்பிடுகிறாரோ அவனுக்கு உயிரளிப்பதாக வரங் கொடுக்கிறான். யாரைக் குறிப்பிடுவது என்று யுதிஷ்டிரர் ஆலோசனை செய்கிறார். கடைசியாக, நகுலனைக் குறிப்பிடுகிறார். அதற்குரிய காரணத்தையும்

குத்திர மிலாமொழிக் குந்திக்கு யானொரு
புத்திரன் உளனெனப் புரிந்து நல்கினாய்;
மத்திரைக் கொரு மகவில்லை, வல்லவர்
சித்திரம் வகுத்தெனத் திகழும் மேனியோய்.
(வில்லி. நச்சுப். 63)

என்று விளக்குகிறார். இதனைக் கேட்டதும் யக்ஷனுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாய் விடுகிறது. இறந்து கிடக்கும் அனைவருக்குமே உயிரளித்து விடுகிறான்.

யக்ஷனாகத் தோன்றியது தரும தேவதையேயாகும். தான் மறைவதற்குள், பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வன வாசம் கழிந்த பின்னர் ஓராண்டு கரந்துறைவதற்கு வரமும் அருளுகிறான்.

**விராட பருவம்**

நான்காவது பருவம் **விராட பருவம்.** இதில் காணும் வரலாறு பின்வருமாறு : கரந்துறைவதற்கு மச்ச தேசத்தரசனான விராடனுடைய தலைநகருக்குப் பாண்டவர்கள் சென்றார்கள். அங்கே தத்தம் பெயர்களை மாற்றிக் கொண்டனர். தங்கள் ஆயுதங்களையெல்லாம் நகரத்திற்கு வெளியிலுள்ள மயான பூமியில் காளிகோயிலை அடுத்துள்ள வன்னிமரத்தில் மறைத்து வைத்தனர். யுதிஷ்டிரர் கங்கன் என்ற பெயரோடு தாம் சூது விளையாட்டில் வல்லவர் என்று தெரிவித்துக்கொண்டு அரசரது அவைத் தலைவனாக விளங்கினர். பீமன் வல்லன் என்ற பெயரோடு சமையல் தொழிலில் வல்லவனென்று புலப்படுத்தி அந்த வேலையில் அமருகிறான். அர்ச்சுனன் பிருகந்நளை என்ற பெயருடன் பேடி வேடங்கொண்டு அரசனது புத்திரியாகிய உத்தரைக்கு நாட்டிய ஆசிரியனாக அமைகிறான். நகுலன் தாமக்கிரந்தி என்ற பெயர்தாங்கி அசுவ சாஸ்திரம் வல்லவனாக அமருகிறான். சகாதேவன் தந்திரிபாலன் என்ற பெயரோடு ஆநிரைகள் முதலியவற்றைப் பரிபாலிக்கும் தொழிலினை மேற் கொள்ளுகிறான். திரௌபதி சைரந்திரி என்ற பெயரோடு அரசியின் வண்ண மகளாக அமைகிறாள்.

பாண்டவர்கள் இவ்வாறாக மறைந்து வசித்து, தங்கள் பெருமை பலவாறாகப் புலப்பட வாழ்கின்றார்கள். ஆனால், திரௌபதி மட்டும் துன்பமுற நேருகிறது. அரசனது மைத்துன னும் சேனாபதியுமாகிய கீசகன் அவள்மீது காமம் கொள்கிறான். தன்னை ஐந்து கந்தருவர்கள் காவல் புரிந்து வருகின்றார்கள் என்றும், தனக்கு யாரேனும் இடுக்கண் விளைத்தால் அவரை அக் கந்தருவர்கள் கொன்று விடுதல் உறுதி என்றும் கூறினாள்.

ஆனால், கீசகன் எவ்வகை ஆபத்தையும் பொருட்படுத்தாது திரெளபதியை இம்சித்து வந்தான். இவளும் ஒருநாள் அவனுக்கு இணங்குபவள்போல் நடித்து அழைத்து வந்தாள். அங்கே மறைவி லிருந்த பீமன் கீசகனை வதம் செய்து விட்டான். ஸைரந்திரியை இராணி நகரைவிட்டுப் போய்விடும்படி கட்டளையிடுகிறாள். அப்போது அவள் இன்னும் பதின்மூன்று நாட்களுக்குள் கந்தரு வர்கள் வந்து தன்னை அழைத்துப் போய்விடுவார்கள் என்றும், அது வரைக்கும் விராட நகரத்திலே தங்குவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் கெஞ்சி அனுமதிபெற்று, அங்கே தங்குகிறாள்.

பாண்டவர்கள் கரந்துறையும் நாட்கள் முடிவதற்கு இன்னும் பதின்மூன்று நாட்கள்தாம் இருந்தன. துரியோதனன் தன் ஒற்றர்களை அனுப்பிப் பாண்டவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரிந்துவர முயன்றும் அது பயன்படவில்லை. கீசகன் வதம்செய்யப்பட்டான் என்ற செய்தி துரியோதனனுக்கு எட்டியது. ஆனால், இந்தச் செய்தி அவனுக்கு உகந்ததாகவே இருந்தது. கௌரவர்களும் திரிகர்த்தர்களும் சேர்ந்து மச்ச தேசத்தைக் கைப்பற்ற எண்ணிப் படையெடுத்தனர். பதின் மூன்று வருஷம் முடிந்த தினத்தன்று இப்படையெடுப்பு நிகழ்ந்தது.

விராடனுடைய ஆநிரை கவரப்படுகிறது. விராடனும் யுத்தத் திற்குத் தயாராகி, யுதிஷ்டிரர் முதலியோர்களுக்கும் ஆயுதங்கள் கொடுத்துப் போரிட முனைகிறான். ஒரு பெரும்போர் நிகழ் கிறது. விராடனைச் சிறையாகப் பிடித்து விட்டனர். உடன் தானே பீமன் அவனை விடுதலை செய்தான். திரிகர்த்தர்கள் தோல்வியடைந்தார்கள். மச்சதேசத்தில் ஓரிடத்தில் இவ்வாறு நிகழ, வேறோரிடத்தில் கௌரவர்கள் படையெடுத்து ஆநிரை களைக் கவர்ந்தார்கள். அப்பொழுது ஆநிரையைப் பரிபாலித்து வந்தவர்கள் உத்தரன் என்ற அரச குமாரனிடத்தில் சென்று முறையிட்டார்கள். ஆனால், அவனது தேரைச் செலுத்து வதற்குப் பாகன் இல்லை. அப்பொழுது திரெளபதி பேடியாகத் தோன்றிய அர்ச்சுனன் சாரத்தியம் செய்தலில் வல்லவன் என்று சொல்லி, அவனை அனுப்ப ஏற்பாடு செய்கிறாள்.

அர்ச்சுனனும் உத்தரனைத் தேர்மீதேற்றிச் செல்லுகிறான். ஆனால், கௌரவர்களது பெரும்படையைக் கண்டவுடன் உத்தரனுக்கு நடுக்கம் பிடித்துவிட்டது. தேரிலிருந்து இறங்கி யோடித் தப்ப முயலுகிறான். அர்ச்சுனன் அவனைப் பிடித்து, மீண்டும் தேருக்குக் கொணர்ந்து, தைரியமாய்ப் போர்புரியும்படி

சொல்லுகிறான். பின்பு பாண்டவர்கள் ஆயுதம் ஒளித்து வைத்திருந்த இடத்திற்குச் சென்று, அர்ச்சுனன் தன் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, தான் இன்னார் என்பதைத் தெரிவிக்கிறான். உத்தரன் தேர் செலுத்த, அர்ச்சுனன் போருக்குப் புறப்படுகிறான். ஒரு பெரும்போர் நிகழ்ந்தது. துரியோதனன், கர்ணன், பீஷ்மன் முதலியோர்களோடு போர்புரிந்து பெரிய தொரு வெற்றியை அர்ச்சுனன் அடைகிறான். ஆனால், பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன்தான் போர் புரிந்தவன் என்று கௌரவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

போர் முடிந்த பிற்பாடு அர்ச்சுனன் வன்னிமரத்திற்குத் திரும்ப வந்து தன் ஆயுதங்களை ஒளித்து வைத்துவிட்டு நாட்டிய ஆசிரியனாகவும், உத்தரனது சாரதியாகவும் மீண்டும் வருகிறான். மற்றைப் பாண்டவர்களும் விராடனும் திரிகர்த்தர்களை ஜயித்து விட்டு மீண்டனர். தன் மகன் கௌரவர்களை எதிர்த்துப் போராடுதற்குச் சென்றிருக்கிறான் என்ற விவரத்தை அரசன் அறிந்து மிகவும் கவலை கொள்ளுகிறான். ஆனால், உத்தரன் வெற்றியடைந்துள்ளான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு அவனுக்கு மிக்க கோலாகலத்துடன் வரவேற்பு அளிக்கப்படுகிறது. உத்தரன் தனது வெற்றிக்குக் காரணமாயிருந்தது ஒரு தெய்வம் என்றும், அத்தெய்வம் இளைஞனாக வந்து தனக்கு உதவி செய்ததென்றும் கூறுகிறான். மூன்று நாள் கழித்துப் பதின்மூன்றாவது வருஷம் முடிகிறது. அப்பொழுது பாண்டவர்கள் தமது உண்மை வடிவில் தோன்றித் தாங்கள் இன்னார் என்பதைத் தெரிவிக்கிறார்கள். அரசர் முதலிய யாவரும் வியப்படைகிறார்கள். விராடன் பெரிதும் மகிழ்ந்து, தனது புத்திரியை அர்ச்சுனனுக்கு விவாகம் செய்து கொடுப்பதாகச் சொல்லுகிறான். ஆனால் அவளைத் தனது புத்திரன் அபிமன்யுவுக்கு அர்ச்சுனன் மணம் முடிக்கிறான்.

**உத்தியோக பருவம்**

இந் நிகழ்ச்சிக்குப் பின் போர்க்கு வேண்டும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சிகளைக் கூறுவதுதான் ஐந்தாவது **உத்தியோக பருவம்.** ராஜ்யம் வேண்டித் தூதனுப்ப வேண்டுமென்று கிருஷ்ணன் ஆலோசனை கூறுகிறான். துருபதனுடைய புரோகிதரைத் துரியோதனன்பால் தூதனுப்புதல் நலமென்று ஏற்பாடு செய்து, தான் துவாரகைக்குச் செல்லுகிறான்.

சமாதான முயற்சி ஒரு பக்கம் நிகழ, ஒவ்வொருவர் கக்ஷியும் வலிமையுறுவதற்கு மற்றைய அரசர்களுடைய உதவியை வேண்டி இரு பக்கத்தாரும் முயற்சி செய்தார்கள். கிருஷ்ணனிடத்தில் துரியோதனனும் அர்ச்சுனனும் ஒரே காலத்தில் சென்

றனர். அப்பொழுது கிருஷ்ணன் துயின்று கொண்டிருந்த சமயமாயிருந்தது. துரியோதனன் தலைப் பக்கத்திலும், அர்ச்சுனன் கால் பக்கத்திலுமாகக் கிருஷ்ணன் துயிலுணரும் தருவாயை எதிர் பார்த்து நின்றார்கள். இருவரும் தங்கள் வேண்டுகோளைத் தெரிவித்தனர். துரியோதனன், தானே முதலில் வந்தவன் என்றும், தனக்குத்தான் உதவ வேண்டும் என்றும் கூறுகிறான். அதற்குக் கிருஷ்ணன், 'நீ முதலில் வந்தாய்; ஆனால், நான் முதலில் பார்த்தது அர்ச்சுனனை. நான் ஒன்று சொல்லுகிறேன். ஏதாவதொரு கக்ஷிக்கு எனது சேனா பலம் முழுவதையும் கொடுத்துவிடுகிறேன். எதிர்க்கக்ஷிக்கு எனது ஆலோசனை கூறுவதோடு அமைந்துவிடுகிறேன். ஆயுதம்கூட நான் எடுத்துப் போர் புரிவதில்லை. இவ்விரண்டில் எது வேண்டும்?' என்று அர்ச்சுனனைப் பார்த்துக் கேட்டான். அர்ச்சுனன் கிருஷ்ணனுடைய ஆலோசனை இருந்தால் போதுமானது என்றுகூற, துரியோதனன் கிருஷ்ணனுடைய சேனா பலத்தைப் பெற்று மீண்டனன்.

இங்ஙனமே, மத்திரர்களுடைய அரசனான சல்லியன் யுதிஷ்டிரர் பக்கம் போர் புரிவதற்குச் செல்லுகிறான். செல்லும் வழியில் துரியோதனன் அவனை யடுத்துத் தனக்கு உதவிபுரிய வேண்டுமென்று சொல்லுகிறான். சல்லியன் இதற்கு இணங்கி விட்டான். ஆனால், முடிவில், யுதிஷ்டிரருக்குச் சாதகமாகவே உதவி செய்தனன். கர்ணனுக்குச் சாரதியாய் அமைந்து தேரை நன்றாகச் செலுத்தாதபடி அவனது அழிவிற்குக் காரணமாயிருந்தவன் இந்தச் சல்லியனே.

தூது சென்ற புரோகிதர் தாம்வந்த விஷயத்தைத் துரியோதனனுக்குத் தெரிவித்தார். ஆனால், மறுமொழி யாதும் கூறாதபடி தனது தேர்ப்பாகனான சஞ்சயன் மூலம் தன் விடையைத் தெரிவிப்பதாகத் துரியோதனன் சொல்லி விடுகிறான். சஞ்சயனும் சிலநாள் கழித்து யுதிஷ்டிரரிடம் வந்து திருதராஷ்டிரனது விருப்பம் நீங்கள் சமாதானமாக இருக்க வேண்டும் என்பதேயெனத் தெரிவிக்கிறான். இந்திரப் பிரஸ்தமும் பாதி ராஜ்யமும் தங்களுக்குத் தரவேண்டும் என்றும், இல்லாமற் போனால் போர் நிகழும் என்றும் யுதிஷ்டிரர் சொல்லியனுப்புகிறார். பின்னர், சுற்றத்தார்களது ரத்தத்தைச் சிந்த வேண்டாம் என்று கருதி, ஐந்து ஊர் கொடுத்தாலும் போதுமென்று முடிவாகத் துணிகிறார். கௌரவர்கள் இப்பொழுது மந்திராலோசனை செய்யத் தொடங்கினர். பிஷ்மர், துரோணன், விதுரன் முதலானோர் யுதிஷ்டிரர் கேட்பதைக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்வது நல்லது என்று வற்புறுத்துகிறார்கள்.

திருதராஷ்டிரனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆகவே, இவ் ஆலோசனைச் சபையில் முடிவாக ஒன்றும் துணியப்பட வில்லை.

**கிருஷ்ணன் தூது**

பாண்டவர்களும் சமாதானத்தைக் குறித்து ஆலோசனை செய்தார்கள். கிருஷ்ணன் தானே தூது செல்வதாக ஒத்துக் கொண்டு, செல்லுகிறான். யுதிஷ்டிரர் கிருஷ்ணனை நோக்கித் தூதுசென்ற இடத்தில் தம் தாயார் விதுரனுடன் வசித்துவந்த குந்திதேவியைப் பார்த்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறார். கிருஷ்ணன் தூதுசென்று, துரியோதனன் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொள்ளாது, விதுரன் மனைக்கே சென்றனன். பின் குந்தியைக் கண்டு அவளுக்கு மக்களுடைய வணக்கத்தைத் தெரிவிக்கிறான். குந்திதேவி அனைத்தையும் கேட்டுத் தன் மக்கள் க்ஷத்திரிய தர்மத்தைக் கைவிடப்படாது; தம் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறுகிறாள். பின் கிருஷ்ணன் துரியோதனாதியர் இருக்குமிடம் சென்று தான்வந்த தூது விஷயத்தைச் சொல்லுகிறான். துரியோதனன் பாண்டவர் களுக்கு ஊசி நிற்கும் இடங்கூடக் கொடுக்கமுடியாது என மறுத்து விடுகிறான். கிருஷ்ணன் கோபத்தோடு சபையை விட்டுச் செல்கிறான். அவனைச் சூழ்ச்சியால் கொன்றுவிட வேண்டும் என்று துரியோதனன் துணிகிறான். ஆனால், அந்தச் சூழ்ச்சி நடைபெறவில்லை.

கிருஷ்ணன் மீளுவதற்குமுன் கர்ணனைக் கண்டு அவன் குந்திதேவியின் முதற்புதல்வன் என்பதைத் தெளிவுறுத்தி, அவன் சகோதரர்களாகிய பாண்டவர்களோடு சேர்ந்துவிட வேண்டும் எனப் பெரிதும் வற்புறுத்துகிறான். ஆனால், கர்ணன் இதற்கு இணங்கவில்லை. தன்னைப் பாதுகாத்த துரியோதனனுக்காகத் தான் உயிர்விடுதலே தக்கது என மறுத்துவிடுகிறான்.

இருதிறத்தாரும் ஒருவரோடொருவர் போர் புரிதற்கு வேண்டும் முயற்சிகள் செய்கின்றனர். பாண்டவர் துருபத புத்திரனான திருஷ்டத்துய்ம்னனைச் சேனாதிபதியாக நியமிக் கின்றனர். கௌரவர்கள் பீஷ்மரைச் சேனாதிபதியாக நியமிக் கின்றனர். யுத்தம் புரிதற்கு வியூகங்கள் வகுக்கப்பட்டன. தகுதிக் கிரமப்படி மகாரதர், அதிரதர் முதலியவர்களை பீஷ்மர் துரியோதனனுக்குக் கூறுகிறார். இவ்வரிசையில் கர்ணன் கடைசியில் வைக்கப்படுகிறான்; இதனால் பீஷ்மர் இறக்கும் வரை தான் போர் செய்வதில்லை எனக் கர்ணன் சபதம் செய்கிறான். பீஷ்மரும் சிகண்டியைத் தவிர ஏனைய வீரர்

களோடு யுத்தம் புரிவதாக ஒத்துக் கொள்கிறார். இந்தச் சிகண்டி முதலில் துருபதனது மகளாகத் தோன்றி, பின்னர் ஓர் யக்ஷனுடைய மாயையால் ஆணாகத் தோற்றுகிறான். பீஷ்மர் இவனைப் பெண்ணாகவே கொண்டு இவனோடு போர்புரிய மறுத்துவிடுகிறார்.

பின்னர், பாரத யுத்தம் நிகழ்கிறது. இந்த யுத்தம் பதினெட்டு நாட்கள் நடைபெற்றது என்பர். சிலப்பதிகாரத்தில்,

> செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
> உயிர்த்தொகை யுண்ட ஒன்றதிற் றிரட்டியென்று
> யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
> ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
>
> (நீர்ப்படை. 7—10)

என்று வரும் அடிகளில் பதினெட்டு நாள் நிகழ்ந்த இப்பாரத யுத்தம் குறிக்கப்படுகின்றது. யுத்தம் நிகழ்வதற்கு முன்பு வியாஸர் தோன்றி, சஞ்சயனுக்குப் போர்க்களத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் காணும் வரத்தை நல்குகிறார். யாதொன்றாலும் அபாயமில்லை என்ற வரமும் அவனுக்கு அளிக்கப்படுகிறது. இதனால் தினந்தோறுமுள்ள போர்ச் செய்தியைத் திருதராஷ்டிரனுக்கு அறிவிக்க அவனால் முடிந்தது.

**பீஷ்ம பருவம்**

பீஷ்மர் சேனைத் தலைவராய் நின்று கடும் போர்புரிந்தது ஆறாவதான **பீஷ்ம பருவத்**தில் கூறப்பட்டுள்ளது. இவரது யுத்தம் பத்து நாட்கள் நிகழ்கின்றன. கௌரவர்களும் பாண்டவர்களும் உறவு முறையைச் சிறிதும் கவனியாதபடி பெரும்போர் நிகழ்த்தினர். யானைகள் பெரும் சேதம் விளைத்தன. வீரர்கள் தனித் தனியே போர்புரிந்து வந்தனர். சில சமயம் பாண்டவர்களுக்கும் சில சமயம் கௌரவர்களுக்கும் வெற்றியுண்டாவதுபோல் தோன்றியது. ஆனால், இரவு வந்ததும் போரை நிறுத்தி, மறுநாட் காலைப் புதிதாக வியூகம் வகுத்துப் போர் செய்து வந்தனர். பீஷ்மரும் அர்ச்சுனனும் அடிக்கடி எதிர்த்து வந்தனர். கௌரவர் பக்கம் தோல்வியுறுவதாகத் தோன்றினால் துரியோதனன் பீஷ்மரை அவர் பாண்டவர்களுக்குப் பக்ஷபாதியாயிருக்கிறார் என்று பழி கூறிவந்தான். பாண்டவர்களுக்கு தோல்வியுறுவது போல் தோன்றினால் கிருஷ்ணன் அர்ச்சுனனைப் பழி கூறி வந்தான். பீஷ்மர் இதனால் வருத்தமுற்று மறுநாள் சிகண்டியைத் தவிர மற்றையரோடு கோரயுத்தம் புரிவதாக வாக்களிக்கின்றார். ஒன்பதாவது நாள் இந்த யுத்தம் நடந்தது.

அர்ச்சுனன் தன் பிதாமகராகிய பீஷ்மரோடு போர் புரிவதில் சிறிது தயக்கம் காட்டினான். கிருஷ்ணன் இதைக்கண்டு தானே பீஷ்மரைக் கொல்வதாகப் பாய்ந்து செல்கிறான். அர்ச்சுனன் தடுத்துப் போரில் தான் யுத்தம் செய்வதில்லை என்று வாக்களித்ததை நினைவுறுத்துகிறான். பாண்டவர்கள் தோல்வியுற்று மீண்டனர். இரவில் இவர்கள் ஒருங்குகூடியிருந்து, மறு நாளைய யுத்தத்தைக் குறித்து ஆலோசனை செய்கின்றனர். சிகண்டியை முன்னிறுத்தி, அவன் பின்னால் அர்ச்சுனன் மறைந்து நின்று யுத்தம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. பத்தாம் நாள் இவ்வாறு யுத்தம் நிகழ்ந்தது. சிகண்டிக்குப் பின்னால் அர்ச்சுனன் மறைந்து நின்று யுத்தம் புரிய, மற்றைப் பாண்டவர்களும் ஏக வீரராகிய பீஷ்மரைச் சூழ்ந்து நின்று கடும்போர் புரிகின்றனர். பத்தாம் நாள் மாலையில் சூரியன் அஸ்தமனமாகுஞ் சமயத்தில் பீஷ்மர் மூர்ச்சித்து ரதத்திலிருந்து விழுகிறார். மேலே தைத்துக் கொண்டிருந்த அம்புகள் அவர் சரீரம் பூமியில் படாதபடி அவரைத் தாங்கிக் கொண்டிருந்தன.

பாண்டவர்கள் அன்று பெருமகிழ்ச்சி கொண்டார்கள். கௌரவர்கள் பெருந்துக்கம் கொண்டார்கள். யுத்தத்தில் மடிந்து போனவர் பொருட்டு யுத்தம் நிறுத்திவைக்கப்படுகின்றது. இரு பக்கத்தினின்றும் உறவினர்கள் பீஷ்மரைச் சுற்றியிருந்து வருந்துகிறார்கள். இவருடைய சிரசு கீழே தொங்கிக் கொண்டிருந்தது. தலையணை ஒன்று வேண்டுமென்று அவர் குறிப்பிக்கத் தலையணை கொண்டு வருகிறார்கள். உடன் அர்ச்சுனன் மூன்று அம்புகளைத் தொடுத்து பீஷ்மரது தலையை அவைகள் தாங்கும்படி செய்கிறான். இதுதான் தமக்கு உகந்த மரணம் என்று பீஷ்மர் கூறுகிறார். இப்பொழுதாவது நீங்கள் சமாதானமாக வாழவேண்டுமென்று இருபக்கத்தாரையும் பார்த்துக் கூறினர். துரியோதனன் மறுத்து விடுகிறான். கர்ணனும் அங்கு வந்து பீஷ்மரை வணங்கி நின்றான். அவனையும் பாண்டவர்களோடு சமாதானமாயிருக்கப் பீஷ்மர் வேண்டுகிறார். ஆனால், தான் துரியோதனனுக்கு நன்றியுடனிருப்பவன் என்றும், அவன் பொருட்டு மடிவதே தனது தருமம் என்றும் கூறிவிடவே, பீஷ்மர் 'நீ யுத்தத்தில் கலந்து கொள்ளலாம்' என்று கூறி, அனைவருக்கும் அனுமதி கொடுக்கிறார்.

**துரோண பருவம்**

பின்னர், துரோணர் சேனாபதியாக அமைகிறார். ஏழாவதாகிய **துரோண பருவத்தில்** இவர் தலைமையில் நிகழ்ந்த போர் கூறப்பட்டுள்ளது. கர்ணனும் யுத்தமுனையில் சென்று போர் புரிகிறான். துரோணர் 11-ம் நாளிலிருந்து 12-ம் நாள் முடியச்

சேனைத் தலைமை பூண்டனர். 13-ம் நாள் யுத்தம் பாண்டவர்களுக்கு ஒரு பெருஞ் சோதனையாக இருந்தது. அர்ச்சுனனது புத்திரனாகிய அபிமன்யு சிந்துராஜனாகிய ஜயத்திரதனது சூழ்ச்சியினால் போரில் பகைவர்களிடையே அகப்பட்டுக் கொள்கிறான். அங்கே துச்சாதனனது மகனால் அபிமன்யு மடிகிறான். ஜயத்திரதன் மீது பழிக்குப்பழி வாங்குவதாக அர்ச்சுனன் சபதம் செய்கிறான். 14-ம் நாள் யுத்தம் அர்ச்சுனனுக்கும் ஜயத்திரதனுக்கும் நிகழ்கிறது. ஜயத்திரதன் சூரியாஸ்தமனத்தின்முன் அர்ச்சுனனால் மரணமடைகிறான். பீமன் கௌரவ சேனையுட்புகுந்து, திருதராஷ்டிரன் புத்திரர்களில் பலரை வதம் புரிகிறான். வழக்கத்திற்கு மாறாக இன்றிரவு போர் நிறுத்தப்படவில்லை. இருபக்கத்தாரும் தீவட்டி முதலியவற்றின் வெளிச்சத்தில் போர் புரிந்தனர். கர்ணன் பாண்டவர்களை எதிர்த்துக் கடும்போர் புரிய அவன்மீது கடோற்கசனை ஏவவேண்டுமென்று கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு அறிவுறுத்துகிறான். இந்த ராக்ஷஸனும் கர்ணனும் மல் யுத்தம் புரிந்தனர். கௌரவர் சேனையில் பெருஞ் சேதம் ஏற்பட்டது. இறுதியில் கடோற்கசன் கர்ணனால் முடிவெய்துகிறான். தான் போரில் அழிந்துவிடும் பொழுதுகூட, கௌரவர் சேனையில் பெரும் பகுதியை இந்த ராக்ஷஸ வீரன் பூமியில் தள்ளி அரைத்து விடுகிறான். பீம புத்திரனான கடோற்கசன் இறந்ததுபற்றிப் பாண்டவர்கள் பெரிதும் துக்கமுறுகிறார்கள். ஆனால், கிருஷ்ணனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால், கர்ணன் இந்திரனால் கொடுக்கப்பட்ட ஒரு சக்கராயுதத்தை அர்ச்சுனன்மேல் பிரயோகிக்க வேண்டுமென்று வைத்திருந்தான். ஆனால், அது கடோற்கசனை வதம் புரிவதில் ஒழிந்துபோயிற்று.

போர் நிகழ்ந்துகொண்டேயிருந்தது. இரு பக்கத்து வீரரும் சோர்வடைந்து உறங்கிவிட்டனர். வீரர்களில் சிலர் தங்கள் யானைகளின் மீதும், குதிரைகளின் மீதும் மயங்கிச் சாய்ந்தனர். வேறு சிலர் உறக்கத்தால் கண் மயங்கித் தங்களுடைய கக்ஷியைச் சார்ந்தவர்களையே கொலைபுரிந்தனர். அப்பொழுது அர்ச்சுனன் இவ்வாறு நிலையழிந்த வீரர்கள்மீது பரிவு கொண்டு சிறிது நேரம் உறங்கிக் கொள்ளுமாறு அனுமதிக்கிறான். இருபக்கத்தினரும் இவ் வார்த்தையை ஏற்றனர். இந்த இடத்தில் இரவில் நிகழ்ந்த காட்சி அழகிய பல சுலோகங்களால் வர்ணிக்கப்படுகிறது.

விடியற்காலமானதும், 15-ம் நாள் யுத்தம் தொடங்குகிறது. துரோணருடைய கையம்பினால் துருபதனும் விராடனும் மடிந்தனர். பாண்டவ வீரர்கள் துரோணரை வெட்டி வீழ்த்த

முயன்றனர். குருவும் சிஷ்யனுமாகிய துரோணருக்கும் அர்ச்சுன னுக்கும் மல் யுத்தம் நிகழ்கிறது. ஆனால், அதில் வெற்றி, தோல்வி இருவருக்கும் இல்லை. இப்பொழுது கிருஷ்ணன் ஓர் ஆலோசனையை வெளியிடுகிறான். பீமன், அசுவத்தாமன் என்ற பெயருடைய யானையைக் கொன்றுவிட்டுத் துரோணனை அணுகி 'அசுவத்தாமன் வதம் செய்யப்பட்டான்' என்று கூவிச் சொல்லுகிறான்.

அசுவத்தாமன் துரோணருடைய மகனுக்கும் பெயர். அவன் இறந்தான் என்பதில் துரோணருக்கு நம்பிக்கை உண்டாக வில்லை; ஆனால், மிகவும் கவலை கொண்டார். பொய் கூறாதவ ராகிய யுதிஷ்டிரர் கிருஷ்ணனுடைய ஏவலால் அசுவத்தாமன் இறந்ததைக் கூறவே, அப்பொழுதுதான் துரோணருக்கு அக் கூற்றில் நம்பிக்கை பிறக்கிறது. துக்கத்தால் தளர்வெய்தி தமது ஆயுதங்களைக் கீழே விட்டெறிந்து தன்னந்தனியாய் நிற்கிறார். அப்பொழுது துருபதனது மகனாகிய திருஷ்டத்துய்மனன் அவரை அணுகிவந்து கொலைபுரிந்து விடுகிறான். இறக்கும்பொழுது அவர் 85 வயதுள்ள ஒரு கிழவர். தனது ஆச்சாரியராகிய அவரைக் கொலைசெய்யக் கூடாது என்று அர்ச்சுனன் கதறு கிறான். ஆனால், திருஷ்டத்துய்மனன் அறுபட்ட தலையை எடுத்துக் கௌரவர்களுடைய மத்தியில் எறிந்துவிடுகிறான். அசுவத்தாமன் தன் தந்தை இறந்ததைக்கேட்டு பாஞ்சாலர்மீதும் பாண்டவர்மீதும் பழிவாங்குவதாகக் கடுஞ்சபதம் புரிகிறான்.

**கர்ண பர்வம்**

துரோணர் இறந்ததன் பிற்பாடு, கர்ணன் சேனைத்தலைமை பூணுகிறான். ஆனால், இரண்டு நாட்கள்தான் அவன் தலைமை தாங்கியது. இப்போர் எட்டாவது **கர்ண பருவத்**தில் உள்ளது. 16-ம் நாள் பீமனும் அசுவத்தாமனும் ஒருபுறமும், அர்ச்சுனனும் கர்ணனும் ஒருபுறமும் போர் புரிகிறார்கள். ஆனால், இப்போர் களிலும் யாதொரு முடிவும் ஏற்படவில்லை. 17-ம் நாள் அன்று கர்ணன் மத்திர தேசத்து அரசனாகிய சல்லியன் தனக்குச் சாரதி யாக வரவேண்டுமென்று கேட்கிறான். ஏனென்றால், கிருஷ்ண னுக்கு நிகரான சாரத்தியம் வல்லவன் சல்லியனே. முதலில் சல்லியன் மறுக்கிறான். ஆனால், கடைசியில் கர்ணன் முன்னிலையில், தான் இஷ்டம்போல் வார்த்தையாடலாம் என்ற நிபந்தனையின்பேரில் ஒத்துக் கொள்ளுகிறான். தேரை ஓட்டிக் கொண்டு செல்லும்போதே கர்ணனை பழித்தும் இழித்தும் பேசு கிறான். கர்ணனும் சிறிதும் பின்னடையாது சல்லியனை இகழு கிறான். இங்கே, சல்லியனது தேசத்து மக்கள் ஆஷாட பூதிகள் என்றும் குடிகாரர்கள் என்றும், ஒழுக்கம் கெட்டவர்கள் என்றும்,

மணத்தில் கலக்கத் தகாத நெருங்கிய சுற்றத்தினரோடு கலவி புரிபவர்கள் என்றும் கர்ணன் கூற, கர்ணனுக்குரிய அங்க தேசத்த வர்கள் தங்கள் பெண்களையும் பிள்ளைகளையும் விற்பவர்கள் என்று எதிர்ப்பழி சல்லியன் கூறுகிறான். துரியோதனன் இடைப் புகுந்து சமாதானம் புரிய இருவரும் போர்க்குச் செல்லுகின்றனர்.

அர்ச்சுனன் கர்ணனோடு போர் செய்துகொண்டிருக்க, பீமன் திருதராஷ்டிர புத்திரர்களில் பலரை வதம் செய்கிறான். தன்னுடைய கதாயுதத்தைத் துச்சாதனன்மீது எறிந்து, அவனைக் கீழே வீழ்த்தி அவன்மீது பாய்ந்து, அவன் மார்பைக் கிழித்துத் தான் சபதஞ்செய்தபடி அவன் ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறான். இதைப் பார்த்த பகைக் கூட்டங்கள் மிகவும் நடுங்கிப் பின்வாங்குகின்றன. அர்ச்சுனனும் கர்ணனும் மிக நெருங்கிக் கடும்போர் புரிகின்றனர். தேவர்களும் இந்த யுத்தத்தில் கலந்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்திரன் அர்ச்சுனனைச் சார்ந்தும், சூரியன் கர்ணனைச் சார்ந்தும் போரில் கலந்து கொள்ளுகின்றனர். இருபெரு வீரர்களும் ஒருவர்மீது ஒருவர் அம்புகளை சோனாமாரி போலப் பெய்கின்றனர். கர்ணனை அவன் தேரிலிருந்து கீழே இறங்கும்படி செய்ய அர்ச்சுனன் முயலுகிறான். ஆனால், அது இயலவில்லை. இச் சமயத்தில் கர்ணனது தேர்க்கால் பூமியில் அழுந்திவிடுகிறது. அதனைப் பிடுங்கி மேலெடுப்பதற்காக முயன்று, அர்ச்சுனனைச் சிறிது போரை நிறுத்தும்படி கூறினான். ஆனால், கிருஷ்ணன் இதற்கு இணங்கக் கூடாது என்று தடுத்து, அந்த நிலையில் கொல்லும்படியாகக் கூறுகிறான். அவ்வாறே அர்ச்சுனன் அம்பை ஏவக் கர்ணன் மடிந்துவிடுகிறான். இப்பெரு வீரன் இறந்தபொழுது, அவன் சரீரத்திலிருந்து ஓர் ஒளி புறப்பட்டது. இறந்து கிடக்கும் நிலையிலும் அவன் சோபை குன்றவில்லை. துரியோதனாதியர்கள் மிகவும் துன்புற்று வருந்தினர்.

### சல்லிய பருவம்

எஞ்சியிருக்கும் படைகளை ஒரு வகையாகத் திரட்டிக் கொண்டு 18-ம் நாள் போர் புரியத் தொடங்குகின்றனர். இப் போர்தான் ஒன்பதாவது **சல்லிய பருவத்**தில் சொல்லப்பட்டுள்ளது. சல்லியன் துரியோதனன் சேனைக்குத் தலைவனாய் அமைகிறான். யுதிஷ்டிரர் இந்தச் சல்லியனோடு தனிப்படப் போர் புரிய எண்ணுகிறார். வெகுநேரம் போர்புரிந்த பிற்பாடு நடுப் பகலில் சல்லியன் யுதிஷ்டிரரால் கொலையுண்டு அழிகிறான். கௌரவர்கள் ஓடி மறைந்தனர். துரியோதனனும் சகுனியும் ஒரு சில வீரர்களை உடன்கொண்டு போர்புரிய வருகின்றனர்.

சகாதேவன் சகுனியை மாய்க்கின்றான். அர்ச்சுனனும் பீமனும ரத்தக்களரியாக்கினர். கௌரவர் சேனை முற்றும் அழிந்தது.

துரியோதனன் மட்டும் தனியாக ஓடி ஒரு குளத்திற்கு வந்து அங்கே மறைந்து கொள்கிறான். அவனுடன் கிருதவர்மன், கிருபன், அசுவத்தாமன் என்ற மூன்று வீரர்களே இருந்தனர். சூரியன் அஸ்தமனமாகிவிட்டது. பாண்டவர்கள் ஓடியொளித்த துரியோதனனைத் தேடிக் கடைசியில் கண்டுபிடித்து விடுகிறார்கள். யுதிஷ்டிரர் அவனைத் தனி யுத்தத்திற்கு அழைக்கிறார். துரியோதனன், தான் ஓடிவந்தது அச்சத்தினாலல்ல, களைப்பினால் என்று கூறித் தனிப்பட்ட யுத்தத்திற்கு இணங்கவில்லை. ஆனால் யுதிஷ்டிரர் அந்த இடத்திலேயே யுத்தம் புரிந்தாக வேண்டுமென்று வற்புறுத்தி, தன் உடன் பிறந்தவர்களுள் யாரேனும் ஒருவருடன் யுத்தம் புரிந்து வெற்றி கொண்டாலும் ராஜ்யம் முழுவதையும் துரியோதனன் வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்.

துரியோதனனுக்கும் பீமனுக்கும் யுத்தம் நிகழ்ந்தது. கதை என்னும் ஆயுதத்தைக் கைப்பற்றி இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கினர். இந்தப் போரில் கலந்து கொள்ளாத கிருஷ்ணனது தமையனான பலதேவனும் யுத்தத்தைக் காண வருகிறான். தேவர்களும்கூட வியப்புடன் யுத்தத்தைக் கண்டு வருகின்றனர். பீமன் மிக்க பலமுள்ளவனாயிருந்தாலும், துரியோதனன் மிக்க சதுரன் என்றும், அதனால் இந்த யுத்தத்தில் வெற்றி கொள்வது அரிது என்றும் சொல்லி, துரியோதனனைத் துடை கிழித்துத் தருவதாகச் சொன்ன வாக்கை அர்ச்சுனன் இப்பொழுது நினைத்துத் தனது இடது தொடையைத் தட்டிக் காட்டுகிறான்.

பீமன் இக்குறிப்பை உணர்ந்து, துரியோதனன் தன்னைத் தாக்குவதற்குப் பாய்ந்து வரும்பொழுது அவன் தொடையின் மீது அடித்து நொறுக்கி விடுகிறான். பலதேவன் இதனைக் கண்டு பீமனோடு கோபித்துக் கொள்ளுகிறான். ஏனென்றால், ஒருவன் தன் பகைவனைக் கொப்பூழின்கீழ் அடிப்பது யுத்த தருமம் ஆகாதாம். கிருஷ்ணன் தன் வாக்குவல்லமையெல்லாம் காட்டி வீமன் செய்தது சரியென்று நிரூபிக்க முயன்றான். ஆனால், பலதேவன் இவ்வார்த்தைகளால் திருப்திப்படவில்லை. கோபத்தோடு தன் ரதத்தில் ஏறி, பீமன் அன்று அதர்ம யுத்தம் செய்தவன் என்றும், துரியோதனன் தர்மயுத்தம் செய்தவன் என்றும் பழி கூறிச் சென்றுவிடுகிறான்.

பிற்பாடு யுதிஷ்டிரர் கிருஷ்ணனை அஸ்தினாபுரத்திற்கு அனுப்பித் திருதிராஷ்டிரனையும் காந்தாரியையும் சமாதானப்

படுத்துகிறார். ஒரு நதியின் கரையில் பாண்டவர்கள் இரவைக் கழிக்கிறார்கள்.

துரியோதனன் போரில் சிதைந்ததைக் கேள்வியுற்ற அசுவத்தாமன், கிருதவர்மன், கிருபன் என்ற மூவரும் போர்க்களத்திற்கு வந்து அங்கே தொடை சிதைந்து கிடந்த கௌரவர் தலைவனைக் கண்டு மிகவும் புலம்பி வருந்தினார்கள். அசுவத்தாமன் பாண்டவர் அனைவரையும் அழித்துவிடுவதாகச் சபதம் செய்கிறான். அப்போது துரியோதனன் அசுவத்தாமனைச் சேனைத் தலைவனாக நியமனம் செய்தான்.

பின்பு, அசுவத்தாமன் முதலியோர் துரியோதனனிடம் விடைபெற்று போர்க்களத்திற்குச் சிறிது தூரத்திலிருந்த ஒரு மரத்தின் நிழலில் இரவைக் கழிக்க முயலுகிறார்கள். கிருபனும், கிருதவர்மனும் நன்றாக உறங்கிவிட்டனர். அசுவத்தாமன் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தால் குமுறிக் கொண்டிருந்தான். உறக்கம் வரவில்லை. அப்பொழுது மரத்தின் கிளைகளில் கூட்டில் காக்கைக் கூட்டம் தூங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று நள்ளிரவில் ஓர் ஆந்தை வந்து அவையனைத்தையும் கொன்று விட்டது. இதைப் பார்த்ததும் அசுவத்தாமனுக்குத் தன் பகைவர்களை இப்படித்தான் வதைக்க வேண்டும் என்று தோன்றுகிறது. உடனே இருவரையும் எழுப்பித் தன் கருத்தைத் தெரிவிக்கிறான். கிருபன் உறங்கி ரக்ஷையற்றுக் கிடப்பவர்களை வதைத்தல் தருமமல்ல என்று கூறுகிறான். அசுவத்தாமன் இதைக் கேளாதபடி 'என் தந்தையைக் கொன்றவர்களை இரவில் உறங்கும் சமயத்தில் நான் கொல்லத்தான் செய்வேன். அதனால், நான் புழுவாகப் பிறக்க நேர்ந்தாலும் சரி, 'பழிக்குப் பழி வாங்குவேன்' என்று கூறித் தன் சபதத்தை வற்புறுத்துகிறான்.

உடனே தன் ரதத்தின்மீது ஏறிப் பகைவர் பாசறைக்கு வந்தான். இவன் ஒரு திருடனைப்போல உள்நுழைய, ஏனைய இருவரும் வெளியே காவல்காத்து, ஓடிப்போகுமவர்களைத் தடுத்து வதைசெய்ய வாசலில் நின்றனர். தன் தந்தையைக் கொன்ற திருஷ்டத்துய்ம்னனைக் காலால் உதைத்து எழுப்பி, அவனைக் கழுத்தை நெரித்துக் கொன்றான். பின் பாசறை தோறும் படுக்கை படுக்கையாய்ச் சென்று, யமனைப்போல் இரக்கம் யாதுமின்றி, உறங்கிச் சோர்ந்து கிடந்த அனைவரையும் ஒருவர்பின் ஒருவராக வதம்புரிந்தான். இவ்வாறே திரௌபதையின் புத்திரர்களான இளம் பாண்டவரும், சிகண்டியும் இறந்து மடிந்தார்கள். நடு நிசிக்குள் பகைப் படையைச் சார்ந்த வீரர் அனைவரும் கொல்லப்பட்டார்கள். ராக்ஷஸர்களும், பிசாசுகளும், பிணந்தின்னும் பூதர்களும் பெருந்திரளாகப் பாசறையிற்புகுந்து,

மாமிசங்களைத் தின்று, ரத்தத்தைக் குடித்து மகிழ்ந்து கூத்தாடினர். விடிந்ததும் எங்கும் பிணக்காடாய் நிசப்தமாயிருந்தது. அசுவத்தாமன் முதலியோர் துரியோதனன் விழுந்துகிடந்த இடத்திற்கு இச்செய்தியைச் சொல்லவந்தார்கள். இதைக் கேட்டதும் துரியோதனன் மகிழ்ந்து தன் உயிரை விடுகிறான்.

**சௌப்திக பருவம்**

இதனிடையே திருஷ்டத்துய்ம்னனது தேர்ப்பாகன் பாண்டவர்களிடம் வந்து இரவில் நடந்த செய்திகளைத் தெரிவித்தான். யுதிஷ்டிரர் இதைக்கேட்டு மயங்கி விழுந்துவிட்டார். அவரை அவர் சகோதரர்கள் ஒருவாறு தாங்கிப்பிடித்து வைத்திருந்தார்கள். பின் திரௌபதி முதலானவர்களுக்குச் சொல்லியனுப்ப, அனைவரும் பாசறைக்குச் செல்லுகின்றனர். திரௌபதி பாசறைக்குச் சென்றதும் அங்கே வதையுண்டு கிடக்கும் தன் புத்திரர்களையும் சகோதரர்களையும் கண்டு பெருந்துக்கம் கொண்டாள். என்றாலும், தங்களுக்குக் கிடைத்துள்ள பெரிய வெற்றியைக் குறித்து யுதிஷ்டிரரைப் பாராட்டினாள். ஆனால், அசுவத்தாமனைக் கொன்றாலொழியத் தான் உணவருந்துவதில்லை என்று சபதமிடுகிறாள்.

எவ்வாறு அசுவத்தாமன்மீது பழிவாங்கப்பட்டது என்பது விவரமாய்த் தெரியக்கூடவில்லை. ஆனால் பீமன் அவனைக் களத்தினின்றும் வெருட்டி ஓட்டி அவனோடு போர் புரிந்து, தோல்வியுற்று விடுகிறான். அசுவத்தாமன் தலையில் அவன் பிறப்போடு தோன்றிய மணியொன்றிருந்தது. அது வேண்டுமென்று திரௌபதி மிகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தாள். அதை இப்பொழுது பீமனிடம் கொடுத்து விடுகிறான். அவனிடம் வேறோர் ஆயுதமும் இருந்தது. இந்த ஆயுதத்தால்தான் அவன் அர்ச்சுனனுடைய மருமகள் உத்தரையின் வயிற்றில் குரு வமிசத்தின் கடைசி கருவாயிருந்த சந்ததியை அழித்துவிட்டான். உத்தரை இறந்த குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆனால், அதற்குக் கிருஷ்ணன் உயிர் கொடுத்தனன். இவன்தான் பரீக்ஷித்து மகாராஜன். இவனது மகன்தான் மகாபாரதத்தில் கூறப்படும் சர்ப்பயாகம் புரிந்த ஜனமேஜயன். கிருஷ்ணன் இவ்வுலகத்தில் 3,500 ஆண்டுகள் திரிந்து கொண்டிருக்கக் கடவாய் என்று அசுவத்தாமனுக்குச் சாபமிடுகிறான். இங்கு கூறிய செய்திகள் அனைத்தும் பத்தாவதாகிய **சௌப்திக பருவத்**தில் காணப்படுகின்றன.

**ஸ்திரீ பருவம்**

சஞ்சயனும் விதுரனும் திருதராஷ்டிரனது துக்கத்தைத் தேற்ற முயலுகிறார்கள். இறந்து போனவர்களுக்கு அந்திமக்

கிரியை செய்ய வேண்டுவதாயிருந்தது. ஆகவே, அரசன் காந்தாரியையும் மற்றுள்ள அரசியரையும் வரவழைக்கிறான். அவர்கள் அனைவரும் போர்க்களத்திற்குச் செல்லுகிறார்கள். வழியில் அசுவத்தாமன் முதலியோரைச் சந்திக்கிறார்கள். இவர்கள் தாங்கள் புரிந்த படுகொலையைப்பற்றித் தெரிவிக்கிறார்கள்; தெரிவித்து, பாண்டவர்கள் பழிவாங்க வருவார்கள் என்று அச்சங்கொண்டு ஓடிவிட்டார்கள். பின்னர், பாண்டவர்கள் கிருஷ்ணனோடு வந்து போர்க்களத்திலிருந்தவர்களைச் சார்ந்தார்கள். கிருஷ்ணன் பாண்டவர்களையும் திருதராஷ்டிரன் முதலியவர்களையும் சமாதானப் படுத்துகிறான். காந்தாரி புலம்பி அழுகிறாள். இந்த இடம் மகாபாரதம் முழுவதிலுமுள்ள சிறந்த கட்டங்களில் ஒன்றாகும். இதிலே காணும் கையறு நிலைச் செய்யுளின் அழகும் போர்க்களத்தின் வருணனையும் மிக மிக வியக்கத்தக்கன. இப்பகுதி பதினோராவது பருவமாகிய **ஸ்திரீ பருவத்**தில் அடங்கியது. இதனோடு பாரதக் கதை முடிகிறது என்று சொல்லலாம். ஆனால், இப்பொழுது கிடைக்கும் இதிஹாஸம் இக்கதையை மேற்கொண்டும் தொடுத்துச் சொல்லுகிறது.

**சாந்தி பருவம், அநுசாஸன பருவம்**

யுதிஷ்டிரர் முதலியோர் அஸ்தினாபுரத்திற்கு மீளுகின்றனர், அங்கே கிருஷ்ணனால் அபிஷேகம் செய்யப்பெற்று யுதிஷ்டிரர் அரசனாகிறார். அனைவரும் நீங்கியபின் கிருஷ்ணனை நோக்கி 'உன்னுடைய அருளினால் ராஜ்யம் மீண்டும் கிடைத்துவிட்டது' என்று சொல்ல, அவன் தியானத்தில் ஆழ்ந்துவிடுகிறான். 'எதைக் குறித்துத் தியானம் பண்ணுகிறாய்?' என்று யுதிஷ்டிரர் கேட்க, 'பீஷ்மர் என்னை நினைக்கிறார்; அவர்பால் என்மனம் செல்லுகிறது' என்றனன். பின் 'அவரிடம் நீ உபதேசம் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்று கிருஷ்ணன் சொல்ல, அனைவரும் குருக்ஷேத்திரம் செல்லுகின்றனர். அங்கே ஓகவதி என்ற நதியின் கரையிலே முனிவர்கள் சூழ சர-தல்பத்திலே பீஷ்மர் குற்றுயிராய்ப் படுத்திருக்கின்றனர். அவரை நோக்கிக் கிருஷ்ணன், 'உன்னுடைய ஞான நோக்கை யுதிஷ்டிரன்பால் செலுத்தி, அவனுக்கு அறிவுரை அருளவேண்டும்' என்று கூறினான். பீஷ்மரும் கிருஷ்ணனை நோக்கி 'உன்னைத் தியானம் செய்ததால் எனக்கு இளமை வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. உன் அருளினால் உலக நன்மைக்கு வேண்டும் காரியங்களைச் சொல்லுவதற்குத் தகுதியுள்ளவனாயினேன்' என்றனர். இவ்வாறு சொல்லித் தருமத்தின் இயல்பு முதலியவற்றை விவரிக்கிறார்.

இவ்வியல்புகள் பன்னிரண்டாவது **சாந்தி பருவத்**திலும், பதின்மூன்றாவது **அநுசாஸன பருவத்**திலும் நன்றாகவும், விரிவாகவும் காணப்படுகின்றன. முடிவில், நான் என் உயிரை நீத்துவிட விரும்புகிறேன். நீங்கள் அனைவரும் இப்பொழுது விடைகொடுக்க வேண்டும். உங்கள் முயற்சியெல்லாம் சத்தியத்தின் பொருட்டே ஆகவேண்டும். சத்தியம்தான் வலிமை, எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்தது' என்று கூறினர். உடன்தானே அவர் மேல் தைத்திருந்த பாணங்கள் அனைத்தும் கழன்று விழுந்துவிட்டன. பஞ்சப் பிராணன்களும் அவரால் அடக்கப்பெற்று சிரசுமூலமாக வெளியே போயின. அவரது ஆன்மா சொர்க்கம் நோக்கிச் சென்றுவிட்டது. வானத்திலிருந்து துந்துபி முழங்கிற்று. பூமாரி பொழிந்தது. சித்தர்களும் பிரும்மரிஷிகளும் 'நன்மை விளைந்தது, நன்மை விளைந்தது' என்று கோஷித்தார்கள். பீஷ்மருக்கு அந்திய கருமங்களைக் கங்கைக் கரையிலே செய்து முடித்துப் பாண்டவர்கள் முதலிய அனைவரும் திரும்பினர்.

### அசுவமேத பருவம்

இதன் பின்னர், இறந்தவர் பொருட்டுத் தானம்செய்யும் சடங்கு கூறப்படுகிறது. இப்பொழுதுதான் குந்தி தனது முதற் புதல்வன் கர்ணன் என்று தெரிவித்து, அவன் பொருட்டும் தானம் செய்யவேண்டும் என்று கூறுகிறாள். இதைக் கேட்டதும் யுதிஷ்டிரர் வருந்தித் தம் சுற்றத்தார்களைக் கொன்றதோடமையாது, தம் தமையனையே கொன்றுவிட நேர்ந்ததே என்று புலம்பித் துறவியாக உறுதி பூணுகிறார். கிருஷ்ணன் முதலியோர் தடுக்கின்றனர். எனினும் பயனில்லை. கடைசியாக வியாஸர் தோன்றி 'அசுவமேத யாகம் செய்தால் உனது பாவமனைத்தும் தொலைந்துவிடும்' என்று உபதேசிக்கிறார். அவ்வாறே அசுவமேத யாகம் செய்யப்படுகிறது. இச்செய்திகள் பதினான்காவதாகிய **அசுவமேத பருவத்**தில் கூறப்படுகின்றன.

### ஆசிரம வாஸிக பருவம்

திருதராஷ்டிரனும் காந்தாரியும் பாண்டவர்களோடு 15 ஆண்டுகள் வசித்து வந்தனர். இதற்குப் பிற்பாடு வனத்திற்குச் சென்று துறவுபூண்டு வசிக்கவேண்டுமென்று திருதராஷ்டிரன் கருதுகிறான். யுதிஷ்டிரர் முதலியோர் இசையவில்லை. ஆனால், கிருஷ்ணன் இவ்வாறு செய்வதுதான் க்ஷத்திரிய வீரர்களுடைய கடமை என்று கூறி இணங்கச் செய்கிறான். திருதராஷ்டிரனும் காந்தாரியும் முதலில் வனம் செல்லுகிறார்கள். குந்தி, சஞ்சயன், விதுரன் இம்மூவரும் பின்னர் அங்கே சென்றுவிடுகிறார்கள். பின் ஒருமுறை பாண்டவர்கள் வனத்திற்குச் சென்றபொழுது விதுரன்

இறக்கும் சமயமாயிருந்தது. இரண்டாண்டுகள் கழித்து, திருத ராஷ்டிரன், காந்தாரி, குந்தி முதலியவர்கள் காட்டில் பற்றிப் பரவிய தீயினால் அழிவுற்றனர் என்ற செய்தி தெரியவந்தது. சஞ்சயன் இமாலயத்திற்குச் சென்று விட்டான். இச்செய்திகள் பதினைந்தாவதாகிய **ஆசிரம வாஸிக பருவத்**தில் கூறப்படு கின்றன.

**மௌஸல பருவம்**

பாரத யுத்தம் நிகழ்ந்து 36-ஆண்டுகளுக்குப் பின்னர் கிருஷ்ணன் தன் வமிசத்தினரோடு அழிந்தான் என்ற செய்தியைப் பாண்டவர்கள் தெரிந்தனர். மதுபான மயக்கில் கிருஷ்ணனது வமிசத்தைச் சார்ந்த இரண்டு கிளையினரும் ஒருவரோடொருவர் கடும்போர் புரிகின்றனர். கோரைப் புற்களைக் கிருஷ்ணன் உலக்கைகளாக மாற்ற, அந்த உலக்கைகளைத் தாங்கி ஒருவரை ஒருவர் தாக்கிப் புடைக்கின்றனர். இப்போரில் யாதவ வமிசம் முழுவதும் சிதைந்து அழிந்துவிடுகிறது. கிருஷ்ணன் சூழ நோக்கு கிறான். தன்னுடைய தமையனான பலதேவன் இறக்கும் சமயமாயிருந்தது. அவன் வாயிலிருந்து ஒரு நாகம் புறப்பட்டுக் கடலுக்குச் செல்ல, அங்கே ஆதிசேஷனால் அந்நாகம் வரவேற்கப் படுகிறது. கிருஷ்ணன் தன்னந்தனியாகக் காட்டிலே ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருக்கிறான். அப்பொழுது சரை என்ற வேடுவன் அவனை ஒரு மான் எனக் கருதி, அம்பினால் குதிங் காலில் எய்துவிட, கிருஷ்ணன் மரணமடைகிறான். இச்செய்தி பதினாறாவது **மௌஸல பருவத்**தில் கூறப்படுகிறது.

**மகாப்பிரஸ்தானிக பருவம்**

தங்கள் நண்பனாகிய கிருஷ்ணனது மரணத்தைக் கேள்வி யுற்றுப் பாண்டவர்கள் பெருந்துன்பமுற்றார்கள். வடக்கு நோக்கி யாத்திரை செய்யத் தீர்மானித்துவிட்டார்கள். அரச னாகப் பரீக்ஷித்தை நியமித்து, யுதிஷ்டிரர் தமது குடிகளிட மிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறார்.

பஞ்ச பாண்டவர்களும் அவர்கள் மனைவியும், ஒரு நாய் பின் தொடர்ந்துவர, இமயமலையில் ஏறி மேருவை அடைந்தார்கள். ஸ்வர்க்கத்திற்குச் செல்லும் வழியில் திரௌபதி முதலாவது விழுந்து மடிகிறாள். பின் சகதேவனும், அடுத்து நகுலனும், சிறிது தூரம் கழித்து அர்ச்சுனனும், கடைசியாகப் பீமனும் இவ்வாறே விழுந்து மரணமடைகிறார்கள். அப்பொழுது இந்திரன் தனது ரதத்தின்மீது வந்து யுதிஷ்டிரரை ஸ்வர்க்கத் திற்கு அழைக்கிறான். அவர் தம்பியரின்றி அங்கேவர மறுத்து விடுகிறார். ஆனால், தம்பியரையும் திரௌபதியையும் ஸ்வர்க் கத்தில் காணலாம் என்று இந்திரன் கூற, தம்முடன் வந்த நாயும்

ஸ்வர்க்கத்திற்குத் தம்மோடு வரவேண்டுமென்று யுதிஷ்டிரர் வற்புறுத்துகிறார். ஆனால், இந்திரன் இதற்கு இணங்கவில்லை. உடன் வந்த நாய் தருமதேவதையாக வெளிப்பட்டு, சார்ந்தாரைத் தாங்கும் யுதிஷ்டிரரது பெருங்குணத்தை மிகவும் மெச்சுகிறது. பின் யுதிஷ்டிரர் முதலியோர் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். இவ் வரலாறுகள் பதினேழாவது **மகாப் பிரஸ்தானிக பருவத்**தில் கூறப்பட்டுள்ளன.

**ஸ்வர்க்காரோஹணப் பருவம்**

ஸ்வர்க்கம் சென்றதும், அங்கே தம்பியரையும் திரௌபதியையும் காணவில்லை. அதற்கு மாறாகத் துரியோதனன் தனது பரிவாரங்கள் தன்னைப் புடைசூழ அங்கே அமர்ந்திருக்கிறான். யுதிஷ்டிரர் தமது தம்பியர் முதலியோர் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்லவேண்டுமென்று தெரிவிக்கிறார். இவரது இந்த விருப்பத்திற்கு இணங்கி நரகத்திற்கு இவரை இட்டுச் செல்லுகின்றார்கள். அங்கே பலவகையான தண்டனைகளை அனுபவித்துவரும் பலரையும் பார்த்து இவர்கள் யாரென்று வினவுகிறார். 'இவர்கள்தான் உமது தம்பியர்' என்று கூற, தம்பியரது விதியை நொந்து, அவர்கள் இருக்குமிடத்திலேயே தாம் இருப்பாரென்றும் ஸ்வர்க்கத்திற்குத் தாம் மீளுவதில்லை என்றும் சொல்லிவிடுகிறார். தேவர்கள் அனைவரும் அவரிடம் வருகிறார்கள். இந்திரன் கொடிய பாவங்களைச் செய்தவர்கள் சிலகாலம் ஸ்வர்க்கத்திலிருந்துவிட்டு, பின்பு நரகத்திற்கு வந்து தண்டனை அனுபவிப்பார்கள் என்றும், அற்பமான பாவங்களைச் செய்தவர்கள் முதலில் நரகத்திற்குவந்து எளிய தண்டனைகளை அனுபவித்துவிட்டு, பின்பு ஸ்வர்க்கம் புகுவார்கள் என்றும் எடுத்துச் சொல்லுகிறான். அவருடைய தம்பியர்களது பாவங்கள் தீர்ந்து விட்டன என்றும் சொல்லுகிறான். உடனே நரக உபாதைகள் முற்றும் நீங்கி விடுகின்றன. இந்தச் செய்தி பதினெட்டாவது **ஸ்வர்க்காரோஹணப் பருவத்**தில் கூறப்படுகிறது.

இங்கே குறித்ததுதான் மகாபாரதத்தின் முக்கிய சரிதமாகும். ஆனால், இப்பேரிதிஹாசத்தின் பாதி அளவிற்கும் குறைந்துதான் இச்சரிதம் அமைந்திருக்கிறது. மற்றைப் பகுதிகளில் கதைகளும், உபாக்கியானங்களும், நீதி வாக்கியங்களும் நிரம்பியிருக்கின்றன. இவைகளுக்கும் பாரதக் கதைக்கும் நெருங்கிய தொடர்பு யாதும் இல்லை.

**ஸம்பவப் பருவம்**

முற்காலத்துக் கவிஞர்கள் அரசரது பாரம்பரியம் கூறுதலை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இப் பாரம்பரியத்தை

முழுதும் உண்மையென நாம் கருதுதற்கு இல்லை. கவிஞர்கள் இவற்றைத் தாமாகவே புனைந்துவிடுதலே பெரும்பான்மை. மகாபாரதத்தில் ஒரு பருவம் முழுவதும் இவ்வரலாறு பற்றியதே. இது **ஸம்பவப் பருவம்** என வழங்குகிறது. கௌரவ பாண்டவர்கள் உதித்த பாரத வமிசத்தின் மூலபுருஷனான பரதனைப் பற்றிய வரலாறும் இதில் உண்டு. இவன் துஷ்யந்தன், சகுந்தலை என்ற இருவரது புத்திரன். காளிதாஸ மகாகவி இயற்றிய சாகுந்தல நாடகத்திற்கு ஒருவாறு மூலம் எனக் கூறத்தகும் சரித்திரம் இங்கே காணப்படுகிறது. ஆனால், நாடகத்திற்கும் பாரதத்தில் காண்பதற்கும் மிக்க வேறுபாடு உண்டு. பல அழகிய செய்யுட்கள் பாரதத்தில் காணும் வரலாற்றில் உள்ளன. பாண்டவர்களின் முன்னோரில் மிகப்பிரசித்தி பெற்ற யயாதியின் சரிதமும் காணப் படுகிறது.

**சரிதங்கள்**

இவ்வாறான வரலாறுகளேயன்றி, இதிஹாஸத்துள் இதி ஹாஸம் எனக் கூறத்தக்க சரித்திரங்களும் உள்ளன. நள தமயந்தி சரிதம் இவற்றுள் ஒன்று. இராம சரிதம் பிறிதொன்றாகும். இது திரௌபதியை இழந்ததினால் வருந்திக் கொண்டிருக்கும் யுதிஷ்டிரருக்கு மார்க்கண்டேய ரிஷி கூறுவதாக வுள்ளது. பாரதத்தில் வேறிடங்களிலும் இராமாயண சரிதக் குறிப்புக்கள் உள்ளன. உதாரணமாக, பீமன் அனுமானைச் சந்தித்ததாக வுள்ள இடத்தைக் கூறலாம்.

தமிழ் நாட்டுப் பழஞ் சரிதத்தை உணர்ந்தவர்கள் விதுலோ பாக்கியானத்தைப் பெரிதும் பாராட்டுவார்கள். குந்தி தன் மக்களாகிய பாண்டவர்களுக்குக் கிருஷ்ணன் மூலம் க்ஷத்திரிய தருமத்தை மறக்கலாகாது என்று சொல்லி அனுப்புகிறாள். அதை வற்புறுத்த விதுலை என்பவளின் நன்மொழிகளைத் தெரிவிக்கின்றாள். விதுலையின் மகன் சஞ்சயன் சிந்து ராஜனோடு போர் செய்து தோல்வியுற்று மீண்டான். பின்னர் ஆண்மையையும் மானத்தையும் கைவிட்டுத் தன் மனைவி மக்களோடு சுகமாக வாழ்ந்திருந்தான். அவனை மீண்டும் போர் செய்தற்குத் தூண்டி வீரமொழிகள் பல பல விதுலை உபதேசிக் கின்றாள்.

அவள் கூறிய வீர மொழிகளைக் கேளுங்கள் :

> கோழையே ! எழுந்திரு ! உன் பகைவர் மகிழ்ச்சியில் திளைத் திருக்கிறார்கள். உன் நண்பர்கள் வருந்திக் கொண்டிருக் கிறார்கள். இவர்கள் இவ்வாறு இருக்கும்படி நீ தோற்று விட்டாய். சோம்பேறியாய் இங்கே படுத்துக் கிடக்காதே.

ஆழமற்ற சிற்றோடை எளிதிலே நிரம்பிவிடும். சுண்டெலியின் கைப்பிடியை நிரப்புவது எளிது. அதுபோல, கோழையும் திருப்தியடைவது எளிது. அவன் சொற்பப் பொருளைக் கொண்டு திருப்தியடைந்து விடுகிறான். பாம்பின் விஷப் பல்லைப் பறிப்பதற்குமுன், நாய்போலச் செத்துவிடாதே. உன் உயிர் போனாலும் தைரியத்தைக் கைவிடாதே.

செத்தவனைப் போல ஏன் இங்கே படுத்துக் கிடக்கிறாய்? உன்மீது இடி விழுந்துவிட்டதா? என்ன? கோழையே, எழுந்திரு! உன் பகைவர் உன்னை வென்று வாழும்போது, உனக்கு உறக்கம்தான் வருகிறதா? புளியங்கனல்போல் பொங்கியெழு, கண நேரமாயினும் சரி. பதரை எரித்த தீப்போல, அடங்கிக் கிடக்காதே. அரசர்கள் பிறந்த இந்தக் குடும்பத்திலே, பொறுமைக்குப் பேர்போன இந்தக் கழுதை பிறக்க வேண்டுமா!

தனது வீரச் செயலை வியந்து பலரும் கதையாக வழங்கும்படி எவன் ஒருவன் வாழவில்லையோ, அவனை மக்கட்பதர் என்றுதான் சொல்ல வேண்டும். அவன் ஆணுமல்ல; பெண்ணுமல்ல.

இவ்வாறு கூரம்புபோன்ற சிறிய வசனங்களால் இந்த வீரத்தாய் தன் மகனைப் பழித் துரைக்கிறாள். ஆனால், அவன் வெற்றி பெறுவதற்குரிய கருவிகள் தன்னிடத்தில் இல்லையென்றும், போரில் தான் மடிவது அவளுக்கு யாதொரு பயனையும் தர மாட்டாது என்றும் கூறுகிறான். தாய் மீண்டும் மீண்டும் பழித்து, ஊக்கத்தை ஊட்டி, அச்சத்தை அகற்றவேண்டுமெனக் கூறி, தனது கடமையைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறாள்; முடிவில் அவன் போருக்குச் செல்லுகிறான்.

விதுலையின் மொழிகள் மூதில் மகளிர் கூற்றாகப் புறநானூற்றில் வருவனவற்றை ஞாபகப் படுத்துகின்றன.

**கதைகள்**

இதுபோன்ற சரித்திரங்களேயன்றி, தெய்வங்களைப் பற்றிய பல வரலாறுகளும் கதைகளும் பாரதத்தால் நமக்குத் தெரிய வருகின்றன. கருடன் முதலியோருடைய சரித்திரங்கள் சர்ப்ப யாக நிகழ்ச்சியில் கூறப்படுகின்றன. இந்திரன், அக்கினி முதலானவர்களுடைய வரலாறுகளைக் கூறும் பகுதிகளில் இத் தெய்வங்கள் தங்களுக்கு வேத காலத்திருந்த பெருமையை இழந்து எளிமையை அடைந்துவிட்டமை புலனாகிறது. வேதத்திலுள்ள மனு-மத்ஸ்ய வரலாறும் பாரதத்தில் விரிவாகக் காணப்படுகிறது.

சாவித்திரி வரலாறு, ரிஷ்யசிருங்கர் வரலாறு, அகஸ்தியர் கடல் குடித்த வரலாறு, விசுவாமித்திரர் வரலாறு, உத்தாலக வாருணியின் வரலாறு இவை அனைத்தும் அந்தணர்களுடைய பெருமையையும் குருவினுடைய பெருமையையும் உணர்த்துவதற்குத் தோன்றின.

இவையேயன்றி, பஞ்சதந்திரத்தில் வருவனபோன்ற கதைகள், உபமானக் கதைகள் (parables), நீதிக் கதைகள் முதலிய பலவும் மகாபாரதத்தில் 12, 13-ம் பருவங்களில் உள்ளன. இவைகள் பின்னர் பௌத்தர்களாலும் ஜைனர்களாலும் தங்கள் கதைப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. உபமானக் கதைகளுக்கு உதாரணமாக, கடலுக்கும் ஆற்றுக்கும் நிகழ்ந்த சம்பாஷணையைக் கூறலாம் (பருவம்-XII, அத். 113). 'வலிமை மிக்க பெரிய மரங்களை நீங்கள் வேரோடு பறித்து என்னிடம் கொண்டு வருவீர்கள். ஆனால், மெல்லிதான பலமற்ற கோரைப் புல்லை நீங்கள் கொண்டு வருவதில்லையே, ஏன்?' என்று கடல் நதிகளை நோக்கிக் கேட்டது. அதற்கு 'மரங்கள் தத்தமிடங்களில் வேரூன்றி ஓரிடத்தில் நிற்கின்றன. அவைகள் நீரோட்டத்தை எதிர்த்து நிற்பதால் அவைகளை நிற்குமிடங்களிலிருந்து நீக்கவேண்டியது அவசியம். கோரைப் புல் அவ்வாறுள்ளதன்று. அது நீர்ப் பெருக்கு அணுகிவருவதைக் கண்ட மாத்திரையில் வளைந்து கொடுக்கிறது. நீர்ப் பெருக்கின் வேகம் தணிந்தவுடன் பழையபடி நிமிர்ந்து நிற்கிறது. மரம் அங்ஙனம் வளைந்து கொடுப்பதேயில்லை' என்று கங்கா நதி பதிலளித்தது. இதனைப் போல, வேறோர் உவமானக் கதையும் மிகவும் பிரசித்தி பெற்றதே. அதுதான் கிணற்றில் விழும் மனிதனைப் பற்றியது.

ஓர் அந்தணன் கொடிய விலங்குகள் வாழும் ஓர் அடர்ந்த பெருங்காட்டிற்குள் புகுந்தனன். விலங்குகளின் கோர வடிவங்களும் பேரிரைச்சல்களும் அவனைக் கதிகலங்கச் செய்தன. அக்காட்டினின்றும் அவன் தப்பிப்போக வழிபார்த்து அங்குமிங்கும் திரிந்தான். திரிந்து திரிந்து, அதி கோரரூபியான ஒரு ஸ்திரீயின் இரு கைகளுக்குமிடையே அகப்பட்டுக் கொண்டான். மலை போன்று உயர்ந்து ஐந்தலை நாகங்களால் மூடப்பெற்ற மரங்களையும் சுற்றிச் சூழக் கண்டான். இவற்றின் நடுவில், செடி கொடிகள் பின்னி மறைத்துக்கொண்டிருந்த ஒரு கிணற்றையும் கண்டனன். அந்தணன் அதில் தவறி விழுந்துவிட்டான். அங்கே நெருங்கியிருந்த கொடிப்பிணக்கில் தொற்றிக் கொண்டு, பலாப் பழம்போல் தலைகீழாகத் தொங்கினான். கிணற்றின் நடுவில் ஒரு கோர ஸர்ப்பமும், கிணற்றின்மேலாக, ஆறு வாய்களும் பன்னிரு கைகளுங்கொண்ட ஒரு பெரிய யானையும் அவனை

அணுகி வந்தன. கிணற்றை மூடிக்கொண்டிருந்த மரக்கிளைகளில் பயங்கர வடிவமுள்ள வண்டுகள் தேன் இழைத்து உண்டு கொண்டிருந்தன. தேன் துளிகள் கீழே சொட்டின. தொங்கிக் கொண்டிருந்த அவ் அந்தணன் அத்துளிகளை நக்கிக் குடித்துக் கொண்டிருந்தான். எத்தனை குடித்தும், அவன் திருப்தியடையவில்லை. மேலும் மேலும் குடிப்பதற்கு விரும்பினான். இப் பெருங்காட்டைப் போன்றதுதான் ஸம்ஸாரம். மனிதன் பெறும் இன்பமும் இத்தகையதே (ஸ்திரீ பருவம், அத். 5).

இக் கதையை உட்கொண்டே ஜைன நூலாகிய சூளாமணியில்,

யானை துரப்ப அரவுறை ஆழ்குழி
நானவிர்ப் பற்றுபு நாலும் ஒருவன் ஓர்
தேனெய் இழிதுளி நக்குந் திறத்தது
மானுயர் இன்பம் மதித்தனை கொண்ணீ.

(துறவு, 149)

[நால் நவிர் - தொங்கும் புல் ; தேனெய் - தேன் ; மானுயர் - மானுடர்]

என்று கூறப்பட்டுள்ளது. உலக இன்பத்தின் நொய்மையைக் காட்டும் இந்தக் கதை அந்தணர்கள், ஜைனர்கள், பௌத்தர்கள், முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் என்ற அனைவருடைய நூல்களிலும் காணப்படுகின்றது. இது முதன்முதலில் பௌத்த மதச் சார்பாய்த் தோன்றிய கதையென்று கொள்ளுவர்.

இதனைப் போன்றே சிபிச் சக்கரவர்த்தியினுடைய கதையும் பௌத்தர் சார்பாகவே முதன்முதல் தோன்றியது எனக் கருத இடமுண்டு. திரிபிடகத்தில் இவ்வரசன் தனது இரண்டு கண்களையும் பிடுங்கி ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்த வரலாறு கூறப்படுகிறது (சரியாபிடகம் I, 8). மகாபாரதத்தில் மூன்று வேறு ரூபங்களில் இவன் கதை உள்ளது. புறாவின் பொருட்டுத் தன் உடலை அரிந்து கொடுத்து உயிரையும் இழந்த வரலாறு வன பருவத்தில் வருகிறது. சங்க நூலாகிய புறநானூற்றில் பல செய்யுட்களிலும் (37, 39, 46) இச் செய்தி குறிக்கப்படுகிறது. உதாரணமாக,

கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை யுரவோன் மருக !

(புறம். 43)

*[ஏறு - தாக்குதல்; ஓரீஇ - நீங்கி; புறவு - புறா; தபுதி-அழிவு; சீர் - துலா ; வரையா - அளவுபடாத ; உரவோன் - வலியோன் ; மருக - மரபிலுள்ளவனே]*

என வருவது காண்க. யயாதியின் பெயரனாகிய இச் சக்கரவர்த்தி தனது பிதாமகனுக்கு ஸ்வர்க்கத்தில் தனக்குரிய இடத்தைக் கொடுத்து அவனோடு வானம் புகுந்த வரலாறு மற்றொன்று. இது ஆதி பருவத்தில் உள்ளது. மூன்றாவது, சிபி தனது செல்வம் அனைத்தையும் அந்தணர்களுக்குக் கொடுத்து யாகம் செய்தான் என்ற வரலாறு துரோண பருவத்தில் வருகின்றது. இதில் ஒரு பிராமணன் விருப்பப்படி தனது புத்திரனையே கொன்று அவனைத் தானே உண்டான் என்றும் கூறப்படுகிறது. சிறுத் தொண்டர் கதையை இது ஞாபகமூட்டுகிறது.

**ஒழுக்கத்தைப் பற்றி ......**

துறவில் பூணவேண்டும் நல்லொழுக்கத்தையேயன்றி, நமது தினசரி வாழ்வில் கைப் பிடிக்கவேண்டும் ஒழுக்கத்தையும்பற்றி மகாபாரதத்தில் பல இடங்களில் பல சரித்திரங்கள் வந்துள்ளன. 12-வது சாந்தி பருவத்தில் (அத். 272) கூறப்படுகின்ற சிரகாரியின் வரலாற்றை இங்கே குறிக்கலாம். இவனது தந்தை பாவ காரியத்தைச் செய்துவிட்ட இவனது தாயைக் கொலை செய்து விடு எனக் கட்டளையிடுகிறான். நீண்ட காலமாக இவன் இதனைக் குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்தான். அதற்கிடையில் இவனது தந்தைக்குக் கோபம் தணிந்துவிட்டது. தன் மகன் தனது ஆணையை நிறைவேற்றாதது குறித்து மகிழ்ச்சி கொண்டான். இக் கதையில் அன்னையின் அன்பைக் குறித்துச் சிரகாரி கூறுவது மிக்க அழகாக உள்ளது. இதுபோன்ற கதைகள் எல்லாம் நீதிபற்றிய உரையாடல்களை அமைத்தற்கு வேண்டும் சட்டம் என்றே கொள்ளத்தக்கன. எனவே, இவற்றை இதிஹாஸ ஸம்வாதங்கள் என்று கூறுவது பொருத்தமாம். இவற்றுள் சில, உபநிஷதங்கள் போலவும், பௌத்த இலக்கியங்கள் போலவும், தோற்றத்தில் அமைந்துள்ளன. ஜனகன் ஞானத்தால் சாந்தியடைந்த பிற்பாடு, 'எனது செல்வம் அளவிடற்கரியது ; ஏனெனின், எனக்கென யாதோர் உடைமையும் இல்லை. மிதிலை நகரம் முழுவதும் எரிந்துவிட்ட போதிலும் எனக்குரியது ஒன்றும் எரிந்தழியாது' என்று கூறுவது உபநிஷத வாக்கியம் போலவே தோன்றுகிறது. இங்ஙனமே பிங்கலை என்ற வேசியின் சரித்திரம் பௌத்தர்களது தேரி காதைச் சரித்திரங்களோடு ஒப்பிடுதற்குரியது.

ஓர் ஊரில் பிங்கலை என்ற வேசி* ஒருத்தி இருந்தாள். இவள் இந்திரிய சுகத்தில் மிகவும் ஈடுபட்டவள். ஆனால் இவளுடைய ஆசைநாயகன் இவளைக் கைவிட்டுவிடவே, இவள் மிகவும் நொந்து வருந்தினாள். பின்பு, தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, தன் மனத்தில் சாந்தி நிலவும்படி செய்துகொண்டாள். இதனால் இந்திரியங்களை வெல்லாதவளாயிருந்தும், இவளுக்கு நிராசை உண்டாயிற்று. இந் நிராசையினால் இவள் ஆனந்த மடைந்தாள்.

உபநிஷதங்களிற் போலவே மகாபாரதத்திலும் ஸ்திரீகளும், பிறப்பால் இழிந்தவர்களும் ஞானத்தால் சிறந்து விளங்கிய சரித்திரங்கள் பல காணப்படுகின்றன. உதாரணமாக, பதிவிரதை யின் சரித்திரத்தையும் தர்ம வியாதனுடைய சரித்திரத்தையும் முறையே கூறலாம்.

**பதிவிரதையின் கதை**

பதிவிரதையின் கதை தமிழ்நாட்டில் பரக்க வழங்கி வருகிறது. வேதங்களை ஓதி, தவத்தில் சிறந்து, தர்ம சீலனாய் விளங்கிய கௌசிகன் என்ற ஓர் அந்தணன் இருந்தான். அவன் ஒரு மரத்தின் அடியில் வேதமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு தியானத்திலிருந்தான். மரத்தின் மீது இருந்த கொக்கு ஒன்று அவன்மீது எச்சமிட்டுவிட்டது. கௌசிகன் கோபம்கொண்டு கொக்கை விழித்துப் பார்த்தான். உடனே கொக்கு உயிரிழந்து பூமியில் விழுந்துவிட்டது. இவ்வாறு தன் தவத்தின் மகிமையை உணர்ந்த கௌசிகன் ஒரு கிராமத்தில் புகுந்து அங்குள்ள வீடு களில் ஒன்றில் நுழைந்து பிச்சை என்று யாசித்து நிற்க, அப்போது வீட்டினுள்ளே இருந்த ஒரு ஸ்திரீ 'பாத்திரங்கள் துலக்கிக் கொண் டிருக்கிறேன்; சற்றுப் பொறுத்துக் கொள்ளும்' என்று கூறினாள். அச்சமயத்தில் அவளுடைய கணவன் பசிவருத்தத்தோடு வந்து புகுந்தனன். அந்தணனைக் கவனியாது, அவள் தன் நாயகனைக் கவனித்து அவனுக்கு ஆகாரம் படைத்துக் கொண்டிருந்தாள். அந்தணன் தன்னை அகௌரவப்படுத்தியதாகக் கருதி அவளைக் கோபித்து வார்த்தையாடத் தொடங்கினான். அப் பதிவிரதை எவ்வளவோ சமாதானங்கள் சொல்லிப்பார்த்தும், 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' என்ற நீதியை எடுத்துக் காட்டியும் பயனில்லாமல் போயிற்று. அந்தணன் சினங்கொண்டு அவளை விழித்து நோக்கினான். அவள் 'என்னைக் கொக்கென்று நினைத்துவிட்டாயா?' என்று நகைத்தாள்.

---

* யாப்பருங்கல விருத்தியில் (பக். 40, 487, 540) காணும் பிங்கலகேசி என்னும் காவியம் இவ்வேசியினது வரலாறு பற்றியது போலும்.

அந்தணன் வியப்பெய்தி அவளுடைய கற்பின் பெருமையை உணரலானான். கௌசிகன் என்ற அந்தணனை ஒரு கொங்கணவன் என்று கொண்டு தமிழ்நாட்டில் 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?' என்ற வசனமொன்று வழங்கிவருகிறது. இக்கதையை வள்ளுவரது வரலாற்றோடு இயைத்துச் சொல்லுவது முண்டு. 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்ற குறளின் கருத்துக்கு இவ்வரலாறு சிறந்தவொரு விளக்கமல்லவா?

இந்தக் கற்பரசிதான் தர்ம வியாதனிடம் செல்லும்படி கௌசிகனுக்குக் கூறுகிறாள். தர்ம வியாதன், மிருகங்களை வேட்டையாடி மாமிசம் விற்றுக் காசியில் வாழ்பவன். இவனிடம் கௌசிகன் சென்றதும், அவனுக்கு உபசாரம் முதலியன செய்கிறான். பின்னர் பதிவிரதையின் சொற்படி, தான் இவனிடம் வந்திருப்பதை அந்தணன்கூற, தர்மவியாதன் பலவகையான தர்மங்களையும் அவனுக்கு உணர்த்துகிறான். ஆன்றோர்களுடைய ஆசாரம் இன்னதென்பதையும், ஒவ்வொரு வருணத்திற்கும் உரிய தர்மங்களை அவ்வருணத்தார்கள் கைவிடுதல் கூடாது என்பதையும், நல்வினை தீவினையே இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதையும், இவ்வின்ப துன்பங்கள் இந்திரிய ஜயம் அடைந்தவனைப் பாதிக்கமாட்டா என்பதையும் கூறி, தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கே தன் தாய் தந்தையரைக் காண்பித்து, தான் அவர்களுக்குப் பணி செய்யும் முறையைத் தெரிவித்து 'மாதா பிதாக்கள்தான் எனக்குப் பரதேவதை; தெய்வங்களுக்கு மேலாக அவர்களை நான் போற்றுகிறேன்; எனது தர்மமும் தவமும் இதுதான்' என்று விளக்குகிறான். பின் அவர்களை அந்தணனும் வணங்கும்படியாகச் செய்தனன். கௌசிகன் தன் வீடு சென்று உபதேசத்தின்படி தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து வாழ்ந்தான்.

இவ்வாறே சிறு வியாபாரியான துலாதாரன் என்பவன் அந்தணத் துறவியான ஜாஜலி என்பவனுக்குக் குருவாக அமைந்து உபதேசம் செய்கிறான். நமது தேசத்தின் நீதியொழுக்கம் பற்றிய சரித்திரத்தில் இவ்விருவருக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணை மிகவும் முக்கியமானது.

ஜாஜலி என்ற அந்தணன் ஒரு காட்டில் துறவியாக வசித்து மிகவும் பயங்கரமான தபசுகளைச் செய்து வந்தான். கந்தையையும் தோலையும் உடுத்து, மலம் மூத்திராதிகளைக் கழுவாது, மழையிலும் சூறாவளிக் காற்றிலும் காட்டினூடே அலைந்து திரிந்தான். கடினமான விரதங்களை அனுஷ்டித்தான். ஒரு நாள் அவன் யோகத்தில் ஆழ்ந்து அசைவின்றி மரம்போல் நின்று

கொண்டிருந்தனன். அங்கே ஆண், பெண் இரட்டைப் பறவைகள் அவனிடம் பறந்து வந்தன. அவன் தலைமயிர்மீது கூடு கட்டின. இதைத் தெரிந்தும் யோகி அசையவில்லை ; தூண்போல் சலன மின்றி இருந்தான். கூட்டில் பெண் பறவை முட்டையிடத் தொடங்கிற்று. முட்டைகளை அடைகாத்ததும், குஞ்சுகள் வெளிப்பட்டுச் சிறகு முளைத்துப் பறந்து போயின. அப்பொழுதும் யோகி அசைவற்றிருந்தான். பின்னர், தனது கடுந்தவத்தைக் குறித்துப் பெருமைகொண்டு, பக்தியினால் அடையவேண்டும் உச்ச நிலையை அடைந்து விட்டேன்' என்று உரக்கக் கூவினான்.

அப்போது வானத்திலிருந்து ஓர் ஒலி உண்டாயிற்று. 'ஜாஜலி உனது பக்தியில் நீ துலாதாரனுக்குச் சிறிதும் ஒப்பில்லை. காசியில் வாழ்ந்துவரும் ஞானியாகிய அந்தத் துலாதாரன்கூட உன்னைப் போலப் பெருமிதம் கொள்ளவில்லை' என்ற பதில் எழுந்தது. பின்பு ஜாஜலி மிகவும் மனமுடைந்து துலாதாரனைப் பார்க்கக் காசிக்குச் சென்றான். அவனுடைய பக்தி வரலாறு தன்னுடைய பக்தியைக் காட்டிலும் எவ்வாறு மேலானது என்று தெரிய ஆவல் கொண்டான். துலாதாரன் காசியில் கடை வைத்து வாசனைச் சரக்குகள், மூலிகை மருந்துகள் முதலியவற்றை விற்று ஏழை வாழ்க்கை வாழ்ந்து வருவதைக் கண்டனன். அவனிடம் சென்று, அவனுடைய பக்தி எந்த முறையிலே நிகழ்ந்து வந்தது என்று ஜாஜலி கேட்க, அவன் நீதியொழுக்கத்தைப்பற்றிப் பெரியதோர் உபதேசம் செய்கிறான்.

> என்றும் அழியாத நீதியையும் அதன் மர்மங்களையும் நான் அறிவேன். அது தொன்றுதொட்டு வரும் ஒரு பெரிய கொள்கை. அனைவருக்கும் நன்மையைத் தருவது. அன்புடைமை என்பதுதான் அது. ஓர் உயிர்க்கும் துன்பம் செய்யாதபடி அஹிம்ஸை விரதத்தை மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவதே பக்தி வகைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது. இதன்படியே நான் ஒழுகுகிறேன். மற்ற வர்கள் வெட்டிய மரங்களையும் புற்களையும் கொண்டு இந்தக் குடிசையைக் கட்டியிருக்கிறேன். செவ்வரக்கு, தாமரைக் கிழங்கு, தாமரை நூல், நறுமணப் பண்டங்கள், அறிவை மயக்காத பானகங்கள் : இவற்றை, ஒருவரையும் ஏமாற்றாதபடி, நான் வாங்கி விற்பனை செய்து வருகிறேன். எல்லோருடைய நன்மையிலும் மகிழ்ச்சி கொண்டு மன வாக்குக்காயம் என்ற திரிகரண சுத்தியோடு கூடி எல்லா உயிர்க்கும் உண்மை நண்பனாக எவன் இருக் கிறானோ அவனே நீதியொழுக்கத்தை அறிபவன். நான் ஒருவருக்கும் பட்சபாதம் காட்டுபவனல்ல. ஒருவர்மீதும்

> எனக்கு விருப்பு வெறுப்புக் கிடையாது. எல்லாரிடத்திலும் நான் ஒன்றுபோல் நடந்து கொள்கிறேன். அது தான் எனது விரதம். துலாக்கோல்போல் எல்லா உயிர்க்கும் நான் சமத்துவம் காட்டுகிறேன்; நான் நடுநிலைமை பூண்டிருக்கிறேன். ஓர் உயிரும் தன்னை அஞ்ச இடங்கொடாதபடி, ஒருவருக்கும் நடுநிலைமை நீங்கித் தாட்சண்யம் காட்டுதலோ, வெறுப்புக் காட்டுதலோ இல்லாதபடி. ஒருவன் வாழ்வானாகில், அவன் பிர்மத்தோடு ஐக்கியமடைதல் திண்ணம்.

இவ்வுபதேசத்தின்பின் அஹிம்ஸைபற்றி ஒரு நீண்ட உபந்யாசம் நடக்கிறது. ஆடு மாடுகளை வளர்த்தல், அடிமைகளைக் கொள்ளுதல், உயிர்ப்பிராணிகளை விற்றல் முதலியன எல்லாம் அஹிம்ஸைக்கு விரோதமானவை என்று சொல்லுகிறான். பயிர் விளைத்தல் கூடப் பாவச் செயலென்றும், நிலத்தை உழும் பொழுது பல சிற்றுயிர்களைக் கொல்லுதல் அதனால் ஏற்படுகிற தென்றும் விளக்குகிறான். ஜாஜலி இக்கூற்றை மறுத்து, இது நிகழாமற் போனால் யாகம் செய்ய முடியாதென்று பதிலுரைக்கிறான். இதன்பின் துலாதாரன் உண்மையான யாகம் யாது என்பதைக் குறித்து விளக்கம் செய்கிறான் :

> பலனைக் கருதாது, புரோகிதர்களது வஞ்சனைக்கு உட்படாது, உயிர்ப் பிராணிகளைக் கொல்லாது, செய்வதே உண்மையான யாகம். ஜாஜலியின் தலைமீது கூடுகட்டி வாழ்ந்த பறவைகளே இதற்குச் சான்று. இவைகள், எல்லா உயிர்களிடத்தும் பொறுமை காட்டுதல் வேண்டும் என்ற உண்மைக் கொள்கையை வற்புறுத்துகின்றன.

இது துலாதாரனுடைய வரலாறு,

> 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி'

என்ற திருக்குறளை நமக்கு நினைவூட்டுகிறது.

அந்தணரது வைதிக - ஒழுக்கத்திற்கும், பாரத நாட்டுத் துறவற - ஒழுக்கத்திற்குமுள்ள வேற்றுமை மேதாவி என்பவனுக்கும் அவனது தந்தைக்கும் நிகழ்ந்த உரையாடல்களினால் நன்கு விளங்கும்.

தந்தை வேதங்களை ஓதி அதிலேயே மகிழ்ந்திருந்தான். அவனது அறிவுடைப் புதல்வனாகிய மேதாவி முக்திக்குரிய நெறிகள், நீதியொழுக்கங்கள், லௌகிக வாழ்க்கை-முறைகள் முதலியவற்றிலே வல்லவனாக இருந்தான். இதனால் உலகின் உண்மையான இயல்பு இவனுக்கு நன்கு புலப்பட்டிருந்தது.

எனவே, துறவியல் நோக்கங்கொண்டு அவ்வொழுக்கத்தைக் கைப்பற்றினான். இதனை மிகவும் வெறுத்த தந்தை, மகனோடு வாதம் புரிகிறான். இவ் வாதத்தில் நிகழ்ந்த உரையாடலே இங்குக் குறித்தது.

### பகவத் கீதை

மகாபாரதத்தில் சமய-ஒழுக்கம் பற்றிய பகுதிகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது பகவத்கீதை. காஷ்மீர தேசத்து அரசனான அவந்திவர்மன் இறக்குந் தருவாயில் பகவத் கீதையை வாசிக்கக்கேட்டு, கி. பி. 883-ல் இறந்தான் என்று கல்ஹணர் கூறுகிறார் (ராஜதரங்கிணி, V, 125) அராபி தேசத்து யாத்திரிகரான ஆல்பெரூனி (கி. பி. 1030) பகவத் கீதையை மிகவும் புகழ்ந்து கொண்டாடியிருக்கிறார் (Alberuni's India, Vol. I, P. XXXVIII). ஷிலீகல், ஹம்போல்ட் என்னும் ஜெர்மானிய அறிஞர்களும் இதனை மிகவும் புகழ்ந்து கொண்டாடியுள்ளார்கள்.

பீஷ்ம பருவத்தில் இது கூறப்படுகிறது. யுத்தத்திற்கு வேண்டும் ஆயுதங்களெல்லாம் முற்றுப்பெற்றன. இருபெரும் சேனைகளும் போருக்கு எதிர்த்து நிற்கின்றன. அப்பொழுது அர்ச்சுனன் தனது ரதத்தை இரண்டு சேனாமுகங்களுக்கும் இடையே நிறுத்தி, படைக்கலம் தாங்கிப் போரை எதிர்நோக்கியிருந்த இருபெரும் சேனைகளையும் நோக்கி நின்றான். இரு பக்கங்களிலும் தந்தையர்கள், பாட்டன்மார்கள், ஆசாரியர்கள், சிற்றப்பன்மார்கள், சகோதரர்கள், மக்கள், பௌத்திரர்கள், நண்பர்கள், மாமன்மார்கள் முதலியவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்பதைக் கண்டான்.

அவனுக்கு மிக்க இரக்கம் தோன்றிவிட்டது. சுற்றத்தார்களுக்கும், நண்பர்களுக்கும் எதிராக நின்று போர் செய்ய நேர்ந்ததே என்று வருந்தினான். அச்சம் ஒருபால் அவனைப் பீடித்துக் கொண்டது. யார் பொருட்டாகப் போர்புரிய வேண்டுமோ அவர்களையே கொலை செய்வது பெரும் பாவமும் பைத்தியமுமல்லவா என்று எண்ணுகிறான். அப்பொழுது கிருஷ்ணன் அவனை அணுகி, அவனைக் கோழை என்று கூறிப் பழிக்கின்றான். அர்ச்சுனனோ 'தனக்குப் பெருமை அளிப்பது வெற்றியா? அல்லது தோல்வியா? தெரியவில்லையே' என்று கூறித் தான் செய்யத் தக்கது யாது என வினவிக் கிருஷ்ணனிடம் முறையிடுகிறான். கிருஷ்ணன் நீண்டதொரு தத்துவ ஆராய்ச்சி

செய்து, போர் புரிவதே க்ஷத்திரிய தர்மம் : அதுவே உடனே செய்யத் தக்கது என வற்புறுத்துகிறான். கீதையின் சாரம்*,

என் கருமந் தான்செய்தே என்பரமாய் நின்றொழிந்து
என்மீது பக்தி இனிது கொண்டு—மன்பற்று
யாவையும் நீத்தே எனைத்துயிர் மீதும் பகைமை
ஒவியவன் என்னை உறும்.

என்பதுதான் எனக் கூறுவர். இந் நீண்ட தத்துவ விசாரணையில் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூன்றின் தன்மையும் விளக்கப்படுகிறது. இம் மூவகை நெறிகளும் ஒன்றோடொன்று இசைந்து செல்வன என்பது நிறுவப்படுகின்றது. ஆனால், கீதையில் வரும் முரண்பாடுகள் மிக அதிகமாக உள்ளன. இவற்றை ஒற்றுமைப்படுத்துவதில் தற்காலத்து அறிஞர்கள் மிக முயன்று வருகிறார்கள்.

கீதை முதன்முதல் தோன்றிய பாரதக் கதையைச் சேர்ந்ததன்று என்பதில் சிறிதும் ஐயுறுதற்கு இடமில்லை. நெடிய போர்வர்ணனையின் இடையிலே 650 சுலோகங்களடங்கிய ஒரு நீண்ட தத்துவ விசாரணை நிகழ்வதாக எந்த இதிஹாஸ கவியும் பாடுவான் என்று கருதவும் முடியவில்லை. ஒரு சிறிய சம்பாஷணை தொடக்கத்தில் இருந்திருக்கலாம். அதனை விரித்துப் பிற்காலத்தவர்கள் கீதை என்ற பெரு நூலாகச் செய்து விட்டனர் என்றே தோன்றுகிறது. கி. மு. 2-ம் நூற்றாண்டில் பாகவத சமயம் காந்தாரத்திலுள்ள கிரேக்கர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பதற்குச் சான்றுகள் நிரம்ப உள்ளன. பாகவத சமயத்தவர்க்கு உரிய ஒரு பிரமாண நூலாக இந்தக் காலத்தில் கீதை எழுதப்பட்டிருத்தல் கூடும்.

பாகவதர்களுக்குரிய வேறொரு நூலும் மகாபாரதத்தில் உள்ளது. இதுதான் 12-வது சாந்தி பர்வத்தில் வரும் நாராயணீயம் என்பது. இது பகவத் கீதைக்கு மிகப் பிற்பட்டது. இதுவும் புராண நெறியிலே செல்லும் மிக விரிந்த நூலாக அமைக்கப்பட்டுள்ளது. நாராயணனது பக்தர்கள் சுவேதத் தீவில் வாழ்ந்து இன்புறுவர் எனக் கூறப்படுகிறது. இந்தத் தீவு பௌராணிகக் கதையேயன்றி வேறொன்றுமல்ல. இங்ஙனமாகவும், ஒரு சிலர் பாற்கடல் என்பதனைப் பால்கன் ஏரி என்றும், சுவேதத் தீவை நெஸ்தோரிய கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாகக் கூறும் வெண்மக்கள் பூமி என்றும் ஆராய்ந்து துணிந்துள்ளார்கள் !

---

* மத்கர்ம க்ருந்மத் பரமோ மத் பக்த : ஸங்க வர்ஜித :
நிர்வயிர : ஸர்வ பூதேஷு௰ய : ஸ : மாமேதி பாண்டவ
(கீதை, XI, 65)

மகாபாரதத்தைச் சார்ந்ததாக ஹரிவம்சம் என்ற புராணமும் கொள்ளப்படுகிறது. ஆனால், இது உண்மையில் மகாபாரதத்தைச் சார்ந்ததன்று. இதனைக் 'கிலம்' என்றே கூறுவர். விஷ்ணுவின் பெருமையைக் கூறுவதற்கென்றே இப்புராணம் எழுந்தது.

பாரதத்தின் தத்துவப் பகுதியில் சாங்கியமும் யோகமுமே முக்கியமாகப் புலப்படுகின்றன. ஆனால் அங்கங்கே வேதாந்தப் பொருள்களும் புகுத்தப்பட்டுள்ளன. உத்தியோக பர்வத்தில் **41-46** அத்தியாயங்கள் உதாரணம். இவ் இதிஹாஸத்திலுள்ள நீதிப் பகுதிகள் மிகவும் சிறந்தன. 'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு' என்ற குறளின் கருத்து இப் பகுதியிற் காணப்படுகிறது.

**மகாபாரதத்தின் காலம்**

மகாபாரத காலத்தின் பின் எல்லையைக் குறித்து வின்டர் நீட்ஸ் சில சான்றுகள் தருகின்றனர். கி. பி. 500 அளவில், மகாபாரதம் புண்ணிய நூலாகவும் சமயப் பிரசாரத்திற்குரிய நூலாகவும் அமைந்துவிட்டது. இது சிலா சாஸனங்களால் தெளியப்பட்டது. குமாரிலர் கி. பி. 700 அளவில், இந்த இதிஹாஸத்தினின்றும் பல சுலோகங்களை எடுத்தாண்டுள்ளனர். ஸுபந்துவும் பாணனும் (கி. பி. 600—650) மகாபாரதத்தை நன்கு அறிந்துள்ளார்கள். பாணன், தனது காதம்பரியில், உச்சையினியில் நிகழ்ந்த மகாபாரத வாசிப்பின்போது விலாஸவதி என்ற அரசி விஜயம் செய்திருந்ததாகக் கூறுகிறான். கம்போடியாவில், கி.பி. 600 அளவில் பொறிக்கப்பட்ட ஒரு சாஸனத்தால், இந்திய தேசத்திலிருந்து வந்த பாரதச் சுவடிகளை வைத்துக் கொண்டு வாசிப்பு நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. கி.பி. 5, 6-ம் நூற்றாண்டுகளில் பாரதத்தில் தான தர்மப் பகுதியை வாசிப்பதற்கு மானியம் விட்டதாகப் பல சாஸனங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் ஒன்று பாரதம் நூறாயிரம் சுலோகங்கள் கொண்டதெனக் கூறுகிறது. வின்டர் நீட்ஸ் கூறும் துணிபுகள் இங்கே மனங்கொள்ளத் தக்கன :

1. மகாபாரதத்தில் வரும் சில தனிக் கதைகளும் செய்யுட்களும் வேத காலத்தைச் சார்ந்தவையாகலாம்.

2. பாரதம் என்றோ மகாபாரதம் என்றோ ஒரு தனிப்பட்ட இதிஹாஸம் வேத காலத்தில் இல்லை.

3. பல நீதி பற்றிய கதைகளும், வசனங்களும் துறவுக்குரியன. இவற்றைப் பௌத்தர்களும், ஜைனர்களும் தங்கள் நூல்களிலும் எடுத்தாண்டுள்ளார்கள்.

4. கி. மு. 4-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டு மகாபாரதம் இருந்தது என்பதற்கு யாதொரு சான்றும் இல்லை.

5. கி. மு. 4-ம் நூற்றாண்டிற்கும், கி. பி. 4-ம் நூற்றாண்டிற்கும் இடையே மகா பாரத இதிஹாஸம் சிறிது சிறிதாக வளர்ந்து தற்காலத்துள்ள நிலையை அடைந்துவிட்டது.

6. கி. பி. 4-ம் நூற்றாண்டில் இந்த இதிஹாஸம் பொதுப்பட நோக்குமிடத்து, தற்காலத்துள்ளபடியே அளவிலும், பொருளடக்கத்திலும், தன்மையிலும் அமைந்துவிட்டது.

7. ஆனால், சிறு சிறு மாற்றங்களும் சேர்ப்புக்களும் பிற்பட்ட நூற்றாண்டுகளிலும் நிகழ்ந்து வந்துள்ளன.

8. மகா பாரதம் முழுமைக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிப்பிட முடியாது. ஒவ்வொரு பகுதியையும் தனித்தனி ஆராய்ந்து அதன் காலத்தை வரையறுத்தல் வேண்டும்.

## இராமாயணம்

பிறிதோர் இதிஹாஸமாகிய இராமாயணம் மகா பாரதத்தினின்றும் தன்மையினால் வேறுபட்டுள்ளது. பாரதத்தை நோக்க இது சுருங்கிய அளவினதாயும், அமைப்பில் ஒற்றுமை மிகுந்ததாயும் இருக்கிறது. இராமாயணம் ஒரு வீர புருஷனுடைய சரிதத்தை ஒற்றுமை நயத்தோடு அமைத்துள்ள இதிஹாஸம் என அது இப்போதுள்ள நிலையிலும் நாம் உணர்ந்து கொள்ளலாம். பாரதத்தை இயற்றிய வியாஸர் முற்காலத்திருந்தவராகக் கூறப்படும் ஒரு ரிஷி. இவர் வேதங்களைத் தொகுத்தவர் என்றும், புராணங்களைத் தொகுத்தவர் என்றும் கருதப்படுகிறார். இராமாயணத்தை இயற்றியவர் வான்மீகி முனிவர் என்ற கவிஞர். இவர் மக்களிடையே வழங்கிய இராமசரிதச் செய்யுட்களை முறைப்படுத்திச் சரிதப் போக்கில் ஒற்றுமை கண்டு புதியதோர் இதிஹாஸத்தை இயற்றினர். இவரை ஆதிகவி என்பர். அதாவது காவிய நெறியைப் பின்பற்றி அமைத்துப் பாடியவர்களுள் இவரே முற்பட்டவர். இராமாயணத்தை ஆதிகாவியம் என்றும் கூறுவர். பின் வந்த காவியக் கவிஞர்களுக்கெல்லாம் வழிச் சட்டமாய் அமைந்ததும் இக்காவியமே. காவிய நெறியில் இரண்டு முக்கியமான இயல்புகள் காணப்படும். ஒன்று: செய்யுட் பொருளைக் காட்டிலும் செய்யுளின் ரூபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் போற்றுவது. மற்றொன்று: உபமானம், உருவகம் முதலிய அலங்காரங்களை மிகுதியாகக் கையாண்டு செய்யுள் அமைப்பது. இவ்வியல்புகள் முதன் முதல் தோன்றத் தொடங்கியது இராமாயணத்தில்தான். இவ் ஆதி காவியம் இதிஹாஸத்தின் தன்மையோடு காவியத்தின் தன்மையையும் பெற்று

விளங்குவது. இதிஹாஸத்தின் தன்மை பாரத தேசத்து மக்கள் அனைவருக்கும் இது பொதுப்பட உரித்தாயுள்ளதனால் தெளிவாகின்றது. இக் காவியத்தின் பாயிரத்தில் பிரமதேவர் வான்மீகியை விளித்து, இராமனது வீரப் பெருஞ் செயல்களைக் குறித்துப் பாடும்படி கூறினர் என்று காணப்படுகிறது.

மன்னும் உலகில்
பன்னு மலைகள் இந்தப் பாரதனில் நிற்பளவும்
துன்னு முலகெங்கும் இராமபிரான் தொல்கவிதை
மன்னி நிலைபெறுதல் வாய்மையெனச் சாற்றினனே.

இங்ஙனம் இப் பிரமதேவன் உறுதியும் அறைகின்றான். இது உண்மையாய் முடிந்துள்ளது என்பது தற்காலத்தும் இராமாயணத்தை நமது பாரத மக்கள் கொண்டாடும் முறையினால் அறியலாகும்.

இராமனது புகழ் நிரம்பிய வீரச்செயல்களைக் கேட்டு ஆண்பாலார் பெருமிதம் எய்துகிறார்கள். அவனது அறிவுரைகளைக் கேட்டு, அவர்கள் சீரிய ஒழுக்கத்தினராகிறார்கள். பெண்பாலார் சீதையைப் பக்தியுடன் போற்றிக் கற்பிற்கு அணிகலம் என்று புகழ்ந்து பாராட்டுகிறார்கள். உண்மைக்கு உறைவிடமாகிய அநுமனது செயல்களைக் கண்டு வியந்து, முதியோரும் இளைஞரும் அவன் சரித்திரத்தில் ஆழ்ந்து ஈடுபடுகிறார்கள். ராக்ஷஸர்களது சரிதங்களும் பெரிதும் மகிழ்ச்சியைத் தரக்கூடியன. இராமாயண காவியத்தினின்றும் அரிய இனிய தொடர்மொழிகளை எடுத்துப் பழமொழிகளாகப் பொது மக்கள் வழங்குகிறார்கள். பல்வேறு சமயத்தினரும் இராமாயணத்தைப் பிரமாண நூலாகக் கொண்டு, அதன்கணின்றும் விஷயங்களை எடுத்துப் பொதுமக்களுக்குக் கூறி, அவர்கள் தங்கள் கொள்கைகளை மேற்கொள்ளும்படியாகச் செய்து வருகிறார்கள் காளிதாஸன் தொடங்கிப் பின்வந்த கவிஞர்களெல்லாம் இராமாயணத்தினின்றும் விஷயங்களை எடுத்துப் புதிய காவியங்கள் அமைத்து வந்துள்ளார்கள். தற்காலத்துள்ள நாட்டு-மொழிகளை எடுத்துக் கொள்வோமானால், அவைகள் ஒவ்வொன்றிலும் இராமாயண காவியம் காணப்படுகின்றது.

தமிழில் கி. பி. 12-ம் நூற்றாண்டின் இறுதியில் கம்பன் என்ற அபிநவ கவிநாதன் இராமாவதாரம் என்ற நூதன சிருஷ்டியை இயற்றினன். இதனையடுத்துள்ள காலங்களில் இராம சரிதம் பாரத தேசம் முழுமையுமுள்ள மொழிகளில் மொழிபெயர்ப்பாகவும் வேறு வகையாகவும் பாடப்பட்டுள்ளது. துளஸீதாஸர் சுமார் கி. பி. 1574-ல் ராமசரித மானஸ் என்ற நூலை இயற்றியிருக்கிறார். இதுபோன்ற நூல்களின் மூலமாக இராம சரிதம்

பாரத தேசமெங்கும் பரவியுள்ளது. செல்வர்கள் வீட்டிலே இராமாயண காலக்ஷேபம் இன்றும் நடைபெற்று வருகிறது. இராம நாடகங்கள் நகரங்களிலும், ஊர்களிலும் விழாக் காலங்களில் நடைபெற்று வருகின்றன. லாகூரில் தஸராக் காலத்தில் ராம் லீலா நிகழ்கின்றது. அனுமானைத் தேசம் முழுவதிலும் மக்கள் வணங்கி வருகிறார்கள். அனுமான் கோயில்கள் பல இடங்களிலும் உள்ளன.

கதாநாயகனான இராமன் பிற்காலத்தே திருமாலின் அவதாரம் எனக் கருதப்பட்டு, பொதுமக்களின் வணக்கத்திற்குரிய தெய்வமாக அமைந்து விட்டான். இதனால் இராமாயணமும் வேதம் முதலியவற்றோடு ஒத்த பெருமையுடையதாகக் கொள்ளப்பட்டது. காஷ்மீர தேசத்து அரசனான இரண்டாம் தாமோதரனைக் குறித்து ஒரு கதை வழங்குகிறது. இவன் ஒரு சாபத்தால் சர்ப்பமாக மாறிவிட்டானாம். இராமாயணம் முழுவதையும் ஒரே நாளில் வாசித்துக் கேட்டால் சாப விமோசனம் அடைவான் என்று தெரிந்ததாம். அவ்வாறே செய்து சாபம் நீங்கினான் என்பது இக்கதை.

இவ்வாறாக, தேசப் பொதுமக்களிடையே பரவி அவர்களுக்கு மிக உகந்ததொரு காவியமாக ஆகிவிட்ட காரணத்தால், இந் நூல் ஆதியிலிருந்த அளவினின்றும் மிகப் பெரிய அளவினதாக நமக்கு இப்போது கிடைத்துள்ளது. அங்கங்கே இடைச் செருகல்களும், மாற்றுதல்களும் மிகுதியாக நேர்ந்துவிட்டவ. இப்போது 7 காண்டங்களாகவும் 24,000 சுலோகங்களாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

இராம சரிதத்தை விரித்துக் கூறவேண்டும் அவசியம் இல்லை. நமது நாட்டில் அனைவரும் அறிந்ததே. ஆனால், தமிழ்நாட்டிற் பெரும்பாலோர் கம்பன் அமைத்துள்ளபடியே இந்த இதிஹாஸக் கதையை அறிந்திருப்பர். இம் மகாகவி இச்சரிதத்தைப் பல அம்சங்களில் மாற்றி நூதன சிருஷ்டியாகச் செய்துள்ளான். இதனை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**உத்தர காண்டம்**

முதலாவதாக நாம் குறிக்கவேண்டுவது ஏழாவதாகிய உத்தர காண்டம் முழுமையும் பிற்பாடு சேர்க்கப்பட்டது என்பதே. அன்றியும், முதற்பகுதியாகிய பாலகாண்டம் முழுவதும் பிற்சேர்வு என்றே ஆராய்ச்சியாளர்கள் துணிந்துள்ளார்கள். இக் காண்டத்தில் பல முரண்பாடான விஷயங்கள் காணப் படுதலோடு, இரண்டு முதல் ஆறு வரையுள்ள காண்டங்களைக் காட்டிலும் மொழிநடையும், செய்யுள் நடையும் மிகத் தாழ்ந்த

தரத்தனவாகவுள்ளன. மேலும், முதற் காண்டத்தில் வரும் செய்திகளைப் பற்றிப் பிற்காண்டங்களில் யாதொரு குறிப்பும் காணப்படவில்லை. பிற்காண்டங்களில் காணப்படுவனவற்றிற்கு முரணான சில செய்திகளும் இக்காண்டத்தில் உள்ளன. உதாரணமாக, ஆரணிய காண்டத்தில் இராமன் சூர்ப்பனகையை நோக்கி 'இலட்சுமணன் மணமாகாதவன், அவனிடம் செல்லுக' எனக் கூறியதாக உள்ளது. ஆனால், பாலகாண்டத்தில் இராமனது திருமணத்தோடு, இலட்சுமணன் முதலானவர்களுக்கும் திருமணம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அன்றியும், பால காண்டமும் உத்தரகாண்டமும்தான் இராமன் திருமாலின் அவதாரம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. இடையிலுள்ள காண்டங்களில் இக்கருத்து ஒரு சில இடங்களில் காணப்படுகிறது. ஆனால், அவ்விடங்களெல்லாம் இடைச் செருகல்கள் என்பது திண்ணம்.

இராமன் வீர புருஷன் என்ற கருத்தே இக் காண்டங்களின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. கடைசியாக, பாலகாண்டம், உத்தர காண்டம் இரண்டிலுமே பிரதான கதைப்போக்கு அடிக்கடி இடையீடுற்று இடைப்பிறவரல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இராமாயணம் வெகு நீண்ட காலமாக, பல நூற்றாண்டுகளாக, குசன், லவன் என்பவர்களைப் போன்ற பாடகர்களால் பல இடங்களிலும் பாடப்பெற்று வந்திருக்க வேண்டும். இவர்கள் ஊர் ஊராகத் திரிந்தும் இச்சரிதப் பாடல்களைப் பாடியிருக்கலாம். தங்களுக்குத் தோன்றிய வேறுபாடுகளையெல்லாம் இவர்கள் இப் பாடல்களிடையே அமைத்து வந்தனர். சீதை, தசரதன் அல்லது கௌசல்யை முதலானவர்கள் வருந்தும் கட்டங்களில் மக்கள் பெரிதும் ஈடுபடுகின்றார்கள் என்று தெரிந்தால், உடனே இவர்கள் அக்கட்டங்களுக்கு இயையப் பல நூதனச் செய்யுட்களை இயற்றிச் சேர்த்துவிடுவார்கள். இங்ஙனம் பல.

**பின்னர் இயற்றப்பட்டிருக்கலாம்**

இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, பால காண்டமும், உத்தர காண்டமும் ஏனைக் காண்டங்களுக்கு வெகு காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமெனத் துணியலாம். இங்ஙனம் வின்டர் நீட்ஸ் துணிந்துள்ளனர்.

இராமாயண காலத்தின் பின்-எல்லைபற்றி இவர் ஒரு சில சான்றுகள் தந்துள்ளனர். கி.பி. 2-ம் நூற்றாண்டில் அசுவகோஷர் இராமாயணத்தின் காவிய நெறியைப் பின்பற்றித் தமது புத்த சரிதத்தை இயற்றியுள்ளார். இந்நூற்றாண்டிலேயே இராமாயண வாசிப்பு ஒன்று நிகழ்ந்ததாகக் குமாரலாதர் தமது 'கல்பனா

T 6271



மண்டிடிகா'வில் தெரிவிக்கிறார். கி. பி. 3-ம் நூற்றாண்டில் சீன மொழியில் தோன்றிய புத்தர் கதைகளில், இராம சரிதம் பௌத்த நெறிக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. சீன நூல்களால், வஸுபந்து என்ற பௌத்த தத்துவ ஞானியின் காலத்தில், கி. பி. 4-ம் நூற்றாண்டில், இந்தியாவில் பௌத்தர்களிடையே இராம சரிதம் பரக்க வழங்கியதாகத் தெரிகிறது. ஜைனத் துறவியாகிய விமலசூரி, பத்மசரிதம் என்ற பிராகிருத காவியத்தில் இராம சரிதத்தைத் தமது சமயத்திற்கேற்றபடி கி. பி. முதல் நூற்றாண்டில் அமைத்தனர். கி. பி. 6-ம் நூற்றாண்டில் கடலுக்கப்பாலுள்ள கம்போடியாவில் இராமாயணம் மிக்க பிரபலத்தை அடைந்திருந்தது. வின்டர் நீட்ஸ் கொண்ட பல முடிவுகளும் இங்கே கருதத்தக்கவை.

1. இராமாயணம் பிற்காலத்திலிருக்கும் நிலையில் கி. பி. 2ம் நூற்றாண்டின் இறுதியில் அமைந்ததாகலாம்.

2. மகா பாரதத்தின் உட்கருவாயுள்ள பழங்கதை ஆதி இராமாயணத்திற்கு முற்பட்டதாகலாம்.

3. வேதத்தில் இராமனைப் பற்றிய இதிஹாஸத்தின் சாயை போலும் காணப்படவில்லை. அதில் இராமனைப் பற்றிய சில கதைகளின் மூலங்கள் என்று கருதத்தக்கன சில உள்ளன.

4. பௌத்த நூலாகிய திரிபிடகத்தில் இராமாயணத்தைப் பற்றிய குறிப்பு யாதொன்றும் காணப்படவில்லை. ஆனால், இராமனைப் பற்றிய நாடோடிப் பாடல்களின் சாயைகள் சில திரிபிடகத்தில் காணப்படுகின்றன.

5. இராமாயணத்தில் பௌத்த சமயக் கருத்து யாதும் காணப்படவில்லை. ஆனால், இராமன் என்ற பாத்திர அமைப்பில் பௌத்த சமயத்திற்குரிய சில கருத்துக்களும் அடங்கியிருத்தல் கூடும்.

6. ஆதி இராமாயணம் வான்மீகியால் கி. மு. 3-ம் நூற்றாண்டில் பழங்காலத்துப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டிருக்கலாம்.

## புராணங்கள்

இனி, புராணங்களை நோக்குவோம். வேதம் வைதிக சமயத்திற்கு இருப்பதுபோல, தற்காலத்தில் இந்து சமயம் என வழங்கும் சமயத்திற்குப் புராணங்கள் அடிப்படையாயுள்ளவை. இந்தச் சமயம் திருமால், சிவன் என்ற கடவுளர்களின் வணக்கத்திற்கு என ஏற்பட்டது. எனவே, புராணங்கள் சமயத்தைக்

குறித்து எழுந்தனவாம். ஆனால், இதிஹாஸத்தோடு ஒருவாறு இவை தொடர்புடையனவாயும் உள்ளன. மகாபாரதத்தில் பெரும்பகுதி புராணத்தின் இயல்பை உட்கொண்டது. இங்ஙனமே, இராமாயணத்திலும் சில சில பகுதிகள் புராணம் போல அமைந்துள்ளன. கௌடில்யர் (1, 5) இதிஹாஸத்தின் இயல்பு கூறுமிடத்துப் புராணங்களையும் அடக்கினர். இதிஹாஸத்தின் உள்ளுறைப் பொருள்களில் ஒன்றாக, 'இதிவிருத்தம்' என இப்பகுதியைக் குறிப்பிடுகிறார். 'இதிவிருத்தம்' என்பது சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சி என்று பொருள்படும். புராணச் செய்திகளில் பல மிகப் பழமையானவை. அவற்றின் மூலம் ஆதி-வைதிக-இலக்கியங்களிலே அமைந்து கிடக்கிறது.

புராணம் என்பதற்குப் பழமையான வரலாறு என்பது பொருள். இதிஹாஸத்தையும் புராணத்தையும் சேர்த்து, இதிஹாஸ புராணம் என வழங்கி வந்தனர். ஆனால், முதன் முதலில் புராணங்கள் தனிப்பட்ட நூல்களைக் குறித்ததெனக் கொள்ள இயலாது. கர்ண பரம்பரையாக வழங்கிவந்த வரலாறு களையே குறித்தது. அதர்வ வேதத்தில் (XI, 17, 24) நான்கு வேதங்களும் புராணமும் என எண்ணிடப்பட்டுள்ளது. இங்கே, குறிப்பிட்ட ஒரு நூல்வகையை உணர்த்துவதாகலாம். ஆனால், சூத்திர இலக்கியங்களில்தான் புராணம் என்ற நூல் வகைகள் இருந்தன என்பது நன்றாகத் தெரியவருகிறது. உதாரணமாக, கௌதம தர்ம சூத்திரத்திலும் (XI, 19), ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்திலும் புராணங்கள் கூறப்பட்டுள்ளன. இந்தத் தர்ம சூத்திரங்கள் கி. மு. 4 அல்லது 5-ம் நூற்றாண்டுகளுக்கு உரியவை யாதலால், இப்போது வழங்கும் புராணங்களைப் போன்றவை அக்காலத்தில் இருந்தன என்று கொள்ளலாம். இத்தொன்மைக்குச் சான்றாக, கௌடில்ய அர்த்த சாஸ்திரத்தைச் சிலர் கூறுவர். அதுபொருந்துமாறில்லை.*

**பதினெண் புராணங்கள்**

புராணங்கள் பதினெட்டு எனக் கணக்கிடுவர். ஆனால், தொடக்கத்திலிருந்தே இப் பதினெட்டும் இருந்தன என்று கூறுதல் தகாது. விஷ்ணு புராணம் கூறுமாறு (III, 6) முதன் முதலில் நான்கு புராணங்களே இருந்தனவாகலாம். ஒரு சிலர்

---

* அர்த்த சாஸ்திரம் தீ நெறியில் செல்லும் அரச குமாரர்களுக்குப் புராணங்கள் மூலமாக அறிவு புகட்ட வேண்டுமென்று கூறுகிறது. அக்காலத்தில் பௌராணிகர்கள் இருந்தனர் என்றும் தெரிவிக்கிறது. ஆனால், கௌடில்ய அர்த்த சாஸ்திரம் கி. பி. 3 அல்லது 4-ம் நூற்றாண்டில் தோன்றியது. இதனை கி. மு. 4-ம் நூற்றாண்டில் புராணங்கள் இருந்தன என்பதற்குச் சான்றாகக் கூறுதல் தகாது. (Winternitz, Vol. I, p. 519, 3-ம் அடிக்குறிப்பு).

ஆரம்பத்தில் இருந்தது ஒரே புராணம் என்பர். இதுவும் உண்மையாகமாட்டாது என விண்டர்நீட்ஸ் துணிகிறார். புராணங்கள் பதினெட்டாவன :

மச்சம் கூர்மம் வராகம் வாமனம்
பற்பம் வைணவம் பாகவதம் சைவம்
இலிங்கம் பௌடிகம் நாரதம் காருடம்
பிரம கைவர்த்தம் மார்க்கண்டேயம் காந்தம்
பிரமாண்டம் ஆக்கிநேயம் பிரமம் என்றிவை
பாற்படு பதினெண் புராணமாகும். (திவாகரம், XII)

புராணங்களின் இயல்பு குறித்துப் புராணம் பஞ்ச லக்ஷணம் எனக் கூறுவர். இதனை,

ஸர்க்கஸ்ச ப்ரதிஸர்க்கஸ்ச வம்சோ மன்வந்தராணிச
வம்ஸாநு சரிதம்சைவ புராணம் பஞ்ச லக்ஷணம்

என்ற அமரத்தில் காண்க. ஸர்க்கம் என்பது சிருஷ்டி. பிரதி ஸர்க்கம் என்பது ஊழியினிறுதியில் உலகம் அழிந்து மீளவும் சிருஷ்டிக்கப்படுதல். வம்சம் என்பது தெய்வங்கள், ரிஷிகள் இவர்களது வம்சங்கள். மன்வந்தராணி ஒவ்வோர் ஊழியிலும் மக்களுக்கு ஆதிபுருஷனாக விளங்கிய ஒவ்வொரு மனுவினுடைய காலம். வம்சாநு சரிதம் என்பது சூரிய வமிசம், சந்திர வமிசம் முதலியவற்றில் தோன்றிய வமிசங்கள். இவைகளைக் குறித்த வரலாறுகள் கூறுவனவே புராணங்கள். இவ் இயல்புகள் எல்லாப் புராணங்களிலும் காணப்படுவனவல்ல. ஒரு சிலவற்றில் இவற்றினும் மிகையான சில விஷயங்களும் அடங்கியுள்ளன. வேறு சிலவற்றில் இவைகள் காணப்படவேயில்லை. பல புராணங்களில், வருங்கால நிகழ்ச்சியை முற்படக்கூறும் முறையில், கலியுகத்தில் ஆண்டுவந்த அரசர்களின் வம்சாவளி கொடுக்கப்படுகிறது. இவற்றில் சிசுநாகர்கள், நந்தர்கள், மௌரியர்கள், சுங்கர்கள், ஆந்திரர்கள், குப்தர்கள் என்றவர்களின் வமிசங்கள் கூறப் படுகின்றன. சிசுநாக வமிசத்தில் மகாவீரருக்கும் புத்தருக்கும் சமகாலத்தவர்களான பிம்பிசாரன், அஜாத சத்துரு என்ற இரு அரசர்கள் கூறப்படுகின்றனர்.

கி.மு. 322-ல் பட்டமெய்திய மௌரிய சந்திரகுப்தனோடு தான் தெளிவான சரித்திரகாலம் தொடங்குகிறது. இதனால், இப்புராணங்களிற் காணும் வமிசாவளிகள் அதிகக் கவனத்துடன் ஆராய்ந்து கொள்ளப்பட வேண்டும். எனினும் மௌரிய வம்சம் (கி. மு. 326-185) பற்றிய அளவில் விஷ்ணு புராணம் கொள்ளத் தக்கது என்றும், ஆந்திர வமிசம் (முடிவு கி. பி. 225) பற்றிய அளவில் மத்ஸிய புராணம் கொள்ளத்தக்கது என்றும், குப்த வமிசத்தில் சந்திரகுப்தனது (கி. பி. 320-330) சரித்திரம் பற்றிய

அளவில் வாயுபுராணம் கொள்ளத்தக்கது என்றும் V. A. ஸ்மித் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இந்த வமிசாவளிகளின் இறுதியில், ஆபீரர்கள், கர்த்தபர்கள், சாகர்கள், யவனர்கள், துஷாரர்கள், ஹூணர்கள் முதலிய இழிசனர்களும், மிலேச்சர்களும் அரசு புரிந்து வருவார்கள் என்று சொல்லப்படுகிறது. பிற்பட்டு, கலியுக தர்மம் வர்ணிக்கப் படுகிறது. இங்குக் கூறியதற்கு ஏற்ப, கி. பி. 465-ல் வட பஞ்சாப்பில் மிலேச்சர்களுடைய படையெடுப்பு சுங்-யுன் என்ற சீன யாத்திரிகனால் குறிக்கப்படுகிறது. இங்ஙனமே, கி.பி. 500-ல் ஹூணர்களாகிய தோரமாணன் ஆட்சியைப்பற்றியும், கி. பி. 515-ல் மிகிரகுலனுடைய ஆட்சியைப்பற்றியும் கல்ஹணர் விரிவாகக் கூறுகிறார். இந்த ஹூணர்கள், சேனை வெள்ளத் தோடு, யமனைப்போல இப் பூவுலகில் பரந்து வந்தனர் என்கிறார். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து ஆதிபுராணங்கள் கி. பி. 7-ம் நூற்றாண்டிற்கும் முற்பட்டுத் தோன்றியிருத்தல் வேண்டுமெனக் கொள்ளலாம். இக்காலத்திற்குப் பின்வந்த ஹர்ஷன் முதலிய பேரரசர்களைப்பற்றி இவற்றில் யாதும் காணப்படாமை இங்கு நோக்கத்தக்கது.

### காலம் தெரியக்கூடியவை சில

ஒரு சில புராணங்களின் காலம் உறுதியாகத் தெரியக் கூடியதாகவும் உள்ளது. பத்மபுராணம் ரவிஷேணன் என்பவரால் கி. பி. 660-ல் இயற்றப்பட்டது. பாணகவி கி. பி. 625-ல் தம்முடைய ஹர்ஷ சரிதத்தில் சுதிருஷ்டி என்பவர் வாயுபுராணம் வாசிக்கத் தாம் கேட்டமையைத் தெரிவிக்கிறார். குமாரிலபட்டர் கி. பி. 750-ல் தர்மத்தைத் தெரிந்துகொள்வதற்குப் புராணங்கள் உதவுவன என்று கூறுகிறார். ஆதி சங்கரரும் (கி. பி. 9-ம் நூற்றாண்டு), இராமாநுஜரும் (கி. பி. 11-ம் நூற்றாண்டு) புராணங்களைப் பழையன என்று கூறித் தங்கள் கொள்கை களுக்கு ஆதாரமாக அவற்றினின்றும் சுலோகங்களைத் தந்துள் ளார்கள். அராபிய யாத்திரிகரான ஆல்பெரூனி (கி. பி. 1030) புராணங்களை நன்கு தெரிந்து, பதினெண் புராணங்களையும் வரிசையாகக் குறிப்பிட்டு, ஆதித்திய, வாயு, மத்ஸ்ய, விஷ்ணு புராணங்களிலிருந்து சுலோகங்களைக் கொடுத்துள்ளார்; பிற் பட்ட புராணமாகிய விஷ்ணு தர்மோத்தரத்தை மிக நுட்பமாக அவர் கற்றிருப்பதும் விளங்குகிறது.

நம்மவர்கள் புராணங்கள் மிகப் பழையன என்றே கொண்டுள் ளார்கள். மகாபாரதத்தை இயற்றிய வேத வியாஸரே கலியுக ஆரம்பத்தில் பதினெண் புராணங்களையும் இயற்றினர் என்பர்.

அவர் தமது சிஷ்யனான சூத லோமஹர்ஷணனுக்குப் புராணங்களை உபதேசித்தனர். இவ்வாறு ரிஷியொருவர் கூறியவை எனக் கொண்ட போதிலும், வேதங்களோடு ஒத்த பெருமையை இப் புராணங்கள் பெற்றுவிடவில்லை.

வேதங்களை ஓதத்தகாத பெண்டிர்களுக்கும் சூத்திரர்களுக்கும் பயன்படும்படியாகவே இவை இயற்றப்பட்டன என்று கூறுவர். ஆகவே, புராணம் பிரமாண நூல்களின் வரிசையில் இரண்டாந்தரத்ததாகவே கொள்ளப்படுவது. சூதர்கள் தாம் ஆதியில் புராண இலக்கியங்களை இயற்றியவர்கள். இவர்கள் ஒருசார் புலவர் வகையினராவர். இவர்களே மகாபாரதத்தையும் இயற்றிப் பரப்பிவந்தனர். இவர்கள் அந்தண வகுப்பினரல்லர்; க்ஷத்திரியப் பெண்ணிடம் வைசியனுக்குப் பிறந்தவர்கள் என்பர்; வேதங்களை ஓதுதற்கு அருகரல்லர். இவர்களுக்குப் பின் கற்றறிவு மிக்கில்லாத அந்தணர்கள் புராணங்களைக் கையாண்டு வந்தனர். இவ் அந்தணர்கள் தத்தம் சமயத்திற்குரிய தெய்வங்களின் மேம்பாடு கூறும் சுலோகங்களை இயற்றி இவற்றில் சேர்க்கலாயினர். பிற்பாடு, கோவில்களிலும் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் இவைகள் பிரசங்கம் பண்ணப்பட்டு வந்தன.

சரித்திரக்காரனுக்குப் புராணங்கள் அரச வமிச வரலாறுகளைக் குறிக்கும் அளவில்தான் பயன்படுவன. இலக்கிய நெறியில், இவைகள் நல்ல நூல்கள் என்று கொள்ளத் தக்கனவல்ல. மொழி வழுவும், செய்யுள் வழுவும், இலக்கணம் பற்றிய வழுவும் இவற்றில் மிகுதியாகவுள்ளன. உயர்வு நவிற்சியே இவற்றில் பெரும்பாலும் காணப்படுகிறது. உதாரணமாக, ஊர்வசி புரூரவனோடு நான்கு ஆண்டுகள் தங்கியதாக ரிக்வேதம் கூறுகிறது; விஷ்ணு புராணத்தில் 61,000-ம் ஆண்டுகள் இருவரும் இன்பத்தில் திளைத்து மகிழ்ந்தனர் என்று கூறப்படுகிறது.

ஆதி புராணங்களில் ஏழு நரகங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், பாகவத புராணத்தில் இந் நரகங்கள் ஆயிரக்கணக்கில் எண்ணப்படுகின்றன. கருடபுராணத்தில் 84 லக்ஷம் நரகங்கள் உண்டெனக் கதைக்கப்படுகிறது. பொதுப்படக் கூறுமிடத்து, இப் புராணங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு பிற்பட்டுத் தோன்றியனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு உயர்வு நவிற்சியும் அதிகமாகக் காணப்படுகிறது. எனினும், இவற்றினிடையே மிகப் பழங்காலத்து அரசர்களது வரலாறுகள் சிலவும், சில வமிசாவளிகளும், சில நல்ல பாடல்களும் உள்ளன. புராணங்களை இயற்றியவர்கள் நல்ல செய்யுட்களையும் விஷயங்களையும் தள்ளிவிடாமற் போனது ஒரு பாக்கியமே.

பதினெண் புராணங்கள் இன்னவை என்று மேலே குறிப்பிட்டோம். இவைகள் வடமொழிப் புராணங்களிலே பல்வேறு வரிசைகளில் தரப்பட்டுள்ளன. பிரம புராணம் சிரம் என்றும், பத்ம புராணம் இருதயம் என்றும் இங்ஙனமாகப் பல புராணங்களும் திருமாலின் உறுப்புக்கள் எனக் கூறப்படுகின்றன. வேறொரு வகையான பிரிவும் பத்ம புராணத்தில் காணப்படுகிறது. இப் பிரிவு வைஷ்ணவ சமயத்தினர் கொண்டுள்ளதொன்று என நாம் கருதலாம்.

விஷ்ணு, நாரத, பாகவத, கருட, பத்ம, வராக புராணங்கள் சாத்துவிக வகையின; பிரமாண்டம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம், பவிஷ்யம், வாமனம், பிரமம் என்பன ராஜஸ வகையின; மத்ஸியம், கூர்மம், இலிங்கம், சைவம், ஸ்காந்தம், அக்கினி என்பன தாமஸ வகையின. இம் மூவகைகளும் முறையே விஷ்ணு, பிரமா, சிவன் என்பவர்களைப்பற்றியனவாம். சாத்துவிக புராணங்கள் மோக்ஷம் கொடுக்கவல்லன என்றும், ராஜஸ புராணங்கள் சொர்க்கம் அளிக்கவல்லன என்றும், தாமஸ புராணங்கள் நரகத்திலுய்க்கும் என்றும் இப் பத்ம புராணம் கூறுகிறது. ஆறுமுக நாவலர் சிவ புராணங்கள் பத்து எனக் கணக்கிட்டு, அவை சாத்துவிக புராணம் என்று கூறியுள்ளார். சங்கர ஸம்ஹிதையைச் சார்ந்த சிவ ரகஸிய கண்டத்தில் இவ்வாறு உள்ளதாம்.

இப் புராணங்களை மகாபுராணங்கள் என்பர். திவாகர ஏட்டுப் பிரதியொன்றில் ஆதி பதினெண் புராணங்கள் என இவை குறிக்கப்படுகின்றன. இவையேயன்றி, உப புராணங்களும் உள எனச் சில புராணங்கள் தாமே நமக்கு அறிவிக்கின்றன. இந்த உப புராணங்களும் பதினெட்டு என்று சில புராணங்கள் எண்ணிடுகின்றன. அவையாவன :—

நாரசிங்கம் சனற்குமாரம் அனந்தம் கௌமாரம்
நாரதீயம் சிவதன்மம் துர்வாசம் நந்தீசம்
காமியம் ஔசநஸம் காளிகம் மானவம்
வாருணம் மாரீசம் மயேச்சுரம் பராசரம்
பார்க்கவம் பிரமாண்டம் எனப்பதி னெட்டும்
ஆதி உப புராணம் ஆகும் என்ப

*(திவா. XII, 163)

மத்ஸிய புராணத்தில் நான்கு உப புராணங்களே கூறப்பட்டுள்ளன. ஆதி புராணங்களை முறையே நோக்குவோம்.

* திவாகரம் அச்சுப் பிரதியில் இப் புராணப் பெயர்களை அகராதி முறையில் அடுக்கி மூல சூத்திரத்தைப் பதிப்பித்தவர் மாற்றிவிட்டனர்.

## 1. பிரம புராணம்

வடமொழியிலுள்ள புராண வரிசைகளில் பிரம புராணம் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது. இதனை ஆதி புராணம் எனவும் கூறுவர். நூலின் தொடக்கத்தில் ரிஷிகள் நைமிஷ வனத்தில் கூடியிருந்தமையும், அங்கே லோமஹர்ஷணன் என்ற சூதர் வந்தமையும், அவரை உலகத்தோற்றம் முதலிய வரலாறு களைக் கூறும்படி கேட்டமையும், அவ்வாறே அவர் கூறத் தொடங்கியமையும் சொல்லப்படுகின்றன. பின்னர், எல்லாப் புராணங்களுக்கும் பொதுவாகவுள்ள கதைகள், உலகத்தோற்றம், மனுவின் தோற்றம் முதலியன தரப்படுகின்றன. இப்புராணத்தின் பெரும் பகுதி புண்ணிய க்ஷேத்திரங்களின் மகாத்மியமாகவுள்ளது. தற்காலத்தில் ஒரிஸா என வழங்கும் உத்கல தேசத்திலுள்ள கோயில்களும் க்ஷேத்திரங்களும் விரிவாகச் சொல்லப்படுகின்றன. இத் தேசத்தில் சூரிய வணக்கம் சிறப்பாகக் கொள்ளப் பட்டுள்ளமையால் சூரியனைப் பற்றிய வரலாறும், உமாதேவியின் பிறப்பு, அவள் சிவபெருமானை மணந்த வரலாறு முதலியனவும் காணப்படுகின்றன. அப்ஸரஸ்களோடு பன்னூறாயிரம் ஆண்டுகள் இன்பத்தில் திளைத்துப் பின் ஒரு நாளில் ஒரு சில நாழிகையே கழிந்தது எனக் கருதிய கண்டுமுனிவரின் சரித்திரம் இதில் உள்ளது. பின்னர், கௌதமி மகாத்மியம் முதலியனவும் இதிற் காணப்படுகின்றன. இப் புராணம் பழங்காலத்தது எனக் கருதுதற்கு இடமில்லை. உத்கல தேசத்தில் கி. பி. 6-ம் நூற் றாண்டில்தான் சைவ சமயம் வழங்கலாயிற்று. இப்புராணத்தில் கி. பி. 1241-ல் கட்டப்பெற்ற கோனார்க்கா ஆலயம் குறிக்கப் பட்டுள்ளது. ஆகவே, இப் புராணத்தின் பிற்பகுதி கி. பி. 13-ம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டது எனக் கொள்ளலாம். பிரம புராணத்தின் கிலமாக சௌர புராணம் கொள்ளப்பட்டுள்ளது. இதனை கி. பி. 13-ம் நூற்றாண்டில் ஹேமாத்திரி எடுத்தாளு கின்றார். இந்த சௌர புராணம் உப புராணங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. இப் புராணத்தால் லிங்க வணக்கத்தின் வரலாறு உணரலாம்.

## 2. பத்ம புராணம்

இது மிக விரிந்த நூல். ஆதி, பூமி, பிரம, பாதாள, சிருஷ்டி, உத்தர என ஆறு காண்டங்களாக இது பகுக்கப்பட்டுள்ளது. சிருஷ்டி காண்டத்தில் தேவாசுர யுத்தம் கூறுவதில் சமயங்களின் வரலாற்றை விளக்கும் ஒரு பகுதியும் அமைந்திருக்கிறது.

அசுரர்களைப் பிருகஸ்பதி சுக்கிர வடிவமெடுத்து வேத நிந்தனைசெய்யும்படியாகத் தூண்டினர். சிவனும் விஷ்ணுவும் மோக்ஷம் தர வல்லவர்களல்லர் எனவும் உபதேசித்தனர்

'பெண் போகத்தினாலும் மண்ணையும் சாம்பலையும் அணிவதனாலும் எவ்வாறு மோக்ஷமுண்டாகும்? பிருகஸ்பதியின் மனைவி தாராவை ஸோமன் கற்பழித்தனன். அவளிடம் பிறந்த புதனும் அவளைக் கற்பழித்துவிட்டான். இந்திரன் கௌதம ரிஷியின் பத்தினியாகிய அகலிகையோடு விபசாரம் செய்தான். இங்ஙனமாக, வைதிக நெறி நரகத்திற்குத்தான் செலுத்தவல்லதாயுள்ளது' என்றனர். இவ்வாறு நிந்தனை செய்ததோடு அமையாது, இன்னும் எவ்வாறு அசுரர்களை அழிக்கலாம் எனவும் பிருகஸ்பதி ஆலோசனை செய்தார். விஷ்ணு இவருக்கு உதவியாக வந்து திகம்பரராகிய ஒரு ஜைன முனிவரையும், செவ்வாடை போர்த்த ஒரு பௌத்த முனிவரையும் மாயையால் தோற்றுவித்து ஜைன, பௌத்த மதங்களை உண்டுபண்ணிவிட்டனர். இவ்வாறு வைதிக ஒழுக்கத்தைக் கைவிட்டு இந்த அசுரர்கள் இந்திரனது ஆட்சியில் அமைந்துவிட்டனர்.

பூமி காண்டத்தில் பிரகலாதன் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. அன்றியும் சுகலா என்பவளின் வரலாறும் காணப்படுகிறது. இவளை இவளுடைய கணவன் வறுமையிலும் துன்பத்திலும் ஆழ்த்திவிட்டுத் தீர்த்தயாத்திரை போகிறான். காமனும் இந்திரனும் இவளைக் கற்பழிக்க முயலுகின்றனர். ஆனால், இவள் கற்பில் உறுதி பூண்டவளாயிருந்தாள். கணவன் திரும்பி வந்ததும், தனது பத்தினியினுடைய கற்பு மேம்பாட்டின் காரணமாகத் தெய்வங்கள் போற்றும் பெருமை எய்துகிறான்.

சொர்க்க காண்டத்தில் பரதன் வரலாறும், துஷ்யந்த சகுந்தலை வரலாறும் உள்ளன. இந்த வரலாற்றைப் பின்பற்றியே காளிதாஸன் தனது ஒப்புயர்வற்ற சகுந்தலை நாடகத்தை இயற்றியுள்ளான் என்பர் வின்டர்நீட்ஸ்.

பாதாள காண்டத்தில் இராவணன் வரலாறும் இராமனது சரிதமும் உணர்த்தப்படுகின்றன. இது காளிதாஸனது ரகு வமிசத்தை அடியொற்றிச் செல்லுகிறது. இக் காண்டத்தில் ராதையின் வரலாறும், வைஷ்ணவ சமயத்திற்குரிய சாளக்கிராமம் முதலியவற்றின் மகிமையும் காணலாம். இவை மிகப் பிற்காலத்தனவாதல் வேண்டும்.

உத்தர காண்டத்தில் பிரம, விஷ்ணு, ருத்திரர்களில் எவர் முதல்வர் என்பதுபற்றி ரிஷிகள் விவாதம் நிகழ்த்தியதும், உண்மை முதல்வரைத் தெரிந்து வருதற்குப் பிருகு முனிவர் திரிமூர்த்திகளிடம் சென்ற வரலாறும் அடங்கியுள்ளன. இம் முனிவர் பிரமனிடத்தும், சிவனிடத்தும் சென்று வணங்காது நிற்க,

இவ்விருவரும் பெருங்கோபம் கொண்டனராம். வைகுண்டத்தில் திருமகளின் மடிமீது தலை வைத்துத் துயின்றுகொண்டிருந்த திருமாலிடஞ் சென்று அவர் மார்பில் உதைத்தனராம். திருமால் கோபியாது முனிவரை வணங்கி உதைத்த பாதம் நொந் திருக்குமேயென்று வருந்தினராம். இதனால் அக்கடவுளின் உண்மையான பெருமையையுணர்ந்து அவரே முதல்வரெனத் துணிந்தனராம். முடிவில் கிரியாயோகசாரம் என்ற ஒரு பகுதி உள்ளது.

### 3. விஷ்ணு புராணம்

இது வைஷ்ணவர்களுக்கு ஒரு முக்கியமான புராணம். இராமாநுஜர் இதனை ஒரு பிரமாண நூலாகக் காட்டியுள்ளார். விஷ்ணுவின் பரத்துவமும், பிரமாவும் சிவனும் விஷ்ணுவே ஆவார் என்பதும் வற்புறுத்தப்படுகின்றன. இதில் விஷ்ணுவின் பிரீதிக்காகச் செய்தற்குரிய யாகம், கிரியைகள் முதலியன கூறப்படவில்லை. வைஷ்ணவ ஆலயங்களும் க்ஷேத்திரங்களும்கூட இதில் தரப்படவில்லை. புராணம் பஞ்சலக்ஷணம் என்று கூறுகிற இலக்கணத்திற்கு இப் புராணம் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. மிகப் பழைய புராணங்களுள் இது ஒன்றாகும். பார்ஜிட்டர் (F. E. Pargiter) கருத்தின்படி இது கி.பி. 5-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதல்ல.

ஆறுகாண்டங்கள் இதில் உள்ளன. பராசரர்க்கும் அவர் மாணவன் மைத்திரேயனுக்கும் நிகழ்ந்த சம்பாஷணையோடு புராணம் தொடங்குகிறது. உலகத்தின் தோற்றம், அதன் இயல்பு முதலியவற்றைக் குறித்து மாணவன் தனது குருவினிடம் வினவுகிறான். பராசரரும் தமது பாட்டனாராகிய வசிஷ்டரிட மிருந்து தாம் கேட்டறிந்தபடி சொல்லத் தொடங்குகிறார். எல்லாப் புராணங்களையும் வியாஸர் செய்தார் என்று கூறுவதற்கு மாறாகப் பராசரரே இப்புராணத்தின் ஆசிரியர் என்று குறிக்கப்படுகிறார். விஷ்ணுவிற்கு வணக்கம் செய்து விட்டு, உலகத் தோற்றத்தை மற்றைப் புராணங்களில் கண்ட படியே இவர் விவரிக்கிறார். சாங்கியத்தைச் சார்ந்த தத்துவக் கொள்கைகளைப் பலவகைப் புராணக் கருத்துக்களோடு சேர்த்து உரைக்கின்றார்.

தெய்வங்கள், அசுரர்கள், வீர புருஷர்கள், மனுக்கள் முதலிய வர்களுடைய தோற்றத்தைக் கூறும் பகுதியின் பின்பு, பல வகையான கதைகளும் புராதன வரலாறுகளும் காணப்படு கின்றன. சமுத்திர மதனம், அதில் ஸ்ரீ என்னும் திருமகளின் தோற்றம், பின்பு, இந்திரன் அவளைப் புகழ்ந்து வணங்கும் அழகிய பாடல் : இவை முறையே உள்ளன. திருமகள் விஷ்ணு

வின் தேவியானதால் அவ் விஷ்ணுவின் பெருமையும் இதில் புலப்படுகிறது. அவரை வணங்குவதால் உண்டாகும் பயன் துருவசரித்திரத்தால் விளங்குகிறது. விஷ்ணு பக்தியை மிகச் சிறப்பாக எடுத்துக்கூறும் பகுதி பிரகலாத சரித்திரமேயாகும். தமிழ் நூல்களுள் முதன் முதலாகப் பரிபாடலில்தான் (4, 10-21) இச் சரித்திரம் வந்துள்ளது.

இரண்டாங் காண்டத்தில் மிக விநோதமான உலக விவரணம் முதலில் தரப்படுகிறது. முதலில் ஏழு தீவுகள், பின் ஏழு சமுத்திரங்கள், சமுத்திரங்கள் மத்தியில் ஜம்புத் தீவு; தேவர்களுக் கிருப்பிடமாகிய பொன்மயமான மேருமலை இங்கேதான் உள்ளதாம். ஜம்புத் தீவில் பாரத வர்ஷம் உள்ளது. இதன் நிலப் பகுதிகள், மலைகள், ஆறுகள் முதலியன குறிக்கப்படுகின்றன. இதன்பின், பாதாள உலகம்; அங்கே நாகர்கள் வசிக்கின்றார்கள். இதற்கும் கீழாக நரகங்கள். பின்னர் விண்ணுலகம், சூரியனது தேர், அவனது குதிரைகள், சூரியகதி, ஜோதிஷப் பொருள்கள். சூரியன் மழை பெய்வித்து உயிர்களைக் காப்பாற்றுகிறான். இதற்குப் பின் சந்திரன், அவனது தேர், குதிரைகள், கதி; சூரியனுக்கும் மற்றக் கோள்களுக்கும் சந்திரனுக்குமுரிய தொடர்புகள். முடிவில் விஷ்ணுதான் இவ்வுலகம் என்று துணிந்து, அவன் ஒருவனே உண்மைப் பொருள் என்று தெளிவிக்கப் படுகிறது.

பாரத வர்ஷத்தைக் குறிக்குமிடத்திலே ஜட பரதனுடைய சரித்திரம் வருகிறது. இது எல்லாம் ஒன்று என்று கூறும் தத்துவக் கொள்கைக்கு ஒரு முன்னுரையாகவே அமைந்துள்ளது. இதனை வாசிக்கும்பொழுது உபநிஷதக் கருத்துக்கள் நினைவுக்கு வருகின்றன.

> பரதன் என்னும் அரசன் ஒரு விஷ்ணு பக்தன். ஒரு நாள் ஸ்நானம் செய்வதற்கு நதிக்குச் சென்றான். அப்போது காட்டிலிருந்து, கர்ப்பமுற்ற ஒரு பெண்மான் நீர் குடிக்க வந்தது. அதே சமயத்தில் மிக அருகாக ஒரு சிங்கத்தின் கர்ஜனையும் கேட்டது. மான் பயந்து துள்ளித் தாவி ஓடிற்று. ஆனால், இவ்வாறு தாவுகையில் அதன் கர்ப்பத்தி லிருந்து மான் கன்று பிறந்தது; மான் இறந்து விட்டது. மான் கன்றை எடுத்துவந்து, தனது மாளிகைக்குக் கொணர்ந்து அதனை அன்போடு அரசன் வளர்த்து வந்தான். எப்போதும் அக்கன்றின் நினைவாகவே இருந்தான். கடைசி யாக அதனை நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே மரணமுற்றான். பின்னர், முற்பிறப்பின் உணர்ச்சியோடு ஒரு மானாகப் பிறந்தான். இப் பிறப்பிலும் அவன் தனது

பக்தியை மறந்துவிடாது விஷ்ணுவைப் பூசித்து வந்தான். அடுத்த பிறப்பில் பக்தி நிரம்பிய ஓர் அந்தணனுக்குப் புத்திரனானான். எல்லாம் ஒன்று என்னும் உயர்ந்த தத்துவ ஞானத்தை அவன் அடைந்துவிட்ட போதிலும், வேதம் ஓதுதல் முதலிய அந்தணர்க்குரிய கருமங்களை அவன் மேற்கொள்ளவில்லை. முன்பின் தொடர்ச்சியில்லாதபடி இலக்கணப் பிழைகள் நிரம்பி அவனுடைய பேச்சுக்கள் இருந்தன. அவனது உடை கந்தை தான்; மேலெல்லாம் அழுக்குப்படிந்திருந்தது. ஒரு முழு மூடனைப்போல அவன் ஒழுகிவந்தான். எல்லாரும் அவனை 'ஜட பரதன்' என நிந்தித்தார்கள். அவன் அடிமையாளாக வேலை செய்து உயிர் வாழ்ந்து வந்தான். ஒரு முறை சவ்வீர அரசனுடைய சேவகனால் அரசனது பல்லக்குச் சுமக்கும் போகியாக நியமிக்கப்பட்டான். அரசனுக்கும் ஜடபரதனுக்கும் ஒரு சம்பாஷணை நிகழ்ந்தது. அதில் பரதனுடைய ஞானத்தின் பெருமை வெளியாயிற்று. அரசனுக்கு எல்லாம் ஒன்று என்னும் பெரியதோர் தத்துவஞானத்தை இப் பரதன் உபதேசித்தான்.

புராணத்தின் மூன்றாங் காண்டத்திலே, மனுக்களின் வரலாறும் மன்வந்தரங்களும் தொடக்கத்தில் உள்ளன. பின், நான்கு வேதங்கள், அவற்றை வியாஸரும் அவருடைய மாணாக்கரும் பகுத்தது, வேதத்திற்குரிய சாகைகளின் வரலாறு: இவைகள் தொடர்ந்து வருகின்றன. பின்னர், பதினெண் புராணங்களும், சாஸ்திரங்களும் கொடுக்கப்படுகின்றன.

விஷ்ணு பக்தனாயிருந்து எவ்வாறு முத்தி பெறுவது என்ற கேள்வியானது எழுகிறது. யமனுக்கும் யமகிங்கரன் ஒருவனுக்கும் நிகழ்ந்த ஓர் அழகிய சம்பாஷணை மேற் குறித்த கேள்விக்கு விடையாகத் தரப்படுகிறது. தூய உள்ளத்தனாயும், நல்லொழுக்க முடையவனாயும் தனது சித்தத்தைத் திருமாலின்மேல் வைத்த வனாயும் உள்ளவன்தான் உண்மையான விஷ்ணு பக்தன் என்று துணியப்படுகிறது. அவனை யமபாசம் அணுகமாட்டாது. இதற்குப்பின் வர்ணாச்சிரமங்கள் அவை ஒவ்வொன்றிற்குமுரிய கடமைகள், ஜன்மக் கிரியைகள், திருமணக் கிரியைகள், நித்திய அனுஷ்டானங்கள், வேள்விகள், அதிதி பூஜை, உண்ணுங்காலத்து அனுஸரிக்க வேண்டும் நியமங்கள் முதலியவை விவரிக்கப்படு கின்றன. பிதிரர்களுக்குச் செய்யவேண்டிய சிராத்தங்களைக் குறித்து மிக விரிவாகச் சொல்லப்படுகிறது.

இக் காண்டத்தின் இறுதி இரண்டு அத்தியாயங்களில் வேத பாஹ்யமான புறச் சமயங்களின் வரலாறுகள் உள்ளன; திகம்பர

ஜைனர்கள், செவ்வாடையுடுத்தும் பௌத்தர்கள் இவர்களைப் பற்றியும் அறிகின்றோம். திகம்பர ஜைனர்கள் முதலியவர்களோடு தொடர்பு கொள்ளுதல் மிகப்பெரிய பாவ காரியமாகும். இது சந்தநு என்பவனுடைய சரித்திரத்தால் விளக்கப்படுகிறது. இவன் சிறந்த விஷ்ணு பக்தனாக இருந்தும், ஒரு முறை மரியாதையை உத்தேசித்து ஒரு புறச் சமயியோடு சில வார்த்தைகள் பேசிவிட்டான். இந்தப் பெரிய பாவத்திற்காக அவன் நாய், நரி, ஓநாய், கழுகு, காக்கை, மயில் முதலியவைகளாகப் பிறந்து, முடிவில் இவனுடைய பத்தினியாகிய சைப்பியா என்பவளது கற்பினாலும் பக்தியினாலும் மீண்டும் அரசனாக இந்த உலகத்தில் பிறக்கிறான்.

விஷ்ணு புராணத்தின் நாலாங்காண்டம் சந்திர, சூரிய வமிசங்களிற் பிறந்த அரச பரம்பரையின் வமிசாவளியைத் தெரிவிக்கிறது. இவ் அரசர்களிற் பெரும்பாலோர் உண்மையில் இருந்தவர்கள் அல்லர். ஒரு சிலர் சரித்திர புருஷர்களாயிருக்கலாம். இவர்களைப் பற்றிய வரலாறுகளையும் இடையிடையே கூறி அரசர்களைக் குறித்த இவ் வமிசாவளி முடிகிறது. இவ் வரலாறுகளிலெல்லாம் அற்புத நிகழ்ச்சிகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. தக்ஷன் பிரமாவின் வலது கட்டை விரலிலிருந்து தோன்றுகிறான். மனுவின் புத்திரியாகிய இளா ஓர் ஆண் மகனாக மாறிவிடுகிறாள். மனுவின் தும்மலிலிருந்து இக்ஷுவாகு பிறக்கிறான். ரைவதனும் அவனுடைய புத்திரி ரேவதியும் சொர்க்கம் செல்லுகிறார்கள் : எதற்காக? அங்கே பிரமாவினால் ரேவதிக்குக் குறிக்கப்பட்ட கணவனை அடைவதற்காகவே. யுவநாஸ்வன் என்ற அரசன் கர்ப்பந்தரித்து ஒரு மகனைப் பெற்றெடுக்கிறான். அம் மகனுக்கு இந்திரன் இறவாமையைத் தரும் அமுத மயமான பாலைச் சுரந்து ஊட்டுகிறான். ஊட்டிய விதமும் விநோதமானது. குழந்தை இந்திரன் வாயில் கைவிரலை வைத்து, பின் அவ்விரலைத் தன் வாயிலிட்டுச் சுவைத்தானாம். 'என்னால் இவன் பாலூட்டப் படுவான்' என்று இந்திரன் கூறியதனால் 'மாந்தாத்ரு' என்று இக் குழந்தைக்குப் பெயர் வந்ததாம்.

இந்தக் குழந்தை பிற்பாடு ஆற்றலிற் சிறந்த ஒரு பேரரசனாக விளங்குகிறான். அவனுக்கு மூன்று புத்திரர்களும் 50 புத்திரிகளும் பிறந்தனர். இவன் எப்படி ஒரு மருகனை அடைந்தான் என்பது நகைக்குறிப்புத் தோன்றச் சொல்லப்படுகிறது. சௌபரி என்ற ஒரு துறவி நீரில் நின்று பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது மத்ஸிய ராஜன் தன்னுடைய குழந்தைகளோடு விளையாடி அனுபவித்துக் கொண்டிருப்பது இவர் கண்ணில் படுகிறது. உடனே இவருக்குத்

தாமும் தந்தையாகி இவ்வாறு மகிழவேண்டும் என்ற உணர்ச்சி தோன்றுகிறது.

இக் காண்டத்தில் இதிஹாஸங்களிற் காணும் பல புராதனக் கதைகளும் காணப்படுகின்றன. உதாரணமாக, புரூரவன், ஊர்வசி, யயாதி முதலியவர்களுடைய கதைகளைக் கூறலாம். இராமனது வரலாறும் சுருக்கமாகக் கூறப்படுகிறது. பாண்டவர்கள், கிருஷ்ணன் முதலியோர்களது பிறப்பு வரலாறும், பாரதக் கதையும் மிகமிகச் சுருக்கமாகத் தரப்படுகின்றன. இக் காண்டத்தின் இறுதிப் பகுதியில் மகத தேசத்தை ஆளப்போகும் சைசு நாகர்கள், நந்தர்கள், மௌரியர்கள், சுங்கர்கள், காண்வ வமிசத்தினர், ஆந்திர - பிருத்தியர்கள் முதலியோர்களுடைய வரலாறுகளைக் காணலாம். இவர்களின் ஆட்சிக்குப்பின் அன்னிய நாட்டு மிலேச்ச - அரசர்கள் பட்டந்தாங்குவார்கள் என்றும், சமய நெறி, ஒழுக்க நெறி முதலியனவெல்லாம் இல்லாத ஒரு காலம் தோன்றிவிடும் என்றும், அக்காலத்தின் முடிவு விஷ்ணுவின் கல்கி அவதாரத்தால் நேரிடும் என்றும் சொல்லப்படுகிறது.

ஐந்தாவது காண்டம் கோபாலனாகிய கிருஷ்ணனுடைய வரலாறு ஹரிவமிசத்தில் காணும் முறையில் மிக மிக விரிவாக அமைந்துள்ளது.

ஆறாவது காண்டம் மிகச் சுருக்கமானது. கிருத, திரேத, துவாபர, கலியுகங்களைப்பற்றியும், கலியுகத்தில் பரவும் தீமைகளைப்பற்றியும் முதலில் இது கூறுகிறது. அடுத்து வாழ்க்கைத் துன்பமும், பிறவித் துன்பமும், பிள்ளைமைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும், முதுமையிலும், மரணத்தின்போதும் நேரும் துன்பங்களும், நரக வேதனை, சொர்க்க இன்பத்தின் குறைபாடு முதலியனவும் விடுதலையின் பேரின்பமும் உணர்த்தப் படுகின்றன. பிறவியினின்றும் விடுபடுவதுதான் மோக்ஷத்தின் பேரெல்லை. இதற்கு இறைவனது இயல்பைத் தெரிதல் அவசியம் : அது தெரிவதற்கு யோகப்பயிற்சி வேண்டும்: யோகமாவது விஷ்ணுவை இடையறாது தியானித்தலே. இவற்றையெல்லாம் கூறிய பிற்பாடு, யோகம் இரண்டு அதிகாரங்களில் விவரிக்கப்படுகிறது. கடைசி அதிகாரம் புராணம் முழுவதிலும் வரும் பொருளடக்கத்தினை முறையே குறித்து விஷ்ணுவைப் புகழுகிறது.

## 4. வாயு புராணம்

இதனைச் சைவ புராணம் என்று கூறுவர். வாயு தேவனால் சொல்லப்பட்ட புராணம் ஆனதால், 'வாயு புராணம்' எனப் பெயர் பெற்றது என்று மகாபாரதத்திலும் ஹரிவம்சத்திலும்

விளக்கப்படுகிறது. பாணகவி (கி. பி. 625) இதனை வாசிக்கத் தாம் கேட்டதாகக் கூறியுள்ளமை மேலே குறிக்கப்பட்டது. இதில் பௌத்தர்களுடைய வரலாறும்வேறு பல மகாத்மியங்களும் உள்ளன. இதிலும் விஷ்ணு புராணத்திற்போலப் பழம் புராணங்களுக்குரிய பல இயல்புகளும் காணப்படுகின்றன. விஷ்ணு புராணத்திற் போலவே இப்புராணத்தின் இறுதியிலும் உலக முடிவின் வருணனை உள்ளது. யோகத்தின் பெரும் பயனும் சிவ புரத்தின் மகிமையும் காணலாம். மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்திற் பல இடங்களிலும் 'சிவ புரம்' குறிக்கப் பட்டுள்ளது. உதாரணமாக, சிவ புராணத்தின் இறுதியில்,

> செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
> பல்லோரும் ஏத்தப் பணிந்து (94—95)

என்பதைக் காண்க. இந்தச் சைவ புராணத்திற்கூட விஷ்ணுவைப் பற்றி இரண்டதிகாரங்கள் உள்ளன. பிதுர்களைப் பற்றியும் அவர்களுக்குச் சிராத்தம் செய்ய வேண்டும் நெறிகளைப் பற்றியும் இதிற் காணலாம். சங்கீதக் கலையைக் குறித்து ஓரதிகாரமும் இதில் உள்ளது. வேறு பல மகாத்மியங்களும் விளக்கங்களும் காணப்படுகின்றன.

### 5. பாகவத புராணம்

இப் புராணம் மிகக் கீர்த்தி பெற்றது. நமது தேசத்தில் மிக மிகப் போற்றப்பட்டு வருவதும் இதுவே. ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் முதன்முதல் மொழிபெயர்க்கப் பெற்றதும் இப் புராணமே. இது விஷ்ணு புராணத்தை அடியொற்றிச் செல்லுகிறது. பதினெண் புராணங்களுள் இது ஒன்றாகுமா எனப் பலரும் ஐயுற்றுள்ளனர். ஆதி புராணங்களுள் எண்ணப்பட்டது சைவ சமயத்திற்குரிய தேவி பாகவத புராணம் எனச் சிலர் கூறுவர். பாகவத புராணத்தை கி. பி. 13-ம் நூற்றாண்டில் பொப்பதேவர் இயற்றியது என்பர் சிலர். ஆனால், இவ்வளவு பிற்காலத்ததாக இருத்தல் இது இயலாது. இராமானுஜர் இதனைப் பிரமாணமாகக் கொள்ளாது விஷ்ணு புராணத்தையே கொண்டுள்ளனர். கி.பி. 10-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகலாம் என விண்டர்நீட்ஸ் கருதுகிறார்.

இது பன்னிரண்டு ஸ்கந்தங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 18,000 சுலோகங்கள் உள்ளன. சாங்கிய தர்சனத்தை நிறுவிய வராகிய கபிலரும், புத்தரும் திருமாலின் அவதாரம் என்று இதில் கூறப்பட்டுள்ளனர். பகவத் கீதையிலிருந்து சில சுலோகங்கள் இதில் எடுத்தாளப்பட்டுள்ளன. 10-வது ஸ்கந்தந்தான் எல்லாராலும் மிகுதியாகப் போற்றப்பட்டு வருவது. கோபிகா லீலையும் இதில் விரிவாக வருணிக்கப்படுகிறது. பதினோராவது

ஸ்கந்தத்தின் இறுதியில் கிருஷ்ணனுடைய மரணமும், யாதவர்களுடைய அழிவும் சொல்லப்பட்டுள்ளது. கடைசி ஸ்கந்தத்தில் உலக அழிவும் கலியுகத்தில் நிகழப்போகும் செய்திகளும் சொல்லப்பட்டுள்ளன.

### 6. பிருகந் நாரதீய புராணம்

உப புராணமாகிய நாரதீயத்திலிருந்து வேறுபடுத்தற்கு இவ்வாறு பெயரிட்டனர். இது பழமையாகத் தோன்றவில்லை என்பர். இதில் மகா பாவங்கள் இவை இவையென்று எண்ணிடப்பட்டுள்ளன. இவற்றைச் செய்தவர்களுக்குக் கொடு நரகம் விதிக்கப்பட்டிருக்கிறது. லிங்க வணக்கம் செய்பவனுக்கும், சூத்திரர்களும் பெண்களும் வணங்கிய திருமாலின் வடிவத்தை வணங்கியவர்களுக்கும், புற மதத்தவர்கள் வணங்கிய லிங்கத்தை வணங்கியவர்களுக்கும் மீட்சியே இல்லை. இவர்கள் நரகத்தில் புகுவார்கள். இங்ஙனமே, அந்தணரை நிந்தித்து வெறுப்பவனுக்கும் மீளா நரகம்தான். பௌத்தர்களுடைய சைத்தியங்களில் புகும் அந்தணனுக்கும் மீட்சியில்லை. நூற்றுக் கணக்கான பிராயச்சித்தங்கள் செய்தாலும் அவை பயன்பட மாட்டா. இவர்கள் நரக வேதனை அனுபவித்து, பின் சூத்திரர்களாகவும், சண்டாளர்களாகவும், மிலேச்சர்களாகவும், புழுக்களாகவும் பிறப்பெடுப்பார்கள். பெண்கள், சூத்திரர், இவர்கள் முன்னிலையில் வேதத்தை ஓதுபவனுக்கும் இதே கதிதான். ஆனால், திருமாலைப் பக்தி செய்பவர்களும் கங்கையில் நீராடுபவர்களும் இக்கொடிய பாவங்களினின்றும் விடுபடுவார்கள்.

நாரதீய உப புராணத்தில் ருக்மாங்கத சரிதம் 40 அத்தியாயங்களில் கூறப்படுகிறது. ருக்மாங்கதன் தன் மகள் மோகினி கேட்கும் வரத்தை, அது எதுவாயிருந்தாலும், அளிப்பதாக வாக்குறுதி செய்கிறான். 'ஏகாதசி விரதத்தைக் கைவிட வேண்டும், அல்லது அவனுடைய மகனைக் கொன்றுவிடுதல் வேண்டும்' என்று அவள் வரம் வேண்டுகிறாள். ருக்மாங்கதன் இரண்டில் குறைந்த பாவத்தைத் தரக்கூடியது மகனைக் கொல்லுதலே என்று கருதி அவ்வாறே செய்கிறான்.

### 7. மார்க்கண்டேய புராணம்

இப்புராணம் என்றும் பதினாறு வயதோடு நித்திய வாழ்வு பெற்ற மார்க்கண்டேயரது பெயரால் வழங்குகிறது. இது இப்பொழுது கிடைக்கும் மிகப் பழமையான புராணங்களுள் ஒன்று. மார்க்கண்டேயரே நேரில் தமது சிஷ்யராகிய 'க்ரௌஷ்டுகி' என்பவருக்குச் சொல்லிய பகுதி மிக முற்பட்டது எனக் கொள்ளலாம். இதில் சிவன், விஷ்ணு முதலிய கடவுளர்களது பெருமை

கூறப்படவில்லை. வேத காலத்துத் தெய்வங்களாகிய அக்கினி, சூரியன் முதலியவர்கள் பற்றியே மிகுதியும் உள்ளது. கி.பி. 3-ம் நூற்றாண்டில் இப்புராணத்தின் ஆதிப் பகுதிகள் தோன்றியிருக்கக் கூடுமென்று பார்ஜிட்டர் கருதுகிறார். இன்னும் சிறிது முற்பட்டதாகவே இருத்தலும் கூடும். நீதி வாக்கியங்கள் பல இதில் உபதேசிக்கப்படுகின்றன.

இந் நூலின் முற்பகுதி மகா பாரதத்தோடு நெருங்கிய தொடர்புடையது. வியாஸ முனிவரின் சிஷ்யரான ஜைமினி, மார்க்கண்டேயரை அணுகி, நான்கு பொருள்களை விளக்கும்படி வினவுகிறார். அவற்றுள் இரண்டு: திரௌபதி பாண்டவர் ஐவர்க்கும் பொதுப் பத்தினியாக அமைந்தது எவ்வாறு? திரௌபதியின் புத்திரர்கள் அனைவரும் இளமையில் வதம் செய்யப்படுவதற்குரிய காரணம் யாது? என்பனவாம். இக் கேள்விகளுக்கு மார்க்கண்டேயர் தாமே நேரில் விடை கூறவில்லை.

சாப நிமித்தத்தால், பறவைகளாகப் பிறந்த நான்கு அந்தணர்கள் மூலம் விடை தருகின்றார். இப் பறவைகள் கேள்விகளுக்குரிய பூர்வ கதைகளைச் சொல்லுகின்றன. மேற்குறித்த இரண்டாவது கேள்விக்கு, ஐந்து விசுவ தேவர்களும் ஒரு முறை அரிச்சந்திரனைத் துன்புறுத்திய விசுவாமித்திர முனிவரைப் பழித்ததாகவும், அப்பொழுது அவர் அவர்களை மனிதர்களாகப் பிறக்கும்படி சபித்துவிட்டதாகவும், அந்தச் சாபத்தின் விமோசனத்திற்கு இளமையில் மரணமடைவதை விதித்துள்ளதாகவும் விடை தரப்படுகிறது. இங்கே அரிச்சந்திரனது சரித்திரம் விரிவாகக் கூறப்படுகிறது.

இவ் விடைகளின் பின்பு ஓர் அந்தணனுக்கும் அவனது மகனாகிய ஜடன் என்பவனுக்கும் நிகழ்ந்த விவாதம் குறிக்கப்படுகிறது. இங்கே தந்தை அந்தண நெறியைச் சிறந்த லட்சியமாக எடுத்துச் சொல்லுகிறான். ஜடன் அந்த நெறியைப் பழித்து ஸம்ஸாரத்தினின்று விடுதலையடைவதே தக்கது என வற்புறுத்துகிறான். இங்கே விபஸ்சித்தின் அழகிய வரலாறு கூறப்படுகிறது.

> விபஸ்சித்து இறந்த பிற்பாடு அவனை யம கிங்கரர்கள் நரகத்திற்குக் கொண்டு செல்லுகிறார்கள். அப்பொழுது அவன் நரகம் புகவேண்டும் காரணம் யாதென்று வினவ கர்ப்பமுறுதற்குப் பக்குவமாகிய ருது காலத்தில் தன் மனைவியோடுகூடி இன்புற அவன் தவறியதால் இங்ஙனம் நேர்ந்தது என்றும், இந்த அபராதத்திற்குச் சில காலமேனும் நரகத்திலிருக்க வேண்டும் என்றும் விடையளித்தார்கள். சிறிது நேரம் கழித்து நரகத்தினின்று வெளியிற் கொண்டு செல்லக்

கிங்கரர்கள் தொடங்கினர். அரசனும் திரும்பினன். ஆனால், அவன் செவிகளில் அங்குள்ள உயிர்கள் அழுது கூக்குரலிடும் சத்தம் கேட்டது. சிறிது நேரமேனும் அவன் தங்கியிருந்தால் தங்கள் துன்பம் அவ்வளவுக்கு அவ்வளவு குறைகிறது என்றும், ஆதலால், அவன் தங்க வேண்டும் என்று அவ்வுயிர்கள் இரந்து கேட்டுக் கொள்ளுகின்றன. எவ்வாறு இவ்வுயிர்களின் துன்பம் தணியும் என்று கிங்கரர்களை வினவ, நல்லவனது நல்ல கருமங்களினால் இனிய உயிர்ப்பு நரகத்தில் பரவுகிறதென்றும், அதனால், துன்பம் குறைகிறதென்றும் விடை தருகின்றனர். அப்பொழுது, அரசன் 'உயிர்களின் துன்பத்தைப் போக்குவதைக்காட்டிலும் இன்பம் வேறில்லை; சொர்க்கத்திலும் பிரம லோகத்திலும் அவ் இன்பம் கிட்டுதற்கரியது; நான் இங்கிருப்பதனால் இவ்வுயிர்களின் துன்பம் குறையுமானால், இங்கேயே ஒரு மரம்போல் நின்று விடுவேன் ; அசையவே மாட்டேன்' என்று கூறுகிறான். தன்னை அங்கே விட்டுவிட்டுக் கிங்கரர்கள் செல்லலாம் என்றும் கேட்டுக் கொள்ளுகிறான். அப்பொழுது 'உன்னை அழைத்துச் செல்ல, யமதர்மனும் இந்திரனும் வருகிறார்கள். நீ புறப்படு' என்று கிங்கரர்கள் கூறினர். அவ்வாறே யமதர்மனும் இந்திரனும் வந்து அரசனைச் சொர்க்கத்திற்கு வரும்படி வேண்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால், நரக வாசிகள் துன்புறுகிறார்கள் என்பது மட்டுமே அவன் மனத்தைக் கவருகிறது. அவர்கள் முன்பு செய்த பாவச் செயல்கள் பெரிதாகத் தோன்றவில்லை. தான் வாழ்விற் செய்துள்ள புண்ணியச் செயல்கள் எவ்வளவு என்று கேட்க, யமதர்மனே கடலிலுள்ள நுண்துளிகளினும், வானத்திலுள்ள நட்சத்திரங்களினும், கங்கையிலுள்ள மணலினும் மிகப் பலவாம் என்று விடையளிக்கிறான். அப்பொழுது அரசன் 'எனக்கு ஒரே ஒரு வேண்டுகோள் உள்ளது; நரகத்திலிருப்பவர்கள் அனைவரும் எனது புண்ணியச் செயல்களினால் துன்பத்தினின்றும் விடுதலை பெறவேண்டும். இதுவே எனது விருப்பம்' என்று கூறுகிறான். இந்திரன் அவன் வேண்டுகோளைப் பூர்த்தி செய்கிறான். அதன் பின்பு அவன் சொர்க்கத்திற்குச் செல்லுகிறான்.

இந்த அழகிய கதையை அடுத்து, அனுசூயையின் கதை கூறப்பட்டுள்ளது. இறுதியில், யாகங்கள், பிற கிரியைகள், யோகம் முதலியன உணர்த்தப்படுகின்றன. இதன்கண் தேவீ மாகாத்மியமும் காணப்படுகிறது. துர்க்கா தேவியின் பெருமையும் அவளுக்கு உயிர்ப்பலியிடும் வழக்கமும் விளக்கப்படுகின்றன.

இத் தேவீ மாகாத்மியம் கி. பி. 6-ம் நூற்றாண்டில் இயற்றப் பட்டதாகலாம்.*

## 8. அக்கினி புராணம்

இதில் வைஷ்ணவத்திற்குரிய சில பொருள்கள் கூறப்பட்டிருப் பினும், சைவ சமயத்தைச் சார்ந்ததே. இதில் லிங்க வணக்கமும், துர்க்காதேவி வணக்கமும் விரிவாகக் காணப்படுகின்றன. தாந்திரிகக் கிரியைகளும் கணேச வணக்கமும், சூரிய வணக்கமும் இதில் விவரிக்கப்படுகின்றன. பகவத்கீதையின் சுருக்கமும், யம கீதையும் இதில் அடங்கியுள்ளன. அன்றியும் பூமி சாஸ்திரம், வான சாஸ்திரம், ஜோதிஷ சாஸ்திரம், நிமித்த சாஸ்திரம், மணச் சடங்குகள், போர்க்கலை, தர்ம சாஸ்திரம், மருந்து, செய்யுள்-இலக்கணம், நிகண்டு முதலிய பலவும் இப் புராணத்தில் சுருக்கியுரைக்கப்படுகின்றன. இதன் காலத்தை நிர்ணயிப்பது எளிதல்ல. ஆனால், பாண கவி இதனைப் பயன்படுத்தியுள்ளா ரென்று டாக்டர் ப்வ்யூரர் (Fuhrer) கூறுகிறார்.

## 9. பவிஷ்ய புராணம்

இது ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்தில் குறிப்பிடும் நூலன்று. மனுநீதியினின்றும் பல பகுதிகள் எடுத்தாளப்படுகின்றன. இந் நூலின் ஒரு பெரும்பகுதி அந்தணர்களுக்குரிய கர்மானுஷ் டானங்கள், வருணாசிரம தர்மங்கள் முதலியனவற்றைக் கூறுவது. சூரிய வணக்கம் சதத்தீவில் புகுந்த வரலாறும் இதில் காணலாம். இதனைப் பின்தொடர்ந்த பவிஷ்யோத்தர புராணத்தில் பலபல மாகாத்மியங்கள் கூறப்படுகின்றன.

## 10. பிரம வைவர்த்த புராணம்

இதனைத் தென்னாட்டில் பிரம கைவர்த்த புராணம் எனவும் வழங்குவர். இதில் பிரம காண்டம், பிரகிருதி காண்டம், கணேச காண்டம், கிருஷ்ண ஜன்ம காண்டம் என நான்கு காண்டங்கள் உள்ளன. பிரம காண்டத்தில் பிரமனுடைய சிருஷ்டி கூறப்படு கிறது. இதில் மருந்தைப்பற்றியும் ஓர் அத்தியாயம் உள்ளது. பிரகிருதி காண்டத்தில், கிருஷ்ணனது கட்டளையினால் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்திரி, ராதா என்ற ஐந்து தெய்வங் களாகப் பிரகிருதி பரிணமித்த வரலாறு உரைக்கப்படுகிறது. கணேச காண்டத்தில் யானைமுகக் கடவுளாகிய கணேசரது

---

* இம் மாகாத்மியத்தின் பிரதி ஒன்று கி. பி. 998-ல் எழுதப்பெற்றது. கி. பி. 608-ல் தோன்றிய ஒரு சாஸனத்தில் இம் மாகாத்மியத்தின் சுலோகம் ஒன்று காணப்படுகிறது. பாண கவியின் சண்டி சதகம் தேவீ மாகாத்மியத்தைப் பின்பற்றியது எனக் கருதலாம்.

வரலாறுகள் உள்ளன. இக்கடவுள் வணக்கம் பிற்காலத்தில் தோன்றியதெனக் கருத இடமுண்டு. இதில் கணேசர்* கிருஷ்ணனது அவதாரம் என்று கூறப்பட்டிருக்கிறது. கிருஷ்ண ஜன்ம காண்டத்தில் கிருஷ்ணனது பிறப்பு வரலாறும் கோபிகா லீலைகளும் உணர்த்தப்படுகின்றன.

### 11. லிங்க புராணம்

லிங்க வடிவில் சிவனை வணங்கும் நெறி இதில் உணர்த்தப் படுகிறது. தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் சிவன்மீது காதல் கொண்ட வரலாறும், ரிஷிகள் சிவனைச் சபித்த வரலாறும் இதில் காணலாம். சிவனது 28 மூர்த்தி பேதங்களும் இதில் விளக்கப் படுகின்றன. தாந்திரிக நெறியைச் சார்ந்ததாகச் சில பகுதிகள் உள்ளன. எனவே, இது மிக முற்பட்ட நூலாக இருத்தல் இயலாது.

### 12. வராக புராணம்

இது திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியைத் தாங்கிய வரலாறு பற்றியது. திருமால் வணக்கம் செய்பவர்களுக்குரிய தோத்திரங்களும் பூஜா விதிகளும் இதில் உள்ளன. சிவனையும் துர்க்கையையும் பற்றிய சில கதைகளும் கணேச தோத்திரமும் காணப்படுகின்றன. சிராத்தங்கள், பிராயச்சித்தங்கள், தெய்வங் களுக்கு விக்கிரகங்கள் அமைக்கும் முறைகள் முதலியனவும், கிருஷ்ணனது பிறப்பிடமாகிய மதுரையின் மாகாத்மியமும் இதில் விளங்குகின்றன.

### 13. ஸ்காந்த புராணம்

இப்பொழுதுள்ள நிலையில் இப்புராணம் ஆதியில் தோன்றிய ஸ்காந்த புராணமாக இருத்தற்கு இடமில்லை. எத்தனையோ மாகாத்மியங்களும் பிற விஷயங்களும் தற்காலத்துப் புராணத்தில் நுழைந்துவிட்டன. இதில் ஆறு ஸம்ஹிதைகள் உள்ளன. அவை சனற் குமார ஸம்ஹிதை, சூத ஸம்ஹிதை, பிரம ஸம்ஹிதை, வைஷ்ணவ ஸம்ஹிதை, சங்கர ஸம்ஹிதை, சௌர ஸம்ஹிதை என்பன. 50 காண்டங்களாக இது பகுக்கப்பட்டுள்ளது. பிரம கீதையும், சூத கீதையும், தமிழில் பிரபலமாக வழங்கும் காசி காண்டமும் இப்புராணத்தைச் சார்ந்தவை. குப்தர்கள் காலத்து லிபியில் எழுதிய இப் புராணப் பிரதியொன்று வங்காளத்தில் அகப்பட்டுள்ளது.

---

* கி. பி. 6-ம் நூற்றாண்டிற்கு முன்னர் பார்வதியின் புத்திரனாகக் கணேச வழிபாடு காணப்படவில்லை என்று மஸூம்தார் கூறுகிறார்.

## 14. வாமன புராணம்

இதுவும் முதலில் ஏற்பட்ட வடிவில் நமக்குக் கிடைத்துள்ளது என்று கூறமுடியாது. திருமால் வாமன அவதாரம் எடுத்த வரலாறு கூறுவதனால் இப்பெயர் பெற்றது. விஷ்ணுவின் அவதாரங்கள் பலவற்றையும் குறித்துப் பல அத்தியாயங்கள் உள்ளன. ஆனால், லிங்க வணக்கமும், புண்ணிய க்ஷேத்திரங்கள் பற்றிய வரலாறுகளும், சிவனுக்கும் உமைக்கும் நிகழ்ந்த திருமண வரலாறும், கணேசர் கார்த்திகேயர் பிறப்பு வரலாறும் இதில் காணலாம்.

## 15. கூர்ம புராணம்

இதில் நான்கு ஸம்ஹிதைகள் உள்ளன. பிரம ஸம்ஹிதை, பாகவத ஸம்ஹிதை, சௌர ஸம்ஹிதை, வைஷ்ணவ ஸம்ஹிதை என. இதில் பிரம ஸம்ஹிதை ஒன்றுதான் கூர்ம புராணம் என்ற பெயரோடு இப்போது நமக்குக் கிடைத்துள்ளது. சமுத்திர மதனத்தின்போது திருமால் ஆமையின் வடிவெடுத்து மந்தர மலையைத் தாங்கிய வரலாறு கூறுவதனால் இப்பெயர் பெற்றது. திருமால் சிவனது சக்திகளில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறார். ஓர் அத்தியாயம் முழுவதும் சிவனது மூர்த்தி பேதங்களைக் குறித்தது. காசி மாகாத்மியம், பிரயாகை மாகாத்மியம் முதலியனவும் இதிலுள்ளன. ஈஸ்வர கீதை, வியாஸ கீதை முதலியனவும் வருணாசிரம தருமங்களும் விரிவாகக் கூறப் படுகின்றன. சீதையை அபகரித்த இராவணன் கையினின்றும் அக்கினியால் அவள் மீட்சி பெற்றதாகக் கூறும் சரித்திரமும் இதன்கண் உள்ளது.

## 16. மத்ஸிய புராணம்

இது பழைய புராணங்களுள் ஒன்று. மகாப் பிரளயம் நிகழ்ந்த பொழுது, விஷ்ணு மச்சமாகத் தோன்றி மனுவை மாத்திரம் கப்பலில் ஏற்றி அதை இழுத்துச் சென்று காப்பாற்றினார். இழுத்துச் செல்லும்பொழுது மனுவிற்கும் மச்சத்திற்கும் நிகழ்ந்த உரையாடலே இப் புராணப் பொருளாக உள்ளது. சிருஷ்டி, வமிசங்கள், பிதிர்வரலாறுகள் ஆகிய இவைகள் ஒன்பது அத்தியாயங்களில் சொல்லப்படுகின்றன. உலக விவரணம், ஜோதிஷ சாஸ்திரம் முதலியனவும் இதிற் காணலாம். ஆந்திர வமிசத்தின் வரலாறு கூறும் பகுதி சரித்திரக்காரருக்கு மிகவும் பயன்படத் தக்கது. ஆனால், இதில் விழாக்களைப் பற்றியும், பிரயாகை, காசி முதலிய புண்ணிய ஸ்தலங்களைப் பற்றியும், நர்மதை முதலிய புண்ணிய தீர்த்தங்களைப் பற்றியும், அரசனது கடமை, நிமித்தங்கள், கிருக அமைப்பிற் செய்ய வேண்டும்

கிரியைகள், பிற சிற்ப சாஸ்திரப் பொருள்கள், பதினாறு வகைத் தானங்கள் முதலியவை பற்றியும் பல விஷயங்கள் கூறப் படுகின்றன. இப் பகுதிகள் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டுள்ளன வாதல் வேண்டும்.

### 17. கருட புராணம்

திருமால் கருடனுக்கு உபதேசித்து, கருடனால் காசியபருக்கு இந்தப் புராணம் கூறப்பட்டதென்பர். இதன்கண்ணும் அக்கினி புராணத்திற் போன்று பல பல விஷயங்கள் கூறப்படுகின்றன. இதன் உத்தரகாண்டம் பிரேத கல்பம் எனப் பெயர் பெறும். இக் கல்பத்தில் மரணம் முதலியவைபற்றி மிக விரிவாகக் கூறப் படுகிறது. சதிகள் உடன்கட்டையேறும்போது நிகழ்த்த வேண்டிய சடங்குகளும் இதில் காணப்படுகின்றன. சிராத்தம் செய்தற்குரிய கயாவின் மாகாத்மியமும் இதில் இடம் பெற்றுள்ளது.

### 18. பிரமாண்ட புராணம்

இதனை வாயு புராணம் என்றும் வழங்குவர். பெரும்பாலும் மாகாத்மியங்கள், தோத்திரங்கள், உபாக்கியானங்கள் முதலிய வையே இப் புராணத்தில் காணப்படுவன.

அத்யாத்ம ராமாயணம் இப் புராணத்தில் உள்ளது. இது ராம பக்தியை விளைத்தற்பொருட்டே தோன்றியது. சிவன் உமாதேவிக்கு உபதேசித்ததாம். இராம ஹிருதயமும், இராம கீதையும் இதன்கண் உள்ளன. கி. பி. 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏகநாதர் இதனைத் 'தற்கால நூல்' என்று கூறுதலால் இது பழங்காலத்ததன்று.

## உபபுராணங்கள்

உபபுராணங்கள் பொதுவாகப் பல்வேறு சமயத்தினர் களுடைய அவசியங்களைக் கருதிச் செய்யப் பட்டவை. ஆதி புராணங்களில் வரும் பொருள்களை நிரப்புதற்கென இவை தோன்றின என்பர். விஷ்ணு தர்மோத்தர புராணம், பிருகத் தர்மபுராணம், சிவபுராணம், கணேச புராணம், சண்டி புராணம், சாம்ப புராணம், கல்கி புராணம், காளிகா புராணம், நீலமத புராணம், பசுபதி புராணம் என்பவை குறிக்கத்தக்கன. விஷ்ணு தர்மோத்தரத்தில் காளிதாஸனது விக்கிரம - ஊர்வசீயத்தை ஒத்திருக்கும் கதை காணப்படுகிறது. பிரமகுப்தரால் கி.பி. 628-ல் இயற்றப்பட்ட பிரமஸ்புட சித்தாந்தம் எடுத்தாளப்படுகிறது. ஆகவே இப் புராணம் கி.பி. 628-ன் பின் 1000-க்குள் இயற்றப் பட்டிருக்கலாம். நிகண்டு, யாப்பு, நிருத்த வாத்திய கீதம்,

சிற்பம் முதலியன பற்றியும் இப் புராணம் கூறுகிறது. பிருஹத் தர்ம புராணத்தில் தாந்திர நெறியின் சாயைகள் காணலாம். சிவ புராணம் பன்னிரண்டு ஸம்ஹிதைகள் கொண்டு மிகமிக விரிவாயுள்ளது. கணேச சண்டீ புராணங்கள் சைவ பரமான உப புராணங்களே. சாம்ப புராணம் சூரிய சமயத்தைப்பற்றிக் கூறுவது. கலியுக முடிவில், திருமால் அவதரித்துச் செய்த பெருஞ் செயல்கள் கல்கி புராணத்தின் விஷயமாம். காளிதேவியின் பெருமையும் அவளை வணங்கு முறையும் காளிகா புராணத்தில் உணர்த்தப்படுகின்றன.

பொதுப்படக் கூறுமிடத்து, புராணங்களும் உப புராணங் களும் இலக்கிய நெறியில் மிகத் தாழ்ந்த தரத்தைச் சார்ந்தவை. ஒவ்வொரு தெய்வத்தின் பூஜகர்களுக்கும் பயன்படத்தக்க முறையில் அமைந்தவை. சரித்திரவுணர்ச்சிக்கும் ஒரு சில உதவுவன. இவற்றுள் ஒன்று நீலமத புராணம். இதில் நீலன் என்ற நாக அரசன் வரலாறு தரப்படுகிறது. காஷ்மீர தேசத்தின் பூர்வ சரித்திரமும், அத் தேசத்திலிருந்த பழக்க வழக்கங்களும் இதில் புலப்படுகின்றன.

கி. பி. 1148-ல் வாழ்ந்த கல்ஹணர் தமது ராஜ தரங்கிணியில் நீலமத புராணத்தை எடுத்தாண்டு, அது தொன்மை யான புராணம் என்று கூறுகிறார். எனவே, இப் புராணம் அவர் காலத்திற்கு மிக மிக முற்பட்டதாதல் வேண்டும். புராண வகைகளில் நேபாள வம்சாவளியும், நேபாள மாகாத்மியமும், வாக்வதி மாகாத்மியமும் கூறத்தக்கன. பசுபதி புராணத்தின் ஒரு பகுதி என்று வாக்வதி மாகாத்மியம் கொள்ளப்படும். இவைகள் நேபாள தேசத்துச் சரித்திரத்தை யுணர்தற்குப் பயன் படக் கூடியனவே. முடிவாக, இப் புராண வரிசையில் ஜைமினி பாரதத்தின் அஸ்வ மேதிக பருவம் குறிக்கத்தக்கது. இதில் அருச்சுனனும் கிருஷ்ணனும் அஸ்வமேத யாகத்தில் குதிரை களுடன் சென்ற வரலாறும், பல தேசங்களைப் பற்றிய வரலாறும் உள்ளன. ஸ்திரீ ராஜ்ய வரலாறு ஒன்று இதன்கண் காணப்படு கிறது.

இதில் வரும் சந்திரஹாஸ உபாக்கியானம் உலகப் பிரசித்த மானது. சந்திரஹாஸன் என்ற இளைஞனொருவன் அவனை அழித்தற்குக் கருதிய ஒரு கொடிய பகைவனது சூழ்ச்சியினின்றும் தப்பிய சரித்திரம்தான் இது. முடிவில் இவனைக் கொலை செய்வதற்குக் கொடுத்த கடிதத்தை ஒரு பெண் மாற்றி எழுதிய தால் அக் கொடிய பகைவனே கொலையுண்ணுகிறான். இப் பகைவனது புத்திரன் கொலையுண்டான் என்றும் சரித்திர

வேறுபாடு உண்டு. கடிதத்தை மாற்றி எழுதிய பெண் சந்திர ஹாஸனை மணக்கிறாள். இவன் பிற்பாடு பெரிய செல்வத் திற்கும் அதிகாரத்திற்குமுரியவனாகிறான். இதற்குக் காரணம் இவன் விஷ்ணு பக்தியில் சிறந்து சாளக் கிராமத்தை எப்பொழுதும் அணிந்திருந்தமையே என்று இப் புராணம் கூறும். முடிவில் சாளக் கிராமத்தின் பெருமையும், துளசியின் பெருமையும் உயர்வு நவிற்சி முறையில் உணர்த்தப்படுகின்றன. இது பாகவத புராணத்திற்குப் பிற்பட்டது என்பது தெளிவு.

## தாந்திரிக இலக்கியங்கள்

புராணங்களிலே பிற்பட்டவற்றில் தாந்திரிக விஷயங்கள் பலவும் அங்கங்கே காணப்படுகின்றன. அவைகளாவன: சிவ னுக்கும் பார்வதிக்கும் நிகழ்ந்த உரையாடல்கள், மந்திரங்கள், யந்திரங்கள், சாக்தமதக் குறிப்புக்கள், பெண் தேவதைகளைப் பற்றிய குறிப்புக்கள் முதலியனவாம். இங்ஙனம் காணப்பட்ட போதிலும், இப் புராணங்களுக்கும், இதிஹாஸங்களுக்கும் ஒரு தொடர்பு உண்டு. ஆனால், தாந்திரிக இலக்கியங்கள் ஒரு தனி வகை. இவற்றிற்கும் இதிஹாஸங்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. சில சமயத்தார்களுக்குத் தனித்துரிய நூல்களாகவே இவை உள்ளன. அவர்கள் கையாண்டுவரும் சந்தேகங்களும், தத்துவ ரகஸியங்களும் இவற்றில் கூறப்படுகின்றன.

இவைகளை ஸம்ஹிதைகள் என்றும், ஆகமங்கள் என்றும், தந்திரங்கள் என்றும் உரைப்பர். பொதுப்பட ஸம்ஹிதைகள் வைஷ்ணவர்களுக்கும், ஆகமங்கள் சைவர்களுக்கும், தந்திரங்கள் சாக்தர்களுக்கும் உரியனவாகும். ஆனால், இவ்வழக்கு வேறு பாடு அறுதியானதன்று. இவை அனைத்தையும் தந்திரங்கள் என்ற பொதுப் பெயராலும் வழங்கி வருகின்றனர்.

தாந்திரிக இலக்கியங்களில் ஒரு பொது இயல்பு காணலாம். இவைகள் வேதத்தோடு முரண்படுவன என்று சொல்லுவதில்லை. இவ் வேதம் தற்காலத்தவர் உணர்தற்கு மிகவும் அரியது; இக் காரணத்தால் எளிதான மார்க்கம் ஒன்று இவ்விலக்கியங்களில் அருளிச் செய்யப்பட்டுள்ளன என்பர். மேலும், இவைகள் உயர்ந்த வருணத்தார்க்கு மட்டுமன்றி, தாழ்ந்த வருணத்தா ராகிய சூத்திரர்களுக்கும், பெண்களுக்கும் உரியன என்றும் கூறுவர்.

எனினும், குருவின் மூலமாய்த் தீக்ஷை பெற்றவர்களுக்கே ரகஸியமாக ஓதுதற்குரிய மந்திரங்களும் கொள்கைகளும் இவற்றில் நிரம்பியுள்ளன. சாதாரண மக்களுக்கு இவற்றை

உபதேசித்தல் தகாது. ஒவ்வொரு தந்திரத்திலும் ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற நான்கு பகுதிகள் காணப்படுமென்றல் மரபு. ஞான காண்டத்தில் அத்வைதச் சார்பான கொள்கைகளும் மந்திர சாஸ்திர விஷயங்களும், யந்திர சாஸ்திர விஷயங்களும் உணர்த்தப்படும். யோக காண்டத்தில் தியான வகைகளும், அவற்றால் விளையும் அபூர்வ சக்திகளும் கூறப்படும். கிரியா காண்டத்தில் தெய்வங்களுக்குக் கோயிலெடுக்கும் முறையைக் காணலாம். சரியா காண்டம் சடங்குகள், விழாக்கள், ஆசாரங்கள் முதலியனபற்றி அமைந்திருக்கும். ஆனால், இக் காண்டங்கள் ஒவ்வொரு தந்திரத்திலும் தனித்தனியே காணப் படும் என்பதில்லை. இவைகளெல்லாம் கலந்த கலவைதான் பல தந்திரங்களிலும் உள்ளது. சைவ ஆகமங்கள்* 28 என்று கணக் கிடுவர். இவற்றைச் சிவபெருமான் உலகத்தோற்றத்தின்பின் அருளிச் செய்தனர் என்பர். ஒவ்வொரு ஆகமத்திற்கும் பல உபாகமங்கள் உண்டு.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.
(திருமந். 57)

இவற்றின் சாரத்தை நந்திக்கு உபதேசித்தனர் என்று திருமூலர் திருமந்திரம் கூறும்.

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம் எங்கள் நந்திபெற்றானே. (திருமந். 62)

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| * 1 | காமிகம் | 11 | விஜயம் | 20 | முகபிம்பம் |
| 2 | யோகசம் | 12 | நிஸ்வாஸம் | 21 | புரோத்கீதம் |
| 3 | சிந்தியம் | 13 | ஸ்வயம்பூதம் | 22 | லளிதம் |
| 4 | காரணம் | 14 | ஆக்நேயம் | 23 | சித்தம் |
| 5 | அசிதம் | 15 | வீரம் | 24 | சந்தானம் |
| 6 | தீப்தம் | 16 | ரௌரவம் | 25 | சர்வோத்தமம் |
| 7 | சூக்ஷ்மம் | 17 | மகுடம் | 26 | பாரமேச்சுரம் |
| 8 | ஸகஸ்ரம் | 18 | விமலம் | 27 | கிரணம் |
| 9 | அஞ்சுமான் | 19 | சந்தாஞானம் | 28 | வாதுளம் |
| 10 | சுப்பிரபேதம் | | | | |

**நவ ஆகமங்கள்**

நவ ஆகமங்களாவன :

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

(திருமந். 63)

சிவாகமங்களில் இப்பொழுது கிடைப்பன சுமார் 20 ஆகமங்களே. உபாகமங்களுள் மிருகேந்திரமும், பௌஷ்கரமும் அச்சில் உள்ளன. இவ் ஆகமங்கள் கி. பி. 8-ம் நூற்றாண்டளவில் தோன்றியன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.* வைஷ்ணவர்களுக்குரிய பாஞ்சராத்திர ஆகமங்களிற் பன்னிரண்டு அச்சிடப் பட்டுள்ளன. இப் பாஞ்சராத்திர ஆகமங்கள் முதன் முதலில் காஷ்மீரம் முதலிய வடநாட்டில் தோன்றிய போதிலும் தென்னாட்டிலேதான் இவைகள் மிகுந்த பிரசாரம் அடைந்தன. இவற்றுள் ஒன்றாகிய ஈஸ்வர ஸம்ஹிதையை இராமாநுஜரின் ஆச்சாரியராகிய யாமுனாசாரியர் எடுத்தாளுகிறார். இவ் வாச்சாரியர் கி. பி. 1040-ல் மரணம் எய்தினர். இராமாநுஜரே பௌஷ்கரம், பரமம், சாத்துவதம் என்னும் மூன்று ஸம்ஹிதைகளினின்று மேற்கோள் காட்டியுள்ளார்.

சைவ பரமாகவும் வைஷ்ணவ பரமாகவுமுள்ள இவ் ஆகமங்களைத் தந்திரம் என்ற பெயரால் வழங்கிய போதிலும் இப் பெயரைச் சிறப்பாக வழங்குவது சாக்தர்களுடைய நூல்களுக்குத் தான். இவ் வகை நூல்களில் மிகமிக உயர்ந்த தத்துவங்களும், மிகமிகத் தாழ்ந்த கருத்துக்களும், ஆசாரங்களும் உள்ளன. இவற்றை உலகிற்கு நன்கு அறிவித்தவர் ஆர்தர் அவலான் என்ற புனை பெயர் பூண்ட ஸர் ஜான் உட்ராவ் (Sir John Woodroffe) என்பவர்தான். இவர் தந்திர நூல்கள் பலவற்றையும் ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன் வெளியிட்டிருக்கிறார். மகா நிர்வாண தந்திரம் மிகச் சிறப்பாகக் கூறத்தக்கது.

இதில் பஞ்ச தத்துவங்கள் உணர்த்தப்படுகின்றன. இத் தத்துவங்கள் ஒருவனது இக வாழ்வில் இன்பம் பெறுதலை நோக்கமாகக்கொண்டன. இத் தத்துவங்களாவன: மதுபானம், மாமிசம், மத்ஸியம், முத்திரை, மைதுனம் என்பன. இவற்றுள் 'முத்திரை' உலர்ந்த கிழங்கு முதலியவற்றைக் குறிக்கும்; மற்றவை வெளிப்படை. இந்தத் தத்துவங்களை மந்திரம், கிரியை முதலியவற்றால் தூய்மை யெய்தியவர்களே அனுஷ்டித்தல்

* Winternitz: History of Indian Literature, Vol. I. p. 588, f. n.

தகும். மந்திரங்கள், ஐம், கிலிம் முதலிய பீஜங்கள், தாமிரத் தகடு முதலியவற்றில் வரைந்த யந்திரங்கள், விரல்கள் முதலிய வற்றால் செய்யப்படும் முத்திரைகள், மந்திரங்களுடன் வலது கை விரல்களையும் வலது உள்ளங்கையையும் பல வேறு உறுப்புக் கள் மீது வைத்தலாகிய நியாஸங்கள்: இவற்றால் தேவியைப் பிரீதி செய்து ஒருவன் சாதகனாகிறான். தேவி யாராதனமே இம் மதத்தில் முக்கியமானது.

பக்தனது இதய கமலமே தேவியின் அரியாசனமாகும். இக் கமலத்தினின்றும் வடிகின்ற அமிர்தமே தேவியின் பாதங்களைக் கழுவுதற்குரிய நீர்; பக்தனது மனமே அர்ப்பிக்கப்படும் பொருள். எப்பொழுதும் சலனப்பட்டுக்கொண்டிருக்கும் அவனது ஐம்பொறி களும் சிந்தனைகளுமே நடனங்கள். தன்னையிழந்த விரக்தி நிலை முதலியவை புஷ்பங்கள். முற்கூறிய பஞ்ச தத்துவங்களால் தேவிக்குப் பலியிடுதல் நிகழும். சில உயர்ந்த லட்சியங்களும் இந்தத் தந்திரத்தில் காணப்படுகின்றன. இல்லறத்தில் அமைந் தவன் பொய் சொல்லுதல் கூடாது; வஞ்சித்தல் கூடாது.

தேவதைகளையும் அதிதிகளையும் பூசிப்பதில் எப்பொழுதும் ஈடுபட்டிருத்தல் வேண்டும் ; தாயையும் தந்தையையும் கண்ணில் தோன்றும் தெய்வங்களாகப் பாவிக்கவேண்டும். அவர்களுக்கு எல்லா வகையாலும் தொண்டு புரிதல் வேண்டும். பிராணன் போவதாயிருந்தாலும் தாய்க்கும், தந்தைக்கும், மகனுக்கும், மனைவிக்கும், அதிதிக்கும், சகோதரனுக்கும் உணவளித்தன்றித் தான் உண்ணுதல் கூடாது. இல்லறத்தில் இருப்பவன் தன் மனைவியை ஒருபொழுதும் தண்டித்தல் கூடாது. அவளைத் தாயைப்போல் போற்றுதல் வேண்டும். அவள் கற்பிற் சிறந்து தன்னைப் பேணி வருவாளானால், தனக்குப் பெருந்துன்பம் நேரிட்டகாலத்தும் அவளைக் கைவிடுதல் கூடாது.

இதில் இரண்டு வகையான மணவினை கூறப்படுகிறது : ஒன்று பிரம மணம். இது அந்தணர் விதித்துள்ள விதியைப் பின்பற்றிச் செய்யும் மணமாகும். பிறிதொன்று சைவ மணம். இது சில காலம் மட்டுமே தம்பதிகள் ஒன்றி வாழும் மணமாகும். உபதேசம் பெற்ற உட் கூட்டத்தினரே இம் மணத்தை அனுசரிக்கலாம். இவ் வகை மணத்தில் பிறந்த குழந்தைகள் பிதிரார்ச்சிதத்திற்கு உரியவர்கள் அல்லர்.

குலார்ணவ தந்திரமும் மிகவும் போற்றப்படுகிறது. குலாசாரத்திற்கு முன்பு அறுவகை ஆசாரங்களை அனுஷ்டிக்க வேண்டும். அவ் ஆசாரங்களாவன : வேதாசாரம், வைஷ்ணவா சாரம், சைவாசாரம், தக்ஷிணாசாரம், வாமாசாரம், சித்தாந்தா

சாரம் அல்லது யோகாசாரம் என்பன. குலாசாரத்தில் யோகமும் போகமும் உள்ளன. எனவே, ஐம்பொறிகளையும் அடக்கியவனே இவ்ஆசாரத்தைக் கைக்கொள்ளத்தக்கவன். இதன்படி அந்தணன் எல்லாக் காலத்தும் மதுபானம் செய்யவேண்டும். க்ஷத்திரியன் போர் தொடங்கும் முன்பு குடித்தல் வேண்டும். வைசியன் பசு வாங்கும்பொழுதும், சூத்திரன் அபரக்கிரியை செய்யும்பொழுதும் குடிக்கவேண்டும். இந்தத் தந்திரத்தின் 7-ம் அத்தியாயத்தில் 'தீக்ஷை பெற்றவன் குடிக்க வேண்டும், குடிக்க வேண்டும்; மேன்மேலும் குடிக்க வேண்டும்; பூமியில் விழுமளவும் குடிக்க வேண்டும்; எழுந்த பின்பு மீண்டும் குடிக்க்வேண்டும். அப்பொழுது அவனுக்கு மறு பிறப்பில்லை' என்று கூறப்பட்டுள்ளது.

'ஆகமம்' என்பது சிவன் பார்வதிக்கு உபதேசம் பண்ணிய தற்குப் பெயராகும். இவ் வண்ணமே பார்வதி சிவனுக்குச் சொல்லியதாகவுள்ளதற்கு 'நிகமம்' என்று பெயர். நிகமத்திற்கு உதாரணமாக குல சூடாமணி என்ற தந்திரத்தைக் கூறலாம். வேறொரு முக்கியமான தந்திரம் பிரபஞ்ச சார தந்திரம் என்பர். இதனை ஆதிசங்கராச்சாரியார் இயற்றியது என்பர். இது உண்மையாகத் தோன்றவில்லை. தந்திர ராஜ தந்திரம் என்ற ஒரு நூலும் உள்ளது. இதில் யந்திரங்கள் அமைக்கும் விதிகள் உணர்த்தப்படுகின்றன. ஸ்ரீ யந்திரம் இயற்றும் முறை முதலி யனவும் கூறப்படுகிறது. இந்த யந்திரத்தின் சார்பில் தியானம் பண்ணுபவன் உலக முழுதும் தேவிமயம் என்பதனை உணர்வான் என்பர்.

மேற்கூறியன போன்றவையே யன்றி, தாந்திரிக பத்ததி, கிரியை முதலியவற்றைக் கூறும் எண்ணிறந்த தந்திர நூல்களும் உள்ளன. பொதுவாகவே புராணங்களும் தந்திரங்களும் கற்று இன்புறுதற்குத் தக்கனவல்ல. வடமொழியில் வல்லவரல்லாத ஆசிரியர்கள் இவற்றை இயற்றியுள்ளார்கள். ஆனால், இலக்கிய வரலாற்றிற்கும் சமய வரலாற்றிற்கும் இவை பயன்படுகின்றன. இவற்றைச் சரித்திர ஆசிரியர்கள் புறக்கணித்தல் கூடாது.

இதுகாறும் இந்து சமயத்திற்குரிய வேதம் முதலிய இலக்கி யங்களைப் பற்றிக் கூறினோம். இவ்வேதங்கள் சரித்திரத்திற்கு முற்பட்ட பூர்வகால நிலைமையைப்பற்றி நமக்கு விளக்கின.

## பௌத்த இலக்கியங்கள்

பௌத்த சமயத்திற்குரிய இலக்கியங்களோடுதான் சரித்திர காலம் நமக்குத் தொடங்குகிறது என்று சொல்லலாம். புத்த ருடைய காலம் கி. மு. 535 முதல் 485 வரை என்று பற்பல

சான்றுகளால் துணியப்பட்டுள்ளது. இப் பெரியாரால் நிறுவப் பட்ட சமயம் உலகத்துள்ள மூன்று பெரும் சமயங்களுள் ஒன்றாகும். வடகீழ் இந்தியாவிலுள்ள கங்கைப் பிரதேசத்தில் தான் இவர் தமது சமயத்தைப் பிரசாரம் செய்து வந்தது. மகத நாட்டிலும் கோசல நாட்டிலும் இவர் ஊர் ஊராகத் திரிந்து தமது மதக் கொள்கைகளை உபதேசித்து வந்தனர். இவருக்குப் பல சிஷ்யர்களும் இந்தப் பிரதேசத்தில்தான் முதன்முதலாக ஏற்பட்டனர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக இவர் மதப் பிரசாரம்செய்து வந்தனர்.

இப் பிரசார வேலையில் ஏதேனும் இலக்கிய முயற்சிகள் இவர் செய்தாரா என்ற கேள்வி இயல்பாக எழக்கூடியதே. இல்லை என்பதுதான் உறுதியான விடை. பாலி மொழியில் பௌத்த சமய வேதமாகிய திரிபிடகத்திலுள்ள பல உபதேசங் களும் பொன்மொழிகளும் இவர் வாய்ப் பிறப்புக்களே என்று சொல்லப்பட்டுள்ளன. இன்ன இடத்தில், இன்ன காலத்தில், இன்ன சந்தர்ப்பத்தில் இவர் அவற்றைக் கூறினார் என்றும் விளக்கப்பட்டுள்ளன.

ஆனால், இவற்றுள் எல்லாம் புத்தர் நேரடியாக அருளியவை எது என்று துணிய இடமேயில்லை. இவர் எழுதியதாக யாதொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், ஒரு சில பொருள்கள் இவர் சொல்லியபடியே நமக்குக் கிடைத்துள்ளன என்று நாம் கருதலாம். நால் வகை வாய்மைகள், எண் வகை ஆரிய நெறிகள் முதலியன சிறிதும் வேறுபாடின்றி ஒரே படித்தாகப் பல நூல்களிலும் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இவைகளும் பிக்குக்களுக்குரிய பத்து வகை நியமங்கள் முதலி யனவும் புத்தர் அருளியபடியே இப்போதும் வழங்கி வருகின்றன என்று ஒருவாறு துணியலாம்.

### தொகை நூல்கள்

பௌத்த சமயத்திற்குரிய பூர்விக இலக்கியங்கள் அனைத்தும் தொகை நூல்களாகவே உள்ளன. புத்தருடைய உபதேசங்கள், உரையாடல்கள், பொன்மொழிகள், செய்யுட்கள், கதைகள், சங்க விதிகள் முதலிய அனைத்தும் தொகைகளே. திரிபிடகம் என்று சொல்வதுதானும் இத் தொகைகள் அனைத்தும் அடங்கிய ஒரு பிண்டமேயாகும். இவைகள் தொகுக்கப் பெறுவதற்குமுன் இலக்கிய முயற்சிகள் மிகுதியாக நடைபெற்றிருத்தல் வேண்டும். இவற்றின் பகுதிகளும் பற்பல காலத்தில் தோன்றியனவாதல் வேண்டும்.

புத்தர் நிர்வாணம் அடைந்து சில வாரங்களுக்குள் பிக்குக்களின் சங்கம் ஒன்று இராஜ கிருஹத்தில் கூடி, தம்மங் களையும், விநயங்களையும் வரையறுத்தது என்று சொல்லப் படுகிறது. தம்மம் (தர்மம்) என்பது மதக் கொள்கைகள், விநயம் என்பது பௌத்த சங்கத்தின் ஒழுக்க நியமங்கள். இந்தச் சங்கத்தின்பின், புத்த நிர்வாணத்திற்கு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், வைசாலியில் இரண்டாம் சங்கம் கூடியதாகச் சொல்லப் படுகிறது. இக் கூட்டத்தில் சங்க நியமங்களில் புகுந்து விட்ட பத்து வகை வழுக்களைக் களைந்தனர் என்பர். மிகப் பிற்பட்ட வரலாறு ஒன்றில் இக் கூட்டம் எட்டு மாதங்கள் நடைபெற்றது என்றும், இங்கே தரும பரிசீலனை நன்கு நிகழ்ந்தது என்றும் கூறப்பட்டுள்ளன.

பின்னர் மூன்றாவது சங்கம் ஒன்று அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் பாடலிபுரத்திலே நிகழ்ந்தது என்பர். இக் கூட்டத்தில் பௌத்த சமயத்திற்குரிய திருமுறைகள் தொகுக்கப்பட்டன என்று இலங்கைச் சரித்திரங்கள் கூறும். ஆனால், இச் சக்கரவர்த்தியின் சிலா சாசனங்களில் இச் சங்கங்களைக்* குறித்து யாதொரு குறிப்பும் காணப்படவில்லை. எனினும், இவரது காலத்தில் தருமங்களும் சங்க நியமங்களும் ஒழுங்குபடுத்தப் பட்டன என்று நாம் கொள்ளலாம். இச் சங்கத்தின் தலைவர் திஸ்ஸா என்பவர். இத் தலைவர் பௌத்த சமயத்தை வடக்கிலும் தெற்கிலும் பரவச் செய்தனர். அசோக சக்ரவர்த்தியின் தம்பி அல்லது மைந்தர் என்று சொல்லப்படும் மஹிந்தா** என்பவர் இவரது சிஷ்யருள் ஒருவர். மஹிந்தாதான் இலங்கைக்கு பௌத்த சமயத்தைக் கொணர்ந்தவர் என்று கூறுவர்.

இச் சமய தத்துவங்கள் முதலில் எழுதாக் கிளவியாய் வாய்ப் பிறப்பாக வழங்கிவந்தன என்றும், பின்னர் கி. மு. முதல் நூற்றாண்டில் வட்டகாமணி என்ற சிங்கள அரசன் காலத்தில் எழுத்து வடிவில் அமைந்தன என்றும் கூறுவர்.

## திரிபிடகம்

இச்சங்கக் கொள்கைகள் முதலியன திரிபிடகம் என்று தற்காலத்தில் வழங்கும் மூன்று நூல்-தொகுதிகளில் காணப்படு கின்றன. பிடகம் என்பதற்கு, பெட்டி அல்லது கூடை என்று

---

* தமிழிலக்கிய வரலாற்றில் சங்கம் என்ற பெயர் வழக்கும், அது தலை, இடை, கடை என மூன்றாகும் எனக் கூறும் செய்தியும் பௌத்த சங்க வரலாற்றோடு ஒப்பிடத் தக்கன.

** மஹிந்தா என்ற பெயர் மஹேந்திரன் என்றதன் திரிபு. இப்பெயர் தமிழ் நாட்டிற்குப் புதியதன்று. 'ஆலஞ்சேரி மயிந்தன்' என்ற ஒரு வள்ளலைக் குறித்துத் தமிழ் நாவலர் சரிதையில் வருவது இங்கு அறியத் தக்கது.

பொருள். மூவகைப் பிடகங்களாவன: விநய பிடகம், ஸுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பன. இவற்றுள்,

1. விநய பிடகம் என்பது சங்கத்தாரின் ஒழுக்க நியமங்களைப் பற்றிக் கூறுவது.

2. ஸுத்த பிடகம் என்பது உபதேசங்களையும் அவற்றின் விளக்கங்களையும் கூறுவது. இங்கே ஸுத்தம் (சூத்திரம்) என்பது உபதேசம் அல்லது பிரசங்கம் என்னும் பொருளில் வந்துள்ளது. பௌத்த தருமத்திற்குரிய பொருள்கள்பற்றி உரையாடல் முறையில் வரும் விளக்கங்களும் இப் பெயரே பெறும். இவ் விளக்கங்களை ஸுத்தாந்தம் (சூத்திராந்தம்) என்றும் கூறுவர்.

3. அபிதம்ம பிடகம் என்பது பௌத்த தருமத்தின் நுணுகிய பொருட் பாகுபாடுகளை விளக்குகின்றது.

இப் பகுப்பேயன்றி வேறொருவகைப் பகுப்பும் கூறப்படுகிறது. பௌத்த நூல்கள் ஒன்பது அங்கங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| 1. | ஸுத்தம்: | உரை நடையில் அமைந்த உபதேசங்கள். |
| 2. | கெய்யம்: | உரையும் பாட்டுமாக அமைந்த உபதேசங்கள். |
| 3. | வெயாகரணம்: | விளக்கங்கள் அல்லது வியாக்கியானங்கள். |
| 4. | காதை: | செய்யுட்கள். |
| 5. | உதானம்: | கட்டுரைகள். |
| 6. | இதி உத்தகம்: | 'இவ்வாறு புத்தர் அருளினார்' என்று தொடங்கும் சிற்றுரைகள். |
| 7. | ஜாதகம்: | புத்தருடைய பூர்வஜன்ம வரலாறு பற்றிய கதைகள். |
| 8. | அற்புத தர்மம்: | அற்புதச் செயல்களைப் பற்றிய குறிப்புக்கள். |
| 9. | வெதல்லம்: | வினாவும் விடையுமாக அமைந்த உபதேசங்கள். |

திரிபிடகங்கள் பாலி மொழியில்தான் இப்பொழுது உள்ளன. ஆனால், கி. மு. 3-ம் நூற்றாண்டில், அசோகர் காலத்தில் மாகதி மொழியில் வழங்கிய பௌத்த நூல்களோடு இப் பாலிமொழியிலுள்ள பிடகங்கள் பெரும்பாலும் ஒத்துள்ளன என்றே நாம் கருதலாம். இம் முடிவிற்குச் சிறந்த சான்று அசோகனது சிலா சாசனங்களேயாம். முக்கியமாக கி. மு. 249-ல் பொறிக்கப்பட்ட பைராட் கல்வெட்டில் 'புத்தர் அருளியனவெல்லாம் செம்மையாக அமைந்தனவே' என்று கூறி, ஏழு புத்த வசனப்பகுதியின்

பெயர்களைத் தந்து அவற்றை அனைவரும் கற்கவேண்டும் என்று அசோகர் வற்புறுத்துகிறார். இப் பகுதி ஸுத்த பிடகத்தில் உள்ளது.

சாஞ்சியிலுள்ள ஸ்தூபங்களில் பலவகைச் சித்திரங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவைகள் ஜாதகக் கதைகளைப் புலப் படுத்துகின்றன என்பதில் சிறிதும் ஐயமே இல்லை. அன்றியும் சாஞ்சியிலும் பார்குத்திலும் காணும் சிலாசாசனங்கள் ஸுத்தம் ஓதுபவர்களை 'மானி'கள் என்ற பெயரால் வழங்குகின்றன. இவ்வாறே 'பேடகி' என்று பிடகங்களை உணர்ந்தவனையும், 'தம்மகதி' என்று சமயக் கொள்கைகளை உபதேசிப்பவனையும் இச் சிலாசாசனங்கள் வழங்குகின்றன. இவைகளெல்லாம் பௌத்தத் திருமுறைகளின் தொன்மையை நன்கு விளக்கு கின்றன. அன்றியும் மத்திய ஆசியாவில் சமீபத்தில் கண்டெடுக்கப் பட்ட சில வடமொழி நூல்களும் இத் திருமுறைகளின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன. திபெத் மொழியிலும் சீன மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்ட பௌத்த நூல்களும் பிறிதொரு வகைச் சான்றுகளாம்.

### I. விநய பிடகம்

இனி, திரிபிடகங்களின் பாகுபாடுகளை நோக்குவோம். முதலாவது விநய பிடகத்தை எடுத்துக் கொள்வோம். ஆனால், ஸுத்த பிடகத்திற்கு இது முற்பட்டதென்று கொள்ளுதல் தக்க தன்று. பௌத்த சமயத்தினர் விநயபிடகம்தான் தலைமை பெற்றதாகக் கொண்டுள்ளனர். இவ்விநய பிடகம், மூன்று வகை நூல் - தொகுதிகளை உடையது. அவையாவன: ஸுத்த விபங்கம், கந்தகை, பரிவாரம் அல்லது பரிவார பாடம். இவற்றுள் முதலிரண்டும் இரண்டிரண்டு வகைப்படும். மகா விபங்கம், பிக்குணி விபங்கம் என்பவை இரண்டும் ஸுத்த விபங்கத்தில் அடங்கியவை. மகா வக்கம், சுள்ள வக்கம் என்பவை கந்தகையில் அடங்கியவை.




விநய பிடகத்தின் உயிர் நாடியாகவுள்ளது பாடிமொக்கம்* என்பதாகும். இது பௌத்த சங்கத்தினர் ஒழுக வேண்டும்

1. பாடி - மொக்கம் தமிழிலுள்ள பாடி காவல் என்பதனோடு ஒப்பிடற் பாலது.

நியமங்களில் வழுவாதவாறு, வழுக்களை எண்ணிட்டுத் தொகுத்துக் கூறி, அவற்றிற்குப் பிராயச்சித்தமும் விதிப்பதாம். இந்நியமங்கள்தான் பௌத்த சங்கத்தினர்க்கு ஒற்றுமையை விளைவிப்பதாகும். பாடி-மொக்கம் என்ற தொடர் பலவாறாக விளக்கப்படினும் அதற்குரிய பொருள் நிறைவேற்றுவதாகக் கூறிய உறுதிமொழி என்பதாம். அதாவது நிறைவேற்றுதற்கு உரிய நிபந்தனைகளையே பாடி-மொக்கம் என்றனர் என்று வின்டர்நீட்ஸ் கருதுகிறார். பாடி-மொக்க நியமங்களுக்கு அடங்கி ஒவ்வொரு பிக்குவும் ஒழுகவேண்டுமென்று அடிக்கடி கூறப்படுகிறது. இந்த நியமங்கள், பிக்கு-சங்கத்தின் முன்னிலையில் தாம் வழுவிய குற்றத்தை வெளிப்படையாகப் பௌர்ணமி, அமாவாசை என்ற இரண்டு தினங்களிலும் சொல்லுவனவாக உள்ளன. இந்த அவசரத்தில், பிக்குத் தலைவர் எட்டு வகையான பாவச் செயல்களைக் கூறி, அவற்றுள் எதனையேனும், தம் முன்னிலையில் கூடியிருப்பவர்களில் யாரேனும், செய்ததுண்டா என்று வினவுவர். செய்ததுண்டாயின் தமது குற்றத்தை ஒப்புக் கொள்ளவேண்டும் என்று கூறுவாராம்.

இதற்கு உபோசதம் என்று பெயர். பாடி-மொக்கத்தில் முதன் முதல் 152 விதிகள் இருந்தன. பிற்பாடு இத்தொகை 227 ஆக விரிவுபட்டது. இவ்விதிகள் ஸுத்த விபங்கத்தில் சொல்லப்பட்டுள்ளன. உண்மையில் இவ்விபங்கம் பாடி-மொக்கத்தில் காணும் விதிகளுக்கு வியாக்கியானமேயாகும். ஒவ்வொரு ஸுத்தத்திலும் ஒவ்வொரு நியமம் விளக்கப் பட்டுள்ளது. அதற்கு முன்னுரையாக அந்நியமம் தோன்றிய இடம், சந்தர்ப்பம் முதலியன விளக்கப்படுகின்றன.

மகா விபங்கத்தில் எட்டு வகைக் குற்றங்கள்பற்றி எட்டு அதிகாரங்கள் உள்ளன. பிக்குக்களுக்குப் பாடிமொக்கம் இருப்பது போல, பிக்குணிகளுக்கும் உண்டு. பிக்குணி விபங்கம் என்று பெயர் பெறுவது இதுவே. ஆனால், இது மிகச்சுருங்கிய நூல். இதற்கு வியாக்கியானமும் உள்ளது.

கந்தகை என்பது பகுதி என்று பொருள்படும். பிக்குக்களும், பிக்குணிகளும் தினசரி பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களைக் கூறுவதுடன், சங்கத்தினர் கைப்பற்ற வேண்டும் விதிகளையும் இது விளக்குகிறது. இதனால் ஸுத்த விபங்கத்தின் தொடர்ச்சியே கந்தகை என்று கூறலாம்.

இதிலுள்ள மகா வக்கத்தில் பத்துப் பகுதிகள் உள்ளன. இவற்றில் பௌத்த சங்கத்தில் சேர்தற்குரிய நியமங்களும், உபோசத நியமங்களும் மழைக்காலத்தில் ஒழுக வேண்டும்

ஒழுகலாறுகளும் அதன் இறுதியில் நிகழும் பவாரணக் கொண்டாட்டமும் சொல்லப்படுகின்றன. அன்றியும் செருப்பு அணிய வேண்டும் முறைகள், ஆசனம், வாகனம் முதலியவற்றிற் குரிய வசதிகள், பிக்குக்களுக்குக் கொடுக்க வேண்டும் மருந்து, ஆடைகள் முதலியன, இவைகளும் தெரிவிக்கப்படுகின்றன. கடைசியாக, சங்கத்தினர்க்குள் நீதிபரிபாலன முறைகளும் கொள்கை முரண்பாடு ஏற்பட்டால் அதை நெறிப்படுத்த வேண்டும் நியமங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.

சுள்ள வக்கத்தில்[1] சிறுதர விஷயங்கள் பற்றி விதிக்கப் பட்டுள்ள சிக்ஷைகள் விவரிக்கப்படுகின்றன. இதிலுள்ள முதல் ஒன்பது பகுதிகள் பிக்குக்களுக்கும் பத்தாவது பகுதி பிக்குணி களுக்கும் உரியன. 11-ம் பகுதியிலும் 12-ம் பகுதியிலும் இராஜ கிருஹத்தில் நடந்த சங்க வரலாறும், வைசாலியில் நடந்த சங்க வரலாறும் முறையே உணர்த்தப்படுகின்றன. இவ்விரண்டு பகுதி களும் பிற்காலத்துச் சேர்க்கப்பட்ட ஒரு பிற்சேர்வேயாகும்.

கந்தகைகள், பொதுப்பட நோக்குமிடத்து, பிற்பட்ட காலத்தன என்று தோன்றுகிறது. ஏனெனில், பூர்வத்தில் அமைந்த ஒழுக்க நியதிகள் இவற்றில் மிகவும் தளர்த்தப்பட்டிருக்கின்றன. ஊர் நடுவே சென்று பிச்சை எடுத்து உண்ணவேண்டும் என முன்பு பிக்குக்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. இப்போது உண்ணுதற்கு யாரேனும் விரும்பி அழைத்தால் செல்லலாம் என்று அனுமதிக்கப் பட்டது. பூர்வத்தில், உடுத்துக் களைந்த கந்தைகளையே உடையாக அணிதல் வேண்டும் என்று அவர்களுக்கு விதிக்கப் பட்டிருந்தது. இப்பொழுது பஞ்சினாலியன்ற ஆடை, பட்டாடை முதலியன கூட அணிந்து கொள்ளலாம் என்று அனுமதிக்கப் பட்டது. முதலில் மரத்தின் அடியில் தங்கி வாழ வேண்டும் என்று பிக்குவுக்கு விதிக்கப்பட்டது. இப்பொழுது வீடுகளிலும், குடிசைகளிலும், குகைகளிலும் வசிக்கலாம் என்று அனுமதி பிறந்தது. முதலில் சிறுநீர்தான் முக்கிய மருந்தாயிருந்தது. இப்பொழுது வெண்ணெய், எண்ணெய், தேன் முதலியவற்றையும் உட்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டது. இவை போன்ற காரணங்களால், கந்தகைகள் பிற்பட்டன என்பது உறுதியா கிறது.

ஆனால், இதன் மகா வக்கத்தில் புத்தர் வரலாற்றில் மிகப் பழமையான பகுதிகள் சில காணப்படுகின்றன. யஸன் என்பவனது சரித்திரம் இவற்றுள் ஒன்று. ஆடல், பாடல்களில் வல்ல பெண்களிடையே இரவு முழுதும் கழித்து, செல்வத்திலே

1. சுள்ளம் என்பதும் குள்ளம் என்பதும் ஒரு பொருளன.

இந்த யசன் வளர்ந்து வந்தான். ஒரு முறை இரவில் தன்னோடு சயனித்திருந்த பெண்கள் அவசமாய்ப் பலவித அலங்கோல நிலையில் படுத்திருப்பதைக்கண்டு வெறுப்புற்றுப் புத்தரிடம் சரண் புகுந்து, பிக்குவாக மாறினான். இச்சரித்திரத்தைப் பின் வந்தவர்கள் புத்தரோடு இயைத்து, புத்தரே இவ்வாறு செய்தவர் என்று கதை வளர்த்துவிட்டனர். இதுபோன்று பற்பல சரித்திரங்கள் மகா வக்கத்தில் காணப்படுகின்றன. வாரணாசியில் நிகழ்ந்த உபதேசம் முதலியனவும் இம்மகா வக்கத்தில் உள்ளன. இவ் வக்கத்தின் பிற்பகுதியில் புத்தர் தமது நகரத்திற்கு மீண்டதும் அங்கே தமது புத்திரனாகிய இராகுலனைப் பௌத்த சங்கத்தில் சேர்த்ததும் கூறப்படுகின்றன.

சுள்ள வக்கத்தில் அநாத பிண்டகன் என்ற பெருஞ் செல்வனது வரலாற்றைக் காணலாம். சங்கத்திற்கு ஓர் ஆராமம் உதவியவன் இவனே. அன்றியும் புத்தருக்குப் பகைவனாய்த் தோன்றிய தேவதத்தன் வரலாறும், சங்கத்தில் பிக்குணிகள் சேர்க்கப்பட்ட வரலாறும் இதன்கண் உள்ளன.

முன்னுரையாக அமைந்த வரலாற்றுப் பகுதிகளில் பல சிறந்த சரித்திரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒரு சில, பிக்குக்கள் ஒருவர்க்கொருவர் உதவ வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. வேறு சில, முற்காலத்து மக்களது தினசரி வாழ்க்கையை நமக்கு உணர்த்துகின்றன. இதற்கு உதாரணமாக உபாலி என்ற சிறுவனது சரித்திரத்தைக் கூறலாம். இச்சிறுவன் எவ்வகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இவனது பெற்றோர்கள் ஆலோசிக்கத் தொடங்கினர். எழுத்து வேலையை மேற்கொண்டால் கை நோகும்; கணக்கு வேலையிலே மார்பு வலி உண்டாகும்; சித்திரம் எழுதுவதிலே கண்கள் கெட்டுப் போய்விடும். ஆகவே, பிக்கு வாழ்க்கையை அவன் மேற்கொள்ளும்படி செய்தலே தக்கது. இதைக் காட்டிலும் சிறந்த ஜீவனோபாயம் இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். ஒரு சில கதைகள் நாகரிக வரலாற்றை உணர்த்துவதுடன் நகைச்சுவை சிறந்தும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக, மகா வக்கம் 8-ம் பகுதியில் காணப்படும் ஜீவக வைத்தியனது வரலாற்றைக் கூறலாம். இவ்வரலாற்றில் இவனது மதிவன்மையும் சாமர்த்தியமும் புலனாகின்றன.

இக் கதை போன்றவையேயன்றி ஒழுக்க நியமம் முதலியவற்றைக் கூறுமிடத்தும் எளிய முறையில் வேடிக்கையாக அமைந்த கதைகளையும் காணலாம். இம் முறையில் கூறியவற்றுள் ஒன்று வருமாறு :

பிக்குக்களே! வெகு காலத்திற்கு முன்பு இமயமலைச் சாரலில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதன் அருகே ஒரு புறா, ஒரு குரங்கு, ஓர் யானை : இவை மூன்றும் மிக்க நட்புரிமை கொண்டு வாழ்ந்து வந்தன. ஆனால் ஒன்றை யொன்று கௌரவியாமலும், நம்பிக்கையின்றியும், மரியாதை யின்றியும் வாழ்ந்தன. ஒரு முறை தமக்குள் எது வயதில் மூத்தது என்று ஆராயத் தொடங்கின. அவ்வாறு ஆராயத் தொடங்கி, மூன்றிலும் மூத்துள்ளதனைக் கௌரவித்து வணங்கி வாழ்வோம் என்றும், அதன் சொற்படி ஒழுகுவோம் என்றும் இவைகள் தமக்குள் உறுதி கூறின. இதன்படி புறாவும் குரங்கும் யானையினிடத்தில், 'நண்பனே! உனது நினைவு எவ்வளவு தூரம் செல்லுகிறது?'' என்று கேட்டன. அதற்கு யானை, 'நண்பர்களே! நான் சிறுவனாயிருந்த பொழுது இந்த ஆலமரத்தின் மேலே நடந்திருக்கிறேன்; அதை எனது பெருந் தொடைகளுக்கு இடையே வைத்திருக் கிறேன். அதனுடைய உச்சிக் கொம்பு என் வயிற்றைத் தடவும் அளவுதான் உயர்ந்திருந்தது' என்று கூறியது. பின்னர் புறாவும் யானையும் சேர்ந்து குரங்கினிடத்தில் இக்கேள்வியைக் கேட்டன. 'நண்பர்களே! நான் சிறுவனா யிருக்கும் பொழுது ஒரு முறை பூமியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கிருந்தபடியே இவ் ஆலமரத்தின் உச்சிக் கொம்பைக் கறித்துத் தின்றிருக்கிறேன். இவ்வளவு தூரம் எனக்கு ஞாபகம் இருக்கிறது' என்று குரங்கு கூறிற்று.

பிற்பாடு, குரங்கும், யானையும் சேர்ந்து இக் கேள்வியைப் புறாவினிடத்தில் கேட்டன. அது 'நண்பர்களே! அதோ காணும் வெளியிடத்தில் முன்பு ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. ஒரு நாள் நான் அதன் பழமொன்றைத் தின்று அதன் விதையை எச்சமாகக் கழித்தேன். அந்த விதையி லிருந்துதான் இந்தப் பெரிய ஆலமரம் உண்டாயிருக்கிறது. ஆதலால் உங்கள் இருவரைக் காட்டிலும் நான்தான் மிக மூத்தவன்' என்று கூறியது. இதைக் கேட்டதும் யானையும் குரங்கும் அந்தப் புறாவைப் பார்த்து, 'நீ தான் நமக்குள் மூத்தவன். ஆதலால் இன்று முதல் உன் சொற்படி கேட்டு, உன்னைக் கௌரவித்து வணங்கி வருவோம்' என்று சொல்லின.

இந்தக் கதை புத்தர் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளது.

சிறந்த தூய ஒழுக்கங்களைப் பற்றிய வரலாறுகளும் அங்கங்கே காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாகத் தீர்க்காயு

என்பவனது சரித்திரத்தைக் கூறலாம். இவன் தனது பெற்றோர்களைக் கொன்றுவிட்ட பிரமதத்தன் என்ற அரசன்மீது பழிக்குப் பழி வாங்கும் கருத்துடையவனாகப் பெரிதும் முயன்று வந்தான். ஒரு முறை பிரமதத்தன் இவன் கையில் சிக்கிக் கொள்ள நேர்ந்தது. அத்தருவாயில் அவனைக் கொல்வதற்காக எடுத்த வாளை மீண்டும் உறையிலிட்டுப் பழி தீர்க்கும் எண்ணத்தை அறவே கைவிட்டுவிட்டான்.

இவ்வகை வரலாறுகளேயன்றி, சிறந்த உவமானங்களும் உபதேசங்களின் இடையிடையே காணப்படுகின்றன. உதாரணமாக, சுள்ள வக்கத்தில் (IX, 1) கடலுக்குரிய எண்வகைக் குணங்களும் பௌத்த தர்மத்திற்கும் சங்கத்திற்குமுரிய எண்வகை இயல்புகளோடு ஒப்பிடப்படுகின்றன. இந்த இடத்தில்தான் ஒரு பிரபலமான கருத்துக் காணப்படுகிறது.

> பிக்குக்களே! பெரிய சமுத்திரத்திற்கு ஒரே சுவைதான் உண்டு. அதுதான் உவர்ப்புச் சுவை. இதுபோல, பிக்குக்களே! நமது சமயத்திற்கும், ஒழுக்க நியமங்களுக்கும் ஒரே ஒரு சுவைதான் உண்டு. வீடுபேறு என்பதுதான் அந்தச் சுவை.

விநயபிடகம் வேதத்தைச் சார்ந்த பிராமணங்களோடு ஒருவாறு ஒப்பிடத் தக்கது. இவையிரண்டிலும் விதியும், பொருள் விளக்கமும் (அர்த்த வாதம்) அடுத்தடுத்துக் காணப்படுகின்றன. விநயபிடகத்துப் பொருள் விளக்கப் பகுதி பரிபாஷை மயமாகவுள்ளது; ஆனால் அங்கங்கே சிறந்த கதைப் பாடல்களும் உள்ளன.

விநயபிடகத்தின் இறுதிப் பகுதியாகவுள்ள பரிவாரம் மிக மிகப் பிற்பட்டது. இதனை இயற்றியவர் இலங்கையிலுள்ள ஒரு பிக்குவாக இருக்க வேண்டும் என்று வின்டர்நீட்ஸ் கருதுகிறார். இதிலே வினாவிடைகள், அகராதிகள், பிற்சேர்வுகள் முதலியன காணப்படுகின்றன. வேதம், வேதாங்கங்களிலுள்ள அனுக்கிரமணிகளோடும், பரிசிஷ்டங்களோடும் இப் பகுதியை ஒப்பிடலாம். இவை முழுவதும் கேள்வியும் விடையுமாக அமைந்திருப்பது அபிதம்ம பிடகத்தை நமக்கு ஞாபகமூட்டுகிறது. இரண்டும் ஒரே காலத்தில் தோன்றியனவாகலாம்.

## II. ஸுத்த பிடகம்

பௌத்த சங்கத்தைக் குறித்துச் சிறந்த ஆதாரமாக விநய பிடகம் அமைந்திருத்தல்போல, பௌத்த தருமத்தைக் குறித்துச் சிறந்த ஆதார நூலாக விளங்குவது ஸுத்த பிடகமாகும்.

'ஸுத்த' என்ற பாலிச் சொல் சூத்திரம் என்பதேயாம். இதிலே உரையாடல்களும், கதைகளும், பொன்மொழிகளும், கவிதைகளும் காணப்படுகின்றன. பௌத்த சமயத்தால் விளைந்த மிகச் சிறந்த இலக்கியமாகவும் இது கருதத்தக்கது.

ஸுத்த பிடகத்தில், ஐந்து நிகாயங்கள் அல்லது தொகுதிகள் உள்ளன. முதல் நான்கு நிகாயங்களில் புத்தரது உபதேசங்கள் காணப்படுகின்றன. இந்த உபதேசங்களில் புத்தரும் சில சமயங்களில் அவரது மாணாக்கர்களும் பேசிய சொற்பொழிவுகள் சமய சந்தர்ப்பத்தை விளக்கும் சுருங்கிய முன்னுரையுடன் காணப்படுகின்றன. இவையேயன்றி உரையாடல்களும் கதைப்பகுதிகளும் உள்ளன. ஸுத்தங்கள் உரைநடையிலேயே அமைந்திருக்கின்றன. ஒரோ விடங்களில் உரைநடையின் இடையிலே காதைகள் அல்லது பாடல்களும் உள்ளன. இப்பாடல்களில் சில, பிற நூல்களிலிருந்து மேற்கோளாகவும், சில, புதியனவாகப் பாடிச் சேர்க்கப் பெற்றனவாகவும் உள்ளன. இவ் அமைப்பு உரைநடைக்கு ஒரு தனிப்பட்ட கௌரவத்தைத் தருகிறது.

### 1. தீக நிகாயம்

நெடிய உபதேசங்களின் தொகுதி என்று இது பொருள்படும். இதில் மிக நீண்ட ஸுத்தங்கள் 34 உள்ளன. ஒவ்வொரு ஸுத்தமும் தர்மத்திற்குரிய ஒன்று அல்லது பல விஷயங்களை நுணுக்கமாக அறிவிக்கின்றது. இந் நிகாயம் மூன்று தனி நூல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் நூல் சீலக் கந்தவக்கம் என்பர். இது சீலத்தை உணர்த்துகிறது. இரண்டாவது நூல் மகாவக்கம் என்பர். இது அளவில் மிகப் பெரிது. ஸுத்தங்களிற்

---

1. ஸுத்த பிடகம்

| தீக நிகாயம் | மஜ்ஜிம நிகாயம் | ஸம்யுத்த நிகாயம் | அங்குத்தர நிகாயம் | குத்தக நிகாயம் |
|---|---|---|---|---|

குத்தக நிகாயம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | குத்தகபாடம் | 6. | விமான வத்து | 11. | நித்தேசம் |
| 2. | தம்ம பதம் | 7. | பேதவத்து | 12. | படிஸம்பிதா மக்கம் |
| 3. | உதானம் | 8. | தேர காதை | 13. | அபதானம் |
| 4. | இதிவுத்தம் | 9. | தேரிகாதை | 14. | புத்தவம்சம் |
| 5. | ஸுத்தநிபாதம் | 10. | ஜாதகம் | 15. | சர்யாபிடகம் |

பெரும்பாலன 'மகா' என்று தொடங்குகின்றன. மூன்றாவது நூல் பாடிகவக்கம் என்று பெயர் பெறும். இது பாடிக ஸுத்தம் என்பதனோடு தொடங்குகிறது.

தீக நிகாயம்

சீலக் கந்த வக்கம் | மகாவக்கம் | பாடிகவக்கம்

முதல் நூல் முழுமையும் உரை நடையில் உள்ளது. இரண்டாவது, மூன்றாவது நூல்களில் ஒரு சில பகுதி உரை நடையிலும், பல பகுதிகள் உரையும் பாட்டும் கலந்த நடையிலும் அமைந்திருக்கின்றன. பாடல்களில் கதைப் பகுதியாகச் சிலவும், சிறந்த கருத்துக்களை உட்கொண்டனவாகச் சிலவும் உள்ளன.

முதலாவது சீலக் கந்தவக்கத்திலுள்ள ஸுத்தங்கள் அருக பதவியை அளிக்கும் சீலம், சமாதி, பிரக்ஞை முதலியவற்றை விவரிக்கின்றன. புத்தரது நீதிக் கொள்கைகள் பலவும் அந்தணர்களுடைய கொள்கைகளோடு முரண்படுவனவாகும். உதாரணமாக, முதலாம் ஸுத்தம் பிரம்மஜால ஸுத்தம் என்று பெயரிடப் பட்டுள்ளது. இதன் பொருள் அந்தணரது சூழ்ச்சிவலை பற்றிய பிரசங்கம் என்பதாகும். அந்தணத் துறவிகளுடைய சொற்கள், செயல்கள், வாழ்க்கை நெறிகள் முதலியவற்றைப் பௌத்த பிக்குக்கள் பின்பற்றுதல் கூடாது என்று இதில் உபதேசிக்கப் படுகிறது.

இரண்டாம் ஸுத்தம் சாமண்ணபல ஸுத்தம் என்று பெயர் பெறும். இதில் துறவிகள் அடையும் பேறுகள் விளக்கப்படுகின்றன. பௌத்த சமயத்திற்குப் புறம்பான பல சமயங்களுக்கும் உரிய கொள்கைகளை இது விளக்குகிறது. மூன்று முதலிய ஸுத்தங்கள் வருணங்களைக் குறித்தும், வைதிகக் கருமங்களாகிய யாகம் முதலியவற்றைக் குறித்தும் நகைச்சுவையுடன் கூறுகின்றன. பின்னர், ஏதுக்களைக் குறித்து 16-வது மகா நிதான ஸுத்தத்திலும், தியானம் முதலியவற்றைக் குறித்து 22-வது மகா சதிபட்டான ஸுத்தத்திலும் விரிவான விளக்கம் உள்ளது. நால்வகை வாய்மைகளைக் குறித்தும் இந்த ஸுத்தம் உணர்த்துகிறது. 29-வது சிகாலோ வாத ஸுத்தத்தில், இல்லறத்திலுள்ள உபாசகர்களது கடமைகள் முற்றக் கூறப்படுகின்றன.

தீக நிகாயத்தில் மிக முக்கியமான ஸுத்தம் 16-வது மகாபரிநிர்வாண ஸுத்தம் என்ற பெயர் கொண்டதாகும். இதில் புத்தர் வாழ்க்கை வரலாற்றின் இறுதிப் பகுதியும், அவர் இறுதிக்

காலத்தில் கூறிய உபதேசங்களும் அவரது மரணமும் உரைக்கப் படுகின்றன. புத்தரது வரலாறுகள்பற்றி யெழுந்த நூல்களுள் இதுவே மிகப் பழமையானதென்று கொள்ளுதல் வேண்டும். புத்தர் தமக்குக் கிடைத்த அரும்பெறல் ஞானத்தைக் கையில் இறுகப் பொதிந்து வைத்துக்கொண்டவரல்லர்.

தமக்குத் தெரிந்தவை அனைத்தையும் எல்லார்க்கும் பகிரங்க மாகக் கூறியவரே. பௌத்த சங்கம் தாம் இன்றியே நடைபெற வேண்டும் என்பதும் அவரது கருத்து. இது பற்றியே ஆனந்தர் என்னும் தமது மாணவர்க்கு, 'நீயே உனக்கு விளக்குப் போன்றவன். நீயே உனக்குப் புகலிடம்; பௌத்த தர்மத்தை ஊனது விளக்காகக்கொண்டு அதனை இறுகப் பற்றிக்கொள். அதனையே இறுகப் பற்றி உனது புகலிடமாக்கிக் கொள்' என்று கூறினார்.

சீலக் கந்தவக்கம் என்னும் முதல் நூலிலுள்ள பல பகுதிகளும் புத்தரை மனிதராகவே கொண்டு வருணிக்கின்றன. ஆனால், 14-வது மகா அபதான ஸுத்தம் முதலியவற்றில் புத்தரது அற்புதச் செயல்களைக் குறித்தும், அறுவகைப் புத்தர்களைக் குறித்தும் பல செய்திகள் காணப்படுகின்றன. இந்த அபதான ஸுத்தத்தைப் போலவே, லக்ஷண ஸுத்தத்திலும் (30) மகா புருஷர்க்குரிய 32 லக்ஷணங்களும் விரிவாக உணர்த்தப்படுகின்றன. புத்தர் தியானத்தினால் பல வகையான அற்புத ஆற்றல்களையும் (ரித்திகள்) பெறலாம் என்று நம்பியிருந்தவரே. என்றாலும், அவற்றைச் சாதாரண மக்களின் முன் நிகழ்த்தித் தங்கள் பெருமையைக் காட்டிக் கொள்ளுதல் தக்கதன்று என்ற கருத்துடையவர். இவ்வாறு செய்யும் பிக்குக்கள் பொருளின் பொருட்டுத் தங்கள் உருவ நலத்தைப் பகட்டிக் காட்டும் வேசியர் களுக்கு ஒப்பாவர் என்று ஓரிடத்தில் கூறுகிறார்.

பௌராணிக வடிவில் அமைந்த ஸுத்தங்களும் (17-31) இதில் உள்ளன. சிவனையும் விஷ்ணுவையும் இந்திரன் வணங்கு வதாக நம் புராணங்கள் கூறுவதுபோல, இவ்வகை ஸுத்தங் களிலும் இந்திரன் முதலிய தெய்வங்கள் புத்தரை வணங்கின ராகக் கூறப்படுகிறார்கள். சக்கபண்ஹ ஸுத்தம் என்ற பகுதி (21) இங்கே நோக்கத்தக்கது. இதில் இந்திரன் புத்தரை அணுகு வதற்குப் போலும் அஞ்சி நிற்கிறான். புத்தர் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு தன்னுடைய கந்தர்வர்களுள் ஒருவனை முற்பட அனுப்புகிறான். அவன் சென்று ஒரு காதற் பாட்டைப் பாடு கிறான்! பின் புத்தர் இந்திரனை அன்போடு வரவழைத்து அவனுக்குத் தமது தருமத்தை உபதேசிக்கிறார். சக்கவத்தி ஸீஹநாத ஸுத்தத்தில் (26) புத்த மைத்திரேயரைப்பற்றி

உரைக்கப்பட்டுள்ளது. புராணங்களிற்போல உலகத் தோற்றம் முதலியனவும் ஒரு ஸூத்தத்தில் (27) கூறப்படுகின்றன. ஆனால், நிர்வாணம் அடைவதற்கு வர்ணம் யாதொரு தடையும் ஆக மாட்டாது என்பதுவே புத்தர் கொண்ட கொள்கை.

இந்தத் தீகநிகாயம் ஓர் ஆசிரியரால் இயற்றப்பட்டதென்று கூறுதற்கில்லை. முரண்பாடில்லாத கொள்கைகளைக் கொண்டுள்ளது என்றும் கூற முடியாது. காலத்தால் முற்பட்ட பகுதியும் பிற்பட்ட பகுதியும் இதனகத்தே உண்டு. ஆதலால், இந்த நிகாயத்தை மட்டும் வைத்துக்கொண்டு பௌத்த சமயத்தின் ஆதிக் கொள்கைகளைத் துணிவது தகுதியன்றாம்.

**2. மஜ்ஜிம நிகாயம்**

இது நெடுமையும் குறுமையும் இல்லாதபடி மத்திம தரத்தில் அமைந்த ஸூத்தங்களின் தொகுதியாகும். மஜ்ஜிமம் என்ற பாலிச் சொல் மத்திமம் என்ற வடசொல்லே. இதில் 152 பிரசங்கங்களும் உரையாடல்களும் உள்ளன. இதிலுள்ள ஸூத்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள்பற்றி அமைந்துள்ளனவே. இப்பொருள்களும் பலதிறப்பட்டன. பௌத்த தர்மத்தைக் குறித்தும், நால்வகை வாய்மைகளைக் குறித்தும், கர்மத்தைக் குறித்தும், அவாவின் பயனின்மையைக் குறித்தும், ஆத்மா ஒன்று உண்டென்பதற்குத் தடையான ஆக்ஷேபங்களைக் குறித்தும், நிர்வாணத்தைக் குறித்தும், பற்பல தியானம் முதலியவற்றைக் குறித்தும் இந்நிகாயத்தில் காணலாம். இந்த உபதேசங்கள், கேட்பவர்களுக்குச் சலிப்புண்டாகும்படி இருந்தாலும், அவற்றிற்கு முன்னும் பின்னுமாக அமைந்த உரையாடல்கள், கதைகள் முதலியவற்றால் கவர்ச்சிகரமாய் உள்ளன. சொல்லக் கருதிய பொருள்கள் உவமைகள் மூலமாக வற்புறுத்தி அழகாகச் சுவையுடன் சொல்லப்படுகின்றன.

கதைகளும் பௌராணிக வரலாறுகளும் ஏதேனும் கொள்கையை வற்புறுத்தும் பொருட்டு அங்கங்கே கூறப்படுகின்றன. புத்தரது சிஷ்யரான மொக்கலன் (மௌத்கல்யாயனன்) இந்திரனது சொர்க்கத்திற்குச் சென்ற வரலாற்றை இங்கே குறிப்பிடலாம். மொக்கலன் தனது பெருவிரலை அழுத்தியதும் இந்திரனது அரண்மனை முழுதும் நடுங்கிற்றாம். இதுபோன்ற கதைகள் இந்து சமயத்தைச் சார்ந்த புராணங்களிலும் காணப்படுவனவே. ஒரு சில கதைகள் உண்மையில் நடந்தனவாகலாம். புக்குசாதி என்பவன் பௌத்த சங்கத்தில் சேரவேண்டும் என்று முயன்று உத்தரவு பெற்று, பின் துறவிக்கு வேண்டும் ஓர் உடையையும் யாசக பாத்திரத்தையும் எடுத்து வருவதற்காகச்

சென்றான். செல்லும் வழியில் இவனை ஒரு பசு கொன்றுவிட்டது. இதனைப் புத்தர் தெரிந்து பிக்குவாகாமற் போனாலும் இவன் நிர்வாணத்திற்குத் தகுதியாய் நிர்வாணத்தை அடைந்து விட்டான் என்று கூறினாராம் (140).

நால் வகை வர்ணங்களுக்குள் ஏற்றத்தாழ்வு இல்லை. அவையனைத்தும் தூயனவேயாகும். இதுதான் புத்தரது கொள்கை. இது அந்தணர் கொள்கையோடு மாறுபட்டது. ஆகவே, இவ் வர்ணங்கள்பற்றி அடிக்கடி விவாதம் நடந்திருத்தல் வேண்டும். இவ்வகை விவாதம் ஒன்று அஸ்ஸலாயன ஸுத்தத்தில் காணப்படுகின்றது (93).

சில ஸுத்தங்கள் உரையாடலாயும் உபதேசங்களாயும் இல்லாதபடி வெறுங் கதைகளாகவே உள்ளன. உதாரணமாக, அங்குலி மாலன் என்ற கொள்ளைக்காரனது வரலாற்றைக் கூறலாம் (86). இவன் பிக்குவாகி முடிவில் அருக பதவியையே அடைந்துவிட்டானாம். மகாதேவன் என்ற அரசன் (83) தனது நரைமுடியைக் கண்டதும், அரசு துறந்து, துறவியாயினானாம். பிறிதோர் உதாரணம் ரட்டபால ஸுத்தத்தில் காணப்படுகிறது.

> ரட்டபாலன் என்ற ஓர் அரச குமாரன் பிக்குவாதற்கு விரும்புகிறான். அவனுடைய பெற்றோர்கள் இதற்கு இணங்கவில்லை. ஆனால், தனக்கு அனுமதி தந்தாலன்றித் தான் உண்ணுவதில்லை என்று அரச குமாரன் கூறவே, அவர்கள் இணங்குகிறார்கள். பல ஆண்டுகளுக்குப் பின்னர், பிக்குவின் கோலத்தில் அவன் தனது நகருக்குத் திரும்பி வந்து, அங்கே தனது பெற்றோர்கள் இல்லத்தில் யாசிக்கிறான். அவனுடைய தந்தையால் அவனை அடையாளங் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகையால் அவனை ஏசி வாசலுக்கு அப்பாற் போகும்படி துரத்திவிடச் செய்கிறான். தந்தை, 'முண்டகராயுள்ள இந்தப் பிக்குக்களால் எனது அருமை மகன் இந்த உலகத்தைத் துறந்து போகும்படியாக நேர்ந்து விட்டது' என்று கதறினான். இதற்கிடையில் அரச குமாரனை வளர்த்த தாதி எச்சிலுணவை வெளியில் எறிவதற்கு வருகிறாள். அந்த உணவைத் தரும்படியாகப் பிக்கு யாசித்தபொழுது அவனை அவள் அடையாளங் கண்டு பிடித்துக் கொள்ளுகிறாள். அவனுடைய தந்தைக்கு இவ் விஷயம் தெரிகிறது. உடனே அவனை உள்ளே வந்து உணவு கொள்ளும்படியாக அழைக்கிறான். ஆனால், அவன், 'இன்று பிச்சை ஆகிவிட்டது; இன்று வேறு யாதும் வேண்டாம்' என்று கூறினன். எனினும், மறுநாள் உண்டிக்கு வருவதாக

ஒத்துக் கொள்ளுகிறான். அவனது தந்தை மறுநாள் அவனுக்கு உண்டி பக்குவப்படுத்தியதோடு, ஆடை ஆபராணாதிகளை அவன் உண்ணுமிடத்தில் குவித்து வைத்து, அங்கே அவனது மனைவிமார்களையும் அனுப்புகிறான். ரட்டபாலன், 'தந்தையே! நான் கூறும் நன்மொழிகளைக் கேட்பீராயின், இந்தப் பொன்னாபரணம் முதலியவற்றை வண்டியில் எடுத்துச்சென்று, கங்கையில் மிகுந்த ஆழமுள்ள இடத்தில் கொட்டிவிடும். அதுவே நல்லது. ஏனென்றால், இவற்றால் துன்பந்தான் விளையும்' என்று கூறினன். தன்னடியில் வீழ்ந்து தங்களோடு வாழும்படியாக இரந்து கேட்டுக்கொண்ட தனது மனைவியரை அவன் பொருட் படுத்தவில்லை. உண்டி முடித்துக் கொண்டு வெளியே போய்விட்டான். பிற்பாடு குரு தேசத்திற்குச் சென்றனன். அங்குள்ள அரசன் 'மூப்பும், நோயும், வறுமையுமுள்ளவர் களும், தனது சுற்றத்தார்களை இழந்தவர்களும் பிக்கு வாதற்குக் காரணம் உண்டு. இளமையும், உடல் நலமும் உடையவன் ஒருவன் துறவியாவதற்குக் காரணம் இன்ன தென்று புலப்படவில்லை' என்று கூறினன். ரட்டபாலன் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய வற்றைக் கூறிப் பௌத்த தர்மத்தின் உண்மையை வற்புறுத்துகிறான்.

இதுபோன்ற கதைகளும், கதைகளுக்கிடையே பௌத்த தர்மத்திற்குரிய பொருள்களைப் பட்டிகை முறையிற் கூறும் சூத்திரங்களும் உள்ளன. இக்கதைகளில் பாட்டும் உரையும் கலந்து காணப்படுகின்றன.

இந்த மஜ்ஜிம நிகாயத்தில் பௌத்த சமயத்திற்குரிய பொருள்கள் நன்றாக விளக்கமாதலோடு, முற்காலத்துத் தினசரி வாழ்க்கையை உணர்வதற்குரிய பல வகைக் குறிப்புக்களும் அகப்படுகின்றன. அந்தணர்கள் செய்யும் யாகத்தைக் குறித்து இவற்றில் நாம் அறிகிறோம். முற்காலத்து வழக்கிலிருந்த பல துறவு நெறிகளைக் குறித்தும் நாம் அறிகிறோம். உதாரணமாக, முற்காலத்தில் நாய்த் துறவிகளும், மாட்டுத் துறவிகளும் இருந்தனர். இவர்கள் நாய்கள் போலவும் மாடுகள் போலவும் உண்டு வாழ்ந்தனராவர். இவர்களைக் குறித்து இவர்கள் கதி என்ன என்று புத்தரிடம் கேட்டபொழுது, நாய்த் துறவி நாயாகவும், மாட்டுத் துறவி மாடாகவும் பிறப்பான் என்று கூறி இருவரும் நரகத்திற்குச் செல்வார்கள் என்றாராம்.

பல ஸூத்தங்கள் ஜைன சமயத்திற்கும் புத்தருக்கும் உண்டான தொடர்பை விளக்குகின்றன. ஒரு ஸூத்தம் (76)

அக்காலத்திருந்த நிரீச்சுர வாதக் கொள்கைகளைப் புத்தர் எவ்வாறு மதித்தனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. பல வகையான சமயக் கொள்கைகளையும் சமுதாய வழக்கங்களையும் அங்கங்கே இதிற் காணலாம். உதாரணமாக, குரூரமான தண்டனைகளைக் குறித்து (18) ஒரு ஸூத்தம் வர்ணனை செய்கிறது. குழந்தைகளின் பிறப்பைக் குறித்தும், வளர்ப்பைக் குறித்தும் வேறொரு ஸூத்தம் (38) கூறுகிறது.

தீக நிகாயத்திற்போன்று, இந்த மஜ்ஜிம நிகாயத்திலும் காலத்தால் முற்பட்ட பகுதிகளில் புத்தர் மனுஷ்யராகவே கருதப்பட்டு, ஞானோதயமான பிற்பாடு நிர்வாணத்தை அடைவதற்கு எதிர்நோக்கியிருப்பவராகக் கூறப்படுகிறார். பிற்பட்ட பகுதிகளில் பற்பல அற்புதச் செயல்களும் காணப்படுகின்றன. புத்தர் திடீரென்று தோன்றுவதும், திடீரென்று மறைவதும் இவற்றில் மிகச் சாதாரண நிகழ்ச்சிகளாகச் சொல்லப்படுகின்றன.

ஒரு ஸூத்தம் புத்தர் தெய்வங்களுக்கெல்லாம் மேலானவர் என்று சொல்லுகிறது. மஜ்ஜிம நிகாயத்தின் காலத்திற்கு முன்பும் பௌத்த சங்கங்கள் இருந்தன என்று ஒரு ஸூத்தத்தால் விளங்குகிறது. இதில் 'முன் காலத்தில் விதிகள் சுருங்கியிருந்தன. பிக்குக்கள் அதிகமாயிருந்தனர். இப்பொழுதோ என்றால் விதிகள் அதிகமாயுள்ளன ; பிக்குக்கள் குறைந்திருக்கின்றனர்' என்று கூறப்படுகிறது. மேலே குறித்த அஸ்ஸலாயன ஸூத்தத்தில் யோன காம்போஜர்கள் குறிக்கப்படுகிறார்கள். எனவே அசோகன் காலத்திற்குச் சிறிது முற்பட்ட காலம் இதனால் உணர்த்தப்படுகிறது என்னலாம்.

இத்தொகுதிகள் எந்த முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டன என்பது ஒரு சில ஸூத்தங்களால் விளங்குகிறது. உதாரணமாக, 41-ம் ஸூத்தமும் 42-ம் ஸூத்தமும் முற்றும் ஒருபடித்தாயுள்ளன. வேறிடங்களிலும் இவ்வகையான ஒற்றுமை காணப்படுகிறது. இந்த ஒற்றுமைகளை நோக்குமிடத்துப் பிக்குக்களுக்குச் செய்த உபதேசங்களே இவ்வாறு தொகுக்கப்பட்டன என்று கொள்ளலாம். உபதேசம் செய்து கொண்டிருக்கும் பொழுது தக்கதாக ஒன்றும் தோன்றாமற் போனால், முன்னுள்ள உபதேசங்களையே, வேண்டியபடி சிறிது மாற்றிக்கொண்டு, சொல்லிவிடுதல் இயல்பாகும். தொகை செய்தோர் காலத்தில் அவர்களையடுத்துள்ள உபதேசகர்கள் சொல்லியனவற்றையெல்லாம் இங்ஙனம் தொகுத்து வைத்தனராதல் வேண்டும்.

### 3. ஸம்யுத்த நிகாயம்

மூன்றாவது பெருந்தொகுதி ஸம்யுத்த நிகாயம் என்பது. பொருள் முதலியன பற்றி ஒருசேரத் தொகுக்கப்பட்டுள்ள

பலதொகுதிகளும் இப் பெருந்தொகுதியில் உள்ளனவாம். இதன் கண்ணுள்ள ஸுத்தங்கள் 56 தொகுதிகளாயுள்ளன. இவற்றுள் ஒன்று தேவதா ஸம்யுத்தம். இது தெய்வங்கள் கூறியவற்றின் தொகுதி. ஆனால், இத் தெய்வங்கள் கூறிய பொருள்கள் பலதிறப்பட்டனவாயுள்ளன.

இங்ஙனமே, மாரஸம்யுத்தம் என்பதில் 25 ஸுத்தங்கள் உள்ளன. இந்த ஸுத்தங்கள் ஒவ்வொன்றிலும் மாரன் புத்தரையோ அல்லது அவரது சிஷ்யர்களையோ வசீகரித்து முக்தி நெறியினின்றும் வழுவிச் செல்லும்படி செய்யும் முயற்சிகள் உணர்த்தப்படுகின்றன. இம் முயற்சியில் மாரன் எப்பொழுதுமே தோல்வியுறுகிறான். பிக்குணி ஸம்யுத்தம் என்பதில் பிக்குணிகள் பதின்மர்களை மாரன் நெறிதப்பி ஒழுகச்செய்யும் முயற்சிகளின் வரலாறு கூறப்படுகிறது. இங்ஙனமே மாதுகாம ஸம்யுத்தம் என்ற பகுதியில் காணும் 34 ஸுத்தங்களில் மகளிர்களின் மாண்பும், அவர்களது இழிதகவும் உணர்த்தப்படுகின்றன. சக்க ஸம்யுத்தத்தில் இந்திரன் பக்திமிகுந்த ஒரு பௌத்தனாக வர்ணிக்கப்படுகிறான். வேத காலத்தில் கோபாந்தகனாக விளங்கி, விருத்திரன் என்பவனைக் கொன்ற இத்தெய்வம் சாந்தம், அஹிம்ஸை, தன்னடக்கம் முதலிய சிறந்த குணங்களைப் போதிப்பவனாக மாறிவிட்டது விந்தையே! ஸச்ச ஸம்யுத்தத்தில் நால்வகை வாய்மைகள் உணர்த்தப்படுகின்றன. இறுதியிலுள்ள தம்மசக்க பவத்தன ஸுத்தத்தில் புத்தர் அறவாழியுருட்டி வாரணாசியில் சமயபோதனை செய்த வரலாறு குறிக்கப்படுகிறது.

இந்த ஸம்யுத்தங்களைத் தொகுத்த நெறி அறியற்பாலது. சில ஸம்யுத்தங்கள் பௌத்த தருமத்திலுள்ள முக்கிய விஷயங்களைப் பற்றியனவாகும். வேறு சில ஸம்யுத்தங்கள், தெய்வங்கள், மனுஷ்யர்கள் முதலியவர்களின் வகுப்புப் பற்றியனவாகும்.

இன்னும் சில ஸம்யுத்தங்கள் யாதேனும் ஒரு தலைவன் அல்லது வக்தாவைப் பற்றியனவாகும். இந்த 56 ஸம்யுத்தங்களையும் 5 வக்கங்களாகப் பிரித்துக் கூறுவதும் உண்டு. முதல் வக்கம் நீதி நெறியையும், பௌத்தர்களது லட்சிய வாழ்வையும் பற்றியது. ஏனைய வக்கங்கள் மக்களது அறிவு வரலாற்றையும் அபௌதிகப் பொருள்களையும் முக்கியமாக உணர்த்துவன. இதிலுள்ள மொத்த ஸுத்தங்கள் 2889. ஸுத்தங்கள் இவ்வளவாகப் பெருகியதன் காரணம் ஒரே பொருள் பற்பல நெறிகளைப் பின்பற்றி விளக்கப்பட்டிருத்தலேயாம். சில சமயங்களில் விஷயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வது பொறுக்கக்கூடாத அளவு மிகுதியாயும் இருக்கிறது. உதாரணமாக, ஸளாயதன ஸம்யுத்தத்தைக் கூறலாம்.

முதலாவது வக்கம் கவிதைச் சுவையுள்ளது. இவ்வக்கத்தில் ஒன்றுமுதல் பதினொன்று வரையுள்ள ஸம்யுத்தங்கள் அடங்கி யுள்ளன. இவ் வக்கத்தின் பெயர் ஸகாதா வக்கம் என்பது. காதைகளை (பாடல்களை) உடைமையாலே இவ் வக்கம் இப் பெயர் பெற்றது. இதிலுள்ள தேவதா ஸம்யுத்தத்தில் பல பிசி களும், திட்ப மொழிகளும் (aphorisms) கேள்வியும் விடையுமாகக் காணப்படுகின்றன. மகா பாரதத்தில் யுதிஷ்டிரர் யக்ஷன் கேட்ட வினக்களுக்கு விடையளித்ததுபோல, புத்தரும் ஒரு யக்ஷன் கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்கின்றார். முற்கூறிய மார ஸம்யுத்தமும் பிக்குணி ஸம்யுத்தமும் மிகச் சிறந்த கதைப் பாடல்கள் எனக் கருதப்படுகின்றன.

## 4. அங்குத்தர நிகாயம்

நான்காம் பெருந் தொகுதி அங்குத்தர நிகாயம் என்று பெயர் பெறும். எண் வரிசையில் அமைந்த பல உபதேசங்கள் அடங்கிய தொகுதியே இது. அங்குத்தரம் என்றால் மேலும் ஓர் அங்கம் (உறுப்பு) என்று பொருளாம். இதில் 2308 ஸுத்தங்கள் உள்ளன. இந்த ஸுத்தங்கள் பதினோரு பகுதி அல்லது நிபாதங்க ளாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல் நிபாதம் ஒரு பொருள் பற்றியும், இரண்டாம் நிபாதம் இரு பொருள் பற்றியும், மூன்றாம் நிபாதம் முப்பொருள் பற்றியும், இவ்வாறாகப் பதினோராம் நிபாதம் பதினோரு பொருள்கள் பற்றியும் அமைந்துள்ளன. உதாரணமாக, இரண்டாம் நிபாதத்திலுள்ள ஸுத்தங்களில் ஒருவன் நீக்கவேண்டும் இரு பொருள்களைப் பற்றியும், இரண்டு கரிய பொருள்களைப் பற்றியும், இரண்டு ஒளியுடைப் பொருள்களைப் பற்றியும், வனத்தில் வசித்தற்குரிய இரண்டு காரணங்களைப் பற்றியும், இரண்டு புத்தர்களைப் பற்றியும் இவ்வாறாக இரண்டு வகைப்பட்ட பல பொருள் களும் கூறப்படுகின்றன[1]. இந்தப் பதினொரு நிபாதங்களில் ஒவ்வொன்றும் பல வக்கங்களாகப் பிரிக்கப்பட்டும் உள்ளன. ஒவ்வொரு வக்கத்திலுமுள்ள ஸுத்தங்கள் ஒவ்வொரு பொருளையே பற்றி முற்கூறிய முறையைத் தழுவிக் கூறுவன வாகும். முதல் நிபாதத்திலுள்ள முதல் வக்கத்தில் பத்து ஸுத்தங்கள் உள்ளன; இவைகள் கணவனுக்கும் மனைவிக்கும் இருக்க வேண்டும் தொடர்பினை விளக்குகின்றன. முதல் நிபாதத்திலுள்ள 20-வது வக்கத்தில் 262 ஸுத்தங்கள் உள்ளன; இவை நிர்வாணத்திற்குரிய பலவகையான தியானங்களைப் பற்றிக் கூறுகின்றன.

1. அங்குத்தர நிகாயத்தின் முறை தமிழ் நிகண்டுகளில் 12-ம் தொகுதியோடு ஒப்பிடத் தக்கது.

ஸூத்தங்கள் செல்லும் நெறிக்குக் கீழே வருவது ஓர் உதாரண மாகும்.

பிக்குக்களே ! கெட்டவனது இயல்புகள் யாவை ? நல்லவனது இயல்புகள் யாவை ? இவற்றை நான் உங்களுக்கு விளக்குகிறேன். கேளுங்கள், கவனம் வையுங்கள் ; நான் சொல்லுகிறேன்.

பகவானே ! நல்லது என்று பிக்குக்கள் கூறி, கேட்பதற்குத் தயாராயினர். பகவான் சொன்னார் :

பிக்குக்களே ! கெட்டவனது இயல்புகள் யாவை ? கெட்டவன், பிக்குக்களே ! நன்றி மறந்தவன். செய்ந் நன்றியறிதல் என்பதே அவனுக்குத் தெரியமாட்டாது. இது தான் கெட்டவனிடத்தில் காணப்படுவது, செய்ந்நன்றி யறியாமை : கெட்டவன் இயல்புகள் அனைத்தும் இதனுள் அடங்கியுள்ளன : செய்ந்நன்றி யறியாமையே ஆனால், நல்லவன் செய்ந் நன்றியை அறிந்தவன் நல்லவனிடத்தில் காணப்படுவது இதுதான் : செய்ந் நன்றியறிதல் நல்லவ னிடத்தில் காணப்படும் இயல்புகள் அனைத்தும் செய்ந் நன்றியறிதலில் அடங்கி விடுகின்றன.

இருவர் செய்துள்ள நன்றிகளுக்கு ஒருவன் ஒருபொழுதும் கைம்மாறு செய்ய முடியாது. அவர்கள் யார் என்றால் தாயும் தந்தையும். பிக்குக்களே ! ஒருவன் தனது தாயை ஒரு தோளிலும், தந்தையை மற்றொரு தோளிலும் தூக்கி வைத்துக் கொண்டு ஆயுட் காலம் முழுமையும் இவ்வாறே வாழ்ந்தாலும், நூறு ஆண்டு இவ்வாறு வாழ்ந்தாலும், அவர் களுக்குத் தைலம் தேய்த்து மேனியை அழுத்தித் தடவி, ஸ்நானம் செய்வித்துத் தேய்த்து அழுக்ககற்றினாலும், பெற்றோர்கள் தன்மீது மல ஜலங் கழிக்கும்படி நேர்ந் தாலும், அவர்கள் செய்த நன்றிக்கு இவன் செய்வது ஈடாக மாட்டாது. பிக்குக்களே ! பெற்றோர்களை அதிகார பதவியில் உன்னத நிலையில் வைத்துப் பலவகைச் செல்வங் களும் நிறைந்த இந்த உலகம் முழுமையும் அவர்கள் ஆளும் படி செய்தாலும் போதியதாகாது ; ஒப்பாக மாட்டாது. ஏனென்றால், பிக்குக்களே ! பெற்றோர்கள் தங்கள் குழந்தை களுக்கு அவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறார்கள். அவர் களைப் பிறப்பிக்கின்றார்கள். போஷித்து நன்றாய் வளர்க் கிறார்கள். இந்த உலகத்தை அவர்களுக்கு விளக்கு கிறார்கள்.

ஆனால், பிக்குக்களே ! ஒருவனது பெற்றோர்கள் உண்மைச் சமயநெறியைப் பின்பற்றாதவர்களாயிருந்து அவன் அவர்

களை உண்மை நெறியில் செல்லும்படியாகச் செய்வித்து, அவர்களை அந் நெறியில் உறுதிகொண்டு நிற்கும்படி செய்தாலும், அல்லது அவர்கள் தீயோராயிருந்து அவன் அவர்களை நன்னெறியில் ஒழுகும்படியாகச் செய்து, அந் நெறியில் ஊக்கங்கொண்டு உறுதி பூண்டிருக்கும்படி செய்வானானாலும், அல்லது அவர்கள் உலோபிகளாயிருந்து அவன் அவர்களைச் சுயநலம் கருதாதவர்களாகச் செய்து, அதிலே ஊக்கங்கொண்டு உறுதி பூணும்படியாகச் செய்வானானாலும், அல்லது அவர்கள் உள்ளுணர்வில்லாதவராயிருந்து, அவன் அவர்களை நேர்மையான உள்ளுணர்வு கொள்ளும்படி செய்து, அதிலே ஊக்கங் கொண்டு உறுதி பூணச் செய்வானானாலும், அப்பொழுது பிக்குக்களே! அவன் பெற்றோர்களுக்கு நன்றி செய்தவனாவான். அவர்கள் செய்துள்ள நன்றிகளுக்கு அதிகமாகவே கைம்மாறு செய்தவனாவான்.

இவ்வாறு விரிந்து செல்லாதபடி சுருக்கமாக அமைந்த ஸுத்தங்களும் உள்ளன. உதாரணம் வருமாறு :

மூன்று பொருள்கள் வெளிப்படையாயன்றி மறைவிலே செய்கைகள் நிகழ்த்தும். எந்த மூன்று? பெண்ணினம், பிக்குக்களே! வெளிப்படையாயன்றி மறைவிலே செயல் செய்யும். அந்தணரது மந்திரங்கள், வெளிப்படையாயன்றி மறைவிலே செயல் செய்யும். அசத்தியமான சமய தருமங்கள் வெளிப்படையாயன்றித் தொழில் புரியும். இவைகள்தான் பிக்குக்களே! வெளிப்படையாயன்றி மறைவிலே செயல் செய்பவை.

மூன்று பொருள்கள் மறைவிலேயன்றி வெளிப்படையாக ஒளிவிடுகின்றன. சந்திர மண்டலம், பிக்குக்களே! மறைவிலேயன்றி வெளிப்படையிலே ஒளிவிடுகிறது. சூரிய மண்டலமும் மறைவிலேயன்றி வெளிப்படையிலே ஒளிவிடுகிறது. புத்தரால் வெளியிடப்பட்ட தர்மமும் சங்க நியமங்களும் மறைவிலேயன்றி வெளிப்படையிலே ஒளிவிடுகின்றன. இந்த மூன்றுந்தான், பிக்குக்களே! மறைவிலேயன்றி வெளிப்படையிலே ஒளிவிடுகின்றன.

ஸுத்தங்களிற் பல, பெண்களைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால், பிற சமயங்களிலுள்ள ஞானிகளையும் ஆசாரியர்களையும் போல, பௌத்த பிக்குக்களும் அப் பெண்களது தீய இயல்புகளையே கூறுகின்றனர். புத்தரது அன்புடை மாணாக்கரான ஆனந்தர் ஒருவர்தான் மகளிரது கட்சியை ஆதரித்துப் பேசியவர். அவர் ஓயாது வற்புறுத்தி வந்தமையினாலேதான்

பிக்குணிகள் சங்கத்தில் சேர்க்கப்படலாயினர். இதன் பொருட்டு இராஜ கிருஹத்தில் கூடிய சங்கத்தில் பலரும் இவரைக் கண்டித்தனர்.

நான்காவது நிபாதத்தில் பெண்களின் விடுதலைக்காகப் பரிந்து பேசும் தற்காலத்து அறிஞர்களைப்போல ஆனந்தர் தமது குருவிடம் பின்வருமாறு கூறுகின்றனர்:

> பகவானே! பொதுக் கூட்டங்களில் மகளிர்க்கு இடமில்லாமற் போனதன் காரணம் யாது? அவர்கள் ஒரு தொழில்துறையிலும் இடம் பெறாமைக்குத் தான் காரணம் யாது? ஏதேனும் ஒரு தொழிலை மேற்கொண்டு ஊதியம் பெற்று உயிர் வாழாமையின் காரணம்தான் யாது?
>
> ஆனந்தரே! பெண்கள் வெகுளிகள். ஆனந்தரே! பெண்கள் அசூயைக் குணம் படைத்தவர்கள். ஆனந்தரே! பெண்கள் அழுக்காறு உடையவர்கள். ஆனந்தரே! பெண்கள் மடமை வாய்ந்தவர்கள். ஆனந்தரே! அவர்கள் பொது சபையில் இடம் பெறாமைக்கும், தொழிலை மேற்கொள்ளாதமைக்கும், தனிப்பட ஊதியம் பெற்று வாழாமைக்கும், இவை தாம் காரணம்.

இந்த நிபாதங்கள் அனைத்தும் பௌத்த சமயப் பொருள்கள் பற்றியன என்று நினைத்தற்கு இல்லை. அதனோடு சம்பந்த மற்ற பல பொருள்களைப் பற்றியும் அங்கங்கே இவை கூறுகின்றன. உதாரணமாக, எட்டாவது நிபாதத்தில் (27),

> பிக்குக்களே! இங்கே எட்டு வகையான வலிமைகள் இருக்கின்றன. அழுகைதான் குழந்தையின் வலிமை. ஓயாது கடிந்துரைத்தலே பெண்களது வலிமை. ஆயுதங்களே திருடர்களது வலிமை. ஆட்சியே அரசர்களது வலிமை. பெருமிதமே மூடர்களது வலிமை. அடக்கமே ஞானிகளது வலிமை. சிந்தனையே கல்வியாளர்களின் வலிமை. சாந்தமே துறவிகளுக்கும் அந்தணர்களுக்கும் வலிமை.[1]

---

1. இங்குக் கூறியவை போன்ற கருத்துக்களும் பொருள்களை அடுக்கிக் கூறும் முறையும் கீழ்க் கணக்கு நூல்களில் முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், நான்மணிக் கடிகை, சிறுபஞ்ச மூலம், ஏலாதி என்பனவற்றில் காணப்படுகின்றன. ஜைனர்களது ஸ்தானாங்கத்திலும், ஸமவாயாங்க சூத்திரங்களிலும் இம்முறையே காணப்படுகிறது. மகாபாரதத்தில் (V, 33, 56-106) வரும் விதுர நீதியிலும் இந்த அங்க முறைதான் காணப்படுகிறது. இந்த இதிகாசத்தில் 3-ம் பருவத்தில் 134 முதல் 136 முடியவுள்ள அத்தியாயங்களில் வந்தி என்பவனுக்கும் அஷ்டா வக்கிரனுக்கும் நிகழ்ந்த ஸம்வாதத்திலும் இந்த எண்முறை கையாளப்படுகிறது. மேலை நாடுகளிலும் கத்தோலிக்கர் மாலைப் பிரார்த்தனையிலும் யூதர்களுடைய நூல்களிலும் இம்முறை உள்ளது.

இந்த அங்குத்தர நிகாயம், புத்தரைத் தெய்வமாகவே கொண்டு வணக்கம் நிகழ்ந்தபொழுதுதான் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இதனை நோக்கும்போது இது அபிதம்ம பிடகத்திற்குச் சிறிது முன்பு தோன்றிய தென்றல் பொருந்தும். அங்கங்கே ஒரே வகையான வார்த்தைகளும் வாக்கியங்களும், வாக்கிய பத்திகளும் திரும்பத்திரும்ப வேறுபாடின்றிக் காணப்படுகின்றன. ஞாபகத்தில் உபதேசங்களை நன்கு பதிய வைத்தற்பொருட்டும் இப்புனருத்திகள் ஏற்பட்டிருத்தல் கூடும். சில இடங்களில் உரையாடற் பகுதிகள் சுருக்கமாகவும் அழகாகவும் தெளிவாகவும் உள்ளன. மேற்குறித்த நால்வகை நிகாயங்களிலும் மிகப் புராதனமான பொருள்களும் உண்டு; மிகப் பிற்பட்ட பொருள்களும் உண்டு என்றே கொள்ளற்பாலது. இவற்றில் உரையாடற் பகுதிகளும் காணப்படுகின்றன. இப் பகுதிகள் தம் காலத்தில் புத்தர் எவ்வாறு வாதம் புரிந்து வந்தனர் என்பதை விளக்குகின்றன.

முற்பட, தம்மை எதிர்க் கட்சியோடு முற்றும் ஐக்கியப் படுத்திக்கொண்டு, அக் கட்சியின் கருத்துக்களையே எடுத்து விவரித்து, அக் கட்சியைச் சார்ந்தவனைச் சிறிது சிறிதாகத் தமது கொள்கையை மேற்கொள்ளும்படியாகச் செய்து விடுவது புலப்படுகிறது. புத்தர் உபதேசம் செய்து வந்த முறையையும் இப் பகுதிகள் உணர்த்துகின்றன. உவமைகளையும் உவமானக் கதைகளையும் நிரம்ப எடுத்துக் கூறி மக்களை வசீகரிப்பதுதான் இந்த முறை. உவமை முதலியன உண்மையில் தர்க்கத்திற்குரிய ஏதுக்கள் ஆகாமற் போனாலும், அவைகள் உபதேசங்களுக்கு நயமும் சுவையும் ஊட்டுவதுடன் கேட்போர்களை எளிதில் வசீகரிக்கும் தன்மையும் வாய்ந்தவை. இதனால், இந்த ஸூத்தங்களில் இலக்கியச் சுவை மிகுதியாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, புத்தர் மாலுங்கியாரது புதல்வர்களோடு நிகழ்த்திய உரையாடலைக் கூறலாம். இவர்கள் பிறப்பு, இறப்பு முதலிய பொருள்களைக் குறித்துப் பல கேள்விகள் கேட்டனர். இதற்கு விடையாகப் புத்தர் கூறியது வருமாறு:

> ஒருவன் விஷமூட்டிய அம்பினால் எய்யப்பட்டு வருந்திக் கொண்டிருக்கிறான். அவனுடைய நண்பர் ஒரு வைத்தியரிடம் விரைந்து சென்று அவரை அழைத்து வருகிறார். வைத்தியர் அம்பை வெளியே உருவி எடுக்கப்போகும் சமயத்தில், காயமுற்றவன், 'நிறுத்துங்கள்; நான் கேட்கிற கேள்விகளுக்கு விடை சொன்னதற்கு அப்புறம்தான் அம்பை நீங்கள் எடுத்துவிடலாம். யார் இந்த அம்பை எய்தது? க்ஷத்திரியனா, பிராமணனா, வைசியனா, சூத்திரனா?

அவன் எந்தக் குலத்தைச் சார்ந்தவன்? அவன் நெடியவனா அல்லது குறியவனா? அம்பு எவ்வகையைச் சார்ந்தது? அதன் இயல்பு என்ன?' என்று பல கேள்விகள் கேட்கிறான். அப்பொழுது என்ன நேரிடும் என்று கேட்க வேண்டுமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லி முடிக்குமுன் அவன் இறந்து விடுவான். இதைப்போலவேதான், உலகத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் குறித்துக் கேள்விகள் கேட்கும் மாணாக்கனும் துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பவற்றின் உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு முன் இறந்து விடுவான் என்பது நிச்சயம்.

இந்த உவமானக் கதையைப் போலவே வேறு பல உவமானக் கதைகளும் வந்துள்ளன. தீக நிகாயத்தில் (13, 15) அந்தணர்கள் பிரமத்தோடு ஐக்கியப்படுதலாகிய முத்தி மார்க்கத்தைத் தேடுவது குறித்துப் புத்தர் கூறுவது குறிப்பிடத்தக்கது:

> அந்தணர்களுக்கும் தெரியமாட்டாது; அவர்கள் ஆசாரியருக்கும் தெரியமாட்டாது; மிகப் பூர்வ காலத்துள்ள ரிஷிகளும் பிரமத்தைத் தெரிந்து கொண்டதில்லை. அவர்களது முயற்சி குருடர்கள் கைகோத்து நின்று வழிகாட்ட முயல்வது போலத்தான்.

என்றனர். இக் கருத்து திருமூலர் திருமந்திரத்தில் வந்துள்ளமை அறியத்தக்கது.[1]

இங்ஙனமே சாமண்ணபல ஸுத்தத்தில் உலகப் பற்றுக்களினின்றும் விடுதலை பெற்ற பிக்குவின் மகிழ்ச்சி நிரம்பிய மன நிலைக்குப் பல உவமானங்கள் கூறப்படுகின்றன. தனது பெருங் கடன் முற்றும் தீர்ந்து, தனது குடும்பத்திற்கு வேண்டும் பொருளை மிகுதியாகத் திரட்டி வைத்த கடனாளியொருவனது மன நிலையும், நோய் முழுவதும் தீர்ந்து உடல்நலம் பெரிதும் எய்திய ரோகியின் மனநிலையும், நீண்ட காலமாகச் சிறைச் சாலையில் அடைபட்டு வருந்திப் பின், விடுதலை பெற்ற ஒருவனது மனநிலையும், எஜமானனால் விடுதலையடைந்த அடிமையின் மன நிலையும், அபாயம் நிரம்பிய வழியூடாகச் சென்று, பெருங் காட்டிற் புகுந்து முடிவில் மக்கள் வசிக்கும் ஊரையடைந்த ஒரு பிரயாணியின் மன நிலையும் உவமிக்கப்

1. குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே. (1680)

படுகின்றன. இங்ஙனமே, உவமானக் கதைகள் மிகப் பலவாக வந்துள்ளன. திருக்குறளில் (1148),

> நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால், கவ்வையால்
> காமம் நுதுப்பேம் எனல்

என்று வந்துள்ள கருத்து, ஸம்யுத்த நிகாயத்தில் (XII, 53) வருகிறது. இடையிடையே நகைச் சுவையும், காணப்படுகிறது. ஓரிடத்து (மஜ்ஜிம நிகாயம், 126) மணலும் நீரும் செக்கில் நிறைத்து, எவ்வளவாக ஒருவன் ஆட்டினாலும் அதினின்றும் எண்ணெய் உண்டாக்குதல் இயலாது என்று சொல்லப்படுகிறது. பசுவின் கொம்பைப் பிடித்து ஒருவன் கறக்கத் தொடங்கினால் பால் ஒருபொழுதும் அவனுக்குக் கிட்டாது என்றும் கூறப்படுகிறது. இங்ஙனமே உண்மையான நெறியில் முயலாமற்போனால் பிக்கு தனது லட்சியத்தை ஒருபொழுதும் அடையமாட்டான். சில உவமானங்கள் பௌத்த பரிபாஷைகளாகவே அமைந்து விட்டன. உதாரணமாக, துக்கத்திற்குக் காரணமாகிய அவாவை, திருஷ்ணை என்று அழைப்பர்.

இதனோடு தமிழிலுள்ள வேட்கை என்ற பதத்தை ஒப்பிடலாம். ஒரு பிறப்பினின்றும் மறு பிறப்புக்குச் செல்வதை ஸம்ஸாரம் என்றும், கடல் என்றும், இதற்கு மறு கரையில் நின்று அழைப்பதுதான் நிர்வாணம் என்றும் கூறுவர். திருக்குறளில் வரும் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' (10) என்ற கருத்தினை இதனோடு ஒப்பிடலாம். நற்செயலுக்கும் தீச்செயலுக்குமுரிய விளைவைக் கர்மபலன் என்று கூறுவர். இக் கர்மத்தைப்பற்றிக் கூறுமிடத்து 'வித்தும் கனியும்' என்ற உவமானமானது கையாளப் படுகிறது.

ஓர் உவமானக் கதை பௌத்த நூல்கள் ஒழிந்த பிற நூல்களிலும் காணப்படுகிறது. ஒரு முறை மிருகம் முதலிய இழிந்த பிறப்புப் பிறந்துவிட்ட ஒருவன் மீண்டும் மனிதப் பிறப்பை அடையும் அருமையைக் குறித்தது இந்தக் கதை.

> ஒருவன் ஒரு துளையுள்ள நுகத்தைக் கடலில் எறிந்து விடுகிறான். அங்கே கீழ் காற்று மேல்பக்கத்திலும், மேல் காற்று கீழ் பக்கத்திலும், வட காற்று தென் பக்கத்திலும் தென்றக்காற்று வட பக்கத்திலுமாக இந்நுகத்தை அடித்துத் தள்ளுகின்றன. ஒரு கண்ணுள்ள ஆமை ஒன்று நூறாண்டுக்கு ஒரு முறை கடலின் அடியிலிருந்து மேலே வருவதாகும். இப்படி வரும் ஆமையின் கழுத்து இந்த நுகத்துளையுள் பொருந்துவது எப்போது என்று சொல்ல முடியுமா? அநேகமாக இல்லை என்று சொல்லலாம். அல்லது பன்னூறாயிரம்

ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழலாம். இதுபோலத்தான் மனிதப்பிறவியை மீண்டும் அடைய முயல்வது.

பல உவமானக் கதைகள் சமுதாயச் சரித்திர உணர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகின்றன. எவ்வாறெனில், இவை பூர்விக இந்திய மக்களுடைய தினசரி வாழ்க்கையினிடையே நம்மைச் செலுத்துகின்றன. சிற்பிகள், பயிர் விளைப்போர், வாணிகம் செய்வோர் முதலியோருடைய வாழ்க்கைகளில் பல அம்சங்கள் நமக்குப் புலனாகின்றன.

அந்தணர்களது பூர்விக இலக்கியத்தில் இவைகளைக் காணுதல் அருமை. அங்கே, புரோகிதர்கள், க்ஷத்திரியர்கள் முதலானோரது வாழ்க்கைகள்தான் நமக்குப் புலப்படும். ஸாரத்தியம் செய்வோர், சூதாடுவோர், எண்ணெய் ஆட்டுவோர் முதலியோரைக் குறித்த உவமானங்களும் வருகின்றன. பொற் கொல்லர் பணிசெய்யும் முறையும் (மஜ்ஜிம. 140), யானையைப் பழக்கும் முறையும் (மஜ்ஜிம. 125), விஷமூட்டிய அம்பினால் உண்டான காயத்தைக் குணப்படுத்தும் முறையும் (மஜ்ஜிம. 101) உவமானங்களாகத் தரப்படுகின்றன.

### 5. குத்தக நிகாயம்

குத்தக நிகாயம் ஸுத்த பிடகத்தின் ஐந்தாவது நிகாயமாய்ப் பெரும்பாலும் கருதப்படுகிறது. அபிதம்மபிடகத்தைச் சார்ந்த தாகவும் சிறுபான்மையோர் கொண்டுள்ளனர். குத்தக நிகாயம் என்பது சிறு கடிகையின் (துண்டங்களின்) திரள் என்பது பொருள். இந்த நிகாயத்தை ஒழிபியல்-தொகுதி என்று கூறலாம். ஏனெனில் இதில் பற்பல சிறு நூல்கள் ஒருங்கு தொகுக்கப்பட்டுள்ளன. ஓரிடத்து பௌத்த சமயத்திற்கு நேரிட இருக்கும் அபாயங்களைக் குறித்து இது கூறுகிறது. 'மக்கள், புத்தரும் அவருடைய சிஷ்யர் களும் கூறும் ஆழ்ந்த கருத்துடைய பொன்மொழிகளில் ஈடுபடாது, கவிஞர்கள் இயற்றிய அழகிய சொற்களும் தொடர் களும் நிரம்பிய செய்யுட்களிலே மனம் வைக்கின்றார்கள்' என்று சொல்லப்படுகிறது. இதனால், ஆதிகாலத்தில் கவிதைப் பகுதிகள் பௌத்த ஆகமங்களில் கொள்ளப்பட்டனவல்ல என்பதும், பிற்காலத்து அவை சேர்க்கப்பட்டன என்பதும் விளங்கும். குத்தக நிகாயத்தில் இவை உள்ளன.

#### குத்தக பாடம்

இந்நிகாயத்தின் முதல்-தொகுதியின் பெயர் **குத்தக பாடம்** என்பது. இதில் ஒன்பது சிறு நூல்கள் உள்ளன. முதலாவது நூலில் பௌத்த மந்திரங்கள் காணப்படுகின்றன. நான்காவது

நூலில் பௌத்த சமயத்தில் புதியராகச் சேர்ந்தோர் கேட்கும் சில கேள்விகளுக்கு விடைகள் காணப்படுகின்றன. இதில் பத்துக் கேள்விகள் உள்ளன. ஒன்றாவது யாது? இரண்டு எவை? மூன்று எவை? இது போன்றவையே பத்துக் கேள்விகளும். இது அங்குத்தர நிகாயத்தை ஒத்துள்ளமை காணலாம். பின்னர் வரும் நூல்களில் மங்கலப்பொருள்களும் நீதி உபதேசங்களும் காணப்படுகின்றன. உண்மையான மங்கலப் பொருள்கள் யாவையெனப் புத்தர் கூறுகின்றார். எட்டாவது சூத்திரத்தில் வைப்பு நிதி என்பது விளக்கப்படுகிறது. உண்மையான வைப்பு நிதி நாம் செய்யும் நன்மைச் செயல்களே. ஒன்பதாம் நூல் எல்லா உயிர்களிடத்தும் நட்புப் பூண்டிருக்கவேண்டும் என்று கூறும் மைத்திரிக பாவனையைப்பற்றியது.

**தம்ம-பதம்**

இந்நிகாயத்தின் இரண்டாம் தொகுதி **தம்ம-பதம்** என்பது. இது தமிழ் மொழியிலுள்ள திருவள்ளுவரது திருக்குறளைப் போன்று அத்துணைச் சிறப்பு வாய்ந்தது. தம்ம-பதம் என்ற தொடரில் 'பதம்' என்பது அடிச்சுவடு என்றும், நெறி என்றும், சொல் என்றும், வசனம் என்றும், செய்யுள்-தொகுதி என்றும், பலவாறு பொருள் கொள்ளப்பட்டுள்ளது. நாம் இதனை 'அற நெறி' என்று மொழி பெயர்த்துக்கொள்ளலாம். தம்மம் என்பது தர்மம் என்ற வட சொல்லின் திரிபேயாகும். இந்நூல் பௌத்த நூல்கள் எல்லாவற்றிலுமே மிகப் பிரசித்தி பெற்றது. இதன் பெருமை வெகு காலமாக அறியப்பட்டதொன்றேயாம்.

ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் இது மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மட்டும் சுமார் 40 மொழி பெயர்ப்புக்கள் உள்ளன. ஜர்மன், பிரஞ்சு, இத்தாலி, ருஷ்ய மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. லத்தீன் மொழியிலும் மொழிபெயர்ப்பு உண்டு. சீன, திபெத்து, மொழிகளிலும், வங்காளி, ஹிந்தி, கன்னடம் முதலியவற்றிலும் மொழி பெயர்ப்புக்கள் காணப்படுகின்றன. இதிலிருந்துதான் பௌத்த மதச் சார்பான நூல்கள் பலவற்றிலும் அடிக்கடி மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இதிலே காணும் நீதியொழுக்கங்கள் காரணமாக இதனை மக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வருகின்றனர். இலங்கை தேசத்தில் பௌத்த மத உபாசகர்களால் பல நூற்றாண்டுகளாக, இன்று வரை இந்நூல் கற்கப் பட்டு வருகிறது. தம்ம பதத்தை முதலிலிருந்து இறுதி வரை அறியாத பௌத்த பிக்குவை இலங்கைத் தீவில் காண முடியாது என்பர். பௌத்த மதத்தைப் பிரசாரம் செய்பவர்கள் இந்நூலிலிருந்து சுலோகங்களை எடுத்து வைத்துக்கொண்டு, அவற்றிற்கு

வியாக்கியானமாகவே தங்கள் உபந்நியாசத்தைச் செய்து வருகிறார்கள்.

இந்நூலில் 423 சுலோகங்கள் இருக்கின்றன. இவைகள் 26 வக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வக்கத்திலும் 10-முதல் 20-வரை சுலோகங்கள் காணப்படும். இவ்வக்கங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1. யமக வக்கம் | 14. புத்த வக்கம் |
| 2. அப்பமாத வக்கம் | 15. ஸுக வக்கம் |
| 3. சித்த வக்கம் | 16. பிய வக்கம் |
| 4. புப்ப வக்கம் | 17. கோத வக்கம் |
| 5. பால வக்கம் | 18. மல வக்கம் |
| 6. பண்டித வக்கம் | 19. தம்மட்ட வக்கம் |
| 7. அர்ஹந்த வக்கம் | 20. மக்க வக்கம் |
| 8. ஸகஸ்ஸ வக்கம் | 21. பகிண்ணக வக்கம் |
| 9. பாப வக்கம் | 22. நிரய வக்கம் |
| 10. தண்ட வக்கம் | 23. லோக வக்கம் |
| 11. ஜரா வக்கம் | 24. தண்ஹா வக்கம் |
| 12. அத்த வக்கம் | 25. பிக்கு வக்கம் |
| 13. நாக வக்கம் | 26. பிராம்மண வக்கம் |

இவற்றுள் ஒரு சில, பொருள்பற்றி அமைந்தன. புப்பவக்கம் முதலிய ஒரு சில, உவமம் பற்றி அமைந்தன. இன்னும் சில, சுலோகங்களின் இறுதியில் மீண்டும் மீண்டும் வரும் சொற்றொடர் பற்றி வருவன.

மேற் குறித்த வக்கங்களுள் ஒரு சிலவற்றில் சுலோகங்களெல்லாம் தொடர்புடைய பொருள்கள் மேல் நின்று கவிதை என்று சொல்லத் தக்கபடி அமைந்துள்ளன. உதாரணமாக, நாகவக்கம் என்பதை எடுத்துக்கொள்வோம். (நாகம்=யானை)

போர்க்களத்திலே தன்மீது எய்த அம்புகளை யானை பொறுத்துக் கொள்ளுதல் போல, நான் மக்களுடைய கடுஞ் சொற்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. ஏனெனில், உலகம் தீமை மயமாக உள்ளது.

யானையைப் பழக்கினால் அது போர்க்களத்திற்கு அரசனைக் கொண்டு செல்லும்; அரசன் அதன் முதுகின்மீது ஏறி அதனைச் செலுத்தலாம். அதனைப்போல், அடங்கி யொழுகப் பழகியவனே உயிரினங்களுள் சிறந்தவன். அவனைக் கடுஞ்சொற்கள் எவையும் துன்புறுத்தமாட்டா.

நன்கு பழக்கப்பட்ட குதிரைகள் நல்லன; சிந்து தேசத்துப் பிறவிக் குதிரைகள் நல்லவை என்று பெயர் சிறந்துள்ளன. இவ்வாறே வலிமையிற் சிறந்த கொம்பன் யானைகளும் பழக்கப்படுமாயின், மிக நல்லனவாம். ஆனால், தன்னைத் தானே அடக்கியொழுகப் பயின்றவனே எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்தவனாவான்.

நேர்மையும் உறுதியும் அறிவுமுள்ள வழித்துணைவன் உனக்குக் கிடைப்பானா? கிடைத்தால் உன் கவலையையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அவன் கூட மகிழ்ச்சியோடு நடந்து செல்லலாம்.

நேர்மையும் உறுதிப்பாடும் அறிவுமுள்ள வழித்துணைவன் உனக்குக் கிடைக்கவில்லையா? அப்படியானால், பகைவனால் துரத்தப்பட்டுத் தன் நாட்டு எல்லையைக் கடந்து செல்லும் அரசனைப்போல, நீ தன்னந் தனியாக உனது வழியிலே செல்வாயாக.

தன்னந்தனியே வாழ்வது நல்லது. ஏனெனில், பேதைகள் நல்ல வழித்துணை யாகமாட்டார்கள். தனியே வாழ்வாயாக. தீமை செய்யாதே; தேவைகளைச் சுருக்கிக் கொண்டு, வலிமையுள்ள கொம்பன் யானை காட்டில் தன்னந்தனியாகக் கவளமுண்டு வாழ்தலைப்போல, தனிப்பட வாழ்க.

ஒரு சில, வள்ளுவர் திருக்குறளை நமக்கு நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

ஆடையின்றி நக்கினமாயிருத்தலும், சடை வளர்த்தலும், அழுக்குப் படிந்திருத்தலும், நீண்ட நாள் பட்டினி நோன்பிருத்தலும், தரையில் படுத்தலும், புழுதியிலும் சேற்றிலும் கிடத்தலும், குந்தியிருத்தலும் இவை யாவும் ஐயத்தால் பிடிக்கப்பட்ட ஒருவனைத் தூயவனாகச் செய்ய மாட்டா.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா' (280) என்ற குறளின் கருத்தை மேற்கூறியதனோடு ஒப்பிடலாம்.

சாந்தமும் அமைதியும் அடக்கமும் தூய்மையும் உடையவராய் உயிர்களைத் துன்புறுத்தாமல் இருப்பாரானால் அவரே பிராம்மணராவார்; அவரே சமணராவார்; அவரே பிக்கு ஆவார்.

இக் கருத்து,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்ற குறளின் (30) கருத்தோடு முற்றும் ஒத்துள்ளது.

மேற் குறித்தனவேயன்றி, புத்த வசனங்கள் என்று சொல்லப் படுகின்றவற்றுள் மிகச் சிறந்தனவும் தம்ம பதத்தில் காணப்படு கின்றன. புத்தர் உண்மை ஞானம் பெற்றபொழுது,

> பிறப்பிறப்பாகிய ஸம்ஸாரத்தில் எத்தனையோ முறை ஓடி உழன்றேன். ஆனால், நான் தேடிச் சென்ற கொற்றனைக் காண முடியவில்லை. பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு இவற்றின் பிரவாகம்தான் வாழ்க்கை. அதிலே துக்கந்தான் நிரம்பியிருக்கிறது. இப்பொழுது, கொற்றனே! உன்னைக் கண்டுபிடித்துவிட்டேன். இனி மேல் உன்னால் ஒன்றும் கட்ட முடியாது. உன்னுடைய கைமரங்கள் ஒடிந்துபோய் விட்டன; உன் உரத்தம் பிளந்து விட்டது. இந்தப் பிறப்பிற்குட்பட்ட என் யாக்கையில் அமைந்தனவெல்லாம் ஒழிந்து போய்விட்டன. மனம் அவாவை அழித்து விட்டது. நான் வாழ்க்கைப் பிரவாகத்தைக் கடந்துவிட்டேன்.

இது எளிதாக உள்ளது. ஆனால், இதில் வரும் உருவகம் மிகச் சிறந்தது. நமது அவா என்பதுதான் வீடுகள் கட்டும் கொற்றன். இக் கொற்றன்தான் சரீரத்தைப் புதிது புதிதாகப் பிறவிகள் தோறும் அமைக்கின்றவன். இதுபோன்ற பொருள் நிரம்பிய உருவகங்கள் தம்மபதத்தில் பல இடங்களிலும் காணப் படுகின்றன. ஞானியின் சமத்துவ பாவம் கண்ணாடிபோலத் தெளிந்த நீருள்ள ஆழமான ஒரு நீர்நிலைக்கு ஒப்பிடப்படுகிறது. சலனமற்ற மலைக்கும் ஒப்பிடப்படுகின்றது. வேறொன்று :

> ஞானிகளோடு உறவாடும் ஞானிதான் பயன் பெறு வானேயன்றி மூடர்கள் பயன்பெற மாட்டார்கள். எது போல என்றால், அகப்பை சுவையறியாததுபோல, நா சுவையறியுமேயன்றி அகப்பை சுவையறிய மாட்டாது.

இக் கருத்து,

அருளின் அறம் உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

என்ற நாலடியார்ச் செய்யுளிலும்,

கல்லா ஒருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றொன்றும் அறனுணர்தல்—நல்லாய்
நறுநெய் நிறைய முகப்பினும் மூழை
பெறுமோ சுவையுணரு மாறு.

என்ற அறநெறிச்சாரச் செய்யுளிலும் அமைந்துள்ளமை காணலாம்.

தம்ம பதத்தில் வரும் சுலோகங்களில் செம்பாதிக்கு மேற்பட்டவை பாலி மொழியிலுள்ள பிற பௌத்த நூல்களிலும் காணப்படுகின்றன. அந் நூல்களிலிருந்து எடுத்து இச் சுலோகங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டன என்றே ஆராய்ச்சியாளர்கள் துணிகின்றார்கள். பௌத்த சமயத்தோடு தொடர்பில்லாத வேறு நீதியொழுக்கங்களும் இந் நூலிற் காணப்படுகின்றன. பாரத தேசத்து மக்கள் ஒழுக்கம் பற்றி இயற்றிய சுலோகங்கள் வற்றாச் சமுத்திரம் போன்று உள்ளன. இச் சமுத்திரத்திலிருந்தே மநு ஸ்மிருதி, மகா பாரதம், ஜைன நூல்கள் முதலிய பலவற்றிலும் வரும் நீதிக் கருத்துக்கள் எடுக்கப்பட்டுள்ளன. எங்கே எவை முதலில் தோன்றின என்று இப்போது அறுதியிட முடியாது.

தம்ம-பதம் சுலோகங்களின் தொகுதிதான். இவைகளில் ஒவ்வொன்றும் எந்தச் சந்தர்ப்பத்தில் தோன்றியது என்பதனை விளக்கி விரிவாக எழுதிய உரை நூல் ஒன்று பிற்காலத்தில் தோன்றியது.

**உதாநம்**

மூன்றாவது தொகுதி **உதாநம்** என்னும் கட்டுரைத் தொகுதியாகும். இதில் எட்டு வக்கங்களும் ஒவ்வொரு வக்கத்திலும் பத்து ஸூத்தங்களும் உள்ளன. இந்த ஸூத்தங்கள் புத்தரது வரலாற்றில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைக் கூறி, அந் நிகழ்ச்சியின் முடிவில் அவர் கூறியதாகவுள்ள சிறு கட்டுரை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கும். இக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் புத்தரால் 'உயிர்க்கப்பட்டது' என்பர். இக் காரணம் பற்றியே 'உதாநம்' என்னும் இப் பெயரானது இவற்றிற்கு ஏற்பட்டது.

இக் கட்டுரைகள் உண்மையில் புத்தர் கூறியவைதானா என்பது விள்ளமுடியாத ஒரு கேள்வியாகும். புத்தராலேனும் அல்லது அவருடைய முக்கிய மாணவர்களாலேனும் இக் கட்டுரைகளில் பல கூறப்பட்டன என்று கொள்ளலாம். ஆனால், இக் கட்டுரைகளில் வந்துள்ள கதாபாகங்கள் பிற்பட்டன என்பதில் ஐயம் இல்லை. யானையும் குருடர்களும் என்ற கதை மிகப் பிரசித்தமானது. இது ஆறாவது வக்கத்தில் காணப்படுகிறது.

சில துறவிகளும் அந்தணர்களும் ஒன்று கூடித் தம்முள் விவாதம் புரியலாயினர். சிலர் உலகம் நித்தியம் என்றனர்; வேறு சிலர் உலகம் அநித்தியம் என்றனர். சிலர் உலகம் அளவுபட்டது என்றனர்; வேறு சிலர் அளவு கடந்தது என்றனர்; வேறு ஒரு சிலர் ஆன்மாவும் சரீரமும் வேறு வேறு என்றனர்; வேறு சிலர் அவையிரண்டும் ஒன்றே என்றனர். சிலர் மனிதன்

மரணத்தின் பின் தான் பூரணமாகின்றான் என்றனர். இவ்வாறு விவாதித்து முடிவில் கடுஞ்சொற்களும் வசவுச் சொற்களுமாக ஒருவர் மீது ஒருவர் பொழிந்தனர். புத்தரிடத்தில் சில துறவிகள் இவ் விவாதத்தைக் குறித்துக் கூறினர். அப்பொழுது பின்வரும் உவமானக்கதை அவரால் கூறப்பட்டது.

> முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் பிறவிக் குருடர்களைத் தன் நாட்டிலுள்ள ஓரிடத்தில் கூடுமாறு செய்தனன். கூடியபொழுது ஓர் யானையை அவ் அனைவரிடத்தும் கொண்டு வந்து காட்டும்படி செய்தனன். சிலர் அதன் தலையைத் தடவிப் பார்த்தனர்; சிலர் அதன் காதைத் தடவிப் பார்த்தனர்; வேறு சிலர் அதன் கொம்பைத் தடவினர்; இன்னும் சிலர் அதன் வாலைத் தொட்டுப் பார்த்தனர். அரசன் அவரிடத்தில் யானையின் வடிவம் என்ன என்று கேட்டனன். தலையைத் தடவிப் பார்த்தவர்கள் அது ஒரு பெரும் பானை போலுள்ளது என்றனர். காதைத் தடவியவர்கள் அது ஒரு முறம் போலுள்ளது என்றனர். அதன் கொம்பைத் தடவியவர்கள் அது ஒரு உழுபடையைப்போலிருக்கிறது என்றனர். காலைத் தடவிப்பார்த்தவர்கள் அது கலப்பையின் ஏர்க்கால்போல் இருக்கிறது என்றனர். வாலைத் தடவியவர்கள் அது ஒரு துடைப்பத்தைப் போலுள்ளது என்றனர். இவர்களுக்குள் பெரும் கூச்சல் கிளம்பிற்று. ஒவ்வொருவரும் தாம் தாம் சொல்லியது உண்மையென்று சாதித்தனர். முடிவில் ஒருவரை ஒருவர் தாக்கத் தொடங்கினர். இதைப்பார்த்து அரசனுக்குப் பெருஞ்சிரிப்பு உண்டாயிற்று. துறவிகளும் அந்தணர்களும் வாதித்தது இது போன்றதுதான். ஒவ்வொருவரும் உண்மையின் ஒவ்வோர் அம்சத்தைக்கண்டு, இதுதான் முழு உண்மை; வேறொன்றும் அல்ல என்று வற்புறுத்தினர்.

**இதி உத்தகம்**

நான்காவது தொகுதி **இதி உத்தகம்** என்று பெயர் பெறும். இதன் பொருள் 'இவ்வாறு புத்தர் கூறினர்' என்பது. இதில் 112 சிறு வசனங்கள் உள்ளன. இதுவும் உரையும் பாடலுமாகவே அமைந்ததாம். ஆனால், இந்த இரண்டிற்குமுரிய தொடர்பு சிந்திக்கத்தக்கது. ஏதேனும் ஒரு கொள்கை அல்லது உபதேசப் பாதி உரையாகவும், பாதி பாடலாகவும் அமைந்திருக்கும். இன்னும் பலவற்றில் ஒரு கருத்து முதலாவது சுருக்கமாக உரை நடையிற் கூறப்பட்டு, பின்னர் அதுவே சற்று விரிவாகப் பாடலில் அமைந்திருக்கும். சில இடங்களில் உரைப் பகுதியின் பொருள் ஒரு செய்யுளில் அமைத்துக் கூறப்படும்; பின்னர்பல செய்யுட்கள்

அவற்றிற்குரிய உரைப் பகுதியின்றியே அமைந்திருக்கும். இன்னும் பலவற்றில் உரையும் செய்யுளும் ஒன்றையொன்று நிரப்புவதாயும் அமைந்திருக்கும்.

இதி உத்தகத்தில் சில அழகிய உவமைகளும் உருவகங்களும் காணப்படுகின்றன. வள்ளல்களை மழைக்கு உவமையாகச் சொல்வது நாம் நன்கு அறிந்ததே. இது 75-வது இதி உத்த கத்தில் காணப்படுகிறது. ஐம்பொறிகளும் நன்கு காக்கப்பட வேண்டும் வாயில்கள் என்று இரண்டு இதி உத்தகங்கள் (28, 29) கூறுகின்றன. மைத்திரி பாவனையைக் கூறும் இதி உத்தகம் (27) உரை நடையில் மிகச் சிறந்த பகுதியாக உள்ளது. இதி உத்த கத்தின் இறுதிப் பகுதி மிகப் பிற்பட்ட காலத்தில் சேர்க்கப் பட்டனவாயிருத்தல் வேண்டும். ஹியூன்த்ஸாங் இயற்றியுள்ள சீன மொழிபெயர்ப்பில் இப்பகுதி காணப்படவில்லை. இவற்றுள் சில அங்குத்தர நிகாயத்திலும் காணப்படுகின்றன.

**ஸுத்த நிபாதம்**

குத்தக நிகாயத்தைச் சார்ந்த ஐந்தாவது தொகுதி **ஸுத்த நிபாதம்.** பௌத்தச்செய்யுள்-இலக்கியங்களில் மிகப் பழமை யானவை இதில் காணப்படுகின்றன. இதில் உரக வக்கம், சூள வக்கம், மகா வக்கம், அட்டக வக்கம், பாராயணம் என்ற ஐந்து பகுதிகள் உள்ளன. முதல் நான்கு பகுதிகளில் 54 சிறு செய்யுட் களும், பாராயணத்தில் 16 உறுப்புகள் அடங்கிய ஒரு நீண்ட செய்யுளும் உள்ளன. இவ்வைந்து பகுதிகளில் அட்டக வக்கமும், பாராயணமும் பிற பாலித் திருமுறைகளிலும், வடமொழியி லுள்ள பிற பௌத்த நூல்களிலும் பெயரால் எடுத்தாளப் படுகின்றன.

இவை இரண்டிற்கும் பழைய வியாக்கியானம் ஒன்றும் உள்ளது. இந்த வியாக்கியானத்தின் பெயர் நித்தேஸம் என்ப தாகும். அசோக சக்கரவர்த்தியின் பாப்ரு சிலா சாசனத்தில் கற்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிற பகுதிகளில் மூன்று இந்த ஸுத்த நிபாதத்தில் உள்ளன. இலக்கிய முறையில் நோக் கினும் இவைகள் சிறந்த மதிப்புக்கு உரியன. தம்ம பதத்தை அடுத்து, இதுதான் அடிக்கடி பௌத்த நூல்களில் எடுத்தாளப் படும் பகுதியாகும்.

இவற்றில் உரையாடல்களும் கதைச் செய்யுட்களும் இருக் கின்றன. கதைச் செய்யுட்களிலும் உரையாடற் பகுதியும் கதைப் பகுதியும் காணலாம். கதையில் பாடலும் உரையும் கலந்தே வருகின்றன. பல இடங்களில் அந்தணர்களுடைய கருத்துக்களும்

காணப்படுகின்றன. உதாரணமாக, பிராம்மண தம்மிக ஸுத்தத்தைக் கூறலாம். இதில்

> பண்டைக் காலத்து ரிஷிகள் உண்மையான அந்தணர்கள்; எல்லா வகையிலும் எளிய வாழ்க்கை வாழ்ந்து, உணவு முதலியவற்றைச் சுருக்கி அவர்கள் வாழ்ந்தனர். பின்னர், அரசர்களது செல்வத்தினாலும் இன்ப வாழ்க்கையினாலும் அவர்கள் மனம் வசீகரிக்கப்பட்டு, அந்தச் செல்வ நுகர்ச்சி களை அவர்கள் விரும்பினார்கள். இக்ஷுவாகு அரசன் அவர் களுக்கு அழகிய பெண்களையும் மிகுந்த செல்வத்தையும் கொடுத்தனன். இதற்குப் பிற்பாடுதான் யாகங்களில் உயிர்ப்பலி செய்தல் முதலிய கருமங்கள் ஏற்பட்டன.

என வருகிறது.

சேல ஸுத்தத்தில் (III, 7) பகவத் கீதை, அநுகீதை இவற்றின் சுலோகங்களுடன் ஒத்துள்ள பல பகுதிகள் காணப்படுகின்றன. கஸி பரத்வாஜ ஸுத்தம் (I, 4) வேறொரு வகையில் மிக முக்கியமானது. இதில் பரத்வாஜன் என்ற உழவன் உணவு இரந்து வந்த புத்தரை இகழ்ந்து 'உழைப்பில்லாதவனுக்கு உணவில்லை' என்று கூறுகிறான். அப்போது புத்தர் தாமும் உழவு வேலை செய்து வருபவரே என்றும் அவ்வுழவு இன்ன தாகும் என்றும் விளக்குகிறார். இவ்வுரையாடற் பகுதிகளில் பிசிபோன்ற செய்யுட்களும் உள்ளன. மகாபாரதத்திற்போல இங்கும் கேள்வி கேட்பவன் யக்ஷன். விடையிறுக்கும் ஞானி பௌத்த மதத்திலுள்ள நீதிக்கொள்கைகளை விடையாக அளிப்பர்.

நீதிபற்றிய உரையாடல்கள் இருப்பதோடு, கதை பற்றிய உரையாடல்கள் சிலவும் இந்த ஸுத்த நிபாதத்தில் உண்டு. இவைகளை மிகப் பூர்வ காலத்து வழங்கிய கதைச் செய்யுட் களின் துணுக்குகள் என்று கூறலாம். இவைகள் உரையாடல் வடிவிலே உள்ளன. நாலக ஸுத்தத்தில் புத்தர் பிறந்தவுடன் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் கதை வடிவத்தில் சொல்லப்படுகின்றன. பப்பஜ்ஜா (பரிவ்ராஜக) ஸுத்தத்தில் புத்தர் உலகைத் துறந்து, இரந்து உண்ணும் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட வரலாறு கூறப்படுகிறது. பதான ஸுத்தத்தில் இன்னும் பிற்பட்ட காலத்திலே மாரனால் பரிசோதிக்கப்பட்ட வரலாறு தெரிவிக்கப் படுகிறது. இவைகளெல்லாம் மிகப் பூர்வ காலத்தைச் சார்ந்தவை என்று கூற முடியாது.

**விமான வத்து: பேத வத்து**

குத்தக நிகாயத்திலுள்ள 6—வது 7—வது நூல்கள் **விமான வத்து** என்றும், **பேத வத்து** என்றும் பெயர் பெறும். இரண்டிலும்

கர்மத்தின் விளைவுகள் விவரிக்கப்படுகின்றன. யாதானும் ஒரு தெய்வத்தை நோக்கி மொக்கலன் இந்த அழகிய விமானங்கள் உனக்கு எவ்வாறு கிடைத்தன என்று கேட்க, அத் தெய்வம் இன்னின்ன புண்ணிய கர்மங்கள் முற்பிறப்பில் செய்ததனால் இவை வாய்த்தன என்று கூறும். இதுவே விமான வத்துவின் முக்கிய கதி. பேத வத்துவில், இறந்து போனவன் ஆவி உலகில் உலவி வருவதைக் கண்ட நாரதர் இவ்வாறு நீ துன்புறுவதற்குக் காரணம் யாதென்று கேட்க, அது, தான் செய்த பாவச் செயலை விரித்துக் கூறும். இதுதான் பேத (பிரேத) வத்துவின் முக்கிய கதி. புத்தருக்கு இரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் சுராஷ்டிரத்தில் வாழ்ந்து வந்த பிங்கலகன் என்பவனைப்பற்றி இதில் கூறியிருக்கிறது (IV, 3). இதனால் இந்தப் பகுதி வெகு காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்டது என்று தெளிவாகிறது.

**தேரகாதை : தேரிகாதை**

விமானவத்துவும் பேதவத்துவும் சுவையற்ற பகுதிகள். இவற்றையடுத்து மிக்க சுவையுள்ள **தேர, தேரிகாதை**கள் காணப்படுகின்றன. இக்காதைகளுள்ளே மிகச் சிறந்த உணர்ச்சிக் கவிதைகள் (lyrics) காணப்படுகின்றன. இவை குத்தக நிகாயத்தில் 8-வது, 9-வது நூல்களாக உள்ளன. தேர காதையில் 107 பெருங்கவிதைகளும் 1279-காதைகளும் உள்ளன. தேரி காதையில் 73 பெருங்கவிதைகளும் 522 காதைகளும் உள்ளன. பௌத்த சமயத்தில் தவமுதியோரில் ஆண் பாலரைத் தேரர் என்பதும், பெண்பாலரைத் தேரி என்பதும் வழக்காகும். இச் செய்யுட்களை இயற்றிய தேரர்களும், தேரிகளும் பெயர் கொண்டு குறிக்கப்பட்டுள்ளனர்.

இக் காதைகளுக்கு, கி.பி. 5-ம் நூற்றாண்டில் தம்ம பாலரால் இயற்றப்பெற்ற ஒரு வியாக்கியானம் உண்டு. இவ்வியாக்கியானத்தில் தேரர் தேரிகளில் ஒவ்வொருவரது வரலாறும் சுருங்க உரைக்கப்படுகின்றது. இவ் வரலாறுகளை உண்மையெனக் கொள்வதற்கு இல்லை. தேரிகள் இயற்றியதாகக் கூறும் பாடல்களிற் பெரும்பாலன பெண்பாற் புலவர்களால் இயற்றப்பட்டன என்பதில் ஐயமே இல்லை. ஏனெனின், பிக்குக்கள் பெரும்பாலும் பெண்களை வெறுத்தே வந்தனர். ஆதலால், தாம் எழுதிய செய்யுட்களைப் பெண்பாலார் இயற்றியதாக அவர்கள் கூற மாட்டார்கள். அன்றியும், கருத்துக்களிலும் சொல்லும் முறையிலும் தேர காதைக்கும் தேரி காதைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. தேரி காதைகளில் ஒவ்வொருவரது சொந்த உலக-அனுபவம் கூறப்பட்டுள்ளது. ஆனால், தேர காதையில்

இவ்இயல்பு காணப்படவில்லை. அங்கே இயற்கை வருணனையும் ஆன்ம அனுபவமும் காணப்படுகின்றன.

ஒரு பிக்கு தன் மனைவியும் குழந்தையும் தனது சாந்தியை அழிக்க முயன்றதையும், தான் அவர்களைத் தள்ளிவிட்டு முத்தி மார்க்கத்தைத் தேடியதையும், பெரியோர்களிடம் கூறிக் கொள்கிறான். வேறொருவன் வேசியரது வசிகரச் செயல்களைக் தான் எவ்வாறு எதிர்த்து நன்னெறியைச் சேர்ந்தான் என்பதைச் சொல்லுகிறான். பெரும்பாலும் இவர்கள், பெண்கள் பாச வலையாய் அமைந்துள்ளார்கள் என்றும், அவர்களை அணுகுதல் கூடாது என்றும் கூறி வந்தனர். ஆனால், சிற்சில இடங்களில் பெண்களைப்பற்றி உயர்வான கருத்துக்களும் காணப்படு கின்றன. ஒருவன் தன்னுடைய அன்னை தனக்கு நல்லுபதேசம் செய்து, உண்மைக்கு வழிகாட்டினாள் என்பதைத் தெரிவிக் கிறான்.

உண்மையான வாழ்க்கை வரலாறுகள் தேரிகாதையில் மிகுதியாகவுள்ளன. ஒருத்தி தன் குழந்தையை இழந்து துன்புற்று, வெளியில் ஓடிச் சென்று, புத்தரைக் கண்டு, அவர் உபதேசத்தால் சாந்தி பெற்றுப் பௌத்த சங்கத்தைச் சேர்ந்துவிடுகிறாள் முன்பு, வேசியாக இருந்தவர்கள் பலர் பின்னர் பிக்குணிகளாகச் சேர்ந்து, தங்கள் பூர்வ வாழ்க்கையையும், இந்த வாழ்க்கையையும் ஒப்பிட்டுக் கூறுகிறார்கள். ஒரு செல்வனுடைய அழகு மிக்க மகளைப் பல செல்வர்கள் மணம்புரிய விரும்புகின்றனர்; ஒருவன் அவளது நிறைக்கு எண்மடங்கு பொன்னும் ரத்தின ராசிகளும் கொடுப்பதாகக் கூறுகிறான். ஆனால், அவள் புத்த உபதேசம் கேட்டு, பிக்குணி வாழ்க்கையை மேற்கொள்ளுகிறாள்.

சில வேடிக்கைக் கதைகளும் இதிலே காணப்படுகின்றன. ஒருத்தியின் கணவன் கூனன். அரிசி குற்றி அவனைப் போஷிக்க வேண்டும் கடமை அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அவள் தான் புத்த சமயத்தைச் சார்ந்ததும் உரல், உலக்கை, தன் கூனற் கணவன் என்ற மூன்று வகையான கோணல்களும் தன்னைவிட்டு ஒழிந்தன என்று வேடிக்கையாகக் கூறுகிறாள். இது போன்ற கதைகள் பூர்வ காலத்து நம் தேசத்தில் பெண்களிருந்த நிலைமையை நன்கு விளக்குகின்றன.

இயற்கை வருணனைகள் தேர காதையில் மிகுந்து காணப் படுகின்றன என்று ஏற்கனவே கூறினோம். உலக இன்பத்தை எவ்வளவாகத் துறந்துவிட்ட போதிலும் இத்தேரர்கள் மலைக் காட்சி, வனக் காட்சி முதலியவற்றின் அழகுகளை மறந்துவிட முடியவில்லை. இடி இடித்துக் கருமேகங்கள் சோனாமாரியைப்

பெய்யும் சமயத்தில், விடுதலை அடைந்த ஒரு பிக்கு மலைக் குகையில் ஆனந்தமாக இருக்கின்றான். இவ்வாறு கூறும்பொழுது இயற்கை வருணனையை ஒழிக்க முடியுமா?

இயற்கைப் பொருள்களைப் பல அழகிய உவமானங்களாகக் கூறும் நயமும்]இக் கதைகளிற் காணப்படுகின்றது. துளக்கலாகாத மலைபோல ஞானி உறுதியாய் நிற்கிறான். தனது துறவு-உடையை மெச்சுகின்ற பிக்கு சிங்கத்தின் தோலைப் போர்த்திருக்கும் குரங்கிற்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறான். உழவர் நிலத்தை உழுது விதை விதைத்து நெல் விளைப்பதுபோல், பிக்குணி மோக்ஷமடைய விரும்புகிறாள். தன் பாதங்களைக் கழுவும்போது, விழும் நீரைக் குன்றினின்றும் விழும் நீரெனக் கொண்டு, குதிரையை அடக்குவதுபோல் மனத்தை அடக்குகிறாள். இவ்வாறெல்லாம் அழகுபடுத்திக் கூறும்போது பிற்காலத்தெழுந்த அணிமிகுந்த செய்யுள் வகைகள் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

தேரிகாதையில் அம்பாலி என்ற வேசி கூறியதாக அமைந்துள்ள ஓர் அழகிய செய்யுள் இருக்கின்றது. இதில் அக் கவியரசி முதல் இரண்டு அடிகளில் தனது மேனி அழகினை மிகவும் நன்றாகச் சித்திரித்து, மூன்றாவது வரியில் தனது மேனி அடைந்துள்ள கேடுகளை வெளிப்படுத்துகிறாள். இக் கருத்தோடு ஒப்புமையுடையன நாலடியார் முதலிய தமிழ் நூல்களில் வருதல் நோக்கத் தக்கது. சில சிறந்த தொடர்களும், பல்லவி போன்ற மீட்சி-அடிகளும் இக் காதைகளின் சிறப்பியல்புகளாகும்.

பல இடங்களில் உரையாடலினிடையேயும் செய்யுட்கள் அமைந்திருக்கும். கதை வடிவில் அமைந்துள்ள வரிகளும் பல உள்ளன. இவ்வாறு அமைந்த கதைச் செய்யுட்களில் சுபா என்பவளது சரித்திரம் மிக அழகானது. அவளிடம் ஒரு தூர்த்தன் தன் காதலை வெளியிட்டுக் காட்டினூடே துரத்திச் செல்கின்றான். அவளது அழகை மிகவாகப் புகழ்ந்து காட்டில் அவளுக்கு நேரவிருக்கும் அபாயங்களைக் கூறித் தன்னோடு காதல்-வாழ்வு வாழ வரும்படி அழைக்கிறான். அவள் அவனைக் கண்டித்து, தான் உலக இச்சை அனைத்தையும் துறந்து விட்டதைக் கூறுகிறாள். யாக்கை நிலையாமையையும் அதன் அசுபத் தன்மையையும் எடுத்துக் கூறி, தனது கண்கள் அருவருக்கத் தக்க ஒரு மாமிச பிண்டம் என்று தன் கண்களைப் பிடுங்கி அவன் கையில் கொடுத்து விடுகிறாள். அந்தத் தூர்த்தன் மிகவும் வருந்தி மன்னிப்புக் கேட்கிறான். சுபா பின்பு புத்தரை

அடைகிறாள். அவரது திருநோக்குப் பட்ட அளவில், அவளுடைய கண்கள் முன்போல விளங்குகின்றன.[1]

இவ்விரு காதைகளிலும் பிற்காலத்துத் தோன்றிய கதைச் செய்யுட்கள் உள்ளன என்று கருதுகின்றனர். ஒரு சில கதைகள் பௌத்த சமயம் சீர்கேடுற்ற நிலையைக் குறிக்கின்றன. பிக்குக்கள் வேசியர்களைப் போன்று, தங்களை அழகுபடுத்திக் கொண்டு ஆஷாடபூதிகளாகத் திரிகிறார்கள் என்று குறிக்கப் பட்டுள்ளது. அதிர்ஷ்டம் கெட்ட பெண்களே பிக்குணிகளாகச் சேருகிறார்கள் என்று வேறோரிடத்தில் கூறப்படுகிறது. இதனால், மிகப்பிற்பட்ட பகுதிகளோடு மிக முற்பட்ட பகுதி களும் இக்காதைகளில் உள்ளன என்று கருதலாம்.

**ஜாதகம்**

இவ் விஷயத்தில் இக் காதைகளோடு ஒப்பிடத் தக்கது **ஜாதகக் கதைகள்** என்ற பத்தாவது தொகுதியாம். இதுவும் குத்தக நிகாயத்தைச் சேர்ந்ததே. இதனைப் **போதி சத்துவக் கதைகள்** என்றும் கூறலாம். கௌதமர் புத்தராவதற்கு முன்புள்ளது போதி ஸத்துவ நிலையாகும். இந்நிலையில் அவர் எடுத்துள்ள பல பிறப்புக்களிலும் வாழ்ந்த வாழ்க்கைக் கதைகளே இதிற் கூறப்படுவன.

ஜாதகம் என்பது பிறப்புப் பற்றிய வரலாறு. ஆரம்பத்தில் ஒவ்வொரு ஜாதகமும் 'பிரமதத்தன் வாரணாசியில் அரசாண்டு கொண்டிருந்தபொழுது போதி சத்துவர் ஒரு பெண் யானையின் கருப்பத்திலிருந்தும் பிறந்தார்' என்பது போன்ற தொடக்கத்தை முற்கொண்டு, பின்னர், கதை தொடங்கும். ஒவ்வொரு ஜாதகத் திலும், பச்சுபந்ந வத்து என்னும் நிகழ்காலத்துக் கதையும், அதீத வத்து என்னும் முற்காலத்துக் கதையும், காதைகள் என்கின்ற அதீத வத்து அல்லது பச்சுபந்ந வத்துவிலுள்ள செய்யுட் களும், வெய்யாகரணம் என்ற காதைகளை விளக்கும் உரைப் பகுதியும், ஸமோதானம் என்கின்ற தொடர்புப் பகுதியும் உள்ளன. பச்சுபந்ந வத்துவில் புத்தர் பிக்குக்களுக்கு இன்ன சமயத்தில் கூறினார் என்பது விளக்கப்படும்.

அதீத வத்து போதி சத்துவராயிருந்த வரலாற்றை உணர்த்தும். காதைகள் அதீத வத்துவிற் காணுதலோடு கூடப் பச்சுபந்ந வத்துவிலும் பல இடங்களில் காணப்படுகின்றன. வெய்யாகரணம் காதைகளின் பதப் பொருளைத் தெளிவாக

---

1 இது போன்ற கதைகள் கிறிஸ்தவக் கதைகளிலும் வருகின்றன. செயின்ட் லூஸியா, செயின்ட் ப்ரிட்ஜெட் என்ற இருவரும் தங்கள் கண்களைப் பிடுங்கி எறிந்த வரலாறு இங்கே அறியத்தக்கது. மணிமேகலையை உதயகுமரன் தொடர்ந்து சென்ற வரலாறு ஒப்பிடத்தக்கது.

விளக்கும். ஸமோதானம் அதீத வத்துவில் காணப்படுபவர்களுக்கும், பச்சுவந்ந வத்துவில் காணப்படுகிறவர்களுக்கும் உண்டான தொடர்பைத் தெரிவிப்பதாம். இவை அனைத்தும் ஜாதக அட்ட (அர்த்த) வண்ணனை எனப் பெயர் பெறும். இந்த அட்ட வண்ணனையை (வர்ணனையை) இயற்றியவர் சிங்கள தேசத்து ஒரு பிக்கு எனக் கருதப்படுகிறார். இவர் தம் காலத்துக்கு முன்புள்ள ஜாதக அட்ட (அர்த்த) கதை என்ற வியாக்கியானத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதினர் என்பர்.

இந்த ஜாதக அட்ட கதை பாலியில் திருமுறைகள் எழுதிய காலத்தேயே எழுதப்பெற்று, சிங்கள தேசத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பழைய சிங்கள மொழியில் ஜாதக அட்ட வண்ண நா என்ற பெயருடன் மொழிபெயர்க்கப் பெற்றதாம். இவ்வாறு மொழிபெயர்க்கப் பெற்றது உரைநடைப் பகுதியேயாம். காதைகள் ஆதிகாலந் தொட்டு எப்பொழுதும் பாலி மொழியில் இருந்தன. பௌத்தத் திருமுறைகளைச் சார்ந்தனவாக இந்தக் காதைகள்தான் கொள்ளப்பட்டவை.

ஜாதகங்களில் பலவும் பாட்டும் உரையும் விரவி வந்த நடையிலேதான் அமைந்திருக்கின்றன. இவைகள் 22 நிபாதங்களாகப் (பகுதிகளாக) பகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் நிபாதத்தில் ஒரு செய்யுளுள்ள 150 காதைகளும், இரண்டாம் நிபாதத்தில் இரண்டு செய்யுட்களுள்ள 100 காதைகளும் உள்ளன. மூன்றாம் நிபாதத்தில் மூன்று செய்யுட்களுள்ள 50 காதைகள் இருக்கின்றன. ஆனால், இந்த எண்-அளவு சிற்சில இடங்களில் பிறழ்ந்தும் காணப்படும். உதாரணமாக, 2-ம் நிபாதத்தில் மூன்று முதல் பத்து வரை செய்யுட்களுள்ள காதைகளும் அடங்கியுள்ளன.

ஜாதகக் கதைகளிற் சில கி.மு. 2 அல்லது 3-ம் நூற்றாண்டில் வழங்கிய பௌத்த வரலாறுகளைச் சார்ந்தன என்பதற்குத் தக்க சான்றுகள் கிடைக்கின்றன. பர்குத், ஸாஞ்சி என்ற இடங்களிலுள்ள ஸ்தூபங்களின் சுவர்களில் இக்கதை பற்றிய சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உரைநடையிலுள்ள கதைப் பகுதி கூட இவற்றில் காணலாகும். ஜாதகக் கதைகளின் பெயர்களும்கூட இவற்றில் எழுதப்பட்டிருக்கின்றன. பல பூர்வ கதைகள் பௌத்தர்களால் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்றவாறு திருத்தியமைக்கப்பட்டன என்றும் ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளனர். எனவே, ஜாதக அட்ட வண்ணனையில் வரும் கதைகளில் அதிபுராதன காலத்துத் தோன்றியவை மாறுதலின்றி அப்படியே வந்துள்ளன என்று கொள்வதற்கு இடமில்லை.

எனினும், அவைகள்தான் பௌத்தக் கதைகளைத் தெரிந்து கொள்வதற்குரிய முக்கிய கருவிகள். அவைகளே இந்திய இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்றுள்ளவை. அன்றியும், உலக இலக்கிய வரலாற்றிலும் ஒரு சிறந்த ஸ்தானம் பெற்றுள்ளன. இப்போதுள்ள ஜாதகத் தொகுதியில் 500-க்கு மேற்பட்ட கதைகள் உள்ளன. ஆனால், ஆதியில் ஏற்பட்டவை 500 ஜாதகக் கதைகளே என்று துணிவதற்குச் சான்றுகள் உண்டு. சுள்ள நித்தேஸம் 500 ஜாதகங்களையே குறிக்கின்றது. பாஹியான் 500 ஜாதகங்கள்பற்றிய சித்திரங்களையே குறிப்பிடு கிறான்.

ஜாதகங்களின் அமைப்பு - நெறியை முதலில் நோக்குவோம். ஒரு சிலவற்றில், உரைநடையில் அமைந்த கதைகள் உள்ளன ; இவற்றின் இடையிடையே கதை முதலியவற்றைக் குறித்தெழுந்த செய்யுட்களும் மணிமொழிகளும் விரவிக் காணப்படுகின்றன. வேறு சிலவற்றில் உரையாடல் வடிவில் அமைந்த கதைச் செய்யுட்கள் உள்ளன. அன்றியும், ஒரு பகுதி உரையாடல் - செய்யுளாகவும் வேறொரு பகுதி கதையைக் கூறும் செய்யுளாகவும் அமைந்தனவும் உள. இன்னும் சிலவற்றில், மிக நீண்ட கதைப் பகுதிகள் உரைநடையில் தொடங்கி, செய்யுள் நடையில் தொடர்ந்து செல்லுகின்றன. உரையும் செய்யுளும் விரவி அமைந்த பகுதிகளும் இந் நீண்ட கதைகளில் அங்கங்கேயுள்ளன. வேறு சிலவற்றில், பல பொருள்களைக் குறித்துப் பல மணி மொழிகள் தொகுத்துக் காணப்படுகின்றன. கடைசியாக, இதி காஸங்கள் அல்லது இதிகாஸத் துணுக்குக்கள் என்று சொல்லத் தக்க பகுதிகளும் அமைந்துள்ளன.

**ஜாதகங்களின் பொருளடக்கம்**

ஜாதகங்களின் பொருளடக்கம் இனி நோக்கத் தக்கது. முதலாவது, விலங்குகள்பற்றிய நீதிக் கதைகளாய்ச் சிலவுள்ளன. தெய்விகம், மாந்திரிகம் முதலியன அடங்கிய விலங்குக் கதை களாக வேறு சில அமைந்திருக்கின்றன. மூன்றாவதாக, வரலாற்றுத் துணுக்குக்கள், வேடிக்கைக் கதைகள் முதலியன சமயச் சார்பின்றியே இயன்றுள்ளன. நான்காவதாக, நீண்ட நவீனகம் போன்ற கதைகளாயும் சில உள்ளன. மணிமொழிகளும் பக்திக் கதைகளும் வேறு சிலவற்றில் வந்துள்ளன. இவ்வாறு பலதிறப்பட்டனவாய் அமைந்ததன் காரணத்தையும் நாம் எளிதில் ஊகிக்கலாம். பல வகுப்புக்களிலிருந்தும் மக்கள் பிக்குக் களாகப் பௌத்த மதத்தில் புகுந்தனர். அவ்வாறு புகுவதற்கு முன் தாம் அறிந்த கதைகளையெல்லாம் பௌத்த வரலாறுகளிற் சேர்க்க வேண்டுமென்று கருதிச் சேர்த்துவிட்டனர். இதனால்தான்,

ஜாதகக் கதைகளுக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் இந்திய இலக்கியத்தில் ஏற்பட்டுவிட்டது என முன்பு கூறினோம்.

ஜாகத்தின் முதற் பகுதிகளில் விலங்கு பற்றிய பல சிறு கதைகளை நாம் காண்கிறோம். உதாரணமாக, துறவியாய்த் தவஞ் செய்துகொண்டிருப்பதாகப் பாசாங்குசெய்து எலிகளை யெல்லாம் கொன்றுதின்ற பூனையின் கதை இங்கே உள்ளது. இதனைப் போன்றே தந்திராக்கியாயிகத்திலும், பஞ்ச தந்திரத் திலும் வரும் வேறு கதைகளும் இங்குக் காணப்படுகின்றன. ஓர் ஆண்மயில் தான் பறவைக்கரசனது மகளை மணந்து கொள்ளும் சமயத்தில் தனது சிறகை விரித்தாடிக் கர்வம் கொண்டமையால் மணம் நிகழாது போயிற்று என்ற கதையானது ஓரிடத்துக் கூறப் படுகிறது. இதுவும் பழமையான கதையே. இக் கதையைக் கிரீஸ் தேசத்திலிருந்த ஹிரோடோட்டஸ் எழுதி வைத்துள்ளார். ஓர் ஆண் கோழிக்கு அன்புற்ற மனைவியாயிருப்பதற்கு ஒரு பெண் பூனை வாக்களித்து அதனை வசப்படுத்த முயன்றது. ஆனால், அந்த ஆண் கோழி பூனையினது தந்திரத்தைத் தெரிந்துகொண்டு அதை வெருட்டி விட்டது. இதுபோலவே, பெண்கள் வஞ்சகமாக நடிக்கிறார்கள் என்றும், ஞானிகள் அதற்கு இடங்கொடுக்கக் கூடாது என்றும் வற்புறுத்தப்படுகிறது.

தெய்விகமும் மந்திரமும் நிரம்பிய விலங்குக் கதைகளுக்குக் கீழ் வருவதை உதாரணமாகக் கூறலாம்.

> ஒரு நரி தான் தற்செயலாய்க் கேட்ட ஒரு மந்திரத்தைப் பயன்படுத்தி, நாற்கால் விலங்குகள் அனைத்தையும் அடக்கி யாண்டு வந்தது. பின் கர்வம் மிகுந்து வாரணாசியரசன் மீது போர் தொடுத்தற்குத் துணிந்து விட்டது. இரண்டு யானைகளின் முதுகின்மேல் ஒரு சிங்கம் நிற்க, அதன் மீது இந்த நரி ஆரோகணித்து வீற்றிருந்து, நரியரசியோடு யுத்தத் திற்குச் சென்றது. அங்கே சென்று அவ் அரசனது நாட்டை அழித்துவிட வேண்டும் என்று உத்தரவு இட்டது. அனைவரும் பெரும் பயம் கொண்டனர். ஆனால், அங்கே அரசனது புரோகிதனாயிருந்த போதி ஸத்துவரது தந்திரத் தினால், நரியும் அதன் கூட வந்த விலங்குகளும் அழிந்து விட்டன. இந்தப் போதிஸத்துவரின் ஆணையால் இந்த விலங்குகளின் மாமிசத்தைக் கொண்டுவரும் பொருட்டு வாரணாசிமக்கள் நகர வாசலின் வெளியே ஓடிச்சென்றனர். தங்களால் உண்டு முடியாதவற்றை அவர்கள் உலர்த்தி வைத்தார்கள். அன்று முதல் மாமிசத்தை உலர்த்தி யுண்ணும் வழக்கம் ஏற்பட்டதாம்.

இவ்வகைக் கதைகளில் விலங்குகளும் மக்களும் கலந்துவரும் முறைகளும் உண்டு. பெரும்பாலும், மக்களைக் காட்டிலும் இவ் விலங்குகள் சிறந்த அறிவும் ஒழுக்கமும் உடையனவாய்த் தோன்றுகின்றன. ஒரு சிலவற்றில், விலங்குகள் நன்றியுள்ளன வாகவும். மக்கள் நன்றியற்றவர்களாகவும் விளங்குகின்றனர். இதற்கு ஓர் உதாரணம் :

ஒரு காலத்தில் ஓர் அரசனுக்கு மூர்க்கன்[1] என்ற அரச குமாரன் இருந்தான். அவன் விஷப் பாம்பு போன்றவன். ஒருவரிடத்தும் இனிய வார்த்தை கூறி அறியாதவன். அரச னுக்குக் கண்ணில் உறுத்திய மணல்போல இருந்தான். ஒரு முறை பெரும் புயற் காற்றும் மழையும் அடித்த சமயத்திலே இம் மூர்க்கன் நதியிலே ஸ்நானம் செய்ய வேண்டும் என்று விரும்பி வற்புறுத்தினான். இவனை அழைத்துச் சென்ற வர்கள் நதியில் இவனை அமிழ்த்திக் கொன்றுவிடவேண்டும் என்று தீர்மானித்து விட்டனர். ஆனால் இவன் நதியின் நடுவிலே நின்ற ஒரு மரத்தில் ஏறித் தப்பித்துக் கொள்ளு கிறான். இவனோடுகூட ஒரு பாம்பும், ஓர் எலியும், ஒரு கிளியும் தப்பி ஏறின. இந்நான்கு உயிர்களையும் ஒரு துறவி நீர்ப் பெருக்கினின்றும் அகற்றி வீட்டிற்குக் கொணர்ந்து குற்றுயிராய்க் கிடந்த பாம்பு முதலியவற்றிற்கு முதலில் சிகிச்சை செய்து பின்னர் அரச குமாரனிடம் வந்து, அவனுக்குச் சிகிச்சை செய்தனர். இதனைக் கண்டதும், மூர்க்கன் பெருங் கோபங் கொண்டான். பாம்பு முதலியன தங்களுக்குச் செய்த நன்றிக்கு ஏதாவது உதவி செய்வதாக வாக்களித்திருந்தன. அவ்வாறே மூர்க்கனும் கபடமாக வாக்களித்தான். சிலகாலத்திற்கு அப்புறம் மூர்க்கன் அரசனா யினன். அத்துறவி வாக்குறுதிகள் உண்மையா என்று பரிசோதிக்க முயன்றனர். பாம்பு முதலியன மூன்றும் உண்மையாகவே நன்றிக்குக் கைம்மாறு செய்தன. ஆனால் மூர்க்கனாகிய அரசன் அத்துறவியைப் பிடித்து வந்து வளாரினால் அடித்துத் தூக்கி விடும்படியாக ஏவினன். வளாரினால் அடிபட்டபொழுது ஒவ்வோர் அடி வீழ்ந்ததும், 'மனிதனுக்கு உதவி செய்வதைக் காட்டிலும், வெறுங் கட்டைகளுக்கு உதவி செய்தால் நலமாயிருக்கும்' என்ற பழமொழிச் செய்யுளொன்றைத் துறவி கூறுகிறான். அடுத்துள்ள ஜனங்கள், 'நீ என்ன சொல்லுகிறாய்?' என்று

1. இதுபோன்றதொரு கதையையே,
'கெட்டிடத் துவந்த உதவி, கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனையாயின்'
என்ற குறுந்தொகைச் செய்யுட்பகுதி (225) குறித்ததாதல் வேண்டும்.

துறவியைக் கேட்க, அவன் நிகழ்ந்த வரலாற்றினைக் கூறினான். உடனே திரண்டிருந்த ஜனங்கள் அனைவரும் மூர்க்கனைப் பிடித்துச் சாகும் வரை அடித்து அவனுக்குப் பதிலாகத் துறவியை அரசனாக்கினர்.

உலக இலக்கியங்களிற் காணும் மாந்திரிகக் கதைகளைப் போன்ற வேறு சில கதைகளும் ஜாதகத்தில் உள்ளன. அவைகளில் ஒரு சில, பதிவிரதைகளல்லாத பெண்களைப் பற்றியன. உதாரணமாக,

> ஒருவன் தன்னுடைய தேகத்திலுள்ள ரத்தத்தைத் தன் மனைவிக்குக் கொடுத்து உயிர் பிழைக்கச் செய்கிறான். ஆனால், அவள் ஒரு முடவன் மீது காதல் கொள்ளுகிறாள். அவனோடு முழுவதும் வாழ விரும்பி, தன் கணவனை ஒரு குன்றின் சிகரத்திலிருந்து கீழே தள்ளி விடுகிறாள். ஆனால், அவன் ஒரு பல்லியினால் உயிர் பிழைத்து, பின்னர் அரச பதவியை அடைகிறான். தனது மனைவியையும் அவளது காதலனையும் மீண்டும் காண நேர்ந்தது. அவர்களைத் தண்டிக்கிறான்.

இதுபோன்றே மிருகபாஷையையும் கூட அறியவல்ல ஓர் அரசனுடைய கதையும் கூறப்பட்டுள்ளது.[1] ஒருமுறை இவ் அரசன் எறும்புகளும் கொசுகுகளும் பேசியதைக் கேட்டுச் சிரித்தான். இவனது இராணி, சிரித்ததன் காரணத்தைத் தன்னிடம் சொல்லும்படி வற்புறுத்தினாள். சொன்னால், தான் உயிரிழக்க நேரிடும் என்று அரசன் கூறியும் அவள் விட்டபாடில்லை. போதிசத்துவர் தோன்றி இராணியை நன்றாக உதைக்கச் சொல்லுகிறார். அவளுக்கு அப்போதுதான் புத்தி வந்தது.

மரக்கலத்தில் சென்று வாணிகம் செய்பவர்களுடைய கலங் கவிழ்ந்து யக்ஷிணிகளால் உதவி பெறுவது முதலிய வரலாறுகளும் காணப்படுகின்றன (ஜாதகம் 196)[2]; நர மாமிசம் உண்ணும் வரலாறுகளும் உள்ளன. இந்து சமய இலக்கியங்களில் வரும் கல்மாஷ பாதனைப் பற்றிய சரித்திரத்தோடு இது ஒப்பிடற்பாலது. இவ்விதக் கதைகளில் நாகங்கள், கருடர்கள், இயக்கர்கள், கின்னரர்கள், முதலியோர்கள் பாத்திரங்களாய் அமைந்திருக்கின்றனர். 404-ம் ஜாதகத்தில், ஒரு நாள் பிரிய நேரிட்டதின்

1. கழறிற்றறிவார் என்ற நாயனாருடைய புராணம் பெரிய புராணத்தில் வருவதைப் பலரும் அறிவர். இப்பெயர்க்கு மிருகங்கள் முதலிய எல்லா உயிரினங்களும் பேசியவற்றை அறிபவர் என்று பொருள்.

2. இக்கதை மணிமேகலையின் வரலாற்றில் ஒரு பகுதியோடு ஒப்பிடற்பாலது.

காரணமாகக் கின்னர தம்பதிகள் பெரும் துக்கத்தில் ஆழ்ந்த வரலாறு ஒன்று காணப்படுகிறது. அரசனொருவனது அம்பினால் உயிரிழந்த தன் கணவன் பொருட்டு ஆற்றொணாத துக்கத்தை எய்திய கின்னர மகள் அமிர்தசஞ்சீவினியால் பிழைத்தெழுந்த தன் நாயகனோடு வாழ்ந்த வரலாறு அழகானது. விதுர பண்டிதனைப் பற்றிய ஜாதகம் ஒன்றும் இவற்றில் உள்ளது **(545)**. இவ் விதுரன் மகா பாரதத்தில் வரும் கௌரவர்களுடைய மந்திரி எனக் கூறப்படுகிறான்.

வேடிக்கையான சில வரலாற்றுக் கதைகளும் இவற்றில் அடங்கியுள்ளன. உதாரணமாக, தன் தந்தை மீது கொசுகு அணுகவொட்டாதபடி பாதுகாத்துவந்த ஒரு புத்திரன், அவன் தலைமீது வந்து உட்கார்ந்த கொசுவைக் கொல்லப்போய், தன் தந்தையையே கொன்றுவிட்ட சரித்திரத்தைக் கூறலாம். வேறொரு கதை செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும் குரங்கு எந்தச் செடிக்கு அதிகத் தண்ணீர் வேண்டும் என்று அறிவதற்காக, வேரோடு செடிகளைப் பிடுங்கிப் பார்த்த வரலாற்றைப் பற்றியது. ஓர் அந்தணன் இரண்டு செம்மறிக் கடாய்கள் ஒன்றோடொன்று தாக்கிப் போர் செய்துகொண்டிருந்த இடத்திற்கு வந்தான். ஓர் ஆடு பின்னிட்டுச் செல்வதைக் கண்ட அவன், தனக்கு வந்தனம் செய்வதற்காகப் பின் போகிறது என்று எண்ணி, வந்தனத்தை ஏற்றுக்கொள்ள அதன் முன் வந்தான். அருகிலிருந்த ஒரு வணிகன், 'தாக்குவதற்காகப் பின் போகிறது; இடையில் செல்லாதே' என்று தடுத்தான். இதற்குள் இரண்டு ஆடுகளும் பாய்ந்து அந்தணனைக் கீழே தள்ளிக் காயப்படுத்தி விட்டன. 'ஒரு துறவி கொலை செய்யப்படுகிறான்! கொலை செய்யப்படுகிறான்!' என்று அவ்வந்தணன் கத்தினானாம். இக்கதையும் ஜாதகத்தில் உள்ளது.

வேறொரு கதை மகாபிங்கலன் என்ற ஒரு கொடிய அரசனைப் பற்றியது.

> பிங்கலன் வல்லரசு பூண்டு தன்கீழ்வாழும் குடிகளை யெல்லாம் வருத்தி வந்தனன். இவன் இறக்கும் பொழுது இவன் இராசதானியாகிய வாரணாசியிலுள்ள அனைவரும் மிக்க மகிழ்ச்சி கொண்டார்கள். ஆனால், வாயில் காப்பாளன் மட்டும் அழுது கொண்டிருந்தான். போதிஸத்துவர் இவனிடம் வந்து காரணம் கேட்க, இவன், நான் மகா பிங்கலன் இறந்து போனதற்காக அழவில்லை. ஏனென்றால், அவன் அரண்மனையிலிருந்து வரும்பொழுதும், போகும் பொழுதும், ஒவ்வொரு முறையும் கொல்லனது சம்மட்டி கொண்டு என் தலையில் எட்டு முறை அடிப்பான்.

இப்பொழுது அவன் கீழுலகத்திற்குப் போயிருக்கிறான். அப்படியே யமனுக்கும் அடிகொடுப்பான். உடனே யமன் அவனைப் பூவுலகத்திற்கு மீண்டும் அனுப்பி விடுவான். அப்பொழுது பழையபடியும் என் தலையில் அடி விழுமே என்று அழுகிறேன்', என்று கூறினானாம். இவ்வாறு சொல்ல, போதிஸத்துவர், 'இறந்து போனவர்கள் மீளமாட்டார்கள். அவனைப் புகையாய் எரித்தாய் விட்டது. சிதைக்கு அருகிலுள்ள மண்ணும் வேற்று மண்ணாகிவிட்டது' என்று சமாதானப் படுத்தினாராம்.

ஒரு குரங்கு ஓர் அரசனால் பிடிபட்டு, அவனது அரண் மனையில் சிலகாலம் வாழ்ந்து வந்தது. பிற்பாடு அவன் அதனை விடுதலை செய்துவிட்டான். தன் குலத்தார்களிடம் அக்குரங்கு திரும்பி வந்தவுடன், அவைகள் அதைச் சூழ்ந்து கொண்டு, 'மக்கள் உலகம்' எவ்வாறு நடைபெறுகிறது?' என்று கேட்டனவாம். குரங்கு இரண்டு சுலோகங்களில் தான் பார்த்தவற்றைக் கூறுகிறது: 'இந்தப்பொன், இந்த அருமை யான பொன் என்னுடையது' என்று அவர்கள் இரவும் பகலும் கத்திக்கொண்டே யிருக்கிறார்கள். தூய வாழ்க்கை நெறியை அவர்கள் சிறிதும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. வீட்டில் இரண்டு எஜமானர்கள் உண்டு. ஒருவருக்குத் தாடி யில்லை; ஆனால் நீண்ட குயங்களுண்டு. காதில் துளை யிட்டிருக்கிறார்: அவர்க்கு விலை எண்ணற்ற பொன்களாம். சடைபின்னிப் போட்டுக்கொண்டு திரிகிறார். அங்குள்ள எல்லா மக்களையும் துன்புறுத்துகிறார். இப்படிச் சொல்லி யதும், அக்குரங்குகள் இனிமேல் ஒன்றும் கேட்க வேண்டாம் என்று காதைப் பொத்திக்கொண்டு ஓடிவிட்டன (219).

வேறொரு கதை கிரேக்கக் கதை ஒன்றனோடு ஒப்பிடற் பாலதாயிருக்கிறது.

ஒருத்தியின் கணவன், அவள் மைந்தன், அவள் சகோதரன் இம்மூவரையும் தூக்கிலிடும்படி அரசனது ஆணை பிறக் கிறது. இந்த மூவருள் யாராவது ஒருவருடைய உயிரைப் பிச்சை அளிப்பதாக அரசன் அவளுக்கு வாக்களிக்கிறான். அவள் சகோதரனது உயிர் பிழைத்தால் போதும் என்று சொல்கிறாள். இதற்குக் காரணமாக, 'கணவனையும் மகனையும் எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் மீண்டும் ஒரு சகோதரனைப் பெற முடியாது' என்று கூறினாளாம்.[1]

---

[1] இதற்கு மாறாக,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' (XX, 80) என்று சிலப்பதி காரம் கூறுகிறது.

இதுபோன்ற ஒரு கதை இண்ட பெர்னஸ் என்பவனது மனைவியைக் குறித்து ஹிரோடோட்டஸ், கூறியுள்ளான். ஸோபாக்கிளிஸ் என்ற நாடக ஆசிரியன் ஆண்டிகோனே என்பவளை இவ்வாறாக வார்த்தையாடும்படி செய்கிறான். வால்மீகி இராமாயணத்தில் (யுத்த: 101, 12-13) ஒரு பழமொழி இக் கருத்தே பற்றி வந்துள்ளது.

ஜாதகத்தில் வரும் வேறொரு வகை வரலாறுகள் விடுத்தற் கரிய புதிர்களும் அதிசாமர்த்தியமான விடைகளும் கொண்டன. இவை போன்ற கதைகள் உலக இலக்கியங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. ஒருவன் அறியாமல் தற்செயலாக ஒரு குதிரையை நொண்டியாக்கி விடுகிறான். ஒரு கர்ப்பிணியின் கர்ப்பம் சிதைய நேரிடுகிறது. இதுபோன்ற பல குற்றங்களுக்கும் இவனை ஆளாக்கி ஒரு நீதிபதியின் முன்னிலையில் கொண்டு வருகிறார்கள். நீதிபதி இவற்றையெல்லாம் ஆராய்ந்து இவன் நெஞ்சறிந்த குற்றவாளியல்லன் என்று தீர்ப்புச் சொல்லுகிறான்.

இதில் வரும் குஸ ஜாதகமும் (531) அறிந்து இன்புறற் பாலது :

> குஸன் என்ற அரச குமாரன் ஒரு விரூபி. ஆனால் அறிவிலும் ஆற்றலிலும் மிகச் சிறந்தவன். பேரழகுள்ள ஒரு பெண் பதுமையைப் பொன்னால் இயற்றி, இத்தகைய அழகுள்ளவளையே தான் மணம் புரிவதாகப் பிரதிக்ஞை செய்தான். மத்த (மத்திர) தேசத்து அரச குமாரி பபாவதி [பிரபாவதி] ஒருத்தியே இத்தகைய அழகுடையவளா யிருந்தாள். அவளைக் குஸன் மணம் புரிந்து கொண்டான். ஆனால் பபாவதியின் அன்னை, தன் குமாரி கர்ப்பந்தரிக்கும் வரை அவளும் கணவனும் இரவில் மாத்திரம்தான் சந்திக்க வேண்டும் என்று நிபந்தனை இட்டிருந்தாள். இந் நிபந் தனையை மீறி, இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விட்டனர். இதன்பயனாக, பபாவதி விரூபியாகிய தன் கணவனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். ஆனால், குஸன் அவளை விடவில்லை. பலவாறாக முயன்று, முடிவில், தன் அறிவாற்றலால் அவன் அவளை அடைகிறான்.

மஹா உந்மக்க ஜாதகத்தில் (546) மகோசதன் என்பவன், நமது நாட்டுக் கரிகாலனைப் போன்று இளைஞனாயிருக்கும் பொழுதே சிறிதும் வழுவாதபடி முறை செலுத்தினான் என்று கூறப்படுகிறது. இங்ஙனம் முறை செலுத்திய வரலாறுகளுள் ஒன்று வருமாறு :

> தாய் ஒருத்தியும் வேறொருத்தியுமாக இரண்டு பெண்கள் ஒரு குழந்தையைத் தனது தனதென்று வழக்காடினார்கள் ;

உண்மையை உணர்தற்பொருட்டுக் குழந்தையைக் கீழே கிடத்தி, ஒருத்தி குழந்தையின் தலையைப் பிடித்திழுக்க, மற்றொருத்தி காலைப் பிடித்து இழுக்கும்படி செய்து, யார் இழுத்துக் கொள்கிறார்களோ அவளுக்குத்தான் குழந்தை உரியது என்று அவன் உத்தரவிடுகிறான். குழந்தையின் துன்பத்தையும் கவனியாது அதனைப் பிடித்திழுத்தவள் தாயல்லள் என்று உணர்ந்து முடிவில் தீர்ப்புக் கூறுகிறான்.

இக்கதை இங்-சவோ என்ற (கி. பி. 178-197) சீன ஆசிரியர் எழுதிய கதையைப் போன்றுள்ளது (இலக்கிய உதயம் - I, பக். 112). இம் மகோசதன் விடை கண்ட அபூர்வமான புதிர் களும் பலவுள்ளன. இவன் தனது நுட்ப மதியினால் அரசனது மந்திரியாகி அதிசாமர்த்தியமுள்ள ஒரு பெண்ணையும் மணந்து கொள்கிறான். இவனை வஞ்சிக்க முயன்ற மற்ற மந்திரிகளின் சூழ்ச்சியினின்றும் இவன் மனைவி மிக்க சாமர்த்தியத்துடன் விடுவிக்கின்றாள். அன்னிய நாட்டுப் பகையரசர்களோடு நேர்ந்த போரில் இவன் தன் அரசனை வெற்றிபெறச் செய்ததுடன், பெருங்குகை வழி ஒன்றை அமைத்தனன் என்றும் இந்த ஜாதகம் கூறுகிறது. இம்மகோசதன் ஒரு போதிஸத்துவன் என்பது கூற வேண்டா.

கொள்ளைக்காரர்கள் கதைகளும், ஜாதகங்களில் காணப் படுகின்றன. போதிசத்துவர் இரண்டு முறை ஆறலை கள்வராக இருந்தனர். இக் கதைகள் ஒன்றில் ஓர் அந்தணன் நவரத்தின மழையைப் பெய்வித்து நாசம் செய்த கதை வருகிறது. இரண்டு கொள்ளைக்காரக் கூட்டங்கள் ஒருவரோடொருவர் போர் விளைத்து, முடிவில் அனைவரும் சண்டையில் இறந்துவிடு கின்றனர். இது சாஸரர் எழுதிய கதைகளில் ஒன்றனோடும், Pardoner's Tale, ஸுந்தோப ஸுந்தர் கதையோடும் ஒப்பிடற் பாலது. தீப்பெண்டிர்களது சரித்திரங்களும் பலவுள்ளன (61-66). இப் பொருள் பற்றியே குணால ஜாதகத்திலும் (536) பல கதைகள் அமைந்துள்ளன. ஒரு கதை மிக்க சுவையுள்ளது. ஓர் அந்தணன் தன்வீட்டிலேயே ஒரு பெண்ணை வளர்த்து அவள் பருவமடைந்ததும், அவளை மணந்து கொள்கிறான். அவளுக்குக் காவலாக ஏழுகோட்டை மதில் அமைத்து நடுவிலே ஒரு பெரிய உப்பரிகையைக் கட்டி அவளை அதில் வசிக்கச் செய்கிறான். ஆனால் அவள் இவனை ஏமாற்றி, கற்பு நெறி கடந்து ஒழுகி, முடிவில் தான் கற்புடையவள் என்று நிரூபித்தும் விடுகிறாள்.

இந்த ஜாதகக் கதைகளிலுள்ள பிறிதொரு கதை கிருஷ்ணா அல்லது திரௌபதியைப் பற்றியது. இவள் தனக்கு நாயகர்

களாயமைந்த பஞ்சபாண்டவர்களைத் தவிரக் கூனனும் குள்ளனு மாகிய ஒருவனைச் சோரநாயகனாகக் கொள்ளுகிறாள். இதை உணர்ந்த பாண்டவர்கள் உலகைத் துறந்து இமயமலைக்குச் சென்று விடுகிறார்களாம். இதில் தீப் பெண்டிர்களைக் குறித்துப் பல சுவையுள்ள பாடல்கள் புத்தரே சொல்லியனவாக வருகின்றன. ஒன்றன் மொழிபெயர்ப்பு வருமாறு:

செந்தழல் போல் சேர்ந்தாரைக் கொல்வர்; செறிநீர்போல்
வந்த வனைத்தும் வரன்றிடுவர்—வெந்துயர்செய்
நோயும் கொடுமுள்ளும் போல்வர்; நுணங்கிடையார்
காய் பொன்னின் நீங்குவர்தம் கற்பு.

இவ் வகையான கதைகளும் கருத்துக்களும் நமது இந்திய தேசத்தில் பல மதங்களிலும் உள்ளனவே.

தீயொழுக்கம் பற்றிய கதைகளேயன்றி நல்லொழுக்கம் பற்றிய கதைகளும் உள்ளன. இவையெல்லாம் கதைச் செய் யுட்கள் வடிவில் அமைந்து நாடகத் தன்மை பொருந்தி விளங்கு கின்றன. ஓர் உதாரணம்.

ஓர் அரசன் தனது சேனாதிபதியாகிய அதிபாரகன் என் பவனது அழகுடை மனைவியைப் பார்க்க நேர்ந்தது. அவள் மீது அளவற்ற காதல்கொண்டுவிட்டான். ஆனால் அவள் பிறன் ஒருவனுடைய தாரம். அவளை அடைய முடியாது என்று தெரிந்ததும் மிக வருந்திப் புலம்புகிறான். இதைத் தெரிந்ததும் அதிபாரகன், தன் மனைவிமீது அளவற்ற அன்பு கொண்டிருந்தவன் என்றாலும், அவளை அரசனுக்குக் கொடுத்துவிட எண்ணுகிறான். ஏனென்றால், அரசனது உயிரே ஆபத்திற்குள்ளாய் விட்டது என்று பயங் கொண்டான். ஆனால், அரசன் இது பாவச் செயல் என்று மறுத்து விடுகிறான். அரசனுக்கும் அதிபாரகனுக்கும் நடந்த உரையாடலில் இருவரது உயர் குணங்களும் புலப்படுகின்றன. முடிவில் அரசன் துறவு பூணுகிறான்.

## சில கதைகளில் காணப்படும் நீதி போதனை

போதிஸத்துவர் அறிவிற் சிறந்த ஒரு கிளியாகப் பிறந்தனர் (484). தினந்தோறும் வயலில் நெற் கதிரை மேய்ந்துவிட்டுச் சில கதிர்களை அலகில் கொண்டுவருவது வழக்கம். ஏன் இப்படிக் கொண்டுவருகிறாய் என்று கேட்டவுடன், அதற்கு 'நான் ஒரு கடனைச் செலுத்துகிறேன்; கடனும் கொடுக் கிறேன்; வைப்பு நிதியும் வைத்துக்கொள்ளுகிறேன்' என்று கூறியதாம். கடன் செலுத்தியது தன்னுடைய முதிய

பெற்றோர்களுக்கு; கடன் கொடுப்பது தன் குஞ்சுகளுக்கு; நிதி வைப்பது ஏலாத மற்றப் பறவைகளுக்கு உணவளிப்பது.

இவ் வகைக் கதைகளேயன்றி இறந்தோரின் பொருட்டு வருந்துகின்றவர்களைச் சமாதானம் செய்யும் கதைகளும் உள்ளன. தசரத ஜாதகத்தில் (461) இராமன் கூறுவது இது போன்றதொரு பகுதி; செய்யுள் வடிவில் உள்ளது. யுதிஷ்டிர னுக்கும் விதுரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் உண்மை யான அந்தணன் யார் என்பதைப்பற்றி எழுகின்றது. இது போன்றவை புத்த சமயத்திற்கு உரியன என்று கூறுதல் இயலாது. இந்து சமயத்திற்குரிய நீதித் தொகுப்பிலும் காணப்படுவனவே. புத்த ஜாதகத்தில் பெரும் பகுதி வரலாறுகள் பற்றியதே. இவற்றோடு உபநிஷதங்களில் வரும் உரையாடலையும் மகா பாரதத்தில் வரும் உரையாடலையும் ஒப்பிடலாம். உதாரண மாக, விதேக தேசத்து அரசனான அங்கதியின் வரலாற்றைக் (544) கூறலாம். ஒரு சில வரலாறுகளில் நீதியின் வழுவியவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் என்று கூறி, நரக வருணனை செய்யப்படுகின்றது. வேறு சில வரலாறுகளில் ஏதேனும் ஒன்றைக் கண்ட மாத்திரத்தில் நிலையாமையை உணர்ந்து உலகைத் துறக்கும் செய்திகள் கூறப்படுகின்றன. நரைமயிர் கண்ட மாத்திரத்தில் உலகைத் துறந்த மக்கா தேவன் வரலாறும் (9), மகாஜனக ஜாதகமும் (539) இவ்வகைப்பட்டன. இவை களெல்லாம் துறவு மேம்பாட்டைக் கூறும் இந்தியச் சரித்திரங் களாகவுள்ளன.

ரிஷ்யசிருங்கன் (இஸி ஸிங்கன்) வரலாறும் ஜாதகக் கதையில் காணப்படுகிறது. நளினிகா ஜாதகத்திலும் (526), வேறொரு ஜாதகத்திலும் (523) பெண்ணினத்தையே ஒரு பொழுதும் பார்த்தறியாத ரிஷ்யசிருங்கரை அலம்புசை என்ற தெய்வமாது வசீகரித்த கதை கூறப்படுகிறது. இக் கதை பார்க்குத் சுவரோவியங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஸாம ஜாதகத்தில் (540) தசரதன் மரணம் எய்தும் தறுவாயில், தான் ஸப்தவேதி என்ற அம்பினைத் தொடுத்துப் பெற்றோர்களுக்கு நீர் கொடுவரச் சென்ற முனிபுத்திரன் ஒருவனைக் கொன்றதாகக் கூறிய வரலாறு காணப்படுகிறது. முனிபுத்திரன் பெயர் ஸாமன் என்றும், தசரதன் தன் பிறப்புக்கள் ஒன்றில் வாரணாசியில் பிலியக்கன் என்ற அரசனாயிருந்தபோது இவ்வாறு அம்பு எய்தான் என்றும் இந்த ஜாதகம் கூறும். இவ்வகை வரலாறுகள் பலவற்றில் சாந்தியும், தியாகமும், உயிர்கள்மாட்டு அன்பும், இயற்கையில் காணும் அளவிற்கு எவ்வளவோ மிஞ்சிவிடுகின்றன. சிபிச் சக்கரவர்த்தி கதையை இதற்கு உதாரணமாகக் கூறலாம் (499). கண்ணன்

துறவு பூண்டு இமாலய யாத்திரை போகும்போது தன் பொருள்கள் அனைத்தையும் தானம் செய்துவிடுகிறான். இந்திரன் இவனிடம் வந்து 'உனக்கு வேண்டுவதைக் கேள்' என இவன் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றினின்றும் விடுதலையையும் சாந்தியையும் வேண்டி நின்று, இறுதியில்,

> எனக்குஒரு நல்வரம் ஈவதற்கு எண்ணின்,
> மனத்தினும் மெய்யினும் தினைத்துணைத் தீமையும்
> எவ்வுயி ருக்கும் என்பொருட் டாக
> யாவரும் எங்கும் என்றும் செய்தலை
> நீக்குதல் வேண்டுவன் இந்திர! நின்பால்.

என்ற அழகும் அருமையுமான ஒரு பிரார்த்தனையையும் செய்கிறான்.

தன் பகைவர்களிடத்தும் அன்பு பாராட்ட வேண்டும் என்ற அரிய உபதேசம் 151-ம் ஜாதகத்தில் காணப்படுகிறது. கந்திவாதி ஜாதகத்தில் (313) போதி ஸத்துவரை அவர்மீது கோபங் கொண்டுள்ள ஓர் அரசன் அடித்துத் துன்புறுத்தி அங்கவீனம் செய்துவிடுகிறான். அப்பொழுதும் அவர் பொறுமையை இழவாது, பழிக்குப்பழி செய்யவேண்டும் என்ற கருத்து அறவே இன்றியிருந்தனர்.[1] கர்ப்பமாயிருந்த பெண் மானின் பொருட்டுத் தன் உடலைத் தியாகம் செய்யத் துணிந்த ஆண் மான் வரலாறும், வந்த அதிதிக்கு உணவாகத் தீயில் விழுந்து தன்னைப் பலி கொடுத்த முயலின் வரலாறும் (316) இங்கே அறியத்தக்கன. எல்லா ஜாதகங்களிலும் மிகப் பிரசித்தி வாய்ந்தது வேஸந்தர ஜாதகம் (547). இதனை ஒரு காவியம் என்றே கூறலாம். இதிலுள்ள உரைநடைப் பகுதி கதையின் சுவையைக் குறைக்கின்றது என்றே ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதன் கதாநாயகன் தானவீரனாவன். கதை வருமாறு:

> வெஸ்ஸந்தரன் என்னும் அரசன் தன்னிடம் கேட்பன வற்றை யெல்லாம் வரையாது கொடுத்தலையே விரதமாகக் கொண்டு வாழ்ந்தான். 'என் இதயத்தைக் கேட்பினும், கண்ணைக் கேட்பினும், என் உடல் மாமிசத்தையும் ரத்தத்தையும் கேட்பினும், என் சரீரத்தையே கேட்பினும் கொடுத்துவிடுவேன்' என்று உறுதி பூண்டான். தன் நாட்டின் நன்மையைக் கருதாது, தன்னிடமிருந்த ஓர் அற்புதமான யானையை இவ்வாறு கொடுத்துவிட்டதனால் இவனை மக்கள் நாடு கடத்தி விட்டனர். அவனது ராணி மத்தியும்,

1. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (குறள், 314)

அவனது இரண்டு குழந்தைகளும் அவனுடன் சென்றனர். இருந்த எல்லாவற்றையும் அவர்கள் கொடுத்துவிட்டமையினாலே, எஞ்சியிருந்த நாலு-குதிரை வண்டியில் ஏறி அவர்கள் சென்றனர். செல்லும் வழியில் ஓர் அந்தண யாசகனைக் கண்டனர். அவன் வேண்ட, வண்டியையும் குதிரையையும் கொடுத்து விட்டனர். கால் நடையாகக் குழந்தைகளையும் எடுத்துச் சென்று, வனத்திலுள்ள ஓர் ஆசிரமத்தை யடைந்து அங்கே தங்கினர். அப்போது இந்திரன் விரூபியும் கொடியவனுமான ஓர் அந்தணன் வடிவில் வெளிப்பட்டுக் குழந்தைகளை அடிமைகளாகக் கொடு என்று கேட்க, அவர்களையும் கொடுத்து விட்டான். பின்னர் மனைவியையும் கேட்கிறான். அவளையும் மறாது கொடுத்தனன். அப்பொழுதுதான் கிழட்டு அந்தணன் தான் இன்னார் என்பதைப் புலப்படுத்தினான். கதை மங்களமாக முடிகிறது.

இக் கதையில் 786 செய்யுட்கள் உள்ளன. வெஸ்ஸந்தரன் காட்டிற்குச் செல்வது, இராமன் அயோத்தி விட்டுக் காடு செல்லுவதை நினைவூட்டுகிறது. இதில் வரும் இயற்கை வருணனையும், அரணிய வருணனையும், ஆசிரம வருணனையும் வால்மீகி இராமாயணத்தையே நமக்கு நினைவுறுத்துகின்றன. குழந்தைகளைக் கொடுக்கும்பொழுது அந்தணன் அவர்களைக் கடுமையாகத் தண்டித்துத் துன்புறுத்தியதையும், குழந்தைகள் அழுது புலம்புவதையும், தாயின் துக்கத்தையும், அவள் மீண்டும் குழந்தைகளைப் பார்க்க விரும்புவதையும் பற்றிய வருணனைகள் மிகச் சிறப்பு வாய்ந்தனவாயுள்ளன. இக்கதை[1] திபெத்திலும், பர்மாவிலும் நாடகமாக நடிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஜாதகத்தின் தலைவர் போதி ஸத்துவரே. இவருக்கு உரியவாகப் பல அரிய இயல்புகள் சிறிது பிற்பட்ட காலத்தே கூறப்பட்டுள்ளன. இந்த இயல்புகளைப் 'பாரமிதை'கள் என்பர். இவற்றின் வகைகள் ஆறு எனவும், பத்து எனவும், முப்பது எனவும் பலவாறு கூறுவர். பத்து வகைப்பட்டன வருமாறு:

தானஞ்சீல மேபொறை தக்கதாய வீரியம்
ஊனமில்தி யானமே யுணர்ச்சியோ டுபாயமும்
மானமில் லருளினை வைத்தலே வலிமையும்
ஞானமீரைம் பாரமீதை நாடுங்கா லிவைகளும்[2]

1. அரிச்சந்திரன் கதையோடு இக் கதையை ஒப்பிடலாம்.

2. இவற்றை முறையே தான பாரமிதை, சீல பாரமிதை, க்ஷமா பாரமிதை, வீரிய பாரமிதை, தியான பாரமிதை, பிரஜ்ஞா பாரமிதை, உபாய பாரமிதை, தயா பாரமிதை, பல பாரமிதை, ஞான பாரமிதை என்பர்.

இவ்வாறு மனம், மொழி, மெய்களில் அளவிலா ஆற்றல் பெற்று உத்தம புருஷனாகப் போதி சத்துவர் விளங்கும் கருத்து, பாலித் திரிபிடகத்தில் ஹீனயானத்தைச் சார்ந்த தேரவாத சமயத்திற் குரிய நூல்களில் ஓர் அப்பிரதான நிலையில் காணப்படுகிறது. ஆனால், இவற்றிற் காட்டிலும் மகாயானத்தில் பிரதானப் பொருளாகப் பூர்த்தியாய்க் காணப்படுகிறது. ஆகவே, இப் பொருள்களை விளக்கும் ஜாதகங்கள் ஹீனயானத்திற்கும் மஹா யானத்திற்கும் பொதுவாக அமைந்து விட்டமை ஆச்சரியமன்று. இருவகை யானங்களில் இந்த ஜாதகங்கள் எதைச் சார்ந்தன என்ற கேள்வி எழுதல் கூடும். பௌத்த சமயப் பகுப்புக்களில் எல்லாம் இந்த ஜாதகங்கள் காணப்படுகின்றன. ஒரு சமயப் பகுப்பிற்கும் இவை தனியாக உரியவன்று என்பதே உண்மையா கலாம். பொதுமக்களிடையே பௌத்த சமயத்தைப் பரப்பு வதற்கு இவை மிகுதியும் பயன்பட்டன. அவர்கள் உள்ளத்தில் இவை வேரூன்றிவிட்டன. இன்றும் பௌத்த மக்களிடையே ஜாதகத்தைப் போன்று அத்தனை பிரசாரமுள்ள நூல் வேறு யாதும் இல்லை. ஈழதேசத்திலுள்ள பௌத்தர்கள் இரா முழுதும் விழித்திருந்து கவனமாய் ஜாதகக் கதைகளைக் கேட்டு வருகின் றனர். பர்மாவிலும் கற்றோரும் மற்றோரும், துறவிகளும் இல்லறத்தினரும் இக்கதைகளைப் பரம்பரை பரம்பரையாய், பல நூற்றாண்டுகளாகக் கேட்டு அனுபவித்து வந்திருக்கின்றனர். பௌத்த சமயம் பரவிய இடங்களில் எல்லாம் இங்ஙனமே உள்ளது.

### பிற நாட்டு இலக்கியங்களில்

சீன தேசத்தில் பௌத்தக் கதைகள் பரவியிருந்தமை நன்குணரப் பட்டதே. இவ்வாறே பிற நாட்டிலுள்ள இலக்கியங் களிலும் ஜாதகக் கதைகள் புகுந்து அவற்றை வளம்படுத்தி யுள்ளன. ஆகவே, உலக இலக்கியத்தில் இக் கதைகட்கு மிகச் சிறந்ததோர் இடம் ஏற்பட்டு விட்டது. அந்தணரும், ஜைனர் களும் பிற சமயத்தினரும் இந்தியக் கதை-யிலக்கிய வளர்ச்சியில் பங்கு கொண்டு அதைப் பேணி வந்திருக்கின்றனர்.

ஆனால், பௌத்த சமயத்தினர் மட்டுமே தங்கள் சமயத்தை இந்தியாவிற்கு அப்பாலுள்ள வெளிநாடுகளிலும் பரப்பி, உலக சமயங்களுள் ஒன்றாக அதனை மேம்படச் செய்துள்ளனர். இந் நெறியில், இந்திய நாகரிகத்தையும் இலக்கியத்தையும் கீழ்த் திசையிலும் மேற்றிசையிலுமுள்ள எல்லா நாடுகளிலும் பரவும்படி செய்து விட்டனர். அன்றியும் இந்தியர்களை மற்ற நாட்டிலுள்ள மக்களோடு தொடர்பு கொள்ளும்படியாகச் செய்ததும் பௌத்த சமயமே. ஆகவே, தங்கள் கதைகளை

மற்றை நாட்டினர்க்கு உதவியமை போலவே, அறிவிலும் நாகரிகத்திலும் சிறந்த மற்றை நாட்டிலிருந்தும் இவர்கள் கதை களைப் பெற்றிருத்தல் வேண்டும். அலெக்ஸாண்டர் படை யெடுப்பின் பின் கிரேக்க தேசத்துச் சிற்பிகள் இந்தியாவிற்குப் பெருந் திரளாய் வந்து, பௌத்த சிற்பச் சின்னங்களைக் கட்டி அழகுறுத்தியதோடு, கிரேக்கர் கதைகளையும் சிற்ப நோக்கங் களையும் தங்களோடு கொண்டு வந்திருக்கலாம். ஏனெனில், ஜாதகங்கள் உலக இலக்கியத்தை வளம்படுத்தியதோடு இந்தியா விற்கும் பிறநாடுகளுக்குமுரிய சிற்பக் கலையையும் செழித்து வளரச் செய்திருக்கின்றன. சித்திர ரூபத்தில் விளக்கமுறச் செய்த பொருள்களில் மிகப்பழமையானவை ஜாதகத்தைச் சார்ந்தனவே. இன்றும் சிற்பக் கலைக்கும் சித்திரக் கலைக்கும் பொருள்களாக இவை விளங்குகின்றன என்பர்.

கி. மு. 2 அல்லது 3-ம் நூற்றாண்டுகளில் பார்குத், ஸாஞ்சி என்ற இடங்களிலுள்ள கற்சுவர்களின் மீதும், கி. பி. 2-ம் நூற் றாண்டில் அமராவதியிலும், இன்னும் சில காலம் பிற்பட்டு அஜந்தாக் குகையிலும் பௌத்த ஜாதகக் கதைகள் சித்தரிக்கப் பட்டுள்ளன. கி. பி. 412ல் ஈழ தேசத்தில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த பாஹியான் என்ற சீன யாத்திரிகன், அபயகிரியில் நிகழ்ந்த தாதுகோப உத்சவத்தில், அத் தேசத்து அரசன் தெருவின் இரு பக்கத்திலும் 500 ஜாதகக் கதைகளைப் பளிச் சென்ற நிறத்தில் அழகாகச் சித்திரித்து வைத்தனன் என்று கூறுகிறான்.

போதி ஸத்துவரது பெருஞ் செயல்களின் ஞாபகார்த்தமாக இந்தியாவிற் பல இடங்களிலும் அமைத்துள்ள ஸ்தூபங்களில் ஜாதகக் கதைகள் பல காணப்படுகின்றன என்று ஹுயூன் த்ஸாங் என்ற சீன யாத்திரிகன் கூறுகிறான். யவத் தீவத்தில் (ஜாவா) 9-ம் நூற்றாண்டில் போரபுதூர் என்ற நகரத்தின் கோயிற் சுவர் களைப் பல ஜாதகக் கதைகள் அலங்கரித்துள்ளன. 13-ம் நூற்றாண்டில் பர்மாவில் பகான் என்னும் இடத்திலும், 14-ம் நூற்றாண்டில் சயாம் தேசத்தில் சுகோதயம் என்ற இடத்திலும் தோன்றிய கோயில்களிலும் இவ்வாறே உள்ளன.

இந்த ஜாதகக் கதைகள் இலக்கியத்திற்கும் கலைக்கும் உதவியமை போலவே, நாகரிக வரலாற்றை அறிந்து கொள் வதற்கும் உதவுகின்றன. இவை புத்தரது காலத்துள்ள சமுதாய நிலைகளை உணர்த்துகின்றன என்று கொள்ளுதல் இயலாது. ஆனால், கி.மு. 3-ம் நூற்றாண்டிலுள்ள சமுதாய நிலையை இவை உணர்த்துகின்றன என்று கொள்ளலாம். இவற்றிலுள்ள

உரைநடைப் பகுதிகள் கி. பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டிற்கு உரிய சமுதாய நிலையைக் குறிப்பன என்னலாம். ஆனால், இவற்றால் மிகப் புராதன காலத்துள்ள சமுதாய நிலையும் விளங்குகின்றது என்றே நாம் கொள்ளலாம். ஏனெனில், இந்தியாவில் மாறுதல் என்பது மிகமிக மெதுவாகவே நிகழ்கிறது. எவ்வாறாயினும் இந்திய இலக்கியங்களிலுள்ள மற்ற நூல்களால் அறியப்படாத சமுதாயத் தொகுதியினரது வாழ்க்கையை இவை உணர்த்துகின்றன என்பதில் ஐயமில்லை.

**நித்தேசம்**

இது விளக்கம் என்று பொருள்படும். ஸுத்த நிபாதத்தி லுள்ள பகுதிகளுக்கு இது விளக்கமாய் அமைந்துள்ளமை மேலே கூறப்பட்டது. இதில் மகா நித்தேசம் என்றும் சுள்ள நித்தேசம் என்றும் இரண்டு பிரிவுகள் உண்டு. முந்தியதில் அட்டக வக்கத்தின் விளக்கமும், பிந்தியதில் சுக்கவிஷாண ஸுத்தத்தின் விளக்கமும் பாராயணத்தோடு காணப்படுகின்றன. இந்த உரை விளக்கத்தைப் பாலித் திருமுறையின் பகுப்பாகச் சேர்த்திருப்பது இதன் பழமையை நமக்கு உணர்த்துகிறது. சமயப்பொருள் விளக்கத்தோடு, இலக்கணம், நிகண்டு முதலியன பற்றிய விளக்கங்களும் இதில் உள்ளன. பௌத்த தர்மம், பௌத்தத் திருமுறைகளிலுள்ள வாக்கியங்கள் முதலியவற்றால் முக்கியமான சங்கேதத் தொடர்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்குப் பொருள் விரிக்கும்போது அதன் பரியாயங்கள் அனைத்தும் கொடுக்கப்படுகின்றன. இங்ஙனமே அச்சொல் வருமிடங்களிலெல்லாம் பரியாயங்களையும் காணலாம். இவ்வாறு கூறுவதன் காரணம் ஞாபகத்தில் சொற்பொருளைப் பதிய வைத்தலேயாகும். பிற்காலத்து எழுந்த நிகண்டுகளுக்கு இவை முன்மாதிரியாய் அமைந்தன.

**படி ஸம்பிதா மக்கம்**

இது பொருட்பாகுபாட்டிற்குரிய நெறியைக் குறிப்பதாம். இதில் மூன்று பெரும் பகுப்புக்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் பௌத்த தர்மத்தைக் குறித்துப் பத்து நூல்கள் அடங்கியிருக் கின்றன. உதாரணமாக முதற் பகுப்பின், முதல் நூல் 73 வகை அறிவுப் பொருள்களைப்பற்றித் தெரிவிக்கிறது. இப் பொருள் களெல்லாம் அபிதம்ம நூல்களைப் போன்று வினாவுத்தர முறையில் அமைந்துள்ளன. ஆனால், அவை அபிதம்ம பிடகத்தின் பகுதியாகவன்றி ஸுத்த பிடகத்தின் பகுதியாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

**அவதானம்**

இதுவும் குத்தக நிகாயத்தைச் சேர்ந்ததே. ஜாதகக் கதைகள் மிகப் பலவாயிருப்பினும், பௌத்தக் கதைகள் அனைத்தும் அவற்றில் அடங்கி விடவில்லை. ஜாதகத்தைப் போலவே விரிந்த நூல் இந்த அவதானம். இச் சொல்லின் பொருள் வீரச் செயல் அல்லது புகழ்ச் செயல் என்பது. பக்தியினாலும் தியாகத்தினாலும் விளைந்த பெருஞ்செயல்களையே இவை குறிக்கின்றன. எனவே இவை பௌத்த அருஹத்துக்களுடைய வரலாறு பற்றியவையாம். ஜாதக நெறியையே பின்பற்றி, இவ்வரலாறுகள் முற்றும் செய்யுளில் அமைந்துள்ளன.

முதலாவது புத்தாவதானம். இதில் புத்தரது புகழ்களும் முப்பது வகைப்பட்ட பாரமிதைகள்[1] நிரம்பிய எண்ணிறந்த தர்மச் சக்கிரவர்த்திகளின் புகழ்களும் விரித்துரைக்கப்படுகின்றன. இதில் புத்தரே இப் புகழ்களைக் கூறுவதாகவுள்ளது. அடுத்தது பச்சேக (பிரத்தியேக) புத்தாவதானம் என்பது. இதில் காண்டா மிருகத்தைப் போன்று தனி வழியே செல்லுகின்ற பிரத்தியேக புத்தரது புகழ்கள் சொல்லப்படுகின்றன. காண்டா மிருகத்திற்கு கட்க விஷாணம் என்று பெயர். ஸுத்த நிபாதத்தைச் சார்ந்த கக்க விஷாண ஸுத்தம் முழுமையும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அவதானங்களில் பெரும் பகுதி தேர அவதானமாகும். அதாவது தேரர்களது பிறப்பு வரலாறு பற்றியதாகும். இதில் 55 வக்கங்களும் ஒவ்வொரு வக்கத்திலும் 10 அவதானங்களும் உள்ளன. இறுதிப் பகுதியில் தேரி அவதானம் பப்பத்து அவதானம் கொண்ட 4 வக்கங்களில் அமைந்துள்ளது. தேர அவதானத்தில் முற்பட ஸாரிபுத்தன், மொக்கலன், காசியபன், அநுருத்தன் முதலிய பௌத்தப் பிரதம சிஷ்யர்கள் கூறப்படுகிறார்கள். இவர்களோடு உபாலி, ஆனந்தன், இராகுலன் முதலியோரது சரித்திரமும் அடுத்தடுத்துக் காணப்படுகிறது. இங்ஙனமே, மஹா பஜாபதி கோதமி, கேமா, படாசாரா, கிஸாகோதமி முதலிய தேரிகளுடைய சரித்திரங்களும் உள்ளன. பிற்பாடு பெரிய புராணத்தில் தொகையடியார்கள் காணப்படுகின்றமை போல, விசிறி அளித்தோர், ஆடையளித்தோர், மாங்கனி அளித்தோர், பாதபடிமங்களை வணங்கினோர், நீரால் வணங்கினோர், கிஞ்சுக புஷ்பத்தால் வணங்கினோர் முதலினோரது வரலாறுகளும் சொல்லப்பட்டுள்ளன. இதில் அவதானக்

1. பத்துப் பாரமிதையும் உயிர், உறுப்பு, பொருள் என்பனவற்றை நேரும் வகையால் முப்பதாம் என்பர் (மணிமகலை, 29, வரி 26 உரை). பொது, சிறப்பு, பெருஞ் சிறப்பு என ஒவ்வொரு பாரமிதையும் மூவகைப்பட்டு, பாரமிதைகள் முப்பதென்றலும் உண்டு. Winternitz: H. I. L. II, p, 158, f. n. 2.

கதை சொல்லும் முறையானது அறியத்தக்கது. முதலாவது, ஒரு தேரன் (அல்லது தேரி) பூர்வத்திலுள்ள புத்தர்களில் ஒருவரை வழிபட்டுத் துதித்ததும், அப் புத்தர் பின்னால் வரப்போகும் கோதம புத்தரிடம் அவன் நல்லறம் கேட்டு வீடெய்துவதை முற்படவுணர்ந்து கூறியதும், அக் கூற்று உண்மையாய் முடிந்ததும், அவன் அருக பதவியை அடைந்ததும் முறையே சொல்லப் படும். மணிமேகலையில் (28, 137-147),

இன்னுங் கேளாய் நன்னெறி மாதே
தீவினை யுருப்பச் சென்றநின் தாதையும்
தேவரிற் றோற்றிமுற் செய்தவப் பயத்தால்
ஆங்கத் தீவினை யின்னுந் துய்த்துப்
பூங்கொடி முன்னவன் போதியின் நல்லறம்
தாங்கிய தவத்தால் தான்தவந் தாங்கி
காதலி தன்னொடு கபிலையம் பதியில்
நாதன் நல்லறம் கேட்டுவீ டெய்துமென்று
அற்புதக் கிளவி அறிந்தோர் கூறச்
சொற்பய னுணர்ந்தேன்; தோகை! யானும்
அந்நாள் ஆங்கவன் அறநெறி கேட்குவன்

என்று வருவது இம்முறையைப் பின்பற்றியதேயாகும். இம் முறையினின்றும் விலகியவாய் மிகச் சில அவதானங்களே உள்ளன. அவற்றுள் ஒன்று புப்பகம்மப் (பூர்வ கர்மப்) பிலோதி என்னும் புத்தாவதானப் பகுதி (387). இதில் புத்தர் தமது முற்பிறப்புக்களில் செய்த தீச்செயல்களை எடுத்துக் கூறி, அவற்றின் விளைவாய்த் தாம் நரகலோகத்தில் பல பிறப்புக்கள் எடுக்க நேர்ந்தமையையும், அச்செயல்களில் எஞ்சியுள்ள குறையினால் தமது இறுதிப் பிறப்பிலும் பல துன்பங்கள் அடைய நேர்ந்தமையையும் விளக்குகிறார்.

இந்த அவதானம் குத்தக நிகாயத்தில் அடங்கியவற்றுள் மிகப் பிற்பட்டனவாம். வடமொழியிலுள்ள அவதானங்களோடு இந்தப் பாலி—அவதானங்கள் மிக நெருங்கிய தொடர்புடையன. இவற்றுள் எது முந்தியது என்று இன்னும் ஆராய்ச்சியால் துணியப்படவில்லை. இதன் காலமும் வரையறுக்கப்படவில்லை.

**புத்த வம்சம்**

இது குத்தக நிகாயத்திலுள்ள சிறு நூல்களில் ஒன்று. கோதம புத்தருக்கு முன்னால் 12 கற்பங்களில் வாழ்ந்த 24 புத்தர்களின் வரலாறுகள் இதில் அடங்கியுள்ளன.[1] நான்முகத்தைத் தவிர்த்து

1. அசோக சக்கரவர்த்தி தமது சிலைத் திருவாணை ஒன்றில் 23-வது புத்தராகிய கோணாகமனரது ஸ்தூபியைத் தாம் புதுப்பித்ததாகக் குறிப்பிடுகின்றார்.

24 பகுப்புக்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு புத்தருடைய வரலாறு காணப்படுகிறது.

ஒவ்வொரு புத்தரும் தர்மச் சக்கரத்தை எவ்வாறு பிரவர்த்தனம் செய்தார் என்பது சுவையற்ற முறையில் கூறப்படுகிறது. இவ்வரலாறுகளை விவரிப்பவர் கோதம புத்தரேயென்று காணப்படுகிறது. முந்திய புத்தப் பிறப்புக்கள் ஒவ்வொன்றிலும் தாம் இன்னார் என்பது, அப்பிறப்புக்களில் தாம் அவ்வக் காலத்துப் புத்தரை வணங்கியது, தாம் பின்பு புத்தராகப் போவதை அப் புத்தர்கள் தீர்க்கதரிசியாய்க் கூறியது முதலியவற்றைக் கோதமர் தாமே தெரிவிக்கிறார். இவரது வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பலவும் ஒவ்வொரு புத்தரது வாழ்க்கையிலும் நிகழ்ந்தனவாம். எனவே, இவ்வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் ஒரேபடியாயமைந்து சுவையற்றுள்ளன. முதலாவது புத்தராகிய தீபங்கரரைப் பற்றிய வரலாறு ஒன்றுதான் சிறிது சுவையுடன் இருக்கிறது. புத்தர்கள் வரலாற்றின் கடைசியில், வருங்காலப் புத்தராகிய மெத்தெய்யாவும் (மைத்திரேயர்) குறிக்கப்படுகிறார். பின்னர், பல இடங்களிலும் அமைந்துள்ள புத்த சின்னங்கள்பற்றி இறுதியிற் கூறப்படுகிறது. இந்நூலின் உரையில் இது கோதம புத்தராலேயே சொல்லப்பட்டு, மூன்றாவது பௌத்த சங்கம் வரை தேரர் பரம்பரையில் வழங்கி வந்தது என்றும், பின்னர் ஆசாரியர்களாலும் சிஷ்யர்களாலும் இடையீடின்றிப் பரப்பப்பட்டு வந்தது என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆனால், முற்பட்ட நூல்களில் கோதம புத்தருக்கு முன்புள்ளவராக ஆறு புத்தரே கூறப்படுகின்றனர். எனவே, உரைகாரர் கூறுவதனை முழுவதும் உண்மை என்று கொள்வதற்கில்லை. பாலியிலுள்ள பௌத்தத் திருமுறைகளில் மிகப் பிற்பட்டதென்றே புத்தவம்சத்தைக் கொள்ளுதல் வேண்டும். புத்தர் வணக்கமும், புத்தரது தெய்வத் தன்மையும் முன்னூல்களிற்போலன்றி இதில் நிரம்பக் காணப்படுகின்றன.

**சரியா பிடகம்**

குத்தக நிகாயத்துள் அடங்கிய நூல்களுள் இதுவே கடைசியானது. இதில் 35 ஜாதகங்கள் செய்யுள்வடிவில் அடங்கியுள்ளன. போதி ஸத்துவர்களுள் ஒவ்வொருவரும் இன்ன பாரமிதையில் சிறந்து விளங்கினார்கள் என்று வரும் வரலாறுகளே இந்நூற் பொருள்கள். தானம், சீலம் என்னும் இரண்டு பாரமிதைகளைப் பற்றி இரண்டு நிகாயங்கள் உள்ளன; ஒவ்வொன்றும் பத்துக் கதைகளில் விளக்கப்படுகின்றன. மேலுள்ளவற்றில் ஐந்து பாரமிதைகளைப்பற்றி 15 கதைகள் கொண்டு மூன்றாவது நிகாயம் அமைந்துள்ளது. இவற்றைப் புத்தரே சொல்லுகிறார்.

மிகச் சுருக்கி, சொற்ப வார்த்தைகளில், ஒரு சில இடங்களில் குறிப்பாக இவர் கூறுவதால், கதைகள் ஏற்கனவே இருந்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது.

இவற்றில் கவிதை நயம் என்பது சிறிதும் இல்லை; கவர்ச்சியுள்ளதாயும் இல்லை. பாரமிதைகளுக்கு இயையக் கதைகள் திரித்துக் கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக, குரங்கு தன் மதிவன்மையால் முதலையை வென்ற கதையைக் கூறலாம். 208-வது ஜாதகத்தில் பஞ்ச தந்திரத்திற் போலவே இக்கதை மிக வேடிக்கையாகக் கூறப்பட்டுள்ளது. 57-வது ஜாதகத்தில் காணும் இக் கதை அவ்வளவு நகைச்சுவைபட அமையவில்லை. ஆனால், சரியா பிடகத்தில் (3, 7) காண்பது முற்றும், சுவையற்றிருக்கிறது. புத்தர் சொல்லுகிறார்:

> நான் குரங்காயிருந்தபொழுது ஒரு நதிக்கரையிலுள்ள ஒரு குகையிலே வாழ்ந்து வந்தேன். ஒருமுறை, நான் வழக்கப் பிரகாரம் போவதற்குத் தடையாக, முதலை ஒன்று வழியில் படுத்துக்கொண்டிருந்தது. இந்தக் கொலைகார முதலை நான் மறு கரைக்குத் தாவிச் செல்லுமிடத்தில் மிகப் பயங்கரமாக என்னையே நோக்கிக் கொண்டு கிடந்தது. என்னைப் பார்த்து 'இங்கே வா' என்று கூப்பிட்டது. நான் 'வருகிறேன்' என்று சொல்லி, அதன் தலையிற் குதித்து நின்றுகொண்டு மறு கரைக்குத் தாவிப் போய்விட்டேன். அதனிடம் ஒரு பொய்யும் சொல்லாதபடி நான் சொன்னபடியே நடந்து கொண்டேன். உண்மை யுரைப்பதில் எனக்குச் சமானமாக எவரும் இல்லை. எனது வாய்மைப் பாரமிதை இத்தகையது.

இதைப் போலவே வெஸ்ஸந்தர ஜாதகக் கதையும் சுவையற்ற முறையில் 58 செய்யுட்களில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. அதிலுள்ள ஐந்து செய்யுட்கள் இந்தச் சரியா பிடகத்திலும் உள்ளன. ஜாதகத்தில் வரும் அற்புத நிகழ்ச்சிகள் தான் இதில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

சரியாபிடகத்திற்கும் ஜாதகத்திற்குமுள்ள தொடர்பு அறிய முடியவில்லை. ஆனால், பாரமிதைக் கொள்கை, பாலித் திருமுறைகளில் முற்பட்டவற்றில் காணப்படவில்லை. இது புத்த தரிசனத்திலேயே பிற்பட்ட சேர்வாகத்தான் தோன்றுகிறது. ஆனால், சரியாபிடகம் அது தோன்றிய காலத்திலிருந்த வடிவிலேயே இப்பொழுது கிடைக்கவில்லை. நிதான கதையின் முன்னுரையில் காணப்படும் சரியாபிடகச் சுருக்கம், இப்போது வழங்கும் சரியாபிடகத்தினின்றும் பெரிதும் வேறுபட்டுள்ளது.

பிற்கூறிய சரியாபிடகத்தின் ஆசிரியர் கவிஞன் அல்ல. ஆனால், ஜாதகங்களை இயற்றிய ஆசிரியர்களுள் சில கவிஞர்களும் இருந்தனர் என்று புலப்படுகிறது.

குத்தக நிகாயத்தில் வெவ்வேறு காலத்தில் எழுதப்பட்டனவெல்லாம் சேர்ந்துள்ளது என்று கருதலாம்.

### III. அபிதம்ம பிடகம்

அபிதம்மம் என்பது சமயக் கொள்கையில் சிறந்து விளங்கும் நுட்பப் பொருள்களாம். இதற்கும் மேல்நாடுகளிற் கூறும் Metaphysics, Philosophy என்பவற்றிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஸுத்த பிடகத்திற் காட்டிலும் இந்தப் பிடகத்தில் அதிகப் பாண்டித்தியம் சுவையற்ற முறையில் விளங்குகிறது. இரண்டிலும் கூறப்படும் பொருள் ஒன்றே. அபிதம்ம நூல்களில் ஸங்கேதங்களின் இலக்கணங்களும், பாகுபாடுகளும் மிகுதியாயுள்ளன. இந்த இலக்கணங்கள் சொல்லின் பொருளை வரையறுக்க முயலுகின்றன; ஆனால், பரியாயங்களை மட்டுமே அடுக்குகின்றன. பாகுபாடுகளும் மன நிகழ்ச்சிகளை ஆழ்ந்தறிந்து செல்வனவல்ல. இங்கும் விஷயங்கள் எண்ணிடப்பெற்று வரிசையாய் அடுக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான சாஸ்திர உண்மைக்கும் இப் பாகுபாடுகளில் காணும் பொருளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

அபிதம்ம பிடகத்தில் ஏழு நிகாயங்கள் உள்ளன. அவை வருமாறு:

அபிதம்ம பிடகம்
- தம்ம ஸங்கணி
- விபங்கம்
- தாது கதை
- புக்கல பண்ணத்தி
- கதா வத்து
- யமகம்
- பட்டான பகரணம் அல்லது மகா பகரணம்
  - திகபட்டானம்
  - துகபட்டானம்

அபிதம்ம பிடகத்தைச் சார்ந்த நூல்கள் ஸுத்த பிடகத்திலுள்ள மாதிருகைகளையே விரித்துக் கூறுவன. இப்பிடகத்தின் முதலாவது நிகாயம் **தம்ம ஸங்கணி** என்று பெயர் பெறும். இது மனம் பற்றிய நீதிகளைக் கூறும் ஒரு கையடக்கமான பௌத்த நூலேயன்றி வேறொன்றுமல்ல. என்றாலும் ஈழ தேசத்தில்

இதற்குப் பெரு மதிப்பு உண்டு. 10-ம் நூற்றாண்டில் அத் தேசத்து அரசன் ஒருவன் மணிகளால் இழைக்கப்பெற்ற பொற் றகட்டில் இத் தர்மசங்கிரக நூலைப் பிரதி செய்து ஊர்வலமாக எழுந்தருளுவித்துத் தான் இயற்றிய விஹாரத்திற்குக் கொண்டு வந்து, அங்கே புஷ்பம் முதலியவற்றால் அர்ச்சித்து வணங்கினன் என்று சொல்லப்படுகிறது. இதன் மூன்றாம் நிகாயத்திற்குப் பழைய வியாக்கியானம் ஒன்றும் உண்டு. அதனை ஸாரி புத்தர் இயற்றியதாகக் கூறுவர்.

இப் பிடகத்தின் இரண்டாவது நிகாயம் **விபங்கம்** என்று பெயர் பெறும். இதற்குப் பகுப்பு என்று பொருள். இதன் முதற் பகுப்பு முதல் நிகாயத்தின் தொடர்ச்சியேயாகும். இரண்டாம் பகுப்பு புலனறிவு முதல் புத்தரை அறியும் அறிவு வரையுள்ள பற்பல விஷயங்களையும் உணர்த்துகிறது. மூன்றாவது பகுப்புப் பரஞானத்திற்குத் தடையாயிருப்பனவற்றை விவரிக்கிறது. இறுதியிலுள்ள நான்காவது பகுப்பு மக்கள், மற்ற உயிரினங்கள், அவற்றின் நிலைமைகள் முதலியவற்றைக் கூறுகிறது. பல புராதனக் கதைப் பொருள்களும் இதில் காணலாம்.

இப் பிடகத்தின் மூன்றாவது நிகாயம் **தாது கதை** எனப் படுவது. இதில் மானஸிகத் தோற்றத்திற்குரிய பல அடிப்படைப் பொருள்களும் கூறப்படுகின்றன. கேள்வியும் விடையுமாக இந் நிகாயம் அமைந்துள்ளது.

நான்காவது நிகாயம் **புக்கல பண்ணத்தி** என்பது. இதன் பொருள் தனித்தனி மக்களின் வருணனை என்பதாகும். இதற்கும் சீத நிகாயத்திலுள்ள ஸங்கீதி ஸுத்தத்திற்கும் மிக்க ஒற்றுமை காணப்படுகிறது. இப் பண்ணத்தியின் மூன்று முதல் ஐந்து வரையுள்ள பகுப்புக்கள் அங்குத்தர நிகாயத்தோடு பெரிதும் ஒப்புமையுடையன. மக்களைக் குணம் பற்றிப் பாகுபாடு செய்வதே இதன் நோக்கம்.

அபிதம்ம பிடகத்தின் ஐந்தாவது நிகாயம் **கதா வத்து** என்பது. பௌத்த சமய வரலாற்றின் உணர்ச்சிக்கு இது மற்றை அபிதம்ம பிடக நூல்களைக் காட்டிலும் மிக அதிகமாக உதவுகிறது. இது திஸ்ஸ மொக்கலி புத்தரால் மூன்றாம் பௌத்த சங்கத்தில் தொகுக்கப்பட்டது எனக் கூறுவர். ஆனால், இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர். இப்போதுள்ள படி கேள்விகளும் விடைகளுமாக அமைந்த 23 பகுப்புக்கள் இந் நூலில் உள்ளன. கேள்வி விடைகளின் சிற்றெல்லை 8; பேரெல்லை 12. இதற்குக் கி. பி. 5-ம் நூற்றாண்டில் புத்த கோஷர் ஒரு வியாக்கியானமும் எழுதியுள்ளார். முற்காலத்து

வழங்கிய பற்பல மித்தியாவாதங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக,

> தனிப்பட ஆன்மா என்பது ஒன்று உண்டா? ஒவ்வொரு பொருளும் உண்மையில் உள்ளதா? துக்க நிவாரணம் இரண்டு வகைப்படுமா? புத்தருடைய சிஷ்யர்களுக்கு இருத்தி எனப்படும் ஸித்திகள் உண்டா? உபாஸகன் அருக பதவியை அடைய முடியுமா? அருகபதவியை அடைந்த ஒருவன் கர்மபலனால் அதை இழந்துவிடுதல் உண்டா? நல்லொழுக்கம் நெஞ்சறியாமல் நிகழ்வதா? ஸம்யக் தரிசனத்தை அடைந்த ஒருவன் வேண்டும் என்று நெஞ்சாரக் கொலை செய்தல் முடியுமா? மக்களது உலகில் புத்தர் வாழ்ந்தார் என்று கூறுதல் உண்மையாகுமா? புத்தருடைய மல மூத்திரங்கள் வாசனைப் பொருள்களெல்லாவற்றைக் காட்டிலும் சுகந்த முடையதா? விலங்குகள் தெய்வங்களாகப் பிறக்க முடியுமா? இவை போன்ற கேள்விகளைக் கற்பிதமான ஒரு விபக்ஷத்

தானோடு தர்க்கித்து விடையிறுக்கப்படுகிறது. இக் கேள்விகள் அனைத்திற்கும் 'இல்லை' என்பதுதான் விடை; இதற்கு எதிரிடையான கருத்து உண்மையன்று என்பர்.

விநய பிடகம், ஸுத்த பிடகம் முதலியவற்றிலிருந்து பல பகுதிகள் எடுத்தாளப்படுதலினால் பிடகங்களுக்குக் கதாவத்து பிற்பட்டதாகும். அபிதம்மத்தைச் சார்ந்த முதலிரண்டு நிகாயங்களிலுமுள்ள வசனங்களும் பட்டானத்திற் கூறும் பொருள்களும் குறிப்பிடப்படுகின்றன. தாது கதையிலிருந்தேனும், புக்கல பண்ணத்தியிலிருந்தேனும், யமகத்திலிருந்தேனும் யாதொரு மேற்கோளாட்சியும் இதில் இல்லை. இக் கதாவத்து கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கொள்வதற்கு இடமில்லை. எனினும், இது பிற்காலத்தெழுந்த பௌத்தக் கொள்கைகளின் பல அம்சங்களை விளக்குகிறது. சீன மொழியிலும் திபெத்து மொழியிலுமுள்ள பௌத்த சமய வரலாற்று நூல்களோடு இதனைச் சேர்த்து நோக்குமிடத்துத்தான் இது மதிப்புடையதாகத் தோன்றும்.

அபிதம்ம பிடகத்தின் ஆறாவது நிகாயம் **யமகம்** என்பது. இதில் வரும் ஒவ்வொரு கேள்வியும் விடையும் இரண்டு வகையாகத் தரப்படுகின்றன. அபிதம்மத்தின் முதல் ஐந்து நிகாயங்களிலுமுள்ள ஐயங்களை நீக்குவதற்கு என இந் நிகாயம் எழுதப்பட்ட போதிலும், எளிதில் இது பொருள் விளங்கத் தக்கதன்று.

அபிதம்ம பிடகத்திற் கடைசியான ஏழாம் நிகாயம் **பட்டான பகரணம்** அல்லது **மகா பகரணம்** என்று பெயர் பெறும். இதில் இரண்டு பகுதிகள் உள்ளன: திகபட்டானம், துகபட்டானம்

என. இதில் சரீரத்திற்கும் மனத்திற்கும் இருக்கக்கூடிய 24 வகைத் தொடர்புகளைக் குறித்து விரிவாக ஆராய்ச்சி செய்யப் படுகிறது. காரண காரியம், அகம் புறம், ஆண்டான் அடிமை, அடுத்தடுத்து ஒரு சேர விருப்பது முதலியன இத் தொடர்பு களுக்கு உதாரணங்களாம். பௌத்தக் கருத்துக்களைப் பொதுப்பட விசாரிப்பவர்க்குத் திகபட்டானத்தின் முதற் பகுதி பயன்படும். இதில்தான் மேற்கூறிய இருபத்துநான்கு வகைத் தொடர்புகளும் முறையாகக் கூறப்படுகின்றன. எனினும், இதுவும் அதிபாண்டித்திய மயமாகவே உள்ளது. பௌத்த நூல்களையெல்லாம் பல்லாண்டுகளாகக் கற்று, அவற்றின் நுட்பங்களை உணர்ந்த ரிஸ் டேவிட்ஸ் அம்மையார் (Mrs. Rhys Davids) கூறுவது இங்கே கவனிக்கத்தக்கது.

> அந்நியர் செல்ல முடியாத இருளடைந்த குகைமடம் போன்றுள்ளன இந்நூல்கள். இவை பற்றிய பரம்பரை வரலாறு எங்கும் சுவர் வைத்து மூடப்பட்டுள்ளன. பண்டைக் காலம் தன்னளவில் நில்லாது நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் அடக்கி ஆட்சி புரிகின்றது. இவற்றை யெல்லாம் நோக்கும்போது, நன்றாகத் திருவலகிட்டுச் சுத்தம் பண்ணி அலங்கரித்துள்ள ஓர் அறை, பலகணி களெல்லாம் நன்றாக அடைக்கப்பட்டுத் திரையிட்டு உதய திசை சிறிதும் புலப்படக்கூடாத வண்ணம் அமைந்துள்ளது போல் தோன்றுகிறது.

அபிதம்ம பிடகம் பௌத்தர்களில் சில பகுதியாரால் ஒப்புக் கொள்ளப்படவில்லை. ஹீனயானத்தைச் சார்ந்த ஸௌத்திராந் திகர்களும், ஸர்வாஸ்தி வாதிகளும் இதனைப் பிரமாணமாகக் கொள்ளவில்லை; வடமொழியிலுள்ள அபிதம்ம பிடகத்தை மேற்கொள்ளுகிறார்கள். ஆனால், இவ்வடமொழி நூல் பாலி அபிதம்ம பிடகத்திலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. முதலாம் பௌத்த ஸங்க வரலாற்றை விவரிக்கும் விநயபிடகம் (சுள்ள வக்கம், xi) விநயத்தையும் தம்மத்தையும் கூறுகிறதேயன்றி அபிதம்மத்தைக் குறிக்கவில்லை.

ஆனால், அபிதம்மத்தை உடன்பட்ட பௌத்த சமயிகளால் அது மிகப் பெரியதோர் நூலாகப் பாராட்டப்பட்டுள்ளது. கி. பி. 262-ல் ஈழ தேசத்திலே மிகிந்தலைக் கோயிலை அடுத்துள்ள ஒரு பாறையில் செதுக்கிய கல்வெட்டு, அபிதம்ம பிடகத்தை விளக்குபவர்களுக்கு 12 பள்ளிகளும், ஸூத்த பிடகத்தை உபதேசிப்பவர்களுக்கு 7 பள்ளிகளும், விநய பிடகத்தை ஓதுபவர்களுக்கு 5 பள்ளிகளும் ஏற்படுத்தப்

பட்டுள்ளன என்று கூறுகிறது. பர்மா தேசத்தில் இன்னும் அபிதம்மத்தை வாசித்து வருகிறார்கள்; அதுபற்றிய பல நூல் களைப் பல நூற்றாண்டுகளாகச் செய்து வந்திருக்கிறார்கள்.

## திருமுறைகளைச் சாராத பாலி இலக்கியங்கள்

இனி, பிரமாணத் திருமுறைகளைச் சாராத பாலி மொழி இலக்கியங்களை நோக்குவோம். இவற்றைச் செய்தவர்களில் பெரும்பாலார் ஈழதேசத்துப் பிக்குக்களே. ஆனால், இவற்றுள் மிலிந்த பந்ஹ (மிலிந்தனின் வினாக்கள்) என்ற நூல் வடமேற்கு இந்தியாவில் தோன்றியது. இங்கே குறித்த மிலிந்தன் கிரேக்க-இந்திய ராஜ்யத்தை ஆண்டு வந்தவர்களுள் மிகச்சிறந்தவனான மினான்ட்ராஸ் என்ற கிரேக்க அரசன். இந்த ராஜ்யம் கி.மு. 2-ம் நூற்றாண்டில் கிரேக்க—பாக்டிரிய ராஜ்யத்தினின்றும் பிரிந்து விட்டது. மிலிந்தன் கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று கொள்ளலாம். ஸிந்துநதிப் பிரதேசம், கூர்ஜரம், கங்கை நதிப் பிரதேசம் முதலியன அடங்கிய பெரிய ஸாம்ராஜ்யத்திற்கு இவன் பேரரசனாக இருந்தான். இந்தக் கிரேக்க அரசன் ஒரு பௌத்த குருவைப் பார்த்து உரையாட நேர்ந்ததென்றும், அதுவே மிலிந்த பந்ஹ தோன்றிய வரலாறென்றும் சொல்லப்படு கிறது. மிலிந்தன் ஒரு பௌத்த குருவைச் சந்தித்திருக்கலாம். அந்தச் சந்திப்பை ஆதாரமாக்கி, உபநிஷதங்கள், இதிஹாஸங் களிலுள்ள உரையாடல்களை மாதிரியாகக் கொண்டு, இவ் வினாக்களை அமைத்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. மிலிந்தன் பௌத்தனாகவேனும் அல்லது பௌத்தர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவனாகவேனும் வாழ்ந்திருக் கலாம். இவனது நாணயங்களில் புத்தரது தம்ம சக்கரம் பொறிக்கப்பட்டிருந்தது. இந்தப் பந்ஹவை இயற்றியவர் இன்னார் என்று தெரியாது. யாராயிருப்பினும் அவர் மிலிந்த னுடைய ஞாபகம் மக்களுக்கு விளக்கமாக இருந்த காலத்திலேயே வாழ்ந்தவர் என்று கூறலாம். எனவே, இந்நூல் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டிருத்தல் கூடும். 5-வது நூற் றாண்டில் வாழ்ந்த புத்தகோஷர் பிடகங்களோடு ஒத்த பெருமையை மிலிந்த பந்ஹவிற்கு அளித்து, அதனையும் ஓர் ஆதார நூலாகக் கொண்டனர். பிளேட்டோவின் உரையாட லோடு ஒப்ப மதிக்கத் தகுந்தது இப் பந்ஹ என்பர் விண்டர்நீட்ஸ்.

இந்தத் தொன்மையும் பெருமையும் ஆதியில் தோன்றிய மிலிந்தபந்ஹவிற்கே பொருந்துவன. நூன்முகமாய் அமைந் துள்ள முதற் புத்தகத்தில் ஒரு சிறு பகுதியும் இரண்டு, மூன்றாம் புத்தகங்களுமே உள்ளபடியே தொன்மையும் பெருமையும்

வாய்ந்தன. மூன்றாவது புத்தகத்திற்கூட அதன் பின்பகுதி பிற்சேர்வு எனத் தோன்றுகிறது. இந்நூலின் பெரும் பகுதி சிறிது சிறிதாகப் பிற்காலத்தவர்களால் எழுதிச் சேர்க்கப்பட்டது என்பது உறுதி. 4-முதல் 7-வரையுள்ள புத்தகம் கி. பி. 317-க்கும் 420-க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய சீன மொழி பெயர்ப்பில் காணப்படவில்லை. அன்றியும், முதற் புத்தகத்தில் காணும் பொருள்களும் 4-முதல் 7-வரையுள்ள புத்தகங்களில் காணும் பொருள்களும் முற்றும் வேறுபட்ட இயல்புடையன. மேலும், 3-ம் புத்தகத்தின் இறுதிப் பகுதி நூலிறுதி எனக் கருதத்தக்க முறையில் அமைந்துள்ளது. நான்காம் புத்தகம் புதியதொரு நூன்முகத்தோடு காணப்படுகிறது.

**மிலிந்த பந்ஹ**

மிலிந்தன் தனது தலைநகராகிய சாகலநகரில் வீற்றிருந்தான். தனது சேனா சமூகங்களையெல்லாம் பார்வையிட்டு, பின்னர் சொற்போர் செய்ய எண்ணுகிறான். ஆனால், இவனோடு எதிர்த்து வாதம் புரிவதற்குத் தக்க அறிஞர்கள் கிடைக்கவில்லை. தலைநகரை யடுத்துள்ள ஆசிரமத்தில் வாழ்ந்த ஆயுபாலர் என்ற பிக்குவினிடம் இவனை அழைத்துச் செல்லுகின்றனர். ஆயுபாலர்க்கும் அரசனை வாதத்தில் வெல்வது அரிதாயிருந்தது. அரசன் 'என்னோடு வாதம் புரிவதற்குத் தக்கவர்கள் இல்லையே! பரத கண்டம் முழுவதும் சூனியமாய்ப் போய்விட்டதா?' என்று மிக வருந்திக் கூறுகிறான். அப்பொழுது கல்வியிற் சிறந்தவரும் பேரறிஞருமாகிய நாகசேனன் என்ற பௌத்த பிக்கு தலைநகருக்கு வர நேர்ந்தது. அரசன் அவரிடம் சென்று வாதம் புரிகிறான். இந்த ஞானியைக் கண்டவுடனேயே அரசன் பெரிதும் ஈடுபடுகிறான்.

இந்நிலையில்தான் மிலிந்தன் தனது வினாக்களைத் தொடர்ந்து கேட்டனன். முதலாவது, முனிவரது பெயரைக் கேட்க, அவர் தமது பெயர் நாகசேனன் என்றும், அது பெயர் மாத்திரமேயன்றி வேறொன்றும் அல்ல என்றும், அதற்கென ஓர் ஆன்மா கிடையாது என்றும் கூறுகிறார். பின்னர், ஆன்மா உண்டா, இல்லையா என்பதுபற்றி மிகச் சிறந்த சர்ச்சை ஒன்று நடைபெறுகிறது. முடிவில், ஆன்மா எனவொன்று இல்லை என்பதை அரசன் ஒத்துக்கொள்ளுகிறான்.

இந்த அநாத்மக் கொள்கையோடு பல் பிறவி, கன்மம் இவை பற்றிய கொள்கைகள் முற்றும் முரண்படுகின்றன. எனினும். பௌத்தர்கள் இம்முரண்பாட்டினை மிகச் சாமானியமாகத் தவிர்க்க முயன்றுள்ளனர். பற்பல உதாரணக் கதைகளைக் கூறி இவ்வாறு செய்கின்றனர்.

இரண்டாம் புத்தகத்திலும் இவ் உதாரணக் கதைகளே மிகுதியாகவுள்ளன. மூன்றாம் புத்தகத்தில் பழமையான பகுதியில் பொருத்தமான உவமானங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, துறவு பூண்பதால் துக்கம் எவ்வாறு நிவிர்த்தி யாகும் என்பதை நாகசேனன் விளக்குமிடத்து, முற்பிறவியிற் செய்துள்ள முயற்சிகளும் துக்க நிவிர்த்திக்குப் பயன்படுகின்றன என்று கூறுகிறார். அரசனை நோக்கி, 'தாகம் உண்டாகும் வரைக் கிணறு வெட்டுவதற்குக் காத்திருப்பீரா? பசி வரும் வரை உழுது விதைத்து அறுப்பதற்குக் காத்திருப்பீரா? பகைவன் உமது நகர வாயிலில் வரும் வரை அகழ்தோண்டுவதையும் மதில் கட்டு வதையும் நிறுத்தி வைப்பீரா?' என்று கேட்கிறார். இதனால் பூர்வ ஜன்ம முயற்சிகளும் உதவுகின்றன என்ற முடிபு துணியப்படு கிறது. இது போன்றவற்றை நோக்கினால், இலக்கிய நெறியிலும் மிகச் சிறந்ததொரு நூலாகவே மிலிந்த பந்ஹ விளங்குதல் புலப் படும்.

பூர்வ காலத்தில் இந்தியாவில் இருந்த உரைநடை நூல்களுள் இது தலைசிறந்த ஓர் இலக்கியமாகக் கருதப்படுகிறது. இரண்டு மூன்றாம் புத்தகங்களில் பௌத்த சமயத்தார் கூறும் நல்லொழுக்க நியதி, மானஸிக தத்துவம் முதலியன பற்றிய கேள்விகள் நிகழ் கின்றன. இவை அனைவரும் அறியத்தக்க விஷயங்களாம். நான்காவது புத்தகத்தில் காணும் வினாக்கள் பௌத்த சமய நுணுக்கங்களைப் பற்றியன. இச் சமயக் கல்வியில் ஆழ்ந்து ஈடுபட்டோர்க்கன்றி, ஏனையோர்க்குப் பயன்படா.

புத்தர் நிர்வாணமடைந்து விட்டபின், எதற்காக நாம் அவருடைய சின்னங்களை வணங்குதல் வேண்டும்? தேவதத்தன் தம் சமயத்தில் கட்சி உண்டுபண்ணி விடுவான் என்று தெரிந்தும் ஏன் அவனைத் தமது பௌத்த சங்கத்தில் புத்தர் சேர்த்தார்? புத்தர் என்று ஒருவர் இருந்ததுண்டா?: என்பன உதாரணங்கள். இவை போன்ற கேள்விகளுக்கே பிற்பட்ட புத்தகங்களில் விடை கூறப்படுகின்றன. 'இல்லறத்தானாகிய உபாசகனும் அருக பதவியை அடைய முடியுமானால், ஒருவன் துறக்கவேண்டிய காரணம் யாது; என்ன கேள்விக்கு, அருக பதவியையும், நிர்வாணத்தையும் அடைவது அவன் முன்ஜன்மத்தில் கடுமையான விரதானுஷ்டானங்களைப் பூர்த்தி பண்ணி விட்டதனால்தான் என விடைதரப்படுகிறது. இந்தக் கடுமையான விரத அனுஷ்டானங்களே 13 துதங்கங்கள் என்று கூறப்படுவன. இந்துதங்கங்கள் ஆறாவது புத்தகத்தில் விரிவாக உணர்த்தப்படு கின்றன. ஏழாவது புத்தகம் முழுவதும் உதாரணக் கதைகள் அடங்கியன; 67 கதைகள் உள்ளன. இத்தகைய கதைகள்

அருகபதவியை அடைய விரும்பும் பிக்குக்களின் இயல்புகளை விளக்குவன.

4-முதல் 7-வரையுள்ள இப்புத்தகங்களில் பௌத்தத் திருமுறைகளிலிருந்து மேற்கோள்கள் அடிக்கடி வருகின்றன. ஜாதகம், விமான வத்து, தம்ம பதம் இவற்றின் வியாக்கியானங் களிலுள்ள கதைகளும் அங்கங்கே குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் தம்மத்தைப்பற்றி வரும் கருத்துக்கள், சிறப்பற்றன. புத்தபக்தியும், அற்புதச் செயல்களில் பெரு நம்பிக்கையும் காணப் படுகின்றன. இவைகளெல்லாம் இப்புத்தகங்கள் மிலிந்த பந்ஹவில் மிகப் பிற்பட்டன என்பதை உணர்த்துகின்றன.

**நெத்திப் பகரணம்**

மிலிந்த பந்ஹவைப் போன்று அத்தனை தொன்மை வாய்ந்தது நெத்திப் பகரணம் அல்லது நெத்தி கந்தம் என்ற நூலாகும். இதனை நெத்தி என்றும் கூறுவர். இதற்கு (உண்மை யான சமயத்திற்கு) நெறி காட்டும் நூல் என்று பொருள். இந்த நூலில்தான் புத்தர் உபதேசித்த கொள்கைகள் முறைப்படத் தொடர்ச்சியாய்க் கூறப்படுகின்றன. இதனை இயற்றியவர் புத்தரது சிஷ்யராகிய மகா கச்சாயனர் என்பவர். இதில் புத்தோபதேசங்களை விளக்குவதில் மிகச் சிறந்தவர் என்று மஜ்ஜிம நிகாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவர் **பேடகோபதேசம்** என்ற நூலையும் இயற்றினர் என்பர். இது பிடகநூலைக் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் நூலாகும். நெத்தி என்பதனை அடுத்து இது தோன்றியிருக்கலாம். தம்மபாலர் என்பவர் 5-ம் நூற்றாண்டில் நெத்திக்கு ஒரு வியாக்கியானம் செய்துள்ளளர்.

திருமுறைகளல்லாத பாலி - இலக்கியங்களில் பெரும்பாலன வியாக்கியானங்களாகும். பிடக நூல்கள் அழியாதபடி அவற்றைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்துத் தந்துள்ள பிக்குக்கள் அவற்றைக் கற்றுப் பிறர்க்குச் சொல்வதோடு, அவற்றை விளக்கம் செய்வதிலும் முற்பட்டிருந்தனர். இவ் விளக்கங்களை அட்ட (அர்த்த) கதைகள் என வழங்கினர். இவை திரிபிடக நூலோடு முதலாம் பௌத்த ஸங்கத்திலிருந்தே வழங்கி வருகின்றன என்று ஈழதேசத்துப் பௌத்தர்கள் கூறுகின்றனர். இக் கூற்றை நாம் நம்புவதற்கில்லை. எனினும் பிடகங்கள் தோன்றிய காலத்தை உடன் அடுத்து இவ் விளக்கவுரைகள் தோன்றத் தொடங்கின என்று நாம் கொள்ளலாம்.

இவற்றினின்றும் மேற்கோள்கள் முதன் முதல் கி. பி. 5-ம் நூற்றாண்டில் பிக்குக்கள் எழுதிய வியாக்கியானங்களில் காணப்

படுகின்றன. அட்ட கதையாகிய விளக்கவுரை எழுதிய முதற் பிக்குக்களை 'பொராணர்' என்று வழங்கினர். இதன் பொருள் 'பண்டைச் சான்றோர்' என்பதாம். இந்தியாவில் தேரவாதிகள் மற்றைப் பௌத்த வாதியர்களால் ஒழிக்கப்பட்ட பிற்பாடு, அத் தேரவாத நூல்களை நிலையாய் போற்றி வந்தவர்கள் ஈழ தேசத்து மடங்களிலுள்ள பிக்குக்களேயாவர். இவர்கள் பாலி வியாக்கியானங்களில் கிடைத்தன எல்லாவற்றையும் சிங்கள மொழியில் மொழிபெயர்த்தனர். சிங்கள வியாக்கியானங்களும் தோன்றின. அவற்றை எழுதியவர்கள் பாலியிலும் நூல்கள் எழுதத் தொடங்கினர். இங்ஙனமாக, கி. பி. 5ம் நூற்றாண்டில் புத்த கோஷருக்குச் சிறந்த பாலி நடையில் நூல்கள் எழுத முடிந்தது. இவர் சிங்கள வியாக்கியானங்களை மீண்டும் பாலியில் மொழிபெர்த்தனர்.

பௌத்த பிக்குக்கள் புத்தர், தம்மம், ஸங்கம் என்ற மும்மணிகளையும் பற்றி உரை விளக்கம் முதலியன இயற்றியுள்ளனர். புத்தர் வரலாறு விரிந்து கொண்டே வந்தது; திரிபிடகத்தில் சொல்லிய கதைகள் வரலாறுகளோடு அமைந்துவிடவில்லை. புத்தருடைய வாழ்க்கை வரலாற்றைப் பலவகையாலும் விரித்து இப் பிக்குக்கள் எழுதிவைத்தனர். பிராம்மணங்களில் காணும் முறையைப் பின்பற்றி, தங்கள் சமய நூல்களுக்கு இலக்கிய முறையிலும் நிகண்டு முறையிலும் பொருள் எழுதியதோடு, கதைகள், பிற வரலாறுகள் முதலியவற்றாலும் விளக்கி வந்தனர்.

அந்தணர்களைப் போலவே பிக்குக்களும் கதை சொல்வதில் மிக்க விருப்பம் கொண்டவராய் இருந்தனர். இவர்கள் அரை குறையாக வழங்கிய வரலாறுகளைப் பூர்த்தி செய்தனர்; கேள்வி மூலமாக வந்த வரலாறுகளை ஒருங்கு திரட்டிச் சேர்த்தனர்; மற்றை இலக்கியங்களிலுள்ள கதை முதலியவற்றையும் தங்கள் சமயக்கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றி உட்புகுத்தினர்; பௌத்த ஸங்கங்கள், மடங்கள் முதலியவற்றின் தோற்றம், வரலாறு முதலியவற்றையும், அங்கே ஒழுக வேண்டிய நியதிகளையும், அட்ட கதையில் சேர்த்தனர்.

## நிதான கதை

புத்தரது சரித்திரத்தை எடுத்துக் கொண்டால், பாலித் திருமுறைகளில் அவரது வரலாறு காணப்படவில்லை என்று ஏற்கெனவே கூறப்பட்டது. ஆனால், அதன் தொடக்கம் அங்கே காணப்படுகிறது. விநயபிடகத்திலும், ஸுத்த பிடகத்தைச் சார்ந்த சில உரையாடல்களிலும் ஸுத்த நிபாதத்திலுள்ள கதைப் பாட்டுக்களிலும் புத்தரது உண்மை வரலாறு ஒருவாறு

புலப்படுகிறது. ஆனால், அதனோடு புத்தரைப் பற்றிய கதைகளும், புத்த சரித்திரக் காவியத் தொடக்கமும் ஏற்பட்டுவிட்டன. புத்த வமிசத்தில் ஒருவாறாயமைந்த பூர்வ கதையும் உண்டு. அதன் 26-வது அத்தியாயத்தில், புத்தரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் ஒன்று கூறப்பட்டுள்ளது. புத்தரது முற்பிறப்பு வரலாறுகள் சரியாபிடகத்திலும் ஜாதகத்திலும் உள்ளன. இவற்றைப் பௌத்தக் கொள்கைப்படி புத்த சரித்திரம் என்றே கொள்ளவேண்டும். பாலி-இலக்கியத்தில் புத்தருடைய வாழ்க்கை வரலாறு நிதான கதையில்தான் தொடர்ந்து காணப்படுகிறது; அதற்குமுன் இல்லை. இந் நிதான கதை ஜாதக அட்ட வண்ணனை என்னும் ஜாதக வியாக்கியானத்திற்குப் பூர்வாங்கமாய் அமைந்து அதனோடு சேர்க்கப்பட்டது.

நிதான கதையில் மூன்று பகுதிகள் உள்ளன. முதற் பகுதி, மிகப் பூர்வ காலத்துள்ள (வரலாற்றுத்) தொடக்கமாகும். இதனைத் 'தூரே நிதானம்' என்பர். இதில் தீபங்கரர் காலத்தில் புத்தர் முற்பிறப்பில் சுமேதர் என்ற பெயருடையவராய்த் தோன்றி, துஷித லோகத்தில் பிறந்தது வரை உண்டான வரலாறுகள் கூறப்படுகின்றன. இரண்டாவது பகுதியில், மிக முற்பட்ட காலத்தன்றிச் சிறிது பிற்பட்ட காலத்தே, துஷித லோகத்திலிருந்து புத்தர் அவதரித்து, அவர் போதி ஞானம் அடைந்தது வரையுள்ள வரலாறுகள் காணப்படுகின்றன. இதனை 'அவிதூரே நிதானம்' என்பர். மூன்றாம் பகுதி 'ஸந்திகே நிதானம்' என்பது. இதில் போதி ஞானம் பெற்றதிலிருந்து, அநாதபிண்டிகன் என்ற வணிகன் பெருங் கொடையளித்தது முடியவுள்ள வரலாற்றினைக் காணலாம்.

முதற் பகுதியில் தீபங்கரர் காலந்தொட்டுப் பல ஊழிகளாய்ப் புத்தர் பாரமிதைகளைப் பெற முயன்றதும், முடிவில் வெஸ்ஸந்தரராய்ப் பிறந்து பாரமிதைகள் முற்றப்பெற்று, துஷித லோகத்தில் தோன்றியதும் உணர்த்தப்படுகின்றன. இதில் உரை நடைக்கு இடையிடையே புத்த வமிசத்திலிருந்தும் சரியா பிடகத்திலிருந்தும் செய்யுட்கள் அடிக்கடி தரப்பட்டுள்ளன. பின் இரண்டு பகுதிகளில் ஏகதேசமாய்த்தான் மேற்கோட்செய்யுட்கள் வந்துள்ளன. இரண்டாவது பகுதி புத்த கோஷம் ஸ்வர்க்கத்தில் கேட்டது முதல் தொடங்குகிறது. போதி ஸத்துவரைத் துஷித லோகத்துள்ள தேவர்கள், உலகம் உய்யுமாறு பூமியில் அவதாரம் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கின்றனர். பிற்பாடு போதி ஸத்துவர் மாயா தேவியின் கர்ப்பத்தில் புகுந்ததும், உலும்பினி வனத்தில் அவர் பிறந்ததும், அவரது பெருமையை அஸித முனிவர் உணர்த்தியதும், அவர் இளம் பருவத்தில் செய்த

அற்புதச் செயல்கள் முதலியனவும், அவர் துறவு பூண்டதும் ஸுஜாதையினால் பாற்சோறு ஊட்டப் பெற்றதும்[1], போதி விருக்ஷத்தின் அடியில் தியானத்தில் அமர்ந்ததும், மாரனால் தடுக்கப் பெற்றதும், அவனை வென்றதும் ஆகிய வரலாறுகள் விரிவாகக் கூறப்படுகின்றன.

மூன்றாவது பகுதியில், புத்தர் முதன் முதலாகத் தமது சமயத்திற்குச் சிஷ்யர்கள் சேர்த்துக் கொண்ட வரலாறு விரித்துரைக்கப்படுகிறது. போதி மரத்தின் அடியில் ஒரு வாரம் தியானத்தில் அமர்ந்தனர். தேவர்கள் இவர் உண்மையில் ஞானம் பெற்றவர்தாமா என்பதில் ஐயுறவுற்றபோது, இவர் ஆகாயத்தில் எழுதல், இமைத்தலின்றி ஒரு வாரம் கீழ்த்திசை நோக்கி நிற்றல் முதலிய அற்புதச் செயல்களால் தாம் ஞான பரிபூரண ரானமையை உணர்த்துகின்றனர். 'அநிமிச சேதியம்' ஒன்று அமைக்கப்பட்டது என நிதான கதை சொல்லுகிறது; இதனால் புத்தரது அற்புதச் செயல்களின் ஞாபகார்த்தமாக அங்கங்கே கோயில்கள் உண்டானமை விளங்குகிறது. ஜேதவன ஆராமத்தை யளித்த அநாத பிண்டிகனைப் பற்றிய வரலாறு மிக விரிவாகக் காணப்படுகிறது. இதனோடு நிதான கதை முடிந்து விடுகிறது. இவ்விடத்தில் ஏன் முடிந்தது என்பதற்குக் காரணம் தெரிய வில்லை.

பச்சுபந்நவத்து (பிரத்தியுத்பந்ந வஸ்து)வில் நிதான கதை அங்கங்கே குறிக்கப்பட்டுள்ளது. இதனால், ஜாதகக் கதையில் ஒரு முக்கிய அம்சமாகவே நிதான கதையுள்ளது என்பது புலப் படும். ஆனால், ஜாதக வியாக்கியானத்தை அப்படியே பின்பற்றாது அதில் பற்பல நூதன விஷயங்களை நிதான கதை புகுத்தியுள்ளது. ஜாதகக் கதையும், ஜாதக வியாக்கியானமும், நிதான கதையும் எப்பொழுது எழுதப்பட்டன என்று உறுதியாக வரையறுக்கப்படவில்லை. ஆனால், வடமொழி நூல்களில் காணப்படும் புத்தர் வரலாறுகளோடு நிதான கதை நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது. லலித விஸ்தரம் முதலிய வடமொழி நூல்களுக்கு முற்பட்ட புத்த வரலாறுகள் இதன்கண் அடங்கியுள்ளன.

பர்மாவில் 17-ம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கந்த (கிரந்த) வம்சம் என்ற நூலில் ஜாதக வியாக்கியானத்தை எழுதியவர் **புத்த கோஷர்** என்று சொல்லப்படுகிறது. இதனை உண்மையென்று கொள்ளலாம்.

---

1. இக் கதையைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தமது ஆசிய ஜோதியில், 'மகனை இழந்த தாயைப் புத்தர் தேற்றுதல்' என்ற பகுதியில் அழகாகப் பாடியளித்திருக்கிறார்கள்.

புத்தகோஷரது நூல் ஒன்று கி. பி. 489-ல் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவரைப் பற்றிப் பல கதைகள் கிளைத்துவிட்டன. என்றாலும், மஹா நாமன் என்ற அரசன் காலத்தில் இவர் திரிபிடகத்தையும், அதற்குச் சிங்கள மொழியிலுள்ள அட்ட கதைகளையும், அநுராதபுரத்து மஹா விஹாரத்தில் வசித்துக் கற்றுத் தெளிந்தனர் என்றும், அக் கல்வியின் விளைவாகவே இவர் விஸுத்திமக்கம் என்ற நூலை எழுதினர் என்றும், பின்னர், திரிபிடகத்திற்குரிய வியாக்கியானங்களைப் பாலியில் மொழிபெயர்த்தனர் என்றும் ஊகிக்கலாம். புத்த கயாவை அடுத்து வாழ்ந்த ஓர் அந்தண வம்சத்தில் இவர் பிறந்தனர். வைதிக நூல்களில் இளமையிலேயே இவர் சிறந்த பயிற்சி பெற்றிருந்தனர். ரேவதர் என்ற பௌத்த பிக்குவினால் இவர் பௌத்த தரிசனத்தைத் தழுவினர். இப் பிக்குவின் ஏவலினால் ஈழதேசம் சென்று சிங்கள வியாக்கியானங்களைக் கற்கும்படி நேரிட்டது. இவர் செய்த வியாக்கியானங்களெல்லாம் மிகச் சிறந்தனவா யிருந்தமையால், இவரால் இயற்றப் பெறாத வியாக்கியானங்களும் இவரது பெயரால் வழங்குவனவாயின. விநயபிடகம், தீக நிகாயம், மஜ்ஜிம நிகாயம், ஸம்யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம் என்பனவற்றிற்குத் தாம் வியாக்கியானம் செய்துள்ளதாக இவரே கூறுகிறார். அபிதம்மபிடகத்தின் வியாக்கியான கர்த்தாவும் இவரே என்பதில் ஐயமில்லை. ஜாதக வியாக்கியானமும், தம்மபத வியாக்கியானமும் மொழியிலும் நடையிலும் மிக வேறுபட்டுள்ளன. ஆதலால், இவர் இவற்றை எழுதினார் என்றல் அமையாது.

**ஜாதக வியாக்கியானம்**

இவ் இரண்டு வியாக்கியானங்களிலும் இலக்கிய நெறியிலும் நிகண்டு நெறியிலும் எழுதப்பட்ட பகுதி மிகக் குறைவேயாகும். கதாரூபமாகச் செய்யும் உபதேசங்களே இவற்றில் பெரும் பகுதி. இக் கதைகளைப் பற்பல அறிஞர்கள் சீர்திருத்தி அமைத்துத் தொகுத்துள்ளார்கள் என்றே கருதவேண்டும். உண்மையிலே தம்மபத வியாக்கியானம் ஜாதக வியாக்கியானத்திற்கு ஓர் அனுபந்தமாகவே தோன்றுகிறது. அதில் முற்காலத்தே பெரும்பான்மை மக்கள் வழங்கிய பல கதைகளும் காணப்படுகின்றன. வாரணாசியிலுள்ள ஓர் அரசன், அருன் அல்ராஷிட் என்பவனைப் போல, இரவில் நகர சோதனை செய்யும் கதையை உதாரணமாகக் கூறலாம். கிஸாகோதமி கதையும் இங்கே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதில்கூறப்படும் கதைகளிற் சில கிரேக்கக்கதைகளுக்கு ஆதாரமாயுள்ளன. வேறு சில கிரேக்கக் கதைகளிலிருந்து

இந்தியாவில் புகுந்துள்ளனவாகலாம். உதாரணமாக, தம்மபத (21-23) வியாக்கியானத்தில் வரும் உதயண வத்துவைக் கூறலாம். இக்கதையில் உதயணனைப் பிடித்தற் பொருட்டுப் பஜ்ஜோதன் மரத்தால் யானையொன்று செய்வித்து, எந்திரங்கள் அமைத்து, அதில் வீரர்களை ஒளித்து வைத்த வரலாறு உள்ளது. இது துரோஜ யுத்தத்தில் வரும் குதிரைக் கதையிலிருந்து வந்திருக்கலாம்.

**தம்மபத வியாக்கியானம்**

இவ் வியாக்கியானம் செல்லும் நெறி கவனிக்கத்தக்கது. தம்ம பதத்திலுள்ள ஒரு செய்யுளையேனும் அல்லது செய்யுள்-தொகுதியையேனும் எடுத்துக்கொண்டு, இந்த உபதேசம் இன்ன இடத்தில் இன்ன சந்தர்ப்பத்தில் இன்னார் பொருட்டு இன்னார்க்குக் கூறப்பட்டது என்று குறிக்கப்பெறும். பின்னர், கதைப் பகுதி வரும். இதன் முடிவில் செய்யுள் அல்லது செய்யுள்-தொகுதிக்குப் பதப் பொருள் கூறப்பெறும். இவையெல்லாம் புத்தரது வாய்ப் பிறப்பென்றே சொல்லப்படுகின்றன.

இந்த உபதேசத்தின் முடிவில் இதனைக் கேட்டிருந்த ஒருவரோ, பலரோ, அல்லது பல்லாயிரவரோ பௌத்த நெறியைக் கடைப்பிடித்து மேன்மேலும் தூய நிலையை அடைய முயல்வர். அடிக்கடி ஜாதகக் கதைகளும் இதனுடன் கலந்துவரும். பொது ஜனங்களுக்கு மிக உகந்தனவாயுள்ள தெய்விகக் கதைகளும் பற்பல இதிற் காணப்படுகின்றன. முக்கியமாக, கர்மம் பற்றிய கொள்கைகளையே இந்தக் கதைகள் வற்புறுத்துகின்றன. திகம்பரரான துறவிகள் மிகவும் இழித்துக் கூறப்படுகிறார்கள். இது விசாகையின் சரித்திரத்தால்[1] விளங்குகிறது (தம்மபதம், 53. வியாக்.). சில கதைகள் திரிபிடகத்திலுள்ள கதைகளேயாகும். ஜாதகத்திற்போல சில வேடிக்கைக் கதைகளும் இதிலுள்ளன. ஓர் உதாரணம்.

> ஒரு வணிகன் வாரணாசியிலிருந்து தக்ஷசிலைக்கு மட்பாண்டங்களை விற்கும் பொருட்டு ஓர் ஆண் கழுதைமீது ஏற்றிச் செல்லுகிறான். அங்கே பாண்டங்களை விற்றுக் கொண்டிருக்கும்பொழுது அவனுடைய கழுதை மேய்ந்து கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு பெண் கழுதை நின்றது. இரண்டு கழுதைகளும் பேசிக் கொள்ளலாயின. பெண் கழுதை 'எத்தனையோ காத தூரத்திற்குப் பளுவான சுமையை நீ எடுத்துச் செல்லவேண்டியதிருக்கிறதே' என்று மிகவும் பரிந்து சொல்லுகிறது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆண் கழுதை வணிகனோடு முரண்டு பிடித்து

1. இச் சரித்திரம் மணிமேகலையில் (22. 82—142) வந்துள்ளது.

வாரணாசிக்குத் திரும்பிச் செல்ல மறுத்து விட்டது. சாட்டையால் அடித்துப் பார்த்தான் ; ஒன்றும் பயன்பட வில்லை. கடைசியில் அவன் பெண் கழுதையைப் பார்த்து, கழுதை முரண்டு பிடிப்பதற்கு இதுதான் காரணமாயிருக்க வேண்டும் என்று ஊகித்து, பெண் மோகத்தால் அதனை வசீகரிக்கிறான். மிக அழகான பெண்கழுதை ஒன்றை அதற்கு மனைவியாகத் தருகிறேன் என்று வாக்குறுதி செய்கிறான். இதன்பேரில், ஆண் கழுதை மிகவும் மகிழ்ந்து வீட்டிற்கு அவனுடன் திரும்பச் செல்லுகிறது. சில நாள் கழித்ததும், அது தன் யஜமானனுக்கு அவன் வாக்குறுதியை நினைவூட்டுகிறது. அப்பொழுது அவ்வணிகன், 'நான் செய்த வாக்குறுதிக்கு இரண்டில்லை ; உனக்கு ஒரு மனைவியைக் கொண்டு வருகிறேன், ஆனால் உனக்குமட்டும்தான் உணவு கொடுப்பேன். அது உங்கள் இருவருக்கும் போதுமா என்று நீ யோசித்துக் கொள்ளவேண்டும். நீங்கள் இருவரும் ஒன்றாய் வாழ்வதால் குட்டிகளும் பிறக்கும். நான் கொடுப்பது உங்கள் அனைவர்க்கும் போதுமா என்றும் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று சொன்னான். அவன் வார்த்தைகளைக் கேட்டதும் ஆண் கழுதைக்கு மனைவி வேண்டும் என்ற விருப்பமே மெல்ல ஒழிந்துபோய் விட்டது.

இவ் வியாக்கியானத்தில் வரும் பல கதைகள் புத்த ஜாதகத் திற்கு புத்த கோஷர் எழுதிய வியாக்கியானங்களிலும் காணப் படுகின்றன. தம்ம பாலர் இவ்வியாக்கியானத்திலிருந்து 25 கதைகள் எடுத்துள்ளனர். ஜாதக வியாக்கியானம் புத்தகோஷர் வியாக்கியானங்கட்குப் பிற்பட்டது என்றும், தம்மபத வியாக்கி யானம் ஜாதக வியாக்கியானத்திற்கும் பிற்பட்டது என்றும், தம்ம பாலரது வியாக்கியானம் இன்னும் பிற்பட்டது என்றும் ஆராய்ச்சி யாளர்கள் துணிந்திருக்கின்றனர். புத்த கோஷர் 5-ம் நூற் றாண்டின் பிற்பகுதியில் இருந்தார் என விண்டர்நீட்ஸ் துணி கின்றார். இவ்வாறாயின், மற்ற வியாக்கியானங்கள் 6-ம் நூற் றாண்டில் தோன்றியனவாதல் வேண்டும்.

புத்த கோஷரது வியாக்கியானங்களில் உவமங்களும், உவமானக் கதைகளும், கர்ண பரம்பரை வரலாறுகளும், கதை களும் நிரம்பவுள்ளன. இவரது பிரம ஜால ஸூத்த வியாக்கி யானத்தில் புத்தர் தெய்வாம்சமுடையராக விளங்குகிறார். அவர் பிக்ஷையின் பொருட்டு வெளிச்செல்லும் பொழுது மெல்லிய இளங் காற்று வீசி, அவர்க்குமுன் அவர் நடந்து செல்லும் பூமியைத் தூய்தாக்கும் என்றும், பூமியிலுள்ள தூளிகளை மேகங்கள் மென்மையாக மழை பொழிந்து அடக்குகின்றன என்றும், அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் விதானம்போல

இம்மேகங்கள் அமைந்து நிழல் செய்கின்றன என்றும், செல்லும் பூமி கரடுமுரடாயின்றிச் சமதலமாகி விடுகிறது என்றும், அவர் அடி வைக்கும் இடங்களிலெல்லாம் தாமரை மலர்கள் தோன்று கின்றன என்றும், அவர் சரீரத்தினின்றும், அறுவகை ஒளிகள் வீசுகின்றன என்றும், இன்னும் பலவாறான அற்புதங்கள் நிகழ் கின்றன என்றும் கூறப்பட்டுள்ளது. அம்பட்ட ஸுத்த வியாக்கி யானத்தில் சாக்கியர்களும் கோலியர்களும் தோன்றிய வரலாறு விரித்துரைக்கப்படுகிறது.

அங்குத்தர நிகாயத்திற்குப் புத்த கோஷர் எழுதிய வியாக்கி யானத்தின் பெயர் மனோரத பூரணி என்பது. இதில் சுமார் 100 கதைகள் உள்ளன. இதில் தேரிகளைப் பற்றிய 13 சுவை யுள்ள கதைகள் உள்ளன. இவற்றில் ஒன்று மஹாபஜாபதி கோதமியின் சரித்திரமாகும். பிறிதொரு கதை கேமா என்ற அரசியின் கதையாகும். இவள் தனது அழகு குறித்துப் பெரிதும் கர்வம் கொண்டிருந்தாள். வெகு காலமாகப் புத்தரது உபதேசங்களுக்குச் செவி கொடுக்கவில்லை. ஒரு நாள் அவள் முன்னிலையில் புத்தர் தமது மந்திர சக்தியினால் அவளைக் காட்டிலும் மிக்க அழகுள்ள ஒரு தெய்வ ஸ்திரீயைத் தோற்று வித்து, அவள் வயது முதிர முதிரக் கிழப்பருவம் அடைந்து, கூனி விரூபியாய் முடிவில் இறந்து விடுவதைக் காட்டுகிறார். அப்பொழுதுதான் கேமா தனக்கு வரவிருக்கும் முடிவை உணர் கிறாள். உணர்ந்து தனது நாயகனாகிய அரசனிடத்தில், தான் பிக்குணி சங்கத்தில் சேரும்படி அனுமதிக்க வேண்டும் என்று கேட்கிறாள். மிக உருக்கமுள்ள படாசாராவின் சரிதமும் இதில் தான் கூறப்படுகிறது.

இவள் ஸ்ராவஸ்தியில் பெருஞ் செல்வனான ஒரு வணிகனது புத்திரி. தன் வீட்டில் வேலை செய்து கொண் டிருந்த ஒரு வேலைக்காரன்மீது காதல்கொண்டு, அவனால் வசீகரிக்கப்பட்டுக் கற்பை இழந்து விடுகிறாள். கர்ப்ப முற்றதும் தன் பெற்றோர்களிடம் வர விரும்புகிறாள். வேலைக்காரனும் இணங்குகிறான். ஆனால், புறப்படும் தினத்தை அடிக்கடி மாற்றி வைத்துக் கொண்டே செல்லு கிறான். முடிவில் அவள் தன்னந்தனியாகப் போக நேர்ந்தது. அவனும் அவளைப் பின் தொடர்ந்து செல்லுகிறான். போகும் வழியில் நடுப் பாதையில் பிரசவ வேதனையெடுத்து ஒரு குழந்தையைப் பெறுகிறாள். பின் அவர்கள் திரும்பு கிறார்கள். இரண்டாம் முறையும் இவ்வாறே நிகழ்ந்தது. மூன்றாம் முறை இவ்வாறு பிரசவமாகும்போது ஒரு பெரும் புயற்காற்று அடிக்கிறது. அவள் தங்குவதற்கு ஒரு சிறு

குடிசையை அங்குக் கிடைத்த கம்புகளால் கட்டுகிறான். அதை வேய்வதற்குப் புல் அறுத்துக் கொண்டிருக்கும் பொழுது, அவனை ஒரு பாம்பு கடிக்க அவன் இறந்து விடுகிறான். தன் இரண்டு குழந்தைகளோடு இந்தத் தாய் மிக வருந்திச் செல்லுகிறாள். அங்கே ஒரு நதி குறுக்கிட்டது. இரண்டு குழந்தைகளையும் அவளால் தூக்கிச் செல்ல இயலவில்லை. மூத்த பையனைக் கரையில் நிறுத்திவிட்டு, கைக் குழந்தையை எடுத்துச் சென்று எதிர்க் கரையில் கிடத்தி விட்டு, மூத்த குழந்தையைக் கொண்டு செல்ல வருகிறாள். நதியின் நடுவில் வந்து கொண்டிருக்கும்பொழுது, இளங் குழந்தையின் பக்கத்தில் ஒரு பெரிய பருந்து வந்துவிடுகிறது. அதை விரட்டுவதற்கு இவள் கையை உயர்த்தினாள். மூத்த பையன் இதைக் கண்டு தன் தாய் தன்னை அழைக்கிறாள் என்று கருதி நீரில் இறங்கி விடுகிறான். நதி வேகமுள்ளதாதலால் இவனை அடித்துக் கொண்டு போய் விடுகிறது. இளங் குழந்தையையும் அந்தப் பருந்து அலகால் கௌவி எடுத்துச் செல்லுகிறது. குழந்தைகளை இழந்த தாய் மிக வருந்தி ஸ்ராவஸ்திக்குச் சென்று கொண்டேயிருக்கிறாள். அந்நகரை யடைந்ததும் தன் பெற்றோர்களுடைய வீடு புயற்காற்றினால் அழிந்துவிட்டது என்றும், தன் பெற்றோர்களும் இறந்து விட்டனர் என்றும் கேள்விப்படுகிறாள். பெற்றோர்கள் அப்பொழுதுதான் தகனம் செய்யப்படுகிறார்கள். துக்கம் தாங்க மாட்டாது தன் ஆடையைக் கிழித்துப் பைத்தியங்கொண்டு, பலநாட்களாக ஆடையின்றித் திரிகிறாள். ஒரு நாள் புத்தர் உபதேசம் செய்து கொண்டிருக்கும் இடத்திற்கு அவள் வர, புத்தர் அவளை அன்புடன் பார்த்து, 'தங்கையே! நீ திரும்பவும் அறிவைப் பெற்றுக் கொள், உனக்குச் சுயபோதம் மீளவும் உண்டாகட்டும்' என்று ஆசீர்வதிக்கிறார். இதைக் கேட்டவுடன் அவளுக்கு வெட்கம் தோன்றுகிறது. ஒருவன் ஓர் ஆடைத் துணியை அவளிருக்குமிடத்திற்கு வீச, அதனால் தன் சரீரத்தை மறைத்துக் கொள்ளுகிறாள். புத்தர் ஒரு செய்யுளைப் பாடிய அளவில் அவள் மனம் முற்றும் பௌத்த சமயத்தில் ஈடுபடுகிறது. பௌத்த பிக்குணிகளில் மிகச் சிறந்தவளாக அவள் மாறிவிடுகிறாள்.

மேற்குறித்தது போன்ற கதைகளேயன்றி, உலக இலக்கியங்களில் பொதுப் பொருளாக விளங்கும் பல கதைகளும் இதில் காணப்படுகின்றன.

உப்பல வண்ணை என்றவள் பூர்வ ஜன்மத்தில் பத்மாவதி என்ற ஒரு கன்னிகையாயிருந்தாள். அவள் தாமரையிலே

பிறந்து, நடையிட்டுச் செல்லுமிடங்களில் எல்லாம் தாமரைகள் தோன்றி அடிதாங்கிச் செல்லும் அற்புதம் வாய்ந்தவளா யிருந்தாள். வாரணாசி அரசனை அவள் மணந்து, அவனது அன்பிற்குரிய மனைவியாக விளங்க, மற்ற மனைவியர்கள் அவள் மீது பொறாமை கொண்டனர். அரசன் வேற்றூருக்குப் போர் வினை காரணமாகச் சென்றிருந்த பொழுது, பிற மனைவியரெல்லாம் கூடி, இவள் புதிதாகப் பிரசவித்த குழந்தையைத் திருடிச் சென்று, அந்தக் குழந்தைக்குப் பதிலாக ஒரு மரத்துண்டை வைத்து, அதனை ரத்தத்தில் முழுக்கி அவள் பக்கத்தில் கிடத்திவிட்டனர். அரசன் திரும்பியதும் மரத்துண்டைப் பெற்றுவிட்டாள் என்று அவனிடம் மனைவியரெல்லாம் புகார் செய்தனர். அரசன் அவளை நீக்கி விட்டான். மனைவியர் எடுத்துச் சென்ற குழந்தையை ஒரு மரப் பேழையிலிட்டு நீரில் செலுத்தி விட்டனர். ஒரு மீன் வலைஞன் கையில் அப்பெட்டி அகப்படுவதன் மூலமாக உண்மை தெரிந்தது.

இது போன்ற கதைகள் கீழைத் தேசங்களிலும் மேலைத் தேசங்களிலும் மிகப் பலவாயுள்ளன.

**விஸுத்தி மக்கம்**

புத்த கோஷர் விஸுத்தி மக்கம் என்ற ஒரு நூலையும் எழுதியிருக்கின்றனர். இந்நூல்தான் வியாக்கியானங்கள் எழுதுவதற்கு முன்பாக எழுதப்பட்டது எனக் கருதலாம். விஸுத்தி என்பது எவ்வகையான அழுக்கினின்றும் நீங்கி முழுவதும் தூய்தாக்கப்பட்ட நிர்வாணம் என்று பொருள் விளக்கப் பட்டுள்ளது. இதனை 'ஏதமில் நெறி' என்றும், 'பழுதில் நன்னெறி' என்றும் மணிமேகலை கூறும் (vii, 31; xii 114). இது அநுராதபுரத்திலுள்ள மஹாவிஹாரம் என்னும் பெரிய பௌத்தப் பள்ளியிலே வழங்கி வந்த பூர்வ வரலாறுகளையும் உபதேசங்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. தெளிவான நடையில் அங்கங்கே உதாரணக் கதைகளாலும், பிற வரலாறுகளாலும் அலங்கரிக்கப்பட்டு இவ் விஸுத்தி மக்கம் அமைந்துள்ளது. உவமானக் கதைகள் முதலியன பழங்காலத்தில் வழங்கி வந்தனவேயாதல் வேண்டும். புத்த வணக்க முறைகள் மஹாயானத்திற் போன்று, ஹீனயானத்திலும் விருத்தியடைந்திருந்த காலத்தில் இது எழுதப்பட்டதாம். இதன் முற்பகுதியில், உதானத்தின் வசனப்பகுதியிற் போல, துறவில் அழுத்தமும், பிற்பகுதியில் பக்தியில் அழுத்தமும் காணப்படுகின்றன. தியானத்தினால் பௌத்த ஞானிகள் அற்புத ஆற்றல்களைப் பெற்ற வரலாறுகளும் இதிற் பல உள்ளன. உதாரணமாக, சஞ்சீவன்

என்பவன் தியானத்தில் முழுதும் ஆழ்ந்திருக்கிறான். பலரும் இவன் இறந்துவிட்டான் என்று அவனுக்குத் தகனக்கிரியை செய்கிறார்கள். ஆனால் நெருப்பினால் அவனை எரிக்க முடியவில்லை. உத்தரா என்னும் பிக்குணி தியானத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது கொதிக்கின்ற எண்ணெயினால்கூட அவள் பாதிக்கப்படவில்லை. நந்தோபநந்தன் என்ற பாம்பு மேரு மலையைச் சுற்றி வளைந்து, அதன் சிகரத்தில் தன் தலைகளை இரண்டாவது தேவலோகம் வரையிலும் நீட்டியிருந்தது. அப்பொழுது மொக்கலனா வந்து தானும் பெரியதொரு பாம்பாக வடிவெடுத்து நந்தோபநந்தனைச் சுற்றிக் கிடந்து அவனை அழுத்தி நசுக்கியதோடு, மேரு மலையையும் நசுக்கிவிடுகிறார். இதில் உலகங்கள், அதன் தோற்றம், ஒடுக்கம் முதலியனவெல்லாம் வருகின்றன. இவை புராண வரலாறுகளோடு ஒப்பிடத் தக்கன.

புத்தகோஷரது வியாக்கியானத்தைக் குறித்து ரீஸ் டேவிட்ஸ் அம்மையார் (Mrs. Rhys Davids),

> 'புத்தகோஷரது சொல் வரலாற்று ஆராய்ச்சி இங்கே திருந்திய முறையில் செய்யப்பட்டனவல்ல. இதில் ஐயம் இல்லை. மேலை நாட்டவர்களாகிய நமக்கு இருண்டிருக்கும் பகுதிகளை விளக்காமலே விட்டுவிடக் கூடியவர். என்றாலும் அவர் எழுதியுள்ளவை நாம் ஊகித்து விஷயங்களை உணர்வதற்குப் பெரிதும் பயன்படுவன. அன்றியும் சரித்திரம் பற்றிய அளவில் நமக்குப் பெரிதும் உதவுகின்றன. அவற்றை நாம் நீக்கி விடுவோமானால், பௌத்த தரிசனத்திற்குரிய தத்துவங்களைச் சரித்திர ஆராய்ச்சி முறையில் நாம் அறிந்து கொள்ள முடியாது'

என்ற கருத்துப்படக் கூறுகிறார்.

**தம்ம பாலர்**

புத்த கோஷருக்குச் சிறிது காலம் பிற்பட்டுத் தம்ம பாலர் குத்தக நிகாயத்திற்குப் பரமத்த தீபனி என்ற ஒரு வியாக்கியானத்தை எழுதினர். அவ் வியாக்கியானத்தில் இதி உத்தகம், உதானம், சரியாபிடகம், தேரகாதை, விமான வத்து, பேடவத்து என்னும் நூல்கள் விளக்கப்படுகின்றன. இந்தியாவின் தென் கோடிக் கரையில் ஈழ தேசத்தை அணுகியுள்ள பதரதித்தம் என்ற ஊரில் இவர் பிறந்தவர் என்பர். இவரும், புத்தகோஷரைப் போலவே, அனுராதபுரத்து மஹாவிஹாரத்தில் வசித்தவராதல் வேண்டும். இவ்விருவரது கருத்துக்கள் ஒற்றுமையாயிருத்தல் போலவே, வியாக்கியான முறைகளிலும் ஒற்றுமை காணப்படுகிறது. தேரிகாதையின் வியாக்கியானத்தில் பத்தா குண்டலகேசா

(பத்ரா குண்டலகேசி) வரலாறு காணப்படுகிறது. இதுதான் தமிழ்ப் பஞ்ச காவியங்களுள் ஒன்றாகிய குண்டலகேசியின் கதைப் பொருளாகும். இது போன்ற கதைகளிற் பல, அழகும் நயமும் உடையவை. அன்றியும், அவதான நூல்களிலிருந்து பல மேற் கோள்களும் இவ் வியாக்கியானத்தில் காட்டப்பட்டுள்ளன.

**வரலாற்று நூல்கள்**

ஈழ தேசத்துப் பௌத்த விஹாரங்களிலிருந்த பிக்குக்கள் பரம்பரை வரலாறுகளையும் கதைகளையும் தொகுத்துப் பௌத்தத் திருமுறைகளுக்கு வியாக்கியானம் எழுதி வந்தார்கள் என்று மட்டும் கொள்ள இயலாது. மிகப் பூர்வ காலந்தொட்டே, அவர்கள் பௌத்த விஹாரங்களிலிருந்த பௌத்த சங்கத்தினரின் முக்கிய நிகழ்ச்சிகளை எழுதி வந்தனர். விநயபிடகத்தில் சுள்ள வக்கத்தில் காணும் சங்க வரலாறுகளால் இவர்களுக்கிருந்த சரித உணர்ச்சியானது புலப்படுகிறது. கதாவத்துவின் வியாக்கி கியானத்தில் பலவகைப் பௌத்த சமயப் பகுப்புக்கள் காணப்படு கின்றன. சிங்கள மொழியிலுள்ள அட்ட கதைகளில் பௌத்த சமய சரிதம் கூறப்படுகிறது. புத்தகோஷரும் தம்மபாலரும் இவற்றைப் பயன்படுத்தியுள்ளார்கள். இந்த அட்ட கதைகளி லிருந்துதான் ஈழதேசத்தைப் பற்றிய சரித காவியங்கள் தோன்றின. பாலி மொழியிலுள்ள ஈழதேசச் சரித்திரத்தைப் பற்றிக் கூறும் தீப வம்சமும், மகா வம்சமும் உண்மையில் சரிதங் களல்ல; காவியங்களே. நமது இந்தியர்கள் புராண வரலாறு களுக்கும், பரம்பரையாய் வரும் வரலாறுகளுக்கும், உண்மைச் சரித வரலாறுகளுக்குமுள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. இவைகள் எல்லாம் காவியங்களில் அடங்கி விட்டன.

பூர்வ காலத்துப் புத்தர்களுடைய வரலாறுகளும், கோதம புத்தரின் பூர்வ ஜன்ம வரலாறுகளும் புத்த வமிசத்தில் சரியா பிடகத்திலும் ஜாதக நூல்களிலும் அமைந்துவிட்டன. இதுவே அன்றி, கோதம புத்தருடைய வரலாறுகளும் இவற்றிற் கூறப் படுகின்றன. பௌத்த சமயம் ஈழதேசத்தில் புகுந்த வரலாறும் அட்டகதைகளில் காணப்படுகிறது. ஈழதேசத்துப் பௌத்தர்கள் இந்தியப் பௌத்தர்களோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்று கூறுவதோடு, புத்தரோடு கூடவும் அவர்கள் தொடர்பு கொண் டிருந்தனர் என்றும் விவரிக்கப்படுகிறது. புத்த பகவான் ராக்ஷஸர்களும் நாகர்களும் குடியிருந்த ஈழதேசத்திற்கு ஆகாய மார்க்கமாய் ஒருமுறை தெய்வங்கள் தொடர்ந்து வரப் பறந்து சென்றனராம். அங்கே தமது பௌத்த தம்மமானது ஒளிவீசிப் பரவும்படி செய்தனராம். பிற்காலத்தில் பௌத்த விஹாரங்கள்

சிறந்து விளங்குவதற்கு இதுவே காரணமாயிருந்ததாம். இது போன்ற புராணமே ஈழதேசத்தில் வாழ்ந்த பூர்வ அரசர்களின் சரிதமும், அசோகன், மஹிந்தன் முதலியோர்களது சரித்திரமும், பௌத்த சங்கங்களின் வரலாறுகளும் ஆகும். எனினும், சரித்திர காலத்தோடு நெருங்கி வரவர உண்மை வரலாறுகளும் காணப் படுகின்றன.

இவ்வகை வரலாறுகளுள் முதலாவது தோன்றியது தீப வம்சமாகும். தீவின் சரித்திரம் என்பது இப் பெயரின் பொருள். இதனை இயற்றியவரின் பெயர் தெரியமாட்டாது. ஆனால், கி.பி. 325 முதல் 430 வரையுள்ள காலப்பகுதியில் இது எழுதப் பட்டதாகலாம். இதிற் காணும் மொழியமைதியும் செய்யுளமைதி யும் திருந்தியனவல்ல. வரலாற்றிலும் தொடர்ச்சியில்லை ; இடையிடையே தொடர்ச்சியற்றுக் காண்கிறது. அநுராதபுர விஹாரத்தில் போற்றி வைக்கப்பட்டுள்ள அட்ட கதையில் வரும் சரிதப் பகுதியே இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது. வேறு ஒரு சில அட்ட கதைகளும் பயன்பட்டிருக்கலாம்.

இது காவிய நெறியிற் பெருங் குறைபாடுடையதேயாயினும், பூர்வ வரலாற்று நூல்களை மிக ஒட்டிச் செல்லுகின்றது. மகா வம்சம் காவியநெறியில் சிறந்து விளங்குகிறது என்று சொல்ல லாம். இதனை இயற்றியவர் 5-ம் நூற்றாண்டின் கடைப் பகுதியிலிருந்த மகாநாமர் என்பர். பலவகை அணிகள் நிரம்பிய காவியமாக இயற்றுதலே இவ் ஆசிரியரின் நோக்கம். காவியத் தையும் மிகத்திறம்பட இவர் அமைத்துள்ளனர். இந்த அமைப் பிற்குப் புத்தகோஷரால் பாலி இலக்கியங்கள் திருந்தியமைந்ததும் ஒரு காரணமாகலாம். இந்நூலில் வரும் வரலாறு தொடர்ச்சி யாகச் செல்லுகிறது.

தீபவம்சமும் மகாவம்சமும் காவிய அமைப்பில் ஏற்றத் தாழ்வுடையனவேயாயினும், அவை கூறும் பொருள்களில் மிகப் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இரண்டு காவியங்களும் கோதமபுத்தர் ஈழதேசத்திற்கு மூன்று முறை சென்று வந்த வரலாற்றோடு தொடங்குகின்றன. அக்காலத்தில் ஈழதேசத்தில் ராக்ஷஸர்களும், யக்ஷர்களும், பிசாசர்களும், நாகர்களும் வாழ்ந்து வந்தனர். புத்தர் தமக்குரிய புத்த திருஷ்டியால் உலகம் முழுவதையும் நோக்கி, பின் அந்த அழகிய தீபத்தைப் பார்த்தனர். நாகர்களுக்கிடையே பெரும்போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. புத்தர் அதைப் பார்த்து அவர்கள்மீது பேரிரக்கங்கொண்டு, தெய்வங்களோடு ஆகாயத்தில் பறந்து சென்று தமது தரும-ஒளியை அங்கே உட்புகச் செய்தனர்.

உடன் தானே நாகர்களும் மற்றையோரும் பௌத்த தர்மத்தைப் பின்பற்றுவாராயினர். பின்னர், கோதமரது தந்தையாகிய சுத்தோதனரது பூர்வ வமிச வரலாறு துலக்கப்படுகிறது.

பின்னர், இந்தியாவில் பௌத்த சமயத்தின் வரலாறு, பௌத்த சங்கங்களின் வரலாறு முதலியவை உணர்த்தப்படுகின்றன. இச்சமயத்திற்குப் பேராதரவு அளித்த அசோக சக்கரவர்த்தியைப்பற்றி விரிவாக இரண்டு காவியங்களும் கூறுகின்றன. ஓர் இந்திய அரசகுமாரி ஒரு சிங்கத்தைத் தன் நாயகனாகக் கொண்டு வாழ்ந்து வந்தனள் என்றும், அவளுக்கு சீஹபாஹு என்ற ஒரு மகனும் சீவலி என்ற ஒரு மகளும் பிறந்தனர் என்றும் கூறப்படுகிறது. அண்ணனும் தங்கையுமாகிய இவர்கள் மணந்து கொண்டு விஜயன் என்பவனைப் பெற்றனர். இவ்விஜயன்தான் ஈழதேசத்து அரசர்களுள் முதலாமவன். இவனது துஷ்டத் தனத்தினால் இவன் நாடு கடத்தப்படுகிறான். இவன் எழுநூறு துணைவர்களோடு கடல் மார்க்கமாகப் பல இடங்களுக்கும் சென்று, ஈழத்திற்குத் திரும்பிவந்து அத்தேசத்திற்கு அரசனாகிறான். இவ் விஜயனது வரலாறும், இவனை அடுத்துவந்த அரசர்களின் வரலாறுகளும் மகாவமிசத்திற் காட்டிலும் மிகச் சுருக்கமாகத் தீபவம்சத்தில் கூறப்படுகின்றன. அசோகன் காலத்தவனான தேவாநாம் பிய திஸ்ஸன் காலத்தில், மஹிந்தன் ஈழ தேசத்திற்கு வந்து, பௌத்த சமயத்தை முதன் முதல் பரப்பினான். இவனே பௌத்த மடங்களையும் முதன் முதல் நிறுவியவன். தேவாநாம் பிய திஸ்ஸன் வரலாற்றை இரண்டு காவியங்களும் மிக விரிவாகக் கூறுகின்றன. மஹிந்தனது சகோதரியாகிய சங்கமித்தா போதி விருக்ஷத்தின் கிளையை ஈழ தேசத்தில் நட்டமையும் விரித்துச் சொல்லப்படுகிறது.

பின்னர், ஈழ தேசத்து அரசர்களுடைய சரித்திரம் முறையே மகாசேனன் காலம்வரை உணர்த்தப்படுகிறது. இவர்களுள் திரிபிடகத்தையும் அதன் வியாக்கியானங்களையும் எழுதி வைத்த வட்டகாமினி என்ற அரசனது வரலாறு சிறிது விரிவாகக் கூறப்படுகிறது. இரண்டு காவியங்களிலும் சரித்திரப் பகுதி மகாசேனன் காலத்தோடு நின்றுவிடுகிறது. இவன் சுமார் கி. பி. 352-ல் மரணமடைந்தான். இதற்குப்பின், மகாவம்சத்தில் சேர்க்கப்பட்ட நூலின் பெயர் சூள வம்சம் என்பது. மகாவம்சத்தின் தொடர்ச்சியாய் அமைந்த பிற்சேர்வு என்று இதனைக் கூறலாம். இது பற்பலரால் பற்பல காலத்து எழுதப்பட்டதாம். முதலாவது பிற்சேர்வு பராக்கிரம பாகுவின் (கி. பி. 1240-1275) காலத்தவரான தம்மகித்தி என்ற தேரரால் எழுதப்பட்டது.

நூற்பொருளில் தீபவம்சமும் மகாவம்சமும் ஒற்றுமைப் பட்டிருந்த போதிலும், பல சரித்திரங்களில் மகாவம்சம் புது விஷயங்களைப் புகுத்தி விரித்துக் கூறுகிறது. உதாரணமாக, துட்டகாமினி என்பவனது வரலாற்றை எடுத்துக்கொள்ளலாம். இது தீபவம்சத்தில் 13 செய்யுட்களில் அடங்கிவிடுகிறது; மகாவம்சத்தில் பதினொரு சர்க்கங்களில் கூறப்பட்டுள்ளது. முதலாவது அரசனாகிய விஜயனைக் குறித்தும் பற்பல அற்புதச் செயல்கள் காணப்படுகின்றன. இதில் வரும் ஏலாரா என்ற அரசனது சரித்திரமும் (21, 15) மனுநீதி கண்ட சோழன்[1] சரித்திரமும் ஒன்றாகவே உள்ளது.

தீபவம்சமும் மஹாவம்சமும் அசோகனது பிதாமகனாகிய சந்திரகுப்தனைப்பற்றி, முதன் முதலாக அறிவிக்கின்றன. இதன் மூலமாகவே இந்திய இலக்கிய வரலாற்றிற்கு அதிமுக்கியமான, புத்தர் நிர்வாணம் அடைந்த காலம் துணியப்பட்டுள்ளது. இந்த மஹாவம்சத்தில் 2915 - செய்யுட்களே உள்ளன. கி. பி. 4-ம் நூற்றாண்டிலிருந்தேனும் இதனைச் சரித்திரத்திற்குரிய ஆதார நூலாகக்கொள்ளலா மென்று ஆராய்ச்சியாளர் கூறுவர். கி.பி. 1000-க்கும் 1250-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட மகாவம்ச டீகை ஒன்றும் இதற்கு உள்ளது. இது பொருளை மட்டும் விளக்குவதன்று ; எத்தனையோ கதைகளையும் வரலாறு களையும் இது சேர்த்துவிட்டது. இவற்றில் ஒன்று சந்திர குப்தனையும் சாணக்கியனையும் இயைத்துக் கூறும் சரித்திரம்.[2] பெரும்பாலும் அநுராதபுரத்துப் பள்ளியில் வழங்கிய அட்ட கதையையும் புத்த கோஷரது வியாக்கியானங்களையும் இன்னும் பிற்காலத்து நூல்களையும் பயன்படுத்தியே இவ் வியாக்கியானம் எழுதப்பட்டுள்ளது. பற்பல காவிய அம்சங்களையும் அமைத்து நூலை மிகவும் விரிவாக்கி 5791 செய்யுட்களுள்ள மஹா வம்சப் பிரதி ஒன்றும் நமக்குக் கிடைத்துள்ளது.

அட்ட கதைகள் ஈழ தேசத்துப் பௌத்த சமயச் சரித்திரத் திற்கு மிகவும் பயன்பட்டு வந்திருக்கின்றன. புத்த கோஷர் விநயபிடகத்திற்கு ஸமந்த பாஸாதிகை என்ற வியாக்கியானம் எழுதினர். இதற்குச் சரித்திர முன்னுரையாக எழுதியிருப்பது இவ் அட்ட கதைகளை ஆதாரமாகக் கொண்டுதான். இந்த முன்னுரையும் நிதான கதையும், மகா வம்சமும், பிற்காலத்தே

1. மனு நீதி கண்ட சோழ சரித்திரம் தமிழில் கி. பி. 5-ம் நூற்றாண்டின் கடைப் பகுதிக்குப் பின் வந்திருத்தல் வேண்டும். இக் காரணம் பற்றியும் சிலப்பதிகாரமும், பழமொழியும் மிகப் பிற்பட்ட நூல்களாதல் வெளிப்படை.

2. வடக்கிலுள்ள விஹாரங்களில் வழங்கும் அட்ட கதைகளிலிருந்து இது எடுக்கப்பட்டதாக இவ்வியாக்கியான கர்த்தா கூறுவர்.

தோன்றிய போதி வம்சம், தாதா வம்சம், தூப வம்சம் என்ற நூல்களுக்கு ஆதாரமாயிருந்தன. போதி வம்சம் என்பது போதி விருக்ஷத்தின் வரலாற்றைக் கூறுவது; உரைநடையில் அமைந்தது. இந்நூல் 11-ம் நூற்றாண்டில் உபதிஸ்ஸ என்பவரால் இயற்றப் பட்டது.

தாதா வம்சம் 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தம்மகித்தி என்ற பிக்குவால் இயற்றப்பட்டது. இதில் புத்தரது பல்லின் வரலாறு கூறப்படுகிறது. தூப வம்சமும் 13-ம் நூற்றாண்டில் தோன்றியதே. இதை இயற்றியவர் வாசிஸ்ஸரர் என்று தம்மைக் கூறிக் கொள்ளுகிறார். இது ஸ்தூபங்களின் வரலாறு பற்றியது. இவை போன்ற நூல்கள் பர்மா தேசத்திலும் தோன்றின. உதாரணமாக, சகேச தாதா வம்சத்தைக் கூறலாம். புத்தரது ஆறு ரோமங்களுக்கு அமைத்த கோயில்களின் வரலாற்றை இந்நூல் கூறும். இதுவேயன்றி பண்ணஸாமி 1861-ல் எழுதிய சாஸன வம்சம், கந்த வம்சம் முதலியனவும் பர்மா தேசத்தில் பாலி மொழியில் எழுதப்பட்டனவே. கந்த வம்சத்தில் திரிபிடகங்களிலும், 9 அங்கங்களிலும் காணும் சமயப் பொருள் களும் பாலியில் பிற்காலத்து எழுதப்பட்ட நூல்களின் ஆசிரியர் களது பெயர் முதலியனவும், நூல் எழுதியதற்குரிய காரணங் களும், திரிபிடகங்கள் எழுதப்பட்ட வரலாறும் காணப்படு கின்றன.

புத்த கோஷர் காலத்தில் புத்த தத்தர் என்ற ஓர் ஆசிரியரும் வாழ்ந்தனர் என்று கூறுவர். ஆனால், இவர் பிற்பட்டவர் என்றே தோன்றுகிறது. இவர் புத்த வம்சத்திற்கு ஒரு வியாக்கி யானமும், அபிதம்ம பிடகம், வினய பிடகம் இவை பற்றிய விரிந்த நூலும் எழுதினர். இந்நூல்கள் அபிதம்மாவதாரம், ரூபாரூப விபாகம், வினய விநிச்சயம் என்று பெயர் பெறும்.

புத்தவம்சத்தையடுத்து நாம் நோக்க வேண்டுவது அநாகத வம்சம் என்பதாகும். இதில் பிற்காலத்து வரப்போகும் புத்த மெத்தெய்யா (மைத்திரேயர்) என்னும் புத்தரது வரலாறு சொல்லப்படுகிறது. மைத்திரேயர் காலத்தில் மக்கள் எண்பதி னாயிரம் ஆண்டுகள் இருப்பார்களாம். மகளிர் 500-வது வயதில் மணப் பருவம் அடைவார்கள். நம் பரத கண்டத்தில் கோழிக் கூட்டில் குஞ்சுகள் நிரம்பியிருப்பதுபோல மக்கள் நிரம்பியிருப் பார்களாம். இச் செய்திகள் ஏற்கெனவே தீக நிகாயத்தில் (26) கூறப்பட்டவையே. அநாகத வம்சம் இன்னும் விரிவாக மைத்திரேயர் வரலாற்றைச் சொல்வதுடன், அவரது காலத்தில் வரப்போகும் புவன சக்ரவர்த்தியாகிய சங்கன் என்பவனது

வரலாறுகளையும் தெரிவிக்கிறது. இவற்றைக் கோதம புத்தரே பிற்கால நிகழ்ச்சியாகக் கூறினராம்.

விநயபிடகத்திற் காணும் விதிகளை குத்தசிக்கை, மூலசிக்கை என்ற இரண்டு நூல்களும் சுருக்கிக் கூறுகின்றன. இவைகள் கி. பி. 440-ல் முறையே தம்ம ஸிரி என்பவராலும் மகாஸாமி என்பவராலும் இயற்றப்பட்டன என்று பர்மிய மொழியிலுள்ள சரித்திர நூல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இவை மிகப் பிற்பட்டன என்றே கொள்ளுதல்வேண்டும். இவைகளும் பாடி மொக்கங்களில் கூறும் துவே மாதிகை என்ற நூலும் விநய பிடகம் முழுமையும் வாசிப்பதற்குச் சௌகரியமில்லாதவர் பொருட்டு எழுதப்பட்டன.

சித்தத்தர் என்பவர் எழுதிய ஸாரஸங்கிரகமும், தம்மகித்தி என்பவர் எழுதிய தம்ம ஸங்கஹமும் பௌத்த தர்மத்தைக் கூறும் நூல்கள். இவைகள் 13 அல்லது 14-ம் நூற்றாண்டில் எழுதப் பட்டன. அபிதம்மத்தை மிகுதியாகக் கற்று வருவது பர்மா தேசத்தில்தான். அபிதம்ம ஸங்கஹம் என்ற நூலொன்று 12-ம் நூற்றாண்டில் அநுருத்தர் என்பவரால் இயற்றப்பட்டது. இது பர்மா தேசத்திற் போலவே, ஈழ தேசத்திலும் சிறந்த நூலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த அநுருத்தர் 1855 செய்யுட் களுள்ள நாம ரூப பரிச்சேதம் என்ற ஒரு தத்துவ நூலையும் இயற்றினர்.

பௌத்த தர்மத்திலுள்ள விஷயங்களில் பஞ்ச கதியைப் பற்றிக் கூறுவது பஞ்சகதி தீபனம் என்பது. பௌத்தர்கள் ஐம்பெருங் கதிகள்[1] உள்ளன என்பர்: மக்கள், தேவர், நரகர், பேய், விலங்கு என. இப்பொருளே பற்றி லோகதீபஸாரம் என்ற ஒரு நூல் பர்மாவில் கி. பி. 14-ம் நூற்றாண்டில் மேதங்கரர் என்பவரால் இயற்றப்பட்டது. அந் நூற்றாண்டிலிருந்த தம்ம கித்தி என்பவர் பாரமீ-மகா-சதகம் என்ற ஒரு பாலி நூலைச் செய்யுள் வடிவில் இயற்றியுள்ளார். 'சத் தம்மோ பாயனம்' என்ற நூல் 629 செய்யுட்களில் பௌத்த சமயத்திற்குரிய கொள்கைகளையும் நல்லொழுக்க விதிகளையும் கூறுகிறது. 13-ம் நூற்றாண்டிலேயே பஜ்ஜ (பத்திய) மது என்ற நூல் புத்தப் பியரால் புத்த ஸ்தோத்திரமாக எழுதப்பட்டது. தெலகடாக

1. மணிமேகலை அறுவகைக் கதிகளைக் கூறுகிறது :
மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை என்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவிற் சார்தலும்

காதை என்ற ஒரு காவியமும் பௌத்த தர்மத்தைப் பற்றியே கூறுவது. இதன் நூற்பொருள் அறியத் தக்கது. கல்யாணியிலுள்ள திஸ்ஸா என்ற அரசன் இந்நூல் இயற்றிய கவியைத் தன் ராணியின் சோர நாயகனாகக் கருதிக் கொதிக்கின்ற எண்ணெய் நிரம்பிய கடாகத்தில் எறிந்து விடும்படி தண்டனை விதிக்கிறான். இவ்வாறு செய்தும் யாதோர் ஊறுமின்றிக் கவிஞனாகிய பிக்கு வெளி வந்து புத்த ஸ்தோத்திரமாக நூறு செய்யுட்களை இயற்றுகிறான்.

அவன் இறப்பதற்குமுன் தனது முற்பிறப்பில் தான் ஒரு பசு மேய்ப்பவனாக இருந்ததாகவும், கொதிக்கின்ற பாலில் ஓர் ஈயைப் போட்டுவிட்டதாகவும், அத்தீவினையின் பயனால் இப் பிறப்பில் அவன் தண்டனை அனுபவிக்க நேர்ந்ததாகவும் சொல்லுகிறான். இப்பொழுதுள்ள நூலில் 98 செய்யுட்களே உள்ளன. மேற்குறித்த கதை வரலாறு காணப்படவில்லை. கல்யாணியிலுள்ள திஸ்ஸன் கி. மு. 3-ம் நூற்றாண்டில் அரசு புரிந்தவன். ஆனால், இந்நூலின் மொழியமைப்பை நோக்கும் போது, இது 12-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதன்று என்பர்.

**ஜீநாலங்காரம்**

புத்த வரலாற்றை ஆடம்பரமான காவிய நடையில் கூறும் நூல் ஜீநாலங்காரம் என்பது. இதில் 250 செய்யுட்கள் உள்ளன. இது புத்தரக்கிதரால் கி. பி. 1156-ல் எழுதப்பட்டது; யமகம், திரிபு முதலிய சொல்லணிகள் நிரம்பியது. சிறிது பிற்பட்டுப் புவனக பாஹுவின் காலத்தில் (1277—1288) வாழ்ந்த வநரதந மேதங்கரர் என்பவரால் ஜிநசரிதம் ஒன்று எழுதப்பட்டது. நிதான கதையின் பொருளை மிக எளிய முறையில் செய்திருக்கும் நூலே இது. மிகப் பிற்பட்ட காலத்திலுங்கூட பாலி மொழியில் பர்மா தேசத்தவர் நூல் எழுதியுள்ளனர். இவற்றுள் மிக முக்கியமானது ரஸவாஹினி என்பது. இந்நூல் முதன் முதலில் சிங்கள மொழியில் எழுதப்பெற்று, பின்னர் ரட்ட பாலர் என்பவரால் பாலியில் மொழிபெயர்க்கப்பெற்று, மிகப் பிற்பட்ட காலத்தில் (13-ம் நூற்றாண்டில்) தேரவெதெஹ என்பவரால் திருத்தியமைக்கப்பட்டது என்பர். இலக்கண வழுவுள்ள பாலி மொழியில் இது அமைந்துள்ளது. பாட்டும் உரையுமாக அமைந்த இந்த நூலில் பல கதைகளும் உபதேசங்களும் சொல்லப்பட்டுள்ளன. ஊனைத் தின்று வாழும் குரூர மிருகமாகிய புலிக்குங்கூட நல்லறிவு வந்தது: பிற உயிர்கள் மீது அன்பு கொண்டதனால், அதற்கும் சுவர்க்கம் கிடைத்தது: ஆதலால், எப்பொழுதும் நன்மையே செய்யவேண்டும் என்று வருவது ஓர் உதாரணமாம். இக் கதைகளிற் காணும் புத்த வணக்கம் பாகவதர்களிடையே காணும் விஷ்ணு பக்தியைப் போன்றது.

ஜாதகங்கள்தான் எடுக்க எடுக்கக் குறையாத ஆதார நூலாகப் பௌத்தக் கவிஞர்கள் கொண்டுள்ளார்கள். 15-ம் நூற்றாண்டில் ஆவ என்ற நகரிலிருந்த ஸீலவம்சன் என்ற கவிஞன் நிதான கதையிலுள்ள ஸுமேத கதையின் வழித்தாகப் புத்தாலங்காரம் என்ற ஒரு செய்யுள் நூலை இயற்றினன். இங்ஙனமே பல நூல்களும் ஜாதகத்தைப் பின்பற்றி அமைந்துள்ளன.

**பௌத்த வடமொழி இலக்கியங்கள்**

இந்தியாவிலும் ஈழதேசத்திலும் பர்மாதேசத்திலுமுண்டான பாலி இலக்கியங்கள் மிகப் பலவாய்ச் செழித்துள்ளன. என்றாலும், அவைகள் பௌத்த சமயத்தவருள் தேரவாதிகளுடைய நூல்களாகவே உள்ளன. மற்றப் பௌத்த சமயப் பகுப்பினரின் நூல்கள் பிராகிருதம், பைசாசி முதலிய இந்திய மொழிகளிலே இயற்றப்பட்டன. பெரும்பாலும் வடமொழியிலும், வடமொழி மிகக் கலந்த இந்திய மொழிகளிலும் பௌத்த சமய வகையினருள் மிக முக்கியமானவருடைய நூல்கள் அமைந்துள்ளன. இவற்றிற் பல நூல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஒரு சில நூல்கள் முற்றும் கிடைக்கவில்லை. வட இந்தியாவிலும் வட மேற்கு இந்தியாவிலும், நாலந்தா, தக்ஷஸிலை முதலிய கல்லூரிகளில் பௌத்த சமயத்திற்குரிய நூல்கள் மிகப் பலவாய்ப் பயிலப்பட்டு வந்தன. அங்கிருந்து இந்தியப் பண்டிதர்கள் திபெத்து, சீனம் முதலிய தேசங்களுக்குச் சென்று, வடமொழி நூல்களைத் திபெத்து மொழி முதலியவற்றில் மொழிபெயர்த்தனர். ஹியூன் த்ஸாங் முதலிய சீன யாத்திரிகர்கள் நாலந்தாவிற்கு வந்து வடமொழியைக் கற்றுப் பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழி பெயர்த்தனர். வடமொழியிலுள்ள மூல நூல்கள் இறந்து போக, இம் மொழிபெயர்ப்புக்களிலிருந்தே மூலத்தை அறிந்துகொள்ள வேண்டியதாகிறது. மத்திய ஆசியாவிலும், வடமொழி நூற் சிதிலங்களும், அப்பிரதேசங்களிலுள்ள மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற நூல்களின் சின்னங்களும் நமக்குக் கிடைக்கின்றன.

இவைகளிற் பெரும்பாலன வடமொழியில் இயற்றப்பட்டுள்ளமையால் பௌத்த வடமொழி யிலக்கியம் என்று நாம் பெயரிட்டுக் கொள்ளலாம். மஹாயானத்தைச் சார்ந்ததாகவே இவைகள் உள்ளன.

ஹீனயானம், மஹார்யானம் என்ற இரண்டிற்குமுரிய வேறுபாட்டினை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஹீனயானத்தின்படி ஒரு சிலரே துறவு பூண்டு தவமியற்றுதலால் நிர்வாணத்தை அடையவல்லவர்கள். மஹாயானம் இக்

கொள்கையை முற்றும் தள்ளி விடுவதன்று. புத்தர் இவ்வாறு கூறினாரேனும், அது போதியதாகாது எனக் கருதி, எல்லா உயிர்களும் நிர்வாணத்தை அடைவதற்கு உரியவர்களே என்று கூறுகிறது. பிக்குக்களேயன்றி, ஒவ்வொரு மனிதனும் போதி ஸத்துவனாவதற்கு முயலுதல் கூடும் என்று கொண்டு, இதனை எளிதில் நிறைவேற்றுவதற்குரிய உபாயங்களை மஹாயானம் கையாளுகிறது. இவ் உபாயம் என்னவென்றால், எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதலும், தியாக புத்தியை மேற்கொள்ளுதலும், பெருந்தயையும் ஆம். இவைகளேயன்றி கோதம புத்தர், புத்தர், போதி ஸத்துவர் இவர்களது வணக்கமும் உரிய நெறியாகவே மஹாயானம் கருதுகிறது. பாலித் திருமுறை புத்தரை அமாநுஷ்ய ஆற்றலுள்ள ஒருவராகவே கூறுகிறது. போதி விருக்ஷத்தின் அடியில் அவர் ஞானம் பெற்ற பின்னர், பலவகை அற்புதங்களை நிகழ்த்தக்கூடிய பெருமை வாய்ந்தனர் என்றும், நிர்வாணத்தின் பின்னர் அவருடைய தர்மங்களையும் சின்னங்களையும், வணக்கத்திற்குரிய பொருளாக வைத்துள்ளனர் என்றும் இத்திருமுறைகள் கூறுகின்றன. ஹீனயானத்தைச் சார்ந்த லோகோத்தர வாதிகள் புத்தரது பெருமையை இன்னும் சற்று அதிகமாகக் கொள்கிறார்கள். அவர்கள் புத்தர்களைச் சாதாரண மக்கள் அல்லர் என்றும், லோகோத்தர வாசிகள் ஆவர் என்றும், மக்கட் பிறப்பிலுள்ள அநுபவங்களை நுகர்தற் பொருட்டு அவர்களிடையே சில குறித்த காலங்களில் அவதரிப்பர் என்றும் கூறுவர்.

மஹாயானத்தைச் சார்ந்தவர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று விட்டனர். இவர்களது கருத்துப்படி புத்தர்கள் பழைய தெய்வப் பிறப்பினர்களே என்றும், அவர்கள் பூமியில் தங்குவதும் நிர்வாணமடைவதும் லீலையே என்றும் கூறுவர். மேலும், ஹீனயானத்தினர் சாக்கிய முனிக்கு முன்பு பல புத்தர்கள் இருந்தனர் என்று கொண்ட போதிலும், மஹாயானத்தினர் லட்சோப லட்சம் புத்தர்கள் இருந்தனர் என்று கூறுவர். இங்ஙனமே, எண்ணற்ற போதி ஸத்துவர்களையும் அவர்கள் உடன்படுவர். இப் போதி ஸத்துவர்கள் உயிர்கள்மீது இரக்கங் கொண்டு, அவர்களுக்கு வழி காட்டும் பொருட்டு நிர்வாணமடையாதபடி இருக்கிறார்களாம். இந்தப் பௌத்தத் தெய்வங்களோடு இந்து சமயத்திற்குரிய தெய்வங்களையும் மஹாயான நெறியிலுள்ளவர்கள் சேர்த்துக் கொண்டனர். முக்கியமாக, சிவபெருமான் புத்தர்களோடும் போதி ஸத்துவர்களோடும் ஒன்று சேர்ந்து பௌத்தத் தெய்வமாகவே கருதப்பட்டுள்ளனர். ஆகவே, புதிய புராணக் கதைகள் தோன்றத் தொடங்கின. புத்த பக்தியும் மிகமிக முக்கியத்துவம் அடைந்துவிட்டது. தத்துவ விஷயங்

களிலும் அந்தணர்களது தத்துவங்களை உடன்பட்டு, மஹாயான தத்துவங்கள் வளர்த்துவிட்டன. துக்கத்தின் உற்பத்தியை பிரதீத்திய-ஸமுத்பாதம் என்றதனால் விளக்குவர். ஒன்றோடொன்று தொடர்புபட்டிருக்கும் நிலை என்பதுவே இதன் பொருள். இதிலிருந்து ஹீனயானத்தினர் ஆன்மா என்பது ஒன்று தனிப்பட இல்லை என்ற கொள்கையைக் கண்டு ஒவ்வொரு கணத்திலும் மாறிமாறி வருகின்ற ஸரீர மானஸிகத் தோற்றங்களின் தொடர்ச்சியே உண்மையானது என்பர். இதிலிருந்தே மஹாயானத்தினர் ஸூனியதைக் கொள்கையை மேற்கொண்டனர். 'ஸர்வமும் சூன்யம்' என்ற கொள்கையின் கருத்து ஸ்வதந்திரமாய்த் தனிப்பட்ட பொருள் யாதுமில்லை என்பதாம். வடமொழியிலுள்ள பௌத்த இலக்கியங்கள் அனைத்தும் மஹாயானத்தைச் சார்ந்தவை என்று சொல்ல முடியாது. சில முக்கியமான ஹீனயான நூல்களும் அவற்றுள் உண்டு.

**வடமொழியிலுள்ள திருமுறைகள்**

முதலாவது ஹீனயானத்தைச் சார்ந்த ஸர்வாஸ்திவாத சமயத்தை எடுத்துக் கொள்வோம். இச் சமயத்தைச் சார்ந்தவர்கள் காஷ்மீரத்திலும் காந்தார தேசத்திலும் வாழ்ந்தனர். பின்பு, மத்திய ஆசியா, திபெத்து, சீனம் முதலிய தேசங்களுக்குச் சென்றனர். இவர்களுக்கு என வடமொழித் திருமுறை ஒன்று உண்டு. இந்தத் திருமுறை முழுவதும் கிடைக்கவில்லை. ஆனால், ஸர் ஆரல் ஸ்டெயின் (Sir Aurel Stein) முதலியவர்களால் கிழக்குத் துருக்கிஸ்தானில் கண்டெடுக்கப்பட்ட நூல் — சிதறல்களால் இதனைக்குறித்து நாம் அறிகிறோம். வடமொழியிலுள்ள மகாவஸ்து, திவ்யாவதானம், லலித விஸ்தரம் முதலிய பௌத்த நூல்களிலே இத் திருமுறையினின்றும் மேற்கோள்கள் ஆளப்பட்டுள்ளன. சீன மொழியிலும் திபெத்து மொழியிலுமுள்ள மொழிபெயர்ப்பு நூல்களாலும் இத்திருமுறையைப்பற்றி நாம் அறிய இயலுகிறது. மூல ஸர்வாஸ்தி வாதத் திருமுறை வடமொழியிலிருந்து சீனத்தில் இ-த்ஸிங் யாத்திரிகனால் கி. பி. 700 முதல் 712 வரையுள்ள காலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ஆனால், இத் திருமுறைகளில் ஒரு சில கி. பி. 2-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஸர்வாஸ்திவாதிகள் இந்தியாவில் கி. மு. 2-ம் நூற்றாண்டிலேயே இருந்திருக்கின்றனர்.

இவ் வாதியர்களுக்குரிய ப்ராதிமோக்ஷ ஸூத்திரங்களின் பகுதிகளும் வடமொழியிலுள்ள விநயபிடக ஸூத்திரங்களும் மத்திய ஆசியாவிலும் நேபாளத்திலும் கிடைத்துள்ளன. இவைகள் பாலித் திருமுறைகளிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன.

ஆனால், இரண்டும் ஒரே மூலத்தை ஆதாரமாகக் கொண்டு பிறந்தன என்று தோன்றுகிறது. பாலித் திருமுறைகளிலுள்ள நிகாயங்களும் வடமொழியில் ஆகமங்கள் என்ற பெயரால் அமைந்துள்ளன. உதாரணமாக, தீக நிகாயம், மஜ்ஜிம நிகாயம், ஸம்யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம் என்பன முறையே தீர்க்காகமம், மத்திமாகமம், ஸம்யுக்தாகமம், ஏகோத்தராகமம் என்ற பெயரால் வழங்குகின்றன. இவ் விருமொழியிலுமுள்ள திருமுறைகள் பல அம்சங்களில் வேறுபடினும், இவைகளெல்லாம் ஒரே மூலத்தினின்று வந்தன என்று புலப்படுகிறது. க்ஷுத்ரக நிகாயம் என்பதும் வடமொழியிலுண்டு. இதன்கண் பாலியிலுள்ள குத்தக நிகாயத்தில் அடங்கிய நூல்கள் அனைத்தும் உளவோ என்று தெரியவில்லை. ஆனால் உதானம், தர்மபதம், ஸ்தவிர காதை, விமான வஸ்து, புத்தவம்சம் முதலியன வடமொழியிலும் உண்டு. இதிவுத்தகம் சுமார் கி. பி. 650-ல் ஹியூன் த்ஸாங் என்பவரால் சீனத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. வடமொழியில் ஜாதகங்கள் இருந்தன என்பதும் உறுதியே.

ஹீனயானத்தைச் சார்ந்த மூல ஸர்வாஸ்தி வாதியர்களால் மிகச் சிறந்ததாகக் கொண்டாடப்படுவது மஹாவஸ்து ; மஹாவஸ்து அவதானம் என்றும் இது வழங்கும். இது மகா சங்கிகர்களில் லோகோத்தர வாதிகளுக்குரிய விநயபிடகத்து நூல் என்று சொல்லப்படுகிறது. இப்பெயரால், பௌத்த சமயத்தில் கொள்கை வேறுபாடு பிறந்தமையை இந்நூல் உணர்த்துகிறது என்று அறியலாம்.

இந்நூல் புத்தரது வரலாற்றினையே பொருளாகக் கொண்டது. ஆனால், இவ்வரலாற்றின் இடையிடையே பல ஜாதகங்களும், அவதானங்களும், கொள்கை பற்றிய சூத்திரங்களும் சேர்ந்துள்ளன. எனவே, புத்தர் வரலாறு ஆற்றொழுக்கிற் செல்லுகிறது என்று சொல்ல முடியாது. அமைப்பு முறையும் சரியாக இல்லை. ஒரே கதை இரண்டு மூன்று இடங்களில் வருகிறது. உதாரணமாக, புத்தர் பிறப்பு நான்கு முறை கூறப்படுகிறது. மொழி நடையிலும் ஒற்றுமை காணப்படவில்லை. இவ்வாறமைந்துள்ள போதிலும், இந்த நூல் மிகமிக முக்கியமானதேயாகும். ஏனென்றால், இதில் பூர்வகாலத்து வழங்கிய வரலாறுகளும், பரம்பரை வரலாற்றுக் கதைகளும், பாலித்திருமுறையிலுள்ளபடி மூலபாடமும் இதிலுள்ளன. அன்றியும், இதனை ஜாதகக் கதைக் கருவூலம் என்று கூறலாம். வேறு பல கதைகளும் இக்கருவூலத்திற் காணப்படுகின்றன. ஆனால், பாதிக்குமேல் ஜாதகக் கதைகளேயாம். சியாமக ஜாதகம், தசரதன் இறக்கும் தருவாயில் கூறிய கதையையேயாம் (II, 209).

ரிஷிய சிருங்கர் கதை நளினியின் சரித்திரமாக இதில் (III, 143) கூறப்படுகிறது. ஆனால், பாலி ஜாதகத்தில் இல்லாத பல ஜாதகங்களும் வரலாறுகளும் இதில் உள்ளன. உதாரணமாக, அர்க்கன் என்னும் அரசன் எண்பதினாயிரம் குகைக் கோயில்கள்[1] அவன் காலத்துப் புத்தருக்கு அளித்ததாகச் சொல்லப்படுகிறது. குயவனாகப் போதிஸத்துவர் பிறந்தபொழுது, அவர் உயிர்க் கொலை செய்யாது, சந்திகளில் பாண்டங்களை வைத்து, அவற்றில் அரிசி, பயறு முதலியவைகளை நிரப்பிப் பசியால் வருந்தியவர்களுக்குக் கொடுத்தனர். இவர் தமது வீட்டில் வேய்ந்திருந்த வைக்கோலைத் தமது பெற்றோர்கள் புத்தருக்குக் கொடுத்து விட்டனர் என்ற செய்தி தெரிந்து ஒரு மாதம் இன்புற்று மகிழ்ந்தனராம்.

சில கதைகள் இந்து சமயத்திற்குரிய புராணங்களை நமக்கு நினைவூட்டுகின்றன. புராணங்களிற் போலவே நரக விவரணங்கள்,உலகத் தோற்றம் முதலியன விவரிக்கப்படுகின்றன. ரக்ஷித என்னும் ரிஷியாகப் போதி ஸத்துவர் பிறந்தபொழுது பல அற்புதச் செயல்களைச் செய்தனராம் ; சந்திரனையும் சூரியனையும் தமது கையால் தொட்டு விட்டனராம். இங்கெல்லாம் மஹாயானத்திற் சிறப்பாக மதிக்கும் அற்புதச் செயல்களைக் காணலாம். புத்தர் ஸராவஸ்தியில் மக்களைப் பீடித்துக் கொண்டிருந்த கொள்ளை நோயை அகற்றியபிறகு தேவர்கள் முதலியோர் அவருக்குக் குடைகள் பிடித்தனராம். தேவர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடையிலே புத்தர் அமர்ந்துள்ளார் என்று நினைக்கும்படியாக, ஒவ்வொருவரது குடையிலும் ஒரு புத்தர் இருக்குமாறு தமது மந்திர சக்தியால் இவர் செய்தனராம். இக்கதைகள் வரும் பகுதிக்குச் சத்திரவஸ்து என்று பெயர்.

இம் மகாவஸ்து ஹீனயானத்திற்கு உரியதாயிருப்பினும், மஹாயானத்து அம்சங்களிற் பலவும் இதிற் காணப்படுகின்றன. உதாரணமாக, போதி ஸத்துவர் செல்லவேண்டிய பத்து வகையான நிலைகளும் இதில் உள்ளன. இவற்றைத் தசபூமிகள் என்பர். இதில் ஹூணர்கள் குறிக்கப்படுகிறார்கள்; சீன மொழியும், சீன எழுத்துக்களும் குறிக்கப்படுகின்றன ; நிமித்திகர் 'ஹோரா-பாடகர்' என்று அழைக்கப்படுகிறார்கள். இக் காரணங்களால் கி. பி. 4-ம் நூற்றாண்டில் இது பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளலாம். இக் காலத்திற்குப் பிற்பட்ட பிற்சேர்க்கைகளும் இதில் காணப்படுகின்றன என்பர்.

1. கோச்செங்கட் சோழன் சரித்திரம் இங்கே அறியத்தக்கது.

**லலித விஸ்தரம்**

மகாவஸ்து ஹீனயானத்தைச் சார்ந்தது. ஆனால் மஹா யானத்திற்குரிய சில இயல்புகளும் அதில் காணப்படுகின்றன. லலித விஸ்தரம் மஹாயானத்திற்குரிய மூல நூல்களில் மிகச் சிறந்த புண்ணிய நூலாகக் கருதப்படுகிறது. இதற்கு வைபுல்லிய சூத்திரம் என்றும் ஒரு பெயருண்டு. வைபுல்லியம் என்றால் மிக விரிந்தது என்று பொருள். இங்ஙனமாக மஹாயானத்தை இது சார்ந்ததா யிருப்பினும், தொடக்கத்தில் ஹீனயானத்து ஸர்வாஸ்திவாதிகள் போற்றிய முறைப்படியே புத்தர் வரலாறு இதில் காணப்படுகிறது. லலித விஸ்தரம் என்பது லீலைகள் பற்றிய விரிந்த சரித்திர நூல் என்று பொருளாகும். (புத்தராகிய) பரம்பொருளின் லீலை என்று குறிப்பிடப்படுதலினால் மஹா யானக் கருத்தோடு இது பொருந்துவதாதல் காணலாம். இதில், முதன் முதலாகப் புத்தர் வருணனை காணப்படுகிறது. அவருடைய பேரொளி எங்கும் விளங்குகிறது. அவரைச் சூழ்ந்து பன்னீராயிரம் துறவிகளும் முப்பத்தீராயிரம் போதி ஸத்துவர் களும் விளங்குகிறார்கள். இப் போதி ஸத்துவர்களுக்கு இன்னும் ஒரே ஒரு பிறப்புத்தான் உண்டு; போதி ஸத்துவர்களுக்குரிய இயல்புகளெல்லாம் இவர்களிடம் நிரம்பிக் காணப்படுகின்றன.

புத்தர் நடுநிசியில் தியானத்தில் அமர்ந்திருக்கின்றார். அவருடைய தலையின் வகிரினின்று ஒளிக் கதிர் ஒன்று புறப் பட்டுத் தெய்வலோகங்கள் அனைத்திலும் சென்று தேவர்களைக் குதூகலிக்கச் செய்கின்றது. தேவர்கள் புத்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள். ஈசுவரன் முதலிய கடவுளர்கள் புத்தர் முன்பு வந்து அடிபணிந்து உலகம் உய்யும் வண்ணம் லலித விஸ்தரம் என்ற வைபுல்லிய சூத்திரத்தை அருளிச்செய்ய வேண்டும் என்று இரந்து கேட்கிறார்கள். இந்த மூல நூலின் பெருமையைக் குறித்தும் பலவாறாகப் புகழ்கிறார்கள். புத்தர் மௌனமாக இருந்து, தமது சம்மதத்தைக் குறிப்பிக்கின்றார். இவ் விஷயங்கள் முதல் அத்தியாயத்தில் மிக மிக விரிவாகச் சொல்லப்படுகின்றன. இதன் பின்புதான் புத்தரது வரலாறு உணர்த்தப்படுகிறது.

புத்தர் துஷித லோகத்தில் தங்கியிருக்கின்றனர். அவருக்கு நூற்றுக்கு மேற்பட்ட திருநாமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. துஷித லோகத்தில் அவர் வாழ்ந்த அரண்மனையும் பன்னிரண்டுக்குமேல் பெயர்கள் பெறுகின்றது. 84,000 முரசுகள் ஒலிக்க உலகம் உய்யும் பொருட்டுப் பூமியில் அவதரித்தருளுதல் வேண்டும் என்று அவர் அழைக்கப்படுகின்றனர். எந்த அரச குடும்பத்தில் தாம் பிறக்க வேண்டும் என்று தீர்க்கமாக ஆலோசனை செய்யப்படுகிறது. முடிவில் சுத்தோதனனது

வமிசத்தில் அவனுடைய தேவி மாயா தேவியின் வயிற்றில் உதிப்பது என்று போதி ஸத்துவர் துணிகின்றார். மாயா தேவியின் அழகு முற்றும் வருணிக்கப்படுகிறது. பதினாயிரம் யானைகளின் வலிமையை அவள் கொண்டுள்ளாள். ஆதலால், புத்தரைப் பொறுத்தற்குரிய தகுதியுடையவள் அவளே என்று கருதப்படு கிறது.

தேவர்கள் அவள் பிரசவித்தற்குத் தக்கபடி ஒரு தெய்விகக் கோயில் அமைத்தனர். அவளுடைய கர்ப்பத்திலே மணிகளால் இழைத்த அரண்மனை ஒன்றையும் நிருமித்தனர். அந்த அரண் மனையில் அவருக்கு மென்மையான ஆசனம் ஒன்றும் வைக்கப் பெற்றது. அவரது திருமேனியினின்றும் புறப்பட்ட அழகின் ஒளி எங்கும் பரந்து செல்லுகிறது. பல காவத தூரம் மாயா தேவியின் சரீரத்தினின்றும் ஒளி பரவிச் செல்லுகிறது. அவள் தனது கர்ப்பத்தைப் பார்க்குந்தோறும் கண்ணாடியில் தனது முகத்தை ஒருவன் தெளிவாகப் பார்ப்பதுபோலப் போதி ஸத்துவர் விளங் கினார். கர்ப்பத்திலிருக்கும்போதே தேவர்களுக்கு உபதேசங்கள் செய்து வந்தனர். பிரமன் அவர் குறிப்பறிந்து ஒழுகி வந்தான்.

புத்தர் உலும்பினி வனத்தில் பிறக்கும் பொழுதும் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. பிறக்கும் பொழுதே முற்றறிவுடைய மகாபுருஷனாக அவர் தோன்றினர். தம் பெருமையை விளக்கு தற்குத் திசைகள் ஒவ்வொன்றிலும் ஏழு அடிகள் நடந்து சென்றனர். அப்பொழுது அடியெடுத்து வைக்குந் தோறும் அவரது பாதத்தின்கீழ்த் தாமரை மலர்கள்[1] தோன்றி ஒளிர்ந்தன. இந்த இடத்தில் ஆனந்தருக்கும் புத்தருக்கும் நிகழ்ந்த சம்பாஷணை குறிக்கப்படுகிறது. இதில் புத்தரது அற்புதப் பிறப்பை நம்பாதவர்கள் இழித்துரைக்கப் படுகிறார்கள்; புத்தரை நம்புவது என்பது பௌத்த சமயத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாய் உணர்த்தப்படுகிறது. முன்புள்ள நூல்களில் காணும் வரலாறுகளில் இவ்வளவு விரிவான அற்புதங்கள் காணப்பெற வில்லை.

இங்ஙனமே வேறிரண்டு முக்கியமான செய்திகளும் லலித விஸ்தரத்தில்தான் முதன் முதல் காணப்படுகின்றன. போதி ஸத்துவரை அவருடைய செவிலித்தாய் ஆலயத்திற்கு இட்டுச் சென்றதும், அங்கே விக்கிரகங்களில் அமைந்த தெய்வங்கள் அனைத்தும் தங்கள் பீடத்திலிருந்து எழுந்து அவரை அடி வணங்கியதும் ஒரு செய்தி. மற்றொரு செய்தி போதி ஸத்துவர்

1. 'மலர்மிசை ஏகினான்' என்ற திருக்குறள் இங்கே நோக்குதற்குரியது. அருகக் கடவுள் பற்றியும் இவ்வாறு கூறப்படுகிறது.

முதன் முதலாகப் பள்ளிக்கூடம் சென்றதைப் பற்றியது. 'பதினாயிரம்' சிறுவர்கள் உடன் செல்ல, வாத்திய கோஷங்களோடு, தெய்வங்கள் அனைத்தும் சூழ்ந்து வர, எண்ணாயிரம் தெய்வ மகளிர்கள் மலர் தூவி முன்செல்ல, போதி ஸத்துவர் பள்ளிக்கூடம் செல்லுகின்றார். அங்கேயிருந்த ஏழை உபாத்தியாயரால் போதி ஸத்துவரது கீர்த்தி ஒளியைத் தாங்க முடியவில்லை; பூமியில் விழுந்து விடுகிறார். ஒரு தெய்வம் உபாத்தியாயரைக் கைகொடுத்து எழுப்பி, அமைதியுறச் செய்து, 'போதி ஸத்துவர் எல்லாம் அறிந்தவர்; உம்மிடத்திலிருந்து அறிய வேண்டுவது ஒன்றுமில்லை. என்றாலும், உலக முறைக்கு ஒப்பப் பள்ளிக்கூடம் வந்திருக்கிறார்' என்று உணர்த்துகிறது. பின்னர், போதி ஸத்துவர் உபாத்தியாயரை நோக்கி, அறுபத்து நான்கு வகை லிபிகளுள் எந்த லிபியைத் தமக்குக் கற்பிக்க ஆசிரியர் விரும்புகிறார் என்று கேட்கிறார். அதன் பின், அவரே அந்த லிபிகள் அனைத்தையும் வரிசையாகச் சொல்லுகிறார். அவ் வரிசையில் சீனம், ஹூணம், பெயர்போலும் ஆசிரியர் அறியாத பலவகை லிபிகள் அடங்கியிருந்தன. முடிவில் ஆசிரியர் பதினாயிரம் சிறுவர்களுக்கும் லிபியைக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினர். ஆனால், ஆசிரியர் ஒவ்வோர் எழுத்தையும் சொல்லும் போதும், போதி ஸத்துவர் அந்த எழுத்திலே தொடங்குகிற அறிவுரை ஒன்றைக் கூறிவந்தனர்.

லலித விஸ்தரத்தில் 12, 13-ம் அத்தியாயங்களில், புத்தர் வரலாறு கூறும் பிற நூல்களில் காணப் பெறாத சில செய்திகளைக் கொண்டு உள்ளது. 14-முதல் 16-வரையுள்ள அத்தியாயங்களிற் காணும் வரலாற்றில் வேறுபாடுகள் பெரும்பாலும் இல்லை. இவற்றில் மூப்பு, பிணி, மரணம் முதலியவற்றை முதன் முதல் கோதம போதி ஸத்துவர் கண்டதும், பின்னர் உலகத்தைத் துறந்ததும், அரண்மனையிலிருந்து தப்பியோடிச் சென்றதும், பிம்பிசார அரசனைச் சந்தித்ததும், துறவொழுக்கங்களைக் கோதமர் பின்பற்றியதும், மாரனோடு முரண்பட்டதும், முடிவில் ஞானோதயம் உண்டாகியதும், பிரமாவின் வேண்டுகோளின்படி தர்மோபதேசம் செய்ததும் கூறப்படுகின்றன. இறுதியிலுள்ள 18-ம் அத்தியாயத்தில் லலித விஸ்தரத்தின் அளவிலாப் புகழும் பெருமையும் விளக்கப்படுகின்றன. அதனைப் போற்றி உலகிற் பரப்பச் செய்பவர்கள் அடையும் பெரு நலன்களும் விவரிக்கப்படுகின்றன.

இந்நூல் எப்போது எழுதி முடிவு பெற்றது என்பது தெரியக் கூடவில்லை. கி. பி. முதல் நூற்றாண்டில் இது சீனத்தில் மொழி பெயர்க்கப் பெற்றது என்று முன்பு தவறாகக் கருதப்பட்டது.

கி. பி. 308-ல் தர்மரக்ஷர் சீன மொழியில் மொழி பெயர்த்த புத்த சரித்திரம் இந்நூல்தான் என்பதில் பெரிதும் ஐயப்பாடு உண்டு. திபெத்து மொழிபெயர்ப்பு வடமொழி நூலை அடியொற்றி யுள்ளது; ஆனால், அது கி. பி. 9-ம் நூற்றாண்டில்தான் தோன்றியது. ஜாவாவில் போர புதூர்க் கோயிலில் கி. பி. 850 முதல் 900-வரை சித்திரம் அமைத்த ஓவியர்களுக்கு இந்நூல் தெரிந்திருந்தது எனக் கருதலாம். அசோகன் காலத்துப் பௌத்த ஓவியங்களில் புத்தப் படிமம் காணப் பெறவில்லை; தர்ம சக்கரம் தான் காணப்படுகிறது. பிற்பட்டு வந்த காந்தார சிற்பத்தில் புத்தப் படிமம் தோன்றியுள்ளது. லலிதவிஸ்தரத்திற் கண்ட புத்தர் வரலாற்றுக் கதைகளையும் இச் சிற்பிகள் அறிந்திருந் தனர். இதனால், இடைப்பட்ட காலத்தில் புத்த வணக்கம் தோன்றியிருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். எனவே, புத்தர் வரலாறு கூறும் மஹாயான நூல்களில் மிகப் பழமை யானவை கி. பி. முதல் 2 நூற்றாண்டுகளில் தோன்றியவை என்று கொள்ளலாம்.

லலித விஸ்தரத்தில் மிகப் பழைய செய்திகளும், பல நூற் றாண்டுகளுக்குப் பிற்பட்டு எழுந்த நூதனச் செய்திகளும் காணப் படுகின்றன. பாலி நூல்களோடு ஒத்திருக்கும் பகுதிதான் மிகப் பழமையானவை. புத்தரைப் பற்றிய வரலாறு எப்படி வளர்ந்து வந்திருக்கிறது என்பதை இந்நூலால் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு சமய வரலாற்று உணர்ச்சிக்கு இது பயன்படுவதோடு, இலக்கிய வரலாற்றிலும் இது ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. இதனைப் புத்தரைப் பற்றிய மகா காவியம் என்று சொல்லுதல் சரியன்று. ஆனால், மகாகாவியத்திற்கு வேண்டும் பொருள்கள் பலவும் இதிற் காணப்படுகின்றன. இதன் பழம் பகுதியில் பல வரலாற்றுப் பாடல்கள் சேமித்து வைக்கப் பெற்றுள்ளன. அப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு அஸ்வகோஷர் புத்த சரித்திரம் என்ற மகா காவியத்தை இயற்றி யுள்ளார்.

**புத்த சரித்திரம்**

வடமொழி இலக்கிய ஆசிரியர்களுள் **அஸ்வகோஷர்** மிகச் சிறந்தவர்; காளிதாஸர்க்கு முந்திய கவிஞர்களுக்குள் மிக முக்கிய மானவர். இவர் காவியம், நாடகம், சாஹித்தியம் இவற்றின் சிருஷ்டி கர்த்தா. இவ்வளவு சிறந்தவராயிருந்தும், இவரது வாழ்க்கையைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவரது ஆசிரியர் பார்ஸ்வர் அல்லது அவரது மாணாக்கர் புண்ணிய யஸஸ் என்று தெரிகிறது. மகாயானத்தை ஸ்தாபித்தவர்களுள் இவர் ஒருவர் என்று கணிக்கப்படுகிறார். சீன மொழியிற் காணும் பௌத்த

ஆசிரியர் பரம்பரையில் பார்ஸ்வருக்கும் புண்ணிய யஸஸுக்கும் பிற்பட்டு, நாகார்ஜுனருக்கும், ஆரிய தேவருக்கும் முற்பட்டு, இவர் பெயர் காணப்படுகிறது. 2-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கனிஷ்க அரசன் காலத்தவர் என்றும் சொல்லப்படுகிறது. இவ்வரசனுக்கு வைத்தியராயிருந்த சரகருக்கு இவர் ஞான ஆசிரியர் என்றும் சீன நூல்கள் கூறுகின்றன. இவர் முதன்முதலில் ஸர்வாஸ்தி வாதத்தைச் சார்ந்திருந்து, பின்னர் புத்த பக்தியில் பெரிதும் ஈடுபட்டனர் என்று தெரிகிறது.

இவர் பிறந்த இடம் அயோத்யா என்று வழங்கும் சாகேதம் ஆகும். ஒரு சிலர் வாரணாசி என்றும், வேறு சிலர் பாடலி புத்திரம் என்றும் சொல்லுவர். இவரது தாயின் பெயர் சுவர்ணாக்ஷி. பல கலைகளிலும் இவர் வல்லவராயிருந்தனர். சங்கீதத்தில் மிகச் சிறந்து விளங்கினர் என்பர். பல பாடகர்களும் பாடகிகளும் தம்மைத் தொடர்ந்து வரத் தெருவீதிகளில் கீர்த்தனைகள் பாடி வந்தார் என்றும், இவ்வாறாகத் தமது சமயத்தைப் பலரும் தழுவும்படி செய்தனர் என்றும் சொல்லப் படுகிறது. கி. பி. 671 முதல் 695-வரை இந்தியாவில் பிரயாணம் செய்து வந்த இ-த்சிங் என்ற சீன யாத்ரிகன் நாகார்ஜுன தேவர், அஸ்வகோஷர் என்பவர்களைப் பழங்காலத்தவர்களாகக் கூறுகிறான். இந்த அஸ்வகோஷர் தொகுத்த சமய நூல்களைக் குறித்தும், இவர் இயற்றிய பாடல்கள், சூத்திராலங்காரம், புத்த சாரம் என்பவற்றைக் குறித்தும் இந்த யாத்ரிகன் குறிப்பிடு கிறான்.

புத்த சரிதம் இ-த்சிங் கூறுகிறபடி மிக விரிந்த நூல். கோதம ருடைய முக்கிய கொள்கைகளையும், அரண்மனையிலிருந்து வெளியேறி, ஆலின்கீழ் அமர்ந்து நிர்வாணமடைந்த காலம் வரையுள்ள நீண்ட ஆயுட் காலத்தில் அவர் இயற்றிய செயல் களையும் இந்நூல் விவரித்துக் கூறுகிறது. இந்தியாவின் ஐந்து பகுதிகளிலும் தென் கடலிலுள்ள தேசங்களிலும் இந்நூல் ஓதப் பட்டு வந்தது என்றும் கூறப்படுகிறது.

இக்கூற்றிலிருந்து சீன மொழிபெயர்ப்பின்படியே அமைந்த மூலநூலை இ-த்ஸிங் பார்த்துள்ளான் என்று விளங்குகிறது. சீன மொழிபெயர்ப்பில் 28 அத்தியாயங்கள் உள்ளன; பௌத்த நிர்வாணம் வரையுள்ள சரித்திரம் அதிலடங்கியுள்ளது. திபெத் மொழிபெயர்ப்பும் இவ்வாறே உள்ளது. ஆனால், இப்போதுள்ள வடமொழி நூலில் 17 அத்தியாயங்களே உள்ளன. வாரணாசியில் இவர் மதப் பிரவர்த்தனம் செய்தது வரையுள்ள பகுதிதான் அகப்படுகிறது. ஆதலால், இவ்வடமொழி நூல் மூல நூலின் ஒரு பகுதியே என்று நாம் துணியலாம். இப் பதினேழு அத்தியாயங்

களிலும் முதல் 13 அத்தியாயங்களே மிகப் பழமையானவை. எஞ்சியுள்ள அத்தியாயங்கள் 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அமிர்தானந்தர் என்பவரால் இயற்றப்பட்டவை.

இப்போது கிடைக்கும் பகுதியினின்றும் இவ் ஆசிரியரது கவிதைத் திறம் நன்றாக விளங்குகிறது. உண்மையான பௌத்த காவியம் ஒன்று முதன் முதலாக நமக்கு இவரால்தான் கிடைத்தது என்னலாம். ஒரு சில இடங்களில் பாணினியின் இலக்கண விதிகளோடு முரண்பட்டிருப்பினும், இவரது மொழி நடையில் பிழை என்பது இல்லை. இந்நூலை மகா காவியம் என்று அதுவே கூறுகிறது. ஆதியில் தோன்றிய காவியம் வால்மீகி இயற்றிய இராமாயணமாகும். வால்மீகியை அடுத்து வந்தவரே அஸ்வகோஷர். இவ்விருவரும் காளிதாஸரும் ஒரு நெறியையே பின்பற்றியிருக்கின்றனர். இவர்கள் அலங்காரங்களை மிகுதியாகக் கையாளவில்லை.

மொழியிலும் நடையிலும் அஸ்வகோஷர் மிதமாக இருப்பது போலவே, புத்தர் வரலாற்றிலுள்ள அற்புதங்களைச் சொல்லுமிடத்தும் மிதமாக அடங்கிச் சொல்லுகின்றார். லலித விஸ்தரத்திற்காணும் உயர்வு நவிற்சி இவரது நூலில் இல்லை. மகா வஸ்துவிலும் லலித விஸ்தரத்திலும் நூற்பொருள்கள் பலவாறாக மயங்கிக் கிடக்கின்றன. புத்த சரிதத்தில் அவ்வாறு இல்லை. அழகான முறையைப் பின்பற்றி இது எழுதப்பட்டுள்ளது. பழஞ் சரிதக் கூறுகளைப் புதிய கவிதையமைப்பில் இவர் வெளியிட்டிருக்கின்றார். அஸ்வகோஷர் ஒரு துறவி என்பதைக் காட்டிலும் ஓர் உண்மைக் கவிஞர் என்பதுவே மிகவும் பொருத்தமாகும்.

மூன்றாம் ஸர்க்கத்திலும் நான்காம் ஸர்க்கத்திலும், கோதமர் அரண்மனைவிட்டு வெளியே செல்லும் காட்சி கவிதை முறையில் வெகு அழகாகவும் இனிமையாகவும் இவரால் வருணிக்கப்பட்டுள்ளது. நகரத்து மகளிர்கள் அரச குமாரரது புறப்பாட்டினைத் தெரிந்து உப்பரிகைகளிலும் ஜன்னல்களிலும் நின்று பார்க்கும் காட்சி வருணனை மிக்க இன்பம் பயப்பது. இவ் வருணனையைக் காளிதாஸர் தமது ரகுவம்சத்தில் (vii, 5-12) எடுத்தாண்டுள்ளார். இவ்வருணனையிலுள்ள ஓர் அழகிய செய்யுட் கருத்தைக் கம்பனும் கூறியுள்ளான். கம்பனது செய்யுள் வருமாறு :

நீளெழுத்தொடர் வாயிலிற் குழையொடு நெகிழ்ந்த;
ஆளகத்தினோ டரமியத் தலத்தினும் அலர்ந்த;
வாளரத்தவேல் வண்டொடு கெண்டைகண் மறுகச்
சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்.

(அயோத். மந்திரம். 56)

பெருங் காப்பியங்களுக்குரிய லக்ஷணங்களெல்லாம் புத்த சரிதத்தில் நிரம்பியுள்ளன. புத்தரை மயக்குதற் பொருட்டு அழகிய மகளிர்கள் முயலும் காதற் காட்சியும் அரண்மனையில் காம லீலை புரிந்துவரும் பெண்களது நிலையைக் கண்டு அருவருப்புற்றுப் புத்தர் வெளியேறும் காட்சியும் மிக ரசமாக வருணிக்கப்பட்டுள்ளன. பிற்கூறிய காட்சியில் காம சாஸ்திரத்தில் இவர் வல்லவர் என்பதை அறிகிறோம். இங்ஙனமே நீதி சாஸ்திரக் கொள்கைகளும் போர் வருணனைகளும் இதன்கண் காணலாம்.

ஸௌந்தரானந்த காவியம் என்ற ஒரு காவியத்தையும் அஸ்வகோஷர் இயற்றியுள்ளார். இதுவும் புத்த சரித்திரம் பற்றியதே. புத்தரது சகோதரனான நந்தன் தன் காதல் மனைவியை இழந்து துன்புற்று வருந்த, அவனைத் தமது தருமோபதேசத்தால் துறவியாகும்படி செய்த வரலாறே இதன்கண் கூறப்படுவது.

இரண்டு காவியங்களிலும் ஹீனயானக் கொள்கைகளே முக்கியமாகக் காணப்படுகின்றன. ஆனால், அங்கங்கே மஹாயானத்தின் சாயையும் காணக்கிடக்கின்றது. புத்தரைச் சுயம்பு என்றும், தர்ம சக்கரவர்த்தி என்றும் புத்த சரிதம் கூறுகிறது. உயிர்களது நன்மையின் பொருட்டு மஹாயானத்தைப் புத்தர் அடைந்ததாகவும் இது கூறுகிறது. உடம்பை அனற்பதமான சூனியம் என்றும் வருணிக்கிறது. அஸ்வகோஷர் மஹாயானத்தின் தொடக்க காலத்தில் இருந்தவர் என்று ஊகிக்கலாம்.

இவ்விரு காவியங்களிலும் வைதிகக் கதைகளும், இதிஹாஸக் கதைகளும் பல குறிப்பிடப்படுகின்றன. இதனால், இவர் அந்தண வகுப்பைச் சார்ந்தவர் என்ற பரம்பரை வரலாறு உண்மையாகலாம்.

இவ்விரண்டையும் தவிர, வஜ்ரஸூசி என்ற ஒரு நூலும் இவர் இயற்றியதாகக் கூறுவதுண்டு. இதில் நால்வகை வருணங்களும் மிகவும் கண்டித்துக் கூறப்படுகின்றன. ஆனால், இந்நூல் அஸ்வகோஷரால் இயற்றப்படவில்லையெனப் பல அறிஞர்களும் முடிவுகட்டியுள்ளார்கள்.

கந்தீ-ஸ்தோத்திர-காதா என்ற பாடலும் இவர் இயற்றியதாகும். சீன மொழிபெயர்ப்புத்தான் இதற்கு உண்டு. அம்மொழிபெயர்ப்பினை ஆதாரமாகக்கொண்டு ஸம்ஸ்கிருத மூலத்தை ஓர் அறிஞர் நிர்மித்துள்ளார்.

அஸ்வகோஷர் ஸாரீபுத்ரப் பிரகரணம் என்ற ஒரு நாடகத்தையும் இயற்றியுள்ளார். இதிலிருந்து ஒரு சிறு பகுதியே இப்பொழுது அகப்படுவது. இதன் ஆசிரியர் சிறந்த நாடக ஆசிரியர் என்பதை இது புலப்படுத்துகிறது.

**கல்பநாமண்டி-டிகை**

சீன ஆசிரியர்கள் சூத்திராலங்காரம் என்ற ஒரு நூலையும் அஸ்வகோஷர் எழுதியதாகக் கூறுவர். இந்நூல் குமாரஜீவர் என்பவரால் சுமார் கி. பி. 405-ல் சீனத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. உண்மையில் இந்நூல் அஸ்வகோஷர் காலத்தில் இளைஞராயிருந்த குமாரலாதர் என்பவர் எழுதியதாகும். இந் நூலின் வடமொழிப் பெயர் 'கல்பநாமண்டி - டிகை' என்பது; 'கல்பநாவலங்கிருதிகை' என்றும் இதனை வழங்குவர். ஜாதகக் கதைகளையும் அவதானக் கதைகளையும் போன்று, பக்திக் கதைகள் சிலவற்றின் தொகுப்பே இந்நூல். உரையும் பாட்டும் விரவிய நடையில் இது அமைந்துள்ளது. தீர்க்காயுவின் கதை, சிபியின் கதை முதலியன இதில் உள்ளன.

**மஹாராஜ கனிக லேகை**

குமாரலாதர் ஸௌராந்திக மதத்தை ஸ்தாபித்தவர் என்றும், தக்ஷஸிலையினின்று வந்தவர் என்றும், ஹியூன்-த்ஸாங் கூறுகிறார். சீனர்கள் குமாரலாதர் செய்த நூலை அஸ்வகோஷருக்கு ஏற்றியதுபோல, மாத்ரு சேதர் இயற்றிய சில கவிதைகளை அஸ்வகோஷருக்கு ஏற்றினர். மாத்ருசேதரைக் கனிஷ்கன் என்னும் அரசன் தனது ஆஸ்தானத்திற்கு அழைத்தனன் என்றும், அவர் தமது முதுமையின் காரணமாக வர இயலாது என்று கூறி, 85 வாயுறைச் செய்யுட்கள் அடங்கிய கடிதம் ஒன்று அனுப்பினர் என்றும் கூறப்படுகிறது. இக்கடிதத்திற்கு 'மஹாராஜ கனிக லேகை' என்று பெயர். கி. பி. 7-ம் நூற்றாண்டினரான இ-த்சிங் இந்தியாவிற்கு வந்த காலத்தில் மாத்ருசேதர் புகழ்மிக்க பெரும் புலவர் எனக் கருதப்பட்டனர். அவருடைய புத்த ஸ்தோத்திரங்கள் நாட்டில் எங்கும் பரவியிருந்தன. சதுஸ் ஸதக (400) ஸ்தோத்திரமும், சத பஞ்சாஸதக (150) ஸ்தோத்திரமும் இப்பொழுதும் மிகவும் கொண்டாடப்படுகின்றன. அவற்றிலிருந்து சிற்சில பகுதிகளே நமக்கு இப்போது கிடைக்கின்றன.

இக்காலத்தே வைபாஷிக ஆரியசந்திரர் என்பவர் வாழ்ந்து தமது மைத்திரேய வியாகரணம் அல்லது மைத்திரேய ஸம்ஹிதை என்ற நூலை இயற்றினர். இந்நூலின் அரைகுறைப் பகுதியே இப்போது அகப்படுவது. ஆனால், சீனமொழியிலும், திபெத் மொழியிலும், மத்திய ஆசிய மொழிகளிலும் இது பலமுறை

மொழி பெயர்க்கப்பட்டது. புத்தர்க்கும் ஸாரீபுத்ரருக்கும் நிகழ்ந்த சம்பாஷணை மூலமாகப் புத்த மைத்திரேயர் அவதாரமும், அவரது பிறப்பு, தோற்றம் முதலியனவும் இதில் கூறப்படுகின்றன.

ஸூரர், ஆர்யஸூரர் இயற்றிய 'ஜாதகமாலை' கல்ப நாமண்டி - டிகையைப் பெரிதும் ஒத்திருக்கிறது. பல ஜாதகக் கதைகள் உரையும் பாட்டும் விரவிய அலங்கார நடையில் இதில் கூறப்படுகின்றன. இதில் 34 ஜாதகங்கள் உள்ளன. போதி ஸத்துவரது பாரமிதைகளை விளக்குதற் பொருட்டு இவை எழுந்தன. பாலி மொழியிலுள்ள ஜாதகக் கதைகளில் காணப் பெறாத கதைகளும் இதில் உண்டு.

உலகுமிக மனந்தளர்வுற் றுயர்நெறியோர் நெறியழுங்கப்
புலவுநசைப் பெருஞ்சினத்துப் புலிக்குடம்பு கொடுத்தனையே
(வீரசோ. யாப்பு. 11-உரை)

என்ற செய்யுளிற் காணும் கதை இவைகளுள் ஒன்றாகும். இவர் கி. பி. 4-ஆம் நூற்றாண்டினர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

'பத்ய சூடாமணி' என்ற ஒரு நூல் புத்த சரிதத்தின் ஒரு பகுதியைக் கூறுகிறது. இந்தக் காவியம் புத்த கோஷர் என்ற ஒருவர் இயற்றியதாகக் கூறப்படுகிறது. ஆனால், இவர் புகழ் பெற்ற உரைகாரர் ஆகிய புத்த கோஷர் அல்லர்.

**அவதான இலக்கியங்கள்**

ஜாதக மாலைக்கு 'போதி ஸத்துவாவதான மாலை' என்ற ஒரு பெயரும் உண்டு. ஜாதகக் கதைகள் போதி ஸத்துவரைக் கதாநாயகராகக் கொண்ட அவதானங்களேயாம். கல்பநாமண்டி-டிகையும் ஜாதக மாலையும் பெரிதும் ஒற்றுமையுடையன.

'அவதானம்' என்ற சொல்லிற்குச் செயற்கருஞ் செயல் என்று பொருள். இந்த அருஞ் செயல்களுள் உயிரை அர்ப்பணம் செய்தலும், வாசனைத் திரவியங்கள், பூக்கள், தைலங்கள், பொன், மணிகள் முதலியன கொடுத்தலும், ஸ்தூபங்கள் சைத்தியங்கள் முதலியன இயற்றுதலும், அடங்கும்.[1] அவதானத்தில் நிகழ்காலக்கதை ஒன்றும், பூர்வகாலக் கதை ஒன்றும் இவற்றால் விளங்கும் நீதியும் புலப்படும். பூர்வகாலக் கதையின் நாயகன் போதி ஸத்துவராயிருந்தால் இந்த அவதானக் கதையை ஜாதகம் என்பர். பூர்வகாலச் சரிதக் கதைக்குப் பதிலாக, வருங்காலச்

1. குங்கிலியக் கலய நாயனார், எறிபத்த நாயனார் இவர்களுடைய சரித்திரம் இங்கே ஒப்பு நோக்குதற்குரியது.

சரித்திரத்தைப் புத்தர் முன் உணர்த்துவதும் (இதனை வியாகரணம் என்பர்) அவதான வகைகளில் ஒன்று. இவை யெல்லாம் நிகழ்காலத்துள்ள கர்மத்தின் பயனை விளக்குதற்கு எழுந்தனவே. சில அவதானங்களில் இருவகைக் கதைகளும் காணப்படுகின்றன. தமிழிலுள்ள மணிமேகலை இதற்கொரு சான்றாகும்.

இந்த அவதானங்களெல்லாம் விநய பிடகத்திலும் ஸூத்த பிடகத்திலும் அங்கங்கே காணப்படுகின்றன. பெருந் தொகுதி களாகவும் இவைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வகைத் தொகுதிகளில் காலத்தால் முற்பட்டது 'அவதான சதகம்' என்பது. 3-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இது சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. தீநாரா என்ற ரோம் நாணயம் இதில் குறிக்கப்படுகிறது. எனவே, கி. பி. 2-ம் நூற்றாண்டில் இத் தொகுதி தோன்றியது என உறுதியாய்க் கூறலாம். இதில் பத்துத் தசகங்கள் உள்ளன. ஒவ்வொரு தசகமும் ஒவ்வொரு பொருள் பற்றியது. முதல் நான்கு தசகங்கள் புத்தர் அல்லது பிரத்யேக புத்தர் ஆவதற்குரிய புண்ணியச் செயல்களைக் கூறி, முற்பட உணர்ந்து அறிவிக்கும் வியாகரண நெறியில் கதைகளை அமைத் துள்ளன. 5-ம் தசகம் பேதவத்துப் போன்றது. 6-ம் தசகம் புண்ணியச் செயல்களால் தெய்வப் பிறப்பெடுக்கும் மக்கள், விலங்குகளின் கதைகளைக் கூறுவது. 7-ம் தசகம் சாக்கிய மரபிலுதித்த அருஹத்துக்களையும், 8-ம் தசகம் குற்றமற்ற பெண்களைப் பற்றியும், 9-ம் தசகம் குற்றமற்ற ஆடவர்களைப் பற்றியும் கூறுவன. 10-ம் தசகம் தீச் செயல் புரிந்து அதன் விளைவை நுகர்ந்து, பின் புண்ணியச் செயலொன்றால் அருஹத் பதவியை அடைந்தவர்களின் சரிதத்தை விவரிப்பது.

சிபிச் சக்கரவர்த்தியின் கதை இத்தொகுதியில் 34-வது கதையாகக் காணப்படுகிறது. இதில் அமைந்த 100-வது கதையில் வரும் தலைவன் அசோக சக்கரவர்த்தியின் காலத்தவன். அசோகன் தன் புத்திரன் குணாலன் அழகில் ஈடும் எடுப்புமில்லா தவன் என்று கருதியிருந்தான். பின்பு சுந்தரன் என்பவன் குணாலனை விட அழகிற் சிறந்தவனென்றும் அவன் செல்லுமிடந் தோறும் தாமரைப் பொய்கையும் சோலையும் அமையும் என்றும் அசோகன் கேள்வியுற்றான். சுந்தரனை வரவழைத்துக் காரணங் கேட்கிறான். அருகிலிருந்த உபகுப்தர் 'இவன் புத்தரது அந்திம காலத்தில் துக்கந் தாங்காது வருந்திய மகா காசியபரையும் அவருடன் வந்த 500 பிக்குக்களையும் நீராட்டுவித்து உணவளித் தான். அதனால் விளைந்த விளைவே இது' என்றனர்.

'திவ்யாவதானம்' என்னும் தொகுதி அவதான சதகத்திற்குப் பிற்பட்டது. இதைத் தொகுத்துள்ள முறை மிக மயக்கம் தருவது. மொழியும் நடையும் ஒரு திறப்பட்டனவாயில்லை. இது கி. பி. 4-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதன்று. சுங்க வமிசத்துப் புஷ்ய மித்திரன் (கி. பி. 178) இதில் கூறப்படுகிறான். தீநாரா நாணயமும் பல இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது. இதில் வரும் சார்த்தூல கர்ணாவதானம் சீன மொழியில் கி. பி. 265-ல் மொழிபெயர்க்கப்பட்டது. சரித்திரம் வருமாறு :

ஸ்ராவஸ்தியில் புத்தர் தங்கியிருந்தபோது ஆனந்தர் பிக்ஷயின் பொருட்டுத் தினம் நகரத்திற்குட் சென்று வந்தனர். ஒரு நாள் அவர் திரும்பும் பொழுது மிகவும் தாகமாய் இருந்தது. ஒரு கிணற்றில் பிரகிருதி என்ற சண்டாளப் பெண் நீர் மொண்டு வருவதைப் பார்த்தனர். 'சகோதரியே ! எனக்குக் கொஞ்சம் நீர் கொடு' என்று கேட்க, பிரகிருதி 'நான் ஒரு சண்டாளப் பெண்' என்று மறுமொழி அளித்தாள். ஆனந்தர், 'ஒருவருடைய குலத்தையும் ஜாதியையும் பற்றி நான் கேட்கவில்லை; தண்ணீர் இருக்குமானால் சிறிதளவு கொடு; நான் குடிக்க வேண்டும்' என்றனர். இந்தப் பெண் தண்ணீர் கொடுத்தாள். பின், ஆனந்தர் மீது பெரிதும் காதல் கொண்டாள். தன் தாயிடம் வந்து ஆனந்தரைத் தான் மணம் புரியாவிட்டால், தான் இறந்துவிடுவது உறுதி என்றாள். அவள் தாய் ஒரு பெரிய மந்திரவாதி. காதல் உண்டுபண்ணக் கூடிய ஒரு மந்திரத்தை எழுதி அதன் மூலமாக ஆனந்தர்க்கு மோகம் உண்டாகும்படி செய்தாள். ஆனந்தர் பிரகிருதியின் வீட்டிற்கு வந்து படுக்கையில் அமர்ந்தார். ஆனால், திடீரென்று அவரது கண்களினின்றும் கண்ணீர் புறப்பட்டது. புத்தரை ஸ்மரித்தார். புத்தர் தமது மந்திரத்தால் உதவி செய்கிறார். இதனால் மந்திரக்காரியின் முயற்சி பலிக்காமற் போய் விட்டது. ஆனந்தர் தமது மடத்திற்குத் திரும்பி வந்தனர். ஆனால், பிரகிருதி தனது காதல் முயற்சியை விடவில்லை. ஆனந்தர் போகும் இடங்களுக்கெல்லாம் அவளும் உடன் சென்றாள். அவர் இச் செய்தியைப் புத்தருக்கு அறிவிக்க, புத்தர் பிரகிருதியின் காதலைப் பூர்த்தி செய்வதாகக் கூறி, பின் உபதேசங்களின் மூலமாகப் பிக்குணிக் கோலம் கொள்ளுமாறு செய்கின்றனர். அவள் நாற்பெரு வாய்மைகளையும் உணர்ந்து புத்த தருமத்தை அனுஷ்டித்தாள்.

ஸ்ராவஸ்தி நகரத்திலுள்ள அந்தணர் முதலானவர்களெல்லாம் இதைத் தெரிந்து மிகவும் கோபம் கொண்டார்கள். பிரஸேனஜித் என்ற தம் அரசனிடம் முறை

யிட்டனர். அரசனும் புத்தரிடம் வந்து முறையிட்டுக் கொண்டான். அங்கே, அந்தணர், வீரர்கள் முதலானோர் கூடியிருந்தனர். அப்பொழுது திரிசங்கு என்ற சண்டாள அரசனுடைய கதையைப் புத்தர் கூறுகிறார். இத் திரிசங்கு விற்குச் சார்த்தூல கர்ணன் என்ற ஒரு மகன் இருந்தான். அவன் பெருங் கல்வி படைத்தவன். அவன் புஷ்கரஸாரி என்ற அந்தணனுடைய மகளை மணம் செய்யவேண்டும் என்று விரும்பினான். அந்தணன் மறுத்தனன். பின் திரிசங்கு வுக்கும் அந்தணனுக்கும் விவாதம் நிகழ்ந்தது. இவ்விவா தத்தில் திரிசங்கு அந்தணரது வருண பேதங்களையும் அவர் களுடைய ஒழுக்க நியதிகளையும் கடுமையாகக் கண்டித் தான். பிறப்புப் பற்றியும் கர்மத்தைப் பற்றியுமுள்ள கொள்கையின்படி ஜாதி என்பது இருத்தல் இயலாது என்று நிரூபித்தான். முடிவில் திரிசங்குவின் அபாரமான கல்வியை நன்குணர்ந்து புஷ்கரஸாரி மணத்திற்கு இணங்குகிறான். இந்த அந்தண குலத்துப் பெண்தான் பிரகிருதியாய்த் தோன்றியவள். புத்தர் தாம் அக்காலத்துத் திரிசங்கு வாகவும், ஆனந்தர் தாம் சார்த்தூல கர்ணனாகவும் இருந் தவர்கள் என்று கதை முடிகிறது.

திவ்யாவதானத்தின் 26 முதல் 29 வரையுள்ள அத்தியா யங்கள் மிகப் பழமையானவை. இவற்றில் அசோகனைப் பற்றிய பல வரலாறுகளும் காணப்படுகின்றன. இது புகழ்மிக்க இவ் அரசனைப் பற்றிய ஒரு பழைய நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்றது. இந்த நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. உபகுப்தரையும் மாரனையும் பற்றிய கதைகள் இவற்றில் நாடகத் திறமையோடு கூறப்பட்டுள்ளன. மாரனை ஒரு பௌத்தத் துறவி வென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன் நிர்வாணமடைந்த புத்தரை உபகுப்தர் நேரில் தரிசிக்க வேண்டும் என்று மாரனை வேண்ட, மாரன் புத்த வடிவம் தாங்கி நிற்கின்றான். அவனை உபகுப்தர் வணங்கினர். அசோகனைப் பற்றிய கதைகளுள் குணாலன் தனது மாற்றாந்தாயால் கண்ணிழந்த கதையும் ஒன்றாகும்.

மூன்றாவது அத்தியாயம் வருங்காலப் புத்தரது அவதாரத் தைக் கூறுகிறது.[1] பூர்ணன் என்பவன் ஸ்ரோண பராந்தகர் களிடம் சென்று அவர்களை நல்வழிப்படுத்த முயன்றதும், அவர்கள் இவனை அடித்துத் துன்புறுத்திக் கொல்ல முயன்றதும், முடிவில் அவர்களைத் தன் உபதேசங்களின் மூலமாகத் திருத்

1. இங்கே மணிமேகலையில் 'புத்த ஞாயிறு தோன்றுங் காலை' (XII. 86-103) என்று வரும் பகுதியை ஒப்பிடலாம்.

தியதும் இவ் அவதானத்தில் காணப்படும் பொருள்கள். இது பாலி ஸூத்தத்திலும் உள்ளது. ரூபாவதி என்பவளைப் பற்றிய அவதானமும் இங்கே அறியத்தகும். இவள், பசியால் வருந்தித் தன் மகவினையே உண்ணத் தொடங்கிய ஒருத்திக்குத் தனது முலைகளை அறுத்து, உடலையும், மாமிசத்தையும், ரத்தத்தையும் உண்ணக் கொடுத்ததுதான் இக்கதைப் பொருள். இவள் தனது பெண் வடிவம் நீங்கி ஆண் வடிவம் உண்டாகவேண்டும் என்று பிரார்த்திக்க அவ்வாறே ஆனாளாம். இவ்வாறு ஆண் வடிவம் பெற்று ரூபவதன் என்று பெயர் பூண்டான். இவன் பின்னர் அரசனாகி 60-ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் தான் புலியின் பொருட்டுத் தன் உடலைத் தியாகம் செய்தவன்.

அவதானங்களைப் பத்திய ரூபத்தில் கூறும் பல நூல்களும் உண்டு. 'கல்பத்ருமாவதான மாலை', 'அசோகாவதான மாலை' முதலியன இத்தன்மை வாய்ந்தன. இவைகளைப் புராணங்களோடு ஒப்பிடலாம். அவதான சதகத்தைப் பின்பற்றி எழுந்த நூல்களுள் 'த்வாவிம் ஸதி-அவதானம்' என்பது ஒன்று. இதிலும் உபகுப்தர் அசோகரோடு உரையாடுதல் கூறப்படுகிறது. 'பத்திர கல்பாவதானத்'தில் உபகுப்தர் அசோகச் சக்கரவர்த்திக்குக் கூறியதாக அமைந்த 34 காதைகள் உள்ளன. புராணங்களில் காணுமாறு இந்த அவதானங்களில் மாகாத்மியங்களும் விரதங்களும் விரித்துரைக்கப் படுகின்றன. விரதங்களைக் குறித்து, 'வ்ரதாவதான மாலை' என்றோர் அவதானம் உண்டு.

இறுதியாக, க்ஷேமேந்திரன் என்ற காஷ்மீர தேசத்துக் கவி இயற்றிய 'அவதான கல்பலதை'யைக் கூறுதல் வேண்டும். இது கி. பி. 1052-ல் எழுதி முற்றியது. 107 கதைகளுள்ள இந் நாலிற்கு க்ஷேமேந்திரனது புத்திரனாகிய சோமேந்திரன் ஒரு நூன்முகமும், ஜீமுதவாஹந அவதானம் என்ற ஒரு கதையும் சேர்த்து எழுதினன்.

### மஹாயான சூத்திரங்கள்

மேற்கூறிய நூல்கள் ஹீனயானத்திற்கும் மஹாயானத்திற்கும் இடைப்பட்ட தன்மை வாய்ந்தவை. இனி, மஹாயானத்திற்கு மட்டுமுரிய நூல்களை நோக்குவோம்.

மஹாயான மூலநூல்கள் கனிஷ்க அரசனது சபையில் தொகுக்கப்பட்டனவென்று கர்ணபரம்பரை கூறும். ஆனால், அது உண்மையென்று தோன்றவில்லை. 'போதி ஸத்துவ பிடகம்' என ஒன்றுள்ளது. இதில் மஹாயான நூல்களுக்கு நீண்ட பட்டிகையொன்று கொடுக்கப்பட்டுள்ளது. மஹாயான சூத்திரங்களும் எண்ணிடப்பட்டுள்ளன. ஆனால், இதுபோன்ற மஹாயான

சூத்திரங்கள் கோடிக்கணக்காக உள்ளன என்று கூறுதலினாலே, மஹாயான மூல நூல்களைத் தொகுக்கும் முயற்சியொன்று நிகழ்ந்தது என்று எண்ண இடமில்லை.

'நவதர்மங்கள்' என்பன ஏதேனும் ஒரு சமயத்திற்குரிய மூலப் பிரமாண நூல்கள் என்று கொள்ளுதல் இயலாது. பற்பல காலத்துப் பற்பல சமயத்திற்குரிய மூல நூல்களை ஒருங்கு தொகுத்தனவே இந் நவதர்மங்கள். இவற்றுள் மிக முக்கிய மானது 'ஸத்தர்ம புண்டரீகம்' என்பது. மஹாயான பௌத்த சமயத்தைக் குறித்து அறிய வேண்டுபவன் ஒவ்வொருவனும் இந் நூலைக் கற்றல் இன்றியமையாததாம். இதில் புத்தர் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான தெய்வமாகப் பரிணமித்துவிட்டார். கோடிக்கணக்கான யுகங்களாக வாழ்ந்து வருபவர்; எப்பொழுதும் நித்தியமாயுள்ளவர்; சுயம்பு மூர்த்தியாக விளங்குபவர். உயிர் களுக்குத் தந்தையாகவும், மருத்துவனாகவும், ரக்ஷகர்த்தா வாகவும் உள்ளவர். உயிர்களின்மீது இரக்கங் கொண்டு தாம் நிர்வாணத்தை அடைவதுபோல் தோன்றுகிறார்.

பாலி சூத்திரங்களில் காணுவதுபோலன்றி, ஸத்தர்ம புண்டரீ கத்திற்காணும் புத்தர் கிருத்திரகூட மலையில் தம்மைச் சூழ்ந்து துறவிகளும், பிக்குணிகளும், பல்லாயிரக்கணக்கான புத்தர்களும், போதி ஸத்துவர்களும், தேவர்களும் பிறரும் இருக்க, சமய உண்மையாகிய பெருமழையைப் பொழிந்தனராம்; சமயப் பெரும்பறையைக் கொட்டினராம்; சமயப் பெருங் கொடியை வானளாவப் பறக்கவிட்டனராம்; சமயப் பெருந்தீபத்தை ஏற்றினராம்; சமயப் பெருமுரசை முழக்கினராம்; சமயப் பேருடுக்கையைக் கொட்டினராம். இவ்வாறு செய்யும்பொழுது அவரது புருவ மத்தியத்திலுள்ள ரோமத்திலிருந்து ஓர் ஒளிக் கிரணம் புறப்பட்டு பதினெண்ணாயிரம் புத்தலோகங்களையும் அங்குள்ள புத்தர்களையும், உயிர்களையும் விளக்கமுறச் செய்து, போதிஸத்துவ மைத்திரேயரை அற்புதக் காட்சிகள் காணும்படி செய்கிறதாம். இவ்வாறான தோற்றங்களால், தமது உபதேசங் களைக் கேட்பவர்கள் அனைவரும் அவற்றிலே லயித்துக் கிடக்கும்படியாகச் செய்கின்றனராம்.

இவ்வாறு தோன்றிய புத்தரது கொள்கைகளும் ஹீனயானத்தி லிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. எல்லா உயிர்களுக்கும் புத்தயானம் என்ற ஒரே யானத்தை அருளி, அவர்களது லட்சியத் திற்குக் கொண்டு செல்லுகின்றனராம். புத்தரது உபதேசத்தைக் கேட்டவர்கள், ஏதேனும் புண்ணிய கருமங்களைச் செய்தவர்கள், ஒழுக்க நெறியில் நின்றவர்கள் முதலிய அனைவரும் புத்தராதல் கூடும். தாதுகோபங்கள், ஸ்தூபங்கள் முதலியவற்றை அமைத்

தவர்கள், புத்த விக்கிரகங்களை நிறுவியவர்கள், மலர்கள் வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை அளித்தவர்கள், புத்த விக்கிரகத்திற்கு முன்னால் இசை பாடுபவர்கள், ஒரு பொழுது கூடப் புத்த வணக்கம் செய்தவர்கள்: இவர்கள் அனைவரும் புத்தராகிறார்கள். மணலினால் ஸ்தூபங்கள் அமைத்து, சுவரில் புத்த சித்திரங்களை விளையாட்டாக வரையும் சிறுவர்கள்கூட இந்தப் பரிபக்குவ நிலையை அடைந்து விடுவார்களாம்.

மேற்கூறியதனை விளக்க ஓர் உவமானக் கதை தரப்படுகிறது.

இடிந்து விழும் நிலையிலிருக்கும் ஒரு பழைய வீட்டில் ஒருவன் மக்களோடு வாழ்கின்றான். திடீரென்று அவ்வீடு தீப்பற்றிக் கொள்ளுகிறது. மக்களின் பொருட்டுத் தந்தை மிகவும் வருந்துகிறான். அவன் மிகவும் தேக பலம் படைத்துள்ளவன். குழந்தைகளைத் தன் கையில் எடுத்து வீட்டினின்றும் தப்புவிக்க முடியும். ஆனால், வீட்டிற்கு ஒரே ஒரு கதவுதான் உண்டு. குழந்தைகளோ அபாயத்தை யறியாது அங்குமிங்கும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். தந்தை எச்சரித்தும் அதைக் கவனிக்கவில்லை. தந்தை உட்பட அனைவரும் தீயில் அழிந்துவிடும் நிலைமை வந்து விடுகிறது. அப்பொழுது ஓர் உபாயம் அவனுக்குத் தோன்று கிறது. குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளை விரும்புகிற வர்கள் அல்லவா? தந்தை அவர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு வேண்டும் அழகிய பொம்மைகள், விளையாட்டு வண்டிகள் முதலியன வீட்டிற்கு வெளி முற்றத்தில் இருக்கின்றன என்று சொல்லுகிறான். உடனே குழந்தைகள் வாசல் வழியாக ஓடிச் செல்லுகிறார்கள். இவ்வாறு அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். பிற்பாடு அவர்களெல்லாம் தந்தையிடம் வண்டி முதலிய விளையாட்டுப் பொருள்கள் எங்கே என்று கேட்கிறார்கள். தந்தை அவர்கள் வேண்டிக் கொண்டவாறு அவர்களுக்கு மிக அழகிய வண்டி ஒன்றைக் கொடுக்கிறான். இதைப் போலவே புத்தர் மக்களோடு பிரவர்த்திக்கிறார். மூன்று வகை வண்டிகள் (மாட்டு வண்டி, ஆட்டு வண்டி, மான் வண்டி) கொடுப்பதாகச் சொல்லி, அவர்களை உலகமாகிய இந்தப் பழுதுபட்ட வீட்டில் நெருப்பில் மூழ்கிச் சாகாதபடி காப்பாற்றுகிறார். மிக அருமையான புத்தயானத்தைக் கொடுத்தருளுகிறார்.

இதைப் போலவே தந்தை தந்த பொருள் எல்லாவற்றையும் சீக்கிரத்தில் வீண் செலவு செய்துவிட்ட மகனைப் பற்றிய உவமானக் கதை ஒன்றும் புத்தரது தன்மையை விளக்கக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு தனவானுக்கு அருமைப் புதல்வன் ஒருவன் இருந்தான். அவன் அந்நிய நாடுகளுக்குச் சென்று 50 ஆண்டுகள் அங்கே செலவழித்தான். தந்தைக்கு மேன்மேலும் செல்வம் விளைந்து கொண்டிருந்தது; பெரியதோர் பிரபுவாக விளங்கினார். மகனோ என்றால், அந்நிய நாடுகளில் ஏழையாக வறுமையில் மூழ்கி வருந்துகிறான். முடிவில் தனக்காகத் தவித்துக் கொண்டிருந்த தன் தந்தை முன்னால் பிச்சைக்காரனாக வந்து சேருகிறான். அரசனைப் போலச் சுற்றத்தாரும் பிறரும் சூழ்ந்திருக்க, மாளிகையில் வீற்றிருந்த பிரபுவைப் பிச்சைக்காரன் தன் தந்தையெனக் கண்டு கொள்ள முடியவில்லை. அவனைக் கொண்டு வரும்படி ஏவலாளர்கள் புறப்படுகின்றனர். பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த அவனை இழுத்து வருகிறார்கள். உணர்ச்சியற்று அவன் கீழே விழுந்து விடுகிறான். அப்பொழுது தந்தை அவனை விட்டுவிடும்படி கட்டளையிடுகிறார். பிச்சைக்காரன் எழுந்திருந்து ஏழைகள் வசிக்கும் நகரப் பகுதிக்குச் செல்லுகிறான். அப்போது பிரபு தம் மகனைக் கொணர்வித்தற்கு என்ன உபாயம் என்று சிந்திக்கிறார். தம் வீட்டில் கூலிக்கு வேலை செய்ய வரும்படி ஆள் அனுப்பி வரவழைக்கிறார். சிற்சில காலங்களில் அவனிடம் பேசியிருந்து, அவனோடு நெருங்கிப் பழகுகிறார். இவ்வாறாக 20 ஆண்டுகள் சென்றும் தந்தை இன்னார் என்று தம்மைத் தெரிவித்துக் கொள்ளவில்லை. தாம் மரணத் தருவாயில் இருக்கும்பொழுது, தமது சுற்றத்தார் முதலிய அனைவரையும் வரவழைத்து, தம் முன் இருக்கும் பிச்சைக்காரனும் வேலைக்காரனுமாகியவன் தமது புத்திரன் என்று வெளியிட்டு, தமது அபரிமிதமான செல்வங்களுக்கெல்லாம் அவனை உரியவனாக்குகிறார். இங்குக் கூறிய பிரபு தான் புத்தர். பிச்சைக்காரன் உயிரினங்களாம். இவர்களை மெல்ல மெல்லத் தம்பால் இழுத்து அவர்களைத் தமது செல்வங்களுக்கு உரிமையாளர் ஆக்குகிறார்.

இங்ஙனமே, புத்தர் வைத்தியராகவும் ஒப்பிடப்படுகிறார்.[1] இது போன்ற உவமானங்களும் உதாரண உவமங்களும் சொல்லைப் பெருக்கி நீட்டி விரித்துரைக்கப்படுகின்றன. இதனாலேயே இவற்றின் நயம் குறைந்து விடுகிறது என்று சொல்லலாம். சொற்களைவிட இவற்றில் காணும் எண்கள் இன்னும் அதிகப்பட்டு எல்லா அளவுகளையும் விஞ்சி விடுகின்றன.

1. சிவபெருமானைப் பிறவிப்பிணி வேரறுக்கும் வைத்தியர் என்று கூறுவது பலரும் அறிந்ததே. 'தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னை' என்றனர் (அப்பர், VI, 54, 8)

'கங்கையாற்றின் மணலைவிட[1] அதிக காலம்' என்று ஓரிடத்தில் வருவது இங்கே குறிக்கத்தக்கது. இது போன்ற மிகை நவிற்சி, புராணங்களிற்போல மஹாயான சூத்திரங்களிலும் இயற்கையாய் அமைந்துவிட்டது. இந்நூலிலுள்ள சில அத்தியாயங்கள் போதி ஸத்துவர்களைப் புகழ்தற் பொருட்டே இயற்றப்பட்டன. ஆனால், மற்ற அத்தியாயங்கள் புத்த சாக்கிய முனியைப் புகழ்கின்றன. போதி ஸத்துவர்களில் ஒருவர் பைஷஜ்ய ராஜா (வைத்தீசுவரன் என்று பொருள்) என்பவர். இவர் தாரணி என்கிற மந்திர வகைகளால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றனர். வேறோர் அத்தியாயத்தில் போதி ஸத்துவர் அவலோகிதேசுவரராகப் புகழப்படுகிறார். இவருடைய நாமத்தை உச்சரித்த மாத்திரத்தில் எல்லா வகையான துன்பங்களும் நீங்குமாம்; எல்லா விருப்பங்களும் நிறைவேறுமாம்.

### ஸத்தர்ம புண்டரீகம்

ஸத்தர்ம புண்டரீகம் புத்த சமயத்தின் பிற்கால நிலையில் தோன்றியது என்று உறுதியாய்க் கூறலாம். எனினும், இதன் ஆரம்பம் கி. பி. முதல் நூற்றாண்டாக இருக்கலாம். முதல் முதலாகச் சீனத்தில் இதனைக் கி. பி. 223-ல் மொழிபெயர்த்தனர். புத்த பக்தியை இந்நூல் உணர்த்துகிறது. சீனத்திலும், ஜப்பானிலும், பௌத்த நூல்களுள் இதுவே அதிமுக்கியமானதாகக் கணிக்கப்படுகிறது.

ஒரு மஹாயான சூத்திரம் அவலோகிதேசுவரரைப் புகழ்தற்கென்றே அமைந்துவிட்டது. இதன் முழுப் பெயர் 'அவலோகிதேசுவர குண காரண்ட வியூகம்'[2] என்பது. இப்பெயரைச் சுருக்கிக் 'காரண்ட வியூகம்' என்று இந்நூலைக் குறிப்பிடுவர். இதில் ஆதிபுத்தர் ஆதிநாதராக விளங்கி உலகம் முழுவதையும் தியான மாத்திரையால் இயற்றினர் என்று கூறப்படுகிறது. இக்கருத்து, புராணக் கருத்தோடு ஒற்றுமையுடையது. ஆதி புத்தரைச் சிருஷ்டி கர்த்தாவாகக் கருதி வந்த பௌத்தர்கள்

---

1. 'எங்கோ வாழிய குடுமி.....................

....................................

நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'.

(புறநானூறு, 9)

என்று சில தமிழ்க் கவிஞர்களும் இதனோடு போட்டியிடுகிறார்கள்.

2. அவலோகிதேசுவரரிடமிருந்து அகத்திய முனிவர் தமிழைக் கேட்டு உணர்ந்தார் என்று வீரசோழியத்தின் பாயிரச் செய்யுள் ஒன்று கூறுகிறது ;

ஆயுங் குணத்தவ லோகிதன் பக்கல் அகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க
நீயு முளையோ வெனிற்கரு டன்சென்ற நீள்விசும்பில்
ஈயும் பறக்கு மிதற்கென் கொலோசொல்லு மேந்திழையே.

கி. பி. 4-ம் நூற்றாண்டில் இருந்தனர். அவலோகிதேசுவர வணக்கமும் அக்காலத்திலிருந்தது. 5-ம் நூற்றாண்டில் அவலோகிதேசுவரருடைய சித்திரங்கள் காணப்படுகின்றன. இதனால் 4-ம் நூற்றாண்டிற்கு முன்பே காரண்ட வியூகம் இருந்ததெனச் சிலர் கூறுவர். இதன் திபெத்திய மொழிபெயர்ப்பு கி.பி. 616-ல் தொடங்கியமையினாலே சிறிது பிற்பட்ட காலத்ததாகவே இந் நூல் கருதத் தகும்.

எல்லா உயிரினங்களும் உயர்கதியடையும் வரை புத்த பதவியை இவர் நிராகரித்து விட்டனர். எல்லா உயிர்களுக்கும் மோக்ஷமளிப்பதும், உலகில் துன்புற்றோர்களுக் கெல்லாம் உதவுவதும், அவர்களைக் காப்பாற்றுவதும், பாவச் செயலைச் செய்துங்கூட இரக்கங் காட்ட வேண்டும் என்னும் உறுதியும் இவர்பால் அமைந்தன என்பர். இவர் அவீசி என்னும் நரகத்தில் புகுந்து அங்கே வருந்திக் கொண்டிருந்த உயிரினங்களை விடுவிக்கச் சென்றனர். இவர் சென்றதும் அந்நரகம் குளிர்ந்து விட்டது. உயிர்களை வாட்டி வருத்துவதற்கு அமைந்த பெரிய தாழி ஒரு தாமரைத் தடாகம்போல் ஆகிவிட்டது. வருத்தும் இடம் மகிழ்ச்சிக்குரிய இடமாக மாறிவிட்டது. இந்நரகங்களிலிருந்து பிரேதங்கள் இருக்குமிடத்திற்கு இவர் சென்றனர்.

இவர் ஒருமுறை ஈழத்திற்குச் சென்று, அங்கே மக்களையுண்ணும் மாயாவிகளைப் பௌத்த மதத்தைத் தழுவும்படி செய்தனர். பிற்பாடு அங்கிருந்து காசிக்குச் சென்று அங்கே புழுக்கள், அற்ப ஜந்துக்கள் முதலியவற்றிற்கும் பௌத்த தர்மத்தை உபதேசித்தனராம். அங்கிருந்து மகதத்திற்குச் சென்று அங்கே மக்களை வருத்திய வற்கடத்தை மாற்றினராம். இங்ஙனம் உயிரினங்கள் உய்யும்படி அருள் மூர்த்தியாய்ப் புலப்பட்டதேயன்றி, இவரது சரீரத்திலிருந்து எல்லாத் தேவர்களும் தோன்றும்படி அகில மூர்த்தியாயும் இவர் விளங்கினர். இவருடைய கண்களிலிருந்து சூரிய சந்திரர்கள் உதயமாயினர். மகேசுவரர் இவரது புருவத்திலிருந்து தோன்றினர். பிரமன் முதலிய தெய்வங்கள் இவரது தோள்களினின்றும் பிறந்தனர். நாராயணன் இவரது இதயத்திலிருந்தும், ஸரஸ்வதி இவரது இரட்டைப் பற்களிலிருந்தும், வாயு இவரது வாயிலிருந்தும், பூமி இவரது பாதத்திலிருந்தும், வருணன் இவரது வயிற்றிலிருந்தும், பூமி இவரது பாதத்திலிருந்தும், வருணன் இவரது வயிற்றிலிருந்தும் பிறந்தார்களாம்.

இவ்வர்ணனைக் கிடையில், இவரைப் புகழ்ந்து கூறும் பகுதி மிக நயமாக உள்ளது. கண்ணிழந்தவர்க்கு விளக்குப் போன்றவர்; சூரிய வெப்பத்தினால் தாக்கப்பட்டவர்களுக்குக் குடை

போன்றவர்; நீர் வேட்கையால் இறக்கும் தருவாயிலிருப்பவர்க்கு நதி போன்றவர்; அபாயத்தில் அச்சங் கொண்டிருப்பவர்களுக்குப் புகலிடமாயிருப்பவர் ; நோயால் வருந்துபவர்க்கு வைத்தியராய் உள்ளவர்; துர்ப்பாக்கிய நிலையை அடைந்தவர்களுக்குத் தாயும் தந்தையுமானவர்; நரகத்தில் வீழ்ந்து விட்டவர்களுக்கு நிர்வாண மார்க்கத்தை உணர்த்துபவர். இவை இவரது இயற்கைக் குணங்கள். இவருடைய நாமத்தை நினைவில் இருத்துபவர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் ஸம்ஸார பந்தத்தினின்று விடுதலை பெறுகிறார்கள். அவலோகிதேசுவரரைப் பூவினாலும் புகையினாலும் வழிபட்டு வணங்குபவர்கள் அதிமேதைகள் ஆவார்கள்.

காரண்ட வியூகத்தின் இரண்டாம் பகுதியில் வரும் கத்தியப் பகுதி முக்கியமானது. இப்பகுதி தந்திர நூல்களைப் போன்றது. ஆறெழுத்துணர்ச்சியின் பெருமையை இது விளக்குகிறது. ஆறெழுத்தாவது 'ஓம் மணி பத்மே ஹூம்' என்பது. இந்த மந்திரத்தை இப்பொழுதும் திபெத்திலுள்ள பௌத்தர்கள் தினந்தோறும் ஓதி வருகிறார்கள். இதன் பெருமையை மிகைப் படுத்தி இந்நூல் கூறும்.

ஸத்தர்ம புண்டரீகம் சாக்கிய முனிவரின் புகழ்ச்சி பற்றியது. காரண்ட வியூகம் அவலோகிதேசுவரரின் பெருமையைக் கூறுவது. இவற்றைப் போன்றே 'ஸுகாவதி வியூகங்கள்' சுவர்க்க துல்லியமான பௌத்தப் புண்ணிய உலகைப் புகழ்கின்றன. இரண்டு நூல்கள் உள்ளன; ஒன்று மிகப் பெரியது; ஒன்று மிகச் சிறியது. மிகப் பெரிய நூல் நற்கருமங்களைச் செய்து புண்ணியத்தை ஈட்டியவர்கள் இறக்கும் தருவாயில் அமிதாபவை நினைத்தார்களானால் ஸுகாவதியை அடைகின்றார்கள் என்று உணர்த்தும் சுருக்க நூல். இந்தப் புண்ணியவுலகை அடைவது நற்கருமங்களின் விளைவல்ல என்றும், அமிதாபவின் பெயரை இறக்கும் தருவாயில் நினைப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் இங்கே பிறப்பர் என்றும் கூறும். பெரிய நூல்தான் முற்பட்டதென்பது எளிதில் அறியலாம்.

ஸுகாவதி-உலகம் மேல்பால் உள்ளதாம். இதற்குரிய புத்தரைப் 'புத்த அமிதாப' என்று அழைப்பர். அளவற்ற ஒளியை நானாபக்கங்களிலும் பரவவிடுவதால் புத்தருக்கு அமிதாப என்ற பெயரும், அவருடைய ஆயுள் அளவற்றதாயிருப்பதால் அமிதாயுஸ் என்ற பெயரும் அமைந்தன. இங்கு எல்லா வகையான இன்பங்களும் நுகரலாம். மக்களுக்கும் தேவர்

களுக்கும் வேறுபாடில்லை. [1]பகல் இரவு இல்லை. இருட்டு என்பதே கிடையாது. இங்குள்ள உயிர்கள் பெண்ணிடம் பிறப்பனவல்ல. தாமரையை ஆசனமாகக் கொண்டு தோன்றும்.

ஸுகாவதி வியூகத்தில் அமிதாபவும் அவரது ஸுகாவதி-உலகும் அதிசயோக்தி முறையில் வருணிக்கப்படுகின்றன. இங்கேயும் எண்களின் அளவிற்குக் கணக்கேயில்லை. பெரிய ஸுகாவதி வியூகம் சீன திரிபிடகத்தின் மொழிபெயர்ப்பில் காணப்படுகிறது. இது முதன்முதல் மொழிபெயர்க்கப்பட்டது. கி. பி. 47-லிருந்து 186-வரையுள்ள காலமாகும். சுருக்க ஸுகாவதி வியூகம் குமார ஜீவரால் கி. பி. 402-ல் முதன் முதல் மொழி பெயர்க்கப்பட்டது. 'அமிதாயுர் தியான சூத்திரம்' என்ற ஒரு நூலும் சீன மொழிபெயர்ப்பில் உள்ளது. இந்த மூன்று நூல்களும் சீனாவிலும் ஜப்பானிலும் பௌத்தர்களால் மிகவும் போற்றப்படுகின்றன.

ஸுகாவதி வியூகம் அமிதாபவின் புண்ணிய உலகை வருணிப்பதுபோல, 'அக்ஷோப்ய வியூகம்' என்பது அக்ஷோப்ய புத்தரது உலகை விவரிக்கிறது. இங்ஙனமே 'கருணாபுண்டரீகம்' என்பது பத்மோத்தர புத்தரது இன்ப உலகை விவரித்துரைக்கிறது.

இவைகளெல்லாம் புத்தர்களையும் போதிஸத்துவர்களையும் புகழ்ந்து கூறுவதற்கென்றே தோன்றின. இவை தவிர, தத்துவக் கருத்துக்கள் பற்றிய சூத்திரங்களும் உள்ளன. இவைகளுள் மிக மிக முக்கியமானது 'பிரஜ்ஞாபாரமிதை' என்பதாம். இது ஞானத்தின் பரிபூரணத்தை விளக்குவதற்கு எழுந்தது. உலகம் சூனியம் என்பதை இது வற்புறுத்துகிறது. மஹாயான சூத்திரங்களில் மிக மிக முற்பட்டது இந்தப் பிரஜ்ஞா பாரமிதை பற்றிய சூத்திரங்களே. இவற்றில் பல விஷயங்கள் உள்ளன. ஒன்றில் லக்ஷத்து இருபத்தையாயிரம் சுலோகங்கள் உள்ளன வாம். முதலாவது தோன்றிய படிவம் அஷ்ட சாகஸ்ரிக பிரஜ்ஞா பாரமிதை. இதிலும் பெருநூல் ஒன்றும் சுருக்க நூல் ஒன்றும் உள்ளன. இந்நூல்கள் முழுவதும் உலகத் தோற்றங்கள் அனைத்தும் சூனியமே என்பதை வற்புறுத்திச் சொல்லுகின்றன. புத்தர்களும் போதிஸத்துவர்களும்கூட உண்மையல்லர் என்று இவை உணர்த்துகின்றன. என்றாலும், போதிஸத்துவரின்

1. பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்
ஐயமொன் றின்றி அறிந்துரைப்பின்—வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்
றிகலின் றிளிவரவு மின்று

என்ற வெண்பாமாலையோடும் [272], கீதைச் சுலோகத்தோடும் [XV,6] ஒப்பிடுக.

பெருமை அடிக்கடி கூறப்படுகிறது. இந்நூல்களைக் கற்றலினால் பெரும் புண்ணியம் விளையும் என்று கருதுகிறார்கள். இது போன்ற பிரஜ்ஞா பாரமிதை நூல்கள் பல உள்ளன.

மகா வியுத்பத்தியில் வரும் மஹாயான சூத்திரங்களின் பட்டிகையில் 'புத்தாவதம்ஸகம்' என்ற நூலும் காணப்படுகிறது. அவதம்ஸக சமயம் சீன தேசத்தில் கி. பி. 6ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. ஆறு அவதம்ஸக சூத்திரங்கள் உள்ளன என்று கருதப்படுகிறது. வடமொழியிலுள்ள 'கண்ட வியூக மஹாயான சூத்திரம்', அவதம்ஸக சூத்திரங்களைப் போன்றது. இதில் ஸுதனன் என்ற இளைஞன் மஞ்சுஸ்ரீ போதி ஸத்துவரின் உபதேசப்படி, இந்தியா முழுவதிலும் உயர்ந்த ஞானத்தைப் பெறுவதற்குச் சுற்றித் திரிந்த வரலாறு காணப்படுகிறது. இக்கண்ட வியூகம் சிக்ஷாசமுச்சயம் என்ற நூலில் அடிக்கடி ஆளப்பட்டுள்ளது. இதன் முடிவில் பத்ர சரீபிரணிதான காதை என்பது ஒன்று உள்ளது. இதில் 62 இனிய தோத்திரச் செய்யுட்கள் உள்ளன. பௌத்த பக்தியை அழகுபட இவைகள் வெளிப்படுத்துகின்றன. நான்காவது நூற்றாண்டிலிருந்து மஹாயான பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் இதனைப் போற்றி வந்திருக்கிறார்கள். தஸபூமிக ஸூத்திரம் ஒன்றும் அவதம்ஸகத்தின் பகுதியாகக் கருதப்படுகிறது. இதில் பௌத்த பதவியை அடைவதற்குரிய வழியிலுள்ள பத்து நிலைகளும் விவரிக்கப்படுகின்றன. இப்பத்து நிலைகளும் மகா வத்துவில் காணப்பட்ட போதிலும், மஹாயான சமயத்திற்குத்தான் முக்கியமான கொள்கையாகவுள்ளன. இந்தத் தஸபூமிகம் சீனத்தில் கி. பி. 297-ல் மொழிபெயர்க்கப்பட்டது.

அவதம்ஸகத்தைப்போல 'ரத்னகூடம்' என்பதும் சீனத் திரிபிடகத்தின் ஒரு பெரும் பகுதியாக அமைந்துள்ளது. இதில் 49 சூத்திரங்கள் உள்ளன. ஸுகாவதி வியூகம், அக்ஷோப்ய வியூகம் முதலியனவும், போதி ஸத்துவ பிடகம் முதலியனவும், சாக்கியமுனி தமது தந்தை சுத்தோதனரைச் சந்திப்பதை விளக்கிக் கூறும் 'பிதாபுத்ர ஸமாகமம்' என்ற நூலும், இன்னும் பல கேள்விகளும் விடைகளும் அடங்கிய 'பரிப்பிரிச்சம்' என்ற நூல் வகையும் இதில் அடங்கியுள்ளன. இது கி. பி. 78 முதல் 184-வரையுள்ள காலப் பகுதியில் சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. போதி ஸத்துவரின் இயல்பும் சூனியக் கொள்கையும் இதில் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

பரிப்பிரிச்சங்களில் 'ராஷ்ட்ரபால சூத்திரம்' இங்கே குறிக்கத்தக்கது. இதன் முதற் பகுதி போதி ஸத்துவரின் இயல்பைக் குறித்து ராஷ்ட்ரபாலன் கேட்கும் கேள்விகளுக்கு

விடையாக அமைந்துள்ளது. இரண்டாம் பகுதியில் புண்ணிய ரஸ்மி என்ற அரச குமாரனது ஜாதகக் கதை சொல்லப்படுகிறது. முதற்பகுதியில் எழுதியதையே 50 ஜாதகக் கதைகள் குறிப்பிடு கின்றன. இவற்றையடுத்துத் திடீரென்று பௌத்த சமயம் வருங்காலத்தில் சீர்கேடுறும் நிலைமை வருணிக்கப்படுகிறது. இது சீன மொழியில் கி.பி. 585-முதல் 592 வரையுள்ள காலப் பகுதியில் மொழி பெயர்க்கப் பெற்றது. பல பரிப்பிரிச்சங்கள் சிக்ஷாசமுச்சயம் என்ற நூலில் எடுத்தாளப்படுகின்றன. இதில் உதயண வத்ஸ ராஜ பரிப்பிரிச்சம் என்பதும் ஒன்று. இவற்றில் பெண்களும் பல கேள்விகள் கேட்கின்றனர். அவ்வாறு கேட்ப தாகக் கூறும் நூல்களுள் ஒன்று சந்த்ரோத்தரா தாரிகா பரிப் பிரிச்சகம் என்பது. இது காமத்தினுடைய தீய விளைவுகளைப் பற்றிக் கேட்பதாக அமைந்துள்ளது.

பிரஜ்ஞா பாரமிதைகள் சூனியவாதத்தை எடுத்துக் கூறுவது போலவே, லங்காவதாரத்தில் விஞ்ஞான வாதம் எடுத்துச் சொல்லப்படுகிறது. உலகத் தோற்றம் உண்மையன்று என்பதை மறுத்து, அது பற்றிய மானஸிகத் தோற்றம் உண்மையென இவ் வாதம் கூறுகிறது. இந்நூல் முதன் முதலில் குணபத்திரர் என்பவரால் கி. பி. 443-ல் சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் முதல் அத்தியாயத்தில் இராவணனும் புத்தரும் சந்தித்து உரையாடிய வரலாறு கூறப்படுகிறது. இதன் 9-வது அத்தியா யத்தில் தாரணிக்குரிய மந்திரமொழிகள் உள்ளன. 10-வது அத்தியாயத்தில் சாங்கியர்கள், வைசேஷிகர்கள், ஆஜீவகர்கள் முதலியோர் பொய்ச் சமயத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறப் படுகிறார்கள்.

இவ் அத்தியாயத்திலுள்ள ஒரு பகுதி சரித்திர நோக்கில் மிக முக்கியம் எனத் தோன்றுகிறது. 'வியாஸர், கணாதர், ரிஷபர், கபிலர், சாக்கியவாதி முதலியவர்கள் எனது காலம் கழிந்ததற்கு அப்புறம் தோன்றுவார்கள்; நான் மறைந்து நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் மகா பாரதத்தால் நன்கு தெரியப்படுகின்ற வியாஸரும், பாண்டவர்களும், கௌரவர்களும், ராமனும், சந்திரகுப்த மௌரியனும் வாழ்ந்து வருவார்கள். பின்னர், மௌரியர்களும், நந்தர்களும், குப்தர்களும், அப்புறம் மிலேச்சர்களும் தோன்று வார்கள். மிலேச்சர்களுடைய ஆட்சியின் இறுதியில் எங்கும் கலகங்கள் உண்டாகும். அவைகள் முடிந்த பிற்பாடு கலியுகம் பிறக்கும். கலியுகத்தின் முடிவில் ஸத்தர்மம் ஜனங்களால் ஆதரிக்கப்படமாட்டாது' என்று இப் பகுதி கூறுகிறது. வருங்கால நிகழ்ச்சியைக் கூறும் இதனைப் போலவே, வேறோரிடத்தில் பாணினி, அக்ஷபாதர், பிருகஸ்பதி, லோகாயதம் பற்றிய

ஆசிரியர்கள், காத்தியாயனர், யாக்ஞவல்கியர், வால்மீகி, மஸுராக்ஷர், கௌடில்லியர், ஆஸ்வலாயனர் இவர்கள் தோன்று வார்கள் என்று கூறப்படுகிறது. இதினின்று ஹுணர் படையெடுப்பு நிகழ்ந்த 5-ம் நூற்றாண்டின் இறுதியில் இப் பகுதி எழுதப் பெற்றது என்று தெரிகிறது. சுமார் கி. பி. 400-ல் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். இந்தியத் தத்துவ சாஸ்திர வரலாற்றில் கி. பி. 4 முதல் 6-ம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் இது இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளலாம். மற்றச் சமயங்களைப் பற்றியும் இதில் காணுகிற குறிப்புக்கள் மிகவும் பயன்படத்தக்கன.[1]

மஹாயான சூத்திரங்களில் பிற்பட்டவைகளிலே 'ஸமாதி ராஜம்' என்ற ஒரு சூத்திரம் உள்ளது. இதில் உரையாடுபவர்களுள் முக்கியமானவன் சந்திரப் பிரதீபன் என்பவன். இக்காரணத்தால் சந்திர பிரதீப சூத்திரம் என்றும் இது அழைக்கப்படும். பலவகையான தியானங்களினால் மெய்ஞ்ஞானத்தைப் போதி ஸத்துவர் அடைவார் என்பதை இது தெரிவிக்கிறது. நீதியொழுக்கத்தைப் பற்றிய சில பகுதிகள் சாந்தி தேவர் இயற்றிய சிக்ஷாசமுச்சயத்தில் எடுத்தாளப்படுகின்றன. ஸமாதி ராஜம் கி. பி. 400 முதல் 557 வரையுள்ள காலப் பகுதியில் இயற்றப் பெற்றதாகும்.

பிற்பட்ட மஹாயான சூத்திரங்களில் இறுதியாக வைக்கப்பட்டது 'சுவர்ணப் பிரபாசம்' என்னும் சூத்திரமாகும். இதில் நீதியும் தத்துவமும் கலந்து வருகின்றன ; பல கதைகளும் கூறப்பட்டுள்ளன. தந்திர நூல்களோடு பெரிதும் ஒப்புமையுடையது. இதற்குத் தர்மக்ஷேமர் கி. பி. 5-ம் நூற்றாண்டில் இயற்றிய சீன மொழிபெயர்ப்பும், இ-த்ஸிங் (கி. பி. 703) எழுதிய மொழி பெயர்ப்பும் நமக்குக் கிடைத்துள்ளன.

**மஹாயானப் பெரியோர்களும், கவிஞர்களும்**

இப் பகுதியில் முதன் முதல் குறிப்பிடுதற்குரியவர் நாகார்ச்சுனர். இவரைப் பலரும் மஹாயானத்தைத் தோற்று வித்தவர் என்று கூறி வந்தனர். ஆனால், இது உண்மையன்று. இவருக்கு முற்பட்ட காலத்திலேயே மஹாயானம் வழக்கில் இருந்தது. அஸ்வகோஷர், நாகார்ச்சுனர், ஆரியதேவர், குமாரலாதர், இவர்கள் சம காலத்தினரென்றும், அறிவொளி பரப்பிய நான்கு சூரியர்கள் என்றும், ஹியூன்-த்ஸாங் கூறுவர். பில்ஹணரது ராஜதரங்கிணி, காஷ்மீர தேசத்தில், போதிஸத்துவ நாகார்ச்சுனர் தாம் மிகச் சிறந்து மேம்பட்ட ஞானநாயகர் எனக்

1. மணிமேகலையில் 29, 30-ம் காதைகளை இங்கு ஒப்பிடலாம்.

கூறும். கனிஷ்கருடைய காலத்தில் இவர் பிறந்தவர் என்பர். இவரது காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று சொல்லலாம்.

இவருடைய வாழ்க்கைச் சரிதமொன்று சுமார் கி. பி. 405-ல் குமாரஜீவர் என்பவரால் சீனத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இவர் தக்ஷிண இந்தியாவில் ஓர் அந்தண குடும்பத்தில் பிறந்தவர்; நான்கு வேதங்களையும் சாஸ்திரங்கள் அனைத்தையும் கற்று உணர்ந்தவர் ; மந்திரவாதியாயும் இவர் இருந்தனர். இவர் மூன்று நண்பர்களோடு அரசனது அரண்மனையில் மறைவாய்ப் புகுந்து, அந்தப்புர ஸ்திரீகளைக் கற்பழிக்கத் தொடங்கினர் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு செய்கையில் தம்முடைய மந்திர சக்தியால் இவர் தம்மைப் பிறர் காணாதவாறு மறைவு செய்து கொண்டனராம்.

ஆனால், அரசன் இவர்களைக் கண்டுபிடித்துக் கொண்டனன்; நாகார்ச்சுனரது நண்பர்கள் மூவர்க்கும் கொலைத் தண்டனை விதித்தனன் ; தாம் துறவியாவதாக வாக்களித்த பின்பு இவரை விடுதலை செய்தனன். இவர் மூன்று மாதத்திற்குள் திரிபிடகங்கள் அனைத்தையும் ஓதி உணர்ந்தார்; வேறு பல சூத்திரங்களையும் தேடிப் பெற்றனர். கடைசியாக இமாலயத்தி லுள்ள ஒரு முதிய துறவியிடமிருந்து மஹாயான சூத்திரத்தை இவர் பெற்றனர். ஒரு ஸர்ப்பராஜனது உதவியால் அந்தச் சூத்திரத்திற்கு ஒரு வியாக்கியானமும் கிடைத்தது. பின்பு தக்ஷிண இந்தியாவில் பௌத்த சமயத்தைப் பரவச் செய்தனர். 300 ஆண்டுகள் இவர் சமயப் பிரவர்த்தனம் செய்தாராம்! திபெத்தியர்கள், 600 ஆண்டுகள் வரை இவர் வாழ்ந்தார் என்று கூறுகிறார்கள்.

குமாரஜீவர் இவரை மந்திர சக்தி பெற்றவர் என்றதனோடு அமையாது ஜோதிஷம், வைத்தியம், மணி பரீட்சை முதலிய வற்றிலும் வல்லவராகக் கூறுகிறார். பாணகவி இவரை ஒரு ஸர்ப்பராஜனிடமிருந்து முத்துமாலை ஒன்றைப் பெற்றனர் என்று கூறுவர். இந்த முத்து மாலை விஷக்கடி முதலிய எல்லா வகையான நோய்களையும் தீர்ப்பதற்குப் பயன்படுமாம். இவை யெல்லாம் ஒருபுறம் இருக்க, இவர் விதர்ப்ப தேசத்து அந்தணர் வகுப்பில் பிறந்தவர் என்பதும், வைதிக நூல்களை நன்கு ஓதி உணர்ந்தவர் என்பதும், இவர் எழுதிய நூல்களால் விளங்கு கின்றன. பல நூற்றாண்டுகள் கழிந்த பிற்பாடு பலர் எழுதிய நூல்களும் இவர் இயற்றியனவாகக்[1] கற்பிக்கப்பட்டன.

---

1. தமிழ்நாட்டில் அகத்தியர் பேரால் பல நூல்கள் வெளி வந்தமை இங்கே அறியத்தக்கது.

இவர் மாத்தியமிக சமயத்தை நிறுவியவர். மாத்தியமிக காரிகை என்ற ஒரு நூலும் இவர் இயற்றியுள்ளார். இந் நூலில் 27 அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்ட 400 காரிகைகள் உள்ளன. இவரே 'அகுடோபயா' என்ற ஒரு வியாக்கியானமும் இதற்கு எழுதினர். காரிகை முறையைக் கையாண்டவர்களுள் இவரே முற்பட்டவர் என்று கூறுவர். இந் நூலுக்கு வேறு வியாக்கியானங்களும் உள. வடமொழியில் சந்திரகீர்த்தி என்பவர் எழுதிய பிரஸந்நபதா என்ற வியாக்கியானம்தான் நமக்குக் கிடைத்துள்ளது. மாத்தியமிகம் என்பது நடுநிலைக் கொள்கை என்று பொருள்படும்.

'ஒன்றும் உளதாவதும் இல்லை, இலதாவதும் இல்லை; பிறிதொன்றனோடு ஒப்பு நோக்கினால்தான் உண்மை, இன்மை என்பது தோன்றும்' என்பது இம்மதத்தின் கொள்கைகளுள் முக்கியமானது.[1] இந்த வாதத்தைக் கடை போக உணர்வதாயிருந்தால், நான்கு சத்தியங்களும், நன்மை தீமைகளும், தர்மங்களும், சங்கமும், புத்தரும் இல்லை என்றே தீர்ந்துவிடும்; பௌத்த சமயமே முழுதும் அழிந்து சூனியமாய்ப் போய்விடும். இதனை உணர்ந்து பௌத்த தர்மங்களுக்கு வியவகாரிக நிலை ஒன்றும், பார மார்த்திக நிலை ஒன்றும் உண்டு என்று நாகார்ச்சுனர் கொண்டனர். நாகார்ச்சுனரது கொள்கைகளைக் குறித்துப் பலசிறு நூல்களும் தோன்றியுள்ளன. 'யுக்தி ஷஷ்டிகை', 'சூனியதா சப்ததி', 'தர்ம சங்கிரகம்' என்பன இவ்வகையினவாம். இவைகளை நாகார்ச்சுனர் இயற்றினர் என்பது பொருந்தாது. 'ஸுஹிர்லேகை' என்பது இவரால் இயற்றப்பட்டதாகலாம். இது தம்மபதம் போன்றது. இ-த்ஸிங் இதனை மிகவும் புகழ்கிறார். இந்தியாவில் இதனைப் பலரும் கற்றுப் பாராயணம் செய்து வந்தனர். இந்த நூற்பெயர் 'நண்பனுக்கு எழுதிய கடிதம்' என்று பொருள்படும். சீனர்கள் இந்த நண்பன் சாதவாகனன் என்பர். கி. பி. 166 முதல் 196-வரை ஆண்ட கௌதமீ புத்ர யக்ஞஸ்ரீ இங்குக் குறித்த சாதவாகனன் ஆகலாம். பிரஜ்ஞா பாரமித சூத்திர சாஸ்திரத்திற்கும், தஸபூமி விபாஷா சாஸ்திரத்திற்கும் இவர் வியாக்கியானம் செய்தவர் என்றும் கூறுவர். இது பொருத்தமாகலாம்.

நாகார்ச்சுனரது சிஷ்யர்களுள் ஒருவர் தேவர் என்பவர். இவருக்கு ஆர்ய தேவர், காண தேவர் என்ற பெயர்களும் உண்டு. இவரைப்பற்றி ஹியூன்-த்ஸாங் ஒரு கதை கூறுகிறார்.

தேவர் சில சமய விஷயங்களைத் தருக்கித்து உணர்வதற்காக ஈழதேசத்தினின்றும் நாகார்ச்சுனரிடம் வந்தனர். தமது

1. ஸ்ரீ சங்கரரும் இவ்வாறே கூறுவர்.

வருகையைத் தெரிவிக்கும்படி ஒரு சிஷ்யனிடம் சொல்லி யனுப்பினர். நாகார்ச்சுனர் தமது பிக்ஷாபாத்திரத்தில் தூய நீரை நிரப்பி அனுப்பினர். தேவர் அதில் ஓர் ஊசியை எறிந்தனர். நாகார்ச்சுனருக்கு மிகவும் திருப்தி ஏற்பட்டு விட்டதாம். இதைக் கண்ட சிஷ்யன் இதன் பொருள் என்ன என்று கேட்க, நீர் நிரம்பிய பிக்ஷாபாத்திரம் தமது தூய தெளிந்த அறிவை உணர்த்துகிறது என்றும், அதில் எறியப் பட்ட ஊசி அந்த அறிவின் அடியைத் தேவர் தொட்டு விட்டதற்கு அறிகுறியாம் என்றும் சொல்லினராம்.

தேவருடைய வாழ்க்கைச் சரித்திரமும், அஸ்வகோஷர், நாகார்ச்சுனர் என்பவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரமும் சுமார் கி. பி. 405-ல் குமார ஜீவரால் சீனத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இவையெல்லாம் கதை மயமாக உள்ளன. தேவரால் வாதத்தில் தோல்வியுற்ற ஓர் அந்நிய சமயவாதியால் இவர் கொல்லப்பட்டனர் என்று இவ் வரலாறு கூறும். தாம் இறப்பதற்கு முன்னர்க் கொலை செய்தவனுக்குத் தர்ம உபதேசம் செய்தனர் என்றும், தமது சிஷ்யர் அவனைத் துன்புறுத்தாதபடி அடக்கினர் என்றும் சொல்லுவர்.[1]

'எல்லாம் மாயம்; கொன்றவனும் கிடையாது, கொலை செய்யப்பட்டவனும் கிடையாது. நண்பனும் இல்லை. பகை வனும் இல்லை' என்று இவர் போதித்தனர்.

இவரையும் அஸ்வகோஷர், நாகார்ச்சுனர் என்ற இருவரையும் பண்டைக் காலத்துப் பெரியோர்கள் என்று ஹியூன்-த்ஸாங், இ-த்ஸிங் என்ற இரண்டு சீன யாத்திரிகர்களும் கூறு கின்றனர். 3-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவர்கள் இருந்தவர்களாகலாம்.

இந்த ஆரிய தேவர் இயற்றியவற்றுள் சதுஸ் சதகம் (400) என்பது மிகப்புகழ்பெற்றது; இதிலும் 400 காரிகைகள் உள்ளன. மாத்யமிக சமயத்திற்கு ஒரு பிரமாண நூலாக இது அமைந்து உள்ளது. ஜப்பான் தேசத்தில் ஸன்றோன் (Sanron) சமய வகுப் பினருக்கு இதுவும், நாகார்ச்சுனரது மாத்யமிக சாஸ்திரமும் அடிப்படை நூல்களாக உள்ளன.

சித்த விஸுத்திப் பிரகரணம் என்ற நூலில் சிற்சில பகுதிகளே நமக்குக் கிடைத்துள்ளன. இதில் நீதியொழுக்கம் சொல்லப் படுகிறது. பிராமண ஆசாரத்தை மறுக்கும் நெறியில் இந்நூல் அமைந்திருக்கிறது. கங்கையில் ஸ்நானம் பண்ணினால் பாவங்கள்

1. பெரிய புராணத்துள் வரும் மெய்ப்பொருள் நாயனார் சரித்திரம் இங்கே அறிதற்குரியது.

நீங்கிவிடும் என்ற கொள்கையை மறுத்து, 'இது உண்மையானால், அங்குள்ள செம்படவர்களெல்லாரும் மோக்ஷமடைந்தவர்களாவார்கள்; இன்னும் முக்கியமாக இரவும் பகலும் கங்கை நீரிலே வாழும் மீன்கள் முக்தியடைந்துவிடும் ; இதனால் இக்கொள்கை முற்றும் அபத்தம் என்பது விளங்கும்' என்று சொல்லப்படுகிறது. இந் நூலிலே தாந்திரிகக் கருத்துக்களும், தொடர்களும், வாரம், ராசி முதலியனவும் காணப்படுதலால் இது ஆரியதேவரால் செய்யப்பட்டது அன்று எனத் தோன்றுகிறது. இவர் இயற்றியனவாக இன்னும் சில நூல்கள் கூறப்படுகின்றன. இவை 'முஷ்டிப் பிரகரணம்' முதலியன.

**யோகாசார சமயம்**

'யோகாசார சமயம்' அஸங்கர் என்பவரால் நிறுவப்பட்டது என்று இதுவரை கூறிவந்தனர். ஆனால் இவரது ஆசிரியராகிய மைத்திரேயரே இச்சமயத்தை நிறுவியவர் என்பதற்குத் தக்க ஆதாரம் உள்ளது. இச்சமயமும் விஞ்ஞான வாதத்தையே போதிக்கின்றது; 'கருத்தும் உணர்ச்சியும் மட்டுமே உண்மை; காட்சியுலகம் உண்மையன்று' எனக்கூறும். இச்சமயத்தின் முழுமுதற் பொருள் 'போதி' ஆகும் என்றும், இந்தப் போதியை யோகப் பயிற்சியுள்ளவர்கள் மாத்திரம் அடைவர் என்றும், இவ்வாறு அடைவதில் பத்து நிலைகள் உள்ளன என்றும் யோகாசார சமயம் கூறும்.

'பிரஜ்ஞா பாரமிதோபதேச சாஸ்திரம்' மைத்திரேய நாதர் இயற்றியதே. அஸங்கர் செய்ததாகக் கூறும் 'மஹாயான சூத்திராலங்காரத்'திற்கும் இவரே ஆசிரியர். இங்ஙனமே 'யோகாசார பூமி சாஸ்திரமும்' இவர் இயற்றியதாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

திபெத்தியர் யோகாசார பூமி சாஸ்திரத்தை அஸங்கர் இயற்றியது என்பர். ஆனால், ஹியூன் - த்ஸாங் மைத்திரேயர் செய்தது எனக் கருதுகிறார். இது எவ்வாறாயினும் மைத்திரேயரைக் காட்டிலும் அவருடைய சிஷ்யர் மிகப் பெரும் புகழடைந்து விட்டனர். கி. பி. 6-ம் நூற்றாண்டின் பற்பல காலப் பகுதியில் மொழி பெயர்க்கப்பெற்ற 'மஹாயான ஸம்பரிக்கிரகம்' 'பிரகரண ஆரிய வம்சம்' 'மஹாயான அபிதர்ம சங்கீதி சாஸ்திரம்': இவைகள் அஸங்கர் செய்தன.

அஸங்கரோடு உடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள். புருஷபுரத்தில், கௌஸிக வமிசத்தில் தோன்றிய அந்தணன் ஒருவனது புத்திரர்கள். இவர்கள் கி.பி. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். நடுவரான வஸுபந்துவே புத்த இலக்கிய

வரலாற்றில் மிகப் பெரும் புகழ் பெற்றவர். அவருடைய சாஸ்திர அறிவு மிகப் பரந்தது; யாவரும் வியக்கத் தகுவது. எவற்றையும் தன்னறிவு கொண்டு ஆராய்வதில் அதிஸமர்த்தர். இவர் இயற்றிய முக்கியமான நூல் 'அபிதர்ம கோஸம்' என்பது. இந்நூல் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், யஸோமித்திரர் செய்த அபிதர்ம கோஸ வியாக்யானத்தாலும், சீன மொழியிலும், திபெத்து மொழியிலுமுள்ள அபிதர்ம கோஸத்தாலும் நாம் இப்பெரு நூலைப் பற்றி ஒருவாறு அறிந்துகொள்ளலாம். சீனத்தில் மொழிபெயர்த்தவர் (கி. பி. 563-567) பரமார்த்தர் என்பவர். இந்நூலில் 600 காரிகைகளும் ஆசிரியரே செய்த பாஷ்யமும் உள்ளன. நூலின் இறுதியிலுள்ள அதிகாரம் 'நித்யாத்மா என்பது இல்லை' என்ற பௌத்தக் கொள்கையை நிலைநாட்டுகிறது. இது, நித்யாத்மா உண்டு என்று கூறும் புத்கல வாதிகளுக்கு மறுப்பாக அமைந்துள்ளது. இந்நூல் பௌத்த சமயப் பகுப்புக்கள் அனைத்திற்கும் பிரமாண நூலாம். வைபாஷிகர்களும் சௌத்திராந்திகர்களும் வியவகரித்துக் கொண்ட தர்க்கப்பொருள் பற்றியும் இந்நூலால் விளக்கம் ஏற்படுகிறது. 7-ம் நூற்றாண்டிலிருந்த பாண கவி இந்தக் கோஸத்தைக் கிளிகள் ஒன்றுக்கொன்று விளக்கி வந்தன என்றனர். ஏதேனும் ஒரு சமயப் பொருள் வாதத்திற்கு இடந் தந்தால், இந்தக் கோஸம் கூறுவதே முடிபாகக் கொள்வர்.

வஸுபந்து 'கதா சங்கிரகம்' என்ற நீதி வாக்கிய நூலை வியாக்கியானத்தோடு செய்தனர். இவைகள் தம்மபத நெறியைப் பின்பற்றியன. இந்நூலால் வஸுபந்து ஒரு ஹாஸ்யக் காரர் என்பது விளங்குகிறது. கீழ்வரும் கதை அதற்குச் சான்று.

> ஒரு நரி ஒரு சிங்கத்தைப் பின் தொடர்ந்து சென்றது. ஏனென்றால், சிங்கம் உண்டு மிகுந்த மாமிசத்தை நரி விரும்பிற்று. ஒரு முறை ஒரு பெரிய பன்றியைக் கொன்று தின்றதில் மிச்சம் அதிகமாகிவிட்டது. நரியிடம் இதைத் தூக்கி வா என்று சிங்கம் கூறிற்று. நரிக்கோ அதை எடுத்துச் செல்ல முடியவில்லை. ஆனால், சிங்கம் தன்னைக் கொன்றுவிடும் என்று பயந்தது. சிங்கம் ஒரு கர்வி என்பதை உணர்ந்து, அதனிடம் 'இதைத் தூக்கிச் சுமப்பதற்கு இரண்டு காரியங்கள் வேண்டும். ஒன்று பாரந்தாங்கமாட்டாமல் முனகுவது; மற்றொன்று தூக்கிச் செல்வது; இரண்டையும் ஏககாலத்தில் ஒருவனே செய்வது என்பது முடியாது. ஆதலால் நீ ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யவேண்டும்' என்று நரி சொல்லிற்றாம். இதைக் கேட்ட சிங்கம் முனகுவது தனது பெருமைக்கு ஒத்ததல்ல என்று கொண்டு பன்றியின்

உடற் குறையைத் தூக்கிச் சென்றதாம். அதன் பின்னால் நரி முனகிக்கொண்டே சென்றதாம். இதுபோல பௌத்த சமயக் கொள்கையை நான் சுமந்து செல்லுகிறேன். என்னோடு ஒத்து, அது சரிதான் என்று முனகுவதற்குக்கூட உங்களால் முடியவில்லை.

வஸுபந்து வைசேஷிகர்களைக் கண்டித்ததோடு சாங்கிய தர்சனத்தையும் கண்டித்து, 'பரமார்த்த ஸப்ததி' என்ற ஒரு நூலை இயற்றினர். இது ஈஸ்வர கிருஷ்ணர் செய்த சாங்கிய ஸப்ததியின் கண்டனமாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், பரமார்த்தர் சாங்கிய நூலின் ஆசிரியராக விந்திய வாஸர் என்பவரைக் கூறுகிறார். வஸுபந்து தம் வாழ்வின் பிற்காலத்தேதான் மஹாயானத்தை மேற்கொண்டனர். அது வரை மஹாயானத்தை இவர் கண்டித்து வந்தமையால், அதற்குப் பரிகாரமாகத் தன் நாவை அறுத்துகொள்வேன் என்றனராம். அப்போது அவருடைய சகோதரராகிய அஸங்கர் அவரைத் தடுத்து, உனக்குரிய நாவன்மையைக் கொண்டு மஹாயானக் கொள்கையை நிலைநாட்டி விடுவதே தக்க பரிகாரம் என்றனராம். வஸுபந்து அவ்வாறே செய்தனர். இவர், விஞ்ஞான வாதத்தை நிலைநாட்டி 'விம்ஸதிகா', 'திரிம்ஸதிகா' என்ற இரண்டு நூல்களை எழுதினர். இவருடைய வாழ்வின் இறுதியில் ஸுகாவதியை விரும்பி அதுதாபவின் பக்தராயினாராம். இவர் அயோத்தியில் தமது 80-வது ஆண்டில் உயிர் நீத்தனர். மாத்யமிக சமயத்தையும், விஞ்ஞான வாத சமயத்தையும் சமரஸப்படுத்தி 'மஹாயான ஸ்ரத்தோத் பாதம்' என்ற ஒரு நூல் இயற்றப்பட்டது. இதனை இயற்றியவர் அஸ்வகோஷர். ஜப்பானில் இந்த நூலுக்குப் பெரும் பிரசாரம் உண்டு.

நாகார்ச்சுனர், ஆர்யதேவர் இவர்களது சமயத்தைச் சார்ந்த வேறு இருவர் கி.பி. 5-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்து நூல்கள் இயற்றினர். இவர்கள் புத்த பாலிதரும், பாவ விவேகரும் ஆவர். புத்த பாலிதர் பிரசாங்கிக நெறியை நிறுவியவர். எதிரி வாய் மொழி கொண்டே பரபக்கம் அபத்தம் என்று சொல்ல வைப்பதுதான் இந்நெறி. பாவ விவேகர் சுவாதந்திர நெறியை நிலை நாட்டினார்.

**திங்நாகர், தர்மபாலர்**

கி. பி. 5-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்திரமதி, திங்நாகர், தர்மபாலர் என்ற மூவரும் வஸுபந்துவின் நெறியைப் பின்பற்றியவர்களாவர். இவர்களுள் ஸ்திரமதி 'ரத்ன கூடம்' முதலிய நூல்களுக்கு வியாக்கியானம் செய்தவர். தர்மபாலர் 'விஜ்ஞப்தி மாத்ரதா ஸித்தி' என்ற நூலுக்கு உரை வகுத்தவர். இவர்கள்

எல்லோரையும்விட மிக மேம்பட்டவர் திங்நாகர். இவர்தான் பௌத்த தரிசனத்திற்குரிய தருக்க நெறியை ஸ்தாபித்தவர். இந்திய தத்துவ சாஸ்திர வரலாற்றில் முன்னணியில் நிற்பவர். இவர் இயற்றிய நூல்களில் நியாயப் பிரவேசம் என்ற ஒன்றுதான் வடமொழியில் நமக்குக் கிடைத்திருக்கிறது[1]. பிற நூல்கள் திபெத்திய மொழிபெயர்ப்பின் மூலமாகவே நமக்குத் தெரிய வருகின்றன. இவருக்குப் பின் வந்தவர் தர்மகீர்த்தி. இவர் 'நியாய பிந்து' என்ற நூலைச் செய்தவர்.

தர்மபாலருடைய சிஷ்யர்களுள் ஒருவர் சந்திரகீர்த்தி. எனவே, இவர் கி. பி. 6-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். தக்ஷிண இந்தியாவில் சமந்தம் என்ற இடத்தில் இவர் பிறந்தவர். இளமையிலேயே அறிவாற்றல் பெரிதும் வாய்ந்தவர். துறவை மேற்கொண்டு, பிடகங்களையெல்லாம் கற்று நாகார்ச்சுனரது நூல்களை ஓதி உணர்ந்தனர். பின்னர் நாலந்தாவில் ஒரு பண்டிதராக அமர்ந்து, மாத்யமிக தத்துவத்தைக் குறித்துப் பல நூல்கள் எழுதினர். இவர் தாம் பிராஸங்கிக வாதிகளுக்கு முக்கிய பிரதிநிதியாக உள்ளார். இவர் இயற்றியவற்றுள் முக்கியமானது 'மாத்யமிக அவதார' என்ற நூலாகும். இவரது உரைகளால் இவருடைய ஆழ்ந்த கல்வித் திறம் விளங்குகிறது. இப்போது நமக்குக் கிடையாத வட நூல்கள் பல இவரால் எடுத்தாளப்பட்டுள்ளன. இவர் எழுத்து வன்மையிலும் சிறந்து இருந்தார். ஆரியதேவரின் 'சதுஃஸதிக' என்ற நூலுக்கு இவர் எழுதிய வியாக்கியானம் இலக்கிய வளம் செறிந்ததாகும். பௌத்தக் கொள்கைகளையும், தத்துவக் கொள்கைகளையும் உதாரணங்களாலும் ஒப்புமைகளாலும் விளக்கிச் சுவை பெறச் செய்துள்ளனர்.

இவ்வுலகில் இன்பத்தைக் காட்டிலும் துன்பத்திற்கே அதிகக் காரணங்கள் உள்ளன என்பதை விளக்குவதற்குப் பின்வரும் உவமானக் கதை கொடுக்கப்பட்டுள்ளது :

> ஓர் அரசகுமாரியின் சுயம்வரம் நடைபெறுகிறது. அப்போது பல, அரசர்களும் அவளை விரும்பி வருகிறார்கள். அவருள் ஒருவன் தவிர, அவளை நாடி வந்த மற்றையோரெல்லாம் துன்பம் அடைகிறார்கள். அவள் அவன் ஒருவனுக்கே மகிழ்ச்சியைத் தருகிறாள். பலரும் அவளை விரும்பிய போதிலும் அவர்களுக்கு அவள் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் வருந்துகிறார்கள்.

1. மணிமேகலையில் 29-ம் காதையில் வரும் தருக்கப் பொருள்கள் இந்நியாயப் பிரவேசத்தினின்றும் கொள்ளப்பட்டவை.

சந்திரகீர்த்தியின் காலத்தவனும், அவனுக்கு எதிரியும் ஆனவன் சந்திரகோமின் என்பவன். இவன் இலக்கணத்திலும் கவிதையிலும் தத்துவத்திலும் வல்லவன் என்று பெரும் புகழ் படைத்திருந்தான். 'சிஷ்யலேக தர்ம காவியம்' என்பது இவன் இயற்றிய நூல்களுள் ஒன்று. லோகாநந்த நாடகத்தையும் இவன்[1] இயற்றியுள்ளான்.

**சாந்தி தேவர்**

7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சாந்திதேவர் மஹாயான பௌத்தத்தை உபதேசித்து வந்த பிற்கால ஆசிரியர்களுள் சிறந்தவர். இவர் சௌராஷ்டிரத்திலே அரச வம்சத்தில் பிறந்தவர். ராஜ்யத்தைத் துறந்துவிடும்படியாகத் தாரா தேவி ஆணையிட, அவ்வாறே துறந்தனர். மஞ்சு ஸ்ரீ என்ற போதி ஸத்துவரிடம் உபதேசம் பெற்றனர். இவர் மந்திர சக்தி வாய்ந்தவர் என்றும், பஞ்சசிம்மன் என்ற அரசனிடத்தில் மந்திரியாயிருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. முடிவில் இவர் துறவு நெறியையே கைக்கொண்டனர். தர்ம பாலருக்குப் பின் வந்த ஜயதேவரிடம் இவர் மாணாக்கராயிருந்தவர். இவர் இயற்றியனவாக 'சிக்ஷா சமுச்சயம்', 'ஸூத்திர சமுச்சயம்', 'போதி சர்யாவ தாரம்' என்ற மூன்று நூல்கள் கூறப்படுகின்றன. இவர் பெருங் கல்வியாளர். பல நூல்களினின்றும் மேற்கோள் எடுத்து அப்படியே அமைத்திருக்கின்றனர். போதி சர்யாவதாரத்தில் காணும் பாடல்கள் சமயப் பாடல்களுள் மிகச் சிறந்தவை என்று கொள்ளலாம். இதில் அங்கங்கே கூறப்படும் நீதிகள் அறியத் தக்கன.

சினம், பகை, காமம் என்பன நமக்குப் பெரும் பகையாய் உள்ளன என்று ஓர் இடத்துக் கூறுகிறார். கை, கால் முதலியன ஒருவனது உறுப்புக்களாதலினாலே அவனது அன்பிற்கு அவை எவ்வாறு உரியனவாய் இருக்கின்றனவோ, அவ்வாறே போதி ஸத்துவருடைய அன்பிற்கு எல்லா உயிர்களும் உரியவை. தன் அயலானும் தானும்முற்றிலும் ஸமம் என்ற பரமாத்ம ஸமதையை மிக்க சொல்வன்மையோடு இவர் வற்புறுத்திக் கூறுகின்றார்.

8-வது நூற்றாண்டில் ஸாந்தரக்ஷிதர் என்பவர் 'தத்துவ சங்கிரகம்' என்ற நூலை இயற்றினர். இது ஸ்வாதந்திரிக யோகாசார நெறியை மேற்கொண்டு, ஏனைய தத்துவ தரிசனங்களையெல்லாம் கண்டித்து ஒதுக்குகின்றது. கண்டிக்கப்படும் ஆசிரியர்களை இவர் பெயரால் உணர்த்தவில்லை. ஆனால்,

---

1. வட மொழியில் வியாகரணம் செய்தவருள் இவன் ஒருவன்; இந்திரனை யடுத்துக் கூறப்படுகிறான்.

இந்நூலுக்கு இவர் சிஷ்யராகிய கமல ஸீலர் இயற்றிய வியாக்கியானத்தினின்றும் அப்பெயர்களை அறிகிறோம். அவர்களுள் வஸுமித்திரர், தர்மத்திராதர், கோஷகர், புத்த தேவர், ஸங்க பத்திரர், வஸுபந்து, திங்நாகர், தர்மகீர்த்தி என்பவர்கள் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர லோகாயதம் பற்றிய ஆசிரியர்களையும், ஜைன தத்துவ ஆசிரியர்களையும், சாங்கிய, நியாய, மீமாம்ச ஆசிரியர்களையும் இவர் குறிப்பிடுகிறார். இவர் நாலந்தாவிலிருந்து திபெத்துக்குச் சென்று அங்கே ஒரு மடத்தை கி. பி. 749-ல் ஸ்தாபித்தவர். அங்கே 13-ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 762-ல் மரணமடைந்தனர். லாமா சமயத்தின் ஸ்தாபகரான பத்ம ஸம்பவர் இவரது மைத்துனர்; இவர்க்குச் சமய முயற்சியில் துணைபுரிந்தவர். இறுதியாக கி.பி. 11-ம் நூற்றாண்டிலும் 12-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த அத்வயவஜ்ரர் என்பவரைக் கூறுதல் வேண்டும். இவர் சிறு நீதிச் செய்யுட்கள் பலவற்றை இயற்றியவர்.

### மாஹாத்மியங்கள், தோத்திரங்கள், தாரணிகள், தந்திரங்கள்

மஹாயான ஸூத்திரங்களுக்கும் புராணங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது முன்பே கூறப்பட்டது. புராணங்களின் இறுதியில் இவை கூறும் தெய்வங்களுக்குரியனவாக மாஹாத்மியங்களும், ஸ்தோத்திரங்களும், கல்பங்களும் உள்ளன என்பதை அறிவோம். இது போன்றே 'ஸ்வயம்பூ புராணம்' என்ற பௌத்த புராணத்தில் ஒரு மாஹாத்மியம் காணப்படுகிறது. இது நேபாள தேசத்தில் கட்மந்துவை அடுத்துள்ள ஸ்வயம்பூ சைத்தியத்தின் மாஹாத்மியத்தை விளக்குவது; யாத்திரிகர்களின் உபயோகத்திற்கென இயற்றப்பட்டது. எனவே, இதில் பல கிரியைகளின் வருணனை காணப்படுகிறது. புண்ணிய ஸ்தலங்கள் பற்றிய பல கதைகளும் இதில் கூறப்படுகின்றன.

இம்மாகாத்மியங்களைப் போலவே, பௌத்த ஸ்தோத்திரங்களும், சைவ, வைணவ சமயத்திற்குரிய ஸ்தோத்திரங்களை ஒத்திருக்கின்றன. இந்த ஸ்தோத்திரங்களில் சில மஹாவத்து, லலிதவிஸ்தரம் முதலிய பண்டை நூல்களில் பிற்காலத்தே புகுத்தப்பட்டன. மாத்ருசேதர் இயற்றிய ஸ்தோத்திரங்களைப் பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். நாகார்ச்சுனர் இயற்றிய சதுஹ்ஸ்தவம் என்பது நான்கு ஸ்தோத்திரப்பாக்கள் அடங்கிய ஒரு தொகுதியாகும். ஹர்ஷவர்த்தனச் சக்கரவர்த்தி (கி. பி. 600-647) ஹ்யூன்-த்ஸாங் உபதேசத்தால் பௌத்த மதத்தை மேற்கொண்டவர். இவர் 'சுப்ரபாத ஸ்தோத்திரம்' என்ற ஒரு ஸ்தோத்திர நூலை இயற்றியுள்ளார். 9-வது நூற்றாண்டில் தேவபாலன் ஆளுகையில் வாழ்ந்த வஜ்ரதத்தர் 'லோகேஸ்வர

ஸதகம்' என்ற ஸ்தோத்திர நூலை இயற்றினர். சாபத்தால் இவரைக் குட்ட நோய் பீடித்ததென்றும், லோகேஸ்வரரை (அவலோகிதேஸ்வரர்) வணங்கி, அவர் அருளால் அது நீங்கப் பெற்றனர் என்றும் கூறுவர். இதில் அவலோகிதேஸ்வரருடைய வருணனை பூரணமாயுள்ளது. அவருடைய ஐம்பது திருநாமங் களும், அவருடைய குணங்களும், அவருடைய அன்பும், அவருடைய அருளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

**தோத்திரங்கள்**

'பரமார்த்த நாம ஸங்கீதி' என்பன எஜுர் வேதம், மஹா பாரதம், புராணம் முதலியவற்றில் காணப்படுவது போன்ற வேறொரு ஸ்தோத்திரமாகும். இதில் தெய்வத்திற்குரிய பெயர் களும், இயற்கைப் பெயர்களும், அடைமொழிப் பெயர்களும் வரிசையாகக் காணலாம். 'ஸப்த புத்த ஸ்தோத்திரம்' என்ற ஒரு நூல் மிகப்பூர்வ காலத்து வாழ்ந்த ஆறு புத்தர்களையும், பின் சாக்கிய முனியையும் பின்னர் புத்த மைத்திரேயரையும் வாழ்த்துகின்றது. புத்த தேவதையாகிய தாரா தேவியைக் குறித்துப் பல ஸ்தோத்திரங்கள் உள்ளன. இந்தத் தாரா தேவி அவலோகிதேஸ்வரரின் தேவியாவர். இத்தெய்வத்திற்கு 'ஸ்ரக்தரா' என்ற ஒரு பெயருண்டு. இத் தெய்வம் பற்றிய ஸ்தோத்திரங்களில் ஒன்று 'ஸ்ரக்தரா ஸ்தோத்திரம்' ஆகும். வடமொழி யாப்பு வகையில் இப் பெயர் கொள்ளப்பட்டுள்ளது.

'பக்தி ஸதகம்' என்ற ஒரு ஸ்தோத்திர நூல் ராமச்சந்திர கவி பாரதி என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. இவர் பராக்கிரம பாகுவின் காலத்தில் (அதாவது கி. பி. 1245-ல்) ஈழ தேசத்திற்குச் சென்றனர். அங்கே பௌத்த மதத்தைத் தழுவிய பின் இந்த ஸதகத்தை இயற்றினர். ராமன், கிருஷ்ணன், சிவன் முதலிய தெய்வங்கள் பற்றிய பக்திப் பாடல்களைப்போல், இது புத்தரைப் பற்றியது.

**தாரணி**

மஹாயான இலக்கியங்களில் ஒரு முக்கியமான பகுதி தாரணி[1] என்பது. இது ரக்ஷா மந்திரங்களைத் தெரிவிப்பது. அதர்வவேதத்தில் காணப்படும் மந்திர தந்திரங்களைப்போல, புத்த சமயத்திலும் இம்மந்திரங்கள் உதவுகின்றன. தங்கள் பிரமாண நூல்களில் காணும் ஸூத்திரங்களையே மந்திரங் களாகப் பாவித்து மஹாயான பௌத்தர்கள் பயன்படுத்தி வந்தனர்.

1. திவாகரம் முதலிய நிகண்டுகளில் காணும் நவதாரணை தாரணிகளைக் குறிப்பன என்று கருதலாம்.

மஹாயானத்தில் மந்திரயானம், வஜ்ர யானம் என்ற இரு பிரிவுகள் உள்ளன. இவற்றுள் மந்திரயானம் மந்திரங்களையும், பதங்களையும், அசைகளையும் முக்தி நெறிக்குச் சாதனமாகக் கூறுவன. வஜ்ரயானம் இவ்வாறு மந்திரங்களேயன்றி வஜ்ரம் என்ற பெயரினால் குறிக்கப்படும் எல்லாப் பொருள்கள் மூலமாகவும் முக்தியடையலாம் என்று உணர்த்துகிறது. வஜ்ரம் என்பது வயிரம். இது கடினமாயுள்ளது; பிளக்க முடியாதது; எரிக்க முடியாதது; அழிக்க முடியாதது. இந்திரன் ஆயுதமாகிய இடிக்கும் வஜ்ரம் என்று பெயர். இதுபற்றியே இந்திரனுக்கு வஜ்ரபாணி என்ற பெயரைப் பௌத்தர்கள் வழங்குவர். துறவிகள் முதலானோர் கைக்கொள்ளும் ஆயுதமும் வஜ்ரமே. சூனியமும் விஞ்ஞானமும் வஜ்ரம் என்ற பெயரினாலே உணர்த்தப் படுகின்றன. சாக்தர்கள் பெண்குறியைப் பத்மம் என்பதுபோல, ஆண்குறியை வஜ்ரம் என்று வழங்குவர்.

அத்வைத சமயத்தை வஜ்ரயானம் விளக்குகிறது. எல்லா உயிர்களும் வஜ்ர தத்துவங்கள். வஜ்ர தத்துவம்தான் எல்லா உயிர்களிடத்தும் காணப்படுவது. தர்ம காயம், ஸம்போக காயம் நிர்மாண காயம் என்ற திரிகாயங்களுக்கு மேலாக நான்காவது காயம் உண்டென்று கொண்டு அதனை ஸுககாயம் என்று பௌத்த சாக்தர்கள் வழங்குவர். இங்குக் கூறியவற்றால் அத்வைத தத்துவம், மாந்திரிகம், காம சாஸ்திரக் கருத்துக்கள் முதலியன ஒன்றாகக் கலந்து பௌத்தக் கருத்துக்களையும் கூட்டியமைத்தது வஜ்ரயானம் என்பது விளங்கும்.

**தந்திரங்கள்**

நான்கு வகையான தந்திரங்கள் உள்ளன. கிரியா தந்திரம், சரியா தந்திரம், யோக தந்திரம், அனுத்தரயோக தந்திரம் என்பன. இந்த நூல்களில் ஸித்தியடைவதற்குரிய மார்க்கங்கள் சொல்லப்படுகின்றன. அன்றியும், அணிமா முதலிய ஸித்தி களையும், பரகாயப் பிரவேசம், ஆகாய சலனம், அபீஷ்ட பூர்த்தி முதலிய ஸித்திகளையும் பெறலாம். மேலும், தெய்வங்கள், மக்கள் முதலியோரை வசீகரிக்கவும், நோய்களைப் பார்வை மாத்திரத்தில் தீர்க்கவும், திரிகால உணர்ச்சியடையவும், நிர்வாணம் பெறவும் இத்தந்திரங்கள் பயன்படும் என்பர்.

'சாதன மாலை' என்பது இந்நெறி பற்றிய ஒரு முக்கியமான நூல். இந்த சாதனத்தில் காணப்படும் ஆசிரியர்கள் 7-ம் நூற்றாண்டிலிருந்து 11-ம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் பற்பல காலத்தில் வாழ்ந்தவர்கள். தந்திரங்களுள் மிக முற்பட்டவை மஹாயான சூத்திரங்களோடு பெரிதும்

ஒற்றுமையுடையன. இம் முற்பட்ட தந்திரங்களுள் 'ததாகத குஹ்யகம்' என்பது மிக முக்கியமானது. இதை இந்திர பூதி ஆதாரமாகக் காட்டியிருக்கின்றனர். ஆனால், இதில் காணும் பொருள்கள் மஹாயானத்திற்குரிய ஒழுக்கம் பற்றியனவாம். போதிஸத்துவர் எவ்வாறு தமது சக்தியைப் பெறுகின்றார் என்பது கீழ்வருமாறு உணர்த்தப்படுகின்றது.

> போதிஸத்துவர் தமது சரீரத்தையும் உயிரையும் தியாகம் செய்தவர் ; ஆனால், தர்மத்தைக் கைவிடமாட்டார் ; எல்லா உயிர்களின் முன்னும் தலை தாழ்த்தி வணங்குவர் ; தாம் கர்வத்திற்கு இடங்கொடுக்கமாட்டார். எனவே, உயிர்களிடத்துப் பொறுமையுடையவர். அவைகளுக்கு இடையூறுகள் விளைக்கமாட்டார். பசியால் வருந்துபவர்களுக்குச் சுவையுள்ள உணவு அளிப்பர். அச்சங்கொண்டவர்களுக்குப் புகலிடமாயுள்ளவர். நோயாளிகளைக் குணப்படுத்துவதில் மிக்க மனவெழுச்சியுள்ளவர். ஏழைகளுக்குப் பொருள் நல்குவர். ததாகதரது கோயில்களைச் சுண்ணம் தீற்றிப் பழுது பார்ப்பர். உயிரினங்களுக்கு உவப்பான செய்தியைக் கொண்டு வருவர். தமது உடைமைகளை ஏழைகளுக்கும் துர்ப்பாக்கியர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பர். தளர்ந்து சோர்ந்திருப்பவர்களது பாரத்தைத் தாமே வகிப்பர்.

'மஞ்சுஸ்ரீ மூலகல்பம்' என்ற ஒரு நூல் 9-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தோன்றியது. இதில் சாக்கிய முனிவர் மந்திரங்கள், முத்திரைகள், மண்டலங்கள் முதலியவற்றைக் குறித்து மஞ்சுஸ்ரீக்கு உபதேசம் செய்கின்றார். ஸர்வஸித்தி அடைவதோடு, கொடியோர்களது மந்திரங்களின் வலியை அழிப்பதற்கும், பாவங்களைப் போக்குவதற்கும் மந்திரங்கள் பயன்படும் என்பர். இதனைக் க்ளுஹூம் மந்திரம் என்பர். இங்ஙனமே, ப்ரூம் மந்திரங்களும் ஆற்றல் வாய்ந்தனவாம். இந்த மூலகல்பம் கி. பி. 980-முதல் 1000-வரையுள்ள காலப் பகுதியில் சீனத்தில் மொழிபெயர்க்கப்பெற்றது.

சண்ட மஹா ரோஷண தந்திரம் சில தத்துவங்களை உபதேசிப்பதோடு யோகினி வணக்கத்தையும் புலப்படுத்துகிறது. இந்த யோகினிகளில் சிலர் மோக வஜ்ரீ, பிசுன வஜ்ரீ, ராஜ வஜ்ரீ முதலானவர்களாம்.

> 'சண்ட மஹா ரோஷணனுடைய வாசஸ்தலத்திற்குப் பெண் உதவியின்றிச் செல்லுதல் கூடுமா?' என்று பகவதி இறைவனை நோக்கிக் கேட்கிறாள். இறைவன், 'தேவீ !

அது முடியாது' என்கின்றனர். ஆனந்தத்தால்தான் மெய்ஞ் ஞானம் பெறுதல் கூடும்; ஆனந்தத்திற்குப் பெண் அவசியம். இவைபோன்ற கருத்துக்கள் மிகுதியாயுள்ளன.

இந்த வஜ்ராயுத நெறி பிற்காலத்தில் மிக இழிந்ததாகப் போய்விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. தந்திர நெறிகள் மிகப் பரவியிருந்த இடம் அஸ்ஸாமும், வங்காளமும் தான். இது தோன்றியதும் பெரும்பாலும் இப்பிரதேசங்களில் தான் என்று எண்ணலாம்.

மேற்கூறிய தந்திர நூல்களிற் காணும் மொழி நடை அதன் உட்பொருளைப்போலவே மிக மிக அநாகரிகமாக உள்ளது.

**முடிவுரை**

வைதிக பௌத்த இலக்கியங்களின் வரலாறுகளை மேலே ஒருவாறு கூறி முடித்தேன். வைதிக சமயம் போலன்றி, பௌத்த சமயம் கீழ்நாடுகளில் பெரிதும் பரவியுள்ளதை நாம் அறிவோம். உலக மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பௌத்தர்களே. இச்சமயத்தின் பெருமையை மேல்நாடுகளிலுள்ள அறிஞர்களும் உணர்ந்து போற்றி வருகின்றனர். இந்த அறிஞர்கள் பௌத்த சமயத் தத்துவங்கள், கதைகள் முதலியவற்றிற்கும் கிறிஸ்து சமயக் கொள்கைகள், கதைகள் முதலியவற்றிற்குமுள்ள தொடர்புகளைக் குறித்து ஆராய்ந்து வருகிறார்கள். இதிலிருந்து சில உண்மைகள் வெளிப்படக்கூடியனவே. இவ்வகை ஆராய்ச்சி யால் பௌத்த இலக்கியங்கள் உலகப் பொது இலக்கியங்களாக மதிக்கப்பட்டு வருகின்றன.

தமிழிலக்கியத்திற்கும், வைதிக பௌத்த இலக்கியங் களுக்கும் ஒப்புமை பலவாக உள்ளன. ஒரு சிலவற்றை அங்கங்கே சுட்டியிருக்கிறேன். ஒப்புமையால் விளையும் இன்பமேயன்றி, இந்த இலக்கியங்கள் இயல்பிலேயே மிகச் சுவை பொருந்தியன வாயும் உள்ளன.

வரலாற்று முறையில் பௌத்த இலக்கியங்களுக்கு ஒரு முதன்மையான இடம் உண்டு. இந்திய இலக்கியங்களின் கால நிர்ணயத்திற்கு புத்தரது வரலாறு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது. வைதிக இலக்கியங்களுக்கு அடுத்தபடியான தொன்மை வாய்ந்து மக்களது வாழ்வை ஒழுக்க நெறியில் செலுத்தித் தூயதாக்கிய பௌத்த மதத்தின் இலக்கியங்கள் என்றும் போற்றத்தக்கனவாகவே இருக்கும்.

# பேராசிரியர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

(பின் இணைப்பு)

# பேராசிரியர் நூற்றாண்டு விழா

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை நூற்றாண்டு 12-10-1990ல் தொடங்கி 11-10-91ல் முடிவடைகிறது. 1991 ஏப்ரல் திங்கள் 22-ம் நாள் சென்னைப் பல்கலைக்கழகமும், பேராசிரியர் நினைவு மன்றமும் இணைந்து பேராசிரியரின் நூற்றாண்டு விழாவையும், மூன்றாம் தொகுதி 'தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்'— நூல் வெளியிட்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடின. சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டிடத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு தமிழ்நாடு ஆளுநர் மேதகு பீஷ்ம நாராயண் சிங் தலைமை வகித்தார். அப்பொழுது ஆளுநரின் ஆலோசகராகவிருந்த திரு. வி. கார்த்திகேயன் நூலின் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் திருஉருவப் படத்தை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ். சாதிக் திறந்து வைத்தார்.

திரு நீதிபதி எம். எம். இஸ்மாயில், தமிழ்ப் பேராசிரியர்கள் டாக்டர் பொன் கோதண்டராமன் (பொற்கோ), டாக்டர் அ. அ. மணவாளன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள். இந்தியக் குடியரசுத் தலைவர் திரு R. வெங்கட்ராமன் அவர்கள் அனுப்பியிருந்த பாராட்டுச் செய்தியை, மன்றத்தின் தலைவர் திரு. R. திருமலை, I.A.S. (ஓய்வு) தொடக்கத்தில் வாசித்தபின்னர், அனைவரையும் வரவேற்றார். பேராசிரியரின் மூத்த மகளார் திருமதி வை. சரோஜினிக்கும், மருகர் எஸ். எஸ். இராமசாமிக்கும் ஆளுநர் பொன்னாடை போர்த்திக் கவுரவித்தார். இறுதியில் மன்றத்தின் துணைத் தலைவர் டாக்டர். இ. சுந்தரமூர்த்தி நன்றி கூறினார். நாட்டுப் பண்ணுடன் விழா இனிது முடிவுற்றது.

இவ்விழாவினை யொட்டி, பேராசிரியரின் புகைப்படங்கள், அவர் இயற்றிய நூல்கள், பதிப்பித்த நூல்கள், கையெழுத்துப் படிகள் முதலியன அடங்கிய கண்காட்சியும் நடைபெற்றது.

மற்றும் விழாக்களும், நூற்றாண்டு நினைவு கருத்தரங்குகளும், பல்வேறு அமைப்புக்களின் சார்பில் சிறப்பாக நடைபெற்றன :

**24-3-91 — திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்**

| | | |
|---|---|---|
| 1991 மார்ச் 29, 30, 31 | — | திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை |
| | | நாகர் கோவில் கலை இலக்கியப் பெருமன்றம் |
| 1991 ஏப்ரல் 10, 11, 12 | — | தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச் சுவடிகள் துறை, 3 நாள் கருத்தரங்கு |
| 1991 மே 4 | — | நூலாசிரியர் பெருமன்றம், சென்னைக் கிளை, ராஜாஜி நூலகம், தக்கர் பாபா வித்தியாலயம் |
| 1991 ஜுன் 28, 29 | — | நியூ செஞ்சுரி வாசகர் பேரவை, சுவாகத் ஹோட்டல் அரங்கம் |
| 1991 அக்டோபர் 11 | — | புதுவைப் பல்கலைக் கழகம், தமிழ்த் துறை. |
| ,, ,, | | கேரள பல்கலைக் கழகம், தமிழ்த் துறை இளங்கோ மன்றம். |

'வையகம்'
சென்னை-28.

வையாபுரிப் பிள்ளை
நினைவு மன்றத்தார்

राष्ट्रपति
भारत गणतंत्र
PRESIDENT
REPUBLIC OF INDIA

New Delhi,
April 2, 1991.

Dear Sri Tirumalai,

I am glad that the centenary of Professor S. Vaiyapuri Pillai is being suitably commemorated by the world of Tamil scholarship. It is appropriate that the collected works of this distinguished writer, critic and lexicographer should be published in a series of volumes. I am sure this initiative will encourage and inspire Tamil scholars to emulate the example of Prof. Vaiyapuri Pillai.

Please convey my felicitations to the Madras University and the Professor Vaiyapuri Pillai Centenary Celebrations Committee.

With regards,

Yours sincerely,

**R. VENKATARAMAN**

Sri R. Tirumalai,
Chairman,
Standing Irrigation & Water
Resources Commission,
"Tamarai",
31-A, Greenways Road,
Madras - 600028.

# WELCOME ADDRESS

### By Thiru R. TIRUMALAI

It is my privilege to welcome our distinguished guests for this Centenary Celebration of Prof. S. Vaiyapuri Pillai. We are particularly grateful to the Governor of Tamilnadu, Sri Bhishma Narain Singh. He readily accepted our invitation to preside over the celebrations, co-sponsored by the University of Madras and the Vaiyapuri Commemoration Society. His gracious acceptance has significance. As head of the State he has identified himself with the cultural values of this part of India. His Gandhian public spirit, and sense of recognition of great learning and pioneering effort of one of the distinguished scholars of this University befits him as the Chancellor of the University.

Thiru Karthikeyan is my batchmate, and was, for some time, Secretary to the Government, Tamil Development. He has participated in the International Tamil Conference. He has kindly agreed to receive the Third Volume to be released by the Governor.

Justice Ismail is a lifetime friend of mine, and a connoisseur of Tamil literature. He was also a fellow student with me under Professor Vaiyapuri, and we owe to him the approach and techniques of literary appreciation. Justice Ismail's admiration of Kamban as a poet and philosopher is infectious. He has kindly consented to open the Exhibition which has been arranged in an adjoining room (F 37) on the Northern Wing.

Thiru Sathikh, Vice-Chancellor readily agreed to co-sponsor this function in recognition of the services of Prof. Vaiyapuri. I recollect the room downstairs on the north eastern wing of the old University Building where he used to alight from a Rickshaw punctually at 10-30 a.m. and spent long hours, ever keeping the door open to Scholars who sought his help. We are grateful to Thiru Sathikh for his willing co-operation and assistance in organising this function ; our thanks are also due

to the Registrar, the Department of Tamil, and other officers and staff of the University. Appropriately, Thiru Sathikh has unveiled the portrait of the Professor.

Professor Vaiyapuri was a pioneer in many respects. He succeeded in the crowning effort of over a quarter of a century in bringing out the Tamil Lexicon, besides publishing critical editions of classics. Above all, he brought to bear the principles of literary criticism and scientific historical investigation on the Tamil literary and language studies. His writings bear the stamp of that fearless freedom of thought. He recognised literary merit wherever it was to be found, in the classics, in Subrahmanya Bharati, and in the contemporary short stories of Pudumai Pithan.

In this Centenary Year our homage to this great savant can take only one form - to carry on his work in the spirit in which he undertook it, to foster Tamil literary studies and enrich the common heritage of India, our motherland.

I welcome all of you, ladies and gentlemen, who have so kindly responded to our invitation.

I have now the pleasure in reading the gracious message from the President of India, Sri R. Venkataraman for the occasion. We are grateful to him.

# வரவேற்புரை

## R. திருமலை I.A.S. (Retd.)

வணக்கம், உங்கள் எல்லோரையும் திரு வையாபுரி நூற்றாண்டு விழாவிற்கு வரவேற்கிறேன். இந்த விழாவில் ஆளுநர் அவர்கள் தலைமை தாங்கி திரு வையாபுரிப்பிள்ளை அவர்களது நூற்தொகையில் மூன்றாவது தொகுப்பான ''காவிய காலம்'' என்னும் நூலை வெளியிட இசைந்துள்ளார்கள். அவர்கள் இந்த பல்கலைக் கழக வேந்தர் என்ற நிலையிலும் இது மிகவும் பொருத்தமுடையது.

திரு வையாபுரிப் பிள்ளை அவர்கள் புலமையும், பண்பும் நிறைந்தவர்கள். புலமைக்கு ஏற்ப அடக்கமும், பொலிவும் பொருந்தியவர்கள். ஆழ்ந்த சிந்தனை, சான்றுத்திரட்டு, காரண-காரிய இசைவு, நுட்பமான ஆய்வு, கருத்தில் தெளிவு, முடிவில் துணிவு இவை எல்லாம் அவர்களது நூல் நயங்கள்.

இந்நூல்கள் பல கிடைப்பதற்கு அரிதாயிருந்தன. அவர்களது நூற்றாண்டு நிறைவை நிறைவுறச் செய்வதற்கு இந்நூல்களை திரும்பப் பதிப்பதுதான் சிறந்த வழி. அவையே அவர்களது அயராத உழைப்பிற்கும், புலமைக்கும் நிலை - நினைவுச் சின்னமாக அமையும். இந்த உணர்வின் வெளியீடுதான் திரு வையாபுரி நூற்றாண்டு நினைவு மன்றம். இதைத் தோற்றி வைத்த பேராசிரியர் திரு. கே. சுவாமிநாதன் அவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் துறை போகியவர்கள். திரு. வையாபுரி அவர்களின் வாழ்நாள் நண்பர். நல்ல இலக்கியத்தில் திளைத்தவர்கள். இந்த முயற்சியில் ஊன்றி அரும்பாடுபட்டவர்கள். திரு பிள்ளையவர்களின் மகள் திருமதி சரோஜினியும், மருகர் திரு இராமசாமி பிள்ளை அவர்களும் ஆவர். அவர்களது அவாவினை அவர்கள் முயற்சி திருவினையாக்கியுள்ளது.

மன்றம் மேற்கொண்ட வெளியீட்டுப் பணிக்கு உதவியவர்கள் பலர். குறிப்பாக மத்திய அரசு, கல்வி, கலைத்திணை ரூ. 32,000/-ம், தமிழ்நாடு அரசு ரூ. 10,000/-ம் சென்னை, மதுரை-காமராஜர் பல்கலைக் கழகங்கள் தலா ரூ. 10,000/-ம் வழங்கி உதவினர். அவர்களுக்கு மன்றம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது. எனவே, முதல் இரண்டு தொகுப்புக்களும் வெளியிடுவது எளிதாயிற்று. அச்சிட்ட புத்தகங்களும் முழுவதும் விலைபோகும் தருவாயில் உள்ளன.

இன்று ஆளுநர் அவர்கள் வெளியிடும் மூன்றாவது தொகுப்பு-தமிழ் இலக்கிய வரலாற்றில் காவிய காலம். இது ஆய்வு செறிந்த நூல். வரலாற்றில் ஒரு பெரும் சாதனை காலத்தைப் பற்றியது, கருத்தின் ஆழமும் கவிதை நயமும் செழித்து, காவிய-நாடக நடையும், செறிந்துள்ள தமிழ் நூல்கள் பல அக்காலத்தவை. இதை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிடுவது நம் பண்பாட்டின் பெரு நிலையை போற்றுவதாக அமையும்.

வையாபுரி நூல்களில் எஞ்சிய நாலு தொகுப்புக்களையும் அச்சிட்டு வெளியிடுவதே இம்மன்றத்தின் நோக்கம். இதற்கு வேண்டிய வலிவும், ஆதரவும் கிட்டும் என்பது எங்கள் துணிவு.

பேராசிரியர் அவர்களின் 4 நூல்கள் சென்னை பல்கலைக் கழக வெளியீடுகள். அவற்றில் புறத்திரட்டு, திரிகடுகம், சிறு பஞ்சமூலம் என்ற கீழ்க் கணக்கு நூல்கள் பெருமைபடைத்தவை. அந்நூல்களும் அரிதாயுள்ளன. இவ்விழாவில் மிக்க ஊக்கமும், ஆதரவும் அளித்த துணை வேந்தர், திரு சாதிக் அவர்கள் அந்நான்கு நூல்களையும் மறுபடியும் பதிப்பிக்க ஆவன செய்வார்கள் என்று நம்பி அவர்களை இதைச் செயலாக்க வேண்டிக்கொள்கிறோம்.

இந்த விழாவில் பங்கேற்கும் திரு கார்த்திகேயன், நீதிபதி இஸ்மாயில், திரு சாதிக் அவர்களுக்கு எங்கள் அன்பும், நன்றியும்.

ராஷ்டிரபதி, திரு வெங்கட்ராமன் அவர்களது பாராட்டுத் திருமுகத்தை நான் பெருமிதத்துடன் படிக்கக் கேட்டீர்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி.

உங்கள் அனைவரையும் இவ்விழாவிற்கு வரவேற்பதில் எனக்கும், மன்றத்திற்கும், பல்கலைக்கழகத்திற்கும் மிக்க மகிழ்ச்சி. எங்களுக்கு நீங்கள் அளித்த பெருமை. நன்றி. வணக்கம்.

# பேராசிரியர் ஆராய்ச்சிப் பணி

டாக்டர். பொன் கோதண்டராமன்
(தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்)

வாழும் மொழிகளில் ஆராய்ச்சிக்கு இடமில்லை என்று கருதிய காலகட்டத்தில் இந்தியாவில் உள்ள மாநில மொழிகளில் எப்படிப்பட்ட ஆய்வுகள் நடக்க வேண்டும் என்பதைப்பற்றி எண்ணிப்பார்த்து விரிவாக எடுத்துரைத்தவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள். இந்தியாவில் உள்ள தாய் மொழிகள் புறக்கணிக்கப்பட்ட அந்த நேரத்தில் தாய்மொழிக் கல்வியின் இடம் சரியாக உணரப்படாத நேரத்தில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தாய்மொழியின் இன்றியமையாமையை உணர்ந்து கூறியுள்ள ஒரு பகுதியை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

''நாம் நமது தாய்மொழிகளை வெகுகாலமாகப் புறக் கணித்துவிட்டோம் என்பது மறைக்க முடியாத ஓர் உண்மை. சில காலத்திற்கு முன்வரை, நமது கல்வித்திட்டத்தில் அவை களுக்கு மிகவும் தாழ்ந்த இடந்தான் கொடுக்கப்பட்டு வந்திருக் கிறது. அவைகள் இருக்கவேண்டுமிடத்தில் ஆங்கில மொழி புகுந்து ஆட்சி புரிந்து வந்தது. இப்பொழுதும் காலேஜ் கல்வியில் ஆங்கிலம்தான் தலைமை பெற்றிருக்கிறது. இதற்கு ஒப்புமையாக இந்நாட்டிற்குரியவர்களான நமக்கு, நமது அன்னிய அரசாங்கத் தினர் அளித்திருக்கும் ஓர் தாழ்ந்தபடியான நிலையைக் கூறலாம். தேசிய விடுதலையின் வாயிலை அணுகியிருக்கும் இந்தக் காலத்துங்கூடக் கல்விப் பயிற்சிக்குக் கருவியான மொழி எது என்பதுபற்றி மனக்கொதிப்புடன் பலரும் வாதித்து வருகிறார்கள். அன்னிய மொழியே தக்க கருவியாம் என்று போராடுபவர்களும் இல்லாமற் போகவில்லை. இது நம்முடைய லட்சியங்களினின்றும் நாம் எவ்வளவு தூரம் தவறி விழுந்து விட்டோம் என்பதை நன்றாகக் காட்டுகிறது. நம்முடைய தாய்மொழிகளை நமது கல்வியில் ஒவ்வொரு துறைக்கும் முற்ற உதவுங்கருவியாக நாம் கொண்டாலன்றி, நமது மொழிகள் வளரமாட்டா ; வளர்ந்து கொண்டே வரும் நமது தேவைகளுக்கு இவை முற்றும் உதவ மாட்டா ; அறிவு வளர்ச்சிக்கும் பயன்படமாட்டா. நமது மொழிகள் போஷணையற்று மெலிந்து, முடிவில் அழிந்துபோக நேரிடும். வேறொரு விஷயமும் இங்கே சிந்தித்தற்குரியது. நம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமானது நம் மனமும் மூளையும் வளர்ச்சியுற்று வரும் பருவமாகும். அப்பருவத்தில்

நாம் அருமையாகப் போற்றவேண்டிய சில ஆண்டுகளை அன்னிய மொழிகளைக் கற்பதிலே நாம் விரயஞ்செய்ய வேண்டியதாய் முடிகிறது. நம்மில் பலருக்கும் அவ்வகை அன்னிய மொழிக் கருவி ஒரு பாரமாக ஏற்படுகிறது. அதன் மூலமாக நாம் பெறும் அறிவு உயிர்த் தத்துவம் அற்று, ஞாபக மாத்திரையாய் அமைந்து விடுகிறது; முற்றும் உணரப்படாமல் அறிவோடு அறிவாய் ஒன்றிப் பெருகாமல் போய்விடுகிறது. மேலைநாட்டுக் கல்விப் பண்பினாலும், ஆங்கில மொழிக் கல்வியினாலும் நாம் அடைந்துள்ள நன்மைகளை நான் சிறிதும் மறந்துவிடவில்லை. இப்போது நிகழும் தேசிய மறுமலர்ச்சி நமது மேல்நாட்டுக் கல்வியின் விளைவே என்று நான் உறுதியாய் நம்புகிறேன். இவ்வாறு சொல்வதனால் நமது நன்றியறிவின் பொருட்டு எல்லாக் காலத்தும் மேலைநாட்டினருக்கு நாம் அடிமையாய் இருக்க வேண்டும் என்று ஏற்படாது. சரீரத்தால் அடிமைப்பட்டிருப்பதைக் காட்டிலும் அறிவினால் அடிமைப்பட்டிருப்பது மிகவும் கொடுமையானது. அடிமை வாழ்வு இயற்கை வாழ்வு அன்று. எவ்வளவு விரைவில் அதனை நீக்குகிறோமோ அவ்வளவு விரைவில் உலகமே நன்மை அடையும்''.

அவர் கூறியுள்ள இந்தக் கருத்துக்கள் இன்றைக்குங்கூட ஏற்புடைய கருத்துக்களாகவே இருக்கின்றன.

மொழி ஆராய்ச்சியைப் பற்றியும் இலக்கிய ஆராய்ச்சியைப் பற்றியும் சரியான முறையில் கருத்து உருப்பெறாத காலத்தில் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தம்முடைய ஆய்வைப் பல வகையான எதிர்ப்புக்கு இடையில் தொடர்ந்து நிகழ்த்தி வந்துள்ளார் என்பதை இங்கேநாம் நினைத்துப்பார்க்கவேண்டும். இந்திய நாட்டில் உள்ள வாழும் மொழிகளில், அதாவது, இந்திய நாட்டு மக்களின் தாய்மொழிகளில் ஆராய்ச்சிக்கு இடமில்லை என்று கருதிய நேரத்தில் இலக்கிய ஆராய்ச்சிக்கும் மொழி ஆராய்ச்சிக்கும் அவர் ஒரு விரிவான திட்டத்தையே வகுத்துக் கொடுக்கிறார். அவர் அன்று வகுத்துக் கொடுத்த திட்டம் இன்றும் பொருத்தமுடையதாகவும் தேவையானதாகவும் அமைந்திருக்கிறது. இன்றைய நிலையில் தமிழியல் ஆய்வுகள், இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டுப்புறவியல், பண்பாட்டியல், அழகியல், வரலாற்றியல், தத்துவஇயல், மொழி ஒப்பியல், இலக்கிய ஒப்பியல் என்றெல்லாம் பல்வேறு விரிந்து வளர்ந்து பெருகியிருக்கின்றன. இந்த ஆய்வுகளுக்கெல்லாம் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் ஏதாவது ஒருவகையில் முன்னோடியாக விளங்கி வருகிறார் என்பதை நாம் இங்கே மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

தனி நூல்களுக்கு விரிவுரையும் விளக்கவுரையும் வழங்குவது மட்டுமே புலமை என்று கருதப்பட்ட காலத்தில் அதிலிருந்து சற்று வேறுபட்ட நிலையில் தனிப்பட்ட சில பாடல்களுக்கு விரிவுரையும் விளக்கவுரையும் நிகழ்த்தி நூல் அளவுக்கு அந்த உரையை விரிவு செய்வது என்ற ஒரு சிறு வளர்ச்சி ஏற்பட்ட அந்த நேரத்தில் தமிழியல் ஆய்வுகளின் எல்லைகளை மிகப் பெரிய அளவுக்கு விரிவுபடுத்தித் தமிழியல் சிந்தனைகளை வளர்த்தெடுத்த பெருமை பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களையே சாரும்.

தமிழாராய்ச்சி வரலாற்றில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஒரு திருப்புமுனையாகத் திகழ்கிறார் என்பதை ஆய்வுலகம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆய்வுலகில் ஒரு அறிஞர் சொல்லுகின்ற எல்லாக் கருத்துக்களையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மேலும் ஆராயலாம் ; பல கருத்துகள் மறுக்கப்படலாம். இருந்தாலும் ஒரு ஆய்வாளனின் உழைப்பையும் அந்த ஆய்வாளன் ஆய்வுகளில் கொண்டிருந்த ஈடுபாட்டையும் யாரும் குறைத்து மதிப்பிடக் கூடாது. அப்படிப்பட்ட ஆய்வு நாகரிகம் நமக்குத் தேவை. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் வகுத்தளித்த திட்டங்கள் ஒரு நூற்றாண்டாக எந்த அளவுக்கு நிறைவேறி யிருக்கின்றன என்று பார்த்தால் நம்முடைய பணிகளில் இன்னும் அக்கரையும், ஊற்றமும், வேகமும் வேண்டும் என்பதை நாம் நிச்சயமாக ஒப்புக்கொண்டாக வேண்டும். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் அவர் வகுத்த திட்டங்களை நிறைவேற்றி மேலும் பல புதிய திட்டங்களைத் தீட்டவேண்டும் என்று நாம் உறுதிபூண வேண்டும். ஆராய்ச்சியையும், ஆராய்ச்சி யாளர்களையும் மதித்துப் போற்றுகின்ற இயல்பை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். பேராசிரியர் அவர்களின் பணிகள் ஆங்காங்கே சிதறிக்கிடந்த நிலையை மாற்றி ஆய்வுலகுக்கு அவருடைய கருத்துக்கள் யாவும் ஒருங்குகிடைக்கும் வகையில் அவற்றையெல்லாம் தொகுத்துப் பல தொகுதிகளாக நூலுருவம் கொடுத்து வருகிற நூற்றாண்டு விழாக் குழுவினருக்குத் தமிழ் உலகம் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் நன்றி கூறவேண்டும்.

ஒரு சமுதாயம் மேம்பட வேண்டுமானால் அந்தச் சமுதாயம் ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்துகின்ற மொழி செம்மைப்பட வேண்டும். அந்த மொழி மேம்படவேண்டும்; சமுதாயம் முழுதும் பயன்படுத்துகின்ற கருவி செம்மைப்படும்பொழுது அந்தச்

சமுதாயம் அந்த மொழியைப் பயன்படுத்திச் செய்கின்ற செயல் பாடுகளிலும் மேம்பாடு தோன்றும். மொழி ஆராய்ச்சியும் இலக்கிய ஆராய்ச்சியும் பண்பாட்டு ஆராய்ச்சியும் ஒரு சமுதாய மேம்பாட்டுக்கு மிக இன்றியமையாத தேவைகள் என்பதை ஆய்வறிஞர்களும் பொதுமக்களும் தலைவர்களும் நன்குஉணர்ந்து செயல்படவேண்டும். இத்தகைய சிந்தனைகளுக்கும் செயல் களுக்கும் மூல ஊற்றாகத் திகழுகின்ற பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களை நாம் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவு கூர்கிறோம்.

# பேராசிரியரின் பதிப்புப் பணி

**டாக்டர். அ. அ. மணவாளன்**
(தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்)

நாம் வாழும் இவ் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழாராய்ச்சிப் பணிகளின் வழியாகத் தமிழ்ப் பண்பாட்டின் பெருமைகளைத் தமிழர்க்கும் பிற உலகத்தார்க்கும் எடுத்துக் காட்டிய அறிஞர்களுள் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பங்கு பலகாலும் நினைந்து நாமெல்லாம் நன்றியுடன் போற்றுதற் குரியது. அவருடைய தமிழ்த் தொண்டினைத் தமிழாராய்ச்சிப் பணி, தமிழ்நூல் பதிப்புப்பணி என இருவகையாகப் பகுத்து நோக்கலாம். அவருடைய தமிழாராய்ச்சிப் பணிக்குப் பதிப்புப் பணி பெரிதும் அடிப்படையாக அமைந்தது எனலாம். ஓலை பதிப்புப்பணி, நூல் பதிப்புப்பணி, அகராதிப் பதிப்புப்பணி என இவருடைய பதிப்புப்பணியைப் பலவாறாகப் பகுத்துச் சிந்திக் கலாம்.

பழந்தமிழ் இலக்கியக் கருவூலங்களை ஓலைச்சுவடிகளி லிருந்து உயிர்ப்பித்து அச்சேற்றி மக்களிடையே உலவவிட்ட பெரும்பணியினைச் செய்தவர்களாக டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், சி.வை. தாமோதரம் பிள்ளை, வ.உ. சிதம்பரனார், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை ஆகியோரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். வையாபுரிப்பிள்ளையவர்கள் பலவகையான நூல்களைப் பதிப்பித்துள்ளார். நாமதீப நிகண்டு முதலாக **ஆறு நிகண்டு** நூல்களையும், தொல்காப்பியம் முதலாக நான்கு **இலக்கண** நூல்களையும், சங்க இலக்கியம் முதலாக ஏழு **இலக்கிய** நூல்களையும், சாத்தூர் நொண்டி நாடகம் முதலாக மூன்று **நாடகங்களை**யும், இராஜராஜதேவருலா முதலாகப் பதிமூன்று **சிற்றிலக்கியங்களை**யும் இவர் பதிப்பித்துள்ளார்.

எண்ணிக்கை அளவில் இவரைவிட மிகுதியான நூல்களைப் பதிப்பித்தவர்கள் உண்டு. எனினும், நூல் பதிப்பு என்னும் கலையை அறிவியல் அடிப்படையில் கோட்பாடுகளுடன் தமிழுலகுக்கு அறிமுகம் செய்தவர் என்னும் சிறப்பு பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களைச் சாரும் எனில், அது மிகையன்று. கல்வெட்டு, செப்பேடுகள், மொழியமைப்பு மரபுகள், அரசியல், சமுதாய வரலாறுகள் போன்ற பல்துறைப் புலமையைப் பின்புல மாகக் கொண்டு பதிப்புக்கலைக்கு ஓர் ஆய்வு அடிப்படையை

இவர் அமைத்துக் கொடுத்தார். இத்தகைய வரலாற்றுப் பார்வைக்கு நூல்கள் தோன்றிய காலம் அடிப்படையாதலின் கால ஆராய்ச்சியில் இவர் தனிக்கவனம் செலுத்தினார். இவ்வாறு இவர் செய்த கால ஆராய்ச்சி முடிபுகள் இவருடைய உடன்கால ஆராய்ச்சியாளர் சிலர்க்கு ஒப்ப முடியாதனவாய் இருந்தன ; இன்னும் இருக்கின்றன. எனினும் பேராசிரியரின் அணுகு முறையில் பிழையேதும் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவில்லை. அவர் தேடித் தொகுத்த தரவுகளில் சில தவறானவையாக அமைந்துவிட்ட காரணத்தினால், அவற்றின் அடிப்படையில் இவர் கொண்ட முடிபுகள் கருத்துவேறுபாட்டிற்குக் காரணமாய் அமைந்துவிட்டன. இத்தகைய ஆய்வு முறையில் தரவுகள் மாற, மாற முடிபுகளும் மாறக் கூடியன என்னும் ஆய்வுண்மையை வையாபுரிப் பிள்ளையவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் தான் தம்முடைய கால ஆராய்ச்சி முடிபுகள் பற்றிய குற்றச் சாட்டுகளைச் சிலர் எழுப்பிய பொழுது அவர்கள் மீது பேராசிரியர் கோபப்படவுமில்லை ; அவர்களை வெறுக்கவு மில்லை. இத்தகைய மனநிலை, கண்டது மொழியும் அவரது நடுவு நிலைமைக்கும் ஆய்வு நாகரிகத்திற்கும் தக்கதோர் சான்றாக அமைந்திருக்கக் காண்கிறோம். வரலாற்றடிப்படையி லான ஆய்வில் ஆர்வமுடையவராதலின், பண்டைத்தமிழ், இடைக்காலத் தமிழ், இக்காலத் தமிழ் எனப் பரவலாக வளர்ந்து நிற்கும் நம் தமிழிலக்கிய வளர்ச்சிப் படிநிலைகளில் எந்த ஒன்றையும் அவர் கடிந்துரைக்கவுமில்லை ; எந்த ஒரு கால கட்டத்தையும் (அவர்) வரம்பிகந்து புகழவும் இல்லை. காமமும் செப்பாது கடிந்தும் ஒதுக்காது இலக்கியங்களைப் பார்க்கும் இப் பகலன்ன வாய்மைப் பார்வை ஆய்வாளர்க்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் நன்றாக அறிவோம். சுவடி களைத் தொகுத்தல், ஒப்பிட்டு நோக்கல், சரியான மூல பாடத்தைக் கண்டறிதல், சமுதாயவியல் பார்வை, சொற் பொருள் வளர்ச்சி மாற்றங்கள், சமுதாயப் பண்பாட்டு வளர்ச்சி மாற்றங்கள் எனப் பலவாக விரிந்துகிடக்கும் இவருடைய நூற்பதிப்புக் கோட்பாடுகளைக் **கம்பன் காவியம்** என்னும் இவருடைய அரிய நூல் இன்றைக்கும் நமக்கு விளக்கிக் கொண்டிருக்கக் காணலாம்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் பதிப்புப் பணி களின் முடிமணியாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியினைக் கூறலாம். ஏழு தொகுதிகளைக் கொண்ட இப் பேரகராதியின் பதிப்பாசிரியராக 1926 முதல் 1936 வரை பத்தாண்டுகளில் இவர் புரிந்த தமிழ்ப்பணி இன்றளவும் இவரது புகழைக் கூறிக்கொண்டு வருகிறது. இப் பேரகராதியில் சில

குறைகள் நேர்ந்துவிட்டன என்பது உண்மையே. சில தனித் தமிழ்ச் சொற்களைப் பதிவதிலும், சில தமிழ்ச் சொற்களுக்கு மூலங் கூறுவதிலும், சிலவற்றிற்கு ஆங்கில விளக்கம் தருவதிலும் பிழைகள் நேர்ந்துள்ளன. பிற்காலத்தே பேராசிரியர் அவர் களும் இதனை உணர்ந்திருந்தனர். எனினும் இப்பேரகராதியின் சிறப்புகள் பலவற்றை நோக்க இக் குறைபாடுகள் எண்ணிக் கையால் மிகச்சில ; தன்மையால் மாற்றிக் கொள்ளக் கூடியன. 1936ஆம் ஆண்டளவில், இந்தியாவில் உள்ள எந்த மொழிக்கும் இத்தகைய பேரகராதி ஒன்றை (Lexicon) இந்தியர் எவரும் உருவாக்கியதாகத் தெரியவில்லை. இதன் தோற்றம் தொட்டு இன்றுவரை, பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், மேலை நாட்டு, இந்திய நாட்டு ஆய்வாளர்களும் இதனை மிகப்பெரும் ஆய்வுத் துணைவனாகக் கருதிப் போற்றி வருகின்றனர். சென்னைப் பல்கலைக்கழகம் இதனைப் பலமுறை பதிப்பித் துள்ளது என்ற உண்மையும் இதன் சிறப்பினை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

தமிழாராய்ச்சியில் பேராசிரியர்க்குப் பின்னர் அவர் நெறியைப் பின்பற்றிப் பணிபுரிந்தோர், புரிவோர் பலர்: தமிழ் நூல் பதிப்புப் பணியில் இவருடைய கோட்பாடுகளைப் பின் பற்றித் தொண்டாற்றி வருவோர் பலர் உள்ளனர். ஆனால் இவர் காட்டிய அகராதிப்பணி மட்டும் தொடராது, ஒரொருகால் தொடர்ந்தாலும் சிறப்படையாது மங்கியிருப்பதற்கு என்ன காரணம் எனச் சிந்தித்துச் செயல்படுவதும், இத்துறையை வளப் படுத்த முயல்வதும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் தமிழ்த் தொண்டினை மதித்துப் பாராட்டி அவருக்கு நாம் நன்றி கூறுவதாக அமையும், எனக் கூறி இவ் வாய்ப்பினை அளித்த அமைப்பாளர்க்கு நன்றி கூறி அமைகிறேன்.

வணக்கம்.

# A GREAT LEXICOGRAPHER

**Dr. S. SATHIKH,**
(Vice-Chancellor, University of Madras)

I have great pleasure in associating myself in the Centenary Celebrations of Prof. S. VAIYAPURI PILLAI, for the following FOUR reasons:

As a student, I have admired his writings with some of his works which have been prescribed in our syllabus.

Secondly, I happen to be a student of Prof. V. Saravana Perumal, son of Prof. S. Vaiyapuri Pillai, while I studied Engineering in Annamalai University and also as his Colleague later for a decade.

Thirdly, Professor Vaiyapuri Pillai himself was a student of the University of Madras receiving his B.A. and B.L.Degrees.

Fourthly, an important reason, Prof. Vaiyapuri Pillai has been associated himself with the University of Madras for over two decades, while he was dedicating his service in the compilation of 7 Volumes of Lexicon and later was on the Faculty in the Department of Tamil.

Professor S. Vaiyapuri Pillai was born on 12th October 1891 at **Vannarpettai** in Tirunelveli in a Saiva Vellalar family. His father, **S Saravanaperumal Pillai,** a devotee of Lord Siva, trained Vaiyapuri Pillai by teaching Saiva Philosophy at his early age. When he was young, he had the opportunity of associating himself with eminent Tamil scholars like Sivarama Pillai and M.S. Subramanya Kavirayar.

He took his B.A. Degree from Madras Christian College in 1912 securing first rank in the Presidency in Tamil and received the prestigeous Sethupathi Gold medal.

He took his B.L. Degree in 1914 and practised Law for sometime in Trivandrum. While at Trivandrum, he had close association with great people like Kavimani Desikavinayagam

Pillai, Poet Lakshmana Pillai, Judge K. G. Sesha Iyer and K.G. Sankara Iyer.

Prof. Vaiyapurai Pillai founded the Saiva Prakasa Sabai for Tamil studies and discussion and later a Tamil Sangam.

In the year 1923, he moved to Tirunelveli and practised law. There he often collected Tamil scholars and pursued the study of Tamil literature in general and Kamba Ramayanam in particular. He was responsible for organising for the first time a Kamban Festival in 1923.

In the Twenties, the **University of Madras** was preparing the Tamil Lexicon for publication. The Lexicon Committee chose Vaiyapuri Pillai as the editor for this Lexicon. In November 1926, he assumed charge as the Editor of the Tamil Lexicon and completed the work (Seven Volumes of nearly 4500 pages) within 10 years. He had had copious reference to the Tamil Nighandus in this work.

He served as Reader and the Head of the Tamil Department from 1936-1946 in this University. In 1951, he was invited to occupy the Tamil Chair in Travancore University. He served there till 1954. Many people like G. Subramaniya Pillai (afterwards as Professor in Annamalai University), scholar M. Arunachalam, V. I. Subramaniam (later Vice-Chancellor of Tamil University) studied under him.

Prof. Vaiyapuri Pillai for the first time **applied scientific methodology to literary criticism.** As a scholar, he made his effort for setting a chronology for Tamil Works and Literature. In his academic research programmes, he expounded his own objective conclusions on the early Tamil literary sources, their times, their spirit and their contents as they emerged from his studies.

As a lexicographer, and as a careful editor of texts of Tamil works and a Writer and Research Scholar he contributed immensely to Tamil language and literature.

Commenting on his work as a lexicographer, Dr. A. Laxmanaswami Mudaliar, former Vice-Chancellor of Madras University said :

> "Mr. Vaiyapuri Pillai's contributions are outstanding and it is due to him that the Tamil Lexicon was published in the University. It is a monumental piece of work."

Vaiyapuri Pillai had edited four Nighandus (நிகண்டு) from palm-leaf manuscripts as source materials for the Tamil Lexicon. The editions are noted for accuracy of text and thoroughness in method.

The University of Madras hence has pride in participating in the Centenary Celebrations of Prof. S. V. Pillai and will be happy to republish the Four Volumes of works of his, which were earlier published by this University.

# A LITERARY GIANT

**Justice M. M. ISMAIL**

I consider it a privilege to participate in this function in connection with the birth centenary of Professor S. Vaiyapuri Pillai. It is appropriate that this function is organized by the University of Madras and The Professor S. Vaiyapuri Pillai Birth Centenary Commemoration Society, in the premises of the University itself where the late Professor did his monumental work of briging out the Tamil Lexicon.

I have had the extraordinary good fortune of knowing Professor S. Vaiyapuri Pillai nearly for a decade. Ever since I came to Madras in 1938 as a student to join the Intermediate course in the Presidency College, Madras, and came under the tutelage of Professor K. Swaminathan, the name of Professor S. Vaiyapuri Pillai and the Assistant Editor of Tamil Lexicon Sri. V. Narayanan, became familiar to me and I also had the benefit of meeting both of them. I had the further good fortune of personally knowing many of the contemporaries and colleagues of Professor S. Vaiyapuri Pillai, namely, Professor K. A. Neelakanta Sastri, P. Sri. Acharya, P. N. Appuswamy, T.K. Chidambaranadha Mudaliar, R. P. Sethu Pillai and two of his students, viz, - Sri. M. Arunachalam and Vidwan M. Shanmugham Pillai, the last two of whom are fortunately alive now.

The little interest that I had developed in Kamban's Ramayana brought me into contact with Professor S. Vaiyapuri Pillai. As he was living in Mylapore where I was also residing, very often I used to go to his house with my doubts. The most characteristic and charitable attitude of Professor S. Vaiyapuri Pillai which I still cherish, is that though I was thirty years younger to him and not a regular student of Tamil in the sense that Tamil was not my main subject in my College course, he listened to my doubts carefully and tried to clear them. It would have been the experience of many scholars that it is not possible to clear a doubt that a student of Literature may

entertain in all cases, for the simple reason that the context in which a particular expression had been used by the author might be too long ago and therefore totally unfamiliar to them. In such a situation all that one may do is to try to conjecture what would have been the sense in which that expression could have been used. In such cases Professor S. Vaiyapuri Pillai was never dogmatic to assert that his view alone was correct and no other view was possible.

I am mentioning this for the simple reason that he was extraordinarily humble in spite of his deep scholarship, erudition and extensive research and did not thrust a particular view of his down the throat of others.

Another aspect of the late Professor which is worth remembering is his courage of conviction in his conclusions in the field of literary criticism and research. Generally there was a feeling that the earlier a date which we assign to any particular literary work, the greater is its claim to merit and uniqueness. Professor S. Vaiyapuri Pillai did not belong to the category of people holding such a view. He applied the scientific principles of literary criticism of western critics and scholars in English, French and other languages, to Tamil also and tried to determine the age of a work or an author. He was proficient in Sanskrit, German, French and Malayalam besides being well-versed in English Literature and criticism. This approach and attitude of the Professor did not make him popular among those who believed in the notion referred to earlier. However Professor S. Vaiyapuri Pillai did not allow himself to be affected by the criticism of such people and had the courage of conviction to stand by his conclusions since they were demonstrable by scientific methods.

The most outstanding work done by the late Professor S. Vaiyapuri Pillai which will be the lasting monument to him is the Tamil Lexicon published by the University of Madras, of which he was the Chief Editor from 1926 to 1936. The work consists of seven volumes, the last being the supplement brought out in 1939. The first six volumes comprised of 1,04,405 words and the supplement comprised of another about 20,000 words, the total number of pages of the Lexicon being 3944 plus 423. Having regard to the plan of the said Tamil

Lexicon, one can very well imagine the amount of work, the care and caution that should have been brought into the preparation of the said Lexicon.

The Professor has edited nearly 40 works in Tamil Literature with a scientific approach to research and literary criticism. Out of them three works by name, 'Puraththirattu', 'Thirikkadukam' and 'Viralividuthoothu' were published by the Madras University itself and I, on this occasion, in the presence of the Channcellor and the Vice Chancellor of the University, request the University to republish the same since they are not now available. In fact the Professor S. Vaiyapuri Pillai Centenary Commemoration Society has undertaken to bring out the works of the late Professhr in 7 volumes and the third volume is being released today.

For nearly 45 years, the late Professor pursued with determination and wlthout any let, his studies and research in Tamil language and literature with exemplary degree of intellectual integrity and with unswerving dedication. All those books will be of very great value to the modern day scholars, when the study of Tamil is receiving official patronage and recognition and all over the world methods of literary research are undergoing vast changes.

The late Professor was shy by nature, short in physical stature and not very fluent in public speech. This, which is generally regarded as a disadvantage for popularity in public speaking, proved to be a valuable asset to the late Professor to pursue his serious research work, undisturbed by frequent calls to make public speeches on the platform.

All in all, both as a man and as a scholar, very few people can be compared with Professor S. Vaiyapuri Pillai. Humble, sincere, earnest to help others when they find difficulties in their studies and research, and determined to pursue, his path of research, Dr. Vaiyapuri Pillai stands as an exemplary literary giant.

Let us, on this occasion of celebrating his birth centenary, pay our humble tribute to the greatness of such a scholar and make full use of the labours he endowed on his works by reading them and being benefited by them.

# AN EMINENT EDITOR OF CLASSICS

**Thiru. V. Karthikeyan,** I.A.S. (Retd.)
(Adviser to the Governor of Tamil Nadu)

I am happy to participate in this significant function, organised by the Vaiyapuri Pillai Centenary Celebration Committee, with the active support of my valued colleague Sri. R. Tirumalai, I.A.S. (Retd) and the University of Madras. It is only by recognising and honouring the invaluable services rendered to Tamil Language and Literature by eminent scholars and researchers like Prof. S. Vaiyapuri Pillai, we could create an atmosphere which will generate motivation, deep interest and hard-work among our younger generation of Tamil Students and researchers, leading to further enrichment of the language.

Though I have not had the fortune and pleasure of knowing Sri Pillai in a personal way, I have heard him on a few occasions and I was deeply impressed by his simplicity, deep research, erudition and frankness.

Sri Pillai was born on October 12, 1891 and graduated from my own College, the Madras Christian College in 1912. He took his Law degree and started practice, but his love of Tamil Literature got the upper hand. He was one of the earliest to appreciate the greatness of Sri Subrahmania Bharathi.

He took up the full time editorship of the Tamil Lexicon under the University of Madras and accomplished the unprecedented task of completing the seven volumes within ten years.

He become a Reader in Tamil in the University in 1936 and published several learned works including Tolkappiam with Ilampuranam and several Nikandus and Sangam classics. His articles covered world literature, literary criticisms and the principles of editing the classics.

Even after retirement in 1946, he served the Travancore University as Professor of Tamil for 3 years from 1951. His health began to decline by 1954 and he breathed his last in 1956.

His achievements are monumental and multi-directional. The Tamil Lexicon itself is a great piece of scientific study and classification. The collection and painstaking edition of a large number of Nikandus was a glorious labour of love. The Mudalayiram, the first thousand verses of Divyaprabhandam, edited by Sri Pillai in 1955 is a work of par excellence. In the field of literary criticism and research, he has carved out a niche for himself by his steady adherence to the original texts and elimination of all personal bias. He refused to yield to pressurisation, unfair attribution of motives or illinformed comments on his works and style. He did nothing expecting quick rewards nor sought any cheap publicity. He was humble, loving and lovable and always willing to guide and help. He was a great scholar indeed. I add my own humble tributes to him.

# PRESIDENTIAL ADDRESS

By

**Governor Shri Bishma Narain Sing**

I have great pleasure in presiding over the Centenary Celebrations of Prof. S. Vaiyapuri Pillai and in releasing the Third Volume of his collected works.

Appropriately, this function is organised by the University of Madras, and the Prof. Vaiyapuri Centenary Commemoration Society. This University was the scene of his hard works where Prof. Vaiyapuri accomplished the great task of bringing out the Tamil Lexicon. Though it is the fulfilment of the tireless work of many scholars, it is the first publication of its kind.

Prof. Vaiyapuri was also the Reader in Tamil in this University for a decade from 1936 to 1946. During this period, he brought out a number of Tamil glossaries and literary works for the first time. He was a prince among the editors of classics, and Dr. Iyer and he have done yeoman service to Tamil in this respect.

The Professor's original contribution was in two areas, first in editing classics, and formulating a methodology for it to which I have referred just now. Second, in attempting a literary history and literary criticism on the lines of Western practices and scientific principles. He was a pioneer in trying to fix the dates and tracing an authentic history of the development of Tamil through the ages. In that attempt, he clearly stated his reasons for his conclusions. He cast his net wide, drew parallels from Sanskrit and Pali literature, and drew evidence from the inscriptions. His knowledge of French, German and Sanskrit literature and languages was of great help in his work.

The views of a pioneer can be easily improved upon. Some of his conclusions admit of modifications, based on subsequent data, while others are still valid. Prof. Vaiyapuri was truly

rational in his approach and thus laid the real foundations for an objective history of Tamil.

I may, here, pay my tribute to this great language, Tamil and the culture of the people in this part of the country. Tamil language had been fostered by many streams of thought and culture. The Jains wrote some of the best classics and grammar that enriched the language. The Buddhists too, had their share. The outpourings of the Saiva saints and of the Vaishnava Alwars are soul-stirring even today. They touch our hearts and ennoble our soul, by the spirit of Bhakti they transmit.

Tamil culture is steeped in the deep consciousness of humanism. It was universal in its appeal. It enveloped the brotherhood of the world, "Yadum Ore, Yavarum Kelir" was an early utterance in the Sangam classics. It reminds one of the Vedic saying Vasudeiva Kutumbakam. The early Sangam literature, naturally depicted the tender emotions of Man - of love, sorrow and joy. It also adored valour. Life was the means of achieving honour. Without it life was not worth living. The universality of appeal makes us feel the unity in the spirit of our nation. Even though the language and the idiom are local, the thought and sentiment are all pervading, all embracing, and truly reflect our great country India and her values.

Tamil language has another title to greatness. That is its continuity. Few languages have changed so little through the ages, but it has also absorbed many incoming strands of ideas and words. Change is the condition of progress, but the virility of the language had guaranteed its conserved identity. Its adaptation to changes and capacity to absorption have infused strength. A living and growing culture has thus come through in its history.

I have pleasure in releasing the third volume of the Collected Works of Vaiyapuri — the "Age of the Epics" in the history of Tamil literature. It was a Heroic age. The Epics are the product of a composite culture. The Jains, the Buddhists and the Hindu streams of thought and writing have all contributed to it. The sources that supplied the themes for

the Epics are many and varied. But they are not just reproduced in the Tamil Epics. The themes were adapted to the Tamil ethos and tradition.

The greatest of the Epics is the Ramayana by Kamban. Prof. Vaiyapuri was one of the early and ardent admirers of Kamban. He is easily a peer to Shakespeare, to Kalidasa and Goethe. The University Professors and others spoke of the poetic genius of Kamban, uncovered by savants like Vaiyapuri. The deep touch of humanity had its imprint in Kamban's works. He was conscious of the "Divinity that shapes our ends". The characters in the Epic are portrayed with sincerity of expression. It excelled in depicting the emotion and sentiments that every one of us feel in similar situations. Kamban's Ramayana is hailed by Prof. Vaiyapuri as a new creative work, which reached the high water-mark of Tamil poetic genius.

This work is as important as the subject it deals with. Competent scholarship has hailed the Professor's in-depth studies and his wide range of knowledge, but he had also a true literary instinct and poetic sense. He brought to bear all these traits on his works.

Vaiyapuri was among the earliest to spot out the genuine poetic fervour and expression of the Poet of Freedom, Subramanya Bharati. He was both a path-finder and a model for others to emulate.

The Vaiyapuri Centenary Commemoration Society has conceived the best form of paying homage to the Great Scholar and perpetuating his memory - by bringing out his Collected Works in Seven volumes. The first two volumes, one on "Literary Thoughts" and the other "The Tamil Renaissance" are nearly sold out. It is an index of the avidity with which the world of scholarship has been benefitting from the Professor's works.

In undertaking this valuable service the Society has been inspired by a great scholar, Prof. K. Swaminathan. I should like to pay my tribute to his lifetime work. Even in his

advanced age, he brought out with dedication the Complete Works of Mahatma Gandhiji, the Father of the Nation. Thiru R. Tirumalai, Thirumathi Sarojini and Thiru Ramaswami Pillai, deserve our congratulations on their task of bringing out these Collected Works. I am sure the University of Madras, for its part, would consider the re-publication of the Professor's editions of classics, as urged by Justice Ismail and Thiru Tirumalai. I felicitate the Society on its purposeful work and appreciate the gesture of the University in co-sponsoring this Commemoration function.

I have great pleasure in releasing the Third Volume of the Collected Works of the Professor - "The Age of the Epics". I trust this function will inspire scholars all over to undertake such in-depth studies and further the work for which foundations were laid by Prof. Vaiyapuri.

Nandri, Vanakkam, Jai Hind !

## நன்றியுரை

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

இனிய இம்மாலை வேளையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராயிருந்து அருந்தொண்டாற்றிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவும் அவர்தம் தொகுப்புகளுள் ஒன்றான மூன்றாம் தொகுதியின் வெளியீட்டு விழாவும் இனிதே நடைபெற்றுள்ளன.

தமிழாராய்ச்சி அணுகுமுறையில் புதிய நெறியைத் தோற்றுவித்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழின் மறுமலர்ச்சியை உலகிற்கு அறிமுகம் செய்த அறிஞர் ஆவர். பல்வேறு புதிய துறைகளில் தமிழ் மொழியின் நுட்பத்தை வெளிக்கொணர்ந்தவர். தமிழ் மொழியின் பாடுபொருள் குறித்து ஆராய்ந்த அவர்தம் ஆய்வுரைகள் அச்சில் சுமார் 4000 பக்கங்கட்கு மேலும், பதிப்பு நூல்கள் 8000 பக்கங்கட்கு மேலும் வருமெனில் அவருடைய உழைப்பையும் முயற்சியையும் கண்டு ஆய்வுலகம் வியக்கும்.

இலக்கிய ஆராய்ச்சி, மொழியியல் ஆராய்ச்சி, உரை ஆராய்ச்சி, ஒப்பாய்வியல், அகராதியியல், பதிப்பியல் எனப் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்த அறிஞர்.

தமிழ்த் தொண்டிற்கென வாழ்நாள் முழுமையும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பேராசிரியரின் நூற்றாண்டு விழாவினைச் சென்னைப் பல்கலைக்கழகமும், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றமும் இங்கு இணைந்து நடத்துவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

பல்வேறு பணிகளுக்கிடையேயும் தமிழ்நாடு ஆளுநர் பெருந்தகை அவர்களே இவ்விழாவில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு அரிய உரையாற்றி இவ்விழாவிற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும், பேராசிரியர் நினைவு மன்றத்தின் சார்பிலும் எங்கள் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். உரையில் பல அரிய கருத்துக்களைத் தெரிவித்துத் தமிழின் பெருமையைப் போற்றியுள்ளார்கள். அவர்கட்கு மீண்டும் நன்றி.

ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திருமிகு. வி. கார்த்திகேயன் அவர்கள் இந்நூலினைப் பெற்றும் உரையாற்றியும் விழாவிற்குப் பெருமை சேர்த்தார்கள். அவர்கட்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் நினைவு மன்றத்தின் சார்பிலும் எங்கள் நன்றி உரியது.

வாழ்நாள் முழுவதும் தமிழுக்கென உழைத்த பேராசிரியரின் கையெழுத்துப்படிகள் இளைய தலைமுறையினருக்கு எழுச்சியூட்டுவதாகும். அவர்தம் அரிய உழைப்பை இன்று நமக்குக் காட்டிவரும் அவர் தொகுத்த - எழுதிய - பதிப்பித்த சுவடிகள், கட்டுரைகள், நூல்கள் அனைத்தையும் நன்கு போற்றி வைத்துள்ளார்கள். அவர்தம் கால்வழியினரான அவருடைய திருமகள் திருமதி. வை. சரோஜினி அவர்களும் அவர்தம் துணைவர் திருமிகு. எஸ். எஸ். இராமசாமி அவர்களும், இவ்வரிய தொகுப்பினை நூற்காட்சியாக அமைத்துள்ளனர். இதனைத் திறந்துவைத்து அரிய உரையாற்றிய மாண்பமை நடுவர் பெருந்தகை திருமிகு. இஸ்மாயில் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும், நினைவு மன்றத்தின் சார்பிலும் எங்கள் நன்றி.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் எஸ். சாதிக் அவர்கள் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து அரிய உரையாற்றினார்கள். இவ்விழா ஏற்பாட்டிற்கு உரிய வசதிகளை மிக அன்போடு செய்துதவிய அவர்களின் அன்பிற்குப் பெரிதும் நன்றியுடையோம்.

பேராசிரியர் டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்கள் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் ஆராய்ச்சிப் பணியையும் அணுகு முறையையும் நன்கு தெளிவுறுத்தி இன்னும் நாம் செய்ய வேண்டிய குறிப்புகளையும் காட்டினார்கள்.

பேராசிரியர் டாக்டர் அ. அ. மணவாளன் அவர்கள் பேராசிரியரின் பதிப்புத் தொண்டினைச் சுட்டித் தமிழுக்குத் தந்த தலைமைசான்ற கொடையாகப் பேரகராதியைச் சுட்டிக் காட்டினார்கள். பதிப்புப் பணியால் தமிழுலகம் பெற்ற பயனையும் எடுத்துரைத்தார்கள்.

இருவருக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்களின் அழைப்பை ஏற்றுத் திரளாக வருகை தந்து பேராசிரியரின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்புறச்செய்த பேராசிரியப் பெருமக்கள், நண்பர்கள் மற்றும் அவையோர் அனைவருக்கும் விழா சிறப்புற நடைபெற உதவிய பதிவாளர் அவர்கட்கும் அலுவலகத்தினருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் நினைவு மன்றத்தின் சார்பிலும் எங்கள் நன்றி.

இவ்விழா சீரும் சிறப்புமாகத் திகழ்வதற்கு மூலகாரணர் அறிஞர் திருமலை அவர்களின் திட்டமிட்ட பணியாலும் உழைப்பாலும்தான் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது. அவர்கட்கு எங்கள் நன்றி.

அனைவர்க்கும் நன்றி, வணக்கம்.

# A PIONEER LITTERATEUR

**Thiru. R. TIRUMALAI, I.A.S. (Retd )**

*A tribute to Vaiyapuri, the Tamil scholar in his centenary year which begins today.*

The first half of this century in many respects, was a watershed period. For literature the period was one of renaissance. It, at once turned back to the past, to resurrect the rich treasures of Indian Languages, and was also a period of highly creative poetry marked by patriotic ardour. The shackles of purely conventional versification were being shed. Prosody and grammar which reigned supreme were replaced by genuine poetic fervour, the spirit of man asserting itself.

In South India, there were three strands of literary trends. First, the traditional indigenous scholars steeped in the known corpus of Tamil literature and known for impromptu versification. Patronised by the zamindars, they revelled in conventional panegyrics, spiced with "double entendre", "the lowest form of humour" (as a critic put it) or with dubious erotic undertones). Others composed puranas, mythological glorification of sacred shrines and deities. They were stereotyped where form got the better of the content.

Theology throve at the expense of devotion and poetic charm. Another strain noticeable was the religious and the theological discourses by religious preceptors steeped in the Saiva or Vaishnava *prabhandams* with a strong bias towards their own persuasion. Some of them composed verses on deities, shrines and saints. They were a foil to the Christian missionaries who were active since the 18th century and even earlier.

Some of the missionaries felt the need for mastering the local language and idioms which could have a direct appeal to their flock. Others struck by the richness of the ancient Tamil heritage, were even anxious to make out that the devotional outpourings of the Alwars and the Nayanmars had for their mainspring the influence of Christianity. A few others were

genuinely interested in Tamil, the language and literature, its grammar, and comparative philology. Some even composed epics and poems adapting the Tamil literary forms.

Fr.Beschi(Veeramamunivar), Bishop Caldwell and Winslow, in the 19th century and Dr. Pope, Rev. Chandler and Rev. A. C. Clayton later were the forerunners who worked on comparative philology or set to compile lexicons, conscious though they were of their limitations. This interest spread to Jaffna in Sri Lanka.

The third strand of scholarship drew inspiration from the intellectual and academic discipline of the West. Exposed to Western literature and methods of compilation, they drank deep at the fountain of English, French and German works. They were inspired to apply the scientific techniques and methods they had imbibed to Tamil — both in editing Tamil classics, and in the critical appraisal of works. Lexicography, a discipline in itself, was a felt want. There was another compulsion for undertaking the work. Sanskrit literature was much more popular and more widely known to the Western world. Tamil was not.

**Orthodox school**

In this setting, there were great scholars of the orthodox school patronised by mutts like Tiruvaduthurai, Dharmapuram and Nanguneri. The Vaishnavite centres like Alwar Tirunagari and Srirangam had scholars in the Divya Prabandam and the commentaries of the Acharyas. The Pravachana school propagated them. Even Kambaramayanam and Villi Bharatam were subjects of popular expositions that appealed to the literate and the illiterate alike.

The orthodox school had eminent scholars like Meenakshi Sundaram Pillai, R. Raghava Iyengar, Mu. Raghava Iyengar, and U. V. Swaminatha Iyer. Though their scholastic attainments were acquired in the traditional manner some of them were keenly sensible of the scientific techniques of textual editing and literary criticism.

The eclectic school of scholarship to which S. Vaiyapuri belonged was influenced by the newly waiting Western influence. The votaries were imbued with the spirit of rescuing

Tamil literature and language from the ruts into which they had fallen. They adored the spontaneous escapes of the soul, the torrential outpourings of the spirit of the age, especially of that bard of freedom, Subrahmanya Bharathi. New forms like the novel, short story, and translations of English classics were coming into vogue.

In this age of renaissance Vaiyapuri was ushered in. Born on October 12, 1891, his centenary year commences this year. Vaiyapuri had his early training in Saiva and Tamil literature and grammar under his orthodox and religious parents. Later he was instructed by Pamban Swamigal and Swaminatha Panditar of Jaffna. He finished his FA from the Hindu College, Tirunelveli and graduated from the Madras Christian College in 1912. Married to a woman from Trivandrum, he was distantly related to the author of *Manonmaniyam*, Sundaram Pillai.

He took his law degree from Trivandrum and started practice there. But interest in Tamil was inborn in him. He had kindred spirits to share his interest like Kavimani Desigavinayagam Pillai, the Tamil poet of childhood and epigraphic scholar, Lakshmana Pillai the composer, K. N. Sivaraja Pillai, Tamil scholar and K. G. Sesha Iyer. They formed a society for carrying on their literary pursuits. It was here that Vaiyapuri met Subrahmanya Bharati whose poetry he was one of the earliest to appreciate instinctively in 1918.

When he moved to Tirunelveli in 1923, there were scholars of the same ilk, to name a few Chakrapani Nambiyar, M. P. Subbiah Mudaliar, P. Sri Acharya, V. V. S. Iyer, R. P. Sethu Pillai and Anantarama Iyengar.

**Changeover**

Vaiyapuri's scholarship in Tamil gained wider recognition. Circumstances favoured his changeover from his legal profession and he became a full time editor of the Tamil lexicon then being undertaken by the Madras University. With the able assistance of pandits like Mu. Raghava Iyengar, V. M. Gopalakrishmachariar, S. Somasundara Desikar and others he completed the seven volumes in 10 years.

In 1936 he suceeded Anavaratavinayagam Pillai to the Readership in Tamil in the Madras University. He published

several scholarly books — the Tolkappiyam with Ilampuranam a rare commentary and a number of Nikantus, (Tamil glossaries or homonyms) and Sangam classics. He also wrote several papers on world literature, literary criticisms, and the principles of editing the classics. He retired in 1946.

From 1951 he had a three year stint as Professor of Tamil of the Travancore University. Of indifferent health and always dedicated to his work he, relinquished the post and passed away two years later in 1956.

Vaiyapuri's contribution to Tamil development and scholarship are varied and many sided. First, the Tamil lexicon he edited was the *magnum opus* which distinctly marked an advance over all earlier dictionaries. The schematic presentation followed a general order in arrangement — the word, its transliteration, the part of speech, origin and derivative, the cognates, the meaning (a) in English and (b) in Tamil, and the quotations under each meaning with citations of works, the author and illustrative expressions. Where words were derivative, their new special meanings were given, and even distortions were not omitted. Wherever possible the chronological arrangement was followed to bring out the historical origin and development of the meaning or words.

The lexicon bore the mark of a wide range of scholarship, pressing into service the great Tamil classics of the Sangam period published in the first few decades of the century, the Vaishnavite and Jaina prose works, glosses and commentaries, the works on grammar and citations therein, and the great Tamil commentators' interpretations.

Above all, Vaiyapuri systematically collected a large number of Tamil *Nikantus* in palm leaf manuscripts and edited them. Reliance was rightly placed on them. Some of the special treatises on arts, sciences, astrology, dancing and mathematics were also utilised. Epigraphical data belonging to different periods, and usages of particular locations and sections of the community were all brought to bear on the compilation. This was a truly remarkable work done in a record time.

Nevertheless, as Prof. Jules Bloch complained many of the epigraphical terms did not find mention. The occurrence in

the Tamil glosses also was not exhaustively referred to. These are the constraints of the times in which the lexicon was compiled and not of the scholars. The South Indian inscriptions published at the time were but a fraction of the total corpus so too authentic and accurate editions of Tamil works.

Indeed, as Vaiyapuri pointed out the works edited in the early decades freely made a hotchpotch, a compendium from various anthologies : in their anxiety to make the work complete, they ignored the fidelity to original texts and interpolations and the personal counterfeits of the editor were at a premium.

**Models for emulation**

Vaiyapuri was determined to rescue the Tamil classics and literature from such misguided attempts at "comprehensive reconstructions." He helped Murray S. Rajam and Periyan Srinivasa Aiyangar respectively in editing the Divyaprabandam, and the Kamba Ramayanam based on the Alvarthirunagari manuscripts. These editions are models for emulation.

The introduction to the 'Mudalayiram' the first 1000 verses of Divyaprabhandam edited by him is a classic (1955) and is a grammer for editing Tamil works. His criticism of the customary recital methods, and the pauses was trenchent though it could upset the orthodox. He stressed and delineated a new scholarly method of editing the work, making textual corrections, where copying or manuscript errors were patent, or where the word-combinations were split erroneously resulting in distortion or lack of meaning. Though the rhythm would have helped when verses were set to tunes for singing, they may at the same time detract from the literary appreciation and distort or disturb the meaning. He traced how these errors and distortions could have occurred and he edited the verses splitting the compounds into simple words, to bring out the sense, intensity of meaning and experience it conveyed.

He had envisaged a whole scheme of publishing the Divyaprabandam texts with annotated Purana allusions a note on the literary merit, on the age of the Alwars, a glossary of words and meaning of difficult words, and comparative notes etc. in five volumes. But the Text itself needed four volumes.

Meanwhile death snatched away the great scholar the next year and the work was but half complete. The same fate befell the Kamba Ramayanam of which only two cantos were partly edited by him. The First seven chapters of Bala Kandam remain an appetiser.

This throughness, fidelity to texts and objective editing of the manuscripts were characteristic of all the Tamil literary works he had edited, including Sanga Ilakkiam (Pattupattum and Ettu Thogaiyum) Tirumurugatru padai, Tolkappiyam, Jivaka Cintamani and a number of later works.

A scholar so meticulous and thorough was apt to discountenance any subjective or impressionistic editions of classics. This led to an acrimonious controversy between him and his friend Chidambaranatha Mudaliar. The latter had an aesthetic perception but was too arbitrary in discarding a large volume in Kamban's work depending only on the appeal to his personal appreciative sense. The present writer has been associated with both and had heard both sides from each direct. The scholar was found to be right, and the connoisseur experiences.

Perhaps Vaiyapuri's greatest contribution was in the field of literary critism and research. Indeed his criticism was based on research. Here again he not only marshalled internal evidence from the works themselves, but also made a comparative study of the usages, the idioms and characteristic turns of expressions in other works to arrive at the age of the works. Here was a pioneer who dared to fix the chronology of works on what struck him as authentic, scientific, and tested evidence. This was a daunting subject. He sought strength in external evidence from epigraphs, from historical events, and from collateral works in other languages and of other countries. His knowledge of French, German and Sanskrit were of great avail. He was truly eclectic in his approach. He laid the real foundations for an objective development of the history of Tamil language and literature. Some of his conclusions were found to be prescient by later discoveries, even if some others were found to require revision. True scholarship can never be static nor sentimental.

The views of a pioneer. admittedly, can be easily improved upon, but further research was needed, Vaiyapuri would be the first to be convinced if rebuttal by evidence and proof could be forthcoming. But as he observed "vague generalisation *ipse dixits*, dictatorial pronouncements and "intuitive perceptions" are out of place in any scientific study, textual criticism not excluded."

A frail, small figure almost inconspicuous, he was yet a man of convictions and his, views were firm. A campaign of vilification. attributing motives (of which he was totally innocent) ensued in his life time. Prejudice is the homage that passion pays to erudition.

Any lesser person would have succumbed or withdrawn from the field. But not Vaiyapuri for he was receptive to proven data and would accept a better view than his if sustained by reason. He was perhaps, a true rationalist in literary and textual criticism but with a difference.

His aesthetic appreciation of tbe Tamil literature was genuine and of a high order. He was one of the earliest to recognise the genius of Bharati. He welcomed the originality of poetic conception and form of Bharathi. Tamil the Promethoes, was unbound. Sincerity and directness of expression a true ring of rhythm and vision, and poetic diction were ushered in. Vaiyapuri recognised these attributes of Tamil renaissance. He himself contributed to it by chartering courses of critical and investigational techniques. He was a true path finder and a beacon for generations of scholars to come. He had also a novel, a few short stories and poems to his credit.

A society chaired by Prof. K. Swaminathan, Vaiyapuri's close friend, has been formed. It has undertaken to publish all the works of the scholar with assistance from the Union and the State Governments and universities. It is hoped that the Madras University too will republish his edited works, as they are of great value to study and appreciate Tamil culture and its greatness. Two volumes have been released and one more is under print.

This author had the good fortune to study Tamil under him while working on the research fellowship under Prof. K.A.N. Sastri, another close friend and associate of Vaiyapuri.

The method the professor inculcated in me was novel but effective, like Marc Bloch's proceeding from the known adult to the embryo. He started me on Bharatidasan and Bharati's works, and led me backwards through the Puranas, Kamba Ramayanam, Sangam classics, Tirukkural and on to Tolkappiam to the earliest works in Tamil.

He would take pains to verify the palm leaf manuscripts to ascertain the veracity or authenticity of the statements or quotations attributed to early works and correct me where a recent or modern edition had enriched the old texts by interpolations. To him I owe my love and knowledge of Tamil and a simple direct, suggestive style of Tamil prose using Tamil words in preference to the mouthful words of extraneous extraction.

Extremely unostentatious, easily approachable, always helpful, even solicitous to the students who went to him for guidance. Vaiyapuri was a man of great humility and was God's own man with abiding human values. He was a Happy Warrior.

"Who laboured good on good to fix
and owed to virtue every triumph he knew."

---

With the kind permission of the 'HINDU', Dated 12—10—1991

# பொருட்குறிப்பு அகராதி

# பொருட்குறிப்பு அகராதி

(எண் : பக்க எண்)


அக்காத் 21
அக்காதியர்கள் 18
அக்கினி 53, 119
அக்கினி புராணம் 226
அகப்பொருள் துறைகள் 129
அங்க்ரா - மைனியா 52
அங்குத்தர நிகாயம் 253, 257
அகுர மேஸ்தா 51, 52, 56,
அசுர ஜாதி 26
அசுவ மேத பருவம் 190
அசுவ மேதம் 143
அசுவ மேதயாகம் 135
அசோக சக்கரவர்த்தி 237
அட்ட கதைகள் 300, 314
அத்யாத்ம ராமாயணம் 229
அத்வரியு 130, 131
அதபன் 27
அதர்வ சிரஸ் உபநிஷத் 146
அதர்வணம் 118
அதர்வணர்கள் 124
அதர்வண வேதம் 124
அதர்வாங்கி ரஸம் 124
அதிதி 51
அந்தணர்கள் 50
அநுசாஸன பருவம் 190
அப்ஸூ 24
அப்துல் காஸிம் மன்ஸூர் 57
அப்பர் 52
அபரஞானம் 151
அபிதம்மம் 293, 296
அபிதம்ம பிடகம் 238, 296
அம்மோன்-ரா 9
அம்பு-எழுத்துக்கள் 20
அம்ஷஸ் பண்டுகள் 52
அமந்தி 13
அமரர்கள் 52
அமெரிக்கா 43
அர்க்கன் 326
அரண்யகானம் 133
அரசர்கள் 36
அரசர்க்குச் சிறந்த ஒன்பது பொருள் 88
அரசர்களின் வம்சாவளி 211
அரசின் அங்கங்கள் மூன்று 102
அரபியர்கள் 32
அரமேய மொழி 34
அராபி மொழி 62
அரிஸ்டாட்டில் 54
அருள்வெளிப்பாடு 44
அலெக்ஸாண்டர் 38, 39, 70
அலெக்ஸாண்டிரியா 58
அலெப்போ 73
அவதம்ஸக சமயம் 343
அவதான இலக்கியங்கள் 331
அவதானம் 289
அவலோகிதேசுவரர் 339, 340
அவெஸ்தா 54, 55, 124
அற்புதச் செயல்கள் 322
அறநெறிச் சாரம் 52, 264
அன்ஷார் 25
அனு 24, 26, 27
அனுக்கிரமணி 157
அனுருத்தர் 316
அனுவாக்கியம் 130
அஷ்டாத் தியாயி 162
அஸ்வகோஷர் 326, 327, 328, 330
அஸ்ஷூர் 21
அஸ்ஸீரியர்கள் 31, 35
அஸ்ஸீரியர் 19, 22, 23, 32, 38

அஸாதி 57
ஆகமம் 235
ஆங்கிரஸர்கள் 124
ஆச்சாரியர் 78
ஆசிரம வாஸிக பருவம் 191
ஆத்மா 147
ஆதி இராமாயணம் 209
ஆதி பருவம் 172
ஆதியாகமம் 23, 26, 35, 36, 41
ஆப்கானிஸ்தானம் 49
ஆப்ரி சூக்தம் 120
ஆபிரகாம் 30
ஆர்ச்சிகம் 131
ஆர்தர் அவலான் 233
ஆர்மந்த் 51
ஆரண்யகங்கள் 141, 143
ஆரிய மக்கள் 51
ஆரியர்கள் 115
ஆரோபிதம் 121
ஆல்பிரட் லுட்விக் 158
ஆல்பெரூனி 202
ஆன்மவிகாசம் 101
ஆஸ்வலாயன கிருஹ்ய
சூத்திரம் 147
இங்-சவோ 112
இட்டிஷ் 24
இதிவிருத்தம் 210
இதி உத்தகம் 266
இதிகாஸம் 122
இதிஹாஸ இலக்கியங்கள் 167
இந்தியர்கள் 82
இந்தியா 39, 53, 73, 78
இந்திரன் 119
இப்ரிம் 30
இய - ஒ 82
இயா 24, 27
இயேசு 47
இயேசு தேவகுமாரர் 40
இயேசுநாதர் 29, 39, 44, 45, 95
இராமனது சரிதம் 216
இராமாயணம் 167, 205
இராமானுஜர் 146, 212,
217, 222
இராவணன் வரலாறு 216
இரான் 50, 75
இரான் தேசம் 53, 54, 62,
72, 73
இரானிய சரித்திரம் 55
இரானிய வேதம் 56
இராஜ கிருஹம் 256
இராஜ சூய யாகம் 134
இவுளி 124
இள வேனிலும் பின்பனியும் 90
இறந்தவர்களின் நூல் 13
இஸ்துபார் 26
இஸ்ரவேல் 37
இஸ்வேலர் 36, 39
ஈகிங் 86
ஈசா உபநிஷத் 145
ஈயா 24
உக்தம் 159
உணர்வெழுத்து 7
உத்கல தேசம் 215
உத்காதர் 130, 131
உத்தரகாண்டம் 207, 208
உத்தரார்ச்சிகம் 131
உத்தியோக பருவம் 178
உதாநம் 265
உபதீர்க்கு தரிசிகள் 42
உபதேசக் கடிதங்கள் 44
உபநிஷதங்கள் 141
உப புராணங்கள் 229
உபாகமப் பகுதி 37
உபாகமம் 41
உபோசதம் 240
உமார் 49, 62, 65, 66, 69
உமார் கய்யாம் 49, 62, 63,
67, 89
உயர்நெறிக்கல்வி 97
உருவ - எழுத்து 7

உருவ வழிபாடு 119
உவிபர் 157
உள்-ஒளி 91
ஊக கானம் 133
ஊதிய கானம் 133
ஊர்வசி 122, 221
எக்கார்ட் டௌலர் 150
எட்வர்ட் ப்விட்ஜெரால்ட் 79
எண்ணாகமம் 41
எகிப்திய இலக்கியம் 7
எகிப்திய தெய்வங்கள் 9
எகிப்தியப் பாடல் 16
எகிப்திய மொழி 7
எகிப்தியர் 4, 7, 9, 12, 15, 16, 20, 82
எகிப்து தேசம் 3, 30, 32
எகிப்து நாகரிகம் 4
எபிரேய இலக்கியம் 30, 35
எபிரேய சமயம் 30
எபிரேய நாடு 31, 32
எபிரேய மக்கள் 36
எபிரேய மொழி 29, 33, 34
எபிரேய ஜாதியார் 34, 36
எஜுக்கள் 140
எஜுர்வேதம் 137, 138, 139, 142
எஸ்தரின் கதை 44
எஸ்ரா 41
எஸேக்கியேல் 24
எஹோவாவின் யுத்தங்கள் 35
ஏகவஸ்து 121
ஏசாயா 36, 37, 42
ஏதேன் தோட்டம் 24
ஏரேமியா 37
ஏலாமியா 18, 21
ஏழு சிம்மாசனங்கள் 79
ஐதரேய ஆரணியகம் 156
ஐதரேய பிராம்மணம் 141
ஐந்திரம் 166
ஐந்திர வியாகரணம் 160
ஐந்தொகைப் பகுதி 41
ஐம்பேரிலக்கியம் 86, 90
ஐரோப்பா 45, 47, 73
ஒழுக்கம் 197
ஒன்பது அங்கங்கள் 238
க்ரோட்ப்வென்ட் 20
க்ரௌஷ்டுகி 223
கடோ உபநிஷத் 145
கண்டு முனிவர் 215
கணேசர் 227
கதாசரித் சாகரம் 160
கதாவத்து 294
கதைகள் 194
கந்த வம்சம் 303
கந்தகை 240, 241
கப்பாலா 40
கபிஷ்டல கடஸம்ஹிதை 133
கம்பர் 111, 139
கம்பன் 206
கம்போடியா 209
கய்யாம் 63
கர்ண பருவம் 184
கர்ப்ப சூத்திரங்கள் 131
கர்ப்பாதானம் 147
கர்மயோகம் 203
கருடபுராணம் 229
கல்தேய மொழி 34
கல்ப சூத்திரங்கள் 152, 155
கல்பநா மண்டி-டிகா 208, 209
கல்பநா மண்டி-டிகை 330
கல்ஹணர் 212, 230
கலித்தொகை 152
கவிதைக்காடு 172
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை 62, 67, 70
களவியற்காரிகை 73
கற்கூம்பு 5, 8
கன்ப்வூஷியஸ் 54, 83, 86, 90, 91, 97, 104, 107, 108

கன்ப்வூஸியஸ் முனிவர் 91
கன்ப்வூஸியஸ் முனிவரின் உபதேசங்களின் சாரம் 92
கன்ப்வூஸியஸ் - லேஓ - ட்ஸே கொள்கை வேறுபாடுகள் 109
காடக ஸம்ஹிதை 133
காண்வ சாகை 133, 142
காத்தியாயனர் 147, 165
காப்டிக் 8
காம சூத்திரம் 147
காயல் பட்டணம் 73
கார்லைல் 44
காரண்ட வியூகம் 341
காரிகைகள் 155
காலிப்வ் 61
காவிய நெறி 208
காளிதாஸர் 328
கானம் 132, 159
கானான் 30
காஸ்ஸியர் 21
காஸ்ஸிய ஜாதியார் 19
கிங்கு 25
கியாதுடீன் அபுல் பாத் உமார் 63
கிராமகேய கானம் 133
கிரீஸ் 18
கிருஷ்ண எஜுர் வேதம் 134
கிருஷ்ணன் தூது 180
கிருஷ்ணன் வரலாறு 221
கிருஷ்ண யஜுர்வேதம் 118
கிருஹ்ய கருமங்கள் 129
கிருஹ்ய சூத்திரம் 153, 154
கிரேக்க எழுத்து 6
கிரேக்க மொழி 5, 34, 44
கிரேக்க தெய்வங்கள் 23
கிரேக்க நாகரிகம் 39
கிலம் 135
கிறிஸ்தவ சமயம் 83
கிறிஸ்தவர்கள் 29
கிறிஸ்து 54
கிறிஸ்து அப்தம் 21
கீத நெறி 130
குங்-ப்வ்யூட்ஸெ 92
குங்: குடிப்பெயர் 92
குண்டலகேசா 310
குணபத்திரர் 344
குத்தக நிகாயம் 260
குத்தக பாடம் 260
குமாரஜீவர் 342, 346
குமாரில பட்டர் 212
குலார்ணவ தந்திரம் 234
குலிஸ்தான் 74
குறள் 56
குறுந்தொகை 117
குனெய்ப் வாரம் 20
குஹ்ஸீயென் 107
கூர்ம புராணம் 228
கெல்நர் 158
கே ஆப்ஸ் 4
கேன உபநிஷத் 145
கையறுநிலைப்பாடல் 15
கொராஸ்தான் 57
கோகிஸ்தான் 61
கோபத பிராம்மணம் 141
கோனார்க்கா ஆலயம் 215
கோஸ்ருஷிரீன் 71
கௌசீதகி பிராம்மணம் 142
கௌடில்ய அர்த்த சாஸ்திரம் 147
கௌடில்யர் 14
ச்சியு 92
ச்சூப்வு நகரம் 92
சங்க மித்தா 313
சங்கரர் 145, 146
சங்கீதப் பகுதி 37
சங்கீதம் 42
சண்டமகா ரோஷண தந்திரம் 357
சஞ்சார நிலைமை 54

சட்டங்கள் 40
சத்தம்மோ பாயனம் 316
சத்திர வஸ்து 322
சதபத பிராம்மணம் 130, 143
சந்தநு 220
சந்தஸ் 162
சந்திர கீர்த்தி 353
சந்திர கோமின் 353
சந்திரஹாச உபாக்கியானம் 230
சப்தங்கள் 161
சபா பருவம் 173
சரித்திரப் பிரமாண இலக்கியம் 87
சரிதக் குறிப்புக்கள் 193
சரியா பிடகம் 291
சல்லிய பருவம் 185
சாகலாசனார் 156
சாகைகள் 129
சாண்டில்யர் 143
சாத்வீக வகை 214
சாதன மாலை 356
சாந்தி தேவர் 353
சாந்தி பருவம் 190
சாந்தோக்கிய உபநிஷத் 145
சாமண்ணபல ஸூத்தம் 246
சாம வேதம் 141
சாமவேத ஸம்ஹிதை 131
சாவு கடல் 29
சாளக்கிராமம் 216
சித்தத்தர் 316
சிராத்த கல்பங்கள் 155
சிரௌத கருமங்கள் 129
சிரௌத சூத்திரங்கள் 153
சிலாவ் மொழிகள் 34
சிலுவைப் படையாளர்கள் 73
சிவசங்கல்ப உபநிஷத் 136
சிவபுரம் 222
சிவாகமங்கள் 233
சின் ஷிஹ் ஹ்வாங் 103
சிக்ஷ 155
சீலக்கந்த வக்கம் 245, 246, 247
சீன அரசர்கள் 83
சீன எழுத்துக்கள் 85
சீன தேசத்து மக்கள் 91
சீன மக்கள் 82, 83, 85, 100
சீன மதம் 91
சீனமொழியின் இயல்பு 84
சீன லிபி 103
சீன ஸாம்ராஜ்யம் 82
சுக்கில எஜுர்வேதம் 118, 142
சுங்யங் 18
சுந்தரமூர்த்திகள் 116
சுப்ரபாதத் தோத்திரம் 354
சுமேரிய மக்கள் 18
சு-யுவான் 111
சுராபானம் 134, 135
சுருதிகள் 150
சுவாங்-ட்ஸெ 110
சுவிசேஷங்கள் 47
சுவேதாஸ்வதர உபநிஷத் 145
சுள்ள வக்கம் 241
சுன்-ட்ஸூ 90
சூக்தங்கள் 118
சூத்திரம் 151
சூத்திர இலக்கியங்கள் 210
சூதலோமஹர்ஷணன் 213
சூர்யா சூக்தம் 122
செங்கிஸ்கான் 73
செமித்திய இனத்தார் 35
செமித்திய மரபு 30
செய்யுட் கோவை 103
செய்யுள் இலக்கியம் 88
சென்னை-29
சேல ஸூத்தம் 218
சைவ ஆகமங்கள் 232
சைவ சமயம் 215
சைவ புராணம் 221
சோமதேவ பட்டர் 160
சோம பானம் 134
சோம ரஸம் 123

சோமன் 119
சௌத்ராமணி யாகம் 135
சௌப்திக பருவம் 188
சௌபிரபு 86
சௌனகர் 156
ஞானசம்பந்தர் 131
ஞானயோகம் 203
ட்ஸேங்-யு 103
ட்ஸேங் ட்ஸு 97, 98
ட்ஸு ஸ்ஸு 98, 100
ட்ஸோ 90
டமாஸ்கஸ் 32
டா-ஒ 91, 108
டாக்டர் ப்வ்யூரர் 226
டாங் கவிஞர்கள் 112
டாய்சன் 148
டா ஹிஓ 97
டிடஸ் 32
டிடான் 26
டிமாட்டிக் 8
டியூடானிக் மொழிகள் 34
டேரியஸ் 20
டைகிரிஸ் 17
டோபெட் 47
தகனக் கிரியை 120
தகிகி 57
தஞ்சைவாணன் கோவை 127
தத்திதப் பெயர் 163
தத்துவ சாஸ்திரம் 114
தந்திரங்கள் 354
தபால் முறை 20
தம்ம பதம் 261, 264, 265, 305
தம்ம பாலர் 269, 310
தம்ம சித்தி 313, 315, 316
தம்மம் 237
தம்மஸங்கணி 293
தம்ம ஸங்கணம் 316
தமிழ் வேதம் 98
தயாரூப அரசாட்சிக் கொள்கை 102
தர்ம சூத்திரங்கள் 154
தர்ம பாலர் 351, 352
தரும ஒளி 312
தவளைப் பாட்டு 122
தஸ்மதி தேவதை 22
தாண்ட்ய மகாப்பிராம்மணம் 142
தாது கதை 294
தாந்திரிக இலக்கியம் 231
தாம்மியத, தத்த, தயத்வம் 149
தாமர் லேன் 76
தாமஸ வகை 214
தாரணிகள் 354
தால்முட் 40, 48
தாவீதின் புலம்பல்கள் 36
தாவீது 31, 34, 35, 36, 42
தான் ஸ்துதிகள் 123
தானியேலின் கதை 44
தாக்ஷி 160
திங் நாகர் 351, 354
திகம்பரர் 305
திகாதி 163
தியமதி 23, 24, 25, 26
திரிபிடகம் 236
திரிபிடகங்கள் 238
திருக்குறள் 53, 98, 259, 263
திருக்கோவையார் 127
திருமங்கை மன்னன் 139
திருமந்திரம் 258
திருமூலர் திருமந்திரம் 232
திருமுறைகளைச் சாராத பாலி இலக்கியங்கள் 297
திருவாசகம் 139, 146
திருஷ்டாந்தக் கதைகள் 47
திவ்யாவதானம் 333, 334
திவாகர ஏட்டுப் பிரதி 214
திவாகர நிகண்டு 155
திவாகரம் 118, 131, 152, 211
தீக நிகாயம் 245, 248

தீகம் 26
தீநாரா ரோம் நாணயம் 332
தீப்ஸ் 10
தீபங்கரர் 302
தீபவம்சம் 312, 314
தீர்க்கதரிசிகள் 42
தீர்க்கதரிசியின்-உபாக்
கியானங்கள் 38
துதங்கங்கள் 299
துரானியர்கள் 115
துருக்கர்கள் 32, 115
துரேனியன் 18
துரோண பருவம் 182
துலாதாரன் 199
துளஸீதாசர் 206
துஸ் நகரம் 57, 59, 61
தூரே நிதானம் 302
தெபோரா 36
தெய்வ யக்ஞம் 153
தேயு 53
தேர காதை 269
தேரி காதை 269, 271
தேவ தூதர்கள் 24
தேவாரம் 131
தேவீ மாகாத்மியம் 226
தைத்திரியப் பிரமாணம் 142
தைத்திரியம் 118
தைத்திரீய ஸம்ஹிதை 133
தைவத காண்டம் 159
தொகை நூல்கள் 236
தொல்காப்பியம் 118, 119, 162
தொல்காப்பியர் 51, 53, 165
தோத்திரங்கள் 354
நட்சத்திரங்கள் 20
நடுவு நிலைக் கொள்கை 98
நவதர் மங்கள் 336
நற்றினை 118
நன்னூல் 162
நாரதீய உபபுராணம் 223
நாராயணீயம் 203
நாலடியார் 63, 264
நாவோமி 44
நாபோ போலஸ்ஸார் 21
நாஸரேத் 39
நிகண்டு 157
நிகமம் 235
நிகாயங்கள் 245
நிதான கதை 301
நிபாதங்கள் 253
நியாயாதிபதிகள் 42
நிருத்தம் 157, 158
நினிவே 21
நிஷபூர் 63
நிஜாமி 70, 71, 72
நீதிபதிகளின் ஆகமம் 35
நீதிமொழிகள் 38, 44
நீல நதி 3, 5, 8, 10, 78
நீல மத புராணம் 230
நுருத்தீன் அப்துர்
ரஹ்மான் 78
நெகேமியா 37
நெத்திப் பகரணம் 300
நெப்போலியன் 5
நெபுகாத் நெஸ்ஸார் 21
நெபோ 22
நோபா தெய்வம் 22
நைகண்டுக காண்டகம் 159
ப்டாஹ்-ஹோட்டெப் 10
ப்ரிஸ்ஸி 10
ப்ரிஸ்ஸி சுவடி 10
ப்ருஹத் 133
ப்ரூஸ் ஸார்ட் 5
ப்வர் ஹாட் 71
ப்விட் ஜெரால்ட் 62
பக்தி சதகம் 355
பக்தி யோகம் 203
பகலில் வெளிச்செல்லுகை 12
பகவத் கதை 202
பஞ்சாங்கம் 20
பஞ்சமகா யக்ஞங்கள் 153

பஞ்ச லக்ஷணம் 211, 217
பஞ்சவித சூத்திரம் 156
பஞ்சவிம்ஸம் 142
பண்டார மும்மணிக் கோவை 144
பண்டைப் பாக்டிரியா 54
பத்ததிகள் 155
பத்ம சரிதம் 209
பத்ம புராணம் 212, 215
பதஞ்சலி 152
பதஞ்சலி முனிவர் 133, 166
பத பாடம் 156
பதினெட்டுப் பருவங்கள் 171
பதினெண் புராணங்கள் 214
பம்பாய் 53
பரஞானம் 150, 151
பரதன் வரலாறு 216
பரமார்த்த நாபி ஸங்கீதி 355
பரமான்மா 148
பரிணாம இலக்கியம் 86
பரிசிஷ்டம் 155
பரியாயமாக ரகஸியம் 147
பரிவாரம் 239
பல்சந்த மாலை 93
பவணந்தி 165
பவணந்தி முனிவர் 162
பவிஷ்ய புராணம் 226
பவுல்-கடிதங்கள் 44
பழத்தோட்டம் 74
பழைய ஏற்பாட்டு நூல்கள் 40
பழைய ஏற்பாடு 29
பன்னிரண்டு உபதீர்க்க தரிசிகள் 42
பாக்தாத் 61, 73
பாகவத புராணம் 222
பாடிக வக்கம் 246
பாடி மொக்கம் 239, 240
பாணகவி 212, 222
பாணினி 160
பாணினியாசிரியர் 161
பாணினீய சிக்ஷை 157
பாணினீய வியாகரணம் 162
பாப்பிரஸ் 7
பாப்பிரஸ் பிரதி 15
பாபிலோன் 18, 21, 22, 32
பாபிலோன் நகரம் 21
பாபிலோனியச் சிறைவாசம் 38
பாபிலோனிய மக்கள் 23
பாபிலோனியர் 19
பாபிலோனியா சிறைக்களம் 31
பாபிலோனியாவின் அழிவு 17
பார்ஜிட்டர் 217, 224
பார்வோன்கள் 8
பாரமிதைகள் 289
பாரஸிக அரசாட்சி 39
பாரஸிக பீடபூமி 50
பாரஸிக மக்கள் 49, 52, 70
பாரிஸ் நகரம் 10
பால்க் 50, 54
பாலஸ்தீனம் 29, 30
பாலாம் - குறிச்சொற்கள் 36
பாலகாண்டம் 208
பாலி - அவதானங்கள் 290
பிக்குக்களின் சங்கம் 237
பிங்கலம் 159
பிசிகள் 139
பிரகலாதன் சரித்திரம் 216
பிரச்ன உபநிஷத் 145
பிரசங்கி 38
பிரசங்கி ஆகமம் 44
பிரம குப்தர் 229
பிரம சூத்திர பாஷ்யம் 145
பிரம தேவர் 206
பிரம புராணம் 215
பிரமம் 147
பிரம வைவர்த்த புராணம் 226
பிரமாணப் போலிகள் 47
பிரமயக்ஞம் 153
பிரமஸ்புட சித்தாந்தம் 229

பிரமாண்ட புராணம் 229
பிரமிட் 3, 4
பிரமிட் கோபுரம் 3, 4
பிரவர்க்கியம் 136
பிரஜாபதி 121
பிராகிருத மொழி 117
பிராதிசாக்கிய காலம் 157
பிராதிசாக்கியங்கள் 156
பிராம்மணங்கள் 134, 141
பிராம்மண தம்மிக
ஸுத்தம் 268
பிராமணர் 130
பிரிட்டிஷ் கண்காட்சி
சாலை 15
பிருகத்கதாமஞ்சரி 160
பிருகதாரணிய உபநிஷத்
143, 144, 148
பிருகந் நாரதீய புராணம் 223
பிருகஸ்பதி 215
பிருகு முனிவர் 216
பிருஹத் தர்ம புராணம் 230
பிலிஸ்தீய தேசம் 32
பிள்ளைத் தமிழ் 111
பிளேட்டோ 54, 150
பிற்பட்ட எகிப்திய எழுத்து 8
பினீஷிய மொழி 24
பிஷல் 158
பீக்கன்ஸ்பீல்டு 34
பீஜ கணிதம் 62
பீஷ்ம பர்வம் 181
புக்கல பண்ணத்தி 294
புண்ணிய க்ஷேத்திரம் 215
புத்த கோஷர் 303, 304, 306
புத்த சரித்திரம் 326, 327, 329
புத்தர் 54
புத்தர் காலம் 235
புத்த வம்சம் 290
புதிய ஏற்பாடு 29, 40, 44
புராணம் 209
புருஷமேதம் 135, 142, 143
புரூரவன் 221
புரூரவஸ் 122
புலம்பல் 37, 43
புறநானூறு 117
புஷ்ப சூத்திரம் 156
புஸ்தான் 74
பூத யக்ஞம் 153
பூதத்தாழ்வார் 52
பூர்வ இந்துக்கள் 51
பூர்வ இலக்கியங்கள் 116
பூர்வீக இந்தியர் 51
பூர்வீக எகிப்திய எழுத்து 6
பெண்டட்யூக் 41
பெய்ஸிட் டூன் 71
பெர்தௌஸி 57, 59, 60, 61,
பெர்லின் 12
பெரிய திருமடல் 128
பெல் 26
பெல்ஷா ஜார் விருந்து 44
பெற்றோர்மீது பக்தி 97
பேடகோப தேசம் 300
பேத வத்து 268
பேரழைப்பு 111
பொக்காரா 75
பைபிள் 40
பைராட் கல்வெட்டு 238
போத்தி பார் 80
போதிசத்துவக் கதைகள் 272
போர புதூர் கோயில் 326
பௌத்த 'இலக்கியங்கள் 235
பௌத்த சமயம் 63, 143, 313
பௌத்தர்கள் 50
பௌத்தர் வரலாறு 222
பௌத்த வடமொழி
இலக்கியங்கள் 318
மகத தேசம் 221
மகா சேனன் 313
மகா நாமர் 312
மகா நாராயண உபநிஷத் 145
மகா பகரணம் 295

மகா பரிநிர்வாண
ஸூத்தம் 246
மகா பாரதத்தின் காலம் 204
மகாபாரதம் 167, 265
மகா பாஷ்யம் 133
மகா பிரஸ்தானிக பருவம் 192
மகா புராணங்கள் 214
மகா வக்கம் 241, 242, 245
மகா வம்சம்-312, 314
மகா விபங்கம் 240
மடலூர்தல் 126
மணிமேகலை 152
மத்தேயு 45
மத்ஸிய புராணம் 228
மந்திர உச்சாடனம் 129
மந்திர பாடம் 155
மந்திர பிராம்மணம் 155
மந்திரம் 118, 140
மர்துக் 25, 26
மறைபொருள்கள் 119
மன்ஸூர் 58
மனுஷ்ய யக்ஞம் 153
மனுஷ்ய வர்க்க சாஸ்திரம் 154
மனோரத பூரணி 307
மஜ்னூன் 71
மஜ்ஜிம நிகாயம் 248,
251, 259
மஜ்ஜிமம் 248
மஹாத்மியங்கள் 354
மஹாயான சூத்திரங்கள் 335
மஹாயானப் பெரியோர்கள்
345, 346
மஹாயானம் 318
மஹாராஜ கனிக வேகை 330
மஹிதாஸ ஐதரேயர் 141
மாண்டுக்கிய உபநிஷத் 146
மாத்யூ அர்நால்ட் 62
மாத்தியந்தன சாகை 133, 142
மாந்திரிகக் கிரியைகள் 138
மாயாதேவி 324
மார்க்கண்டேய புராணம் 223
மாற்கு 45
மானிஸம் 151
மித்திரன் 119
மிலிந்த பந்ஹ 297, 298
மிலிந்தன் 297
முக்திகா உபநிஷத் 146
முகமத் அரசர் 60, 61
முகம்மதியர்கள் 55
முகம்மது நபி 95
முண்டக உபநிஷத் 145, 151
மெய்க்கீர்த்திகள் 27
மென்ஸியஸ் 100, 101,
102, 110
மென்ஸியஸ் வசனங்கள் 101
மெஸ்ஸையா 38
மெஸொபொட்டேமியா 15,
21, 23, 26, 30
மேருமந்தர புராணம் 7
மேஸ்தா 56
மைக்கேல் 26
மைத்ராயணீ உபநிஷத்
146, 150
மைத்ரேய ஸம்ஹிதை 330
மைத்திரேயா 315
மைத்ராயணீ ஸம்ஹிதை 133
மோட் - ஸெ 110
மோஸே 31, 35, 41, 54
மோஸேயின் நூல்கள் 34
மௌரிய சந்திர குப்தன் 211
மௌன கோபுரங்கள் 53
மௌஸல பருவம் 191
யந்திரங்கள் 234
யமகம் 295
யமி 122
யயாதி 221
யஜமானன் 131
யஜூர் 118
யஜூஸ் 131, 137
யஸ்நா 55

யஸன் 241
யஷ்டா 56
யக்ஷன் 174, 175
யாக்கோபு-ஆசிகள் 36
யாகக் கிரியைகள் 134
யாக்ஞ்ய வல்கியர் 142, 157
யாகப் பசுக்கள் 135
யாக விதிகள் 134
யாத்திராகமம் 35, 41
யாமுனாச்சாரியர் 233
யாஜ்யம் 130
யாஸ்கர் 157
யூத குருக்கள் 41
யூத நாடு 31
யூத மக்கள் 36, 37, 38
யூதர் 29, 32, 38, 41, 44
யூதா 37
யூப்வ்ரட்டீஸ் 17, 30
யோசேப் 79
யோசேப்பும்-போத்திபாரின் மனைவியும் 79
யோதாம் கதை 36
யோபு-ஆகப்பகுதி 28
யோபுவின் நூல் 44
யோவான் 44
யோனி 132
யோஷுவா 31
ரகு வம்சம் 216
ரட்ட பாலன் 249
ரதந்தரம் 133
ரஸ வாகினி 317
ராசி 159
ராயல் காட்சி சாலை 12
ராஜ தரங்கிணி 230
ராஜஸ வகை 214
ரிக் 118
ரிக்வேதம் 141, 143
ரிக்வேத ஸம்ஹிதை 137
ரிஸ் டேவிட்ஸ் 340
ருக்மாங்கத சரிதம் 223
ருபாயத் 62, 63
ரூத் 38
ரூடால்ப் க்ரெளஸ் 158
ரூ—பு 112
ரோம் 18
ரோம் ஜாதியார்கள் 32
ரோம மக்கள் 39
ரோமன் ஆதிக்கியம் 39
ரோஸெட்டா 5
லண்டன் 6
லலித விஸ்தரம் 323, 324, 325 326
லிங்க புராணம் 227
லீ-கி 86
லீ-போ 112
லு தேசம் 100
லூக்கா 45
லூ-பிரதேசம் 90
லேஓ-ட்ஸே 83, 91, 107, 108 109, 110
லேகனங்கள் 41, 42
லேவியர் ஆகமம் 41
லைலி மஜ்னுன் 70, 71
லோகம் 162
லௌகிக சப்தங்கள் 161
வக்கங்கள் 262
வகுதாபுரி 73
வகுதை 73
வச்சிரசூசிகா உபநிஷத் 146
வசிய முறைகள் 126
வசிஷ்டர் 157
வட்டகாமணி 237, 313
வடமொழி ஆகமங்கள் 321
வடமொழி திருமுறைகள் 320
வர்ஷர் 160
வரருசி 165
வரலாற்று நூல்கள் 311
வராக புராணம் 227
வருணன் 51, 119
வள்ளுவர் 53, 97, 111, 123

வனபருவம் 173
வஸுபந்து 209
வாதவூரர் 78
வாமன புராணம் 228
வாயு புராணம் 221
வார்த்திக லக்ஷணம் 165
வாரணாசி 306
வாழ்க்கையில் பிரதிக்கிரியை 95
வான்மீகி 209
வாஜபேயம் 134
வாஜஸநேயீ பிராதிசாக்கிய சூத்திரம் 156
வாஜஸநேயீ ஸம்ஹிதை 133, 134, 139
விக்கிரமாதித்தன் 58
விஞ்ஞான சாஸ்திரம் 155
விநயம் 237
விநயபிடகம் 238, 239, 244
விபங்கம் 294
விபஸ்சித்து 224
விமலசூரி 209
விமான வத்து 268
வியாகரணம் 160
வியாஸர் 157, 171, 172, 217
விராட பருவம் 176
விராத்திய ஸ்தோமம் 142
விவிலிய நூல் 10, 21, 24, 27 34, 40
வின்டர் நீட்ஸ் 127, 143, 152, 211, 222, 240, 244
விஷ்ணு புராணம் 217
விஸ்பெரெட் 55
விஸுத்தி மக்கம் 309
வேண்டி டாட் 56
வேதங்கள் 117, 140
வேதம் 161
வேத சாகைகள் 144
வேத வியாசர் 212
வேத ஸம்ஹிதை 156
வேதாங்கங்கள் 152
வேதாங்கம் 155
வேதாங்க விஷயங்கள் 141
வைதிக நூல்கள் 140
வைசாலி 241
வைதிக சப்தங்கள் 161
வைபுல்லிய சூத்திரம் 323
ஜடபரதன் 218
ஜரதுஷ்டிரர் 54, 55, 56
ஜாதகக்கதை 112
ஜாதகக் கதைகள் 272
ஜாதகம் 272
ஜாதக மாலை 331
ஜாதக வியாக்கியானம் 304
ஜாபால உபநிஷத் 146
ஜாம் நகரம் 78
ஜாமி 78, 79, 81
ஜாஜலி 199
ஜீநாலங்காரம் 317
ஜீவான்மா 148
ஜீவேஸ்வர ஐக்கியம் 149
ஜுலைக்கா 29, 80, 81
ஜுடித் 47
ஜெர்மன் மொழி 108
ஜெர்மானியக் கவிஞர் 34
ஜென்ட் 55
ஜென்ட் அவெஸ்தா 55
ஜோதிஷ நூல் 159
ஜைமினியப் பிராம்மணம் 142
ஜைமினீய உபநிஷத் 145
ஜைன நூல்கள் 265
ஜைனர்கள் 7
ஷட்விம்ஸப் பிராம்மணம் 142
ஷன் துங் 92
ஷாங்-ட்ஸெ 111
ஷாநாமா 56, 59, 60, 61, 98
ஷாம்பொல் யான் 6
ஷோபன் ஹாயர் 150
ஷி - கிங் 88
ஷிரீன் 71, 72

ஷிஸ் 54
ஷீ ராஜ் 73, 74, 75
ஷீராஜ் நகர் 75
ஷுகிங் 87, 88
ஷு வமிசம் 82
ஸ்காந்த புராணம் 227
ஸ்திரீ பருவம் 189
ஸ்தோபங்கள் 132
ஸ்தோமம் 159
ஸ்ப்விங்ஸ் 3, 4
ஸ்மிருதி 265
ஸ்வாகா 140
ஸகஸ்ரநாமார்ச்சனை 139
ஸத்தர்ம புண்டரீகம் 336, 339, 341
ஸம்பவப் பருவம் 193
ஸம்யுத்த நிகாயம் 251
ஸம்வாத சூக்தங்கள் 122
ஸம்ஸ்கிருதம் 117
ஸம்ஹிதா பாடம் 156
ஸம்ஹிதை 118
ஸம்ஹிதைகள் 140
ஸமர்க்கண்ட் 75, 88
ஸர் ஆரல் ஸ்டெயின் 320
ஸர்த நாப்பலுஸ் 22
ஸர்வமேதம் 136, 143
ஸர்வ ஜீவ தயை 110
ஸர்வானுக்கிர மணிகை 147
ஸர் ஜான் உட்ராவ் 233
ஸஸந்த 55
ஸாக்ரடீஸ் 95
ஸாகல்யர் 156
ஸாதி 73, 74, 75, 81
ஸாந்தரக்ஷிதர் 353
ஸாம்ஸன் புதிர்கள் 36
ஸாமம் 118
ஸாம வேதம் 142
ஸாமுவேல் 36, 42
ஸார்கான் 21
ஸார சங்கிரகம் 316
ஸாரீபுத்ரப் பிரகரணம் 330
ஸால் 36
ஸாலாதுரம் 160
ஸாலொமன்-அப்பாஸ் 79
ஸாலொமன்-கீதங்கள் 38, 43
ஸாகியா தேசம் 32
ஸுத்த நிபாதம் 267
ஸுத்த பிடகம் 238, 244, 245
ஸுத்த விபங்கம் 239
ஸுல்வ சூத்திரங்கள் 154
ஸுல்தான் 59
ஸுல்தான் ஆபுஸெயிட் 78
ஸுல்தான் முகமத் 37, 58
ஸூப்வி 76, 78
ஸெந்நாக்கெரிப் 21
ஸெமிட்டிக் மக்கள் 115
ஸெமித்திய ஜாதியார் 18
ஸோம யாகம் 134
ஸோரப் ருஸ்தும் 62
ஸௌந்த ரானந்த காவியம் 329
ஹர்ஷ சக்கரவர்த்தி 58
ஹர்ஷவர்த்தனர் 355
ஹாப்விஸ் 75, 76, 81
ஹான் வூட்டி 168
ஹியரோக்ளிப்விக்ஸ் 20, 116
ஹியூன் த்ஸாங் 160, 321
ஹீராத் 78
ஹீனயானம் 318
ஹுணர்கள் 322
ஹைஹன் 34
ஹோதர் 130
ஹோரா-பாடகர் 322
ஹோஸியா 37
க்ஷேத்திர கணிதங்கள் 155

# நூற்றாண்டு காணும் பேராசிரியர்

''எண்ணில் நல்நூல் ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர்'' என்று கம்பன் பாடியதற்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள். சட்டத் துறையில் அவர் கல்வி பயின்றபோதிலும் தமிழ்க் காதல் அவரை ஈர்த்தது. விருப்பு, வெறுப்பின்றி நடுநிலை நின்று உண்மை காணும் வேட்கையுடன் அறிவியலுக்கேற்ப ஆய்வு முறைக்குப் பேராசிரியர் வழிகாட்டினார். தமிழ் ஆய்வுத்துறையில் புதிய தடங்கள் வகுத்துப் புதுப்புதுப் படைப்புக்கள் அளித்து அரிய சாதனை புரிந்தவர் எனப் பாராட்டுதற்குரியவர். இவர் தமிழ் இலக்கியத்தின் பரப்பை மட்டுமன்றி அநேகமாக உலக இலக்கியத்தையுமே அறிந்து தெளிந்தவர் என்று அறிஞர் கூறுவர்.

'இலக்கிய உதயம்' என்னும் இந்த நூலின் முதற்பகுதியில் எகிப்து, பாபிலோனியா, பாலஸ்தீனம், பாரசிகம், சீனம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆதி-இலக்கியங்கள் ஆராயப்படுகின்றன.

இரண்டாம் பகுதியில் பாரத தேசத்து வைதிக இலக்கியங்களைப் பேராசிரியர் விரிவாக ஆராய்கின்றார். நால்வகை வேதங்கள், பிராம்மணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷதங்கள், சூத்திரங்கள், வியாகரணம், மகா பாரதம், இராமாயணம், புராணங்கள், தாந்திரீக இலக்கியங்கள், பௌத்த இலக்கியங்கள், வேதநெறிகளைச் சாராத பாலி இலக்கியங்கள் முதலானவற்றின் இலக்கிய வரலாறு இனிய, எளிய நடையில் விளக்கப்படுகின்றது. அவற்றோடு தமிழ் இலக்கியங்களில் காணும் ஒப்புமைப் பகுதிகளை எடுத்துக் காட்டுவது இந்த நூலின் தனிச்சிறப்பாகும்.